
திருவாசகம்
சில சிந்தனைகள்

செத்திலாப்பத்து - திருப்புலம்பல்

4



பேராசிரியர்
அ.ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்

திருவாசகம்

சில சிந்தனைகள்

{ செத்திலாப் பத்து – திருப்புலம்பல்}

④

பேராசிரியர்

அ. ச. ஞானசம்பந்தன்



கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு
தியாகராயநகர், சென்னை - 600 017

முதற் பதிப்பு : ஜூலை, 2000
இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி, 2006

உரிமை : ஆசிரியருக்கு

2000 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் சென்னையில்
நடைபெற்ற எட்டாவது சேக்கிழார் விழாவில் தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரால் வெளியிடப்பெற்றது.

விலை : ரூ.100.00

TITLE	:	**THIRUVASAGAM - SILA SINTHANAIGAL - 4**
AUTHOR	:	**Prof. A.S. GNANASAMBANDAN**
LANGUAGE	:	TAMIL
EDITION	:	Second Edition, February, 2006
NO. OF PAGES	:	viii + 480 = 488
PUBLICATION	:	**GANGAI PUTHAKA NILAYAM** 23, Deenadayalu Street, Thyagaraya Nagar, CHENNAI - 600 017.
PRICE	:	**Rs.100.00**

Laser Typeset at : Sivasakthi Laser Prints, Chennai-600 041.
Printed at : Ragavendra Agencies, Chennai - 5 ☎ 28446891, 28446166



படையல்

என்னைவிடப் பல்லாண்டுகள் மூத்தவர்களாயினும்,
1932ஆம் ஆண்டு முதல் என்னோடு நெருங்கிப் பழகி,
என்னை மகனாகவே பாவித்து,
தேவை ஏற்பட்டபோதெல்லாம்
என் வாழ்க்கையைத் திசை திருப்பியவர்கள் இருவர்.

மனத்திற்பட்டதை
மேடையில் அஞ்சாமல் கூற ஊக்கம் தந்தவரும்,
திருவாசகத்திற்கு என்போக்கில் உரைகாணவேண்டும்
என்று என்னைத் தூண்டியவரும்

தமிழ்த் தென்றல்
திரு. வி. கலியாணசுந்தரனார்
அவர்களே ஆவார்.

ஆன்மிகத் துறையில் என்னை உந்திச் செலுத்தி, தம்
பூத உடலை நீத்த பிறகும், இன்றும் அத்
துறையில் என்னை வழிநடத்திச் செல்பவர்

பல்கலைச் செல்வர்
டாக்டர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
அவர்களே ஆவார்.

இந்த இரு மகான்களுக்கும் மிக்க பணிவன்புடன்
இந்நூலைப் படையல் செய்து
அவர்களின் ஆசியை வேண்டி இறைஞ்சுகின்றேன்

அ. ச. ஞானசம்பந்தன்

முன்னுரை

1950ஆம் ஆண்டில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள், திருவாசகத்தை விஞ்ஞானக் கண்கொண்டு பார்த்து நான் ஓர் உரை காணவேண்டுமென்று பலமுறை தூண்டினார்கள். அத்தோடு நில்லாமல் தம்முடைய வாழ்க்கைக் குறிப்பில் என்னைப்பற்றி எழுதிய பகுதியிலும் இக் கருத்தை வெளியிட்டிருந்தார்கள். ஏனைய பக்தி நூல்களினின்றும் 'திருவாசகம்' மாறுபட்டது. இந்நூல் ஓர் இறையன்பரின் 'அனுபவப் பிழிவு' என்ற கருத்தைத் தொடக்கத்திலிருந்தே கொண்டிருந்தேன். வாலாயமாகக் கூறும் பதவுரை, பொழிப்புரை முதலியன இந்நூலுக்கு ஏற்றதல்ல என்ற கருத்தும் என் மனத்தில் வலுவாக இடம் பெற்றிருந்தது. அன்றியும், திருவாசகத்தைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் ஓர் அச்ச உணர்வு தோன்றியமையால் இம்முயற்சியில் அப்போது ஈடுபடவில்லை.

தமிழ்த் தென்றல் அவர்கள் கூறி நாற்பத்தொன்பது ஆண்டுகள் கழித்து திடீரென்று சில எண்ணங்கள் மனத்தில் தோன்றலாயின. இந்த எண்ணங்களும், அவற்றைத் தோற்றுவிக்கும் திருவாசக அடிகளும் அடிக்கடி படம்போல் மனத்தில் தோன்றி மறைந்தன. திருவாசக அடிகள் இந்த எண்ணங்களைத் தோற்றுவித்தன என்பது உண்மைதான். ஆனால் அச் சொற்கள், அவை குறிக்கும் பொருள்கள் என்பவை நேரடியாக இவ் எண்ணங்களைத் தோற்றுவிக்க வில்லை. அதன் மறுதலையாக, அச்சொற்கள் குறிப்புப் பொருளாக (suggestion) இவ் எண்ணங்களைத் தோற்றுவித்தன. அவ் எண்ணங்களுக்குக் கோவையாக ஒரு வடிவு கொடுக்கும் ஆற்றல் என்பாலில்லை. எனவே, சில அடிகளைப் படித்தவுடன் அத் தொடர்கள் என் மனத்தில் என்ன எண்ணங்களைத் தோற்றுவித்தனவோ அவற்றை அப்படியே கூறியுள்ளேன். இவ்வாறு சொல்வதற்குத்

தொல்காப்பியத்தில் வரும் 'இறைச்சி' என்ற சொல் வலிவு தந்தது.

அனுபவத்திற்கு வடிவு கொடுக்கும் திருவாசகப் பாடல்கள் ஒரு கோவையாக, ஒரு வரன்முறைக்கு உட்பட்டு வருமென்று சொல்வதற்கில்லை. கோவையும், வரன் முறையும் வேண்டுமானால், அங்கே அறிவு தொழிற்பட வேண்டும். அறிவு தொழிற்படத் தொடங்கினால், உணர்வு குறையத் தொடங்கிவிடும்.

இக்கருத்துக்களை மனத்தில் கொண்டு ஒரு அடியையோ, சில அடிகளையோ அவ்வப்பொழுது படிக்கச் சொல்லிக் கேட்கும்போது என்ன சிந்தனைகள் மனத்தில் தோன்றினவோ அவையே இங்கு இடம் பெற்றுள்ளன. இச்சிந்தனைகள் என்னுடைய அறிவின் துணைகொண்டோ, அறுபது வருட இலக்கியப் பயிற்சியின் விளைவாகவோ தோன்றியவை அல்ல.

யாழ்ப்பாணம் திரு. ச. மார்க்கண்டு அவர்கள் இரண்டு அடிகளையோ, நான்கு அடிகளையோ படித்துக் காட்டிய உடன் அந்த விநாடி என் மனத்தில் தோன்றிய சிந்தனைகளே இங்கு இடம்பெற்றுள்ளன. அதனாற்றான், 'திருவாசகம் – சில சிந்தனைகள்' என்று இந் நூலுக்குப் பெயரிடப்பெற்றுள்ளது.

மணிவாசகரின் அருள் துணைகொண்டு 'திருவாசகம்– சில சிந்தனைகள்' பகுதி–1, பகுதி–2, என்பன முன்னரே வெளிவந்துள்ளன. இப்பொழுது மூன்றாம் பகுதி வெளி வருகிறது. இதனை அடுத்து நான்காவது பகுதியும், ஐந்தாவது நிறைவுப் பகுதியும் வெளிவர உள்ளன.

திருப்பொற்சுண்ணம் முதல் கோயில் திருப்பதிகம் வரையான திருவாசகப் பாடல்கள் இந்த மூன்றாம் பகுதியில் இடம் பெறுகின்றன. வழக்கம்போல பின்னுரையும் நூலுடன் இணைந்துள்ளது.

இந்த மூன்றாம் பகுதியை என் வாய்மொழி மூலம் கேட்டு எழுதியவர்கள் யாழ்ப்பாணம் திரு. ச. மார்க்கண்டு அவர்களும், இந்திய இரயில்வேயில் மின்னியல் தலைமைப் பொறியாளராக இருந்து ஓய்வுபெற்ற திரு. C. P. கௌரிசங்கர் அவர்களும், திருமதி ஞா. மீரா அவர்களும் ஆவர். எழுதி முடித்த பின்னர் ஒவ்வொரு வரியாகப் பார்த்து தடை விடைகளை எழுப்பி ஒரு முழுவடிவம் பெறுமாறு செய்ததுடன், படிகளைத் திருத்தும் பணியையும் மேற் கொண்டவர்கள் இதய மருத்துவ நிபுணர் டாக்டர். ந. சிவராசன், முனைவர். ம. ரா. போ. குருசாமி (கோவை), பொறியாளர் திரு. C. P. கௌரிசங்கர், திரு. ச. மார்க்கண்டு என்போர் ஆவர். இவர்கள் அனைவருக்கும் மணிவாசகப் பெருமான் இன்னருளைப் பொழிந்து வாழ்த்துமாறு அப்பெருமானின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

இந்த நூலுக்குக் 'கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்ற தொடரை அடித்தளமாகக் கொண்டு சிறந்த முறையில் ஓவியம் தீட்டியுள்ளார் திரு. பத்மவாசன் அவர்கள். தெய்வப் படங்கள் தீட்டுவதில் ஈடிணையற்று விளங்கும் ஓவியர் திரு. பத்மவாசனுக்கு மணிவாசகப் பெருமான் திருவருள் பொழிவதாக என அப் பெருமானின் திருவடிகளை இறைஞ்சுகிறேன்.

வழக்கம்போல இதனை நன்முறையில் அச்சுக்கோத்துத் தந்த 'சிவசக்தி கணினி அச்சுக்கோப்பாளர்'களுக்கும் மணிவாசகரின் இன்னருள் பாலிப்பதாக.

சிறப்பாக நூலை வெளியிட்ட 'கங்கை புத்தக நிலைய' உரிமையாளர் திரு. திருநாவு. இராமநாதன் அவர்களுக்கு மணிவாசகரின் நல்லருள் கிட்டுவதாக.

சென்னை–83 அ.ச.ஞானசம்பந்தன்
ஜூலை, 2000.

பொருளடக்கம்

1.	செத்திலாப் பத்து – சில சிந்தனைகள்	1
2.	அடைக்கலப் பத்து – சில சிந்தனைகள்	21
3.	ஆசைப் பத்து – சில சிந்தனைகள்	41
4.	அதிசயப் பத்து – சில சிந்தனைகள்	59
5.	புணர்ச்சிப் பத்து – சில சிந்தனைகள்	75
6.	வாழாப் பத்து – சில சிந்தனைகள்	89
7.	அருட் பத்து – சில சிந்தனைகள்	103
8.	திருக்கழுக்குன்றப் பதிகம்–சில சிந்தனைகள்	117
9.	கண்ட பத்து – சில சிந்தனைகள்	135
10.	பிராத்தனைப் பத்து – சில சிந்தனைகள்	157
11.	குழைத்த பத்து – சில சிந்தனைகள்	189
12.	உயிருண்ணிப் பத்து – சில சிந்தனைகள்	219
13.	அச்சப் பத்து – சில சிந்தனைகள்	239
14.	திருப்பாண்டிப் பதிகம் – சில சிந்தனைகள்	251
15.	பிடித்த பத்து – சில சிந்தனைகள்	275
16.	திரு ஏசறவு – சில சிந்தனைகள்	293
17.	திருப்புலம்பல் – சில சிந்தனைகள்	303
18.	பின்னுரை	309
19.	பாட்டு முதற்குறிப்பு அகராதி	476

23. செத்திலாப் பத்து

[சிவானந்தம் அளவறுக் கொணாமை]

திருவாசகத்தில் இதுவரை வந்துள்ள பதிகத் தலைப்புகள் பெரும்பாலும் அப்பகுதியில் வரும் சொற்களைக் கொண்டே ஆக்கப்பெற்றனவாம்.

இந்த அடிப்படையை மனத்தில்கொண்டு பார்த்தால், செத்திலாப் பத்து என்ற தலைப்பு எவ்வாறு வந்தது என்று அறிந்துகொள்ள முடியவில்லை, பத்துப் பாடல்களில் முதல் பாடலில்தான் 'செத்திலேன்' என்று வருகிறது. இரண்டாவது பாடலில் 'செற்றிலேன்' என்று வருகிறது. ஆனால், இதன் பொருள் வேறு. மூன்றாவது பாடலில் 'செத்திடப் பணியாய்' என்று வருகிறது. எஞ்சியுள்ள பாடல்களில் பதிகத்தலைப்பு வருமாறில்லை. ஐந்தாம், ஆறாம் பாடல்களில் செத்திலேன் என்ற சொல் பயன்படுத்தப்படாவிட்டாலும் சாவு பற்றிய குறிப்பு வருகின்றது. எஞ்சியுள்ள ஐந்து பாடல்களில் இப்பிரச்சினை இடம்பெறவேயில்லை. எனவே, இத்தலைப்பு எவ்வளவு பொருத்தம் என்பது சிந்தனைக்குரியது.

இதைப்போலவே இப்பதிகத்தின் நுண்மையான உட்கருத்து இது என்று விளக்குவதாக நினைத்துக் கொண்டு, 'சிவானந்தம் அள்வறுக்கொணாமை' என்று உட்தலைப்பு இட்டுள்ளனர். இதுவரை கண்ட பல உட்தலைப்புக்கள் போல இதுவும் பதிகத்தோடு எவ்விதத் தொடர்புமின்றித் தொங்குகிறது.

நான் சாகாமல் இருந்துவிட்டேன் என்று முதல் பாடலில் கூறுகின்றார். இறைவனை நோக்கிச் 'செத்திடப் பணியாய்' என்று வேண்டுகிறார் என்றால், இதில் ஏதோ ஒரு புதுமை இருப்பதாக நினைக்கவேண்டியுள்ளது. திருப்பெருந்துறையில் அடியார்களோடு தாம் உடன் போகாமல் தங்கிவிட்டதற்கு ஒரு காரணம் இந்தப் பருவுடம்பே என முன்னரும் பாடியுள்ளார் அடிகளார், நாளாவட்டத்தில் பருவுடலை வெறுக்கும் எண்ணத்தைக் கூடக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிட்டார் என்றே நினையவேண்டியுள்ளது.

இப்பருவுடலுக்குரிய கருவி, கரணங்களை வைத்துக் கொண்டே இறையனுபவத்தில் நுழையலாம், அதில் மூழ்கலாம் என்பதை அனுபவத்தால் அறிந்துகொண்டவர் அடிகளார். அதனாலேயே இதுவரை வந்துள்ள பாடல்களில் சாகவேண்டும் என்ற குறிப்பு அதிகம் இடம்பெறவில்லை.

ஆனால், இப்பதிகத்தில் சாவுபற்றிய நினைவு நான்கு இடங்களில் ஏன் வந்தது? பெருந்துறையில் அமர்ந்திருந்த அடியார்கள், குருநாதருடனேயே போய்விடுவதற்கு எது உதவியாக இருந்தது என்ற சிந்தனையில் ஈடுபடுகிறார் அடிகளார். அவர்களுக்கிருந்த தனித்தகுதி தம்பால் ஒரு சிறிதும் இல்லையே என்று நினைக்கிறார். இவ்வாறு இருந்தும் குருநாதர் திருவடி தீட்சை செய்தார். ஆதலால், குருநாதரோடு மறைந்த அந்த அடிகளார்களுக்குள்ள தகுதிகளில் எது தம்பாலில்லை என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்ட அடிகளார், ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். பொறி, புலன்களோடு கூடிய இந்தப் பருவுடலே அந்த அடியார்களோடு சேர்ந்து செல்ல முடியாமல்போனதற்குக் காரணம் என்று நினைத்தார்.

குருநாதர் ஆணையின்படி 'கோலமார்தரு பொது வினில்' வந்தாயிற்று, பராஅமுது ஆகிய திருவாசகத்தையும் குருநாதர் ஆணைப்படி பெரும்பகுதி பாடி ஆயிற்று. அப்படியிருந்தும் அடியார் கூட்டத்தோடு செல்ல முடியவில்லை என்றால், அதற்கு இந்தப் பருவுடல்தான் காரணம் என்று நினைத்த அடிகளார், 'செத்திடப் பணியாய்' என்று வேண்டுகிறார்.

அடியார் கூட்டத்தில் இருக்க இயலாமைக்குக் காரணம் இந்த உடல்தான் என்றால், அதுவாகப் போகின்றவரையில் காத்திராமல் அதைப் போக்கிக் கொண்டிருக்கலாமே! அடிகளார் அவ்வாறு செய்யாமைக்கு ஒரு காரணமுண்டு. ஒரு நாட்டின் அமைச்சராக இருந்தவருக்கு எந்த உயிரையும் உடலிலிருந்து பிரிப்பது பெரிய காரிய மன்று. இவ்வளவு நொந்துபோகின்ற இவர் எளிதாகத் தம்முடைய உடலைப் போக்கிக் கொண்டிருக்கலாமே! இந்த எண்ணம் அடிக்ளார் மனத்திலும் பலமுறை தோன்றியிருக்கும். அந்த எண்ணத்தைத் தடைசெய்தது மற்றொரு பெரிய சிந்தனை. அதாவது, இந்த உடம்பு தமக்குச் சொந்தமன்று என்பதை அடிகளார் நன்கு அறிந்திருந்தார். எந்த விநாடி குருநாதர் திருவடி தீட்சை செய்தாரோ, அந்த விநாடியே இந்த உடல் பொருள் ஆவி அனைத்தும் குருநாதருக்குச் சொந்தமாகி விட்டன. அதையே 'அன்றே என்தன் ஆவியும் உடலும்' (திருவாச: 502) என்ற பாடலில் அடிகளார் குறிப்பிடுகின்றார்.

தம்முடைய முன்னேற்றத்திற்கு இந்த உடம்பு எவ்வளவு தடையாக இருப்பினும், அது குருநாதரின் சொத்து ஆதலால், அந்த உடம்பைப் போக்கக் குருநாதரின் உதவியையே நாடுகின்றார்.

398. பொய்யனேன் அகம் நெகப் புகுந்து அமுது ஊறும்
புது மலர்க் கழல் இணை அடி பிரிந்தும்
கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ
விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருள் பெரும் கடலே
அத்தனே அயன் மாற்கு அறி ஒண்ணாச்
செய்ய மேனியனே செய்வகை அறியேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே 1

'பொய்யனாகிய என்னுள்ளத்திலும் புகுந்து அதனை நீ உருக்கியதை விழித்துக்கொண்டிருந்து பார்த்துத் தெரிந்தேன். அப்படியிருந்தும் நீ என்னைவிட்டுப் போய்விட்ட கொடுமையைப் பார்த்தவுடன் செத்திருக்க வேண்டும். அப்படிச் சாகவில்லை. விழித்துக்கொண்டே இருந்தும் உன்னைக் கோட்டைவிட்டவனாகிய நான், இப்பொழுது என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கின்றேன்' என்றவாறு.

399. புற்றும் ஆய் மரம் ஆய்ப் புனல் காலே
உண்டி ஆய் அண்ட வாணரும் பிறரும்
மற்று யாரும் நின் மலர் அடி காணா
மன்ன என்னை ஓர் வார்த்தையுள் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனம் மிக உருகேன்
பரிகிலேன் பரியா உடல்தன்னைச்
செற்றிலேன் இன்னும் திரிதருகின்றேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே 2

'நீண்டகாலத் தவத்தில் ஈடுபடுதலின் புற்றாகவும், மரமாகவும் நிற்கின்றவர்கள்-தண்ணீரையும் காற்றையுமே உணவாகக் கொள்கின்றவர்கள் ஆகிய யாருமே காணாத் திருவடியை உடையவனே! ஒரு வார்த்தையுள் என்னை ஆட்கொண்டு அடிமையாக்கினாய். அதன்பிறகு அடிமை

யாகிவிட்ட நான் ஆட்கொண்டதை நினைந்து உடல் பதறிக் கண்ணீர்விட்டுக் கதறியிருக்க வேண்டும். இவை ஒன்றும் செய்யாத இந்த உடலை அழித்திருக்க வேண்டும். அதுதானும் செய்யவில்லை'என்கிறார்.

இப்பாடலில் வரும் 'செற்று' என்ற சொல்லை முதல் பாடலில் வரும் 'செத்து' என்ற சொல்லைப்போலக் கருத வேண்டா. செற்று என்ற சொல் 'புற்று' என்று முதலடியில் வரும் சொல்லுக்கு எதுகை என்றும் கொள்ள வேண்டா. இங்கு அடிகளார் இந்த உடலை நான் அழிக்கவில்லை என்ற கருத்திலேயே 'செற்றிலேன்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

முதல் பாடலில் வரும் 'செத்திலேன்' என்ற சொல் இயல்பாக நிகழும் சாவைக் குறிப்பதாகும். இயல்பாக நடைபெறவேண்டிய அது நடைபெறாதவழி முன்னின்று உடலை அழித்திருக்க வேண்டும். அதுவும் செய்யவில்லை என்று வருந்துகிறார்.

400. புலையனேனையும் பொருள் என நினைந்து உன்
அருள் புரிந்தனை புரிதலும் களித்துத்
தலையினால் நடந்தேன் விடைப் பாகா
சங்கரா எண் இல் வானவர்க்கு எல்லாம்
நிலையனே அலை நீர் விடம் உண்ட
நித்தனே அடையார் புரம் எரித்த
சிலையனே எனைச் செத்திடப் பணியாய்
திருப்பெருந்துறை மேவிய சிவனே 3

இப்பாடலின் முதலிரண்டு அடிகள், சராசரி மனிதர் கட்குச் சிறிய அளவில் நடைபெறுகின்ற மனமாற்றத்தைப் பெரிதுபடுத்திக் கூறியதாகும். எதிர்பாராத நிலையில் பணமோ பதவியோ கிடைத்துவிட்டால் சாதாரண

மனிதர்கள் தலைகால் தெரியாமல் நடந்துகொள்வதை இன்றும் உலகிடைக் காண்கிறோம்.

அடிகளாரைப் பொறுத்தவரை உலகியல் முறையில் குடிப்பிறப்பு, கல்வி, பெரும்பதவி ஆகியவை இயல்பாக அமைந்திருந்தன. ஒருவேளை அரசனே இவரை அழைத்து, 'இன்றுமுதல் இப்பாண்டி நாட்டின் மன்னனாக நீ இருப்பாயாக' என்று கூறியிருந்தால், தம்முடைய வளர்ச்சியில் இது இயல்பாக நிகழவேண்டிய ஒன்றாகும் என்று அடிகளார் அமைதியுற்றிருப்பார். வளர்ச்சியில் இது இயல்பு என்று நினைத்தவுடன் தருக்கித் திரிவதற்கு அங்கு ஒன்றுமில்லை.

ஆனால், ஆன்மீக வழியில் திருவாதவூரர் சென்றது மில்லை; செல்ல விரும்பியதுமில்லை. அப்படியிருக்க வழி யோடு சென்ற அவருக்கு, குருந்த மரத்து அடியிலிருந்த குருநாதர் எத்துணைப் பெரிய நன்மையைச் செய்தார். ,இது இயல்பாக வந்த வளர்ச்சியன்று. எனவேதான் அடிகளார், 'புலையனேனை' என்று தொடங்குகிறார். புலையன் என்ற சொல் தாழ்ந்தவன் என்ற பொருளைத் தருவதாகும். ஆன்மீ கத்துறை தவிர வேறு எல்லாத் துறைகளிலும் உயர்ந்து நின்றவர் திருவாதவூரர். ஆதலால் 'புலையனேனை' என்ற சொல்லுக்கு ஆன்மிகத் துறையில் மட்டும் எவ்வித ஈடு பாடும் இல்லாமல் கீழ்மகனாக நின்ற தமக்கு என்று தொடங்குகிறார்.

கீழ்மகனென்று அறிந்திருந்தும் அதுபற்றிக் கவலை யுறாமல் மேன்மக்களிலும் மேன்மக்கள் பெறவேண்டிய பதத்தை ஒரு விநாடியில் நல்கிவிட்டான் பெருந்துறையான்.

தம் தகுதிக்கு ஒரு சிறிதும் பொருத்தமில்லாத இந்தப் பதவி கிடைத்தவுடன், எல்லையற்ற களிப்புக் கொண்டு தலைகீழாக நடந்ததாகக் கூறுகிறார் அடிகளார்.

திருவாதவூரர் இப்பொழுது மணிவாசகராக மாறிவிட்டார். ஆணவமோ, தருக்கோ இனித் தலைகாட்டப் போவதில்லை. ஆனால், இந்த உடம்பு என்ற ஒன்று இருக்கின்றவரையில் அதற்குரிய சேட்டைகள் இருந்தே தீரும். அந்த அச்சம் அடிகளாருக்கும் ஒரு சிறிது இருந்ததுபோலும். எனவே, இப்பாடலின் இறுதியில் 'எ(ன்)னைச் செத்திடப் பணியாய்' என்று பாடுகிறார்.

401. அன்பர் ஆகி மற்று அரும் தவம் முயல்வார்
அயனும் மாலும் மற்று அழல் உறு மெழுகு ஆம்
என்பர் ஆய் நினைவார் எனைப் பலர்
நிற்க இங்கு எனை எற்றினுக்கு ஆண்டாய்
வன் பராய் முருடு ஒக்கும் என் சிந்தை
மரக் கண் என் செவி இரும்பினும் வலிது
தென் பராய்த்துறையாய் சிவலோகா
திருப்பெருந்துறை மேவிய சிவனே 4

இந்தப் பாடலில் தம் குருநாதரிடம் ஒரு வினாவை எழுப்புகிறார் அடிகளார். அருந்தவம் முயல்வோர், அயன், மால் ஆகிய அனைவரும் ஒருபுறம் நிற்க, அவர்களை எல்லாம் விட்டுவிட்டுத் தம்மை வந்து ஆட்கொண்டமையை நினைக்கின்றார். அப்பொழுதுதான் இந்த வினா அடிகளார் மனத்தில் தோன்றுகிறது. பலரும் அறியக் குருநாதர் ஆண்டார் என்பது உண்மைதான். அவ்வாறு ஆட்கொண்டதால் ஏற்பட்ட பலன் என்ன?

தம்முடைய மனம், நேராக வளராமல் முண்டு முடிச்சுக்களோடு கூடி வளர்ந்துள்ள பராமரம் என்றும், தம்முடைய கண்கள் உணர்ச்சியற்ற மரக்கட்டைகளினால் ஆகியவை என்றும், தம்முடைய செவிகள் இரும்பினும் வலியவை என்றும் கூறுகிறார்.

தம்மை ஆண்டதன் பின்னரும் தம்முடைய மனமும் கண்ணும் செவியும் மேலே சொன்னபடி இருக்கின்றன என்றால், ஆண்டுகொண்டான் என்பதற்கு என்ன அடையாளம்? எதற்காக ஆண்டுகொண்டான் என்ற வினாவோடு முடிக்கின்றார்.

402. ஆட்டுத் தேவர்தம் விதி ஒழித்து அன்பால்
ஐயனே என்று உன் அருள் வழி இருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடு அரும் பொருளே
நாதனே உனைப் பிரிவு உறா அருளைக்
காட்டி, தேவ நின் கழல் இணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்து அருள்செய்யாய்
சேட்டைத் தேவர் தம் தேவர் பிரான்
திருப்பெருந்துறை மேவிய சிவனே 5

வேத காலம் தொடங்கி எட்டாம் நூற்றாண்டுவரை-ஏன், அதற்குப் பின்னரும் சில நூற்றாண்டுகள்வரையில்-வேத வழக்கொடு பட்ட உயிர்ப்பலி யாகம் இந்நாட்டின் பல இடங்களில் பரவியிருந்தது. உயிர்ப்பலி யாகம் செய்வதன் மூலமே தேவர் உலகத்தையும் தேவர் பதவிகளையும் அடைந்து அனுபவிக்கலாம் என்று இங்குள்ளவர் பலரும் எண்ணினர். அதனைச் செய்யும் தகுதியுடைய வைதிகர்கள் பலர், இந்தப் பூவுலகத்தில் வாழும் தேவர்கள் (பூ+சுரர்) என்று தம்மை எண்ணிக் கொண்டும் சொல்லிக்கொண்டும் தருக்கித் திரியலாயினர்.

இவர்கள் அனைவரையும் ஒருசேர ஒதுக்குகின்றார் அடிகளார். பலியிடப்படும் யாகத்தில், சில சடங்குகளை நிறைவேற்றுவதன் மூலம், தேவர் உலகத்தை அடையலாம் என்று பலரும் எண்ணிக்கொண்டிருந்தாலும், அதன் சிறுமையை எண்ணி, அதனை ஒதுக்கிவிட்டு, 'அன்பு நிறைந்த உள்ளத்தோடு உன் அருள்வழியே என் வாழ்வை நடத்த முற்பட்டேன்' என்கிறார்.

'உன் அருள்வழி நிற்பேன்' என்று பாடிய அடிகளார், பின் இரண்டு அடிகளில் அதற்கு விளக்கம் தருகிறார். திருப்பெருந்துறையில் குருநாதர் கழல்இணை காட்டியது, அருள்வழி நிற்க உதவியது உண்மைதான். திருவடிக் காட்சி, திருவடி சம்பந்தம் இரண்டும் கிடைத்த பிறகு மீட்டும் இவ்வுலகிடை என்ன வேலை?

, சாதாரண யாகம் செய்பவர்கள்கூட, அது முடிந்த பின்னரும் இவ்வுடம்பை நீத்தபின்னரே தேவர் உலகை அடைகின்றார்கள். கிடைத்தற்கரிய திருவடிப் பேறு கிடைத்தபின் தாமும் அத்திருவடியுடனேயே சென்றிருக்க வேண்டும் எனக் கருதுகிறார். அவ்வாறு செல்ல முடியாமைக்குக் காரணம் இவ்வுடம்புடன் இவ்வுலகிடை இருப்பதே யாகும்.

கேவலம், தேவர் உலகம் செல்வதற்குக்கூட இவ் வுடம்பை இவ்வுலகிடை விட்டுச்செல்ல வேண்டுமென் றால், அதனைவிடப் பல்லாயிரம் மடங்கு மேம்பட்ட திரு வடிப் பேற்றைப் பெற்ற தாம் அத்திருவடியுடனேயே செல்ல முடியாமல் போனதற்குக் காரணம், இவ்வுடம்பே யாகும் என்ற முடிவிற்கு வந்தாராகலின் 'காய மாயத்தைக் கழித்து அருள் செய்யாய்..... தேவர் பிரானே' என்று வேண்டுகிறார்.

403. அறுக்கிலேன் உடல் துணிபடத் தீப் புக்கு
ஆர்கிலேன் திருவருள் வகை அறியேன்
பொறுக்கிலேன் உடல் போக்கு இடம் காணேன்
போற்றி போற்றி என் போர் விடைப் பாகா
இறக்கிலேன் உனைப் பிரிந்து இனிது இருக்க
என் செய்கேன் இது செய்க என்று அருளாய்
சிறைக்கணே புனல் நிலவிய வயல் சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே 6

இந்த உடலைத் துண்டு துண்டாக வெட்டிக் கொள்ள வில்லை; தீயில் விழுந்து உடலை வேகவைக்கவில்லை; இந்த உடலைப் போக்கிக் கொள்ளக்கூடிய இடமும் எதுவென்று முடிவாகத் தெரியவில்லை. இவை இப்படியே இருந்துவிட்டுப் போகட்டும் என்று பொறுமையோடு காத்திருக்கவும் முடியவில்லை (பொறுக்கிலேன்)- என்று இவ்வளவு விரிவாகக் கூறுபவர் இவற்றுள் ஒன்றையும் தாம் செய்யாமல் இருப்பதற்குரிய காரணத்தையும் மிக அற்புதமாக முதலாம் அடியின் முடிவில் 'திருவருள் வகை அறியேன்' என்று பாடுகிறார்.

மேலே கூறிய இறப்பு முயற்சிக்கான மூன்று செயல்களையும் இவர் விரும்பியிருந்தால் எப்போதோ செய்திருக்கலாம். ஆனால், உடல் பொருள் ஆவி அனைத்தையும் அந்தத் திருவருளிடம் ஒப்படைத்து விட்டார் ஆதலின், அந்தத் திருவருள் வழிகாட்டினா லொழியத் தாமாக எந்த முடிவையும் எடுத்து, செயலாற்றும் உரிமை தம்பால் இல்லை என்பதையே 'திருவருள் வகை அறியேன்' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார்.

இவ்வளவும் கூறியபிறகு, தாம் சிக்கியிருக்கும் தர்மசங்கட நிலை அடிகளாருக்கு நன்கு புரிகின்றது. ஒரு விநாடிகூட இவ்வுலகிடை இருக்க அவர் விரும்பவில்லை. திருவடிகளில் அவரை இணைத்துக் கொள்ள வேண்டியவன் என்ன காரணத்தாலோ அதனைச் செய்யாமல் இருக்கின்றான். 'இந்த நிலையில்தான், உனைப் பிரிந்து இருக்கவேண்டி உள்ளது, இனிதாக வாழ்வை முடித்துக் கொள்ளவும் இல்லை, 'என் செய்கேன்?' என்று வருந்துகிறார்.

404. மாயனே மறி கடல் விடம் உண்ட
வானவா மணி கண்டத்து எம் அமுதே

நாயினேன் உனை நினையவும் மாட்டேன்
நமச்சிவாய என்று உன் அடி பணியாப்
பேயன் ஆகிலும் பெரு நெறி காட்டாய்
பிறை குலாம் சடைப் பிஞ்ஞகனே ஓ
சேயன் ஆகி நின்று அலறுவது அழகோ
திருப்பெருந்துறை மேவிய சிவனே 7

இறைவனுடைய படைப்பில் உயர்ந்து நிற்பதாகச் சொல்லிக்கொள்ளும் மானிடப் பிறப்பிற்குச் சிறப்பாக உள்ளவை மனம், மொழி, மெய் என்ற மூன்றுமாகும். இவை மிக நுண்மையிலிருந்து (மனம்) வளர்ந்து சென்று பருமை நிலையை (மெய்) அடைவதாகும்.

இந்த மூன்றையும் ஒருநிலைப்படுத்தி ஒன்றையே சிந்திக்குமாறு செய்வதே பிறவியின் பயனை அடைவதற் குள்ள ஒரே வழியாகும். அடிகளார் போன்றவர்கள் இருபத்து நான்கு மணி நேரமும் மனம், மொழி, மெய் என்பவற்றால் இறைவனிடமே தோய்ந்திருப்பினும், அது இல்லை என்று கூறிக்கொள்வதே அவர்கள் இலக்கணமாகும்.

'சாகவேண்டும், சாவதற்கு ஒரு வழிகாட்டாய்' என்று முந்தைய பாடல்களில் கூறிக்கொண்டுவந்தவர், ஏன் சாகவேண்டும் என்பதற்குரிய காரணத்தை இப்பாடலில் விரிவாக விளக்குகிறார்.

அவன் தந்தவை மனம், மொழி, மெய் என்ற மூன்றுமாம். ஆனால், இந்த மூன்றும் அவன் கட்டளைப்படி பணி புரியவில்லை. 'உனை நினையவும் மாட்டேன்' என்பதால் மனம் பணி செய்ய மறுக்கின்றது என்பதைக் கூறினார். 'நமச்சிவாய' என்று ஓதாததால் மொழித் தொண்டு நடைபெறவில்லை என்று கூறினார். 'அடி

பணியாப் பேயன்' என்பதால் மெய்த் தொண்டும் நடைபெறவில்லை என்று கூறினார்.

இம்மூன்றும் தறிகெட்டுப்போனதால் தம்மைப் 'பேயன்' என்று கூறிக்கொள்கிறார்.

இறைவன் மனம், மொழி, மெய், என்ற மூன்றைத் தந்து உய்யும் வழியையும் காட்டினான். அந்த மூன்றும் தறிகெட்டுப் போனமையால் பேயனாகிவிட்டாலும் தாம் உய்யும் பெருநெறி காட்டித் தம்மை அழைத்துக்கொள்ள வேண்டியது அவன் கடமை என்பதையும் பேசுகிறார்.

இனி, இவ்வளவு முறையிட்டும் அவன் இரங்கி, அருள் செய்தபாடில்லை. ஆதலால் பெரியவர்களுக்குரிய இலக்கணம் அத்தலைவனிடம் ஓரளவு குறைகிறது என்பதைக் குறிப்பால் இப்பொழுது உணர்த்துகிறார். திருப்பெருந்துறை நிகழ்ச்சி மூன்று செயல்களை உள்ளடக்கியது. சேயராக (தூரத்து)தே நின்ற வாதவூரரைக் குருநாதர் அண்மைப்படுத்தினார், அமைச்சராக இருந்து ஓயாது பேசிக்கொண்டிருந்த ஒருவரை வாய்மூடி மௌனியாக்கினார். வாதவூரர் மணிவாசகராக மாறியதைக் கண்டவர்கள், அழகிது என்று முன்பு பாராட்டினர். இப்பொழுது மூன்றும் மாறிவிட்டன.

அண்மையில் இருந்த மணிவாசகர் சேயராகிவிட்டார். வாய் மூடி இருந்தவர் தெருவுதோறும் அலறத் தொடங்கிவிட்டார். இந்நிலையில் முந்தையோர் அழகிது என்று கூறிய சொற்கள் அவரது நினைவுக்கு வருகின்றன. அதே சொல்லை இப்பொழுது திருப்பி, 'என்னைச் சேயனாக்கித் தெருவுதோறும் அலறவிடுவது அழகோ உனக்கு?' என்கிறார்.

405. போது சேர் அயன் பொரு கடல் கிடந்தோன்
புரந்தர ஆதிகள் நிற்க மற்று என்னைக்

கோது மாட்டி நின் குரை கழல் காட்டிக்
குறிக்கொள்க என்று நின் தொண்டரில் கூட்டாய்
யாது செய்வது என்று இருந்தனன் மருந்தே
அடியனேன் இடர்ப்படுவதும் இனிதோ
சீத வார் புனல் நிலவிய வயல் சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே 8

இப்பாடலை நன்கு புரிந்துகொள்வதற்குப் பின்வருமாறு கொண்டுகூட்டுச் செய்துகொள்வது நலம்..... 'புராந்தராதிகள் நிற்க என்னைக் கோதும் ஆட்டி, குரைகழல் காட்டி, குறிக்கொள் என்று (ஆணையிட்டாய்) யாது செய்வது என்று (தெரியாமல்) இருந்தனன் மருந்தே! அடியேன் இடர்ப்படுவதும் இனிதோ? (இதனைப் போக்கத்) தொண்டரில் கூட்டாய்' என்றவாறு?

மனித மனத்திற்கு ஒரு விநோதமான இயல்பு உண்டு. பல நாள் விரும்பி, தேடி, அரிதிற் கிடைத்த பொருளா யினும், கிடைத்தவுடன் அதிலுள்ள ஆர்வம் குறையத் தொடங்கிவிடும்.. எளிதாக ஒரு பொருள் கிடைக்குமாயின் அதிலுள்ள ஆர்வம் மிக விரைவில் குறைந்துவிடும். ஆனால், அப்பொருள் கைவிட்டுப் போனவுடன் மறுபடியும் அதை நினைந்து, அது மீட்டும் கிட்டவேண்டும் என்று வருந்துவ தும் மனித மனந்தான். இக்கருத்தை மனத்தில் கொண்டு மேலேயுள்ள பாடலைப் பார்த்தால், அடிகளார் கூற்றை நன்கு புரிந்துகொள்ள முடியும். திருப்பெருந்துறை அனு பவம் எளிதாகக் கிடைத்தமையின் அடிகளார் நாட்டம் அதில் முழுவதுமாகச் செல்லவில்லைபோலும். அது மறைந்தபின் அதற்காகப் பெரிதும் வருந்துகிறார் அடிகளார்.

அயனும் மாலும் அறியமுடியாதவன் எளிதாக வெளிப்பட்டான்; காட்சி தந்தான்; திருவடி தீட்சை செய்தான்; அடியார் கூட்டத்திடை அமர வைத்தான்.

திருவடியைக் கண்டுகொண்டிருக்கும்போதே குரு அடியார் கூட்டத்துடன் மறைந்துவிட்டார். கிடைத்தற்கரிய இந்தப் பேறு மறுபடியும் கிட்ட வேண்டும் என்று அடிகளார் நினைத்ததில் வியப்பொன்றும் இல்லை. ஆனால், அது கிட்டவில்லை.

'பொதுவினில் வருக' என்று ஆணையிட்டார் குரு நாதர்; அதன்படியே தில்லை வந்துசேர்ந்தார் அடிகளார். ஆனால், குருநாதரோ அடியார்கூட்டமோ தரிசனம் தர வில்லை. கோயில் மூத்த திருப்பதிகத்தில் இதனையே சொல்லி வருந்துகிறார். இப்பொழுதும் அதையே நினைந்து வருந்துகிறார்.

தில்லை வருகின்றவரையில், தில்லையை அடைந்த வுடன் தம் எண்ணம் நிறைவேறும் என்று கருதினார். ஆனால், அது நிறைவேறவில்லை. அது நிறைவேறாதபோது எல்லையற்ற ஏமாற்றம் ஏற்பட்டது. ஆகவேதான், 'யாது செய்வது என்று இருந்தனன், அடியேன் இடர்ப்படுவதும் இனிதோ?' என்று வருந்திக் கேட்கும் நிலை உருவானது.

குரை கழல் காட்டிக் 'குறிக்கொள்க' என்பது காட்டப் பெற்ற திருவடியையே பற்றுக்கோடாகவும் குறிக்கோளாக வும் கொள்க என்ற பொருளைத் தந்துநிற்கிறது.

406. ஞாலம் இந்திரன் நான்முகன் வானோர்
நிற்க மற்று எனை நயந்து இனிது ஆண்டாய்
காலன் ஆர் உயிர் கொண்ட பூம் கழலாய்
கங்கையாய் அங்கி தங்கிய கையாய்
மாலும் ஓலம் இட்டு அலறும் அம் மலர்க்கே
மரக்கணோனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல் சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே 9

நான்முகனும் திருமாலும் காணாச் சேவடி என்று பல முறை அடிகளார் பாடியுள்ளார் எனினும், இப்பாடலில் ஞாலம் முதல் திருமால்வரையில் பேசுகிறார். பாடல் ஆதலின் முறை வைப்பு முன்னும் பின்னுமாக உள்ளது எனினும் இந்த முறைவைப்பைச் சீர்செய்துகொண்டால் ஒரு புதிய சிந்தனை தோன்றிட இடம் உண்டாகிறது.

ஞாலம், வானோர், இந்திரன், நான்முகன், திருமால் என்ற முறையில் வைத்துப்பார்த்தால், ஒன்றினொன்று மேம்பட்ட நிலையை அடுக்கியுள்ளார் என்பது தெரியும்.

ஞாலம் என்ற சொல்லில் ஓரறிவு உயிர்முதல் ஆறறிவுள்ள மனிதர்வரை கூறினாராயிற்று. இந்த ஆறறிவு மனிதரிலும் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள மனிதர்கள், கல்வி, கேள்வி, அறிவு என்பவற்றில் மிக உயர்ந்தவர்கள், துறவு மேற்கொண்டு புற்றுமாய் மரமாய் நின்று தவம் செய்பவர்கள், இத்தொகுப்பினுள் அடங்காத எல்லையற்ற பக்தி ஈடுபாடு கொண்ட அடியார்கள் ஆகிய அனைவரும் ஞாலம் என்ற சொல்லில் அடங்குவர். அடுத்து நிற்பவர்கள் உலகிடை வாழும்பொழுது சில நற்காரியங்களைச் செய்தவர்கள். ஆனால் பொறி, புலன்களை அடக்காமல் வாழ்ந்த இவர்கள், தாம் செய்த புண்ணியம் காரணமாக மேலுலகம் சென்று இன்பம் அனுபவிக்கும் தேவர்கள், இனி இத்தேவர்களுள் உயர்ந்தவனாகிய இந்திரன் என்போர் ஒருபுறம் இருக்க, கல்விக்கு எல்லையாகிய நான்முகன், செல்வத்திற்கு எல்லையாகிய திருமால் ஆகிய இத்துணைப் பேரும் அவன் திருவடியைக் கண்டிலர் என்றவாறு.

இந்த முறைவைப்பே சற்று விநோதமானது. ஞாலம் என்று கூறியமையால் இங்குள்ளவர் அனைவரும் திருவடியை நாடிச் செல்கின்றனர் என்பது பொருளன்று. இறையுணர்வு ஒருசிறிதும் இல்லாமல் கண்டதே காட்சி,

கொண்டதே கோலம் என்று திரிபவர்கள் ஒருபுறம்; ஏகாக்ர சிந்தையராய்த் தவம் முயல்வோர் ஒருபுறம், அறிவு கல்வி இவற்றின் துணைகொண்டே இறை இலக்கணத்தை அறிந்துகொள்ள முற்படுவோர் ஒருபுறம்; அன்பு பிழம்பாய்த் திரியும் அடியார்கள் ஒருபுறம் ஆகக் காட்சியளிப்பதே ஞாலத்தின் கோலம்.

ஒன்றுக்கொன்று மாறுபட்ட இயல்புடைய இவர்கள் அனைவரும் 'ஞாலம்' என்ற சொல்லில் அடங்குவர். 'வானோர்' என்ற சொல்லினால் குறிக்கப்படுபவர்களும் இதேபோன்ற பல்வேறு நிலையில் உள்ளவர்கள், மிக உயர்ந்த பதவி கிடைத்ததும் இன்ப வேட்டையிலேயே பொழுதைக் கழிப்பவன் இந்திரன். தேவர் உலகத்திலும் இத்தனை வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. அடுத்து உள்ளவர்கள் நான்முகனும் திருமாலும்.

இத்தனை பேருக்கும் ஒரு பொதுக்கடமை உள்ளது. திருவடியைக் காணமுயல்வதுதான் அக்கடமை. அதிலும் இருவகை உண்டு. திருவடி என்ற சிந்தனையே இல்லாமல் உள்ளவர்கள் ஒருபுறம், திருவடியைக் காணவேண்டுமென்று ஓலமிடும் திருமால் ஒருபுறம். கவலையேபடாதவர்கள் ஒருபுறம், ஓலமிடுபவர்கள் ஒருபுறம். என்றாலும் யாரும் திருவடியைக் கண்டதில்லை.

இத்தனை பேர் ஓலமிட்டு அலறியும் காணமுடியாத அத்திருவடி, தானாகவே யாரோ ஒருவரைத் தேடிச் சென்றது என்கிறார் அடிகளார். எப்படித் தேடிச்சென்றது? 'எனை நயந்து இனிது ஆண்டாய்' என்று கூறுவதன் மூலம், இவரை விரும்பி ஆண்டது; இன்பத்தைத் தந்து இனிது ஆண்டது என்கிறார்.

அப்படி எளிதாகக் கிடைத்துவிட்ட காரணத்தால் அதனை இறுகப் பற்றிக்கொள்ளாமல், அதன் அருமை

தெரியாமல் விட்டுவிட்டதாக நினைத்து நொந்து கொள்கிறார். விட்டுவிட்டது தம்குறை என்று கருதியதால், இறைவனையே நோக்கி 'உன் திருவடி மலர்க்கணே வந்திடப் பணியாய்' என்று வேண்டிக்கொள்கிறார்.

நெஞ்சில் அன்பு நிறைந்திருந்தால் கண்ணிர் எப்பொழுதும் நிறைந்து வழிந்தோடும். தமக்குக் கண்ணீர் அவ்வாறு வழிந்து ஓடவில்லை என்ற காரணத்தால் தம் மனத்தில் அன்பில்லை என்ற எண்ணம் மீதூர, தம் கண்ணையும் 'மரக் கண்' என்று பேசுகிறார்.

இறைவனுடைய முழுவடிவத்தையும் மனத்துட் கொண்ட அடிகளார் அவனுடைய திருமேனியில் மூன்று உறுப்புக்களைச் சுட்டுகிறார். அடைக்கலம் என்று வந்தவர்களைக் காத்தற்காகக் காலனையும் உதைத்த திருவடி அவனுடையது. காலன் தன் கடமையைத்தான் செய்தான். ஒருவன் கடமையைச் செய்யும்போது குறுக்கிட இறைவனுக்குக்கூட உரிமை இல்லை எனினும், இந்தச் சட்டங்களை யெல்லாம் விஞ்சி நிற்கின்றது அடைக்கலம் வந்தவனைக் காக்கின்ற பொறுப்பு.

எல்லையற்ற அகங்காரத்தோடு உலகையே அழிப்பேன் என்று கீழிறங்கிய கங்கையைத் தன் சடையில் தாங்குவதன் மூலம் அகங்காரத்தை அழிக்கும் அவனுடைய ஆற்றல் 'கங்கையாய்' என்பதன் மூலம் பேசப்பெறுகிறது. எல்லை யற்ற அகங்காரம் உடையவளாயினும் பெண்ணாதலின் அவளை அழித்தல் சரியன்று என்று கருதிய பெருமான், தன் சடையினுள் அவளை அடங்கியிருக்குமாறு பணித்தான்.

'அங்கி தங்கிய கையாய்' என்பது மூன்றாவது அடை யாளம். அங்கி ஆகிய நெருப்பு, சர்வ சங்கார காலத்தில்

அனைத்தையும் அழிக்கின்றவன் அவன் என்பதைச் சுட்டும் அடையாளமாக அவன் கையிலே தங்கியுள்ளது என்பதாம்.

407. அளித்து வந்து எனக்கு ஆவ என்று அருளி
அச்சம் தீர்த்த நின் அருள் பெருங் கடலில்
திளைத்தும் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே
வளைக் கையானொடு மலரவன் அறியா
வானவா மலை மாது ஒரு பாகா
களிப்பு எலாம் மிகக் கலங்கிடுகின்றேன்
கயிலை மா மலை மேவிய கடலே 10

மனித மனத்தின் மற்றொரு கூறு இப்பாடலில் இடம்பெறுகிறது. பல சமயங்களில் சிறந்த அனுபவத்தைப் பெற்று அனுபவிக்கின்றது அம்மனம். ஏதோ ஒரு காரணத்தால் அந்த அனுபவம் தடைப்பட்டால் அல்லது முடிந்துவிட்டால் நியாயமாக என்ன நடைபெறவேண்டும்? அந்த அனுபவத்தைப்பற்றியே மீண்டும் சிந்திக்கத் வேண்டும். அதுவே மனத்தின் இயல்பாகும். ஆனால், அடிகளார் மனம் வேறுவிதமாக இயங்கத் தொடங்கிற்று என்று முதலிரண்டு அடிகளில் கூறுகிறார் அடிகளார்.

திருப்பெருந்துறை நிகழ்ச்சி நடைபெறுகின்ற நேரத்தில் கிடைத்த அனுபவம், அதனை மணிவாசகர் அனுபவித்த முறை, அதன் பிறகு நிகழ்ந்த நிகழ்ச்சி ஆகியவை இங்கும் பேசப்பெறுகின்றன.

'எனக்கு எவ்விதத் தகுதியும் இன்றேனும், என்பால் கருணைகொண்டு வந்து (அளித்து வந்து), ஐயோ பாவம் (ஆவ) என்று என்மாட்டு இரங்கி ஆண்டாய். இயல்பாக என் உயிரைப் பற்றிநின்ற அச்சத்தைப் போக்கினாய் (அச்சம் தீர்த்த). நின் அருளாகிய பெருங்கடலில் துளையமாட (திளைத்து), நிறைவுண்டாகும்படி அருந்தி

(பருகி) ஏப்பமும் விட்டேன். (தேக்கியும்: தேக்கெறிதல்) அந்த நிலை மாறியவுடன் அதுபற்றி மீட்டும் நினைந்து ஓயாமல் உருகவேண்டியவனாகிய நான் இப்பொழுது உருகாமல் இருக்கின்றேன்' என்கிறார்.

அடிகளார் தம் வாழ்நாளில், அதற்கு முன்னர்க் கண்டறியாத உள்ளத்து உருக்கம் (மன உருக்கம் அன்று) திருப்பெருந்துறையில் கிடைத்தது என்பதை அவரே பல இடங்களில் கூறியுள்ளார். ஆனால், இப்பொழுது அந்த அற்புதமான உள்ளத்து உருக்கமும் கைநழுவிவிட்டது என்பதை 'உருகேன்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். இந்த உள்ளத்து உருக்கம் நிறைந்திருந்தபோது பேரானந்தம் (களிப்பு) மிகுந்திருந்தது.

முதலாவதாக உருக்கம் போயிற்று; அதனை அடுத்து களிப்பும் போயிற்று. இவை இரண்டும் போனவழி எஞ்சியது மாபெரும் கலக்கமே ஆகும். அதனையே 'களிப்பெலாம் (கெட) மிகக் கலங்கிடுகின்றேன்' என்று பாடுகிறார்.

கலக்கம் வந்துவிட்டால் என்ன செய்யவேண்டும் என்பது தெரியாமல் திகைக்க நேரிடும். உலகியலிற்கூட இத்தகைய திகைப்பை அடைந்தவர்கள் தமக்கு உற்றவர் களைத் துணைக்கு அழைப்பார்கள். அதே செயலைத்தான் அடிகளாரும், 'வளைக்கையானொடு (திருமால்) மலரவன் அறியா வானவா!' 'மாதொருபாகா!' என்று விளித்துத் துணைக்கு அழைக்கின்றார். இந்த இரண்டு விளிகளும் கருத்துடை விளிகளாகும்.

கலங்கி நிற்கும் ஒருவர், தம்மைப் போலக் கலங்கிநின்ற இருவரை நினைவுகூர்கின்றார். அப்படிக் கலங்கியவர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். ஒருவன் செல்வத்தின்

எல்லையாக உள்ளவன், மாபெரும் ஆற்றல் மிகுந்த, பாஞ்சசன்னியம் என்ற சங்கினை உடையவன். (வளைக்கையான்) அடுத்தவன் அறிவின் எல்லையில் நிற்பவன்; வேதங்களை ஓயாமல் ஓதுபவன். ஆக, செல்வம், வன்மை, கல்வி, வேதம் ஆகிய அனைத்தும் நிறைந்த இருவர் மலரடி காணாமல் கலங்கி நிற்கின்றனர். அவர்களே கலங்கினர் என்றால், அவர்கள் கலங்குவதற்குக் காரணமானவனைத் தாம் துணைக்கு அழைப்பதில் தவறில்லை எனக் கருதுகிறார் அடிகளார்.

மேலே கூறப்பெற்ற இவ்விருவரும் அவனைக் காணக் கதறினார்களே கிடைத்தானா? கிடைக்கவில்லை என்பது உலகறிந்த ஒன்று. அப்படிப்பட்ட ஒருவனைத் தாம் துணைக்கு அழைத்தால் எவ்வாறு வருவான் என்று ஐயம் உறுபவர்க்கு விடையாக 'மலைமாதொரு பாகா' என்கிறார். மாலுக்கும் அயனுக்கும் தட்டுப்படாதவன் ஒரு பெண்ணிற்காக இரங்கி, அவளைத் தன்னிலொரு பாதியாக ஆக்கிக் கொண்டான் என்று கூறுவதன்மூலம், தாம் அழைத்தால்கூட அவன் வருவான் என்ற உறுதிப்பாட்டையும் கூறினாராயிற்று.

ॐ ॐ ॐ

24. அடைக்கலப் பத்து

[பக்குவ நிர்ணயம்]

தக்கவரிடத்து ஒரு பொருளையோ அன்றி ஒரு மனிதரையோ அடைக்கலமாகத் தருதல் இந்தியா முழுதும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலவியிருந்த ஒரு பழக்கமாகும். 'தாங்கள் இந்த இளையவனை ஏற்றுக் கொண்டு பாதுகாத்தருள்க' என்று வேண்டி, பெரியவர்கள்பால் இளையோரை ஒப்படைப்பது கையடை எனப்படும்.

இதன் எதிராக, தக்க வயதும் தகுதியும் உடையவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக ஒரு பெரியவரை அண்டித் தம்மை அவரிடம் முழுவதுமாக ஒப்படைத்தல் அடைக்கலம் என்று சொல்லப்படும்.

கையடையாகத் தரப்பெறுபவர் ஆண்டிலும் அனுபவத்திலும் இளையர் ஆதலின் இவர்களை அடைக் கலமாக ஏற்றுக்கொள்க என்று ஒரு பெரியவர் தருவதையே கையடை என்று குறிப்பிட்டோம். இதிலுள்ள தனித்துவம் என்னவென்றால், கொடுக்கப்படுபவரின் சம்மதம், விருப்பு வெறுப்பு என்பவை கையடையில் இடம் பெறுவதே இல்லை. அடைக்கலத்தில் இம்முறை மாறியிருக்கும். வீடணன் தானாகவே வந்து அடைக்கலம் புகுந்தான். அதேபோன்று, பெரும்பாலான அடியார்கள் இறைவனிடம் தாமாகவே வந்து அடைக்கலம் புகுகின்றனர்.

இவ்வாறு அடைக்கலம் புகுவதில் ஒரு சிக்கல் இருக்கிறது. அடைக்கலமாகத் தம்மைக் கொடுப்பவர், முழு

விருப்பத்தோடு அச்செயலில் ஈடுபடலாம். ஆனால் ஏற்றுக் கொள்பவர் விரும்பி ஏற்றுக்கொண்டால்தானே அடைக் கலம் முற்றுப்பெறும்? ஏற்றுக்கொள்பவரின் மனநிலை உறுதியாகத் தெரியாதபொழுது அடைக்கலமாகத் தம்மைத் தருபவர் பிடிவாதம் பிடித்தலுமுண்டு.

"படைக்கலமாக" என்று தொடங்கும் நாவரசரின் விருத்தப் பாடலை நோக்குவோம்.

படைக்கலமாக உன் நாமத்(து) எழுத்(து)அஞ்சு
என் நாவிற் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும்
உனக்கு ஆட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்
தூ நீறு அணிந்து உன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச்
சிற்றம் பலத்(து) அரனே.

(திருமுறை: 4-81-8)

இதில் இரண்டு புதிய கருத்துக்களைப் புகுத்துகிறார் நாவரசர் பெருமான்.

முதலாவது, இடைக்கலம் அல்லேன் என்பதாகும். இது இப்பொழுது வழக்கொழிந்த சொல்லாகும். சுதந்திரம், அடைக்கலம் என்ற இரண்டிற்கும் இடைப்பட்டது இடைக் கலம் என்பதாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒருவரிடம் அடைக்கலமாதல் இடைக்கலம் என்று பேசப் பெறும். இதுவே 'ஒற்றி' என்று இன்று வழங்கப் பெறுகிறது. கையுடையும் இடைக்கலம் போலத்தான் என்றாலும் கையடையில் செல்வோர் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு இடம்தருவதில்லை. இடைக்கலமாகச் செல்பவர் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் செல்வ தாயினும் அவருடைய முழு விருப்பத்தோடு செல்வர்.

நாவரசர் பெருமான் அடுத்துக் குறிப்பிடுவது (யான் உன்) 'அடைக்கலம் கண்டாய்' என்று பாடுவதாகும். அது சரி, இடைக்கலத்திற்கு அடுத்து நிற்பது அடைக்கலம் தானே! ஆனால் திடீரென்று 'துடைக்கினும் போகேன்' என்று நாவரசர் பெருமான் கூறுவது முன்னர்க் குறிப்பிட்ட சிக்கல் பற்றியதாகும்.

'துடைக்கினும் போகேன்' என்று ஏன் சொல்ல வேண்டும்? அடைக்கலம் ஏற்பவர் மனம் மாறி ஏற்றுக் கொள்ளாமல் விடுவதுமட்டு மல்லாமல் தம் எதிரில்கூட நிற்கவேண்டாம், எங்கேயாவது மறைந்துவிடு என்று சொல்லக்கூடிய நிலை வரலாம் அல்லவா? அப்படி ஒரு நிலையை மனத்துட் கொண்டு 'துடைக்கினும் போகேன்' என்கிறார்.

இவ்வளவு சிறப்புடைய இந்த அடைக்கலம்பற்றி உலக இலக்கியங்களில் அதிகம் காண்பதற்கு இல்லை. இந்திய நாட்டின் தனிச்சிறப்பிற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு என்று கூறினால், அதில் தவறொன்றும் இல்லை. இந்த அருமைப்பாட்டைப் புரிந்துகொள்ளாமல் 'பக்குவநிர்ணயம்' என்று உள்தலைப்புத் தந்துள்ளனர். அது பொருந்தாமையை அறியலாம்.

அடைக்கலம்பற்றிய இந்த அடிப்படைகளை அறிந்து கொண்ட பிறகு, அடிகளாரின் அடைக்கலப் பத்தைக் காணப்புகுவது நலம்.

பத்துப் பாடல்களிலும் 'உன் அடைக்கலமே' என்று பாடிச்செல்கிறார். இந்த அளவோடு அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. ஒரு படி மேலே சென்று- அடியேன் உன் அடைக்கலமே என்று கூறுவதோடு, உடையாய் என்ற ஒரு வார்த்தையையும் முன்னே பெய்வதன்மூலம் மிகச் சிறந்த முறையில் பெருந்துறை நாயகனைச் சிக்கவைக்கின்ற அற்புதத்தைக் காண்கிறோம்

'உடையாய்!' என்ற விளி ஆழமான பொருளை உடையது. பல சமயங்களில் தம்மிடம் உள்ள விரும்பத்தகாத பொருளை எப்படியாவது உதறவேண்டும் என்று நினைக்கின்றவர், கண் காணாத இடத்தில் அதனை விட்டுவிடுவர். அப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் வேறொருவர் அப்பொருளை எடுத்துவந்து, "இது உங்களுடைய பொருள், நீங்கள் மறந்துவிட்டதாகத் தெரிகிறது; வைத்துக்கொள்ளுங்கள்" என்று கொடுப்பது இன்றும் உலகிடை நடைபெறுவதாகும். இப்படிக் கூறுபவர் எதிரே, பொருளை வேண்டாமென்று ஒதுக்கியவர் தப்பிப்பது கடினம். இந்த நிலையை அடிகளார் மனத்துட்கொண்டார்போலும். ஒவ்வொரு பாடலிலும் உடையாய் என்று விளிப்பதன் இரகசியம் இதுவேயாகும். 'நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நான் உன் உடைமைப்பொருள், நீ என் உடையான்' என்ற கருத்தை ஒவ்வொரு பாடலிலும் வைத்துப் பாடுவதன் நோக்கம் இதுவேயாகும்.

408. செழுக் கமலத் திரள் அன நின் சேவடி சேர்ந்து அமைந்த
பழுத்த மனத்து அடியார் உடன் போயினார் யான் பாவியேன்
புழுக்கண் உடைப் புன் குரம்பைப் பொல்லாக் கல்வி
ஞானம் இலா
அழுக்கு மனத்து அடியேன் உடையாய் உன் அடைக்கலமே
1

திருப்பெருந்துறையில் நடைபெற்ற நிகழ்ச்சி இப்பொழுது மறுபடியும் நினைவில் ஊசலாடுகிறது. அடியார்களோடு மறைந்துவிட்ட குருநாதர் என்றாவது ஒருநாள் மீட்டுவந்து அடியார் கூட்டத்தைக் காட்டித் தம்மையும் அவர்களுடன் சேர்த்துக்கொள்வார் என்று எதிர்பார்த்த அடிகளாரின் எண்ணம் இதுவரை ஈடேறவில்லை.

அதனால் ஒரு விநாடி நேரமாக இருப்பினும் திருவடி தீட்சை செய்து தம்மை அடியனாக ஏற்றுக்கொண்டதை நினைவூட்டுவார்போல, 'உடையாய்! நீ என்னை இங்கு விட்டுச் சென்றாலும் நீதான் என் உடையான். நான் உன் அடைக்கலப் பொருளாவேன்' என்ற கருத்தில் பேசுகிறார்.

அந்த அடியார்கள் 'பழுத்த மனத்து' அடியார்கள், தாம் அதற்கு நேர்மாறாக 'அழுக்கு மனத்து அடியேன்' என்கிறார்.

அப்படியானல் இவர் ஒதுக்கப்பட வேணடியவர் தானே! அந்தத் தூய அடியவர்களோடு இவர் எப்படி ஒன்றாக இணையமுடியும் என்ற வினாவிற்கு விடை கூறுவார்போலத் தம்மை உடைமையாக ஏற்றுக் கொண்டபொழுதே பெருந்துறையான் இந்த வேறுபாட்டை நினைந்துபார்த்து ஒதுக்கியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் ஒருமுறை திருவடி தீட்சை செய்து, அடியார்களிடையேயும் இருக்கச் செய்துவிட்டார் அல்லவா? இது நடைபெற்றபொழுதே குருநாதர் 'உடையானாகவும்' அடிகளார் உடமைப் பொருளாகவும் ஆகிவிட்டனர். உடைமையென்று ஏற்றுக்கொண்ட பிறகு குற்றம் குறைகள் பார்ப்பது சரியன்று. ஆகவே, நான் 'உன் அடைக்கலம்' என்று நினைவூட்டுகிறார்.

பாடலின் ஈற்றடியைக் 'கல்வி ஞானமிலாப் பொல்லா அழுக்கு மனத்து அடியேன்' என்று கொண்டு கூட்டிக்கொள்க.

409. வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை நின்
பெருமையினால்
பொறுப்பவனே அராப் பூண்பவனே பொங்கு கங்கை சடைச்
செறுப்பவனே நின் திருவருளால் என் பிறவியை வேர்
அறுப்பவனே உடையாய் அடியேன் உன் அடைக்கலமே

'உடையாய்' என்று விளித்தமையால் உடையானுக்குரிய சில சீரிய பண்புகள் இப்பாடலில் இடம்பெறுகின்றன.

பிறர் செய்யும் சிறுமையைப் பொறுத்தல் என்பது அனைவருக்கும் இயல்வது ஒன்றன்று. ஒரு சிலருக்கே உரிய இந்தப் பண்பின் அடிப்படை ஒன்றுண்டு. பிறர் செய்யும் சிறுமையை எண்ணிப்பாராதிருப்பதே அப்பெருமையின் அறிகுறி. எண்ணிப்பார்க்கத் தொடங்கினால் எண்ணிக்கை மிகமிக, ஓர் எல்லையில் அப்பொறுமை நீங்கிவிடும். எனவே, வெறுத்தற்குரிய சிறுமைகளையே யான் செய்யினும் அப்பெரியான் தன் பெருமை காரணமாக அதனைப் பொறுத்துக்கொள்கிறான்.

எப்பொழுதும் சினத்துடன் இருக்கும் அராவை (பாம்பை) ஆபரணமாகக் கொண்டுள்ளான் என்றால், அவன் பெருமையின் எதிரே அரவும் அடங்கிவிடுகிறது.

உலகை அழிப்பேன் என்ற ஆணவத்தோடு பொங்கி வந்த கங்கையைச் சடையில் தரித்துவிடுகிறான் என்பதால் அவன் பொறுமை, பெருமை என்பவற்றிற்கு இணையான ஆற்றலும் அவன்பாலுள்ளது என்பதை அறியமுடிகிறது.

'உடையாய்' என விளித்து, தாம் அவனுடைய அடைக்கலம் என்பதையும் நினைவூட்டி, எந்த நிலையிலும் அவன் தம்மைத் தள்ளமுடியாது என்பதையும் இரண்டு பாடல்களிலும் கூறிய அடிகளார், உடையவனுக்குரிய ஒரு கடமையையும் நினைவூட்டுகின்றார். அதாவது, 'என் பிறவியை நீ போக்கவேண்டும்' என்று வேண்டிக்கொள்ளும் முறையில் இதனைக் கூறவில்லை. அதற்குப் பதிலாக 'என் பிறவியை வேர் அறுப்பவனே' என்று உறுதிபற்றி அவனுக்கு நினைவூட்டுகின்றார்.

410. பெரும் பெருமான் என் பிறவியை வேர் அறுத்துப் பெரும் பிச்சுத்
தரும் பெருமான் சதுரப் பெருமான் என் மனத்தின் உள்ளே
வரும் பெருமான் மலரோன் நெடுமால் அறியாமல் நின்ற
அரும் பெருமான் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே
3

சென்ற பாடலைப்போல் அல்லாமல் இப்பாடல் புதுவகையில் அவன் பெருமையைப் பேசுகின்றது. 'சதுரப் பெருமான்' என்பது பெரும் திறலையுடைய பெருமான் என்ற பொருளைத் தரும்.

செய்யுளில் இரண்டு செய்திகள் முன்னும் பின்னுமாக முறைமாற்றி வைக்கப்பெற்றுள்ளன. பிச்சுத் தருவது ஒன்று, பிறவியை வேரறுத்தல் இரண்டு. உலகியல் நாட்டம் இருக்கின்றவரையில்- இந்த உடலைச் சேர்ந்த கருவி, கரணங்கள், அவற்றுக்குரிய இயல்புகளோடு இருக்கின்றவரை- பிறவியின்மேல் பற்று இருந்தே தீரும். கருவி கரணங்கள் செயலற்றுப் போனாலொழியப் பிறவியைப் போக்குதல் இயலாத காரியம். பெருமான் சதுரப்பாடு நிறைந்தவன் ஆதலின் அடிகளாரின் பிறவியை அறுப்பதற்கு முன்னர் அடிகளாரைப் பித்தனாக்கச் செய்தான். அதாவது, அடிகளாருடைய கருவி கரணங்கள் தம்தொழிலை மறக்குமாறு செய்தான்; பிறகு பிறவியை வேரறுத்தான் 'என் பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத் தரும்பெருமான்' என்ற தொடரை இவ்வாறு மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும்.

பிறவியைப் போக்கப் போகின்றான் என்றாலும் இப்பொழுது இருக்கும் பிறவி, பொறி, புலன்கள் வசப்பட்டு பிரச்சினையை உண்டாக்குமே, அது நடைபெறாமல் இருக்க பிச்சனாகச் செய்தான் என்கிறார்.

411. பொழிகின்ற துன்பப் புயல் வெள்ளத்தில் நின் கழல் புணை
கொண்டு
இழிகின்ற அன்பர்கள் ஏறினார் வான் யான் இடர்க்
கடல்வாய்ச்
சுழி சென்று மாதர் திரை பொரக் காமச் சுறவு எறிய
அழிகின்றனன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே
4

உலகிடைப் பிறந்தவர்கள் அனைவரும் துன்பப் புயல் வெள்ளத்தில் சிக்கினரேனும் அவர்களுள் அன்பர் பலர் இறைவன் திருவடியாகிய புணையைப் பற்றிக்கொண்டு உய்கதி அடைந்தனர்.

அந்தப் புணையைப் பற்றிக்கொள்ளாமல் பிறவிக்கடலில் மூழ்கிய யான், மாதர் என்னும் அலையால் மோதுண்டு, காமம் என்ற சுறாமீனிடம் அகப்பட்டு நைகின்றேன் என்றவாறு.

412. சுருள் புரி கூழையர் சூழலில் பட்டு உன் திறம் மறந்து
இங்கு
இருள் புரி யாக்கையிலே கிடந்து எய்த்தனன் மைத் தடம்
கண்
வெருள் புரி மான் அன்ன நோக்கிதன் பங்க விண்ணோர்
பெருமான்
அருள் புரியாய் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே
5

சுருள்புரிகூழையர்–சுருட்டையான கூந்தலையுடையவர்

இப்பாடலிலும் இறையருளை மறந்து, பெண்ணாசையில் சிக்குண்டு, அஞ்ஞானமாகிய இருள் நிறைந்த வாழ்க்கையில் சுழல்வதைக் கூறுகிறார்.

413. மாழை மைப் பாவிய கண்ணியர் வன் மத்து இட உடைந்து
தாழியைப் பாவு தயிர் போல் தளர்ந்தேன் தட மலர்த் தாள்

வாழி எப்போது வந்து எந் நாள் வணங்குவன் வல்
வினையேன்
ஆழிஅப்பா உடையாய் அடியேன் உன் அடைக்கலமே 6

மத்து, தயிரில் இடப்படுவதன் முன்னர் அத்தயிர் கெட்டித்தன்மை உடையதாய், ஓரளவு சலனமற்று இருக்கின்றது. மிக இன்றியமையாத வெண்ணெய் அத்தயிருள் மறைந்திருப்பதுபோல் முன்னேற்றம் அடையவேண்டிய ஆன்மா, உடலைப் பற்றிய கருவி, கரணங்கள் என்பவற்றின் உள்ளே மறைந்து கிடக்கிறது. திருவருள் என்ற மத்து இத்தயிருள் புகுந்து இதனைக் கடைந்திருப்பின் ஆன்ம முன்னேற்றம் கிடைத்திருக்கும்.

ஆனால், திருவருள் என்ற பெரிய மத்துக்குப் பதிலாகப் பெண்ணாசை என்ற சிறிய மத்து இப்பொறி, புலன்களைக் கலக்கியதால், கடைதலின் உண்மைப் பயன் கிட்டாமல் போய்விட்டது என்பது குறிப்பெச்சம்.

'தாழியைப் பாவு தயிர்' என்றதால் இந்த உடம்பினுள் இருக்கும் பொறி, புலன்கள் பெண்ணாசை என்ற மத்துப் பட்டவுடன் தாழியைப் பாவு தயிர்போல் இந்த உடம்பையே சுற்றிச் சுற்றி வருகின்றன.

தயிரின் அளவுக்கு ஏற்ப மத்தின் அளவும் மாறுபட வேண்டும். பெரிய தயிர்ப் பானையில் மகளிர் ஆசை என்னும் சிறியதொரு மத்தைக் கொண்டு கடைந்தால், தயிர் கெட்டித்தன்மையை இழந்து பானையைச் சுற்றிச் சுற்றி வருமே தவிர வெண்ணையைத் திரள வைக்காது.

அதேபோலப் பேராற்றலுடைய பொறி, புலன்களோடு கூடிய மனம் தயிர்போன்று உள்ளது. இதனைக் கடைந்து பயன்பெற வேண்டுமானால் திருவருளாகிய பெரிய மத்து வேண்டும்.

414. மின் கணினார் நுடங்கும் இடையார் வெகுளி வலையில்
அகப்பட்டுப்
புன் கணன் ஆய்ப் புரள்வேனைப் புரளாமல் புகுந்து அருளி
என்கணிலே அழுது ஊறித் தித்தித்து என் பிழைக்கு
இரங்கும்
அம் கணனே உடையாய் அடியேன் உன் அடைக்கலமே 7

ஒரு துறையில் அதிதமாகச் செல்பவர்கள் அதிலிருந்து மீள்வது கடினம். மீள்வதானால், எவ்வளவு வேகமாக முன்னர்ச் சென்றார்களோ அதே வேகத்தோடு எதிர்த் திசையிலும் செல்ல வல்லவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்து, உலகிடைச் சில மனிதர்களைப்பற்றி அறிஞர்கள் கூறும் கருத்தாகும்.

இக்கருத்தை மனத்துட் கொண்டு இப்பாடலுக்குப் பொருள்செய்தல் நலம். முதலில் நடைபெற்றது என்ன? ஒளி பொருந்திய கண்ணையும் நுடங்கும் இடையையும் உடைய பெண்களின் உண்மையான ஊடல் அல்லாத சினம் என்னும் வலையில் அகப்பட்டு, மீளமுடியாமல் பெருந்துன்பத்தை அனுபவித்துப் புரண்டுகொண்டிருந்த தம்மை, புரளாமல் தடுத்ததோடு அல்லாமல் தம்முள் புகுந்து அருளினான் என்கிறார். அதன் பயனாக என்ன நிகழ்ந்தது? அவனே உள்ளே புகுந்துவிட்ட காரணத்தால் கண்ணீர் பெருகலாயிற்று. இந்தக் கண்ணீருக்குச் சில விளக்கங்கள் தருகிறார் அடிகளார்.

'புகுந்து அருளி என் கணிலே அழுது ஊறி, தித்தித்து' என்பது அடுத்துநிற்கும் தொடராகும். புகுந்து அருளியதால் என் கண்ணில் நீர் ஊறிற்று; நெஞ்சில் அழுது ஊறிற்று; நெஞ்சு தித்தித்தது. கண்ணில் நீர் ஊறுதல்மட்டும் புறத்தே நிகழ்ந்த செயலாகும். அழுது ஊறுதலும், தித்தித்தலும் உள்ளத்தின் உள்ளே நிகழ்ந்த செயல்களாகும். ஊறுதலும், தித்தித்தலும், கண்ணில் நீர் ஊறுதலும் அவன் உள்ளே புகுந்து அருளியதால் நிகழ்ந்த செயல்களாகும்.

மகளிர் வலையில் அகப்பட்டு நைந்து புரண்டதன் பின்னர், அவன் உள்ளே புகுந்து அருளியதால் இச் செயல் கள் நிகழ்ந்தன என்று கூறுவதன் நோக்கம் ஒன்றுண்டு.

அவன் உள்ளே புகுவதற்கு முன்னரும், ஒரு சில மாற்றங்களுடன் இச்செயல்கள் நிகழ்ந்தன. மகளிர் கோபத்தைத் தணிக்க முடியாமையால் கண்ணில் நீர் ஊறிற்று; ஆனால், அது துன்பக் கண்ணீர். நைந்து புரண்டமையால் நெஞ்சில் அமுது ஊறுவதற்குப் பதிலாக வெறுப்புணர்ச்சியும் சினமும் ஊறின. அதே நெஞ்சில் தித்திப்பு ஏற்படுவதற்குப் பதிலாகக் கசப்புணர்ச்சியே மிஞ்சியது.

துன்பக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறியதும், வெறுப்புணர்ச்சிக்குப் பதிலாக நெஞ்சில் அமுது ஊறியதும், கசப்புணர்ச்சிக்குப் பதிலாகத் தித்திப்பு உணர்ச்சி ஏற்பட்டதும் அவன் உள்ளே புகுந்து அருளியதால் ஏற்பட்டன என்க.

இதுபோன்று வரும் பாடல்கள் பலவற்றிலும் கண்ணார்தம் வலையில் அகப்பட்டு என்று பாடாமல் கண்ணார் தம் வெகுளிவலையில் அகப்பட்டு என்றே பாடிச் செல்கிறார். (திருவாச 414, 427,) வலை என்ற சொல்லின் முன்னர் வெகுளி என்ற சொல்லைப் பலவிடங்களிலும் சேர்த்தது அடிகளாரின் வாழ்க்கையில் முன்னர் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளைக் குறிக்குமோ என்ற ஐயத்தை தோற்றுவிக்கிறது. இதன் அடிப்படை நன்கு விளங்குமாறில்லை.

அடிகளாரைப் போன்று மேட்டுக்குடியில் பிறந்து ஒரு பேரரசின் அமைச்சனாகப் பன்னாள் இருந்த ஒருவருக்கு இத்தகைய அனுபவங்கள் கிட்டியிருப்பதில் வியப்பொன்றும் இல்லை. வைணவ ஆழ்வார்களில் ஒருவராகிய திருமங்கையாழ்வார் மன்னராக இருந்தவர் என்பது

அறியப்பட்டதே. அதனைத் துறந்து ஆழ்வாராக ஆகியபொழுது தாம்பாடிய முதற்பாடலில் இதே கருத்தைப் பேசுகிறார். 'வாடினேன்' (நாலா: 948) என்று தொடங்கும் பாடலில் வரும் 'பெருந்துயர் இடும்பையில் பிறந்து, கூடினேன், கூடியிளையவர் தம்மோடு அவர்தரும் கலவியே கருதி ஓடினேன்' என வரும் பகுதி இக்கருத்துக்கு அரண்செய்யும்.

415. மா வடு வகிர் அன்ன கண்ணி பங்கா நின் மலர் அடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே இடுவாய் நின் குறிப்பு அறியேன்
பா இடை ஆடு குழல் போல் கரந்து பரந்தது உள்ளம்
ஆ கெடுவேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே
8

கும்பி– நரகம்; கூவிடுவாய்-கூப்பிடுவாயாக.

இப்பாடலில் அடிகளார் பயன்படுத்தும் உவமை சிந்திக்கற்பாலது. நெசவு நெய்கின்றவர்கள் பாவு என்ற பெயரோடு உள்ள நீண்ட நூலின் இடையே ஊடு என்று சொல்லப்படும் குழலை இடப்புறமும் வலப்புறமுமாகச் செலுத்தித் துணியை நெய்வர். பாவு என்று சொல்லப்படும் நீண்டுள்ள நூலுக்கும் அதனூடே இடப்புறமும் வலப்புறமும் செல்லுகின்ற குழலுக்கும் வெளிப்படையாகக் கண்ணுக்குத் தெரிகின்ற தொடர்பு எதுவும் இல்லை. என்றாலும் ஒருநூறு முறை இந்தக் குழல் இடப்புறமும் வலப்புறமும் சென்றுவந்தால் ஆடையில் இரண்டங்குலம் நெய்யப்பெற்றிருக்கும்.

மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசை என்ற மூன்று ஆசைகளும் பாவு நூல்போல் நீண்டு கிடக்கின்றன. உள்ளம் என்னும் குழல் இம்மூன்று நூல்களுக்கும் இடையே குறுக்கும் நெடுக்குமாகப் புகுந்துபுறப்பட்டு வரவர நம்முடைய வினை நெய்யப்படுகிறது. நம்மையும் அறியாமல், நம் அதிகாரத்திற்குக் கட்டுப்படாமல்,

நம்முடைய உள்ளம் இந்த ஆசைகள் மூன்றினிடையே சுற்றிவந்து, வினையை நெய்வதைத் தடுக்க, நமக்கு ஆற்றல் இல்லை. இந்த மூவாசைகளும் அறவேண்டும் என்று வாய் கிழியக் கத்தினாலும் எவ்விதப் பயனும் விளையப்போவதில்லை.

இந்தச் சிக்கலை உணர்ந்த அடிகளார், 'மாவடு வகிர் அன்ன கண்ணி பங்கனே! நின் மலர் அடிக்கே என்னைக் கூப்பிட்டுக்கொண்டாலும் சரி; நரகத்தில் (கும்பிக்கே) தள்ளினாலும் சரி. உன்னுடைய திருவருட்குறிப்பு எதுவென்று தெரியவில்லை. ஆனால், ஒன்றுமட்டும் சொல்கிறேன். நீ இப்படியே விட்டுவிட்டால், உன்னிடம் அடைக்கலம் புகுந்தும் அப்பயனை அனுபவியாமல் கெட்டுவிடுவேன்' என்கிறார்.

416. பிறிவு அறியா அன்பர் நின் அருள் பெய் கழல் தாள்
இணைக் கீழ்
மறிவு அறியாச் செல்வம் வந்து பெற்றார் உன்னை
வந்திப்பது ஓர்
நெறி அறியேன் நின்னையே அறியேன் நின்னையே
அறியும்
அறிவு அறியேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே
9

மனித மனத்தின் வினோதமான ஓர் இயல்பை இங்கு நினைவுகூர்வது நலம். பல நாள் விரும்பி, காத்திருந்து அரிதாக ஒரு பொருளைப் பெற்றாலும், சில நாட்களில் அதன்பால் உள்ள பற்றுத் தளர்ந்துவிட, அப்பொருளை நழுவ விட்டுவிடுவது மனித மனத்தின் இயல்பு.

இதன் எதிராகத் திருவடிச் செல்வத்தைப் பெற்றவர்கள் எக்காலத்திலும் எந்த நிலையிலும் அதனை விட்டுநீங்கிப் பிறிதொன்றை அடைய விரும்பியதும் இல்லை; முயன்றதும் இல்லை. இவர்களையே 'தாள்

இணை பிறிவு அறியா அன்பர்' என்கிறார் அடிகளார். (பிறிவு-பிரிவு)

இத்தகைய அடியார்கள் பெற்ற செல்வம் மறிவு அறியாச் (மீளுதல் இல்லாத) செல்வம் என்று பேசுகிறார். திருவடி இணையைப் பிரிவு அறியாத அன்பர்கள் ஆதலால் அவர்கள் பெற்ற பயனும் மறிவு அறியாச் செல்வம் ஆயிற்று. செல்வம் என்ற சொல்லைப் பயன்படுத்தியதால் அது வந்துவந்து போகும். தன்மையது என்று சொல்பவர்போல, 'மறிவு அறியா' (மீளுதல் இல்லாத) என்ற அடைமொழியைப் பயன்படுத்துகிறார்.

பெற்றார் என்று சொல்லாமல் 'வந்து பெற்றார்' என்று கூறுவதன் நோக்கம் என்ன? வந்து என்ற வினையெச்சம் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் புடை பெயர்தலைக் குறிக்கும். அப்படியானால் பிரிவு அறியா அன்பர் எங்கிருந்து வந்து இந்த மறிவு அறியாச் செல்வத்தைப் பெற்றார்கள்? உண்மையைக் கூற வேண்டுமானால் 'வந்து' என்ற சொல் ஓர் உடம்பு புடைபெயர்தலைக் குறிப்பதன்று.

உலகிடை பூத உடம்போடு வாழும் மனிதர்களுள் சிலர் இந்த உடம்போடு வாழும்பொழுதேகூடப் பொறிப் புலன்கள், அந்தக்கரணம் ஆகியவற்றை விட்டுவிட்டு, திருவடி இருக்கும் இடத்தை நாடி வருகின்றனர். உடம்பு புடைபெயர்ச்சி இல்லாமல் ஆன்மப் புடைபெயர்ச்சி நடைபெறுகிறது. அதனாலேயே அவர்கள் 'பிறிவு அறியா அன்பர்கள்' என்ற முத்திரை குத்தப்பெற்று மறிவு அறியாச் செல்வத்தைப் பெற்றார்கள். இவ்வுலகில் இருந்தபடியே திருவடியை ஓயாமல் சிந்தித்து அதனிடம் செல்ல விரும்புவதையே 'வந்து' என்ற சொல்லால் குறித்தார்.

தனு, கரண, புவன போகங்களோடு கூடிய இந்த உலகில், இவற்றை அனுபவிக்கக்கூடிய பொறிபுலன்களோடு

கூடிய உடம்பைப் பெற்றவர்களில் சிலர் என்ன செய்தார்கள்?

முதலில் ஓர் அறிவைப் பெற்றார்கள். அது என்ன அறிவு? எவ்வளவு சுகபோகங்களோடு கூடினாலும் உடம்பும் உலகும் அதனை அனுபவிக்கும் தம் வாழ்வும் நிலையில்லாதவை என்பதை அறிந்தார்கள். அடுத்து, அவருடைய அறிவு, நிலையாமை உடையவற்றை நீக்கிவிட்டு, நிலையான பொருள் எது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டது. அந்த ஆராய்ச்சியின் பயனாக, இறைவனே நிலையானவன் என்ற முடிவுக்கு வந்தது. அதனை அடுத்து அந்த நிலையானவன் எத்தகையவன் என்ற ஆராய்ச்சியில் புகுந்தது. ஓரளவு அவனைப்பற்றி அறிந்தவுடன் நிலைபேறுடைய அவன் திருவடிகளை அடைவதற்கு வழி என்ன என்ற ஆராய்ச்சியில் புகுந்தது. நிறைவாக அவன் திருவடிகளில் சரணம் அடைந்தது.

மூன்று நிலைகள் முதலில் பேசப்பெற்றன. நிலைமையை உணர்தல், நிலைபேற்றை அறிதல், நிலைபேற்றைத் தருபவனை ஓரளவு அறிந்துகொள்ளுதல் என்ற மூன்றும் போக, நான்காவதும் ஒன்று உண்டு, அதுவே அந்த நிலைபேறுடைய பொருளை அடைய, வந்தனை புரிவது ஒன்றே வழி என்று அறிதல்.

இவ்விரிவான கருத்தைத்தான் கவிதை ஆதலின் அடிகளார் முன்பின்னாக மாற்றிச் சொல்லியுள்ளார். பாடலைப் பின்வருமாறு கொண்டுகூட்டிச் செய்தல் நலம். "நின்னையே அறியேன்; உன்னை வந்திப்பது ஓர் நெறி அறியேன்; நின்னையே அறியும் அறிவு அறியேன்'.

பெரும் பதவி வகித்து, பெருஞ்செல்வத்துடன் வாழ்ந்தவர் திருவாதவூரர். அந்த நிலையில் இவை நிலையில்லாதவை, இவற்றைவிட்டு நிலையான பொருள் எது என்று ஆராயும் அறிவையோ ஆற்றலையோ அவர்

பெற்றிருக்கவில்லை. இதனை 'நின்னையே அறியும் அறிவு அறியேன்' என்கிறார். இத்தொடரில் 'நின்னை அறியும் அறிவு' என்று கூறப்பெற்றதால் அத்தொடர் பரஞானத்தைக் குறித்து நின்றது. ஒரு பேரரசின் அமைச்சருக்கு அறிவுப் பஞ்சம் இருக்க வாய்ப்பில்லை. பேரறிவு படைத்திருந்தமையால்தான் அவர் அமைச்சராக ஆக்கப்பெற்றார். அந்த அறிவு அபரஞானம் எனப்படும். அந்த அறிவிலிருந்து இறைவனைப்பற்றி அறியும் பரஞானத்தைப் பிரித்துக் காட்டவே 'நின்னையே அறியும் அறிவு' என்றார். 'நின்னையே' என்றதில் உள்ள 'ஏ'காரம் ஆழமான பொருளை உடையது. உலகியல் அறிவாகிய அபரஞானம், பல்வேறு வகைகளில் பிரிந்து செல்லக் கூடியது. ஆனால், இறைவனை அறியும் பரஞானம் அவனை அறியும் வழியை அன்றி, வேறு வழியில் நாட்டம் கொள்வதோ செல்வேதா இல்லை. இக்கருத்தை உணர்த்தவே 'நின்னையே' என்று ஏகாரம் தந்து பேசினார். அவனை அன்றி வேறு ஒன்றிலும் நாட்டம் இல்லாமையால் நின்னையே அறியும் அறிவு (பரஞானம்) என்பால் இல்லை என்பதைக் குறிக்கவே 'அறியேன்' என்றார்.

அவனே தலைவன்; அவனை அடைவது ஒன்றே வழி என்பதை அறியாதபொழுது வந்திப்பதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. அவனை அறியும் அறிவு பெற்றிருந்தால் அவனை அடைய முயல்வார்கள். அந்த முயற்சி என்ன? அவனை வந்திப்பதாகிய ஒரே வழிதான். இவை இரண்டும் இல்லாதபொழுது அவனை அறிய முடியாது என்பதைக் கூறவே 'நின்னையே அறியேன்' என்றார்.

417. வழங்குகின்றாய்க்கு உன் அருள் ஆர் அமுதத்தை வாரிக் கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன் என் விதி இன்மையால்

தழங்கு அரும் தேன் அன்ன தண்ணீர் பருகத் தந்து
உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே
10

இப்பாடல் ஓர் உருவகமாக அமைந்துள்ளது. இங்கு வழங்குபவர், திருப்பெருந்துறையில் எழுந்தருளிய குருநாதர். வழங்குகின்றாய் என்றதால் தராதரம் பாராமல், பெறுவோருடைய தகுதி பாராமல் தன் கருணை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு குருநாதர் அருளை வாரி வழங்கினார் என்பது பெறப்பெற்றது.

வழங்குகின்றவர் தம் இயல்புக்கேற்ப அள்ளிக் கொடுக்கின்றார் என்றால், கொடுத்தலாகிய செயல், நற்பயன் விளைக்கவேண்டுமாயின் அதனைப் பெறுகின்ற பாத்திரம் அதற்குத் தகுதியுள்ள பாத்திரமாக இருத்தல் வேண்டும். வழங்கியவர் குருநாதர் என்றால், அதனைப் பெறுகின்றவர், சில விநாடிகள் முன்வரையில் திருவாதவூராராக இருந்து, இப்போது மணிவாசகராக மாறியவர். திருவாதவூராராக இருந்தபொழுது சில இயல்புகள் அவர்பால் இருந்தன.

எந்த ஒரு பொருளையும் புதிதாகக் கண்டால், அதனை வாரிக்கொண்டு தனதாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பது சாதாரண மனித இயல்பு. அமைச்சராக இருந்த ஒருவருக்கு இந்த இயல்பு அதிகமாகவே இருந்திருக்கும். அந்த இயல்பின் அடிப்படை தம் நாட்டுக்காகவும் இருந்திருக்கலாம்; தம் ஆசையை ஓரளவு நிறைவேற்றிக் கொள்ளவும் இருந்திருக்கலாம். ஓர் அமைச்சர் என்றால் நாட்டின் வருவாயை அதிகப்படுத்துதல், சேமித்தல், பிறர் நாட்டை வென்று, அவர்கள் பொருள்களைத் தம் நாட்டிற்குக் கொண்டுவருதல் என்பன போன்ற எண்ணங்கள் இருத்தல் இயல்பே. அதுவும் சந்தர்ப்பம் வரும்பொழுது அவசர அவசரமாகச் சேகரித்துக்கொள்ள

வேண்டும் என்ற இயல்பு, சாதாரண மனிதனுக்கும் அமைச்சருக்கும் பொதுவான இயல்பே ஆகும். இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தவர் திருவாதவூரர்.

இந்த மனநிலையோடுதான் திருவாதவூரர் குருநாதரைச் சந்திக்கிறார். அருகில் சென்றபொழுதுதான் இந்தத் துறவி வழங்கும் செல்வம், ஏனைய செல்வங்களைப் போன்று நிலையில்லாத ஒன்றன்று என்பதை உணர்ந்தார். இந்த குருநாதர் வழங்கும் அருளாகிய செல்வம், ஏனைய செல்வங்களைப் போன்று உடனே அனுபவிக்கத் தக்கதாயும் இருந்தது. பிற செல்வங்கள் அனுபவிக்கும் பொழுது மகிழ்ச்சியைத் தருவதன்றி நிலையாகப் பிறிதொன்றையும் தருவதில்லை. ஆனால், இவர் வழங்கிய அருளாகிய செல்வம், அனுபவிக்கும்பொழுது மன மகிழ்ச்சியையும் தந்து, உள்ளத்தின் ஆழத்தில் அமைதியையும் தந்தது. பிற செல்வம் மன நிறைவைத் தருவதில்லை. ஆனால், இந்த அருளாகிய செல்வம், உள்ளத்தில் நிறைவையும் தந்தது. அம்மட்டோடு இல்லாமல், இப்பிறவிக்கு மருந்தாகவும் இருந்தமையின் அதனை 'அமுது' என்கிறார் அடிகளார். குருநாதர் தந்த அருட்செல்வத்தின் சிறப்பு இதுவாகும்.

இத்தகைய ஒரு செல்வத்தை-பெறுபவரின் தகுதி நோக்காமல்-குருநாதர் வழங்குகின்றார். கிடைக்காதது கிடைத்தால் அத்தனையையும் வாரிக்கொள்ள வேண்டும் என்று நினைப்பது மனித இயல்பு. இத்தகைய மனநிலையில் பழகிவந்த அடிகளார் குருநாதர் வழங்கிய அருளார் அமுதத்தையும் வாரிக்கொண்டு விழுங்கத் தொடங்கினார்.

இறைவன் தந்த உடல் அமைப்பில், புறத்தே பொருள் எவ்வளவு நிறைந்திருந்தாலும். அதனை உள்ளே செலுத்துவதற்கு வாய் ஒன்றே வழியாக உள்ளது. வாயின் வழி சிறியது; ஆதலின், பொருள் மிகுதியாக இருப்பின் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து உண்ணவேண்டும்.

திருவாதவூரர் அவ்வாறு செய்யவில்லை. இரண்டு தவறான காரியங்களைச் செய்தார். ஒன்று, வாயின் அளவுக்கு ஏற்பக் கையில் எடுக்காமல் வாரிக்கொண்டார். மற்றொன்று, மென்று சுவைத்து உண்டால், கால தாமதம் ஆகும் என்று கருதி விழுங்கத் தொடங்கினார்.

கிடைக்கும் உணவைக்கூட முறைப்படி எடுத்து உண்ணாமல் வாரி விழுங்கினால் விக்கத்தானே செய்யும்? எவ்வளவு சிறந்த உணவாயினும் விழுங்கினால் விக்கத்தான் செய்யும்.

குருநாதர் வழங்கியது அருளார் அமுதாக இருப்பினும் திருவாதவூரர் அதனை வாரிக்கொண்டு விழுங்கத் தொடங்கினார். அது விக்கிக்கொண்டது. விக்கிக் கொண்டதற்குக் காரணம் குருநாதரோ அல்லது அவர் வழங்கிய அருளோ இல்லை. இந்நிலை ஏற்படத் தாமே காரணம் என்பதை அறிவுறுத்துவார்போல் 'வினையேன்' என்றார்.

குருநாதரும் அடியார்களும் மறைந்துவிட்டனர். அதன் பயனாக அருளார் அமுதம் கிடைப்பது தடைப்பட்டுவிட்டது என்று அடிகளார் கருதினார். அதனால்தான் 'விதியின்மையால்' என்றார்.

வழியோடு போன அவரை, குருநாதர் இருக்கும் இடத்திற்கு அழைத்துவந்தது விதி; அவரைக் காணுமாறு செய்ததும் அதே விதிதான்; அவர் திருவடிகளில் வீழுமாறு செய்ததும் அதே விதிதான்; அவருடைய திருவடி சம்பந்தம் பெறுமாறு செய்ததும் அதே விதிதான்; அடியார் கூட்டத்திடை இருக்குமாறு செய்ததும் அதே விதிதான். குருநாதர் விழிகளிலிருந்து பாய்ந்து ஓடிய கருணை வெள்ளம் இவரை நோக்கிப் பாய்ந்ததும் அதே விதியினால்தான். எல்லையற்ற ஆனந்தத்துடன் புசிக்கத் தொடங்கியதும் அதே விதியினால்தான்.

திடீரென்று அவருக்கு இவ்வளவு தூரம் அருள் செய்த அந்த விதி, இப்போது மறைந்துவிட்டது. விதி மறையும் பொழுது குருநாதர் உட்பட அனைவரும் மறைந்து விட்டனர். இவ்வளவு தூரம் அவருக்கு உதவிய விதி ஏன் இதனைச் செய்திருக்க வேண்டும்? அந்த (நல்) விதி யின்மையால் குருநாதர் மறைவு முதலியன அனைத்தும் நடந்துவிட்டன.

இவ்வளவு விரிவாக உருவகத்தில் பேசிய அடிகளார் விக்கிய அருளார் அமுதம் புறத்தே சென்றுவிடாமல் உள்ளே செல்லவேண்டும் என்று ஆசைப்படுகிறார். தொண்டையில் விக்கிய ஒன்று, உடலினுள் செல்ல வேண்டுமானால் தண்ணீர் ஒன்றுதான் அதனை உட்செலுத்தும். எனவே, உருவக அடிப்படையில் விக்கிய அருளார் அமுதம் உள்ளே செல்வதற்குரிய தண்ணீரை உணவு பரிமாறியவரே தரவேண்டும் என்று கருதினார். ஆகவே, 'தண்ணீர் பருகத் தந்து உய்யக் கொள்ளாய்' என்றார். இங்குத் தண்ணீர் எனப்பட்டது யாது? அருளார் அமுதமே தொண்டையில் சிக்கிக்கொண்டது. அதை உள்ளே செலுத்தவேண்டிய தண்ணீரும் அதே அருள்தான் ஆகும். உலகிடைக் கிடைக்கும் நீர்போல் அல்லாமல் அருளையே தண்ணீர் என்று உருவகித்ததற்கேற்பத் "தேன் அன்ன தண்ணீர்" என்று பேசுகிறார்.

தேனே மருந்தும் உணவும் ஆயினாற்போல, இறைவன் கருணையே, அமுதாகவும் தண்ணீராகவும் அமைந்தன. சாதாரணத் தண்ணீர் விக்கிய பொருளை உட்செலுத்தும்; வயிற்றை நிரப்பும். ஆனால், இறைவனுடைய "கருணை, தழங்கு அரும் தேன் அன்ன தண்ணீர்" ஆகும்.

அருளை நாடிநிற்கும் ஆன்மாவின் வேண்டுதலை நிறைவேற்றுவதுடன், இத்தண்ணீர் அதற்கு உய்கதியையும் நல்குகிறது. இதனைத் தெரிவிக்கவே "தண்ணிர் தந்து உய்யக் கொள்ளாய்" என்றார்.

25. ஆசைப் பத்து

[ஆத்தும இலக்கணம்]

திருப்பூவல்லியில் 'பேராசையாம் இந்தப் பிண்டம் அற' (திருவாச:284) என்று பாடிய பெருமான் திருப்பெருந் துறையில் பத்துப் பாடல்களிலும் 'ஆசைப்பட்டேன் கண்டாய்' என்று பாடுவது நம் சிந்தனையைத் தூண்டுவதாகும்.

அடிகளார் காலத்திற்குச் சற்று முன்னர் வாழ்ந்த திருமூலர் 'ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்' (திருமந்: 2554) என்று பாடியுள்ளார்.

ஆசை அறுக்கப்படவேண்டும் என்றுதான் பெரியோர் பலரும் பாடியுள்ளனர். அப்படியிருக்க ஒரு பதிகம் முழுவதும் ஆசைப்பட்டேன் என்று அடிகளார் பாடுவதன் நோக்கமென்ன? இப்பதிகத்திற்குத் உட்தலைப்புத் தந்த பழையவர்கள் 'ஆத்தும இலக்கணம்' என்று கூறியுள்ளார்கள். பின்னே வந்த உரையாசிரியர்கள், உயிர்கள் வீடுபேற்றை அடைய ஆசைப்படுதலின் இப்பதிகத்திற்குப் பழையவர்கள் தந்த 'ஆத்தும இலக்கணம்' என்ற தலைப்புப் பொருந்தும் என்று கூறியுள்ளனர். இவ்விரண்டையும் ஏற்றுக்-கொள்வதற்கில்லை.

ஆசை என்பது மனத்தின்பாற்பட்ட தாகும். மனத்தளவில் தோன்றும் இயல்பான, தேவையான ஆசைகள் விஸ்வரூபம் எடுக்கும்போது பேராசையாக மாறுகின்றன. ஆற்றில் இயல்பாக நீர் ஓடினால் பயிர்கள் விளைய அது உதவும். அதே ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடினால் அதுவே பயிர்களை அழிக்கும்.

அதேபோன்று மனத்தில் தோன்றும் இயல்பான ஆசைகள் அளவோடு இருக்கும்போது வளர்ச்சிக்கு உதவும். அந்த ஆசைகள் பேராசையாகும்போது வாழ்வை அழிக்கும்.

இங்கு அடிகளார் கூறும் ஆசை, மனத்தளவில் தோன்றும் இயல்பான ஆசையாகும். பிறவி, எந்தநிலையிலும் துன்பத்தையே தருதலின், அந்தத் துன்பத்தைப் போக்கும் ஒன்று இறைவன் திருவடிகளே என்பது தெளிவு. எனவே, அத்திருவடிகளைப் பெற ஆசைப்படுகிறேன் என்று கூறுவது முற்றிலும் பொருத்தமானதே ஆகும்.

அளவான ஆற்று நீர் பயிர்களை வளர்க்கும் என்று கண்டோம். அடிகளார் கூறும் அளவுமீறாத ஆசை , அது தோன்றும் மனத்தை முதலில் ஒருமுகப்படுத்துகிறது. பின்னர், நெறிகெட்டுத் திரியும் பொறி, புலன்களைச் செம்மைப்படுத்தி, ஒருமுகமாக வளரச் செய்கிறது. கண்கள் அவனைக் காணவும், காதுகள் அவன் புகழைக் கேட்கவும், நா அவன் புகழைப் பாடவும், உடல் அவன் திருவடிகளைப் பற்றிக்கொள்ளவும் ஆன ஒருமுகப்பட்ட வளர்ச்சியைப் பெற இந்த ஆசை உதவுகிறது.

ஆசை என்பது மனத்தில் தோன்றும் ஒரு விளைவு ஆகும். மனம் என்ற ஒன்று இருக்கின்றவரையில், ஆசை இருந்தே தீரும். அதனை அறவே போக்கிவிடுதல் என்பது ஏறத்தாழ இயலாத காரியம். இம்முயற்சியில் ஒரு சிலர் வெற்றி பெற்றார்கள் என்பதை மறுத்தற்கில்லை. ஆனாலும், எஞ்சிய பலருள் சிலர் வாழ்க்கையின் அடித்தளத்தில் ஆசையை அறுக்கவேண்டும் என்ற ஆசை இருப்பதை, ஆராய்ந்து கண்டால், அறிய முடியும். பொறி, புலன்களையும் மனத்தையும் ஒருசேர அழித்துவிட முடியாது என்பதை நம் முன்னோர் என்றோ கண்டனர். 'அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்; அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை' (திருமந்:2009) என்பது

திருமூலர் வாக்கு. மாபெரும் சித்தராகிய திருமூலரே, இவ்வாறு கூறினார் என்றால், ஏனையோர்பற்றிப் பேசவே தேவையில்லை.

பருவுடம்போடு மனிதன் வாழ்கின்றவரையில் மனம்-அதில் தோன்றும் ஆசை-பொறி, புலன்கள் என்பவை இருந்தே தீரும். முன்னர்க் கூறியபடி இந்தப் பொறி, புலன்களை இறைவனிடம் செலுத்தும் ஆசை, மனத்திடைத் தோன்றுமேயானால் அந்த ஆசை வரவேற்கத் தக்கதே ஆகும். தன்னிச்சையாகச் செயற்படும் பொறி, புலன்களை அவ்வாறு மடைமாற்றம் (sublimation) செய்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும். இந்த மடைமாற்றம் செய்யவேண்டும் என்ற ஆசை தோன்றுவதேகூட இந்த மனத்தில்தான். இத்தகைய ஓர் ஆசையைத் தோற்றுவிக்கவும், அதனை வளர்க்கவும் மனிதன் இறையருளை நாடவேண்டி உள்ளது. இதனையே அடிகளார் ஆசைப்பத்தில் கூறுகிறார்.

418. கருளக் கொடியோன் காணமாட்டாக்
கழல் சேவடி என்னும்
பொருளைத் தந்து இங்கு என்னை ஆண்ட
பொல்லா மணியே ஓ
இருளைத் துரந்திட்டு இங்கே வா என்று
அங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 1

அஞ்ஞானமும் குற்றமும் நிறைந்த இவ்வுலகத்தை 'இருள்' என்கிறார் அடிகளார். இந்த இருண்ட பகுதியிலிருந்து ஒளிமயமான சிவலோகத்திற்குச் செல்ல ஆசைப்படுகிறார். அதற்கு என்ன வழி? சிவலோகத்திற்குரிய தலைவனாகிய இறைவன் அங்கிருந்தபடியே அந்த இடத்திற்குக் வருக என்று தம்மை அழைக்க வேண்டும்

என்ற விண்ணப்பத்தை இப்பாடலின் மூன்று, நான்காம் அடிகளில் தெரிவிக்கின்றார்.

இதிலொரு புதுமை இருக்கிறது. இருட்டில் இருக்கிறார் அடிகளார். இதனைத் துறந்துபோதல் வேண்டுமாயின், முதலில் எந்த இடத்திற்குச் செல்லவேண்டும் என்பது உறுதியாகத் தெரியவேண்டும். இரண்டாவதாக வழி தெரியவேண்டும். இம்மாதிரி நேரங்களில் ஒளிக்கு உரிமையாளன் இங்கே வந்து இவரைக் கூட்டிச் செல்வதுதானே முறை! அதை விட்டுவிட்டு எங்கோ ஓர் இடத்தில்(சிவலோகத்தில்) இருந்துகொண்டு, 'இங்கே வா' என்று கூறினால் அந்தப் பரிவான சொற்களை ஏற்றுக்கொண்டு செல்ல அடிகளாருக்கு ஆற்றல் உள்ளதா?

உண்டு என்று கூறுவதை, வேறுவகையாக முன்னிரண்டு அடிகளில் அடிகளார் குறிக்கின்றார். கழற்சேவடி என்னும் பொருளைத் திருப்பெருந்துறையில் இவருக்குத் தந்து, இவரை ஆட்கொள்ளவும் செய்தாரல்லவா? எனவே, அடிகளாரைப் பொறுத்தமட்டில் குருவைத் தெரியும்; அவர் திருவடிகளையும் தெரியும்; பொதுவினில் வருக என்று கூறியமையின் குருநாதர் குரலும் தெரியும். அந்தத் தைரியத்தில்தான், வேறெங்கிருந்து இங்கே வாவென்று குருநாதர் அழைத்தாலும் அடிகளாரால் செல்ல முடியும். குருநாதர் திருவடியை அடைய இரண்டு உதவிகள் உள்ளன. முதலாவது 'இங்கே வா' என்று குருநாதர் கூறினால் அந்த நாத தரிசனம் இவருக்கு வழிகாட்டும். இரண்டாவது, போகுமிடம் ஒளி வடிவாக இருத்தலின் எளிதாக அந்த இடத்தை இனங்கண்டு செல்லமுடியும். வேறு வகையாகக் கூறினால் முதலில் நாத தரிசனமும், இரண்டாவது சோதி தரிசனமும் கிட்டும் என்க.

திருப்பெருந்துறையில் கழற்சேவடிகளைத் தந்து ஆட்கொண்டவருக்கு இப்பொழுது ஒரு கடமை உள்ளது.

ஆட்கொள்ளப்பட்டவர் இப்பொழுது இருளில் இருந்து கொண்டு கூவுகிறார். இந்த நிலையில் குருநாதரின் கடமை என்ன? ஆட்கொள்ளப்பட்டவரைக் கரைசேர்ப்பது அக் கடமையாகும். இரண்டு வழிகளில் இந்தக் கடமையை நிறைவேற்றலாம்.

திருப்பெருந்துறையில் முன்னர்ச் செய்ததுபோல, அடிகளார் இருக்குமிடம் வந்து அவர் விரும்பும் திருவடிகளை மறுபடியும் தந்திருக்கலாம். ஆனால், மறுபடியும் அந்தத் திருவடி கிடைத்தாலும், முன்போலவே கடிதில் மறைந்துவிடுமோ என்ற அச்சம் காரணமாக இரண்டாவது வழியை அடிகளார் வேண்டுகிறார்.

இரண்டாவது வழி குருநாதர் இருக்கும் இடத்திற்கு அடிகளார் செல்வதே ஆகும். இப்பொழுது அந்தத் திருவடி இதற்கொரு வழிசெய்ய வேண்டும். அந்த வழி என்ன என்பதைத்தான் 'இங்கே வா' என்ற தொடர் குறிக்கிறது.

பாடலின் இரண்டாவது அடியில் (கழற்சேவடி என்னும் பொருளைத்) தந்து இங்கு என்னை ஆண்ட' என்று வருவது நடைபெற்ற நிகழ்ச்சியைக் குறிப்பதாகும். 'ஆண்ட' என்ற இறந்தகாலப் பெயரெச்சம் 'பொல்லா மணியே' என்ற பெயருடன் முடிவதால் தந்ததும் ஆண்டதும் பழைய நிகழ்ச்சிகள் என்பதைக் கூறினாராயிற்று.

தந்து ஆட்கொள்ளப்பெற்றதால் இதுவரை இல்லாத உரிமை அடிகளாருக்கு வந்துவிட்டது. அந்த உரிமையின் அடிப்படையில்தான் 'இங்கே வா' என்று என்னை அழைத்துக்கொள் என்ற வேண்டுகோளை இறைவனிடம் சமர்ப்பிக்கின்றார். ஆனால், உண்மையில் சமர்ப்பிக்க வில்லை. என்னதான் உரிமை பெற்றாலும் இப்படியொரு வேண்டுகோளை இறைவனிடம் விண்ணப்பிக்க மனத்தில் தைரியம் வரவில்லை. எனவே, விண்ணப்பமாகச்

செய்யாமல், 'இப்படி நீ சொல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்' என்று பாடலை முடிக்கிறார்.

'கூவும் அருளைப் பெறுவான்' என்று கூறியது நோக்கத் தக்கது. தம்மைக் கூவவேண்டியது ஆட்கொண்ட அவனுடைய கடமை என்று தொடங்கிய அடிகளார் உள்ளத்தில் அவன் கடமையை நினைவூட்ட நாம் யார் என்ற எண்ணம் தோன்றியதுபோலும். அதனாலேயே கூவ ஆசைப்பட்டேன் என்று சொல்லாமல், 'கூவும் அருளைப்பெற ஆசைப்பட்டேன்' என்று கூறுகிறார். 'பொல்லா மணியேயோ' என்பதில் உள்ள விளியில் உள்ள ஓகாரம் குருநாதர் தம்மை விட்டு எங்கோ சென்றுவிட்டார் என்ற ஆதங்கம் அடிகளார் மனத்திடை இருந்ததை உணர்த்துவதாகும்.

419. மொய்ப்பால் நரம்பு கயிறு ஆக
மூளை என்பு தோல் போர்த்த
குப்பாயம் புக்கு இருக்கில்லேன்
கூவிக்கொள்ளாய் கோவே ஒ
எப்பாலவர்க்கும் அப்பால் ஆம்
என் ஆர் அமுதே ஒ
அப்பா காண ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 2

மொய்ப்பால் – இறுகப் பற்றிய

உடம்பின் முக்கியமான பல பகுதிகளை இவ்வளவு அழகாக எட்டாம் நூற்றாண்டிலேயே அடிகளார் கூறியுள்ளார் என்றால், உடல் அமைப்பை நன்கு அறிந்திருந்தார் என்று நினையவேண்டி உள்ளது. எலும்பு, நரம்பு, மூளை என்பவை தோல்போர்த்த உடம்பு என்ற சட்டைக்குள் (குப்பாயம்) அமைந்துள்ளதை உடற்கூறு

மருத்துவர்போல அடிகளார் கூறியுள்ளது வியப்பைத் தருவதாகும்.

திருப்பெருந்துறையில் அடியார்களுடன் சேர்ந்து அமர்ந்திருந்தும் அவர்களுடன் செல்ல முடியாமல் போனதற்கு இப்பருவுடலே காரணம் எனக் கருதுகின்ற அடிகளார், இந்த உடம்பை விட்டு வெளியேவர விரும்புகிறார்; அதனாலேயே 'குப்பாயம் புக்கு இருக்கில்லேன்' என்று பாடுகிறார்.

இதற்கு முந்தைய பாடலில் 'இங்கே வா' என்று என்னை அழைப்பாயாக என்று வேண்டிக்கொண்டவர் இப்பாடலில் இன்னும் ஒரு படி மேலே சென்று 'காண ஆசைப்பட்டேன் கண்டாய்' என்று பாடுகிறார். அதாவது தம்மை வாவென்று ஏன் அழைக்க வேண்டும் என்ற வினாவிற்கு விடை கூறுவார்போல, வந்து காண ஆசைப்பட்டேன் என்று முடிக்கின்றார்.

420. சீ வார்ந்து ஈ மொய்த்து அழுக்கொடு திரியும்
சிறு குடில் இது சிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்து
ஆட்கொள்ளும் குரு மணியே
தேவா தேவர்க்கு அரியானே சிவனே
சிறிது என் முகம் நோக்கி
ஆ ஆ என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 3

சீ வார்ந்து – சீழ் ஒழுகுகின்ற

இந்தப் பாடலில் 'இச்சிறு குடில்(உடம்பு) சிதையக் கூவாய்' என்று வேண்டினார். இதனைக் கூறியவுடன் அடிகளார் மனத்தில் ஓர் ஐயம் கலந்த அச்சம் பிறந்தது. சிறுகுடிலைத் தந்தவன், அவனாக வேண்டும்பொழுது இதைச் சிதைப்பானே தவிர, இதைச் சிதைத்துவிடு என்று

கூறத் தமக்கு உரிமையில்லை என்று உணர்கின்றார். எனவே, இது இயலாதபொழுது இதையாவது செய் என்று கேட்பதுபோல என் முகம் நோக்கி ஆ ஆ என்ன (ஐயோ பாவம் என்று நீ இரங்கிக் கூற) அச்சொற்களைக் கேட்க ஆசைப்பட்டேன்' என்கிறார்.

'உடலைவிட்டு இந்த ஆன்மா சிவபுரம் செல்ல நீ வழிசெய்யவில்லை; அது போகட்டும் என் முகத்தைப் பார்த்து நீ இரக்கம் கொள்கிறாய் என்று நான் அறிந்துகொள்ள, ஆ ஆ என்று ஒரு வார்த்தையாவது நீ கூறக்கூடாதா? அப்படி நீ கூறுவதைக் கேட்க ஆசைப்பட்டேன்' என்கிறார்.

அடிகளாரின் ஆசை இம்மூன்று பாடல்களிலும் வெளிப்பட்ட முறையை மறுபடியும் ஒருமுறை நோக்குதல் நலம் 'இங்கே வா என்று அங்கே கூவும் அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன்' என்றும் அடுத்து 'அப்பா காண ஆசைப்பட்டேன்' என்றும் 'என் முகநோக்கி ஆ ஆ' என்ன ஆசைப்பட்டேன்' என்றும் வருதலை ஒன்றாக வைத்துச் சிந்தித்தால், இந்த மூன்று வேண்டுகோள்களில் ஒரு ஏற்ற-இறக்க முறை (ascending and descending order) இருப்பதைக் காணலாம். முதற்பாடலை விட இரண்டாவது பாடலில் அந்த ஆசை வளர்ச்சியடைதலைக் காணமுடிகிறது. மூன்றாவது பாடலில் அந்த வளர்ச்சி தொடராமல் இறங்குமுகமாகச் செல்வதைக் காணலாம்.

இதிலுள்ள நயத்தை அறியவேண்டுமானால் முற்றிலும் இறங்குமுகமாக அமைந்துள்ள காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதிப் பாடலை நினைவுகூரலாம்.

'இடர்களையா ரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறி பணியாரேனும்'

(திருமுறை: 11: 4-2)

என வரும் பகுதி இறங்குமுக வேண்டுதலுக்கு ஓர் உதாரணம். 'இறைவன் இடரைக் களைந்திருக்க வேண்டும்; அது செய்யாவிட்டாலும் என்மாட்டு இரக்கம் காட்டியிருக்க வேண்டும். அதுவும் இல்லையென்றாலும் இவ்வழியில் செல் (படரும் நெறி) என்றாவது சொல்லியிருக்க வேண்டும்'.

இந்த அடிப்படையை மனத்தில் கொண்டு அடிகளாரின் பாடலுக்கு வந்தால், முகத்தைக் காண ஆசைப்பட்டவருக்கு முகத்தைக் காட்டியிருக்க வேண்டும். அதுதான் இல்லையென்றாலும் 'இங்கே வா' என்று கூறியிருக்க வேண்டும். அதுதானும் இல்லையென்றாலும் 'ஐயோ பாவம்' என்றாவது இரக்கப்பட்டிருக்க வேண்டும். இப்பாடல்கள் இந்த முறையில் அமைந்திருப்பின் இறங்குமுகத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கும்.

421. மிடைந்து எலும்பு ஊத்தை மிக்கு அழுக்கு ஊறல்
வீறு இலி நடைக் கூடம்
தொடர்ந்து எனை நலியத் துயர் உறுகின்றேன்
சோத்தம் எம் பெருமானே
உடைந்து நைந்து உருகி உன் ஒளி நோக்கி
உன் திரு மலர்ப் பாதம்
அடைந்து நின்றிடுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 4

'நடைக்கூடம்' என்பது இடம்பெயர்ந்து செல்லும் ஒரு சிற்றில்லம் என்பதாகும். கூடம் (உடம்பு) தானே பெயர்ந்து செல்லும் இயல்புடையதன்று. கூடம் நடக்கிறது என்றால், அந்தக் கூடத்தை நடக்கச் செய்யும் ஒன்று அதனுள் இருத்தல் வேண்டும்.

நாம் ஏறிச்செல்லும் மோட்டார் கார், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பெயர்ந்து செல்கின்றதென்றால்

என்ஜின் என்ற ஒரு பகுதி நம் கண்ணுக்குத் தெரியாமல் அதனுள்ளே இருக்கிறதென்பது பொருள். அதுபோல இக்கூடம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நடந்து செல்கின்றது என்றால், கூடத்தினுள் ஆன்மா என்ற ஒன்று மறைந்து நிற்கின்றது என்பது தெளிவாகிறது. இறுதிக் காலத்தில், இக்கூடம் அழியும்பொழுது, ஆன்மா வேறெங்கும் சென்றுவிடாமல் இறைவனுடைய திருவடியின் அணித்தே சென்று தங்க வேண்டும் என்ற கருத்தைத்தான் 'திருமலர்ப்பாதம் அடைந்து நின்றிடுவான் ஆசைப் பட்டேன்' என்று பாடுகிறார்.

422. அளி புண் அகத்துப் புறம் தோல் மூடி
அடியேன் உடை யாக்கை
புளியம்பழம் ஒத்து இருந்தேன் இருந்தும்
விடையாய் பொடி ஆடீ
எளிவந்து என்னை ஆண்டுகொண்ட
என் ஆர் அமுதே ஓ
அளியேன் என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 5

அளிபுண்–உடம்பின் இயல்பைப் பெரிதும் கெடுக்கின்ற புண்.

உடம்பின் கேவலமான தன்மையை முதலடியில் பேசுகிறார். இவ்வளவு மட்டமான உடம்பின்மேல் பற்றுக் கொண்டிருப்பது சற்றும் பொருத்தமில்லாத ஒன்றாகும். ஆனால், இதற்கு மாறாக, தாம் இந்தக் கேவலமான உடம்பினிடத்துப் பற்றுக் கொண்டு இருந்ததாகக் கூறுகிறார். அந்தப் பற்றுக்கூட, ஆன்மா என்றும் உடம்பு என்றும் தனித்தனியே பிரித்துக்காண முடியாதபடி ஒன்றியிருந்து விட்டது. அதனையே 'புளியம் பழம் ஒத்திருந்தேன்' என்கிறார் அடிகளார்.

ஆனால் உண்மையில் அவர் கூறவந்தது புளியம்காய் ஒத்திருந்தேன் என்பதுதான். பழம் என்ற சொல் இங்குக் காய் என்ற பொருளில் அமைந்துள்ளது.

பழம் என்ற சொல்லையே வைத்துக்கொண்டு பொருள் செய்தால், இந்த உடம்போடு எவ்விதத் தொடர்பும் பற்றுமில்லாமல், ஓட்டில் ஓட்டாத புளியம் பழத்தைப் போல் இருந்தேன் என்று அழகாக பொருள் கூறலாம். ஆனால், இவ்வாறு பொருள் கூற முடியாமல் தடுப்பது அடுத்துவரும் 'இருந்தும்' என்ற சொல்லாகும்.

புளியம் காயைப்போல, உடம்பு ஆன்மா என்ற வேறு பாடின்றி நான் ஒட்டிக்கொண்டிருந்தும்கூட அதுபற்றிக் கவலைப்படாமல் 'எளிவந்து என்னை ஆண்டுகொண்ட என்ஆர் அமுதே' என்கிறார்.

'நீ ஆட்கொண்ட பின்பும், இந்த உடம்பை விடாமல் பற்றிக்கொண்டு நிற்கின்ற நான், பெரிதும் இரக்கத்திற் குரியவன் என்று நீ சொல்ல வேண்டும். அச்சொல்லை நான் கேட்க ஆசைப்பட்டேன்' என்கிறார்.

423. எய்த்தேன் நாயேன் இனி இங்கு இருக்க
கில்லேன் இவ் வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா
மலர்ச் சேவடியானே
முத்தா உன் தன் முகு ஒளி நோக்கி
முறுவல் நகை காண
அத்தா சால ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 6

எய்த்தேன் என்பது இளைத்தேன் என்ற பொருளைத் தரும். ஈடுசெய்ய முடியாத ஒரு பொருள் கிடைத்து, அதனை ஓரளவு அனுபவித்த பிறகு அப்பொருள் கையை

விட்டு நழுவிவிட்டால், அது மறுபடியும் எப்பொழுது கிட்டும் என்று ஓயாது நினைந்து நினைந்து உடல் இளைத்தல் உலகியற்கை. திருப்பெருந்துறை அனுபவம் மறுபடியும் கிட்டாதா கிட்டாதா என்று நினைந்து வருந்தி 'எய்த்தேன் நாயேன்' என்கிறார்.

வரும் வரும் என்று பொறுமையோடு காத்திருந்தும் அது கிட்டாதபோது வாழ்க்கையே வெறுப்புத் தட்டிவிடுதல் கண்கூடு. அதனையே 'இனி இங்கு இருக்கில்லேன்' என்கிறார்.

பொருளோ கிட்டவில்லை; அப்பொருளில்லாமல் வாழவும் பிடிக்கவில்லை. அப்படியானால் என்ன செய்வது? வாழ்வைத் துறந்துவிடுவது ஒன்றுதான் வழி. ஆனால், அவ்வழியை மேற்கொள்ளத் தமக்கு உரிமை இல்லை என்பதை உணர்கிறார்.

ஒரு பொருளை ஓர் இடத்தில் ஒருவன் வைத்தான் என்றால், அதனை அங்கிருந்து அகற்ற வேறு யாருக்கும் உரிமையில்லை. அவ்வாறு பிறர் அகற்றினால் அது திருட்டுக்குற்றம் ஆகிவிடும். எனவே, உடம்பை விரும்பாத அடிகளார், அதனைப் போக்கிக்கொள்ளத் தமக்கு உரிமையில்லை என்பதை உணர்ந்து, தம்மை இந்த உடம்போடு எவன் இங்கு உலவவிட்டானோ அவனையே பார்த்துத் 'தயைகூர்ந்து இந்த உடம்பை எடுத்துக் கொள்வாயாக' என்று கேட்கும் முறையில் 'இவ்வாழ்க்கை வைத்தாய்; வாங்காய்' என்கிறார்.

இந்த உடலை வாங்கிவிடு என்று கேட்க அவசியம் என்ன நேர்ந்தது? முன்னேறிச் செல்லமுடியாமல் தடுக்கும் இவ்வுடல் போய்விட்டால், சிவபுரம் சென்று அத்தனுடைய முறுவலைக் காணமுடியும் என்கிறார்.

இங்கே ஒரு நுண்மையான வேற்றுமை இருப்பதைக் ன முடியும். இவ்வுடம்புடன் அவர் முதலில் டது திருவடியையே ஆகும். பல இடங்களில் திருவடி சனம் வேண்டுமென்று பேசினார். இந்த உடம்போடு க்கும்போதே அது கிடைத்ததாகலின் உடம்பு க்கும்போதே மறுபடியும் அத்திருவடி தரிசனம் ண்டும் என்று கேட்பத்தில் தவறில்லை. ஆனால், பொழுது நிலைமை மாறிவிட்டது. உடம்பு நீங்கிய னர், ஆன்மாவோடு இருக்கும்பொழுது, உறுதியாகச் புரம் செல்லமுடியும் என்ற நினைவுவந்த நிலையில், த்தா உன்தன் முகஒளி நோக்கி முறுவல் நகை காண, த்தா சால ஆசைப்பட்டேன்' என்று பாடுகிறார்.

திருப்பெருந்துறை அனுபவத்தில், அடிகளார் பெற் த மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். லில் கிடைத்தது திருவடி தரிசனம்; இரண்டாவது நாதர் தரிசனம். மூன்றாவதாகக் கிடைத்தது மையொருபாகன் தரிசனம். இந்த மூன்று தரிசனங்களிலும் சனம் தந்தவன், முறுவல் நகை காட்டியதாக அடிகளார் கும் குறிக்கவில்லை.

நான்காவதாகக் கிடைத்த கூத்தன் தரிசனத்தில்தான் ிண் சிரிப்புத் தென்பட்டது. கூத்தனுக்கே உரியது குமிண் ிப்பு. அடிகளார் அதைக் கண்டுகொண்டிருக்கும்போதே க்காட்சி மறைந்துவிட்டது. எனவே, உடலை நீத்துச் புரம் சென்ற நிலையில், இம்மண்ணுலகில் ஒரு விநாடி ான்றி மறைந்த குமிண் சிரிப்பையும், அந்தச் ிப்பையுடைய திருமுகத்தையும், ஓயாமல் பார்த்துக் ாண்டேயிருக்கவேண்டும் என்ற ஆசையை 'முத்தா ன்தன் முக ஒளி நோக்கி முறுவல் நகை காண, அத்தா, ல ஆசைப்பட்டேன்' என்கிறார்.

424. பாரோர் விண்ணோர் பரவி ஏத்தும்
பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா உலகம் தந்து
வந்து ஆட்கொள்வானே
பேர் ஆயிரமும் பரவித் திரிந்து
எம் பெருமான் என ஏத்த
ஆரா அமுதே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 7

முன்னருள்ள ஆறு பாடல்களிலும் 'இவ்வுலகிடை வாழ விருப்பமில்லை, இந்த உடம்பை வைத்துக் கொண்டிருக்கவும் விருப்பமில்லை. எனவே, இந்த உடலையும், உலகத்தையும் விட்டு வந்து வாரா உலகம் புகுந்து உன் திருவடியை ஏத்தவேண்டும்' என்று கூறிவந்த அடிகளார், இப்பாடலில் இக்கருத்துக்கு மாறான புதிய திசையில் செல்லுகிறார்.

'பாரோர், விண்ணோர், பரவி ஏததும் பரனே! பரஞ்சோதீ!' என்பது முதலடியாகும். நான்முகன், திருமால், விண்ணோர் ஆகியோர் போற்றுவதையே அதிகம் கூறிவந்த அடிகளார், இங்குப் பாரோர் பரவி ஏத்தலுக்கு முதலிடம் தருகிறார். பரவி ஏத்தக் கூடுமேயானால் பாரினில் பிறந்து வாழ்வதிலும் தவறில்லை என்ற நினைவு தோன்ற, பாரோர் பரவி ஏத்தும் பரஞ்சோதி என்கிறார். இந்த இடத்தில் நாவரசர் பெருமானின் 'குனித்த புருவமும்' (திருமுறை: 4:81-4) என்று தொடங்கும் பாடலில் 'காணப்பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்ற பகுதி நினைவுகூரத் தக்கதாகும்.

மீட்டு வாரா உலகை (வீடுபேற்றை)த் தருபவன் அவன் ஒருவனே என்பதைக் கூறவந்த அடிகளார், 'வாரா உலகம் தந்து வந்து ஆட்கொள்வானே' என்கிறார். அதிலும் ஒரு சிறப்பு உண்டு. மீட்டு வாரா உலகை அடைய

வேண்டுமானால் அவன்தான் அதனைத் தரவேண்டுமே தவிர, நாமாகக் சென்றடைதல் இயலாத காரியம். எனவே, வாரா உலகம் 'தந்து' என்றார்.

தருவதில்கூட இருவகை உண்டு. ஒரு சிலர், இருந்த இடத்தில் இருந்துகொண்டே தம்மை நாடிவந்தவர்க்கு வேண்டுவதைத் தருவர். இரண்டாவது வகையினர், வேண்டுபவர் இருக்குமிடத்திற்குத் தாமே சென்று வேண்டியவற்றைத் தருவர். இந்த இரண்டாவது வகையினரை வள்ளல்கள் என்று தமிழர் கூறினர். அதனையே அடிகளார் இங்கே 'வந்து' (இவ்வுலகிடை வந்து) வாரா உலகம் தருவானே என்றார்.

வாரா உலகத்திற்கு ஒருவரை அனுப்பினாலும், அங்கே சென்று அதன் பயனை அனுபவிப்பதற்கு ஒரு தகுதி வேண்டும். குருடனுக்கு ஓவியமும், செவிடனுக்கு ஏழிசையும் கிடைத்தாலும் அவர்கள் அவற்றை அனுபவிக்க முடியாது. அதுபோல அந்தக் கருணை வள்ளல் இவ்வுலகிடை வந்து, அந்த வாரா உலகைத் தந்தாலும், அதனை அனுபவிக்க இந்தச் சிற்றுயிர்களுக்குத் தகுதியில்லை. எனவே, முதலில் இந்தச் சிற்றுயிர்களை ஆட்கொண்டு, பின்னர் வாரா உலகம் தரவேண்டும். ஆட்கொள்ளல் என்றால், உயிர்களுக்கு இயல்பாக அமைந்துள்ள குற்றம் குறைகளைப் போக்கி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது பொருளாகும். எனவே, தானே இவ்வுலகிடை இறங்கிவந்து உயிர்கட்கு இயல்பாக உள்ள குற்றங்களைப் போக்கி, ஆண்டுகொண்டு, பின்னர் வாரா உலகத்தைத் தருவோன் என்கிறார்.

இதுவரை சொல்லப்பட்ட அனைத்தும் இந்த உலகிடை நிகழ்ந்தவைகளாகும். அவன் வந்தது இந்த உலகிடைத்தான்; திருவடி தீட்சை தந்ததும், ஆட்கொண்டதும், பரா அமுது ஆக்கிடச் செய்ததும் இவ்வுலகிடைத்தான். அற்புதமான அமுத தாரைகளை எற்புத் துளைதெறும் ஏற்றியதும்

இவ்வுலகிடைத்தான். அப்படியிருக்க, இந்த உலகை நீத்து, உடம்பை நீத்து ஓடவேண்டும் என்ற ஏண்ணம் ஏன்?

இங்கு இருந்துகொண்டு, இந்த உடம்போடு வாழ்ந்து கொண்டு ஏதாவது செய்ய முடியாதா? செய்யலாம் என்கிறார் அடிகளார். அதாவது, இறைவனுடைய ஆயிரம் நாமங்களைப் பரவிக்கொண்டு, 'எம்பெருமான்' என்று அவன் புகழை ஏத்திக்கொண்டு (வாழ்நாள் உள்ளவரையில்) திரிவதே அவ்வழியாகும் என்கிறார்.

425. கையால் தொழுது உன் கழல் சேவடிகள்
கழுமத் தழுவிக் கொண்டு
எய்யாது என் தன் தலை மேல் வைத்து
எம் பெருமான் பெருமான் என்று
ஐயா என்தன் வாயால் அரற்றி
அழல் சேர் மெழுகு ஒப்ப
ஐயாற்று அரசே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 8

கழுமத் தழுவிக்கொண்டு–இறுகத் தழுவிக் கொண்டு; எய்யாது–தவறாமல், இளைக்காமல்

சென்ற பாடலில் கூறப்பட்ட கருத்து, சற்று விரிவாக இங்கே பேசப்பெறுகிறது. அவன் புகழைப் பாடிக்கொண்டு திரியவேண்டும் என்று சென்ற பாடலில் கூறினார் அல்லவா? எத்தனை நாள்தான் ஒருவர் திரிய முடியும்? எவ்வளவு சுற்றித் திரிந்தாலும் இறுதியாக, திரிதலை நிறுத்தி ஓரிடத்தில் அமரத்தானே வேண்டும்? அப்படி அமர்கின்ற பொழுது, திரியும்போது செய்த செயலைச் சற்று மாற்றி, இன்னும் ஆழமான முறையில் ஒன்றைச் செய்ய வேண்டும் என்கிறார். அந்த ஒன்று என்ன தெரியுமா?

எங்கே இருக்கிறான் என்று தெரியாமல் அவன் புகழைப் பாடிக்கொண்டு திரிந்த நிலை போக,

இப்பொழுது அவனைக் கண்டுவிட்ட நிலையில் என்ன செய்ய வேண்டும்? திரியும்போது என்ன செய்தார்? அவன் புகழைப் பாடிக்கொண்டு திரிந்தாரல்லவா? இப்பொழுது 'வாயால் அரற்றி அழல் சேர் மெழுகு ஒப்ப' உருக வேண்டும் என்கிறார்.

திரியும்போது மனமும், வாக்கும் அவனிடம் இருந்தன; உடல் சுற்றித் திரிந்தது. இப்பொழுது அந்த உடலுக்குப் புதிய பணி தருகின்றார். அதாவது, கையால் தொழுது அவன் கழற்சேவடிகளைத் தழுவிக்கொள்ள வேண்டும் என்கிறார். இது உடலுக்குரிய செயல்; வாயால் அரற்றி என்பது மொழிக்குரிய செயல்; அழல் சேர் மெழுகு ஒப்ப உருகுவது மனத்திற்குரிய செயல். எனவே மன்ம், மொழி, மெய் என்ற மூன்றிற்கும் உரிய பணிகளைத் தந்தாராயிற்று.

426. செடி ஆர் ஆக்கைத் திறம் அற வீசிச்
சிவபுர நகர் புக்குக்
கடி ஆர் சோதி கண்டுகொண்டு என்
கண் இணை களி கூரப்
படிதான் இல்லாப் பரம்பரனே உன்
பழ அடியார் கூட்டம்
அடியேன் காண ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 9

கடி – மிகுந்த. படி-ஒப்பு

இப்பாடலைப் பாடும்பொழுது திருப்பெருந்துறையில் அடியார் கூட்டத்திடையே இருந்த நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. தம்மை விட்டுவிட்டு அவர்கள் போனதற்குக் காரணம், தாம் இந்தப் பூதவுடலுடன் இருந்ததே ஆகும் என நினைக்கிறார் அடிகளார். அந்த நினைவு வந்தவுடன் இந்த உடலை நீத்து அவர்களைக் காணும் வாய்ப்பைப் பெறவேண்டும் என நினைக்கின்றார். இதனையே 'யாக்கைத் திறம் அற (உடம்பின் செயற்பாடு ஒழிய) சிவபுர

நகர்புக்கு..... பழ அடியார் கூட்டம் அடியேன் காண ஆசைப்பட்டேன்' என்கிறார்.

427. வெம் சேல் அனைய கண்ணார்தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச் சுடரே
நான் ஓர் துணை காணேன்
பஞ்சு ஏர் அடியாள் பாகத்து ஒருவா
பவளத் திரு வாயால்
அஞ்சேல் என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 10

பருவுடலை நீக்க வேண்டும் என்று இப்பதிகத்தின் முதல் ஆறு பாடல்களிலும், ஒன்பதாம் பாடலிலும்—அந்த உடம்புடன் இருந்துகொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதை ஏழாம் எட்டாம் பாடல்களிலும் பேசிய அடிகளார், இப்பொழுது புதிய ஓர் ஆசையை வெளிப்படுத்துகிறார்.

இறைவனின் ஒளி முகத்தையும், குமிண் சிரிப்பையும் காண ஆசைப்பட்டதாகக் கூறிய அவர், இப்பொழுது வெளியிடும் ஆசை இரண்டு வகையாக நிற்கின்றது.

'அஞ்சேல் என்ன ஆசைப்பட்டேன்' என்றால், அஞ்சாதே என்று நீ வாய்திறந்து சொல்ல, நின் திருவாயிலிருந்து வெளிப்படும் அமுதச் சொற்களைக் காதால் கேட்க ஆசைப்பட்டேன் என்பது ஒரு பொருளாகும். அடுத்து, பவளத் திருவாயால் 'அஞ்சாதே' என்று சொல்லும்பொழுதே உன் அபயகரம் 'அஞ்சாதே' என்று காட்டு மல்லவா? அதைக் காணவும் ஆசைப்பட்டேன் என்பது இரண்டாவது பொருள்.

ॐ ॐ ॐ

26. அதிசயப் பத்து

[முத்தி இலக்கணம்]

இப்பொழுதுள்ள திருவாசகப் பாடல்களின் அமைப்பு முறையை ஏற்றுக்கொண்டு நூறு, ஐம்பது, இருபது என்ற முறையில் அவை வரிசைப்படுத்தப்பெற்றுள்ளன என்றே இதுவரை உரை கண்டவர்கள் கூறியுள்ளனர். அது ஏற்றுக்கொள்ளக்கூடியது அன்று என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். என்றாலும், ஏதாவது ஒரு முறையில் இதனை வைத்துத்தானே ஆகவேண்டும். அந்த அடிப்படையை ஓரளவு ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியே இல்லை.

செத்திலாப் பத்துத் தொடங்குவதற்கு முன்னுள்ள பகுதிகள் அடிகளார் பெற்ற அனுபவத்தையும், அது கைவிட்டுப்போன அவலத்தையும், அதனால் ஏற்பட்ட கழிவிரக்கத்தையும் நூற்றுக்கணக்கான பாடல்களில் கூறுகின்றன.

செத்திலாப் பத்து இந்த முறையிலிருந்து ஓரளவு மாறுபடுகின்றது. எவ்வாறாயினும் அடியார் கூட்டத்திடைப் புக வேண்டும் என்ற பேரார்வத்துடன் தில்லைநகர் வந்த அடிகளாருக்கு அது நடைபெறாதபொழுது முற்றிலும் நம்பிக்கை இழந்த நிலை (despair) ஏற்படுகிறது. அந்த நிலையில்தான் 'செத்திடப் பணியாய்' என்று பாடினார். ஆனால், சாவோ வரவில்லை. அதனைத் தருபவனும் விரைவில் தருவதாகத் தெரியவில்லை. எனவே, இந்த நம்பிக்கை இழந்த நிலையில் அவனிடமே முழு

அடைக்கலமாகத் தம்மைத் தந்துவிடவேண்டும் என்று நினைத்துப் பாடியதுதான் அடைக்கலப்பத்து.

அடைக்கலமாகப் புகுந்துவிட்ட பிறகு, இந்த உடலோடு இருந்தாலும் சரி, இந்த உடல் கழிந்து விட்டாலும் சரி- தேஜோமயமான அவன் திருமுகத்தையும் அதில் தோன்றும் புன்முறுவலையும் காணவேண்டும் என்ற ஆசை புதிதாகப் பிறந்தது. இந்த ஆசையைப் புதிது என்று சொல்வதற்கு ஒரு காரணமுண்டு. இதுவரை அவருக்கிருந்த ஆசை, திருப்பெருந்துறையில் இருந்ததுபோல, அந்த அடியார் கூட்டத்திடைப் புகவேண்டும் என்பதுதான். இப்பொழுது இறைவன் திருமுகத்தில் தோன்றும் புன்முறுவலைக் காணவேண்டும் என்ற ஆசை புதிதாகத் தோன்றியதை ஆசைப்பத்தில் வெளியிட்டார்.

இந்த மூன்று பத்துக்களிலும் வெளியிட்ட விருப்பம் எதுவும் நிறைவேறவில்லை. ஆனாலும், நம்பிக்கை தளரவில்லை. வழியோடு போன தம்மை, இழுத்துப் பிடித்துத் திருவடி தீட்சை செய்து ஆட்கொண்டவர் நிச்சயமாகக் கைவிடமாட்டார் என்ற எண்ணம். ஒருபுறம் நம்பிக்கையைத் தருகிறது. இதுவரை தோன்றிய எண்ணம் எதுவும் ஈடேறவில்லை என்ற நினைவு நம்பிக்கை இன்மையைத் தருகிறது. நம்பிக்கை, நம்பிக்கையின்மை என்ற இரண்டின் இடைப்பட்ட அடிகளார் 'தேய்புரிப் பழங்கயிறாக' அவதியுறுகிறார்.

நம்பிக்கை இன்மையைச் சென்ற முப்பது பாடல்களில் பாடிய அவருக்கு, கைவிடமாட்டான் என்ற நம்பிக்கை மறுபடியும் துளிர்க்கிறது. எனவே, பழைய நிகழ்ச்சியை நினைந்து, இப்படிப்பட்ட அதிசயம் நிகழ்ந்துள்ளதே என்று கூறும் முறையில் மனத்திடைத் தோன்றும் நம்பிக்கைக்கு ஓர் ஊன்றுகோல் தருகிறார். அதுவே அதிசயப் பத்தாகும்.

நம்பிக்கையின்மைக்குப் பிறகு, இந்தப் புதிய நம்பிக்கை துளிர்க்கும் 'அதிசயப் பத்து' வைக்கப்பட்டது முற்றிலும் சரியே என்று தோன்றுகிறது. இந்த வளர்ச்சி முறையைச் சிந்திக்காத யாரோ ஒருவர் 'முத்தி இலக்கணம்' என்று இதற்கு உட்தலைப்புத் தந்துள்ளார். மேலே கூறிய அடிப்படையில் பார்த்தால், இந்த உட்தலைப்பு எவ்விதத்திலும் பொருந்துமாறில்லை.

வேறு யாருக்கும் கிடைக்காத ஒரு நிலை தமக்குக் கிடைத்ததை நினைந்து 'இப்படியும் நடக்குமா' என்ற வினாவை எழுப்பிக்கொண்டு, 'இது ஓர் அதிசயம்' என்ற முடிவிற்கு வருகிறார் அடிகளார். இப்படிப்பட்டதோர் அதிசயத்தை யாரேனும் கண்டதுண்டோ என்ற முறையில் பாடல்கள் முடிகின்றன.

சென்ற மூன்று பத்துக்களில் தளர்ந்த நம்பிக்கை இப்பத்தில் மீண்டும் துளிர்க்கிறது என்று கூறியுள்ளோம். திருப்பெருந்துறை நிகழ்ச்சியில் குருதரிசனம் கிடைத்தது. குருநாதர் மறைந்து உமையொரு பாகனாய் மாறியதைக் காணமுடிந்தது; அதுவும் மறைந்து தில்லைக் கூத்தனைக் காணமுடிந்தது. இக்காட்சிகள் கிடைப்பதற்கு முன்னரே, திருவடி சம்பந்தம் கிடைத்தது. அந்நிலையில் இறையனுபவம் என்ற ஆழியுள் அமிழ்த்தப்பெற்றார்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, அடியார் கூட்டத்திடையே தம்மை இருக்குமாறு செய்தது அடிகளார் மனத்தில் பெரியதோர் இடத்தைப் பிடித்துவிட்டது என்று தெரிகிறது.

குருதரிசனம் கிடைத்த அதிசயம் கண்டாமே என்றோ, அமுத தாரைகள் ஏற்றப்பெற்ற அதிசயம் கண்டாமே என்றோ, பரா அமுது ஆக்க வழிசெய்த அதிசயம் கண்டாமே என்றோ பாடாமல், ஒன்பது பாடல்களிலும் 'ஆண்டு, தன் அடியரில் கூட்டிய அதிசயம் கண்டாமே'

என்று பாடுவதால் இந்நிகழ்ச்சியே அடிகளார் மனத்தில் பெரியதோர் இடத்தைப் பிடித்திருந்தது என்பதை அறியமுடிகிறது.

428. வைப்பு மாடு என்றும் மாணிக்கத்து ஒளி என்றும்
மனத்திடை உருகாதே
செப்பு நேர் முலை மடவரலியார் தங்கள்
திறத்திடை நைவேனை
ஒப்பு இலாதன உவமனில் இறந்தன
ஒள் மலர்த் திருப் பாதத்து
அப்பன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே 1

ஒப்பிலாதனவும் உவமை கூறமுடியாதனவும் ஆகிய திருவடிகளை உடைய இறைவனைச் சேமநிதி யென்றும் மாணிக்கம் என்றும் கருதி, இம்மனம் உருகியிருக்க வேண்டும். அவ்வாறு உருகாமல், அந்த மனம் மடவரலியர் பால் உருகிக் காலத்தைக் கழித்தது. அதுபற்றிக் கவலை கொள்ளாமல், பெருந்துறை நாயகன், பிடித்து ஆண்டு கொண்டதோடு அல்லாமல் அடியார் கூட்டத்திடை இருக்கச் செய்தான். இத்தகைய ஓர் அதிசயத்தைக் எங்கேனும் கண்டதுண்டோ என்றவாறு.

429. நீதி ஆவன யாவையும் நினைக்கிலேன்
நினைப்பவரொடும் கூடேன்
ஏதமே பிறந்து இறந்து உழல்வேன்தனை
என் அடியான் என்று
பாதி மாதொடும் கூடிய பரம்பரன்
நிரந்தரமாய் நின்ற
ஆதி ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே 2

அறத்தொடு கூடிய ஒழுக்க நெறியில் நின்றதில்லை; அப்படி நிற்பவரோடு சேர்ந்து வாழ்ந்ததும் இல்லை. துன்பத்தையே துணையாகக் கொண்டு மாறிமாறிப் பிறந்து உழல்கின்ற என்னை அவன் ஆண்டு, அடியரில் கூட்டிய அதிசயம் கண்டாமே என்றபடி.

430. முன்னை என்னுடை வல் வினை போயிட
முக்கண் அது உடை எந்தை
தன்னை யாவரும் அறிவதற்கு அரியவன்
எளியவன் அடியார்க்கு
பொன்னை வென்றது ஓர் புரி சடை முடிதனில்
இள மதி அது வைத்த
அன்னை ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே 3

தேவர்கள் முதலிய யாவரும் அறியமுடியாதவனாகிய எந்தை அடியவர்க்கு எளியனாய் இருப்பது ஓர் அதிசயம்.

பழவினையை அனுபவித்துத்தான் தீரவேண்டுமே தவிரப் போக்கிட முடியாது என்பர் உலகோர். இதற்கு மாறாக என்னுடைய முந்தைய வல்வினை ஒரே விநாடியில் போகுமாறு அருள்செய்து அடியரிற் கூட்டிய அதிசயம் கண்டாமே என்றவாறு.

வல்வினை போயிட என்ன செய்தான்? தனது மூன்றாவது கண்ணால் என் வினையை எரித்தான் என்ற குறிப்புப்பொருள் தோன்ற 'முக்கண்அது உடை எந்தை' என்றார். மாபெரும் தவறுகள் செய்தவனாயினும் தன்னை வந்து அண்டிய சந்திரனைத் தலைமேல் வைத்துக் கொண்டான் ஆதலின், அச்செயல் தாயின் செயலாம் என்பதைக் காட்ட 'இளமதி அது வைத்த அன்னை' என்றார்.

431. பித்தன் என்று எனை உலகவர் பகர்வது ஓர்
காரணம் இது கேளீர்
ஒத்துச் சென்று தன் திருவருள் கூடிடும்
உபாயம் அது அறியாமே
செத்துப் போய் அரு நரகிடை வீழ்வதற்கு
ஒருப்படுகின்றேனை
அத்தன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே 4

மெய்யடியார்கள் செல்லும் வழியை ஏற்றுக்கொண்டு, அதே வழியில் சென்று, (ஒத்துச் சென்று) அவன் திருவருளை அடைவதே முறையாகும். இதனை அறிந்திருந்தும் அவ்வழிச் செல்லாமல் நேரெதிரான வழியில் சென்று நரகத்தில் வீழ விரைந்து கொண்டிருந்தேன். அப்படிச் செல்லும் என்னைத் தடுத்தி நிறுத்தி, ஆட்கொண்டு அடியரில் கூட்டினான்.

'திருப்பெருந்துறையில் என்னை ஆட்கொண்டு இப் புதுவழியில் குருநாதர் என்னைச் செலுத்துவதற்கு முன்னர் உலகிலுள்ள ஏனையோர் செல்லும் வழியிலேயே நானும் சென்றுகொண்டிருந்தேன். அதாவது, கல்வி, கேள்வி, பதவி, ஆடம்பரம் என்ற வழியில்தான் நானும் சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது இந்த உலகத்தார் என்னை ஒன்றும் குறை சொல்லவில்லை. சொல்லாதது மட்டுமன்று; சிறந்த மதியூகி, சிறந்த அமைச்சன், சிறந்த கல்விமான் என்று என்னைப் புகழ்ந்தனர். அவ்வழியிலேயே நான் சென்றிருந்தால் இவர்கள் புகழ் உரை மட்டுமே மிஞ்சியிருக்கும்; கடுநரகு என்னை எதிர்கொண்டிருக்கும். அத்தன் ஆண்டுகொண்டமையால், மேலே கூறிய அனைத்தையும் துறந்து, இறைவனைப் பற்றிய ஒரே சிந்தனையில் திரிந்த என்னைக் கண்டு இவ்வுலகோர் பித்தன் என்று பேசினர்.

'முதலில் அவர்கள் புகழ்ந்தனர்; ஆனால் எனக்கு இறுதியில் கிடைத்திருக்கக் கூடியது கடுநரகம். இப்பொழுது உலகவர் என்னைப் பைத்தியம் என்று ஏசினர்; ஆனால் எனக்குக் கிடைத்தது அடியார் கூட்டத்திடையிருக்கும் வாய்ப்பு'என்றவாறு.

432. பரவுவார் அவர் பாடு சென்று அணைகிலேன்
பல் மலர் பறித்து ஏத்தேன்
குரவு வார் குழலார் திறத்தே நின்று
குடி கெடுகின்றேனை
இரவு நின்று எரி ஆடிய எம் இறை
எரி சடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே 5

'ஓயாது இறைவனைப் பரவுகின்றவர்களை நாடிச் சென்று அவர்களோடு வாழ்ந்தேனில்லை. அதுதான் இல்லையென்றாலும் நானாகவாவது மலரைப் பறித்து, அவன் திருவடிகளில் இட்டு வழிபட்டேனும் இல்லை. இவை இரண்டும் செய்யாதது மட்டுமல்ல இறை வழிபாட்டில் ஈடுபடவேண்டிய நேரத்தில் மகளிரோடு என் பொழுதைக் கழித்தேன். அப்படியிருந்தும் இரவில் இடுகாட்டிடை ஆடும் தலைவன் எனை ஆண்டு அடியரிற் கூட்டினான்' என்றபடி.

433. எண்ணிலேன் திருநாமம் அஞ்சு எழுத்தும் என்
ஏழைமை அதனாலே
நண்ணிலேன் கலை ஞானிகள் தம்மொடு
நல்வினை நயவாதே
மண்ணிலே பிறந்து இறந்து மண் ஆவதற்கு
ஒருப்படுகின்றேனை
அண்ணல் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே 6

'ஐந்தெழுத்தாகிய அவன் திருநாமத்தை எண்ணினேன் இல்லை. இதுதான் செய்யவில்லையென்றாலும், கலை ஞானம் பெற்ற ஞானிகள் அருகில் சென்று என் அறிவையும் வளர்த்துக்கொள்ளவில்லை. ஆதலால், பக்தி வழி, ஞானவழி என்ற இரண்டும் என்னைப் பொறுத்தமட்டில் அடைபட்டுவிட்டன. இவை இரண்டும் இன்மையால் பிறப்பு, இறப்பு என்னும் சங்கிலித் தொடரிலிருந்து விடுபட வாய்ப்பே இல்லாத என்னை அடியரில் கூட்டினான்' என்றபடி.

434. பொத்தை ஊன் சுவர் புழுப்பொதிந்து உளுத்து அசும்பு
ஒழுகிய பொய்க் கூரை
இத்தை மெய் எனக் கருதி நின்று இடர்க் கடல்
சுழித்தலைப் படுவேனை
முத்து மா மணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச் சோதி
அத்தன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே 7

பொத்தை - உள்ளீடற்ற பருமனானது; அசும்பு - வாயிலிருந்து ஒழுகும் எச்சில்

'இவ்வுடம்புக்கு மெய் என்று யாரோ பெயரிட்டுவிட்ட காரணத்தால், இதனையே மெய்யென்று நம்பி துன்பக் கடலில் வீழ்ந்து உழன்றுகொண்டிருந்தேன், அப்படி யிருந்தும் என்னை அடியரிற் கூட்டியது அதிசயமே' என்றவாறு.

435. நீக்கி முன் எனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையில் புகப் பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொல் செய்து
நுகம் இன்றி விளாக்கைத்துத்

தூக்கி முன் செய்த பொய் அறத் துகள் அறுத்து
எழுதரு சுடர்ச் சோதி
ஆக்கி ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமோ 8

மிகச் சிக்கலாக உள்ள இப்பாடலைத் தனித்தனியாகப் பிரித்துக் கொண்டுகூட்டுச் செய்துகொள்ளுதல் நலம்.

'நீக்கி, முன் எனைத் தன்னொடு நிலாவகை குரம்பையில் புகப் பெய்து' என்ற தொடரை 'தன்னொடு நிலா வகை முன் எனை நீக்கி, குரம்பையில் புகப் பெய்து' என்று கொள்ளவேண்டும். அதாவது தன்னோடு, திருவடி இணை பிரியாமலிருந்த என்னை, முதலில் அத்திருவடியி லிருந்து பிரித்து, (பின்னர்த்) திருவாதவூரர் என்ற உடம்பினுள் புகச் செய்தான்.

'நோக்கி, நுண்ணிய நொடியன சொல் செய்து' என்றது, (அவன் புகுத்திய திருவாதவூரர் என்ற உடம்பில் நான் வளர்ந்துவருகையில், திருப்பெருந்துறையில் ஒருநாள் குருவடிவுடன் வந்து) கருணை பொங்கும் தன் திருவருட் பார்வையை என்மாட்டுச் செலுத்தி, நுண்ணிய சொற்களை ஒரே நொடிக்குள் என்னுள் புகுமாறு செய்தான் என்றபடி.

அதாவது, நுண்மையான மந்திரத்தை ஒரு நொடிக்குள் உபதேசித்தான் என்று கூறுவதால், அந்த மந்திரம் பேராற்றல் வாய்ந்தது என்பது பெறப்படும். ஒரே சொல்லில் திருவாதவூரரை மாணிக்கவாசகராக மாற்ற வேண்டுமானால் அந்தச் சொல் அல்லது மந்திரம் மாபெரும் ஆற்றல் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும், அப்படி ஆற்றலுள்ள ஒன்று ஒரு நொடிப்பொழுதில் தன் பணியைச் செய்து மறையுமே தவிர நீண்டநேரம் நிலைபெறுவதில்லை என்பதை 'நொடியன சொல் செய்து'

என்கிறார். இதனைப் புரிந்துகொள்ள ஓர் உதாரணத்தைக் காணலாம். பருமையுடைய கல், மலை போன்றவை இரண்டாகப் பிளக்குமேயானால் பெருஞ்சத்தமும் ஓரளவு ஆற்றலும் அதிலிருந்து வெளிப்படும். ஆனால், ஓர் அணு பிளக்கப்படுமேயானால் பேரொலியும், பேரொளியும், உலகை அழிக்கும் பேராற்றலும் வெளிப்படக் காணலாம். சொல் வடிவிலுள்ள மந்திரத்திற்கும் இந்த ஆற்றல் உண்டு. அது ஒரு கண நேரத்தில் தோன்றி மறையும் ஆதலால் நுண்ணிய சொல் என்றும், நொடிய சொல் என்றும் பேசுகிறார்.

'சொல் செய்து' என்று வரும் தொடரை ஊன்றிக் காண்டல் வேண்டும். சொல் செய்து என்பது மரபு பிறழ்ந்த சொற்களாகும். சொல்லைக் கூறினான் என்று சொல்லவேண்டுமே தவிர, சொல்லைச் செய்தான் என்று கூறுவது மரபு வழுவாகும். அப்படியானால் அடிகளார் ஏன் இவ்வாறு கூறவேண்டும்?

இந்த இரண்டு சொற்களையும் ஒன்றுசேர்ப்பதன் மூலம் ஒரு மாபெரும் தத்துவத்தை அடிகளார் வெளியிடுகிறார். ஒரு சொல்லைச் சொன்னால், அச்சொல் அதனைக் கேட்பவர் செவிவழிப் புகுந்து அவர் மூளையின் உட்செல்கின்றது. மூளையிலுள்ள நியூரான்கள் என்ற அணுக்கள் இரசாயன முறையில் தொழிற்பட்டுச் சொல்லப்பட்ட சொல்லின் பொருளை அறிகின்றன. பின்னர், அப்பொருளுக்கு ஏற்பத் தொழிற்படவேண்டிய உறுப்புக்களுக்கு உத்தரவு பிறப்பித்து அவற்றைத் தொழிற்படுமாறு செய்கின்றன. சாதாரண மக்களுக்குச் சொல்லப்படும் சாதாரணச் சொற்கள் இப்படித்தான் பணிபுரிகின்றன.

ஆனால், இங்குச் சொல் செய்தவன், சொல்லின் பொருள் வடிவாக உள்ளவன்; ஆதலால், அவன் ஏதோ ஒன்றைச் சொல்லியவுடன் திருவாதவூரரின் காதுவழிச் சென்று அவர் மூளையை இயக்கிச் செயலைச் செய்ய வைக்கவில்லை. அதற்குப் பதிலாக, குருநாதர் திருவாயில் இருந்து வெளிப்பட்ட சொல் ஒரே நொடியில் திருவாதவூரரை மாற்றியமைத்துவிட்டது. சொல்லும் ஒன்றுதான், அதன் அளவும் சிறியதுதான், மிக நுண்மையானதும்தான். ஆனாலும், அந்த மிகச் சிறிய சொல் ஒரே விநாடியில் பாண்டிய நாட்டு அமைச்சரை மணிவாசகராக ஆக்கிவிட்டது.

பொதுவாகச் சொற்கள் பொருள் தரும் வகையில் எல்லோர்க்கும் ஒரு நிகரனவே. ஆனால், குருவின் சொல், சீடர்களின் ஆன்ம பக்குவம் நோக்கி அருளப்படுவன. ஒரே மந்திரமாயினும் ஆன்மாக்களின் பக்குவ வேறுபாட்டுக்கு ஏற்ப அமைக்கப்படுவன. எனவே, அவை சொல்லப் படுவன அல்ல; அவரவர்க்கு ஏற்பச் செய்யப் படுவன

அடுத்து நிற்கும் தொடர் 'நுகம் இன்றி விளாக்கைத்து' என்பதாகும். நுகம் என்று சொல்லப்படும் நுகத்தடியே இரண்டு எருதுகளை ஒன்றாக இணைக்க உதவும் கருவியாகும். இந்த நுகத்தடியில்லாமல் உழுதலைச் செய்தார் குருநாதர். விளாக்கைத்து என்பது உழுதலைக் குறிக்கும்.

நுகத்தடியும், இரண்டு எருதுகளை ஒன்றாக இணைக்கும் கயிறும் இல்லாமலே உழவுசெய்ததுபோல, தன் திருவடியையும் என்னையும் எவ்விதக் கயிறும் நுகத்தடியும் இல்லாமல் ஒன்றாக இணைத்துவிட்டார் என்க. இணைத்தவர் உலகியலினின்று வேறுபடுத்தும் வகையில் (தூக்கி) இருதயத்தினுள் முன்னரே இருந்த பொய் முதலியவற்றை அகலுமாறு உழவு செய்தார் என்க.

436. உற்ற ஆக்கையின் உறு பொருள் நறு மலர்
எழுதரு நாற்றம் போல்
பற்றல் ஆவது ஓர் நிலை இலாப் பரம் பொருள்
அப் பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயன் அது நுகர்ந்திடும்
பித்தர் சொல் தெளியாமே
அத்தன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே 9

மிகவும் ஆழ்ந்து சிந்தித்து, கொண்டுகூட்டும் செய்து, பொருள்கொண்டால்கூட முற்றிலும் விளக்கம் தராத ஒருசில பாடல்கள் திருவாசகத்தில் உள்ளன என்பதைப் பலரும் அறிவர்.

திருவாசகப் பாடல்களுக்கு அத்வைத அடிப்படையிலும், யோக அடிப்படையிலும், சித்தாந்த அடிப்படையிலும் பொருள்கண்டுள்ளனர். இந்த மூவகையினரும் செம்மையான முறையில் பொருள்காண முடியாதபடி அமைந்துள்ள சில பாடல்களில் 'உற்ற ஆக்கையின்' என்று தொடங்கும் இந்தப் பாடலும் ஒன்று.

ஓரளவு முயன்று பின்வருமாறு கொண்டுகூட்டுச் செய்து பொருள்காண முற்படலாம். 'ஆக்கையின் உற்ற உறுபொருள், நறுமலர் எழுதரு நாற்றம்போல் (உள்ளதும்) அப்பொருள் பாராதே பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பற்றல் ஆவது ஓர் நிலை இலாப் (ததும் ஆகிய) பரம்பொருள்' என்று கொண்டுகூட்டுச் செய்தல் நலம்.

மலரின்கண் உள்ள நாற்றம், எங்கும் நிறைந்துள்ளது. என்றாலும் மலரின் மணத்தை மிகுதியும் நுகர வேண்டுமாயின் மூலமாகிய மலரினிடத்தேதான் செல்ல வேண்டும். அதேபோன்று பரம்பொருளும் எங்கும், எல்லா இடத்தும் நிறைந்திருந்தாலும், அப்பொருளுடன் இணைந்து

அதனை அனுபவிக்க வேண்டுமாயின் அதன் மூலத்திற்கே செல்லவேண்டும்.

மலரைப் பற்றிக்கொள்ள வேண்டுமானால், அதற்கொரு வடிவம் உண்டு ஆதலின் அதனைப் பற்றிக்கொள்ளலாம். ஆனால், இறைப்பொருளைப் பொறுத்தமட்டில் அதனைப் பற்றிக்கொள்வதற்குரிய ஏதேனும் ஒரு வடிவம் உண்டா என்றால், இல்லை என்றுதான் கூறவேண்டும். அப்பொருள் அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்று நிலைகளில் இருப்பினும், உருவம்தவிர ஏனைய இரண்டு நிலைகளிலும் அதனைப் பற்றிக்கொள்ள முடியாது. வைணவர்கள் கூறும் அர்ச்சாவதார நிலை, உயிர்கள் உய்யும் பொருட்டு, பரம்பொருள் மேற்கொள்ளும் உருவநிலை ஆகும்.

உருவ நிலையில் கூட அதனைப் பற்றிக் கொண்டோம் என்று நினைத்தால், அதே விநாடியில், பற்றப்பட்ட நிலையைக் கடந்துசென்று அப்பொருள் விளங்குவதைக் காணமுடியும். எனவே, உடம்பினுள் ஒளிந்திருக்கும் உறுபொருளாகிய உயிர், எந்த நிலையிலும் பரம்பொருளைப் பற்றிக்கொண்டோம் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்று நிலையிலும் பற்றிக்கொள்வதற்குரிய நிலை இதுதான் என்று சொல்லமுடியாதபடி உள்ளது என்பதைக் குறிக்கவே 'பற்றல் ஆவது ஓர் நிலை இலாப் (பற்றிக் கொள்வதற்குரிய நிலை இது என்று கூறமுடியாதபடி உள்ளது) பரம்பொருள்' என்றார்.

'நறுமலர் எழுதரு நாற்றம்போல்' என்று கூறிய உவமை எவ்வாறு பொருந்துகிறது என்பதைக் காணல் வேண்டும். நறுமலரிடத்து எழுதரு நாற்றம் என்றமையின், அந்நாற்றம் எங்கும் பரவியிருப்பினும் எங்கோ ஓர் இடத்தில் மூலமாகிய மலர் மறைந்துநிற்கின்றது என்பதை அறிவிக்கின்றது. அதேபோலப் பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருள், மலரின் மணம்போல்

எங்கும் நிறைந்துள்ளதே தவிர, மூலமாகிய மலர்போல் உள்ள அப்பொருளை எளிதில் அறிதல் இயலாத காரியம்.

மலரைத் தேடிக்காண்பது கடினமே ஆயினும், கண்டவழி மூக்கும், மலரும் ஒன்றாக் இணைந்து மணத்தை அனுபவிக்கின்றதை அறிவோம். அதேபோல எந்த ஓர் இடத்திலும் நிலைத்து நில்லாத இப்பரம்பொருளை, தேடிப்பிடித்து, இந்த உறுபொருளாகிய ஆன்மா பற்றிக் கொள்ளக் கூடுமேயானால் முழு அனுபவத்தைப் பெறமுடியும்.

'அப்பொருள் பாராதே' என்பது, 'அரிதின் முயன்று தேடிப்பிடிக்க வேண்டிய அந்த, (ஓரிடத்து) நிலையிலாப் பொருளை, அடைய முற்படாமல்' என்ற பொருளைத் தரும்.

'பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திருக்கும் பித்தர் சொல் தெளியாமே' என்பது (முயன்று பெறவேண்டிய அப்பொருளை அடைய முற்படாமல்) வினை காரணமாக வந்த இப்பிறவியில் பெற்றதையே வைத்துக்கொண்டு, அது தரும் அற்பப் பயன்களையே அனுபவித்து மகிழும் இப்பிறவியே அற்புதமானது என்று சொல்லித்திரியும் பைத்தியக்காரர்களின் உரையை வெற்றுரை என்று தெளியாமல் என்ற பொருளைத் தரும்.

அந்த வெற்றுரையை நம்பிக்கொண்டு அவர்களுடன் திரிந்த என்னை அவர்களிடமிருந்து பிரித்து 'அத்தன் ஆண்டு (கொண்டு) தன் அடியரில் கூட்டிய அதிசயத்தைக்' காணவாருங்கள் என்கிறார்.

நறுமலரிடத்து எழுகின்ற நாற்றம் பரந்தும் விரிந்தும் இருப்பினும், அதனை முகர்ந்து அனுபவிக்கலாமே தவிர, அது நுண்பொருள் ஆதலின், பற்றிக்கொள்ள முடியாது. அதுபோல உருவம், அருவுருவம், அருவம் என்ற மூன்று

நிலைகள் இருப்பினும், மனம் மொழி மெய்களால் பற்றிக் கொள்ளக் கூடிய உருவநிலை, அருவுருவநிலை, அருவநிலை என்ற குறிப்பிட்ட ஒரு நிலையும் இல்லாததாகிய பரம்பொருள் ஆக்கையின்கண் உள்ள உயிரினிடத்து உறு பொருளாக, வேண்டத்தக்க பொருளாக அமைந்துள்ளது.

காண்பதற்கும் பற்றுவதற்கும் அகப்படாத பொருள் ஆதலால் உயிர்களினிடத்து மறைந்து நிற்கும் அப்பரம் பொருளைக் கவனத்தில் கொள்ளாமல், அதனை அறிய வேண்டிய முயற்சியையும் செய்யாமல், கிடைத்த இந்த உடம்பே மாபெரும் சிறப்புடையதென்று கருதிப் பொழு தைக் கழிக்கின்றவர்களுடன் சேர்ந்து நானும் அயர்ந்தேன்.

மேலே தந்துள்ள விளக்கத்தில் எனக்குப் பட்டவை எழுதப்பெற்றுள்ளனவே தவிர, இதனை முழு விளக்க மென்றோ, இதுதான் விளக்கமென்றோ சொல்லும் துணிவில்லை.

437. இருள் திணிந்து எழுந்திட்டது ஓர் வல்வினைச்
சிறு குடில் இது இத்தைப்
பொருள் எனக் களித்து அரு நரகத்திடை
விழப் புகுகின்றேனை
தெருளும் மும்மதில் நொடி வரை இடிதரச்
சினப் பதத்தொடு செம் தீ
அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
அதிசயம் கண்டாமே 10

நொடி வரை–நொடி அளவில், நொடிப்பொழுதில்

'இருள் திணிந்து எழுந்திட்டது ஓர் வல்வினைச் சிறுகுடில்' என்றதால் இவ்வுடம்பாகிய சிறுகுடில் வல்வினை என்று சொல்லப்படும் அத்திவாரத்தின்மேல் நிற்கின்றது. அடுத்து 'இருள் திணி சிறு குடில்' என்றதால்

அஞ்ஞானம், அதிலிருந்து தோன்றும் ஆணவம் ஆகிய இருள், இச்சிறு குடிலைப் பற்றி நிறைந்திருக்கின்றது என்கிறார்.

இந்த இருள் நிறைந்த சிறு குடிலை, மெய் என்ற பெயர் வைத்த காரணத்தால், உண்மையானது என்று நம்பி அதன்வழியே சென்று, கொடிய நரகிடை விழுவான் வேண்டிச் செல்கின்றேன்.

'தெருளும் மும்மதில், நொடி வரை இடிதர' என்றதால் விளங்குகின்ற திரிபுரங்களை ஒரு நொடிப் பொழுதில் எரியுண்ணுமாறு செய்த பெருமான் என்கிறார். இவ்வாறு எரியுண்ணச் செய்தவன், மெய்ந்நெறி காட்டும் மெய்ப்பொருள் ஆதலின், அவனையே 'மெய்ந்நெறி' என்று உருவகித்தார்.

உடலையே மெய்யென நம்பி நரகத்தில் விழுவதற்கு விரைவாகச் சென்ற என்னை ஒரு நொடியில் திரிபுரத்தை அழித்தவனாகிய பெருமான், என் மும்மலங்களையும் எரித்து, பொய் நெறியினின்றும் விலக்கி, செந்நெறியில் செலுத்திய அதிசயத்தைக் கண்டாமே என்றார்.

ॐ ॐ ॐ

27. புணர்ச்சிப் பத்து

[அத்துவித இலக்கணம்]

புணர்ச்சிப் பத்து என்பது ஒருங்கு இணைந்து இருத்தல்பற்றிய பத்துப் பாடல்கள் என்ற பொருளைத் தரும். புறம் ஐம்பத்து எட்டாம் பாடலில் வரும் 'இன்றே போல்க நும் புணர்ச்சி' என்பது சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூன்று மன்னர்களும் ஒருங்கிணைந்து இருந்ததைக் குறிப்பதாகும். குறளில் வரும் 'புணர்ச்சி பழகுதல் வேண்டா' (குறள்:785) என்ற தொடரிலுள்ள 'புணர்ச்சி' என்ற சொல், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனங்கள் ஒரே சிந்தனையுடன் ஒருங்கிணைந்து இருத்தலையே குறிக்கும்.

திருவாசகத்தில் வரும் 'பொல்லா மணியைப் புணர்ந்தே' என்பது, துளையிடாத மணியாகிய இறைவனுடைய திருவடியை மனத்தில் இருத்தி, வேறு சிந்தனையில்லாமல், அதனோடு ஒருங்கு இணைந்து இருத்தல் என்ற பொருளைத் தரும்.

திருப்பெருந்துறையில் தொடங்கிய அடிகளாரின் ஆன்மீக வளர்ச்சியில் புணர்ச்சிப் பத்து ஒரு திருப்பு முனையாக நிற்கின்றது.

ஆசைப்பத்து நீங்கலாகவுள்ள ஏனைய பகுதிகளில் அடியார் கூட்டம், திருவடிப் பெருமை, திருவடியைப் புறத்தே இருந்து வணங்குதல், அத்திருவடியைத் தம் நெஞ்சுள் பதித்தல் போன்றவை பேசப்பெற்றன. இந்த முறை வைப்பிற்குப் பெரிதும் மாறுபட்டு நிற்பது 'கையால் தொழுது' (திருவாச: 425) என்று தொடங்கும் ஆசைப்

பத்தின் பாடலாகும். அந்தப் பாடலில்தான் திருவடிகளை நெஞ்சாரத் தழுவிக்கொண்டு அமைதியாக இருக்க ஆசைப்பட்டேன் என்று பாடுகிறார். இந்த இடத்தைத் தவிர மற்றப் பகுதிகள் திருவடியைப்பற்றி எவ்வளவு பேசினாலும் புணர்ச்சிப் பத்தில் பேசப்பெறும் நெருக்கம் அவற்றில் இடம்பெறவில்லை; திருவடியின்மாட்டு அச்சங் கலந்த பக்தியே அவற்றில் வெளிப்பட்டு நிற்கின்றது.

இதற்கு அடுத்த நிலை அத்திருவடியை நெஞ்சாரத் தழுவிக்கொள்ள வேண்டும் என்கின்ற நிலை. இதுவரை, திருவடியினிடத்து இருந்த அச்சம் நீங்கி, ஓர் இணக்கம் தோன்றத் தொடங்குகிறது. இதிலும் முழுத்தன்மை இல்லை. காரணம், திருவடி தனித்து எங்கோ இருக்கிறது. அதன் அருகில் சென்று அதனைத் தழுவிக்கொண்டாலும் அத்திருவடி வேறாகவும், தழுவுகின்றவர் வேறாகவும் இருக்கின்ற இரட்டை நிலை தவிர்க்க முடியாததாகும்.

அச்சத்தோடு பக்தி செய்யும் நிலையை நோக்க, தழுவிக்கொள்ளும் நிலை உயர்ந்தது என்றாலும், பின்னே வரும் புணர்தல் நிலையை நோக்க, தழுவுதல் நிலையும் ஒரு படி கீழ்ப்பட்டதே ஆகும்.

திருவடிகளைத் தழுவ ஆசைப்பட்டேன் என்று பாடிய அடிகளார், புணர்ச்சிப் பத்தில் பல படிகள் மேலே சென்றுவிடுகிறார். பொல்லா மணியைப் புணர்ந்து என்பதால், ஒருங்கிணைகின்ற நிலை இங்கே பேசப் பெறுகிறது.

எவ்வளவு ஒருங்கிணைந்தாலும், இரண்டும் சமமான நிலையில் இருந்தாலும் அடிகளார் வேறு, திருவடி வேறு என்பதை மறுத்தற்கில்லை.

புணர்ச்சிப் பத்தின் இரண்டாம் பாடலில், 'போற்றிப் புகழ்வது என்றுகொல்லோ என் பொல்லா மணியைப்

புணர்ந்தே' என்று வருவதால் பொல்லா மணியைப் புணர்ந்த நிலையிலும் புறத்தே நின்று போற்றி நிற்கும் நிலையும், புகழ்ந்து நிற்கும் நிலையும் பேசப்படுகின்றன. ஆதலின், இப்பகுதிக்கு 'அத்துவித (இரண்டு இல்லை) இலக்கணம்' என்று தலைப்புத் தந்தது சற்றும் பொருந்தாமையை அறிதல் வேண்டும். அத்துவிதம் என்றால், போற்றிப் புகழும் ஒருத்தரும், போற்றிப் புகழப்பெறும் ஒருத்தரும் இருத்தற்கில்லை. புணர்ச்சி என்ற சொல் இரண்டு பொருள்கள் ஒருங்கிணைதலைக் குறிக்குமாதலின் அத்துவிதம் என்ற பொருள் பொருந்தாமை அறிக.

438. சுடர் பொன் குன்றை தோளா
முத்தை வாளா தொழும்பு உகந்து
கடைப் பட்டேனை ஆண்டு கொண்ட
கருணாலயனை கரு மால் பிரமன்
தடைப் பட்டு இன்னும் சாரமாட்டாத்
தன்னைத் தந்த என் ஆர் அமுதை
புடைபட்டு இருப்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே 1

'கடைப்பட்டவனாகிய என்னை, எவ்விதத் தகுதியும் பாராது(வாளா) என் அடிமைத்தன்மையை உகந்து ஏற்றுக்கொண்ட கருணைக்கு இருப்பிடமானவனை, ஒளிவிடும் பொற்குன்றை, துளையிடப்படாத முத்தை, தன்னை எனக்குத் தந்த அமுதுபோன்றவனைப் புணர்ந்து, அவன் அருகிலேயே நெருங்கி இருப்பது (புடைபட்டு) என்றோ?' என்றவாறு.

'திருமாலும் பிரமனும் இன்னும் சென்று அடைய முடியாத (சாரமாட்டாத்) தன்னை (அவனே விரும்பி) எனக்குத் தந்தான்'.

'புடைபட்டு இருப்பது என்றுகொல்லோ' என்று கூறியமையால் நெருங்கிப் புணர்ந்து அருகிலிருப்பது என்ற பொருளையே தருகிறது.

439. ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்து ஐம் புலன் ஆய
சேற்றில் அழுந்தாச் சிந்தை செய்து
சிவன் எம்பெருமான் என்று ஏத்தி
ஊற்று மணல் போல் நெக்கு நெக்கு
உள்ளே உருகி ஓலம் இட்டுப்
போற்றிப் புகழ்வது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே 2

'அவனிதலமாகிய இப்பரந்த உலகின்கண், ஐம்புலன்கள் என்று சொல்லப்படும் சேற்றில் அழுந்தி, வெளியே வர ஆற்றலோ வழியோ இல்லாமல் அலமருகின்றேன். இனி இதனை நீண்ட காலம் பொறுத்துக் கொண்டிருக்கும் ஆற்றல் என்பால் இல்லை.

'தளர்ச்சி தரும் இதிலிருந்து நீங்கி, 'சிவனெம்பெருமான்' என்று சொன்னவுடனேயே மணல் ஊற்றுப் போல் நெக்கு நெக்கு உள்ளே உருகி, ஓலமிட்டு என் பொல்லா மணியைப் புணர்ந்து அவன் கருணைத் திறத்தைப் போற்றிப் புகழ்வது என்றோ' என்றவாறு.

'ஊற்று மணல்போல் நெக்கு நெக்கு உள்ளே உருகி' என்ற உவமை விளக்கமாக அறியப்பட வேண்டிய ஒன்றாகும். மணல் நிறைந்த இடத்தின் அடியில் ஊற்று மறைந்துநிற்கின்றது. மணலைத் தோண்டத் தோண்ட ஊற்று நீர் வெளிப்படுமாப்போலே, சித்தத்தின் ஆழத்தில் நிறைந்து மறைந்துநிற்கும் உருக்கம் சிவனெம் பெருமான் என்று சொல்லச் சொல்ல வெளிப்பட்டுக் கண்ணீராய்ப் பெருகும் என்றபடி,

'போற்றிப் புகழ்வது' என்பதற்குப் பதிலாகப் 'போற்றி நிற்பது' என்று பாடமும் உண்டு.

440. நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
ஆண்டு கொண்ட என் ஆர் அமுதை
அள்ளூறு உள்ளத்து அடியார் முன்
வேண்டும்தனையும் வாய் விட்டு அலறி
விரை ஆர் மலர் தூவிப்
பூண்டு கிடப்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே 3

'அக்கினித் தூணாக நின்றவன், ஒருசிறிதும் விருப்பமில்லாமல் வழியோடு சென்றுகொண்டிருந்த என்னை இழுத்துப் பிடித்து ஆண்டுகொண்டவன்; எனக்கு அமுது போன்றவன் ஆகிய எம் தலைவனின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு, என்னை மறந்து கிடப்பது என்றாங்கொல்?' என்றபடி,

இவ்வாறு தம்மை மறந்து கிடக்க விரும்பும் ஒருவர் இதே நிலையிலுள்ள பிற அடியார்களுடன் சேர்ந்து இவ்வாறு இருக்கவேண்டும் என விரும்புவது இயல்பேயாகும். அவர்களைப்போலவே மலர் பறித்துத் திருவடிகளில் தூவவேண்டும் என்று அடிகளார் நினைப்பதும் இயல்பேயாகும். அதனையே இங்கு அடிகளார் 'அள்ளூறு உள்ளத்து அடியார் முன், வேண்டும்தனையும் வாய்விட்டு அலறி விரையார் மலர்தூவி' என்று பாடுகிறார். இக்கருத்தைப் பௌத்தர்களும் ஏற்றுக்கொண்டு போற்றினர் என்பதை, அவர்கள் கூறும் 'சங்கம் சரணம் கச்சாமி' என்ற தொடர் வலியுறுத்துவதைக் காணலாம்.

441. அல்லிக் கமலத்து அயனும் மாலும்
அல்லாதவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத்தானை
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியை தேனை பாலை
நிறை இன் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே 4

'சொல்லிப் பரவும் நாமத்தானை' என்று கூறிவிட்டு அடுத்த படியாக, 'சொல்லும் பொருளும் இறந்த சுடரை' என்று கூறுவது சற்று வியப்பானது.

'சொல்லும் பொருளும்' என்பதற்கு ஓசை வடிவினதாகிய சொல்லும் அது குறிக்கும் பொருளும் என்று பொருள் கொண்டால், மனித முயற்சியில் தோன்றும் சொல்லும் அது குறிக்கும் பொருளும் என்ற விளக்கத்தைத் தரும். சொல் என்பது சக்தியின் வடிவம் என்றும் பொருள் என்பது சிவவடிவம் என்றும் காளிதாசன்முதல் பலரும் கூறியுள்ளனரே! அப்படியிருக்க, 'சொல்லும் பொருளும் இறந்த சுடர்' என்பது பொருந்துமா என்ற வினாத் தோன்றலாம்.

சொல் என்பது இறைவியின் வடிவம் என்றால், அந்த வடிவைக் கடந்து நிற்பவள் இறைவி. அதேபோலப் பொருள் சிவசொரூபம் என்றால், சொரூபம் கடந்தும் நிற்பவன் இறைவன். இருவருக்கும் இந்த இயல்பு உண்டு என்பதை மறத்தலாகாது. அதனாலேயே 'சொல்லும் பொருளும் இறந்த சுடரை' என்றார்.

இவ்வாறன்றி இதற்கு வேறொரு பொருளும் கூறலாம். சொல் என்பது நாதத்தின் ஒரு நிலை, பொருள் என்பது பிந்துத் தத்துவத்தின் ஒரு நிலையாகும். எனவே, நாத பிந்துத் தத்துவங்களுக்கு அடங்காமல் அப்பாற்பட்டு நிற்கும்

ஒருவனைச், 'சொல்லும் பொருளும் இறந்த சுடர்' என்று குறிப்பதில் தவறில்லை.

நாத தத்துவத்திற்கு அப்பாலும் உள்ளான் என்று கூறும்போதே அந்த நாத தத்துவத்தில் கலந்து இப்பாலும் உள்ளான் என்பது விளங்கும். இதனைப் புரிந்து கொண்டால், சொல்லும் பொருளும் இறந்த சுடரை என்பதும் சொல்லிப் பரவும் நாமத்தானை என்பதும் ஒன்றுக் கொன்று முரண்படவில்லை என்பதை அறிந்துகொள்ள முடியும்.

அயனும் மாலும் பரவி ஏத்தும் நாமத்தை உடையவன் என்று கூறியவுடன் அந்த நாமத்திற்குரியவன் என்று அவனை நாமத்திற்குள் கட்டுப்படுத்திவிடக்கூடாது என்று கருதிய அடிகளார் 'நாமத்தான்' என்று சொல்லுக்குப் பிறகு 'சொல்லும் பொருளும் இறந்த சுடர்' என்கிறார்.

சொல்லும் பொருளும் இறந்த சுடர் என்றவுடன் நம்மால் அணுகமுடியாதது என்ற அச்சம் யாருக்கேனும் தோன்றுமானால் அதனைப் போக்குவான்வேண்டித் தம்முடைய அனுபவத்தைப் பின் இரண்டு அடிகளில் கூறுகிறார். மூலப்பொருளின் இயல்பு என்று எடுத்துக் கொண்டால், அந்த மூலப்பொருள் சொல்லும் அது குறிக்கும் பொருளும் கடந்ததுதான். ஆனால், தம்மைப் பொறுத்த அளவில் கடந்து நிற்கும் அப்பொருள் தம்முடைய அனுபவத்திற்குட் பட்டதாய், நெல்லிக் கனியாய், தேனாய், பாலாய் இனிமை பயந்தது என்பதை எடுத்துக்கூறுவதன் மூலம் நம்பிக்கையிழந்த மனித குலத்திற்கு நம்பிக்கையூட்டுகிறார்.

சொல்லும் பொருளும் இறந்த சுடர்-நெல்லிக் கனியாய், தேனாய், பாலாய் இனிக்கின்ற நிலைக்கு வரவேண்டுமானால் அதற்குரிய வழிமுறைகள் சில உண்டு.

'அல்லிக்கமலத்து அயனும் மாலும் அமரர்கோனும் அல்லாதவரும் சொல்லிப் பரவும் நாமத்தானை' என்றதால் சிவபெருமானைக் குறித்தவாறாயிற்று. இம்மூவரையும் அடுத்து 'ஏனையோரும்' என்று கூறாமல், 'அல்லாதவர்' என்று கூறியதால் சிவபெருமானைப் பரம்பொருள் என்று ஏற்றுக்கொள்ளாத பிற தெய்வ வழிபாட்டுக்காரர்களைக் கூறினாராயிற்று. அவர்கள் தமக்குரிய தெய்வமாக ஒன்றை ஏற்றுக்கொண்டு அதற்குரிய பெயரைக் கூறி வழிபடுபவர்கள் அல்லவா? எந்தப் பெயரைக் கூறி வழிபட்டாலும் அப்பெயர்களுக்குரியவன் சிவபெருமானே என்பதைக் கூறவந்த அடிகளார் 'அல்லாதவரும் சொல்லிப் பரவும் நாமத்தானை' என்றார். பிற்காலத்து வந்த தாயுமானவப் பெருந்தகை

'வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம்பொருளே! நின் விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை' (தாயு: கல்லாலின்-25)

என்று பாடியதும் சைவ சாத்திரக்காரர்கள்,

'யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்'

என்று கூறியதும் இக்கருத்தை வலியுறுத்துவனவே யாகும்.

பாடலின் இறுதியில் 'அமுது' என்று கூறியபிறகு 'அமுதின் சுவை' என்று அடுத்துக் கூறுவது சற்று வினோதமானது. இந்நூலின் முற்பகுதியில் பல இடங்களில் இத்தொடரை அடிகளார் பயன்படுத்தியுள்ளார். அமுதிலிருந்து சுவையைப் பிரிக்க முடியாது. குணா குணிபாவம் என்று இதனைக் கூறுவர். அப்படிப் பிரிக்க முடியாத அமுதையும் சுவையையும் பிரித்தே அடிகளார் கூறுகிறார் என்றால், அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

உண்ணும் பொழுது சுவை அனுபவிக்கப்படுகிறது; உண்ணப்பட்ட பொருள் பின்னர் உடலுக்கு நலம் செய்கிறது. வேம்பும் கடுவும் அன்ன மருந்து உண்ணும் பொழுது சுவை பயப்பதில்லை. ஆனால், அம்மருந்து உடலுக்கு நலம் செய்கிறது. ஆனால் தேன் உண்ணும் பொழுதும் சுவைபயந்து பின்னரும் நலம் செய்கிறது. அதுபோல இறைவன் அமுதாக உள்ளான் என்றால், அவனுடைய திருப்பெயரும் கருணையும் சுவையாக அமைந்துள்ளன. இறைவனைப் பொறுத்த மட்டில் அவன் வேறு, அவன் பெயர் வேறு இல்லை. இவற்றை யெல்லாம் மனத்திற் கொண்ட அடிகளார் 'அமுது' என்றும் 'அமுதின் சுவை' என்றும் பாடினார்.

அடிகளார் இயற்றிய திருக்கோவையாறில் 'சொற்பால் அமுது இவள்' (திருக்கோணவ) என்று தொடங்கும் பாடல் இதற்கு விளக்க உரையாக விளங்குகிறது.

அதாவது சொல்லுதல், பரவுதல், சொல்லின் பொருளை அறிய முற்படுதல் ஆகிய அனைத்தும் அறிவின் பாற்பட்ட செயல்களாகும். அந்த அறிவு தொழிற்படுகின்ற வரையில், அப்பொருள் வெளிப்படுவதும் இல்லை; எவ் விதச் சுவையையும் தருவதும் இல்லை. அறிவின் செயல் மங்க மங்க, உணர்வு வெளிப்பட்டுப் பணிபுரியத் தொடங்கும்போது, சொல்லும் பொருளும் மறைந்து சுவை ஒன்றுமட்டுமே எஞ்சி நிற்கின்றது.

'புல்லிப் புணர்வது' என்றது பருவடிவாகவுள்ள இவரது உடலும் குருவின் திருவடியும் ஒன்றையொன்று பற்றிக்கொண்டு இணைபிரியாது நிற்பதையே குறிக்கும். இதனையே தாடலை (தாள்-தலை) என்பர்.

442. திகழத் திகழும் அடியும் முடியும்
காண்பான் கீழ் மேல் அயனும் மாலும்
அகழப் பறந்தும் காணமாட்டா
அம்மான் இம் மா நிலம் முழுதும்
நிகழப் பணி கொண்டு என்னை ஆட்கொண்டு
ஆ ஆ என்ற நீர்மை எல்லாம்
புகழப் பெறுவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே 5

தலைவன்(அம்மான்) இந்நிலவுலகம் முழுதும் அறியும் படியாக தம்மைப் பணிகொண்டான் என்று கூறிவிட்டு, அடுத்து ஒரு விருப்பத்தையும் வெளியிடுகின்றார். குருநாதர் பெருந்துறையில் தம்மை அடிமை கொண்டார் என்பதை வியந்து கூறிய உலகம், வியப்பு மேலீட்டால், 'அடிகளார் பொல்லா மணியாகிய தலைவனைப் புணர்ந்து, அவன் திருவடிகளிலேயே தங்கிவிட்டார். ஆகா, இஃது என்ன புதுமை!' என்று புகழ்ந்து பேசும் நாள் என்றோ என்று தம் விருப்பத்தை வெளியிடுகின்றார்.

443. பரிந்து வந்து பரம ஆனந்தம்
பண்டே அடியேற்கு அருள் செய்யப்
பிரிந்து போந்து பெரு மா நிலத்தில்
அரு மால் உற்றேன் என்று என்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள் நீர்
உரோமம் சிலிர்ப்ப உகந்து அன்பாய்ப்
புரிந்து நிற்பது என்று கொல்லோ என்
பொல்லா மணிப் புணர்ந்தே 6

'முன்னொரு சமயத்தில் என்பால் பரிவு கொண்டு வந்து பரமானந்தத்தைக் தந்தார் குருநாதர். அவ்வாறு அருள் செய்த குருநாதரைப் பிரிந்து பெரிதும் திகைத்து நிற்கின்றேன். இந்த நிலைமை நீங்கி, கண்ணீர் ஆறாய்ச்

சொரிய, இறைவனுக்கு அடிமை பூண்டு அவன் இட்ட பணியைப் புரிந்து நிற்பது என்று கொல்லோ?' என்கிறார்.

444. நினையப் பிறருக்கு அரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனை ஒப்பாரை இல்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டம்
கனையக் கண்ணீர் அருவி பாயக்
கையும் கூப்பிக் கடி மலரால்
புனையப் பெறுவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே 7

'ஐம்பூதங்களில் வெளிப்பட்டு நின்றும், தனக்கு உவமை என்று சொல்லக்கூடிய எதுவும் இல்லாத, பொல்லா மணியைக் கூர்ந்து நோக்கி, உடல் பூரித்து (தழைத்து), தழு தழுத்த நாவுடன் சொற்கள் குழறிவர, கண்களில் நீர் அருவிபோலப் பாய, கூப்பிய கையுடன் கடி மலரால் புனைவது என்றோ?' என்பதாம்.

445 நெக்கு நெக்கு உள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானாவிதத்தால் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே 8

பாடலின் மூன்றரை அடிகளில், கூறப்பெற்ற செயல்கள், முன்னர் நாம் குறிப்பிட்ட இறைப் பிரேமை (divine ecstasy) என்பதன் முழு வெளிப்பாடாகும். இச்செயல்கள் ஒன்றையொன்று அடுத்தோ அல்லது ஒரு

தொடர்பு கொண்டோ, இச்செயலை உடையாரின் ஆணைக்கு உட்பட்டோ நடைபெறுவதே இல்லை. இவ்வளவு விரிவாக இதனை அடிகளார் எடுத்து வைத்து இறுதி அடியில் 'புக்கு நிற்பது என்று கொல்லோ' என்று சொல்வதால், முன்னர்ப் பலமுறை தமக்கு நிகழ்ந்த இந்த இறைப் பிரேமைச் செயல்களைக் காட்டி மறுபடியும் அந்நிலைமை என்று வருமோ என்று வினவுவதாகும், இப்பாடல்.

446. தாதாய் மூ ஏழ் உலகுக்கும்
தாயே நாயேன்தனை ஆண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கு ஓர் மருந்தே
பெரும் தேன் பில்க எப்போதும்
ஏதுஆம் மணியே என்று என்று ஏத்தி
இரவும் பகலும் எழில் ஆர் பாதப்
போது ஆய்ந்து அணைவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே 9

பாதப்போது ஆய்ந்து-திருவடி மலரை நினைந்து நினைந்து. ஆய்தல்-சிந்தித்தல்.

'தாதாய், மூ ஏழ் உலகுக்கும் தாயே, நாயேன்தனை ஆண்ட பேதாய்' என்ற பகுதி திருவாசகத்தின் ஈடிணையற்ற சிறப்பிற்கும், அடிகளாரின் ஆன்மீக வளர்ச்சியின் எல்லைக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

தந்தையே! மூ ஏழ் உலகிற்கும் தாயே! என்று கூறிவிட்டு, அடுத்தபடியாகப் பேதாய் என்று குறிக்கின்றார். தாதையாகவும், தாயாகவும் உள்ள ஒருவனைப், பேதை என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? முற்றறிவினன் என்று அவனைக் கூறுவர்; ஆனாலும், அவனும் அவளும் கருணைக்கடல்தான். பிரபஞ்ச காரணனாய் அனைத்தையும் தோற்றி, வளர்த்து, ஒடுக்கும் அவன்,

தாதை ஆகிறான். தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் காரணமாய் நிற்றலின் அவனே தாயாகிறான். இவர்களால் படைக்கப்பட்ட உயிர்கள், அவர்கள் கருணை காரணமாக இப்பிரபஞ்சத்தில் தத்தம் விருப்பம்போல் வாழ்கின்றன. இவற்றுள் இறப்ப உயர்ந்தவையும், இறப்ப இழிந்தவையும் உள்ளன என்பது வெளிப்படை. இந்நிலையில் அந்தத் தாதை, தான் இருக்கும் இடத்தை விட்டுவிட்டு, எங்கோ ஓர் இடத்தில் சென்று தங்கி, யாரோ ஒருவரைப் பிடித்து ஆட்கொள்கிறான் என்றால், ஆட்கொள்ளப்பட்டவருக்குப் பிறரிடம் காணப்படாத பல சிறப்பியல்புகள் இருந்தே தீரல் வேண்டும். அப்படி ஆட்கொள்வதற்கு எவ்விதத் தகுதியும் இல்லாத ஒருவரை, அவன் வந்து ஆட்கொண்டான் என்றால், அது சிந்திக்க வேண்டிய விஷயம்.

முதலில் இவரிடம் ஆட்கொள்ளப்பெறும் தகுதி உள்ளதா என்று ஆராயவேண்டும். தகுதி இல்லாவிட்டாலும், தகுதிக்குறைவான பகுதிகளாவது இல்லாமல் இருத்தல் வேண்டும். 'நாயேன்' என்று அடிகளார் தம்மைக் கூறிக்கொள்வதால் வேண்டத்தக்காத 'தகுதி' தம்பால் இன்மையும், வேண்டத்தகா தகுதி தம்பால் உள்ளமையும் மிகுந்திருந்தன என்கிறார். அப்படிப்பட்ட ஒருவரைத் தேடிப்பிடித்து ஒருவன் ஆட்கொண்டான் என்றால் அதனை எவ்வாறு நியாயப்படுத்தவது? ஆனால், இது நடைபெற்றது என்னவோ உண்மை. இப்படித் தரக் குறைவான ஒரு செயலைச் செய்த ஒருவனை, முற்றறிவன் என்று கூறுவது சற்றும் பொருந்தாது. முற்றறிவு இல்லாவிட்டால் போகட்டும்; சராசரி அறிவிருந்தால்கூட ஆண்டு கொள்வதற்கு முன்னர் ஆளப்பெறும் பாத்திரத்தின் தகுதியை ஆராய்ந்து இருக்கலாமே! ஆகவே, சராசரி அறிவும் இல்லாத அவனைப் 'பேதாய்' என்று அடிகளார் கூறுவதில் வியப்பொன்றும் இல்லை.

'பேதாய்' என்று இங்கு வழங்கப்பெற்ற சொல் இறைவனுடைய எளிவந்த தன்மைக்கு (ஸௌலப்பியம்) எடுத்துக்காட்டாகும்.

447. காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதும்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கு எல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனை ஆண்ட
பார்ப்பானே எம் பரமா என்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப் போது அணைவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே 10

மூப்பாய் - உயர்ந்து நிற்பவன்

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய செயல்களை என்றும் செய்துகொண்டிருக்கின்ற இவனை, எல்லாருக்கும், எல்லாவற்றிற்கும் மூத்தோன் என்று சொல்வது சாலப் பொருத்தமுடையதாகும்.

'மூவா முதலாய் நின்ற முதல்வா' என்ற தொடர் எல்லாருக்கும், எல்லாவற்றிற்கும் முன்னையவன் என்ற பொருளைத் தரும்.

அந்தண வடிவுகொண்டு குருவாய் இருந்து அருள் செய்தமையால் 'பார்ப்பானே' என்கிறார்.

'பூப்போது அணைவது என்றுகொல்லோ' என்பது 'உன் திருவடி மலரை வந்து அணைவது எந்நாளோ?' என்றபடி.

ॐ ॐ ॐ

28. வாழாப் பத்து

[முத்தி உபாயம்]

இன்று திருவாசகம் பதிப்பிக்கப்பெற்றுள்ள முறையில், செத்திலாப் பத்தின் பின்னர் அடைக்கலப் பத்தும், ஆசைப்பத்தும், அதிசயப் பத்தும், புணர்ச்சிப் பத்தும் ஆகிய நான்கின் பின்னரே, வாழாப் பத்து இடம் பெறுகிறது. ஆக, இந்த ஆறு பத்துக்களையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் பொதுவான சில சிந்தனைகளைப் பெறலாம்.

'செத்திடப் பணியாய்' என்று முதலில் வேண்டினார். அடுத்து அவனிடமிருந்து பணிஆணை வராதபொழுது, 'ஐயனே! மறந்துவிட்டாயா! நான் உன் அடைக்கலம் என்பதை மறுபடியும் உந்தனுக்கு நினைவூட்டுகிறேன்' என்று பேசுகிறார். அடுத்து, எவ்வளவுதான் தன்னிச்சை என்ற ஒன்றை இழந்து அடைக்கலமாக இருந்திருந்தாலும், சில அடிப்படையான விருப்பங்களை மனம் கொண்டிருக்கும். மனம் இருக்கின்றவரை இவை இருக்கத் தான் செய்யும். அடிகளார் போன்ற பெருமக்களுக்கு இந்த ஆசை, மிகச் சிறந்த ஆசையாயினும், விஸ்வரூபம் எடுக்காமல் மனத்தின் எங்கோ ஒரு மூலையில் அடங்கிக் கிடக்கிறது.

அடைக்கலமாகச் சென்றுவிட்ட பிறகு, 'செத்திடப் பணியாய்' என்று கேட்பதற்கும், 'ஆசைப்பட்டேன்

கண்டாய்' என்று தம் விருப்பத்தை அறிவித்தற்கும் என்ன உரிமை உள்ளது? அது இல்லை என்பதை அடிகளார் நன்கு அறிவார் ஆயினும், இன்னும் இந்த உடம்போடு வாழ்கின்ற காரணத்தால் மனத்திடைத் தோன்றிய ஆசைகளை வெளிப்படுத்துவதில் தவறில்லை என்று நினைக்கிறார். அப்படித் தோன்றிய ஆசைகள்கூட, இறைவனோடு உடனிருக்க வேண்டும் என்ற முறையில் தோன்றியதே தவிர, வேறு எந்த உலகப் பொருள்கள்மீதும் ஏற்படவில்லை. எனவேதான், மிக்க தைரியத்துடன் 'ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே' என்று பாடுகிறார்.

முன்னர்ப் பின்னர்க் கண்டிராத, அனுபவியாத ஒரு பொருளின்மேல் ஆசை ஏற்படுவது கடினம். ஆனால், 'ஆசைப்பட்டேன் கண்டாய்' என்று அடிகளார் கூறுவதற்குக் காரணம் அடியார்களோடு ஒரு சிறிதுநேரம் உடனிருக்கும் வாய்ப்பைப் பெற்றமையா லாகும். அதனையே 'அடியரில் கூட்டிய அதிசயம் கண்டாமே' என்று வியக்கின்றார். கூட்டிய அதிசயம் என்றதால், இது முன்னரே நடைபெற்றது என்பது பெற்றாம்.

முன்னர்க் கிடைத்த அனுபவம் ஆதலாலும், அந்த அனுபவத்தைப் பெறுவதற்குத் தடையாகவுள்ளது இந்தப் பூதவுடம்பே என்ற உறுதிப்பாடு அவர் மனத்தில் ஆழமாகப் பதிந்ததாலும், ஒரு பெரும் மனக்கலக்கத்திற்கு அடிகளார் உள்ளாகிறார் என்று நினைக்கத் தோன்றுகிறது.

இந்த ஆறு பத்துக்களையும் ஒரே நேரத்தில் தொடர்ந்து படித்தால் அடிகளார் ஏதோ ஒன்றைத் தொலைத்துவிட்டுத் தேடுகின்றார் என்ற எண்ணம் வலுப்பெறுகிறது. 'செத்திடப் பணியாய்', 'அடியேன் உன்

அடைக்கலம்', 'அடியரில் கூட்டிய அதிசயம்', 'ஆசைப்பட்டேன்' எனவரும் பகுதிகளின் தலைப்பை மட்டும் வைத்துப் பார்த்தால்கூட இவற்றின் ஆழத்தில் ஏதோ ஒரு குழப்பம் இருப்பதாகத் தோன்றுகிறது.

திடீரென்று 'புல்லிப் புணர்வது என்றுகொல்லோ என் பொல்லா மணியைப் புணர்ந்தே' என வரும் பகுதி மறுபடியும் அவரின் ஒரு குறிப்பிட்ட ஆசையை வெளிப்படுத்துகிறது. அடியார்களுடன் கூடவேண்டும் என்பது சரி, திருவடியில் அடைக்கலம் அடையவேண்டும் என்று நினைப்பது சரி, அத்திருவடியோடு இணைந்திருக்க ஆசைப்படுவது சரி. இவையெல்லாம் ஆண்டான்-அடிமைத் திறத்தில், அடிமைப்பட்டவர் விரும்புகின்ற நியாயமான விருப்பங்களாகும். இவற்றிற்குத் தடையாக இருப்பது உடம்பு என்ற நினைப்பு வந்தவுடன் 'செத்திடப் பணியாய்' என்று வேண்டுவதும் சரி. இவற்றையெல்லாம் விட்டுவிட்டுப் பல படிகள் கடந்து 'பொல்லா மணியைப் புல்லிப் புணரவேண்டும்' என்று பாடுவது அவரது உள்ளத்தின் வளர்ச்சியை ஒருவாறு தெரிவிக்கின்றது புல்லிப் புணர்வது என்று சொல்லும்போது அடிமைத்திறம் மறைந்துவிடுதலைக் காண்கின்றோம்.

இதனை அடுத்து வருவது வாழாப் பத்தாகும். 'செத்திடப் பணியாய்' என்பதற்கும் 'வாழ்கிலேன் கண்டாய்' என்பதற்கும் பொருளில் அதிக வேறுபாடில்லை. தாமாகச் சாவைத் தேடிக்கொள்வதற்கு உரிமையில்லை. ஆதலால் செத்திடப் 'பணியாய்' என்றார். ஆனால், இவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாழ்க்கை நீடிக்கின்றது. அதனை இவரால் ஒன்றும் செய்துகொள்ள முடியவில்லை. தலைவனே முன்னின்று இதற்கொரு

வழிசெய்தா லொழிய, சற்றும் விருப்பமில்லாத இந்த வாழ்க்கையை இவர் கொண்டுசெலுத்தித்தான் ஆகவேண்டும்.

சற்றும் விரும்பத்தகாத ஒன்று அடிகளாரைப் பற்றிக் கொண்டு விடமாட்டேன் என்ற உறுதியுடன் நிற்கின்றது. அது அவரைவிட்டுக் கழல வேண்டுமேயானால் அதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. இந்த வாழ்வை எவன் கொடுத்தானோ அவனே அதனைக் கழற்றிக்கொள்ள வேண்டும். ஆனால், அவனோ கழற்றுவதாக இல்லை.

இந்த வாழ்க்கையிலேயே ஒரு மாபெரும் இறையனுபவத்தைக் கொடுத்துவிட்டு, முன்னறிவுப்பு இன்றி அந்த அனுபவத்தைப் பிடுங்கிக் கொண்டு போய்விட்டான். அவன் ஆண்டது எவ்வளவு அதிசயமோ, அவ்வளவு அதிசயமானது அவன் பிடுங்கிக்கொண்டு மறைந்தது.

இந்த நிலையில், எல்லையற்ற, தாங்கொணாத, போக்கிக்கொள்ள முடியாத, துயரத்தில் ஆழ்ந்த அடிகளார், வாழாப் பத்தைப் பாடுகிறார்.

இந்த ஆழ்ந்த கருத்தை நன்கு சிந்தித்துப் பார்த்தால், இப்பதிகத்திற்குப் பழையவர்கள் கொடுத்த 'முத்தி உபாயம்' என்ற உட்தலைப்பு, வழக்கம்போல் சற்றும் பொருந்தமில்லாமல் அமைந்துள்ளது என்பது தெரிகிறது.

448. பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கு எடுத்து உரைக்கேன்

ஆண்ட நீ அருளிலையானால்
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே 1

இப்பாடலில் 'பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே' என்று வருவது, இப்பிரபஞ்சம் முழுவதும் விரிந்து, அதற்கு அப்பாலும் விரிந்துள்ளவனே என்ற பொருளைத் தரும். இறைவனுக்குரிய இந்த இயல்பை இதற்கு முன்னரும் பல முறை அடிகளார் கூறியுள்ளா ரேனும் இப்பாடலில் மறுபடியும் அதனை நினைவு கூர்வதற்கு இன்றியமையாத காரணம் ஒன்று உண்டு.

'ஆரொடு நோகேன், ஆர்க்கு எடுத்து உரைக்கேன்' என வரும் தொடர்கள் 'பரந்த எம் பரனே' என்பதோடு வைத்து எண்ணப்படவேண்டும். பிரபஞ்சம் முழுவதும் அதற்கு அப்பாலும் ஒரே ஒருவன்தான். பரந்தும், விரிந்தும், ஊடுருவியும், தனித்தும், உள்ளும் புறமுமாக ஒளித்தும் வெளிப்பட்டும் உள்ளான் என்றால், வேறு யாரிடம் சொல்லமுடியும்? அவனையன்றி வேறு யாரும் இல்லையே! அப்படியிருக்க யாரிடம் சென்று முறையிடுவது? தம் குறையை வெளியிட அவ்வொருவனைத் தவிர வேறு யாருமில்லை ஆதலால், 'ஆரொடு நோகேன், ஆர்க்கு எடுத்து உரைக்கேன்' என்ற தொடர்கள் அவருடைய உள்ளத்தில் தோன்றிய மிகப் பெரிய ஆதங்கத்தை, துயரத்தை வெளியிடும் தொடர்களாக அமைந்துள்ளன.

அவன் பரந்தும் விரிந்தும் இருக்கலாம். அதற்காக இவரை ஆட்கொள்ளவேண்டுமா என்ன? இப்படி ஒரு வினாத் தோன்றுமேயானால் அதற்கு விடையாக அமைவதுதான் 'ஆண்ட நீ அருளிலையானால்' என்பது.

'உன்னைத் தவிர வேறு ஒருவரும் இல்லையாதலால் யாரிடமும் என் துயரத்தைச் சொல்ல வாய்ப்பில்லை.

முன்னரே, நீ என்னை ஆண்டுகொண்டமையின் என்னுடைய நன்மை-தீமைகள், சுக-துக்கங்கள், வளர்ச்சி-வளர்ச்சியின்மை ஆகிய அனைத்தும் உன்னைப் பொறுத்தவையாகும். ஆண்டுகொண்டபோதே என் குறையை நீ அறிந்திருக்க வேண்டும். இதில் நான் செய்யத்தக்கது ஒன்றுமில்லை. என்னிடம் உள்ளது என் மனம் ஒன்றுதான். உன் திருவடியை அன்றி அந்த மனம் வேறெங்காவது அலைந்திருக்குமானால் அந்தக் குற்றம் என்னையே சேரும். நல்ல வேளையாக அந்த மனம் வேறெங்கும் செல்லவில்லை. ('நான் மற்றுப் பற்றிலேன் கண்டாய்' என்ற தொடர் மேலே கூறிய கருத்தை விளக்குகின்றது.)

'நீ என்னை ஆண்டாய்; அதன் பிறகு என் மனத்தில் வேறு பற்றுக்கள் இல்லை. இந்த நிலையில், அருளவேண்டியது உன்னுடைய கடமை. நீ அருளவில்லை என்ற குறையை எடுத்துச் சொல்லி அமைதி தேடுவதற்கு உன்னையன்றி வேறு யாருமில்லை'என்கிறார்.

இந்த அரிய கருத்தை எளிதாகப் புரிந்துகொள்வதற்கு இராமன்பற்றி வழங்கும் ஒரு செவிவழிக்கதை பெரிதும் உதவுகின்றது. வில்லைத் தரையில் ஊன்றிக்கொண்டு கடலை நோக்கிக்கொண்டிருந்த இராமன் தன் காலடியில் ஒரு தவளையின் பரிதாபமான குரலைக் கேட்டான். "தவளையே! வில் பட்ட உடனேயே நீ ஏன் கத்தவில்லை" என்று வினவினான். அப்பொழுது தவளை கூறிய விடை இதுவாகும்: "ஐயனே! இந்தப் பரந்த உலகிடை யார் எனக்குத் தீங்கிழைத்தாலும் 'ஓ இராமா! இந்தக் கொடுமையைப் பார்' என்று கதறுவேன். உடனடியாக உன் அருள் கிடைக்கும். ஆனால், இப்பொழுது இந்தப் பெருந்துன்பத்தைச் செய்தவன் நீ. அப்படியிருக்க நான் யாரிடம் சென்று முறையிட முடியும்?' என்ற கேட்டதாம். இந்த அற்புதமான கருத்தைத்தான் அடிகளார் 'ஆண்ட நீ

அருளிலையானால் ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்து உரைக்கேன்' என்று பாடியருள்கிறார்.

'அதனால், இந்த வார்கடல் உலகில் வாழப் பிடிக்கவில்லை. உன் திருவடிக்கண் வருக என்று அருள்புரிவாயாக' என்கிறார்.

449. வம்பனேன்தன்னை ஆண்ட மா மணியே
மற்று நான் பற்று இலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்கு
உணர்வு இறந்து உலகம் ஊடுருவும்
செம் பெருமானே சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எம்பெருமானே என்னை ஆள்வானே
என்னை நீ கூவிக்கொண்டருளே 2

'வம்பனேன்' என்ற சொல் வீணனேன் என்ற பொருளைத் தரும். அடுத்து 'இருவர்க்கு உணர்வு இறந்து உலகம் ஊடுருவும் செம்பெருமானே' என்ற தொடர் அழகான ஒரு கருத்தை உட்கொண்டுள்ளது.

நான்முகன், திருமால் என்ற இருவர் அறிவிற்கும் அகப்படாமல் நின்றவன் என்று சொல்வது சரி. ஆனால், அறிவை நம்பாமல் உணர்வினால் அவனைக் காணவேண்டும், அல்லது உணரவேண்டும் என்று அவர்கள் தொடங்கியிருந்தால் கண்டிருக்கலாமே! உணர்வு என்பது பக்தியாக மலர்ந்து, அந்த வலையினுள் அவனை அகப்படுத்திக்கொண்டிருக்கலாமே! அது ஏன் முடியாமல் போயிற்று? அதற்கு விடை கூறுகிறார் அடிகளார்.

இந்த இருவர் எதிரே தீத் தூணாய் நின்றவன் அடிமுடி காணப்படாத அளவிற்கு நீண்டு நின்றுவிட்டான். இவர்கள் உணர்வு தன் பணியைச் செய்திருப்பின்

அவர்கள் பணிந்து சென்று அவனைத் தம்வசப்படுத்தி யிருப்பார்கள். அவ்வாறு அவர்கள் செய்யவில்லை என்கிறார். இருவர்க்கும் உணர்வு இறந்து என்றதால் அவர்கள் பயன்படுத்தியது உணர்வு அன்று; அறிவே என்கிறார் அடிகளார்.

அடிகளார் இங்குப் பயன்படுத்தியது உணர்வு என்ற சொல்லே ஆயினும், அது அறிவு என்று பொருளில்தான் பயன்படுத்தப்பெற்றுள்ளது. அறிவினால் அறியப் படாததும், அறிவைக் கடந்து நிற்பதும் ஆன அப்பொருள் இவர்களுக்குக் கட்டுப்படாததில் வியப்பொன்றுமில்லை.

உணர்வு என்பது முகம் பார்க்கும் கண்ணாடி போன்றது. எதிரேயுள்ள மிகப் பெரிய மரத்தைக்கூட அந்த முகம் பார்க்கும் கண்ணாடியுள் கண்டுவிடலாம். புல் நுனியின்மேல் உள்ள பனித்துளியில் எதிரேயுள்ள பொருள்கள் அனைத்தும் காணப்படும். இவர்கள் இருவரும் உணர்வைப் பயன்படுத்தியிருப்பார்களே யானால் அந்த நெடிய தீத் தூண் இவர்கள் உணர்வுக்குள் அகப்பட்டிருக்கும். ஆனால், இவர்கள் அறிவைப் பயன்படுத்தினார்கள் என்கிறார் அடிகளார். 'உணர்வு' என்ற சொல்லையடுத்து 'இறந்து' என்ற சொல்லைப் பயன்படுத்தியதால் அந்த உணர்விற்குள் (அறிவிற்குள்) தீத் தூண் கட்டுப்படவில்லை என்பதை அறிவிக்கின்றார்.

450. பாடி மால் புகழும் பாதமே அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
தேடி நீ ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை
உணர்த்துவது உனக்கு எனக்கு உறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே 3

இப்பாடலில் மெள்ள மெள்ள இறைவனுடைய பொறுப்பு அதிகமாகிறது என்பதை அவனுக்கே எடுத்துக் காட்டத் தொடங்குகிறார். முன்னர், 'பற்றுநான் மற்றிலேன்' என்றுதான் கூறினாரே யொழிய அந்த 'மற்று' என்ற வினைமாற்றிற்கு அடிப்படையாக உள்ளது எது என்பதைத் தெரிவிக்கவில்லை. அதாவது, வேறு பற்று எனக்கு இல்லையென்றால், ஏதோ ஒன்று ஏற்கெனவே இருக்கின்றது என்பதைக் குறிக்கின்றது அல்லவா? அது, எது என்பதை அடிகளார் விளக்கமாகச் சொல்லவில்லை. இதன் மூலம் இறைவன் தப்பித்துக்கொள்ளலாம் அல்லவா? வேறு பற்றுக்களில் மனம் செல்லவில்லை என்றால், அடிப் படையிலுள்ள பற்று எது என்ற வினாவிற்கு விளக்கமாக விடை கூறும் முறையில் 'பாடி மால் புகழும் பாதமே அல்லால் பற்று நான் மற்றிலேன் கண்டாய்' என்று விளக்கமாகப் பாடியுள்ளார்.

அவன் பாதத்தில்தான் தம் பற்று இருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டார் அடிகளார். அந்தப் பற்று அவன் திருவடிகளை நோக்கித் தானாகச் செல்லவில்லை. அதற்குப் பதிலாக அவனே குருநாதராக வந்து அடிகளாருடைய பற்றை, தன் திருவடிகளின் பக்கம் திருப்பிவிட்டான் என்ற கருத்தை, 'தேடி நீ ஆண்டாய்' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். இதனால் இறைவனுடைய பொறுப்பு இரண்டு மடங்கு அதிகமாவதைச் சுட்டுகிறார்.

'இப்பொழுது நான் கோபித்துக்கொள்கிறேன் (ஊடுவது) என்றால், அது உன்னிடம்தானே செய்யமுடியும்! அவ்வாறு கோபிக்காமல் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்கிறேன் (உவப்பதும்) என்றால், அதுவும் உன்னைத்தானே செய்யமுடியும்!'

ஊடுவதும், உவப்பதும் யாரிடம் நடைபெறுகின்றன? கற்புடைய பெண்ணுக்கு ஊடுதல், உவத்தல் என்ற இரண்டும் தன் தலைவனிடமே நடைபெறுகின்ற

செயல்கள் ஆகும். இந்தச் சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம், தான் தலைவியாக இருத்தலையும், அவன் தலைவனாக இருத்தலையும் அவனுக்கே எடுத்துக் கூறியுள்ளார் அடிகளார்.

இந்த உறவுமுறை நிலைபெற்ற பின்னர், தலைவி மனத்தில் உறுதி பிறக்குமாறு செய்யவேண்டியது தலைவன் கடமையல்லவா? அதனையே 'எனக்கு உறுதி உணர்த்துவது உனக்கு' (உரிய கடமையாகும்) என்கிறார். 'அதனை நீ செய்யாததால் எல்லையற்ற வாட்டத்துக்கு உள்ளாயினேன்; ஆதலால் உலகிடை வாழ விருப்பமில்லை' என்கிறார்.

451. வல்லை வாள் அரக்கர் புரம் எரித்தானே
மற்று நான் பற்று இலேன் கண்டாய்
தில்லை வாழ் கூத்தா சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எல்லை மூ உலகும் உருவி அன்று இருவர்
காணும் நாள் ஆதி ஈறு இன்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே 4

பாடலின் இறுதி அடியில் மூவுலகும் ஆதி ஈறு இல்லாமல் வல்லையாய் வளர்ந்தாய் என்று அவனை விளித்துவிட்டு வாழ்கிலேன் கண்டாய் வந்து அருள்புரிக என்று கூறுவதால் இவை இரண்டு கருத்துக்களும் தொடர்பின்றித் தனித்து நிற்பது போல் தோன்றுகின்றன. ஆழ்ந்து நோக்கினால் இவற்றிடையே உள்ள தொடர்பை ஓரளவு புரிந்துகொள்ள முடியும். அரக்கர் புரம் எரித்தவனும் ஆதி ஈறு இல்லாமல் வளர்ந்தவனுமாகிய ஒருவனுக்கு இந்த உலகத்தில் ஏதோ ஒரு மூலையில் மணிவாசகர் என்ற ஒரு தனி மனிதர் படும் துயரத்தைக் கண்டுகொள்ளவோ போக்கவோ நேரம் எங்கே இருக்கப்

போகின்றது? அவன் கண்டுகொள்ளப்போவதுமில்லை; துயரைப் போக்கப் போவதுமில்லை என்ற நினைவு தோன்றியவுடன் எத்தனை நாள் வாழ்ந்தாலும் இவை இரண்டும் நடைபெறாவோ என்று அவநம்பிக்கை மேலோங்கியதால் வாழ்கிலேன் கண்டாய் என்றார். நம்பிக்கை தளர்ந்தவராயின் வாழ்கிலேன் என்பதோடு அல்லவா நிறுத்தியிருக்கவேண்டும்? 'வருக என்று அருள்புரியாயே' என்பதன் நோக்கம் என்ன? அதுவே மனித மனத்தின் இயல்புக்கு ஓர் எடுத்துக்காட்டு. எவ்வளவு நம்பிக்கை இழந்த போதிலும் மனித மனத்தின் ஆழத்தில் ஒரு துளி நம்பிக்கை இருந்தே தீரும். அந்தத் துளி நம்பிக்கையின் வெளிப்பாடுதான் 'வருக என்று அருள்புரியாய்' என்ற விண்ணப்பம்.

452. பண்ணின் நேர் மொழியாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எண்ணமே உடல் வாய் மூக்கொடு செவி கண்
என்று இவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே 5

இப்பாடலில் தம் பொறி புலன்கள் தம்முடைய ஆணைக்கு அடங்கி நடவாமல் தம் விருப்பம்போல் திரிகின்றதைச் சுட்டிக்காட்டி, 'இவற்றை அடக்கும் வாய்ப்பே இல்லை, எனவே இங்கு வாழ்கிலேன் கண்டாய்' என்கிறார்.

'சிவபுரத்து அரசே! நீ என்னை ஆட்கொண்டது கனவிலோ கற்பனையிலோ அன்று. இவ்வுலகிடை என் கையால் உன் திருவடிகளைப் பற்றிக்கொள்ளுமளவிற்கு

வெளிப்பட்டு நின்று, உறுதியாக (திண்ணமே) ஆண்டு கொண்டாய். அந்த நிலையில், என் பொறி புலன்கள் ஒரேயடியாக நின்கணே வந்திருக்க வேண்டும். அவ்வாறு நிகழவில்லை. அதாவது, 'எண்ணமே, உடல், வாய், மூக்கொடு, செவி, கண் என்று இவை நின்கணே' வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமையால் மண்ணின்மேல் வாழ விரும்பவில்லை' என்கிறார்.

453. பஞ்சின் மெல் அடியாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
செஞ்சவே ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டு நீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே 6

செஞ்சவே–செம்மையாக

ஒருவர் செய்த உபகாரத்தை மறப்பது என்பது நன்றி கொன்ற செயலாகும். அந்தப் பாவத்திற்குக் கழுவாயே இல்லை என்ற இக்கருத்தை (திருப்பெருந்துறையில்) 'ஆண்டு நீ அளித்த அருளினை மருளினால் மறந்த வஞ்சனேன்' ஆதலால், உலகிடை வாழ விரும்பவில்லை என்கிறார்.

இப்பெரும் பாவத்திலிருந்து விடுபட வழியில்லை. ஆதலால், 'நன்றியில்லாத நாய் போன்றவனாகிய நான் அஞ்சினேன்' என்கிறார்.

454. பருதி வாழ் ஒளியாய் பாதமே அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
திரு உயர் கோலச் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே

கருணையே நோக்கிக் கசிந்து உளம் உருகிக்
கலந்து நான் வாழும் ஆறு அறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே 7

'சூரிய மண்டலத்தின் நடுவே சதாசிவ சொரூபியாய் இருக்கின்றவனே! நீ திருப்பெருந்துறையில் அன்று அருளிய கருணையைச் சதா சர்வகாலமும் நினைந்து எஞ்சியுள்ள இந்த வாழ்நாளைச் செலவிட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாத மருட்சியை உடையவனாகிய நான்(மருளனேன்) வாழவிரும்பவில்லை' என்றவாறு.

'உன் கருணையை ஓயாது நினைந்துகொண்டிருந்தால் வாழ்வதில் தவறில்லை; வாழ்வும் பயனுடையதாகும்.

'ஆனால், கருணையை மறந்துவிட்ட மருட்சி மனத்திடை நிரம்பிவிட்டது. அது போமாறில்லை. இந்த நிலையில், நான் மேலும் வாழவிரும்பவில்லை' என்கிறார்.

455. பந்து அணை விரலாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
செம் தழல் போல்வாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
அந்தம் இல் அமுதே அரும்பெரும் பொருளே
ஆர் அமுதே அடியேனை
வந்து உய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே 8

'அடியேன் உய்யும்படியாக நீயே வந்து ஆண்டாய்; இப்பொழுது அத்தொடர்பு இன்மையின் நான் வாழவிரும்பவில்லை' என்றவாறு.

456. பாவ நாசா உன் பாதமே அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
தேவர்தம் தேவே சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
மூ உலகு உருவ இருவர் கீழ் மேலாய்
முழங்கு அழலாய் நிமிர்ந்தானே
மா உரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே 9

பாவநாசா-அடியவர் பாவத்தை நாசம் செய்பவனே. முழங்கு அழல்-ஒலியோடு எரியும் நெருப்பு

இப்பாடலின் பொருள் வெளிப்படை

457. பழுது இல் தொல் புகழாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
செழு மதி அணிந்தாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கு ஓர்
துணை என நினைவனோ சொல்லாய்
மழ விடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே 10

'பழுது இல் தொல் புகழாள்' என்றது, உயிர்கள்மாட்டுத் தாயாகிய அவள் செலுத்தும் கருணை, தேன் ஒழுக்குப்போல் இடைவிடாது வருதலைக் குறித்து நின்றது. அது என்றும் தடைப்படுவது இல்லை. ஆதலால் அடியார்கள் அவளைக் குறைகூறுகின்ற பழுது என்றுமே இல்லை என்றபடி.

ॐ ॐ ॐ

29. அருட் பத்து

[மகாமாயா சுத்தி]

இதில் வரும் பத்துப் பாடல்களும் 'அருளாயே' என்று முடிவதால், அருட்பத்து என்று பெயர்வந்ததுபோலும், முன்னருள்ள பல பகுதிகளைப்போல இதுவும் பாடலின் ஈற்றடியில் வரும் சொல்லைக் கொண்டு பெயர் பெற்றுள்ளது.

நான் உன் அடைக்கலம் என்றும், ஆசைப்பட்டேன் என்றும், நீ ஆட்கொண்ட அதிசயத்தை நினைந்து பார்க்கின்றேன் என்றும், என்றைக்கு உன் திருவடியைப் புல்லிப் புணர முடியும் என்றும் பேசிவந்தார் அடிகளார். அடுத்து இந்த நிலைமை நீடிக்குமானால் இந்த உலகில் வாழவிரும்பவில்லை எனவே வருக என்று அருள்புரிவாயாக என்ற முறையில் பாடினார். தம் மனத்தாங்கலையும், துயரத்தையும் பல்வேறு விதங்களில் வெளியிடும் முறையில் முன்னர்க் கண்ட பாடல்களை அமைத்துள்ளார்.

ஆனால், அவர் விரும்பிய எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. எனவே, எல்லையற்ற மனநோவுடன், 'ஐயா! நான் மேலே கேட்ட எதையும் நீ தாராமல் போனாலும் சரி, உன் திருவடிக்கண் வருக என்று நீ அழையாவிட்டாலும் சரி, இப்பொழுது மிகச் சாதாரணமான ஒரு வேண்டுகோளை உன்பால் வைக்கின்றேன். உன்னை ஆதரித்து அழைப்பேனேயானால் அது என்ன, (அதெந்துவே) ஏன் அழைத்தாய், என்றாவது

கேட்கக்கூடாதா?' என்ற பொருளில் பத்துப் பாடல்களைப் பாடுகின்றார்.

முன்னருள்ள ஆறு பத்துக்களையும் இதனையும் பின்வருமாறு மாற்றி அமைத்துப் பார்த்தால் ஓர் அற்புதத்தைக் காணமுடியும்.

உலகியல் வாழ்வில் எங்கோ சென்றுகொண்டிருந்த தம்மை, அடியாரில் கூட்டிய அதிசயத்தை முதலில் கூறினார். அந்த அதிசயத்தில் ஈடுபட்டு இவ்வுடம்பை நீத்து அடியருடன் சென்றிருக்க வேண்டும் என்ற கருத்தைச் செத்திலாப் பத்தில் கூறினார். அது இல்லையென்றால் இவ்வுலகில் வாழ்கின்றவரையும், 'பின்னரும் நான் உன் அடைக்கலம் என்னை ஏற்றுக்கொள்' என்றார். இம்மூன்றின் நிறைவாகப் 'பொல்லா மணியைப் புணர்வது என்றுகொல்லோ' என்று பாடினார். அதுவும் நடைபெறாமல் போகவே உள்ளார்ந்த தமது ஆசையை, ஆசைப்பத்தில் வெளியிட்டார். இந்த ஆசைகூட நிறைவேறாதபோது, இவ்வுலகிடை வாழப்பிடிக்கவில்லை வருக என்று அருள்புரிவாய் என்று வாழாப் பத்தில் கூறினார். அடுத்துள்ள பகுதியில் இவை ஒன்றையும் செய்யாவிட்டாலும், உன்னை நான் ஆதரித்து அழைத்தால் 'அது என்ன?' என்றாவது அருளோடு கேட்கக்கூடாதா? என்கின்றார்.

இப்பொழுது இவற்றை வரிசைப்படுத்திக் காணலாம். 1. அதிசயப் பத்து(26), 2. செத்திலாப் பத்து,(23) 3. அடைக்கலப் பத்து(24), 4. புணர்ச்சிப் பத்து (27), 5.ஆசைப் பத்து (25), 6. வாழாப் பத்து (28), 7. அருட் பத்து (29) என்ற ஏழு பத்துக்களின் பெயர்களையும் அமைதியாகப் படித்துப் பார்த்தால், மிகப் பெரிய வேண்டுதலில் இருந்து மிகச் சிறிய வேண்டுதலுக்கு இறங்கிவருவதைக் காணலாம். இதனை இறங்கு முறை (descending order) என்று திறனாய்வாளர் கூறுவர். அதாவது,

பெரிதாக ஒன்றைக் கேட்டுவிட்டு அதில்லாவிட்டால் இது; அதுவும் இல்லாவிட்டால் இது என்று கொஞ்சம் கொஞ்சமாக வேண்டப்பட்ட பொருளின் தரத்தைக் குறைத்துக் கொண்டு வருதல், இலக்கியங்களில் காணப்படும் ஓர் உத்தியாகும்.

துரியோதனனிடம் கண்ணனைத் தூது அனுப்பும் தருமன், 'நந்து ஊரும் புனல் நாட்டின் திறம் வேண்டு; நாடு ஒன்று நல்கானாயின், ஐந்து ஊர் வேண்டு; அவை மறுத்தால் ஐந்து இ(ல்)லம் வேண்டு; அவை மறுத்தால் அடுபோர் வேண்டு' என்று கூறியனுப்புவது இறங்கு முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். (வில்லி. கிருஷ்ணன் தூது: 9)

நாயன்மார்களில் கண்ணப்பர் தவிர ஏனைய அனைவர்க்கும் முன்னவராகிய காரைக்காலம்மையார், தம்முடைய அற்புதத் திருவந்தாதியில் பின்வருமாறு பாடுகின்றார். 'இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும், படரும் நெறி பணியாரேனும்' (திருமுறை: 11:4-2) என்று பாடுவதும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நாடு கேட்கத் தொடங்கி, ஐந்து வீடாவது வேண்டு என்று இறங்குகின்றான் தருமராசன்.

என்னுடைய துன்பத்தைப் போக்காவிடினும், இந்த வழியாகப் போ என்று ஒரு வழியைக்கூடச் சொல்லக்கூடாதா என்று இறங்குகிறார் அம்மையார்.

அதேபோன்று அடிகளாரும் அதிசயத்தில் தொடங்கி நான் ஆதரித்து அழைத்தால் 'அது என்ன' என்று ஒரு வார்த்தையாவது கேட்கக்கூடாதா என்ற முறையில் இறங்குவதைக் காணலாம்.

இந்த ஏழு பத்துக்களையும் ஒன்றாக வைத்துப் படித்துப்பார்த்தால், இவை முன்பின்னாக அமைக்கப் பட்டிருப்பினும், நாம் மேலே கூறிய முறையில் அமைந்தால் ஏற்படும் சிறப்பை அறியலாம்.

வழக்கம்போல் ஏதோ சில சாத்திரச் சொற்களை இதனுட் புகுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் பழையவர்கள் 'மகாமாயா சுத்தி' என்ற உட்தலைப்பைத் தந்துள்ளனர்.

458. சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே
சுரி குழல் பணை முலை மடந்தை
பாதியே பரனே பால் கொள் வெள் நீற்றாய்
பங்கயத்து அயனும் மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறை மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே 1

நீதியே- மெய்ப்பொருள் வடிவான்வனே. ஆதரித்து-விரும்பி.

இப்பாடலின் முதலடி முன்னுரையில் கூறிய இறங்கு முறையில் அமைந்திருத்தலைக் காணலாம்.

'சோதி' என்பது, பற்றுக்கோடு இல்லாததாய், உருவோ வடிவோ எதுவும் இல்லாததாய், எங்கும் நிறைந்ததாய் இருக்கின்ற பேரொளியாகும். அடுத்துள்ளது 'சுடர்' என்பதாகும். சுடர் என்று கூறும்போது, ஏதோ ஒன்றைப் பற்றி நின்று எரியும் தீப்பிழம்பு நினைவுக்கு வருகிறது. 'சூழ் ஒளி விளக்கு' என்று கூறும்போது, சுடரைவிடச் சிறியதாய், சிறியதொரு திரியைப் பற்றுக்கோடாகக் கொண்டு, ஓர் அழகிய விளக்கினுள் அமர்ந்து எரியும் சிறு ஒளிப்பிழம்பு நினைவுக்கு வருகிறது.

இவ்வாறு மூன்று ஒளியைப்பற்றிக் கூறவேண்டிய தேவை என்ன? அதுவும் ஒன்றைவிட ஒன்று குறைந்து நிற்கும் இயல்புடையதாய் அமைந்துள்ள காரணம் என்ன?

நாம, ரூபம் அற்றதும், பிரபஞ்ச காரணமாய் இருப்பதுமான ஒரு பொருளை எவ்வாறு குறிப்பது? எவ்வித அடைமொழியும் இல்லாமல் 'சோதியே' என்று கூறுவதால் இக்கருத்தைப் பெறவைத்துவிடுகிறார். அடுத்து நிற்பது 'சுடரே' என்பதாகும். சோதி என்று சொல்லும் போது எவ்விதப் பற்றுக்கோடுமின்றித் தனித்து விளங்கும் ஒருபொருளைக் கூறியவர், சுடர் என்று சொல்லும்போது ஒரு பற்றுக்கோட்டை அண்டி நிற்கும் ஒளிப்பிழம்பைக் குறிக்கின்றார். சக்தியோடு சேர்ந்துள்ள சிவம், சுடருக்கு உதாரணமாய் அமைகின்றது. மூன்றாவதாக உள்ளது பருவடிவினை உடைய விளக்காகும். மேலே கூறிய இரண்டிற்கும் பருவடிவில்லை. சுடரொளிக்குத் திரி பருவடிவுடன் உள்ளதே என்று கேட்கலாம். ஆனால், பற்றி எரியும் திரியில் ஒளியைக் காணும்போது, திரியைப்பற்றிய நினைவு தோன்றுவதில்லை. அப்படியே திரியைப்பற்றி நினைத்தாலும் அது தனித்து இயங்காமல் சுடரினுள் அடங்கிவிடுதலைக் காணமுடியும். எனவேதான், பருவடிவு இல்லை என்று கூறினோம்.

சூழ் ஒளி விளக்கு என்பது இலிங்கத் திருமேனியைக் குறிப்பதாகும். சிறிய கைவிளக்கில் தோன்றும் ஒளி, விளக்கை விளக்கிக் காட்டுகிறதே தவிர, தான் பற்றி எரியும் நிலையைப் பொருத்துபடுத்திக் காட்டுவதில்லை. ஆழ்ந்து பார்ப்பவர்களுக்கே திரியைப் பற்றி எரியும் சுடர் கண்ணுக்குத் தெரியும். அதேபோல இலிங்கத் திருமேனியைக் காணும்போது, அதனுள் இருக்கும் சோதி

தெரிவதில்லை. உள்ளிருக்கும் சோதியைக் காண வல்லாருக்கு இலிங்கத் திருமேனி மறைந்துவிடுகிறது.

வேறொரு வகையாக இதனைக் கூறலாம். இலிங்கத் திருமேனியைப் பார்ப்பவர்கள் சோதியைக் காண்பதில்லை; சோதியைக் காண்பவர்கள் திருமேனியைக் காண்பதில்லை. இதனையே திருமூலர்,

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்துள் மறைந்தது மாமத யானை

(திருமந்திரம்: 2264)

என்று பாடுகிறார். இதனை இலிங்கத்துள் மறைந்தது சோதி, சோதியுள் மறைந்தது இலிங்கம் என்று கூறலாம்.

இப்பாடலின் முதலடி இறங்கு முறையில் அமைந்துள்ளது என்று கூறினோம் அல்லவா? அதனை நிரூபணம் செய்யும் முறையில் பாடலின் கடைசிப் பகுதி அமைந்துள்ளதைக் காணலாம். பரஞ்சோதியாய் உள்ள பொருள் தன் நிலையினின்று பல படிகள் இறங்கி, ஒரு மானிட வடிவமெடுத்துக் குருந்தமரத்தடியில் குருநாதராக அமர்ந்துள்ளது இறங்குமுறைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

தன் கருணை காரணமாக, பரஞ்சோதி பல படிகள் இறங்கிவந்தாலும், அடிகளார் அதனைக் கண்டு ஏமாந்து விடவில்லை. நிறைமலர்க் குருந்த மரத்தின் நீழலில் அமர்ந்திருக்கும் மானிடவடிவை இனங்கண்டுகொள்கிறார். நாம, ரூபமற்ற மூலப்பொருளாகிய அந்தப் பரஞ்சோதிதான் இது என்பதை உடனே அறிந்து கொண்டார் ஆதலின், 'நிறை மலர்க் குருந்தம் மேவிய சீர் ஆதியே' என்று அழைக்கின்றார்.

'அதெந்துவே என்றருளாயே' என்பது 'அது என்ன என்று அருளோடு ஒருவார்த்தை கேட்கமாட்டாயா?' என்னும் பொருளை உடையது.

459. நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண் உளார் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலம் இட்டு அலறி
உலகு எலாம் தேடியும் காணேன்
திருத்தம் ஆம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அருத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே 2

இப்பாடலுக்குப் பொருள் காண்பதில் சற்றுக் கவனத்தோடு இருத்தல் நலம். நிருத்தன், நீற்றன், நெற்றிக் கண்ணன் என்ற சொற்கள் இறைவனுக்கு மனிதர்கள் தந்துள்ள பல்வேறு வடிவங்களைக் குறிப்பனவாகும். ஒவ்வொரு திருக்கோயிலிலும் இந்தப் படிமங்கள் உள்ளன. எனவே, அடிகளார் 'தேடியும் காணேன்' என்று சொல்லும் போது இந்தப் படிமங்களைக் கூறவில்லை என்பது தெளிவு.

இப் படிமங்கள் வடிவில் காட்சியளிக்கும் மூலப் பொருள், நிருத்தம் முதலிய செயல்களைச் செய்துகொண்டிருந்தாலும் அதனை ஊனக் கண்களால் காண்பது இயலாத காரியம். அடிகளார் குருந்த மரத்தின் அடியில் குருநாதர் வடிவிலுள்ள ஒருவரைக் கண்டது உண்மை. அந்த வடிவைக் கண்டுகொண்டிருக்கும் அதே நேரத்தில் அவ்வடிவம் மறைகிறது. அவ்வடிவினுள் உமையொருபாகன் காட்சியளிக்கிறான். பிறகு அந்த வடிவும் மறைகிறது. தில்லைக் கூத்தன் காட்சியளிக்கிறான். விநாடி நேரத்தில் எல்லா வடிவுகளும் தோன்றி மறைந்துவிடுகின்றன. இப்பொழுது அடிகளார் தாம் கண்ட காட்சிகளை நினைவில் வைத்துக்கொண்டு, குருவடிவைத் தேடுகிறார்; கிட்டவில்லை. உமையொரு பாகனைத் தேடுகிறார்; கிட்டவில்லை. நிருத்தனைக் தேடுகிறார்; கிட்டவில்லை. இந்த அடிப்படையில்தான் இப்பாடல் எழுகிறது.

தாமாகவே காட்சி தந்த அவ்வடிவுகள், இவர் ஓலமிட்டு அலறும்போது காட்சி தர மறுத்துவிட்டன. அதனையே இப்பாடல் அறிவிக்கின்றது.

460. எங்கள் நாயகனே என் உயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கள் நாயகனே தக்க நல் காமன்
தனது உடல் தழல் எழ விழித்த
செம் கண் நாயகனே திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அம் கணா அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே 3

இப்பாடலில் 'ஏலவார் குழலிமார் இருவர் தங்கள் நாயகனே' என்று கூறியதன்பின்னர்க், 'காமன் தனது உடல் தழல் எழ விழித்த செம் கண் நாயகனே' என்று கூறியது சிந்தனைக்குரியது.

இருவரை மனைவியராகக் கொண்டும் காமனை எரித்தான் என்றால், இந்தக் கணவன் மனைவி உறவு, நாம் நினைப்பதுபோன்ற உலகியல் உறவன்று என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

461. கமல நான்முகனும் கார் முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற்கு அரிய
விமலனே எமக்கு வெளிப்படாய் என்ன
வியன் தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமில நான்மறை சேர் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அமலனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே 4

திருப்பெருந்துறையில் உள்ள அடியார்கள், தழலுருவாய் நின்ற வடிவை நோக்கி நீ வெளிப்பட்டு அருள்புரிய வேண்டும் என்று வேண்ட, அத்தழலிலிருந்து குருநாதர் வடிவாக வெளிப்பட்டு அருள்செய்தான் என்று இப்பாடலின் முதலிரண்டு அடிகளுக்குப் பொருள் கூறியுள்ளனர். இது ஒரு சிறிதும் பொருத்தமற்ற புராணக்கதையை நம்பி வலிந்து செய்யப்பட்ட பொருளாகும்.

திருவாசக அடிப்படையில் அடிகளார் வரலாற்றைச் சிந்தித்தால், திருப்பெருந்துறையில் நெருப்பொன்று தோன்றியதாக நினைக்க இடமேயில்லை. எனவே, அவ்வாறு பொருள் கூறுவது பொருந்தாமை அறிக.

நான்முகனும் மாலும் ஆணவத்தால் அடிமுடி தேட முயன்று முடியாதபோது, அந்தத் தழல் உருவை நோக்கி, 'ஐயனே! வெளிப்பட்டு எங்களுக்கு அருள் புரிவாயாக' என்று வேண்ட அவர்களுக்கு அருள்புரிந்தான் என்பதே நேரிய பொருளாகும். அதாவது 'கமல நான்முகனும், கார்முகில் நிறத்துக் கண்ணனும், நண்ணுதற்கு அரிய விமலனே எமக்கு வெளிப்படாய் என்ன, வியன் தழல் (இருந்து) வெளிப்பட்ட எந்தாய்' என்ற முறையில் பொருள் காண்க.

462. துடி கொள் நேர் இடையாள் சுரி குழல் மடந்தை
துணை முலைக்கண்கள் தோய் சுவடு
பொடி கொள் வான் தழலில் புள்ளி போல் இரண்டு
பொங்கு ஒளி தங்கு மார்பினனே
செடி கொள் வான் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அடிகளே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே 5

இப்பாடலின் பொருள் வெளிப்படை.

463. துப்பனே தூயாய் தூய வெள் நீறு
துதைந்து எழு துளங்கு ஒளி வயிரத்து
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறு சுவை அளிக்கும் ஆர் அமுதே
செப்பம் ஆம் மறை சேர் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அப்பனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே 6

'உன்னை உள்குவார் மனத்தில் உறுசுவை அளிக்கும் ஆர் அமுதே' என்ற தொடர் மிகச் சிறந்த ஒரு பொருளைத் தந்துநிற்கின்றது. 'உள்குவார்' என்பது எதிர்காலத்தை உணர்த்தும் சொல். உள்கினவர் (இறந்த காலம்) உள்ளத்துள் அமுதாக நிற்பவன் என்று பலரும் கூறியுள்ளனர். அதனை மாற்றி, அடிகளார் 'உள்குவார்' என்ற எதிர்காலச் சொல்லைப் பெய்ததன் மூலம், உள்குவதற்கு முன்னரேகூட, உள்கவேண்டும் என்ற நினைவு வந்தவுடனேயே அந்நினைவிற்குத் துணையாக நின்று மேலும் உள்குமாறு செய்து அவர்கள் உள்ளத்துள் அமுதமாக ஊறிநிற்கின்றான் என்ற அரிய கருத்தைப் பெறவைக்கின்றார்.

464. மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள் மூன்று எரித்த
கையனே காலால் காலனைக் காய்ந்த
கடும் தழல் பிழம்பு அன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஐயனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே 7

மேருவை வில்லாக வளைத்துக் கையிற்கொண்டு திரிபுரத்தை அழித்தார், இயமனைக் காலால் உதைத்தார் என்ற இந்த இரண்டு செயல்களும் எந்த அடிப்படையில் நடைபெற்றன?

திரிபுராதிகள், ஆணவம் காரணமாகப் பிறருக்குத் தீங்கிழைத்தனர்; அழிந்தனர். இயமன் கடமையைச் செய்ய முற்பட்டானேனும், இடம் அறிந்து கடமையைச் செய்யவேண்டும் என்று நினையாமல், ஆணவம் காரணமாகப் பாசக் கயிற்றை வீசி அதனால் தண்டனை அடைந்தான்.

இறைவனுடைய திருக்கரமும் திருவடியும் ஆணவத்தை அழிக்கவே எழுந்தன. இது மறக்கருணையின் பாற்படும்.

திரிபுரத்தை எரித்தாலும் தன்னையே நம்பியிருந்த மூவரை அழிவினின்றும் காத்தான். காலனைக் காலால் உதைத்தாலும் அவனிடம் சிக்கவேண்டிய மார்க்கண்டனை, தன்பால் சரணடைந்தான் என்பதால் காத்தருளினான். இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் செய்தவனுக்கு நினைவூட்டிவிட்டு, அவனைச் சரணடைந்த தம்மை இப்போது அவன் காக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

465. முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டு அறா மலர் பறித்து இறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பர கதி கொடுத்து அருள்செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே 8

சித்தன்-பிறர் வியக்கும் காரியம் செய்பவன்.

'மலர் பறித்து இறைஞ்சுவார்க்கும் பரகதி கொடுப்பவனே! அத்தகைய புறப் பூசைகளில் ஈடுபடாதிருக்கும் எனக்கும் அந்த அருளைத் தரவேண்டும்' என்று கேட்பதன் காரணம், அவன் எதனையும் செய்யும் ஆற்றலுடைய சித்தன் என்பதால் என்க.

466. மருளனேன் மனத்தை மயக்கு அற நோக்கி
மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே புனிதா பொங்கு வாள் அரவம்
கங்கை நீர் தங்கு செம் சடையாய்
தெருளும் நான்மறை சேர் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அருளனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே 9

'மருளனேன் மனத்தை நோக்கி மயக்கு அற இம்மையோடு மறுமையும் கெடுத்த பொருளனே' எனக் கொண்டுகூட்டுச் செய்க. மயக்கம் நிறைந்த என் மனத்தை ஆழமாகவும், குறிப்பிட்ட கருத்தோடும் குருநாதர் நோக்கியமையால் இப்பிறப்பில் வினை சேரா வாழ்க்கை வாழ முடிந்தது. வினையின்மையின் மறுபிறப்பு என்பது சொல்லாமலே ஒழிந்தது என்க. பொருளன் என்பது மூலப்பொருள் வடிவானவன் என்ற பொருளைத் தரும்.

467. திருந்து வார் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
இருந்தவாறு எண்ணி ஏசறா நினைந்திட்டு
என்னுடை எம்பிரான் என்று என்று
அருந்தவா நினைந்தே ஆதரித்து அழைத்தால்
அலை கடல் அதனுளே நின்று
பொருந்த வா கயிலை புகு நெறி இதுகாண்
போதராய் என்று அருளாயே 10

திருப்பெருந்துறை நிகழ்ச்சி, நடைபெற்றுப் பல காலம் சென்றபின்பும், பல இடங்கட்குச் சென்று இறைவழிபாடு செய்தபின்பும், இறைவனுடைய பல்வேறு வடிவங்களையும் தரிசித்தபின்பும்கூட அடிகளாரின் மனத்தைவிட்டு நீங்காமல் இருந்தது, பெருந்துறையில் கண்ட குருநாதர் வடிவேயாம். இக்கருத்தை முன்னரும் சுட்டிக் காட்டியுள்ளோம்.

பெருந்துறையில் குருநாதர் 'தில்லைக்கு வருக' என்று அருளினாரே தவிர, வாய் திறந்து வேறொன்றும் சொல்லவில்லை. அவர் மறைந்து பல நாட்கள் கழித்தும், அடிகளார் அந்த வடிவத்தையே நினைந்து இந்தப் பத்துப் பாடல்களிலும் 'குருந்தம் மேவிய சீர்' என்று பாடுகிறார்.

குருந்த மரத்தடியில் இருந்தவர் ஒன்றும் பேசவில்லை. ஆனாலும், இப்பொழுது அந்த வடிவத்தை நினைந்து தம்முடைய துயரத்தையெல்லாம் எடுத்துக்கூறிய அடிகளார், 'என்ன?' (அதெந்துவே) என்ற ஒரு வார்த்தைக்கூடக் கேட்கக்கூடாதா என்ற கருத்தையே இப்பதிகத்தின் ஒன்பது பாடல்களிலும் பாடினார்.

இவ்வளவு கூறியும் அந்தக் குருநாதர் இவர் விரும்பியபடி 'என்ன?' என்று ஒரு வார்த்தையும் கேட்கவில்லை. எனவே, அதை விட்டுவிட்டு, இந்தத் துன்பக் கடலில் உழலும் என்னைப் பார்த்து 'கயிலை செல்வதற்குரிய வழி இதுதான்; உடன் புறப்பட்டு வருவாயாக என்று நீ சொல்லவேண்டும்' என்ற வேண்டுதலைச் சமர்ப்பிக்கின்றார்.

'திருப்பெருந்துறையில் செழுமலர்க் குருந்தம் மேவிய சீர் இருந்தவாறு எண்ணி' என்பதால், குருநாதர் இருந்த

கோலத்தை அப்படியே மனத்துட் பதித்துக்கொண்டு வாழ்கின்றார் என்பது பெற்றாம்.

'அருந்தவா' என்றதால் குருந்தமரத்தடியில் இருந்த குருநாதரின் தவக் கோலத்தையே மறுபடியும் நினைக்கின்றார் என்பது தெரிகிறது.

'அலைகடல் அதனுளே நின்று' என்றதால் பிறவியாகிய துயரக்கடலின் உள்ளேயிருந்து அவதியுறும் என்னைப் பார்த்துக் 'கயிலை புகுநெறி இதுகாண்' என்று வழிகாட்டி, உடனே புறப்படுவாயாக (போதராய்) என்று நீ அருள்செய்ய வேண்டும் என்கிறார்.

ॐ ॐ ॐ

30. திருக்கழுக்குன்றப் பதிகம்

[சற்குரு தரிசனம்]

இப்பதிகத்தில் வரும் ஒவ்வொரு பாடலும் 'காட்டினாய் கழுக்குன்றிலே' என்று முடிவதால் திருக்கழுக்குன்றப் பதிகம் என்று பெயரிட்டனர். பதிகம் என்று பெயர் வருவதற்கேற்ப ஒரு காலத்தில் பத்துப் பாடல்களுடன் இப்பதிகம் இருந்திருத்தல் வேண்டும்.

தமிழர்களாகிய நம்முடைய கவனக்குறைவு உலகமறிந்த ஒன்றாகும். தமிழின் சுவையைக், கறையான், நெருப்பு, ஆற்று வெள்ளம் ஆகியவை சுவைத்த அளவிற்குத், தமிழர்கள் என்று சொல்லிக்கொண்டு பெருமைப்படும் நாம் சுவைக்கவில்லை என்பது நன்கு அறியப்பட்ட ஒன்று. ஒருவேளை மனிதர்களாகிய நாம் அறிந்த தமிழ்ச் சுவையைக், கீழ்நிலையில் உள்ள உயிரினங்களும் சுவைக்கவேண்டும் என்ற பரந்த நோக்கில் கறையான் முதலியவற்றிற்குத் தந்தோம் போலும்!

வட இந்தியாவைப் பொறுத்தவரை பாரசீகத்தார், துருக்கியர் முதலியோர் படையெடுப்புகள் நிகழ்ந்தமையால் அப்பகுதியிலுள்ள கோயில்களும் நூல்களும் சிதைவுண்டன. ஆனால், நம்மைப் பொறுத்தவரை புறத்தே இருந்து வந்த இடையூறு மிகமிகக் குறைவு. 18ஆம் நூற்றாண்டுவரை படையெடுத்து இங்கே வந்து தாக்கியவர் யாருமில்லை. 10ஆம் நூற்றாண்டில் தொடங்கி 13ஆம் நூற்றாண்டு முடியச் சோழப்பேரரசு ஓகோ என்று வளர்ந்தது உண்மைதான். ஆனால், அந்தக் கால கட்டத்தில்தான் தேவாரப் பதிகங்கள் நூற்றுக் கணக்கில் இழக்கப்பட்டன.

இராஜராஜன் தேவாரத்தைக் கண்டு எடுத்தான் என்ற கட்டுக்கதை வரலாற்று அடிப்படையில் ஆய்வோர்க்குச் சிரிப்பைத்தான் உண்டாக்கும். ஏறத்தாழ இந்தக் காலகட்டத்தில்தான் திருவாசகத்திலும் பல பாடல்கள் மறைந்துதொழிந்தன. அதில் ஒரு பகுதிதான் இப்பதிகத்தின் மூன்று பாடல்களும். இதேபோன்று திருவாசகத்தின் பிற்பகுதியிலும் பல பாடல்கள் மறைந்தொழிந்தன.

ஜி.யு. போப் என்ற மேலைநாட்டு அறிஞர் இறையனுபவத்தைப் பிழிந்து தரும் திருவாசகத்தைப் போன்ற என்பை உருக்கும் பாடல்களை உலக இலக்கியத்தில் வேறெங்கும் காணமுடியாது என்று எழுதியுள்ளார். அத்தகைய சிறப்பு வாய்ந்த திருவாசகத்தைக்கூடக் காணாமல் போகச்செய்யும் பெருமை நமக்கே உரியதாகும்.

திருக்கழுக்குன்றப் பதிகத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு.

அடிகளாரைப் பொறுத்தமட்டில் திருப்பெருந்துறை அனுபவத்திற்குப் பிறகு பற்பல புதுமைகள் நிகழ்ந்துள்ளன. இறைவன் குதிரைச் சேவகனாக வந்தது, மண் சுமந்தது ஆகிய பல நிகழ்ச்சிகள் திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகுதான் நிகழ்ந்தன. அடிகளார் பல திருக்கோயில்களுக்குச் சென்று வழிபட்ட நிகழ்ச்சிகளும் ஆங்காங்கே திருவாசகத்தில் பேசப்பெறுகின்றன.

என்றாலும், தம்முடைய வாழ்க்கையைத் திசை திருப்பிய குருநாதர் வடிவத்தை அடிகளார் மறக்கவே இல்லை. அந்தக் குருநாதர் வடிவு தில்லைக் கூத்தனின் மற்றொரு சொரூபம் என்று தெரிந்தும்கூடத், தில்லைக் கூத்தனைக் காண்பதைக் காட்டிலும் குருநாதர் வடிவைக் காண்பதில் அடிகளார் அதிகம் ஈடுபாடு கொண்டார் என்று தெரிகிறது. தில்லைக்கூத்தன் தரிசனந்தான் இறுதிப் பயன். ஆனால், அதை எவ்வாறு பெறுவது? 'காண்பார்

யார், காட்டாக்காலே' என நாவரசர் பெருமான் கூறியது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. அதாவது, திருவாதவூரராகிய மனிதருக்கு முதற்பொருளைக் குருநாதர் காட்டினாலொழியக்காணமுடியாது. ஆதலால், காட்டிய குருநாதரிடம் தலையாய ஈடுபாடு ஏற்பட்டது.

உத்தரகோசமங்கை முதலிய பல ஊர்களுக்கும் சென்று வழிபட்ட அடிகளார், அந்தந்த ஊர்களில் திருக்கோயில் கொண்டுள்ள இறைவனை வழிபட்டதுடன், எங்கேயாவது ஓர் இடத்தில் முன்னர்க் கண்ட குருநாதர் தரிசனமும் அடியார் கூட்டத் தரிசனமும் கிட்டாதா என்ற அங்கலாய்ப்புடன் தேடிவந்துள்ளார் என்பது தெரிகிறது.

திருப்பெருந்துறையில் "தில்லைக்கு வருக" என்று குருநாதர் ஆணையிட்டதால் அங்கே சென்றால் இவை இரண்டும் கிட்டும் என்ற நினைவோடு தில்லைக்கு வருகிறார். ஆனால், இவற்றில் ஒன்றுகூடக் கிட்டவில்லை. பொன்னம்பலக் கூத்தனைக் கண்டுகொண்டே, அடியார் கூட்டம் காட்ட மாட்டாயா என்று தொடங்கி, கோயில் மூத்த திருப்பதிகம் முழுவதிலும் தாம் விரும்பிய எதுவும் கிட்டவில்லை என்பதை வெளிப்படுத்தி வருந்துவதைக் காணலாம். என்ன காரணத்தாலோ தில்லைக் கூத்தன் அடிகளார் விரும்பிய இரண்டையும் தில்லையில் அருளவில்லை.

அந்த நிலையில் செத்திலாப் பத்து முதலிய பதிகங்களைப் பாடிவிட்டுத் திருக்கழுக்குன்றம் செல்கிறார். திருக்கழுக்குன்றத்தை அடைகின்றவரையில் தம்முடைய இரண்டு ஆசைகளும் அந்த ஊரில் நிறைவேறும் என்று அடிகளார் எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. எதிர் பார்த்ததை, எதிர்பார்த்த நேரத்தில் தராமல், எதிர்பாராத நேரத்தில் தருவதுதான் கூத்தனின் திருவிளையாடல் போலும்.

திருக்கழுக்குன்றம் சென்றவுடன் கழுக்குன்ற நாதனைப் பாடாமல், 'பிணக்கிலாப் பெருந்துறைப் பெருமான்!' என்று தொடங்கிப் பாடுகிறார். இறுதி அடியில் 'கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்று முடிப்பதால் பெருந்துறைப் பெருமான் என்று இப்பாடலில் குறிப்பிடுவது குருநாதரையே என்பது தெளிவாகும். இவ்வடி, அடிகளாரின் ஆசைகளின் முதற்பகுதி நிறைவேறியதை அறிவிக்கின்றது.

474 ஆம் பாடலில் 'எனைக் கயக்கவைத்து அடியார் முனே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்று பாடுவதால் அவருடைய இரண்டாவது ஆசையும் நிறைவேறியது என்பதை அறிகிறோம்.

திருப்பெருந்துறையில் தோன்றிய இந்த இரண்டு ஆசைகளும் தில்லையில் கைகூடாமல் திருக்கழுக்-குன்றத்தில் நிறைவேறியதால் இப்பதிகம் தனிச்சிறப்பைப் பெறுகிறது என்பது பெற்றாம்.

இந்த நுணுக்கத்தை அறிந்த முன்னோர் இப்பதிகத்திற்குச் 'சற்குருதரிசனம்' என்று உள்தலைப்புத் தந்தது முற்றிலும் பொருத்தமாகவே உள்ளது.

468. பிணக்கு இலாத பெருந்துறைப் பெருமான்
உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கு இலாதது ஓர் இன்பமே வரும்
துன்பமே துடைத்து எம்பிரான்
உணக்கு இலாதது ஓர் வித்து மேல்
விளையாமல் என் வினை ஒத்த பின்
கணக்கு இலாத் திருக்கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே 1

எந்த உயிரையும் வேண்டா என்று வெறுத்து ஒதுக்காமல் ஏற்றுக்கொள்ளும் இயல்புடையவன் ஆதலின், எவ்வுயிருடனும் 'பிணக்கில்லாத (பிணங்கிக்கொள்ளாத)

பெருந்துறைப் பெருமான்' என்றார். அவனுடைய நாமங்களை உள்ளன்போடு உச்சரிப்பவர்களுடைய துன்பத்தைத் துடைத்து, ஒப்புமை சொல்ல முடியாத (இணக்கிலாத) ஆனந்தத்தைத் தருவான் என்க.

இப்பாடலின் பின்னிரண்டு அடிகள் ஆழ்ந்து சிந்தித்துப் பொருள்காண வேண்டியவைகளாக உள்ளன.

திருவாதவூரர் என்ற அமைச்சருக்குப் பிராரத்துவம், சஞ்சிதம், ஆகாமியம் என்ற மூன்று வினைகளும் இருந்தன என்பதை மறுத்தற்கில்லை. ஆனால், திருப்பெருந்துறையில் குருநாதர் தரிசனம், திருவடி தீட்சை என்பவை கிடைத்த பிறகு சஞ்சிதம், பிராரத்துவம் என்ற இரண்டும் எரிக்கப் பெற்றுவிட்டன. அந்நிலையில் திருவாதவூரர் சில காலம் மாணிக்கவாசகராக மாறி வாழ்கின்றார்; தலங்கள்தோறும் செல்கிறார். இந்த நிலையில் ஆகாமியம் என்ற ஒன்று வரத்தானே செய்யும்? ஆனால், அந்த ஆகாமியம், ஏனை உயிர்களைப் பொறுத்தமட்டில் சேர்ந்து சேர்ந்து மறுபிறப்பிற்கு வித்தாக அமையும். அடிகளாரைப் பொறுத்தவரை இந்த நிலை மாறிவிடுகிறது.

குருநாதரின் திருவடி தீட்சை பெற்றவுடனேயே திருவாதவூரர் என்ற அமைச்சர் மறைந்துவிட, மணிவாசகர் என்றவர் உதயமாகிறார். அவரைப் பொறுத்தவரை அவருக்கென்று வினை எதுவும் இல்லை.

புறத்தே இருந்து காண்பவர்களுக்கு மணிவாசகர் என்ற ஒரு மனிதர், பாடல்களைப் பாடிக்கொண்டு, சிரித்து, களித்து, தேனித்து, ஆடிக்கொண்டு திரிகிறார். ஆனால், அவருடைய உடல், பொருள், ஆவி அனைத்தும் குருநாதரிடம் முன்னரே ஒப்படைக்கப்பெற்றுவிட்டன. எனவே, அவர் செய்யும் எந்தச் செயலுக்கும் அவர் பொறுப்பாளி யாகமாட்டார். இந்த நிலையில் அவர் செய்யும் எந்தச் செயலும் ஏனையோர்களைப் போல அவருக்கு ஆகாமிய வினையை உண்டாக்காது.

இந்தப் பாடல் தோன்றுகின்ற நிலை, சஞ்சிதம், பிராரத்துவம் என்ற இரண்டு வினைகளும் எரிக்கப்பெற்று, ஆகாமிய வினையும் வளர முடியாத நிலையாகும். இக்கருத்தையே திருமூலர்,

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்-
சென்னியில் வைத்த சிவனருளாலே (திருமந்திரம்: 2550)

என்ற பாடலில் விளக்கமாகக் கூறியுள்ளார். இங்குப் 'பின்னை வினையை' என்று சொல்லப்பட்டது ஆகாமியத்தையாம்.

அடிகளாரைப் பொறுத்தமட்டில் இரண்டாம் முறையாகத், திருக்கழுக்குன்றத்தில் குருதரிசனம் கிடைத்ததற்குரிய காரணத்தைப் பாடலின் பின்னிரண்டு அடிகளில் விளக்குகின்றார்.

உலர்த்தப்படாத ஈரமாகவுள்ள ஒரு விதை முளைப்புத் திறனில் பெரும்பகுதியை இழந்துவிடும். அதேபோல, சஞ்சிதம், பிராரத்துவம் என்ற இரண்டு வினைகளையும் திருவடி தீட்சையின் மூலம் எரிக்கப்பெற்ற மணிவாசகருக்கு இவ்வுலகிடை மேலும் வாழ்கின்ற காரணத்தால் ஆகாமிய வினை சேர்ந்துகொண்டிருக்கும் அல்லவா? இந்த ஆகாமிய வினை(வித்து) மேலும் பிறவியைத் தரக்கூடும் அல்லவா? அப்படித் தராமல் இருக்கவேண்டுமேயானால் இந்த வித்து உலராமல் நனைந்தே இருக்கவேண்டும்.

அடிகளாரின் ஆகாமிய வினையாகிய வித்து இறையனுபவம், இறை உணர்வு என்ற நன்னீரால் ஓயாது நனைக்கப்படுதலின் இது மற்றொரு பிறவியை விளைக்காது. எனவே, மூவகை வினைகளும் (சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம்) அற்ற நிலையில் அன்பு பிழம்பாகத் திரியும்

அடிகளாருக்குக் 'கணக்கிலாக் கோலத்தைக் கழுக்குன்றில் குருநாதர் காட்டினார்' என்க.

'உணக்கு இலாதது ஓர் வித்து மேல் விளையாமல் என் வினை ஒத்த பின்' என்பது, உலர்த்தப்படாத (ஈரமான) ஒரு விதையானது மறுபடியும் முளைக்கின்ற திறனை இழந்து நிற்பதுபோல், என்னுடைய (ஆகாமிய) வினை இறையனுபவத்தில் நனைந்தே இருத்தலின் இனியொரு பிறவியை விளைக்கும் வித்து ஆமாறு இல்லை என்கிறார்.

மானிட உடலோடு உலவிவரும் அடிகளார், செயல்கள் செய்யாமல் இருக்க முடியாது. ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு பயன் உண்டாதலின் ஆகாமியம் வந்தே தீரும். இதுவும் தம்மை ஒன்றும் செய்யவில்லை. முளைக்க முடியாத ஈரவிதை போல இது இருந்துவிட்டது என்று சொல்லுகிறாரே, அது எவ்வாறு பொருந்தும் என்ற வினாவிற்கு ஏனைய இடங்களில் விடை கூறியுள்ளார். 'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்' (திருவாச:320) என்றும் 'நான் கெட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ' (திருவாச:252) என்றும் வரும் தொடர்களால் இதற்கு விடை கூறுகிறார்.

செய்ததெல்லாம் தவமாய்விட்ட பிறகு ஆகாமிய விதை அழிகிறது. 'நான்' கெட்ட நிலையில் செய்யப்படும் செயலுக்குச் செய்தவன் பொறுப்பாவதில்லை என்பதும் தெரிகிறது.

469. பிட்டு நேர் பட மண் சுமந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே
சட்டம் நேர்பட வந்திலாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு
நாயினும் கடை ஆய வெம்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே 2

வந்தியிடம், 'வேலை செய்கிறேன்' என்று பிட்டினை வாங்கி உண்டானல்லவா? உண்ட பிட்டின் அளவிற்கு மண்ணைச் சுமந்தான். ஆக, வாங்கி உண்ட பிட்டின் அளவிற்கு உள்ள பணி, இவன் சுமந்த அளவோடு முடிந்துவிட்டது. அதனையே 'பிட்டு நேர்பட மண் சுமந்த பெருந்துறையான்' என்றார்.

ஆனால், 'பித்தன்' என்று சொல்லவேண்டிய காரணம் என்ன? சுமக்கின்ற அளவோடு அவன் கூலி முடிந்துவிட்டாலும் எடுத்த மண்ணை என்ன செய்தான்? கரை அடைக்கப் பயன்படுத்தாமல் ஆற்று வெள்ளத்துள் கொட்டினான். ஆதலின் இது பித்தர் செயல் என்பார் 'பித்தனே' என்றார்.

திருவடியைக் கண்டபொழுது, செவ்விய முறையில் அத்திருவடிக்கண் வந்து அடைக்கலம் புகாமல், தாம் போலியாகத் திருவடியில் வீழ்ந்ததாக அவர் நினைக்கிறார். இதனாலேயே 'நேர்பட வந்திலாத சழக்கனேன்' (பொய்யன்) என்று கூறுகிறார்.

நாயைவிடக் கீழ்ப்பட்டவனும், கொடிய துன்பத்தை அனுபவிப்பவனும் (வெங்கட்டன்) ஆகிய தம்மையும் ஒரு பொருளாக்கிக், கழுக்குன்றில் குருநாதர் வடிவைக் காட்டினான் என்கிறார்.

470. மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி
மலம் கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனேன் இனி
மேல் விளைவது அறிந்திலேன்
இலங்குகின்ற நின் சேவடிகள்
இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே 3

இப்பாடலில் திருப்பெருந்துறை நிகழ்ச்சியை மறுபடியும் நினைவுகூர்கிறார். ஒரே விநாடியில் தம்மைத் தனியே விட்டுவிட்டு அடியார்களோடு குருநாதர் மறைந்துவிட்டார். அவ்வாறு மறைவதற்கு முன்னர்க், குருநாதர் தம் திருவடியை வைப்பதற்கு அடிகளாரின் தலை இடமாக அமைந்தது.

அந்தத் திருவடி சம்பந்தம் பெறுமுன்னர்த் திருவாதவூரர் அஞ்ஞானமாகிய மயக்கத்தில் ஆழ்ந்திருந்தார். 'இனி என்னே உய்யுமாறு' என்று அஞ்சியதால் அவர் கண்ணீர் பெருகிற்று.

பெருந்துறை நாயகன் வாதவூரரின் கண்ணீரை மாற்றி, அவருடைய மயக்கத்தைத் தெளிவித்து, ஒரே விநாடியில் அவருடைய மலங்களைச் சுட்டொரித்தான் என்கிறார். அவ்வளவு செய்தும் வினைவலையில் அகப்பட்டவரும் மேலே என்ன செய்வது என்று அறியாதவருமாகிய அவர், அடியார் கூட்டத்தோடு உடன் செல்லாமல் விலகி (விலங்கினேன்) நின்றுவிட்டார்.

குருநாதர் மறைந்தபிறகு அடிகளார் செய்வதறியாது திகைக்கின்றார்.

இந்த நிலையில் புதியதொரு கலக்கம் அவரை ஆட்கொள்கிறது. திருப்பெருந்துறையில் குருநாதர், திருவடியை வைப்பதற்கு அடிகளாருடைய தலை மிகப் பொருத்தமான ஆசனப்பலகையாக இருந்தது. ஆனால், இப்பொழுது குருநாதரிடமிருந்து இவர் விலகிவிட்டதால், குருநாதரின் திருவடிகளைத் தாங்கும் பேறு தம் தலைக்கு இல்லாமல் போய்விட்டதே என்று கருதிக் 'கலங்கினேன்' என்கிறார்.

அவ்வாறு கலங்கியிருந்த அவரை, 'கலங்கத் தேவையில்லை, திருவடி வைப்பதற்கு வேறு இடமுமுண்டு'

என்று சொல்பவர்போலத் திருக்கழுக்குன்றிலே வந்து குருநாதர்தம் கோலத்தைக் காட்டினார் என்கிறார்.

471. பூண் ஒணாதது ஓர் அன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாண் ஒணாதது ஓர் நாணம் எய்தி
நடுக் கடலுள் அழுந்தி நான்
பேண் ஒணாத பெருந்துறைப் பெரும்
தோணி பற்றி உகைத்தலும்
காண் ஒணாத் திருக்கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே 4

சென்ற பாடலைப் போன்று இப்பாடலும் எளிதாகப் பொருள் கொள்ள முடியாதபடி சொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

பூணொணாததோர் அன்பு, நாணொணாததோர் நாணம், பேணொணாத பெருந்துறைத் தோணி என்ற மூன்று தொடர்களும் தம் அளவிற்குப் பொருந்தாத என்ற பொருளையே தந்துநிற்கின்றன. பூணொணாததோர் அன்பு என்பது தம்முடைய நிலைமைக்கு ஏற்றுக்கொண்டு பயன்படுத்த முடியாத அன்பு என்பதாம். நாணொணாதோர் நாணம் என்பது சராசரி மனிதனுக்கு ஏற்படுகின்ற நாணத்தைக் காட்டிலும் தாங்க முடியாத பெருநாணம் என்பதாம். பேணொணாத பெருந்துறைத் தோணி என்பது ஒரு தனிமனிதன் சாதாரணமாகத் தன்னுடைய முயற்சியால்மட்டும் வைத்துக் காப்பாற்ற முடியாத பெருந்தோணி என்ற பொருளைத் தந்துநிற்கின்றது.

'நின் திருவடிக்கண் செலுத்த வேண்டிய அன்பின் எல்லை எது என்று அறிந்திருந்தும் அத்தகைய அன்பை என்னுள் தாங்கி உன்பால் செலுத்தமுடியாமையால்

அதற்குத் தகுதியில்லாத என் சிறிய அன்பை (பூணொணாததோர் அன்பு) ஏற்றுக்கொண்டு (பூண்டு) நாள்தோறும் எனக்குத் தண்ணளி செய்ததை விடாமல் போற்றி நின்றேன். ஆனாலும் அந்தத் தண்ணளிக்கு நான் தகுதியற்றவன் என்ற நினைவு என்னை வந்து உறுத்தியதால், வெட்கமும் துயரமும் கலந்து, பெருங்கடலுள் மூழ்கிக்கொண்டிருந்த நான், பெருந்துறைத் தோணி என்பதைப் பற்றிக்கொண்டு என் பயணத்தைத் தொடரலாயினேன்.

'நின் தண்ணளிக்கு நான் தகுதியற்றவன் என்ற எண்ணம் என்னை உறுத்தியதுபோல, இந்தப் பெருந்துறைப் பெருந்தோணியும் என்னால் வைத்துக் காப்பாற்ற முடியாதது என்ற அச்சமும் என்னை வெருட்டலாயிற்று.

'இந்த அச்சமும் அந்த நாணமும் என்னை விட்டு நீங்க வேண்டுமாயின் இவற்றைப் போக்கக் குருநாதர் வடிவில் நீயே வந்து என்னைக் காக்க வேண்டும். இவ்வாறு வேண்டிக்கொண்டிருந்த என் எண்ணம் நிறைவேற எளிதாகக் காணமுடியாத அப்பெருந்துறைத் திருக் கோலத்தைக் கழுக்குன்றில் வந்து காட்டினாய்' என்றவாறு.

472. கோல மேனி வராகமே குணம்
ஆம் பெருந்துறைக் கொண்டலே
சீலம் ஏதும் அறிந்திலாத என்
சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமே-கரி ஆக நான் உனை
நச்சி நச்சிட வந்திடும்
காலமே உனை ஓத நீ வந்து
காட்டினாய்' கழுக்குன்றிலே 5

பன்றி என்ற விலங்கு பார்ப்பதற்கு அருவருப்பைத் தோற்றுவிக்கும் வடிவைக் கொண்டதாகும். ஆனால்,

இறைவனே அவ்வடிவை ஏற்றுக்கொண்டபொழுது அந்தப் பன்றியின் உடம்பு (மேனி) அழகு (கோலம்) நிறைந்ததாய் அமைந்துவிட்டது. இது மதுரையில் தாயை இழந்த பன்றிக் குட்டிகளுக்குச் சொக்கன் பால் ஊட்டத் தானே தாய்ப் பன்றி வடிவுடன் வந்து அருள்செய்தான் என்ற திருவிளையாடல் கதையை அடிப்படையாகக் கொண்டது. குணமாம் பெருந்துறைக் கொண்டலே என்பது இறைவன் உயிர்களுக்குக் கருணையை வாரி வழங்கும் கொண்டல் என்ற பொருளைத் தரும். அக் கொண்டலை இவர் கண்டது திருப்பெருந்துறையில் ஆதலின் பெருந்துறைக் கொண்டல் என்றார். சாதாரணக் கொண்டல் மழையை மட்டும் அளிக்கும். ஆனால், இப்பெருந்துறைக் கொண்டல், அருளையே வடிவாகக் கொண்டிருத்தலின் அதனையே வழங்கிற்று என்ற கருத்துப்பட 'குணமாம் கொண்டலே' என்றார்.

சீலமேதும் அறிந்திலாத என் சிந்தை வைத்த சிகாமணி என்பது எவ்வித நற்பண்பும் (சீலமும்) இல்லாத என் சிந்தையினிடத்துத் திருவடிகள் இரண்டையும் தங்குமாறு வைத்த முடிமணி போன்றவனே என்ற பொருளைத் தரும்.

ஞாலமே கரியாக என்பது அடுத்துள்ள தொடராகும். யான் உன்னையன்றிப் பிறிதொன்றையும் விரும்பாமல் உன் திருவடியையே நச்சினேன் என்பதற்கு இவ்வுலகத்தில் உள்ள அனைத்தும் சான்றாக (கரியாக) உள்ளன என்று கொள்க. 'நச்சி நச்சிட' என்பது ஓயாது மீட்டும் மீட்டும் என் விருப்பத்தை தெரிவித்து 'அழைக்க' என்ற பொருளைத் தருவதாகும். அவனை அவ்வாறு அழைக்கத் தொடங்கினால் அவன் வந்தே தீருவான் என்ற கருத்தை அடிகளாருக்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவராகிய நாவரசர் பெருமான் 'சிவன் எனும் நாமம்' (திருமுறை 4:112-9) என்று தொடங்கும் பாடலில் 'நாமம் பிடித்துத் திரிந்து அழைத்தால் இவன் எனைப்

பன்னாள் அழைப்பு ஒழியான் என்று எதிர்ப்படுமே' என்ற தொடரில் மிக அழகாக விளக்கியுள்ளார். அக்கருத்தை அடிகளார் 'நச்சி நச்சிட வந்திடும் காலமே' என்கிறார். 'உனை நச்சி நச்சிட' என்பதில் உள்ள 'உனை' என்பதற்குக் காலமே என்பது பொருளாகும். இறைவன் காலதத்துவமாக உள்ளான் என்பதை மிக விரிவாக "ஞாலமே விசும்பே இவை வந்து போம் காலமே உனை என்று கொல் காண்பதே" (திருவாசகம்:47) என்று முன்னரும் பாடியுள்ளார் அல்லவா? அதனையே இங்கு மீண்டும் "காலமே உனை ஓத" என்றார்.

குருநாதர் வடிவம் பருப்பொருளாக ஊனக் கண்ணால் காணக்கூடிய முறையில் அமைந்திருந்தது. அதனைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அது மறைந்து அகக்கண்ணால் மட்டும் காணக்கூடிய உமையொரு பாகன் வடிவம் காட்சி தந்தது. சற்று நேரத்தில் அதுவும் மறைந்து தில்லைக் கூத்தனின் வடிவம் காட்சி தந்தது. இந்த முறைவைப்பிலும் ஒரு சிறப்பு இருத்தலைக் கவனித்தல் வேண்டும்.

அமைதியாக இருந்த குருநாதர் வடிவம் பருப்பொருளால் ஆயது. அது மேலும் நுண்மை பெற்று அசைதல் இல்லாத உமையொரு பாகனாகக் காட்சி தந்தது. இப்போது அது, மேலும் நுண்மை பெற்றுக் குரு, உமையொருபாகன் என்ற இரண்டு வடிவுகட்கும் அப்பாற்பட்டு மூலமாய் இருப்பது- ஓயாது சலித்துக் கொண்டிருக்கும் தில்லைக் கூத்தன் வடிவே என்பதை அடிகளார் உணருமாறு அந்த மூன்று காட்சிகளும் கிடைத்தன.

சலித்துக்கொண்டிருக்கும் தில்லைக் கூத்தன் வடிவம் தான் முடிவானது (ultimate) என்று நினைப்பவர்கட்கு அதை அடுத்தும் ஒன்று உள்ளது என்பதைத் தெரிவிக்கவே பருப்பொருள்தன்மை, நுண்பொருள்தன்மை என்ற

இரண்டையும் கடந்து நிற்கும் கால தத்துவத்தைக் கூறினார். சலித்துக் கொண்டேயிருந்தாலும் தில்லைக் கூத்தனுக்கு ஆடல் வடிவம் பேசப்பெறுகிறது அல்லவா? குணம், குறி, நாம, ரூபம் ஆகிய அனைத்தையும் கடந்து நிற்கும் அப்பொருள், வடிவு கடந்தது என்பதை அறிவிக்கவே கால தத்துவத்தைக் கூறினார். நிலைபெறாது சலித்துக் கொண்டேயிருத்தல் கூத்தனுக்கும் கால தத்துவத்திற்கும் பொதுத்தன்மையாகும். அந்த வடிவத்தையும் விட்டு ஓயாது சலித்துக்கொண்டே யிருக்கும் ஒரே தன்மை கால தத்துவத்திற்கு மட்டுமே உரியது.

இந்த நுண்மையான கருத்துக்களையெல்லாம் அடக்கிக் 'காலமே' என்றார். கால தத்துவமாக இருக்கின்ற அவனை விடாது ஓதிக்கொண்டிருக்க அந்தக் கால தத்துவம் நிகழ்காலத் தத்துவமாய்க் குருநாதர் என்ற பருவடிவை மேற்கொண்டு, பெருந்துறையிலும் கழுக்குன்றிலும் காட்சி தந்தது என்கிறார் அடிகளார்.

473. பேதம் இல்லது ஓர் கற்பு அளித்த
பெருந்துறைப் பெரு வெள்ளமே
ஏதமே பல பேச நீ எனை
ஏதிலார் முனம் என் செய்தாய்
சாதல் சாதல் பொல்லாமை அற்ற
தனிச் சரண் சரண் ஆம் எனக்
காதலால் உனை ஓத நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே 6

இப்பாடலின் முதலடி மிக நுணுக்கமான ஒரு கருத்தை வெளியிடுகிறது. கற்பு என்பது கல்வி என்ற பொருளைத் தரும். கல்வி சாதாரணமாகத் தொடங்கி, ஆழமாகச் செல்லச் செல்லப் பொருள்களின் இடையே உள்ள வேறுபாடுபற்றிய அறிவு விரிந்துகொண்டே செல்லும். கல்வியறிவு இல்லாதவர்களுக்கு மாக்கல், கருங்கல்,

கூழாங்கல் முதலிய கற்கள் அனைத்தும் கல் என்ற ஒரே பெயரில் அடங்கும். ஆனால், கல்வியறிவு மிக மிக, இந்த மூன்று தொகுப்பினுள் அடங்கும் கற்களில், முப்பதுக்கும் மேற்பட்ட உள்வேறுபாடுடைய பல கற்கள் இப்பொதுப் பெயரில் அடங்கும் என்பதை அறியமுடியும். இதன் எதிராகச் சிவஞானம் அல்லது அருள்ஞானம் என்ற கல்வியைப் பெறுபவர் உலகத்தில் உள்ள பொருள்களை வேறுபிரித்துக் காண்பதில்லை. அவர்கள் பார்வையில் பிரபஞ்சத்தில் காணப்படும் பல்லாயிரக்கணக்கான பொருள்களும் இறைவன் என்ற ஒரே பொருளின் பல்வேறு வடிவங்கள் என்றே காட்சியளிக்கும். இதனையே தாயுமானவப் பெருந்தகை 'பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே' (தாயுமான: பரிபூரணானந்தம்) என்று பாடியுள்ளார். வேறுபாட்டை அதிகப்படுத்தி அந்த வேறுபாட்டை அறியுமாறு செய்வது அபர ஞானக் கல்வி. இதன் எதிராக, புற வேறுபாட்டினிடையே உள்ள அக ஒருமைப்பாட்டைக் காணுமாறு செய்வது பரஞானக் கல்வி. இக்கல்வியைப் பெருந்துறை நாயகன் தமக்கு அளித்தான் என்பதைப் 'பேதம் இல்லதொர் கற்பனித்த பெருந்துறைப் பெருவெள்ளமே' என்கிறார். வேறுபாட்டைப் போக்கும் அந்த சிவஞானத்தைத் தந்தவரை எத்தனையோ சொற்களால் கூறலாமேனும் 'பெருவெள்ளமே' என்று அடிகளார் கூறுவது சிந்தனைக்குரியதாகும். பெரு வெள்ளத்தில் எத்தகைய வேறுபாடும் தெரிவதில்லை.

இரண்டாவது அடி ஒரு நுண்மையான பொருளைக் குறிக்கிறது. இவ்வடியைப் பின்வருமாறு கொண்டு கூட்டுக. 'ஏதிலார் ஏதமே பல பேச நீ முனம் எனை என் செய்தாய்' இவ்வரியிலுள்ள 'முனம்' என்ற சொல் இப்பாடல் பாடுதற்குச் சில காலம் முன்னர் நிகழ்ந்த திருப்பெருந்துறை நிகழ்ச்சியைக் குறிக்கின்றது.

அடுத்துள்ளது 'ஏதிலார் ஏதமே பலபேச' என்பதாகும். ஏதிலார் என்ற சொல் அயலார், பகைவர் என்ற இரண்டு பொருள்களையும் உடையதாகும். அமைச்சராக இருந்த ஒருவருக்குப் பகைவர் மிகுதியாக இருப்பர் என்பதில் ஐயமில்லை. அப்படிப்பட்டவர்கள் அமைச்சர் நல்லது செய்தாலும் அதில் ஏதோ ஒரு குற்றம் காண முற்படுவர். எனவே, ஏதிலார் ஆகிய பகைவர் ஏதமே பல பேச என்பது பண்டைய நிலையைக் குறித்ததாயிற்று. அப்படியானால், எல்லாவற்றையும் துறந்து ஆண்டியாகத் திரியும் இவரை அயலாராயினும் பகைவராயினும் குற்றம் பேச என்ன நிகழ்ந்தது என்ற வினாவை எழுப்பினால், உலகியல்பற்றிய சுவையான விடை கிடைக்கும்.

இப்பொழுது பகைவர், அயலார் என்ற இரு தரத்தாரும் இவர்மாட்டுக் குற்றம் சாட்டிப் பழி தூற்றுகின்றனர். அதுவும் இரு வகைப்படும்.

அமைச்சராக இருந்தபொழுது இருந்த பகைவர்கள் ஆண்டியான இவரைப் பார்த்து 'எங்களுக்கு அப்பொழுதே தெரியும், இந்த அமைச்சர் போகிற போக்கில் இவர் ஆண்டியாகத்தான் முடிவார்' என்று தம் பகைமையை வெளிப்படுத்தினர். இதன் எதிராக, இவர்மாட்டுப் பகைமையோ நட்போ பாராட்டாமல் அயலாராக இருந்தவர்களும் இப்போது குற்றம் சாட்டுகிறார்கள். அமைச்சராக இருந்து, பலருக்கும் நன்மை செய்து நாட்டை நல்வழியில் செலுத்தவேண்டிய இவர், பதவியைத் துறந்து ஆண்டி வேடம் கொண்டது மிகத் தவறு என்று அவர்களும் குற்றம் சாட்டுகிறார்கள்.

'ஏதிலார் ஏதமே பல பேச' என்பதன் பொருள் இதுவேயாகும். இவற்றை எடுத்துக்கூறிய அடிகளார், 'ஐயனே! பகைவர், அயலார் என்ற இரு தரத்தாரும் என்மேல் குற்றம் சுமத்தும் அளவிற்குத் திருப்பெருந்துறை

யில் நீ எனை என்ன ஐயா செய்தாய்' என்று வினாவுகின்ற முறையில் முனம் என் செய்தாய்?' என்று கேட்கிறார்.

'இந்நிலையில் இப்படியே வாழ்ந்து சாதாரண மனிதர்களைப் போல இறந்துவிடுதல் திருப்பெருந்துறையில் உன் அருளைத் தந்த உனக்குப் பொல்லாமையைத் தரும்' என்ற கருத்தில் 'உன் திருநாமத்தையே ஓதி, நீயே சரணம் என்றிருக்கும் என் எண்ணம் ஈடேறும் வகையில் கழுக்குன்றில் உன் கோலத்தை நீ வந்து காட்டினாய்' என்கிறார்.

474. இயக்கிமார் அறுபத்து நால்வரை
எண் குணம் செய்த ஈசனே
மயக்கம் ஆயது ஓர் மும் மலப் பழ
வல் வினைக்குள் அழுந்தவும்
துயக்கு அறுத்து எனை ஆண்டுகொண்டு நின்
தூ மலர்க் கழல் தந்து எனைக்
கயக்க வைத்து அடியார் முனே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே 7

அடிகளார் திருஉத்தரகோசமங்கையிடத்துக் கொண்டிருந்த பெரும் பற்று இதுவரை பல பாடல்களில் பேசப்பெற்றுள்ளதைப் பார்த்தோம். அவ்வூரில் நிகழ்ந்ததாக அப்பகுதியில் வழங்கும் ஒரு கதையைப் பாடலின் முதலடியில் அடிகளார் எடுத்துப் பேசுகிறார். யக்ஷிணிகள் என்பவர்கள் யக்ஷர் என்ற தேவ கணத்தைச் சார்ந்த பெண்பாலர் ஆவர். அவர்களுள் அறுபத்து நான்கு பேர்களுக்கு ஞானோபதேசம் செய்து, தூய உடம்பினராதல் முதலிய எட்டுக் குணங்களையும் பெறுமாறு செய்தான் ஈசன் என்பது அந்தக் கதை. அடிகளார் காலத்தில் வழங்கிய இக்கதை பிற்காலத்தில் எழுந்த திருஉத்தர கோசமங்கைப் புராணத்திலும் இடம் பெற்றுள்ளது.

'மயக்கத்தைத் தரும் அஞ்ஞானத்தைப் போக்கினாய்; பழமையான மும்மலங்களின் காரியமாகத் தோன்றும் வினைகளுக்குள் அழுந்தும் என் மெலிவைப் போக்கினாய்; என்னை ஆட்கொள்ளவும் செய்தாய். திருப்பெருந்துறையில் தூய மலர் போன்ற உன் திருவடிகளைத் தந்தாய். திடீரென்று நிகழ்ந்த இப்பெரும் மாற்றங்களினால் மயங்கி இருந்த என் மயக்கத்தைப் போக்கி (கயக்கு அறுத்து) அடியார்களுடன் வந்து பெருந்துறையில் காட்சி தந்தாய்; அதே காட்சியைக் கழுக்குன்றில் நல்கினாய்' என்க.

திருப்பெருந்துறையிலிருந்து புறப்பட்டது முதல் அடிகளாரின் மனத்தில் ஓங்கி யிருந்தது ஒரே ஒரு கவலைதான். குருநாதர் தரிசனத்திற்குச் சமமாக அவருடைய மனத்தை ஆட்கொண்டது அங்குக் கண்ட அடியார் கூட்டத் தரிசனமாகும். மறுபடியும் அதனைக் காணவேண்டும் என்பதே அந்தக் கவலையாகும். 'அடியார் கூட்டம் காட்டாயேல் செத்தே போனால் சிரியாரோ' என்றும் 'அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்' (திருவாச:378) என்றும் வரும் பகுதிகளில் அவர் மனத்தில் இருந்த பெருங்கவலையை அறிவுறுத்துகிறார்.

திருக்கழுக்குன்றத்தில் அவருடைய இரண்டு பெரு விருப்பங்களும் நிறைவேறின. குருநாதரின் கோலத்தைக் காணமுடிந்தது என்பதைக் 'கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்ற பகுதியிலும் 'அடியார்முனே வந்து காட்டினாய்' என்பதால் பெருந்துறையில் கண்ட அந்த அடியார் கூட்டத்தை மறுபடியும் காண முடிந்தது என்பதையும் கூறினாராயிற்று.

ॐ ॐ ॐ

31. கண்ட பத்து

[நிருத்த தரிசனம்]

இப்பதிகத்தின் பெயர் கண்ட பத்து என்று கொடுக்கப்பட்டதின் காரணம் ஒவ்வொரு பாடலும் கண்டேனே என்று முடிவதலாகும்.

அணிகொள் தில்லை கண்டேனே, குலாவுதில்லை கண்டேனே, விளங்குதில்லை கண்டேனே, தொழுதேத்தும் தில்லை கண்டேனே என்றெல்லாம் வருவதால் தில்லையில் தில்லைக் கூத்தன் தரிசனத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் அந்த மனநிலையில் பாடப்பெற்றவை இவை என்று கொள்வதில் எவ்விதத் தவறும் இல்லை.

நிருத்த தரிசனம் என்ற உள்தலைப்பு பொருத்தமானதே என்று கூறலாம்.

475. இந்திரிய வயம் மயங்கி இறப்பதற்கே காரணம் ஆய்
அந்தரமே திரிந்து போய் அரு நரகில் வீழ்வேனைச்
சிந்தை தனைத் தெளிவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட
அந்தம் இலா ஆனந்தம் அணி கொள் தில்லை கண்டேனே
1

மனித உடம்பெடுத்தவர்கள் அனைவரும் ஐந்து இந்திரியங்களின் ஆளுகைக்கு உட்பட்டவர்களே ஆவர். ஒரு சிலர் இந்தப் பொது இயல்பிலிருந்து நீங்கி, இந்திரியங்களில் மயங்காமல் மேலே செல்கின்றனர் என்பது உண்மைதான். ஆனால், இவர்கள் புறநடையே தவிரச் சராசரி மனிதர்கள் அல்லர்.

அடிகளார் தம்மை ஒரு சராசரி மனிதராகக் கருதிக்கொண்டு அவர்கள் அடையும் முடிவைத் தம்மேல் ஏற்றிக்கொண்டு பேசுகிறார். இந்திரிய வயம் மயங்கியவர்கள் மரணத்தையே முடிவாக உடையவர்கள். இந்த மரணத்துக்குக் காரணமாய் அமைவது அந்த இந்திரியங்களுக்கு அடிமைப்படுதலே ஆகும்.

அவ்வாறு அடிமைப்பட்டு இறப்பவர்கள் அந்தரமே சென்று (எமனுலகம் சென்று) இறுதியாக அருநரகில் வீழ்கின்றனர். பிறப்பு இறப்பு என்பவை சாதாரண, சராசரி மனிதர்களின் வாழ்வின் தொடக்கமும் இறுதியும் ஆகும்.

நூறு தாமரைப் பூக்கள் நீர்மட்டத்திலேயே நின்றுவிட, ஒரு தாமரைப்பூமட்டும் நீர்மட்டத்தைவிட ஓர் அடி மேலோங்கி வளர்ந்திருப்பதைக் காண்கிறோம். சராசரி மனிதர்களைப் போல அருநரகில் விழும் நிலையில் இருந்த அடிகளாருக்குத் திருப்பெருந்துறைக் குருநாதர் இரண்டு காரியங்களைச் செய்தார். அந்த இரண்டு காரியங்கள் 'சிவம் ஆக்குதலும்', 'ஆண்டு கொள்ளுதலும்' ஆகும். இவை முன்பின்னாகப் பேசப்பெற்றிருப்பினும் நடை பெற்றதைச் சிந்திக்கும்போது ஆண்டது முதலிலும் சிவமாக்குதல் இரண்டாவதாகவும் நடைபெற்றமையை அறியமுடிகிறது.

குருநாதர் தம் கண்களிலிருந்து புறப்பட்ட அருளை அடிகளார்மேல் பாய்ச்சியதால் திருவாதவூரர் பெரு மாறுதலை அடைந்தார். ஆட்கொள்ளுதல் நயனதீட்சை மூலம் நடைபெற்றது என்று நினைப்பதில் தவறில்லை.

அடுத்தபடியாக உள்ளது 'சிவம் ஆக்குதல்' ஆகும். 'அப்பொடு சேர்ந்த உப்பேபோல'க் குருநாதரின் திருவடி சம்பந்தம் பெற்றவுடன் திருவாதவூரர் சிவமாகினார். நயன தீட்சையால் திருவாதவூரர் என்ற மனிதருக்குரிய கருவி

கரணங்கள் பசுத்தன்மையினின்று நீங்கிப் பதி கரணங்களாகவும் மாறின.

அடுத்துத் திருவடி சம்பந்தம் கிடைத்ததால், பதி கரணங்களோடு கூடிய ஒரு புதிய மனிதர் மணிவாசகர் என்ற பெயரில் உதயமானார். புதிதாகத் தோன்றிய மணிவாசகர் யார்? அதற்கு விடையை அவரே கூறுகிறார். 'தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை' (திருவாச:397) என்று அவரே கூறியுள்ளதால், புதிதாகத் தோன்றிய மணிவாசகர் என்ற மனிதரில் பழைய திருவாதவூரருக்குரிய இயல்புகள் எதுவும் இல்லாமல் சிவமாகவே மாறிவிட்ட நிலை பேசப்பெறுகிறது. இந்த அருங்கருத்தையே 'சிவமாக்கி எனை ஆண்ட' என்று பாடுகிறார்.

பழைய திருவாதவூரருக்கும் புதிய மணிவாசகருக்கும் பொதுத்தன்மை ஏதேனும் உண்டா என்று சிந்தித்தால், ஓர் உண்மை விளங்கும். கருவி கரணங்களுக்கு இடமாகிய இந்த உடம்பு இருவருக்கும் ஒன்றேதான். அதுதவிரப் பழைய பொறி, புலன்களுக்கும் புதிய பொறி புலன்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. பழையவை பசு கரணங்கள், புதியவை பதி கரணங்கள். இது எப்படித் தெரிகிறது?

பழைய கருவி கரணங்களோடு கூடிய திருவாதவூரர் இந்திரியவயம் மயங்கி, அருநரகை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். திருப்பெருந்துறையில் குருநாதர் அவரை இடைமறித்து அவருடைய கருவி கரணங்களையெல்லாம் மாற்றி, ஆண்டு, சிவமாகவே ஆக்கிவிட்டார். புதிதாகத் தோன்றிய மணிவாசகருக்குப் புதிதாகக் கிடைத்தவை பதி கரணங்கள் ஆதலால் பசுகரணங்கள் காணுகின்ற நடராஜ விக்கிரகத்திற்குப் பதிலாகத் தில்லைக் கூத்தனை ஆனந்த வடிவினனாக உணரும் வாய்ப்புக் கிடைத்தது.

'கண்டேனே' என்று அடிகளார் கூறியிருப்பினும் ஆனந்தத்தை உணர்ந்தார், அனுபவித்தார் என்பதே பொருள். அதனையே 'சிவமாக்கி எனை ஆண்ட அந்தமிலா ஆனந்தம்' என்று பாடுகிறார்.

ஆனந்தம் என்பது வடிவமற்ற மிகமிக நுண்மையான ஓர் உணர்வாகும். அது புறமனம், அகமனம், மேல்சித்தம் ஆகியவற்றைக் கடந்து அடிச்சித்தத்தின் ஆழத்தில் தோன்றும் ஓர் உணர்வாகும். இந்த உணர்விற்குப் பருவடிவு எதுவுமில்லை.

இந்த ஆனந்தத்தைக் குருநாதர்தான் தந்தார் என்று அடிகளார் நினைத்துக்கொண்டிருக்கும்பொழுதே குருநாதர் மறைந்துவிட்டார். அந்த ஆனந்தமும் வடியத் தொடங்கி விட்டது. இந்த நிலையில், தம் சித்தத்தில் தோன்றிய ஆனந்தத்தையும் புறத்தே காட்சிதந்த குருநாதரையும் அடிகளார் வேறுபடுத்திக் காணவில்லை. குருநாதரே, ஆனந்தம்; ஆனந்தமே குருநாதர் என்ற முடிவுடன் இருந்தமையால்தான் அந்த ஆனந்தம் வேண்டும் என்று நினையாமல் குருநாதர் தரிசனம் மீட்டும் கிடைக்க வேண்டும் என்று விரும்பி ஊரூராகச் சுற்றி வந்தார். அவரையும் அறியாமல் ஆனந்தமாகிய நுண்பொருளும், குருநாதர் என்ற பருவடிவும் ஒன்றாகவே இணைந்து விட்டன. இந்த மனநிலையில் தில்லைக்கு வந்த அடிகளார் கூத்தனைக் கண்டார். அங்கே ஓர் அற்புதம் நிகழ்கின்றது. ஒரு விநாடி கூத்தன் காட்சி தருகிறான்; அடுத்த விநாடி குருநாதர் காட்சி தருகிறார்; அடுத்த விநாடி பரு வடிவுடைய குருநாதரும், கூத்தனும் மறைந்து ஆனந்தம் சித்தத்தில் நிரம்பி நிற்கின்றது. இந்த மூன்றும் ஒன்றே என்று கருதியதால்தான் 'அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே' என்று பாடுகிறார்.

476. வினைப் பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச் சிறிதும் நினையாதே தளர்வு எய்திக் கிடப்பேனை
எனைப் பெரிதும் ஆட்கொண்டு என் பிறப்பு அறுத்த
இணை இலியை
அனைத்து உலகும் தொழும் தில்லை அம்பலத்தே
கண்டேனே 2

வினையின் பயனாகக் கிடைத்த இந்தப் பிறவியில் அகப்பட்டதால், எஞ்சியது வேதனை ஒன்றுதான். அந்த வேதனையில் ஆழ்ந்துள்ள காரணத்தால், அதனைப் போக்குபவனைப் பற்றி ஒரு விநாடியும் நினையாமல், அந்த வேதனையைப்பற்றியே மறுபடியும் மறுபடியும் நினைந்து அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அத்தகைய அடிகளாரை, பெருந்துறைக் குருநாதர், தம்மை அவர் நினைக்க வில்லையே என்றுகூடக் கருதாமல் பிடித்து ஆட்கொண்டு, போக்குதற்கு அரிய பிறவிப் பிணியையும் போக்கி அருளினார். அந்த உபகாரத்தை நினைந்து மறுபடியும் அவரைக் காணவேண்டும் என்ற ஆதங்கத்தோடு ஊரூராகத் திரிந்த அடிகளாருக்குத் தில்லையில் கிடைத்த கூத்தன் காட்சி குருநாதரையே நினைவூட்டியதால் 'அனைத்துலகும் தொழும் தில்லை அம்பலத்தே கண்டேனே' என்று பாடுகிறார்.

477. உருத் தெரியாக் காலத்தே உள் புகுந்து என் உளம்
மன்னிக்
கருத்திருத்தி ஊன் புக்குக் கருணையினால்
ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாய் அடியேன் அணி கொள் தில்லை
கண்டேனே 3

சுக்கிலமும் சுரோணிதமும் ஒன்று கலந்து ஒரு வடிவைப் பெருவதற்கு முன்னரேகூட அவற்றினுள்

இருக்கும், உயிரணுக்களுக்கு உள்ளேயே உள்புகுந்தான் என்பதையே 'உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்து என் உளம் மன்னி' என்றார்.

உள்ளே புகுந்தவன் முதன்முதலில் வடிவெடுக்கும் தலையினுள் தங்கினானா? அல்லது வேறு எங்கே தங்கினான்? என்ற வினாக்களுக்கு விடைகூறுவார் போல, வடிவமே இல்லாத உள்ளத்தில் மன்னி என்றார். மனமும் மனத்தை அடுத்துள்ள சித்தமும் பருவடிவுடையவையல்ல. ஆதலால்தான் இன்றைய விஞ்ஞானம் உடலினுள் மனம் எங்கேயுள்ளது? என்று கூறமுடியாமல் திணறுகிறது.

மனம், சித்தம், புத்தி அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் நான்குமே பருவடிவில்லாத நுண்மையான பொருட்கள் என்று அறிந்திருந்தனர் நம்முன்னோர். அதனையே அடிகளார் உள்புகுந்து உளம் மன்னி என்றார்.

தான் உள்ளே புகுந்த காரணத்தால் போலும், அந்தக் கரு, இடையே அழிந்துவிடாமல் அதனை நன்கு வளருமாறு திருத்தி ஆண்டுகொண்டான். இவ்வாறு கூறும்பொழுதேகூட அவன் உள்ளே புகுந்ததற்கும், கரு நன்கு வளருமாறு செய்தவதற்கும் காரணம் அவனுடைய கருணையே என்பதை நன்றிப் பெருக்கோடு 'கருத் திருத்தி கருணையினால் ஆண்டு கொண்ட' என்று பாடுகிறார்.

திருவாசகத்தில் இதுவரைக் காணப்பெறாத ஒரு மாபெரும் உண்மை இப்பாடலில் வெளிப்படுகிறது, அடிகளாரின் வரலாறு செம்மையாக எந்த நூலிலும் கூறப்பெறவில்லை. இந்த நிலையில் அமைச்சராக இருந்த அவர், மாபெரும் கவிஞர், மாபெரும் கல்விமான், மாபெரும் அறிவாளி என்ற முறையில் வாழ்ந்த சராசரி மனிதர் என்ற எண்ணத்திலேயே நம் போன்றவர்கள் நினைத்துவந்தோம். அந்த அடிப்படையில்தான் வழியோடு

சென்ற அவரை இழுத்துப் பிடித்து அருள் செய்தார் என்றும், அதற்குக் காரணம் அவருடைய அருளேயேன்றி வேறெதுவுமில்லை என்றும்தான் நினைத்தும் கூறியும் வந்தோம். இந்த எண்ணத்தை வலுப்படுத்தும் வகையில் தான் இதுவரையில் பார்த்த பல திருவாசகப் பாடல்கள் நம்மை நடத்திச்சென்றன. தம்மைப்பற்றிய சில உண்மைகளை- இதுவரை அவரே காணாத பல உண்மைகளை இப்பாடலில் பேசுகிறார்.

திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பின்னும் தம்மை 'நாயினும் கடையேன்' என்றும் 'ஆள்வாரிலிமாடு' என்றும் பலப்பல இடங்களில் பேசிக்கொண்டுவந்த அடிகளார். திடீரென்று 'உருத்தெரியா' என்று தொடங்கும் இப்பாடலில் தம்முடைய பழமைபற்றிப் பேசுவதும் வியப்பை அளிக்கின்றது. பழமையைத் திரும்பிப்பார்த்து நடந்ததை அப்படியே காணும் ஆற்றல் (hindsight) அடிகளாருக்குத் திடீரென்று தோன்றி மறைந்திருக்க வேண்டும். தோன்றிய அந்த ஆற்றல், நிலையாக நின்றிருந்தால் மேற்கொண்டு திருவாசகப் பாடல்களைப் பாடியிருக்க மாட்டார்; ஆனால், அத்தகைய சொற்களும் கருத்தும் மேலும் பல பாடல்களில் வருதலால் இதுபற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது.

ஒருவேளை தமக்கு உய்கதியே இல்லை என்ற ஏக்கம் ஆழ்மனத்தின் அடித்தளத்தில் தோன்றியிருத்தல் கூடுமோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

இத்தகைய ஒரு மனப்பான்மை மேலும் வளர்ந்திருக்குமேயானால் மனத்தென்புடன் திருவாசகம் பாடியிருக்க முடியாது. எனவே, ஆழமான துயரம், மனச் சலனம் ஏற்படுகின்ற நேரத்தில் அந்த மனத்தைத் தூக்கி நிறுத்தத் தில்லைக் கூத்தன் கையாண்ட வழி இதுவோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

ஒரு விநாடி நேரம் பின்னோக்கிப் பார்க்கும்போது உருத்தெரியாக் காலத்திலேயே தில்லைக்கூத்தன் உள்புகுந்தான்; உளத்தில் மன்னினான்; கருணையினால் ஆண்டுகொண்டான் என்ற அந்தச் செயல்களும் செய்திகளும் அகமனத்தின் ஆழத்தில் காட்சி கொடுப்பதை, மணிவாசகர் என்ற மனிதர் புறநிலையில் நின்று காணும் வாய்ப்பைப் பெறுகிறார். தளர்ந்த மனம் மீட்டும் தென்பு அடைகிறது; ஒடிந்த உள்ளம் வலுப்பெறுகிறது.

பின்னோக்கிக் காணும் அந்தக் காட்சியில் நாவரசர் பெருமான் கூறியதுபோல 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி' (திருமுறை: 4-81-5) என்ற எண்ணம் வலுப்பெறுகிறது.

ஒரு விநாடிநேரம் தோன்றிய இந்தப் பின்னோக்குக் காட்சி நீண்டிருக்குமேயானால் அதிலே மகிழ்ந்த மணிவாசகர் மேலும் திருவாசகம் பாடியிருக்க மாட்டார். திருவாசகம் என்னும் பால் சுரக்கவேண்டி, தில்லைக் கூத்தன் அடிகளாரின் இந்தப் பின்னோக்குக் காட்சியை உடனே பறித்துவிடுகிறான்.

மணிவாசகர் பழைய மணிவாசகராக ஆகிவிடுகிறார்; ஆகவே, அடுத்த பாடல் வழக்கம்போல் 'கல்லாத புல்லறி வின் கடைப்பட்ட நாயேனை' என்று தொடங்குகிறது.

'உருத்தெரியாக் காலத்தே' என்று தொடங்கும் பாடலுக்கும், 'கல்லாத புல்லறிவின்' என்று தொடங்கும் பாடலுக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற்றுமை காணப்பெறுகிறது!

திருப்பெருந்துறையில் ஒரு விநாடி நேரத்தில் திருவாதவூரர் மாணிக்கவாசகராக மாறினார். அந்த இறையனுபவ வெள்ளத்தில் அவர் தொடர்ந்து இருந்திருந்தால், உலகிற்குத் திருவாசகம் கிடைக்காது என்று கருதிய கூத்தன், அந்த அனுபவத்தைப் பிடுங்கிக்

கொண்டான். பரா அமுதாகிய திருவாசகம் சொட்டுச் சொட்டாகத் தொடங்கி அருவிபோல் பாயத் தொடங்கிற்று.

அவன் கருணையை வியக்கின்ற அதே நேரத்தில், தம்முடைய சிறுமையைப்பற்றி மிக அதிகமாகச் சிந்திக்கத் தொடங்கியதால், அருவிபோல் வந்த பாடல், வேகம் குறையத் தொடங்கிற்று. இதனை அறிந்த தில்லைக் கூத்தன், திருப்பெருந்துறையில் இறையனுபவத்தைக். கொடுத்துப் பிடுங்கியதுபோல, ஒரு விநாடி நேரம் தம்முடைய பழமையைப் புறத்தே நின்று காணும் ஆற்றலை அடிகளாருக்குத் தில்லையில் தந்தான்.

உருத் தெரியாக் காலத்தில்கூடப் புறத்தே இருந்த கூத்தன் உள்புகுகின்ற காட்சி தெரிகிறது; உள்ளே புகுந்தவன் வெளியே வராமல் உள்ளத்தின் அடித்தளத்தில் நிலைபெற்றுவிட்ட காட்சி தெரிகிறது. பத்து மாதங்களும் அந்தக் கரு அழியாமல் முழு வடிவுபெறக், கூத்தன் அருள் செய்தமை தெரிகிறது; வளர்ச்சியடையும்போது 'தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி' முனிவிலாதது ஒரு பொருளைக் கருதிய நிலை தெரிகிறது. எங்கெங்கோ ஒளித்த சோரன் அகப்பட்டுக்கொண்ட நிலை தெரிகிறது. அவனைத் தாள்தலையிட்டு தம்முன் நிறுத்திக்கொண்ட நிலை தெரிகிறது. அந்த ஆனந்த வெள்ளத்தில் அப்படியே அமிழ்ந்துபோகும் நிலையில் தூண்டில் மீனைப்போலத் தில்லைக்கூத்தன் மணிவாசகரை வெளியே இழுத்து விடுகிறான்.

இந்த ஆனந்த வெள்ளத்தில் அழுந்தி அதிலேயே நிலைபெறுவதற்குரிய தகுதி வந்துவிட்டது உண்மைதான். ஆனால், அதனை அனுபவிக்கத் தொடங்குவதற்குள் இன்னும் சில பாடல்கள் புனையப்பட வேண்டும். எனவே, தில்லைக் கூத்தன் இந்தப் பின்னோக்குப் பார்வையைத் தடுத்துவிடுகிறான்.

கனவிலிருந்து விழித்தவருக்குக் கனவு மறைந்துபோய் யதார்த்தம் எதிரே நிற்பதுபோல் அடிகளார் யதார்த்தத்திற்கு வருகிறார். அப்பொழுது தோன்றிய பாடல்தான் 'கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை' (478) என்று தொடங்கும் பாடல்.

இந்தப் பின்னோக்குப் பார்வை எங்கே எப்பொழுது அடிகளாருக்கு அருளப்பெற்றது என்பதை நாம் அறியமுடியாது; ஏன், அடிகளாரேகூட அறிந்துகொள்ள முடியாது. இந்தப் பின்னோக்குப் பார்வையில் தோய்ந்திருந்த நேரத்தில் வெளிவந்தது ஒரெயொரு பாடல். 'உருத்தெரியா' என்று தொடங்கும் பாடலாகும் அது.

இத்தகைய பின்னோக்குப் பார்வை இன்றுள்ள திருவாசக வைப்புமுறையில் 'நீக்கி முன்னெனை' (435) என்று தொடங்கும் பாடலிலும், 'உற்ற ஆக்கையின் உறுபொருள்' (436) என்று தொடங்கும் பாடலிலும், 'உருத்தெரியாக் காலத்தே' (477) என்று தொடங்கும் இந்தப் பாடலிலும், 'மானேர் நோக்கி மணவாளா' (499) என்று தொடங்கும் பாடலிலும் வருவதைக் காணலாம். ஆக, இந்த நான்கு பாடல்களையும் தனியே எடுத்துவிட்டால் திருவாசகப் பாடல்கள் ஏறத்தாழ ஒரே திசையில் செல்வதைக் காண முடியும்.

ஒவ்வொரு முறையும் இறையுணர்வில் மூழ்குதல், அதில் கிடைத்த சில அனுபவத்தில் திளைத்தல், பிறகு அந்த அனுபவத்தை அமைதியான நேரத்தில் சிந்தித்தல், அது பாடலாக வெளிவருதல் ஆகிய பொது இலக்கணம் இந்த நான்கு பாடல்கள் தவிர ஏனைய எல்லாப் பாடல்களுக்கும் பொதுவானதாகும்.

அவரது இந்தப் புதிய கண்டுபிடிப்பு எப்பொழுது எங்கே நிகழ்ந்தது என்று அறிய வாய்ப்பில்லை. திருவடி தீட்சையில் சிவமாகவே இவரை மாற்றிவிட்டமையின்

அந்தச் சிவத்துக்கு உரிய சில இயல்புகள் இவர்மாட்டும் தோன்றியிருக்க வேண்டும். சிவம் முக்காலங்களையும் கடந்தது ஆதலின் முக்காலங்களையும் அறியும் வாய்ப்பை அடிகளாரும் பெற்றிருத்தல் வேண்டும்.

'நான் ஆர்? என் உள்ளம் ஆர்?' என்ற பாடலைப் பாடும்போது இந்தப் புதிய கண்டுபிடிப்பு நிகழவில்லை போலும் என்று எண்ணத் தோன்றுகிறது.

பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பின்னர், இறந்த காலத்தையும், தம்முடைய ஆன்ம யாத்திரையின் தொடக்கத்தையும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு அடிகளாருக்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும். அம்முறையில் கண்டதைத்தான் இப்பாடலில் பேசுகிறார்.

பொதுவாக எல்லா உயிர்களுக்கும் ஓர் உடம்பைத் தந்து அவ்வுடம்பினுள் உயிர் உறையுமாறு செய்தவன் இறைவன். அந்த உயிருக்கு உயிராய் அங்கங்கே தங்கியுள்ளான் என்று கூறுவது காழிப் பிள்ளையார் பாடல்களில் பெரிதும் காணப்படும் ஒன்றாகும்.

ஆனால், உருத்தெரியாக் காலத்திலேயே, அதாவது சுக்கில சுரோணிதம் கலந்து ஒரு வடிவத்தைப் பெறுகின்ற காலத்திற்கு முன்னரேகூட, இறைவன் அந்தத் தனி உயிரணுவுள் புகுந்தான் என்கிறார் அடிகளார்.

ஒரு மாபெரும் மெய்ஞ்ஞானி என்பதால் இன்றைய விஞ்ஞானிகள் கண்ட காட்சி அன்றே அவருக்கு எளிதாகக் கிட்டியிருக்க கூடும். ஆனால், கரு உருப்பெறுவதற்கு முன்னரே அதனுள் இறைவன் புகுந்திருப்பதைக் காணும் ஆற்றல் விஞ்ஞானத்திற்கு இல்லை. எனவே, அடிகளார் திருப்பெருந்துறையில் பெற்ற திருவருள் காரணமாக இதனைக் கண்டு கூறினார் என்று நினைப்பதில் தவறில்லை.

அங்ஙனம் புகுந்தவன் யார் என்று சிந்திக்கத் தொடங்கிய அடிகளாருக்குத் தில்லைக் கூத்தன் காட்சி கிடைத்ததும், உள்ளே புகுந்தவன் இவன்தான் என்ற உள்ளுணர்வு (realization) ஏற்பட்டது.

478. கல்லாத புல் அறிவின் கடைப்பட்ட நாயேனை
வல்லாளனாய் வந்து வனப்பு எய்தி இருக்கும் வண்ணம்
பல்லோரும் காண என்தன் பசு பாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சு தில்லை அம்பலத்தே கண்டேனே 4

இப்பாடலுக்கு வாலாயமாகப் பொருள்செய்யும் முறையில் அல்லாமல் பின்வருமாறு கொண்டுகூட்டுச் செய்துகொண்டு பொருளுரைத்தல் சிறப்புடையதென்று தோன்றுகிறது. அதாவது 'வல்லாளனாய் வந்து கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை, பல்லோரும் காண வனப்பு எய்தி இருக்கும் வண்ணம் (காட்டி), எந்தன் பசு பாசம் அறுத்தானை எல்லோரும் இறைஞ்சு தில்லை அம்பலத்தே கண்டேனே' என்றவாறு.

மாபெரும் அருஞ் செயல்களைச் செய்யக்கூடிய ஆற்றல் மிக்கவராயும், அழகு மிகுந்த குருநாதர் வடிவு கொண்டவராயும் உள்ள ஒருவர், பலரும் காணத் திருப்பெருந்துறையில் எழுந்தருளினார். தாம் குருந்த மரத்தடியில் அமர்ந்திருக்கும் நிலையை அவர் எனக்குக் காட்டியதுடன், கல்வி அறிவு இல்லாமல் புல்லறி வாண்மையொடு சுற்றித்திரிந்த நாய்போன்றவனாகிய என்னுடைய பசு பாசத்தையும் அறுத்தார். அந்தக் குருநாதர் எங்கே போனார் என்று தேடித்திரிந்த நான், எல்லோரும் வணங்கி ஏத்தும் தில்லையம்பலத்தே அவரைக் கண்டேன் என்றவாறு.

திருப்பெருந்துறை நிகழ்ச்சியில் அடிகளார் முதலில் கண்டது குருநாதரை; இரண்டாவதாகக் கண்டது அம்மை அப்பரை; கடைசியாகக் கண்டது தில்லைக் கூத்தனை. குருநாதரைத் தேடிவந்த அடிகளாருக்குத் தில்லையில்

முதலில் கிடைத்தது தில்லைக்கூத்தன் தரிசனம்; அடுத்துக் கிடைத்தது குருநாதர் தரிசனம். குருநாதர் வேறு, தில்லைக்கூத்தன் வேறு என்று நினைக்கின்ற நினைவு நீங்கி, இருவரும் ஒருவரே என்ற எண்ணம் திருப்பெருந்துறையிலேயே தோன்றி வலுப்பெற்றுவிட்டது. ஆதலால்தான், திருவடி தீட்சையின் மூலம், பசு பாசம் அறுத்த குருநாதரைத் தில்லையில் கண்டேனே என்று பாடுகிறார்.

479. சாதி குலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம் இலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு
பேதை குணம் பிறர் உருவம் யான் எனது என்உரை
மாய்த்துக்
கோது இல் அமுது ஆனானைக் குலாவு தில்லை
கண்டேனே 5

'நால்வகை வருணத்துள் இன்ன குடியில் உயர்ந்த பிறப்பெடுத்தவர் இவர், அல்லாதவர் இவர் என்ற வேறுபாட்டைத் தொடக்கத்திலிருந்தே நினைத்துப் பழகியமையின், மீட்டு வரமுடியாத நீர்ச்சுழலில் அகப்பட்டவன் ஆயினேன். என்னை நல்வழிப்படுத்தி ஆதரவு தருவார் யாருமில்லாத நாயேனாக இருந்தேன். அவ்வாறிருந்த என்னை ஆட்கொள்ள விரும்பினார் குருநாதர். என்பால் நிறைந்திருந்த பேதைமைக் குணத்தையும், ஏனையோர் வடிவைக் கண்டு இவர் உற்றார் என்றும் இவர் மற்றவர் என்றும் இவர் பகைவர் என்றும் வேறுபடுத்திக் காணும் மன இயல்பையும் போக்கினார். அன்றியும் யான் எனது என்னும் செருக்கு நிறைந்த என் சொற்களையும் மாய்த்ததன்மூலம் இப்பிறப்பிலுள்ள அல்லலைப் போக்கினார். இந்த அல்லல்களை அறுத்ததன் பின்னர் என்னை ஆட்கொள்ளவும் செய்தார். அவ்வாறு செய்த அமுது போன்ற குருநாதரைக் குலாவு தில்லையில் கண்டேனே' என்றவாறு.

480. பிறவி தனை அற மாற்றிப் பிணி மூப்பு என்ற இவை
இரண்டும்
உறவினொடும் ஒழியச் சென்று உலகு உடைய ஒரு முதலைச்
செறி பொழில் சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம்பலம் மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிட நான் கண்டேனே 6

இப்பிறவியோடு ஒட்டிக்கொண்டிருக்கும் பிணி, மூப்பு என்ற இரண்டினையும் முதலில் போக்கினார். (இவை இரண்டும் உடல் பற்றியவை). அடுத்து, இவ்வுடம்பு காரணமாகத் தோன்றிய உறவுகளையும் நீக்கினார். அதன் பின்னரே இப்பிறவியை அடியோடு போக்கினார். இவற்றைச் செய்தபின்னர்க் குருநாதர் தாம் ஏற்றிருந்த வடிவை விட்டுச் சென்று திருச்சிற்றம்பலத்தில் மன்னினார்.

'என்போன்ற ஓர் எளியவனுக்காகக் குரு வடிவு பெற்று, குருந்த மரத்து அடியில் தங்கி, இவற்றையெல்லாம் செய்துவிட்டுச் சென்று, தில்லை மன்னிய காரணத்தால் இவரைச் சாதாரணமாக நினைத்துவிடவேண்டா. இவரே பிரபஞ்ச காரணர். அன்றியும் தில்லையில் தங்கிய இவரை மறையவர் எனப்படும் பூசுரரும் வானவர் எனப்படும் சுரரும் வந்து வணங்கி நிற்றலை நான் கண்டேன்' என்றவாறு.

481. பத்திமையும் பரிசும் இலாப் பசு பாசம் அறுத்தருளிப்
பித்தன் இவன் என என்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தம் எனும் திண் கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்கு தில்லை கண்டேனே 7

பசுத்துவம் என்பது மனிதர்களுக்குரிய இயல்பாகும்; பாசம் என்பது அப்பசுத்துவத்தோடு இணைந்து நிற்பதாகும் பாசம் என்பது தம்மையன்றியும் மற்றொன்றினிடத்து ஈடுபாடும் உறவும் கொள்ளுதல் ஆகும். என்றாலும், இறைவனிடத்துப் பக்தி செய்தல், அதனால் தம் தகுதியை உயர்த்திக்கொள்ளுதல் என்ற இரண்டையும் பசுக்கள்

(ஆன்மாக்கள்) செய்யக்கூடும். பாசம் நிறைந்திருப்பதால் பசுக்கள் (ஆன்மாக்கள்) பத்திமையைக் கைவிட வேண்டிய அவசியமில்லை. மற்றவற்றினிடத்து ஈடுபாடும் உறவும் கொள்ளும் இப்பாசத்தை இறைவன்மாட்டும் செலுத்தலாம் அல்லவா? அப்படிச் செலுத்தும்போது அந்தப் பாசம் உயர்ந்ததாகிவிடுகிறது. அத்தகைய உயர்ந்த பாசம் தம்பால் இல்லாமையால், பக்தியும், பரிசும் இல்லாத அப்பசு பாசத்தை முழுவதுமாகக் குருநாதர் போக்கினார் என்கிறார்.

உயிர்களுக்கு இயல்பாகவுள்ள பாசம் நீங்கினால் எந்த ஒன்றிலும் பற்றுக் கொள்ளாமல் பித்தர்போல் அலைய நேரிடும். குருநாதர் அருள்செய்த பிறகு, இவ்வாறு தம்மை அலையச் செய்தார் என்கிறார்.

இக்கருத்தை அடிகளார் கூறிய விதம் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. 'பித்தன் இவன் என, என்னை ஆக்குவித்து, பேராமே, சித்தம் எனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த வித்தகனார்' என்பது அவருடைய பாடல்.

ஒருவன் பித்தனாக ஆகிவிட்டான் என்றால் எந்த ஒன்றினும் அவன் மனமும் அறிவும் நிலைகொள்ளாமல் சுற்றத் தொடங்கிவிடும். இது சாதாரணப் பித்தர்களுக்குரிய இயல்பு. ஆனால், அடிகளாரைப் பித்தனாக்கியவர் வல்லாளர் அல்லவா? ஆதலால், அடிகளாரைப் பித்தனாக்கிய அதே நேரத்தில் அடிகளாருடைய மனம், சித்தம் என்பவை பித்தர்களுக்கு உள்ளதுபோல் நிலைகுலைந்து சுற்றாமல் ஒரே இடத்தில் நிலைபெறுமாறு செய்தார். அதாவது 'பேராமல்' இருக்கச் செய்தார்.

அதற்கு மேலும் ஒரு காரியத்தைக் குருநாதர் செய்தார். அவர் எதிரே இருக்கின்றவரையில், பெயராதிருந்த அடிகளார் மனம் அவர் அப்பால் போனவுடன் எங்கே நிலைகுலைந்து பெயர்ந்துவிடுமோ என்று நினைத்த குருநாதர் ஓர் ஒப்பற்ற காரியத்தை செய்தார். பெயர்ந்து

செல்லும் இயல்புடைய சித்தத்தைப் பெயராமல் இருக்கக் குருநாதர் கையாண்ட வழி என்ன தெரியுமா? அடிகளாரின் சித்தத்தைத் தம் திருவடியோடு சேர்த்து வலிய கயிற்றால் கட்டியதுபோலக் கட்டிவிட்டார்.

இனி, 'சித்தம் எனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த' என வருவதால் பின்வருமாறும் பொருள் கூறலாம். இங்குச் சித்தமே கயிறாக உள்ளது. திருப்பாதம் தன்னுள் வந்து தங்குமாறு செய்து, அச்சித்தம் தானே கயிறும் ஆகி அத்திருவடியைப் பிணித்துக்கொண்டது என்க. அவ்வாறு பொருள்செய்யும்போது 'கட்டுவித்த வித்தகன்' என்ற தொடர் பிரச்சினையை உண்டாக்கும். இந்நிலையில் கட்டுவித்த வித்தகன் என்பதற்கு, வித்தகனை ஏவுதற் கர்த்தாவாக ஆக்கி, சித்தம் என்ற கயிற்றைக் கொண்டு தம் திருவடிகள் அடிகளார் உள்ளத்தில் தங்குமாறு கட்டுவித்தான் என்றும் பொருள்கொள்ளலாம்.

மேலே கூறிய இரண்டு பொருளன்றியும் மூன்றாவது ஒரு பொருளையும் கருதுமாறு இந்தத் தொடர் அமைந்துள்ளது. ஒருவரை ஓரிடத்திலிருந்து நகராமல் இருக்கச்செய்ய ஒரே ஒரு வழிதான் உண்டு. அவர் கால்களை இறுகப் பிடித்துக் கட்டிவிட்டால் அவர் எங்கும் பெயர்ந்துசெல்ல முடியாதல்லவா? அதே முறையில் 'என் உள்ளத்துள் வந்து தங்கிய குருநாதர் திருவடி, வேறு எங்கும் போய்விடாமல் இருக்க, அத்திருடிவகளை, என் சித்தம் என்னும் திண் கயிற்றால் நான் கட்டினேன்' என்கிறார். அப்படிச் சொல்வதில் ஒரு சிறு குறை ஏற்படும். அனைத்தையும் கடந்துநிற்கும் அத்திருவடி, எப்படி இவர் கட்ட இடம் கொடுக்கும்? அந்தக் குறையைப் போக்க, என் சித்தம் எனும் திண்கயிற்றால் தம்முடைய திருப்பாதத்தை யான் கட்டுவதற்கு, குருநாதரே அருள்புரிந்தார் என்ற பொருளில் 'கட்டுவித்த' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

இவ்வாறு பொருள் கூறுவதற்கு அடிகளார் திருவண்டப் பகுதியில் கூறியுள்ள 'தாள் தளை இடுமின்' (திருவாச:3 - 143) என்ற தொடர் துணை செய்கிறது.

அண்ட பேரண்டம் அனைத்தையும் கடந்து நிற்கும் அத்திருவடிகளை, அண்மையில் ஆட்கொள்ளப்பெற்ற அடிகளார் போன்ற ஒருவர் கட்டும்படி அத்திருவடிகளுக்கு உரியவன் இணங்கினான் என்றால் எப்பயன் கருதி இதனைச் செய்தான்? எவ்விதப் பயனனையும் கருதாமல் செய்யப்படும் செயல் விளையாட்டு எனப்படும். எவ்விதப் பயனையும் கருதாமல் பிரபஞ்சத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முறையில் தோற்றுவித்துக், காத்து, அழிக்கின்றான் என்றால், அது அவனுக்கு ஒரு விளையாட்டே ஆகும். இதனையே அடிகளார் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி (திருவாச:166) என்று பாடியுள்ளார். அதேபோல ஓர் அன்பர் தம் திருவடிகளைக் கட்ட அவன் இணங்கியது அவனுக்கு ஒரு விளையாட்டு என்ற கருத்தில் 'வித்தகனார் விளையாடல் விளங்கு தில்லை கண்டேனே' என்கிறார்.

482. அளவு இலாப் பாவகத்தால் அமுக்கு உண்டு இங்கு
அறிவு இன்றி
விளைவு ஒன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு
அளவு இலா ஆனந்தம் அளித்து என்னை ஆண்டானைக்
களவு இலா வானவரும் தொழும் தில்லை கண்டேனே 8

'அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டு' என்பது முதலடியாகும். அதாவது எண்ணிலடங்காத நினைவுகளால் அமுக்கப்பட்டு என்ற பொருளைத் தரும். மனித மனத்துக்குள்ள ஒரு தனி இயல்பை அடிகளார் இங்கே சுட்டுகிறார். பயனுடையனவும் பயனில்லாதனவும் ஆகிய ஆயிரக் கணக்கான எண்ணங்கள் விநாடிதோறும்

மனத்திடைத் தோன்றி மறைகின்றன. இந்த நினைவு அலைகளிலிருந்து மனம் விடுபடுவது எளிதான ஒன்றன்று.

வாய் பேச முடியாத ஊமைகளுக்கும், வாய் பேசாமல் மௌனம் சாதிப்பவர்களுக்கும்கூட இந்த இயல்பு பொதுவானதே ஆகும். இதனையே தாயுமானவப் பெருந்தகை 'ஒரு கணமேனும் கண்மூடி மௌனியாய் இருக்கவென்றால், இப்பாழ்த்த கன்மங்கள், போராடுதே' என்று பாடியுள்ளார். 'சும்மா இரு சொல்லற' (கந்.அனு.12) என்று அருணகிரிப்பெருமான் கூறுவதும் இப்பொருளையே தருவதாகும். 'சொல் அற' என்றால், பேசாமல் வாய் மூடிக்கொண்டிருத்தல் என்பது பொருளன்று. சொல்லின்றி எண்ணமில்லை ஆகவே, 'சொல்லற' என்பது மனத்திடை எந்த எண்ணமும் (சொல்வடிவும்) இல்லாதிருத்தலே ஆகும். அதனையே அருணகிரியார் குறிப்பிடுகின்றார்.

மனித மனத்தின் இயல்பு இதுவாதலின் 'அளவிலாப் பாவகத்தால் அழுக்குண்டு' என்று பாடுகிறார்.

அடுத்து நிற்பது 'அறிவின்றி விளைவு ஒன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு' என்ற பகுதியாகும். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று தொல்காப்பியனார் கூறுவதுபோல எல்லாச் செயலும் பயனையே விளைக்கும் என்று எளிதில் கூறிவிடலாம். ஆனால், எந்தச் செயல், எந்தப் பயனை, எப்போது விளைக்கும் என்ற வினாக்களுக்கு அறிவின் துணை கொண்டுதான் விடை காணமுடியும். அந்த அறிவு இல்லாத ஒருவன், எந்த ஒரு சொல்லின் அல்லது எந்த ஒரு செயலின் விளைவையோ அல்லது பயனையோ அறியமுடியாது.

விளைவை அறிந்துகொள்ளும் ஆற்றலுடைய அறிவு இல்லாத ஒருவனை 'வெற்றாள்' என்றும் 'பதர்' என்றும் பயனை அறியாத மூர்க்கன் என்றும் கூறுவர். இத்தகைய

ஒருவனைத்தான் அடிகளார் 'வெறுவியன்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.

பாடலின் முதல் இரண்டு அடிகளில் தம்பால் உள்ள பல குறைகளை எடுத்து அடுக்கிக் கூறிவிட்டு, அப்படி இருந்தும் தம்மை வந்து ஆண்டான் ஒருவன் என்று பேசுகிறார். இவ்வாறு கூறுவதால், தம்மை வந்து ஆண்ட்வனை எளிதாக யாரும் நினைந்துவிடக்கூடாது என்பதை அறிவுறுத்தப் போலும் 'களவிலா வானவரும் தொழும்' என்றார். களவு—வஞ்சனை; களவிலா வானவர் தொழுதார்களே தவிர என்ன பயன் பெற்றார்கள் என்று தெரியாது. ஆனால், அளவிலா பாவகத்தில் அழுக்குண்ட ஒருவருக்கு வந்து அருள் செய்தான் என்றால் அவன் கருணையின் எல்லை இருந்தவாறு என்னே என்று வியக்கிறார். 'வானவரும்' என்பதில் வரும் உம்மை உயர்வு சிறப்பு உம்மை; 'கிடப்பேனுக்கு' என்பதில் இழிவுச் சிறப்பு உம்மை தொக்கது.

483. பாங்கினொடு பரிசு ஒன்றும் அறியாத நாயேனை
ஓங்கி உளத்து ஒளி வளர உலப்பு இலா அன்பு அருளி
வாங்கி வினை மலம் அறுத்து வான் கருணை தந்தானை
நான்கு மறை பயில் தில்லை அம்பலத்தே கண்டேனே 9

இப்பாடலில் முதலடியில் 'பாங்கினொடு பரிசொன்றும் அறியாத' என்ற சொற்களை அடிகளார் பயன்படுத்துவது அவர்காலத்தில் வழங்கிய ஒரு வழக்கைத் தெரிவிப்பதுபோல் உள்ளது. 'பாங்கு' என்ற சொல்லும் 'பரிசு' என்ற சொல்லும் பல பொருள்களையுடைய சொற்களாயினும் இங்கே நன்மை, குணம் என்ற பொருள்களையே முறையே குறிப்பனவாகும். எனவே, நன்மையான குணம் அல்லது நற்குணம் ஒன்றும் இல்லாத நாயினேன் என்று அடிகளார் தம்மைச் சொல்லிக் கொள்கிறார்.

முக்குண வயத்தின ராகிய மனிதர்களுக்கு எந்த நிலையிலும், ஒரோவழி ஒரு விநாடியேனும் நற்குணம் தோன்றியே தீரும். அதுவும் தம்பால் இல்லை என்று கூறுவதற்காக, அடிகளார், பாங்கும் பரிசும் தம்பால் இல்லையென்று கூறாமல் இவை என்ன என்றுகூடத் தெரியாத 'நாயினேன்' என்று கூறிக்கொள்கிறார்.

அப்படியிருந்தும் குருநாதர் இவர்மாட்டுச் செய்த அளப்பரிய நன்மைகளை வரிசைப்படுத்திப் பின்னர்ப் பேசுகிறார். குருநாதர் செய்த முதற் காரியம், அடிகளாரிடத்துள்ள மலங்களையும் அதன் விளைவான வினைகளையும் வாங்கி அறுத்தமையாகும். அவர் செய்த இரண்டாவது காரியம், அழியாத (உலப்பிலா) அன்பை அடிகளார் உள்ளத்துத் தோன்றுமாறு செய்தமை ஆகும். மலமும் வினையும் அறுக்கப்பட்டதால் அடிகளாரின் உள்ளத்தில் உலப்பிலா அன்பு குடிபுகலாயிற்று. உலப்பிலா அன்பு என்று கூறியதால், தொடர்புடையார்மாட்டுச் செல்லும் சிறிய அன்புபோல் அல்லாமல், அனைத்து இடத்தும் பரந்து விரியும் அன்பு என்ற பொருளைத் தருவதாயிற்று.

இத்தகைய அன்பு குடிபுகுந்த ஓர் உள்ளத்தில் இறைவன் தானே வந்து குடிபுகுவான். அதனையே 'ஓங்கி உளத்து ஒளி வளர' என்ற சொற்களால் தெரிவிக்கின்றார். அதாவது, உலப்பிலா அன்பு நிறைந்த உள்ளத்தில் இறைவன் ஓங்கி வளர்ந்து ஒளிவடிவாக நிரம்பியுள்ளான் என்பதைக் குறிக்கின்றார்.

செய்யுள் என்ற காரணத்தால் இம்மூன்று செயலும் முறைமாறி வைக்கப்பெற்றிருப்பினும் மலம் அறுத்து வினைவாங்கல் முதலாவது காரியம், உலப்பிலா அன்பு நிறைதல் இரண்டாவது காரியம், இறைவன் ஒளிவடிவாய் ஓங்கி வளர்தல் மூன்றாவது காரியம் என்ற முறையில் பொருள் கொள்ள வேண்டும்.

மேலே கூறப்பெற்ற மூன்றும் அடுத்தடுத்து நிகழ்ந்தாலும் இவை நிகழ்வதற்குக் காரணமாக இருந்தவர் யார்? குருநாதர் என்று சொல்லத் தேவையில்லை. அவர் எவ்வாறு இவற்றைச் செய்தார். அறுத்தல், நிரப்புதல், வளரச்செய்தல் ஆகியவற்றை மனிதர்களைப்போலக் கருவி கொண்டு செய்தாரா என்று ஐயுறுவார்க்கு விடைகூறுவார் போல வான் கருணை தந்தானை என்கின்றார்.

கருணையைத் தருதல் ஒன்றுமட்டுமே அவன் செய்த காரியம். நுண்மையானதும், கண்ணுக்குத் தெரியாததும் ஆகிய அந்தக் கருணை மிக நுண்மையாக யாரும் கண்களால் காணமுடியாத மலம் அறுத்தல், அன்பு நிறைத்தல், ஒளி வளர்த்தல் ஆகிய மூன்று செயல்களையும் முறையே செய்துவிட்டது என்க.

'நான்கு மறை பயில் தில்லை' என்பதற்கு நான்கு வேதங்களும் பயிலப்படும் தில்லை என்பது ஒரு பொருளாகும். நம்முடைய கற்பனையை நீட்டி வேறொரு விதமாகவும் பொருள் கொள்ளலாம். தில்லை அம்பலத்தில் அவன் ஆடிக்கொண்டுதான் இருக்கிறான். ஆட்டத்தை நிறுத்தினானில்லை. அவ்வாறு ஆடிக்கொண்டிருக்கும் பொழுதேகூட ஐந்தொழில்களையும் (படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்) அவன் செய்கின்ற இடம் தில்லை. இதனை நான்கு செயல்களோடு மறைத்தலாகிய செயலையும் நிகழ்த்துகிற (பயில்) தில்லை என்ற கருத்தில் 'நான்கு மறை பயில் தில்லை' என்று பாடுகிறார். இவ்வாறு பொருள் கூறுவதை இறைச்சிப் பொருள் என்பர்.

484. பூதங்கள் ஐந்து ஆகிப் புலன் ஆகிப் பொறி ஆகிப்
பேதங்கள் அனைத்தும் ஆய்ப் பேதம் இலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்து ஆண்ட கிளர் ஒளியை மரகதத்தை
வேதங்கள் தொழுது ஏத்தும் விளங்கு தில்லை கண்டேனே
10

கேதம் - துன்பம்.

இப்பாடலின் தனிச்சிறப்பு ஒன்றுக்கொன்று முரண்பாடுடைய பொருள்களை ஒன்றாக இணைத்து அவை அனைத்தினுள்ளும் இறைவன் நிறைந்துள்ளான் என்று கூறுவதாகும். அதாவது, முரண்பாடுகளினிடையே அவற்றை ஊடுருவியும், தனித்தும் நிற்கும் சிறப்புடையது முழுமுதல் என்ற பேருண்மை, இந்நாட்டவர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கண்டு கூறிய ஒன்றாகும். இக்கருத்தை வலியுறுத்தவே முரண்பட்ட பொருள்களை வரிசைப்படுத்துகிறார் அடிகளார்.

ஒன்றுக்கொன்று மாறுபட்டுள்ள ஐம்பெரும் பூதங்கள், மாறுபட்ட செயற்பாடுடைய மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகள்-அவற்றின் பொருளாக அமைந்துள்ள சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்கள்—இவற்றையல்லாமல் ஒன்றுக்கொன்று மாறுபட்ட வடிவு, உருவு, குணம், செயல் ஆகியவற்றையுடைய பொருள்களைப் 'பேதங்கள் அனைத்தும் ஆய்' என்றார். காரணம் புறவடிவு, தன்மை என்பவற்றில் இப்பொருள்கள் மாறுபட்டு இருப்பினும் இவை அனைத்தினுள்ளும் அந்தர்யாமியாய் இருப்பவன் அவனே ஆதலின் இவ்வாறு கூறினார்.

பேதம் உடைய இப்பொருளிடத்து அந்தர்யாமியாய் இருப்பினும் அவனிடத்து எவ்வித பேதமும் இல்லையென்பார் 'பேதமிலாப் பெருமையனை' என்றார்.

ॐ ॐ ॐ

32. பிரார்த்தனைப் பத்து

[சதா முத்தி]

பிரார்த்தனை என்ற வட சொல் (பிரா+அர்த்) மிகுதியும் வேண்டுதல் என்ற அடிப்படைப் பொருளோடு இறைவனை வேண்டுதல் என்ற பொருளையும் தந்துநிற்கும். இதுவரை கண்டுள்ள பல பாடல்களும் அடிகளார் இறைவனை நோக்கிச் செய்கின்ற பிரார்த்தனையாக இருக்கவும் இப்பதிகத்திற்குமட்டும் பிரார்த்தனைப் பத்து என்ற தலைப்பு ஏன் தரப்பெற்றுள்ளது என்பது தெரியவில்லை.

அடிகளார் இரண்டு வேண்டுதல்களை அடிக்கடி இறைவனிடம் விண்ணப்பிக்கின்றார். முதலாவது, மீண்டும் குருநாதர் தரிசனம் கிடைக்கவேண்டும் என்பது. இரண்டாவது, மீட்டும் அடியார் கூட்டத்தினிடையே இருக்கும் அருளைப் பெறவேண்டும் என்பது.

கோயில் மூத்த திருப்பதிகத்தின் முதற் பாடலிலேயே கூட 'அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்' என்று தொடங்கி, அதே கருத்தை, அப்பதிகத்தின் பிற பாடல்களிலும் குறிப்பிட்டுச் சொல்கின்றார். அப்படியானால் அடியார் நடுவுள் இருக்கவேண்டும் என்ற வேண்டுதல் புதிதாக இங்குப் பேசப்படவில்லையே! அப்படியிருக்க, பிரார்த்தனைப் பத்து என்ற தலைப்புக் கொடுத்து இந்தப் பதினொரு பாடல்களைத் தனியே பிரித்து அமைத்துள்ளதன் நோக்கம் என்ன?

அந்தாதித் தொடையில் அமைந்துள்ள இந்தப் பதினொரு பாடல்களையும் ஒருமுறை படித்துப் பார்த்தால்

இப்பதிகத்தினுள்ள புதுமை நன்கு விளங்கும். அடியார் நடுவுள் இருக்கவேண்டும் என்று இதுவரை கூறிவந்த பகுதிகளுள், நடுவுள் இருந்தபோது என்ன கிடைத்தது, அது இல்லாதபோது என்ன நடந்தது என்பதை அங்கு விரித்துக் கூறவில்லை. இந்தப் பதிகத்தில் அதனை விரித்துக் கூறுதலின் இப்பதிகம் பிரார்த்தனைப் பத்து என்ற தலைப்பில் தனியே வைக்கப்பெற்றுள்ளது போலும்.

பிரார்த்தனைப் பத்து என்ற பெயரைப் பெற்றாலும், இத்தொகுப்பினுள் பதினொருபாடல்கள் அமைந்திருப்பதைக் காணலாம். பதினோராவது பாடல் முதற் பாடலில் தொடங்கிய ஒரு கருத்தை, மிக அழகாகவும் விரிவாகவும் பேசுவதைக் காணலாம். அன்றியும் இப்பாடல் 'கலந்தே' என்று முடிவதாலும் அந்தாதியின் மரபுப்படி இந்தக் 'கலந்தே' என்ற சொல் முதற்பாடலின் முதற்சொல்லாக மண்டலித்து வருவதாலும் இந்தப் பதினொரு பாடல்களும் ஒரு தொகுப்பே என்பதற்கு ஐயமில்லை. இதற்கு முன்னரும்கூடப் பல அந்தாதிப் பத்துக்கள் உள்ளன. ஆனால், அவை ஒன்றிலும் பதினோராவது பாடல் இல்லை. இப்பதிகத்தில் பதினொன்றுக்குமேல் சில பாடல்கள் இருந்து மறைந்திருக்கலாம் என்று நினைப்பதற்கும் வழியில்லை. காரணம், பதினோராம் பாடலின் கடைசிச் சொல் முதற்பாடலின் முதற் சொல்லாக வருவதால் இவ்வாறு நினைக்கவும் வழியில்லை.

பதினொரு பாடல்களை அந்தாதித் தொடையாக ஆக்கி, ஒரு தனித்தொகுப்பாக அடிகளாரே அமைத்தாரா என்பது சிந்தனைக்குரியது.

ரார்த்தனை என்பதற்கு மிகுதியும் இரந்துவேண்டுதல் என்று பொருள் கண்டோம். இப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் தாம் அவ்வாறு இரந்து வேண்டுவதற்குரிய காரணத்தை அடிகளார் அழகாக விளக்கியுள்ளார். அடியார் கூட்டம் எவ்வாறிருந்தது, என்ன செய்தது, என்ன

மனநிலையில் இருந்தது என்பவற்றைப் பாடலின் முற்பகுதிகளில் விளக்கிக் கூறிவிட்டு, அப்படிப்பட்ட அடியார் கூட்டத்திடையே தாம் இருக்கவேண்டும் என்ற விருப்பத்தை எடுத்துக் கூறி இறைவனை இறைஞ்சும் கருத்தே எல்லாப் பாடல்களிலும் அமைந்துள்ளது.

'சதா முத்தி' என்ற உள் தலைப்பு பொருந்துவதாகத் தெரியவில்லை. முத்தி என்றாலே முடிவில்லாத, நிரதிசய இன்பம் அல்லது வீடுபேறு என்ற பொருளைத் தந்து நிற்கும். அந்தச் சொல்லை எடுத்துக்கொண்டு சதா என்ற சொல்லை அதனோடு ஒட்டுவதால் முத்தி என்ற சொல்லின் பொருளே அடிபட்டுப் போய்விடுகிறது. ஆகவே, இந்த உள்தலைப்பு பொருந்துமாறில்லை என்பது தெளிவாகிறது.

485. கலந்து நின் அடியாரோடு
அன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்து நின்றது இடர் பின்நாள்
உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பச் சுடர் காண்பான்
அலந்து போனேன் அருள் செய்யாய்
ஆர்வம் கூர அடியேற்கே 1

'புலர்ந்து போன காலங்கள்' என்பது அன்றன்று தோன்றி மறைந்த பல நாட்களைக் குறிப்பதாகும். இங்கே அடிகளார் திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்கு முந்திய காலங்களையும், அந்த நிகழ்ச்சிக் காலத்தையும், அந்நிகழ்ச்சி நடைபெற்றதற்குப் பின்புள்ள காலங்களையும் ஒரு கண்ணோட்டம் விடுகிறார் என்று நினைக்கத் தோன்றுகிறது. இப்பாடலைப் பாடுகின்ற நாள்வரை புலர்ந்து புலர்ந்து மடிந்துபோன நாட்கள் அல்லது

காலங்கள் எத்தனையோ உண்டு. அந்தக் காலகட்டத்தில் அவனுடைய அடியார்களோடு கூடிக் கலந்து நின்று எல்லையில்லாத ஆனந்த மிகுதியால் (களித்த காலங்கள்) வேறு ஒன்றும் செய்யாமல் செலவிட்ட நாளாகும்.

அந்த அடியார் கூட்டம் மறைந்துவிட்டதால் வாளா இருக்கவும் முடியவில்லை; களித்திருக்கவும் முடியவில்லை. இவை இரண்டும் இல்லாமல் போனதுமட்டு மன்று. அதற்குப் பதிலாக இந்த அனுபவத்திற்குப் பிற்பட்ட நாட்களில் (பின்னாள்) 'இடர் புகுந்து நின்றது' என்கிறார்.

களித்திருந்த நாள், இடர் தங்கிய நாட்கள் என்ற இரண்டையுமே 'புலர்ந்து போன காலங்கள்' என்ற பொதுச் சொல்லால் குறிக்கின்றார்.

கூடிநின்றபொழுது வாளா இருத்தலாகிய காஷ்ட மௌனமும் (மரக்கட்டை போலிருத்தல்) களித்து நிற்றலும் நடைபெற்றன. அது பிரிந்தவுடன் அவை இரண்டும் போனதோடுமட்டு மல்லாமல் இடர் புகுந்து நின்றது. ஆன்மாவிற்கு உரத்தைத் தரக்கூடிய மௌனமும், ஆனந்தமும், ஒழிந்தன; அல்லாமல், இடரும் புகுந்தது. ஆதலால் 'உலர்ந்து போனேன்' என்கிறார் அடிகளார்.

உலர்ந்துபோன ஆன்மா மறுபடியும் தளிர்க்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? முன்னர் அதற்கிருந்த களிப்பை மீட்டும் அது பெறுமாறு செய்ய வேண்டும். அந்தக் களிப்பு எப்படிக் கிடைத்தது? அடியார்களோடுக் கூடிக் கலந்து நின்றதால் கிடைத்தது. எனவே, அந்த அடியார் கூட்டம் இப்பொழுது வேண்டும் என்ற கருத்தைத்தான் 'உலவா இன்பச் சுடர் காண்பான் அலந்து போனேன்' என்கிறார்.

வெயில் படாமல் நிழலிலுள்ள செடி வளர்ச்சி குன்றி, வளைந்துபோகும் நிலையை மாற்ற வேண்டுமானால் சூரிய ஒளி அதன்மேல் படுமாறு செய்ய வேண்டும். அதேபோல இடர் புகுந்து நின்ற நிலையில் வாழும் அடிகளாருக்கு உலவா இன்பச் சுடராகிய ஒளி வேண்டும். அது எது?

இன்பச் சுடர் என்பதை ஒருமையாக வைத்துக் கொண்டாலும், ஒளி, எங்கும் நிறைந்து பன்மைப் பொருளாய் விரிவதுபோல, உலவாச் சுடர் என்ற ஒருமை, குருநாதரையும், அடியார் கூட்டத்தையும் ஒருங்கே குறித்து நின்றது. அவர் விரும்பியபொழுது இவை இரண்டுமே கிட்டாததால் அலமந்து (அலந்து) நிற்கின்றேன் என்கிறார்.

இப்பொழுது அடிகளாருடைய ஆர்வமெல்லாம் குருநாதரையும் அடியார் கூட்டத்தையும் (இன்பச் சுடரை) அடைந்து அதனுள் கலந்துவிட வேண்டும் என்பதாகும். மனித மனத்தின் விசித்திரமான செயல்களில் ஒன்று, பயனைப் பெற்றபிறகு பெற்ற வழியை மறந்துவிடுதலாகும். இப்பொழுது அடியாரொடு கலந்து நில்லாமையால் கலக்க வேண்டும் என்ற ஆர்வம் தலைதூக்கி நிற்கின்றது. ஒருவேளை கலந்துவிட்டால் அதிலேயே நிலைக்க வேண்டும் என்ற ஆர்வம் குறைந்துபோதல் இயல்புதானே! ஆர்வம் என்பது வழி; கலந்து நிற்றல் என்பது பயன். பயனை அடைந்த பிறகு வழியை மறத்தல் மனித மனத்தின் இயல்பன்றோ! அதனை நன்கு அறிந்த அடிகளார் இறைவனிடம் வேண்டிக்கொள்ளும்பொழுதே இரண்டையும் வேண்டிக்கொள்கிறார்.

ஒன்று, அடியார் கூட்டத்தின் இடையே இருத்தல்; இரண்டு, இருக்கவேண்டும் என்ற ஆர்வம் மேலும் மேலும் வளர்தல். அவ்வாறு வளர்தலையே 'ஆர்வம் கூர' என்றார்.

'ஆர்வம் கூர அருள்செய்யாய்' என்றதன் நோக்கம் இதுவேயாகும்.

486. அடியார் சிலர் உன் அருள் பெற்றார்
ஆர்வம் கூர யான் அவமே
முடை ஆர் பிணத்தின் முடிவு இன்றி
முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியேனுடைய கடு வினையைக்
களைந்து உன் கருணைக் கடல் பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
ஒவாது உருக அருளாயே 2

'யாது ஒன்று நினைக்க, தான் அதுவாதல்' என்பது இந்நாட்டுச் சைவர்களின் பழைய கொள்கைகளில் ஒன்று. இந்தத் தத்துவம் ஏனைய நாடுகளிலும் பரவியிருந்தது என்பதைக் குறிக்க, 'நீ எதனை நினைக்கின்றாயோ அதுவாகவே ஆவாய் (what you think. you become)' என்ற முதுமொழி மேலை நாடுகளிலும் உள்ளது.

இறைவனுடைய அருள் கடல்போல் பெருகி நின்றாலும், அதனை ஏற்றுக்கொள்ளும் கலம் வாய் மூடி இருப்பின் அந்தக் கருணை உள்ளே நுழைய முடியாது. சென்ற பாடலில் 'எனது ஆர்வம் மிகுதிப்பட அருள்வாயாக' என்று அடிகளார் வேண்டிக்கொண்டது சாதாரணமான ஒன்றன்று என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆர்வம் கூர (வளர வளர) கருணை உள்ளே புக வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆகவேதான், முதற்பாடலின் இறுதியில் ஆர்வம் கூர என்றவர், இரண்டாவது பாடலின் தொடக்கத்திலேயே அடியார்கள் பெற்ற பயனையும் அவர்கள் மேற்கொண்ட வழியையும் மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

அடியார் நின் அருள் பெற்றார் என்று கூறாமல் 'அடியார் சிலர்' என்று அத்தொகுப்பினுள் சிலரைப் பிரித்தெடுத்துக் கூறவேண்டிய காரணம் என்ன? உலகில் வாழும் அடியார் பலரேனும் அவர் அனைவரும் அருளைப் பெற்றார் என்று கூறுவதற்கில்லை. அருளைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருத்தலாலேயே அவர்கள் அடியார்கள் ஆயினர். அவர்களிடம் அருளைப் பெறும் ஆர்வம் உண்டு. ஏனைய பலவற்றோடு இந்த ஆர்வமும் அவர்கள் மனத்தின் ஒரு பகுதியில் அமைந்துள்ளது. ஆனால், அவர்களில் ஒரு சிலர்க்கு இந்த ஆர்வம் மேலும், மேலும் வளர்ந்து அவர்கள் மனத்தில் வேறு ஒன்றிற்கும் இடமின்றி நிறைந்துவிட்டது. 'ஆர்வம் கூர' என்று பொதுவாகக் கூறியமையின் மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற நான்கு அந்தக்கரணங்களிலும் இந்த ஆர்வமே வளர்ந்து, நிறைந்து, அந்த நான்கினையும் தன்னுள் அமிழ்த்திக்கொண்டது அவ்வாறு அமிழ்த்திக் கொண்ட காரணத்தால், அந்தச் சிலர் நின் அருளைப் பெற்றார். ஆர்வம் கூர்கின்ற காரணத்தால் அருளாகிய பயன் கிட்டியது.

'அருள் பெற்றார்' என்பதிலும் ஒரு நயம் அமைந்துள்ளது. இவர்கள் ஆர்வம் நிறைந்த காரணத்தால், அருளைத் தந்தேதீரவேண்டிய கடப்பாடு, இறைவனுடையதாக ஆகிவிடுகிறது. ஒன்றைக் கொடுத்து மற்றொன்றை வாங்குதலை, பெறுதல் என்ற சொல்லால் குறிக்கின்றோம். ஆர்வம் கூர்தலால் அருள் பெறப்பட்டது என்க.

'யான்' என்பது தொடங்கி 'மூக்கின்றேன்' என்பது முடியவுள்ள சொற்கள், தம் உடம்பின்மேல் அடிகளார் கொண்டிருந்த வெறுப்பை உணர்த்துவன ஆகும். பல இடங்களிலும் தம் உடம்பை இவ்வாறு அடிகளார் வெறுத்துப் பேசுவதைக் காண்கின்றோம். அதற்குரிய

காரணம் அவருடைய அடிமனத்திலிருந்த ஓர் எண்ணமே ஆகும்.

குருநாதர்முன் அமர்ந்திருந்த அடியார்கள் அவருடனேயே போய்விட்டார்கள். அந்த அடியார் களுடனேயே ஒரு சில நேரம் இருந்தும், அவர்களுடனேயே தாம் செல்ல முடியாமைக்குக் காரணம், தம் பரு உடம்புதான் என்று அடிகளார் கருதுகின்றார். எனவே, அடியார்களுடன் போகாமல் தம்மைத் தடுத்த இந்தப் பரு உடம்பின்மேல் எல்லையற்ற சினம் உண்டாகிறது. அதன் பயனாகவே மேலே உள்ளன போன்ற சொற்கள் திருவாசகத்தில் பல இடங்களில் இடம்பெற்றுளளன.

மூன்றாம், நான்காம் அடிகளில் இந்த உடம்பு தம்மை விட்டு நீங்காமைக்கும், அவன் அருள் கிட்டாமைக்கும் யாது காரணம் என்ற ஆராய்ச்சியில் புகுகின்றார்.

தம்முடைய எண்ணம் ஈடேறாமல் இருப்பதற்கும், இந்த உடம்பு தம்மைவிட்டுக் கழலாமல் இருப்பதற்கும் ஒரே காரணம் தம்முடைய கடுவினைதான் என்று கருதினார். ஆதலின், இப்பொழுது 'கடியேனுடைய கடுவினையைக் களைந்தருள்வாய்' என்று வேண்டுகிறார்.

பாடலில் அடுத்துள்ளது அவன் அருள் பொங்க வேண்டும் என்பதாகும். அருள் எப்பொழுது பொங்கும்? அவன் அருள் பொங்குவதற்கும் தம் உள்ளத்தில் ஒரு மாற்றம் நிகழவேண்டும் என்பதை இந்தக் குறைந்த கால அனுபவத்தில் கண்டுகொண்டார். உள்ளம் உருக உருக, அந்த உருக்கத்திற்கேற்பக் கருணை பொங்கும். எனவேதான், 'உடையானே நின் கருணைக் கடல் பொங்க, என் உள்ளத்து உருக்கம் இடையறாது (ஓவாது) நிகழ அருளவேண்டும்' என்கிறார்.

பாடலின் மூன்றாம் நான்காம் அடிகள் மூன்று பொருள்களை இறைவன் அருள வேண்டும் என்பதைக்

குறிக்கின்றன. 'அருளாய்' என்ற முடிவு மத்திம தீபமாக நின்று மூன்று வினையெச்சங்களோடு தனித்தனியே இணைந்து பொருள் தருகிறது.

கடுவினை களைந்து அருளாயே; கருணைக் கடல் பொங்க அருளாயே; ஓவாது உருக அருளாயே என்பவையே அம்மூன்றுமாம்.

இம்மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. கடுவினை இருக்கின்ற வரையில் உள்ள உருக்கமோ அதன் பயனாகத் தோன்றும் அருளோ வெளிப்படப் போவதில்லை. எனவே, கடுவினையைக் களைந்து அருளாயே; உள்ளம் ஓவாது உருக அருளாயே; உன் கருணைக் கடல் பொங்க அருளாயே என்று முடிக்கின்றார். இவை ஒன்றின் பயனாக ஒன்று தோன்றுகின்றன.

487. அருள் ஆர் அமுதப் பெரும் கடல்வாய்
அடியார் எல்லாம் புக்கு அழுந்த
இருள் ஆர் ஆக்கை இது பொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்மானே
மருள் ஆர் மனத்து ஓர் உன்மத்தன்
வருமால் என்று இங்கு எனைக் கண்டார்
வெருளாவண்ணம் மெய் அன்பை
உடையாய் பெற நான் வேண்டுமே 3

இப்பாடலின் முதலிரண்டு அடிகள் இதுவரை கூறிவந்த கருத்தை வலியுறுத்துவனவாகவே அமைந்துள்ளன. 'அருள் ஆர் அமுதப் பெருங்கடல்' என்பது திருவருளாகிய பெருங்கடல் என்றும், அமுதப் பெருங்கடல் என்றும் பிரிந்து நின்று, இரண்டு பொருள்களைத் தருகின்றது. அமுது, இறவாமையைத் தருவது என்பர். இறவாமை மட்டும் பெற்றுவிட்டால் எவ்விதப் பயனுமின்றி, அழிவுமின்றி, இந்த ஆன்மா அலைய நேரிடும். இறையருள் என்பது

இந்த ஆன்மாவை உய்விக்கக்கூடியது ஆதலின் இரண்டையும் ஒன்றாக இணைத்து 'அருள் அர் அமுதக் கடல்' என்றார்.

பாடலின் முதல் இரண்டு அடிகள் திருப்பெருந்துறை அனுபவத்தை நினைந்து கூறியனவாகும். 'புக்கு அழுந்த' என்றமையால், அடிகளாரின் கண்ணெதிரே குருநாதருடன் அமர்ந்திருந்த அடியார் கூட்டத்தை நினைந்து பாடியது என்று கொள்வதில் தவறில்லை. புக்கு அழுந்திய அடியார்களோடு தாமும் உடன் செல்ல முடியாமைக்குக் காரணம் 'இருள் ஆர் ஆக்கையே' என்ற தம் நம்பிக்கையை முன்னர்ப் பல இடங்களில் கூறியதுபோல இங்கும் கூறுகிறார்.

இந்த நினைவு வந்தவுடன் தம்முடைய அவலநிலை அடிகளார் நினைவிற்கு வருகிறது. உலகிடை இன்னும் பரு உடலோடு வாழ்கின்ற காரணத்தால், 'புக்கு அழுந்திய' அடியார்களுடன் செல்லவில்லை என்று நினைக்கின்றார். அது நடைபெறாமல் இந்த இருளார் ஆக்கையைச் சுமந்து வாழவேண்டிய நிலை உண்டாயிற்று என்பதைக் கூறவந்த அடிகளார், 'இருள் ஆர் ஆக்கை இது பொறுத்தே எய்த்தேன்' என்கிறார்.

'பொறுத்தல்' என்ற சொல் ஆழ்ந்த சிந்தனைக் குரியதாகும். பாரத்தைச் சுமக்கின்ற ஒருவன் அதனைத் தாங்கமுடியாத நிலை வந்தால், அந்தப் பாரத்தைக் கீழே தள்ளிவிடுவான். ஆனால், அடிகளாருடைய பாரம், அவருடைய விருப்பத்திற்கேற்பக் கீழே தள்ளிவிடும் நிலை யிலில்லை. ஆக்கையாகிய இந்தப் பாரத்தை உடையவன் உத்தரவிடுகின்றவரையில், விரும்பினாலும் விரும்பா விட்டாலும் சுமந்தே தீரவேண்டிய நிலை யிலுள்ளார். ஆதலின், 'இருளார் ஆக்கை இது பொறுத் தேன்' என்றார். விருப்பமின்றி ஆக்கையாகிய இந்தப் பாரத்தைச் சுமந்து

கொண்டிருத்தலின், உடலாலும் மனத்தாலும் 'எய்த்தேன்' என்கிறார்.

அடுத்த இரண்டு அடிகள், இந்த உடலோடு அடிகளார் உலகிடை உலவி வருகின்ற நேரத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும், அவரது வேண்டுதலையும் தெரிவிக்கின்றன.

ஊரிடை அவர் உலவிவரும்போது, அவரைக் கண்ட மக்கள் தம்முள் என்ன பேசிக்கொண்டார்கள் என்பதை, 'மருளார் மனத்து ஓர் உன்மத்தன் வருமால்' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பேசிக் கொள்பவர்கள், இவரை உன்மத்தன் என்று கருதியதால், அவர் பக்கத்தில் வருவதற்கும், அஞ்சி(வெருண்டு) ஓடுகிறார்கள். இதனைக் கண்ட அடிகளார், 'உடையவனே! நான் மெய்யன்பைப் பெற வேண்டுமே' என்று சொல்லிக் கொள்கிறார்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இவரை உன்மத்தன் என்று நினைத்து மக்கள் வெருளுதற்கும் தமக்கு மெய்யன்பு வேண்டும் என்று கேட்பதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லைபோல் தோன்றுகிறது. ஆழ்ந்து நோக்கினால் இதன் உண்மை விளங்கும்.

உலகியலில், மனமருட்சியுடைய பயித்தியங்களைக் கண்டு உலகோர் அஞ்சுவர். பயித்தியங்களைப்போலே நடந்துகொண்டாலும் மெய்ஞ்ஞானிகளையும், மெய்யன்பு உடையாரையும் கண்டு யாரும் அஞ்சுவதில்லை. இவர்பால் மெய்யன்பு நிறைந்திருப்பின் யாரும் இவரைக் கண்டு மருண்டு வெருளும் நிலை ஏற்பட்டிருக்காது. ஆனால், இப்பொழுது நடைபெற்றது என்ன? கண்டவர் வெருண்டு ஓடினார்கள். எனவே, தர்க்கரீரியாகத் தம்மிடம் மெய்யன்பு இல்லையென்ற முடிவிற்கு வந்த அடிகளார்,

உடையவனைப் பார்த்து, மெய்யன்பைப் பெறவேண்டி இறைஞ்சுகின்றார்.

'யானே பொய் என் நெஞ்சும் பொய்' (திருவாச: 94) 'யானும் பொய்யும் புறமே போந்தோமே' (திருவாச: 89) 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்' (திருவாசம்:218) என்றெல்லாம் பல பாடல்களில் பாடிவந்துள்ளார். ஆதலின், இப்பொழுதும் தம்பாலுள்ள பொய்யன்பை நீக்கி, மெய்யன்பு விளையுமாறு அவன் அருள்புரிய வேண்டும் என்று வேண்டுகிறார்.

488. வேண்டும் வேண்டும் மெய் அடியார்
உள்ளே விரும்பி எனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர் களைந்த
அமுதே அரு மா மணி முத்தே
தூண்டா விளக்கின் சுடர் அனையாய்
தொண்டனேற்கும் உண்டாம்கொல்
வேண்டாது ஒன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே 4

இப்பாடலுக்குப் பொருள் செய்வது சற்றுக் கடினமாக இருத்தலின் பின்வருமாறு கொண்டுகூட்டுச் செய்தல் நலம். 'அடியேன் இடர் களைந்த அமுதே! அரு மா மணி முத்தே! தூண்டா விளக்கின் சுடர் அனையாய்! வேண்டும் மெய்யடியாருள்ளே (இருக்குமாறு) எனை விரும்பி அருளால் ஆண்டாய், வேண்டாத ஒன்றும் வேண்டாது மிக்க அன்பு மேவுதலே வேண்டும், (இத்தகைய ஒரு நிலை) தொண்டனேற்கும் உண்டாம்கொல்?' என்றவாறு.

'எனை விரும்பி அருளால் ஆண்டாய்' என்பது ஐயனே! நீயே விரும்பித், திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருந்து வழியோடு சென்ற என்னை ஆண்டாய் என்ற பொருளைத் தரும். 'வேண்டும் மெய்யடியார்

உள்ளே' என்பது என்னை ஆண்டது மட்டுமா? உன் திருவடியையே வேண்டுகின்ற அடியார் கூட்டத்தினுள்ளே இருக்குமாறு செய்தாய் என்பதாம். 'வேண்டாத ஒன்றும் வேண்டாது' என்பது திருப்பெருந்துறையில் நின் அருளைப்பெற்றேன் ஆதலின், விரும்பத்தகாத எதனையும் விரும்பாமல் என்ற பொருளைத் தரும். 'மிக்க அன்பு மேவுதலே வேண்டும்' என்பது நின் திருவடிக்கண் நாளும் நாளும் வளர்கின்ற இயல்புடைய மிகுதியான அன்பே வேண்டும் என்றவாறு. 'தொண்டனேற்கும் உண்டாம் கொல்' என்பது விரும்பத்தகாத எதிலும் ஈடுபாடு கொள்ளாமல் உன் திருவடிக்கண் வளர்கின்ற அன்பைச் செலுத்தும் ஒரு நிலை தொண்டனாகிய எனக்கும் உண்டாகுமோ? என்பதாம்.

இப்பாடலில் வரும் 'வேண்டாத ஒன்றும் வேண்டாது' என்ற தொடர் சற்று வியப்பைத் தருகிறது. திருப்பெருந்துறையில் திருவடி தீட்சை பெற்ற பிறகு மணிவாசகராக மாறி, பல தலங்களுக்கும் சென்று, வழிபாடு செய்தவர் இப்பெருமகனார். 'தெளிவு குருவின் திருமேனி காண்டல்' (திருமந்திரம்: 139) என்ற திருமூலரின் சொற்களுக்கு ஏற்ப, பெருந்துறையில் கிடைத்த குருதரிசனம் மறுபடியும் கிட்டுமா என்ற ஆர்வத்தால் ஊர்தோறும் யாத்திரை செய்த அடிகளாருக்குத், திருக்கழுக்குன்றில் குருநாதரின் தரிசனத்தோடு கணக்கிலாக் கோலத்தையும் காட்டியருளினார். அப்படியிருக்க, 'வேண்டாத ஒன்றும் வேண்டாது' என்று அடிகளார் பாடவேண்டிய காரணமென்ன?

திருவாதவூரராக இருக்கும்போது இவ்வாறு சொல்லியிருப்பின் சரி. ஆனால் மணிவாசகர், கழுக்குன்றில் மீட்டும் குருதரிசனம் பெற்ற அடிகளார், வேண்டாத ஒன்றும் வேண்டாது என்று பாடுவது பொருந்துமா என்ற

ஒரு வினாவை எழுப்பினால், அருமையான விடை கிடைக்கும். இந்தப் பரு உடம்போடு இருக்கின்றவரை எத்தகைய ஆன்ம முன்னேற்றம் பெற்றாலும் உடலோடு ஒட்டிய மனத்தோடுதான் வாழவேண்டியுள்ளது. அந்த நிலை நீடிக்கின்றவரையில் மனக்குரங்கு என்றாவது ஒரு நாள் ஏதாவது ஒரு விநாடியில் தன் புத்தியைக் காட்டாமல் இராது. எவ்வவளவு உயர்ந்த நிலையிலும் இந்த உடம்போடு வாழ்கின்றவரையில் இந்தப் பெரியோர்களும் முக்குண வசத்தராகவே இருப்பர். நம் போன்றவர்களும் முக்குண வசத்தராகவே இருப்போம். அப்படியானால் அவர்கள், நாம் என்ற இரு சாராரிடையே வேறுபாடு என்ன என்ற வினாவை எழுப்பிக்கொண்டு ஆழ்ந்து சிந்தித்தால், நுண்மையான ஒரு வேறுபாட்டைக் காணமுடியும்.

நம்முடைய வாழ்நாளில் பெரும்பகுதி, தாமஸ குணத்திலும் அதற்கு அடுத்த ஒரு பெரும் பகுதி இராஜஸ குணத்திலும் கழியுமேனும், என்றோ ஒருநாள், ஏதோ ஒரு விநாடியில் சத்துவ குணத்திலும் நாம் ஆழ முடியும். ஆனால், அடியார்களைப் பொறுத்தவரையில் இது தலைகீழாக நடைபெறும். வாழ்க்கையின் பெரும் பகுதி சத்துவ குணத்திலும், ஒரு விநாடி இராஜஸ, தாமஸ குணங்களிலும் ஈடுபட நேரிடும். இதனால் ஒன்றும் குடி முழுகிப் போவதில்லை. ஆனால், இந்தப் பெருமக்கள், அந்த ஒரு விநாடி நிகழ்ச்சியைப் பெரிதுபடுத்திக் குடியே மூழ்கிவிட்டதுபோல வருந்துவர்.

காழிப் பிள்ளையார் 'ஆய மாய காயம் தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார், மாயமே என்று அஞ்சுகின்றேன், வலிவலம் மேயவனே' *(திருமுறை:1-50-7)* என்று பாடுவதும் மேலே கூறிய கருத்தை வலியுறுத்தும்.

அடிகளார் 'வேண்டாத ஒன்றும் வேண்டாது' என்று கூறியதும் இக்கருத்துப் பற்றியேயாம்.

489. மேவும் உன் தன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேரும் கயல் கண்ணாள்
பங்கா உன்தன் கருணையினால்
பாவியேற்கும் உண்டாமோ
பரம ஆனந்தப் பழம் கடல் சேர்ந்து
ஆவி யாக்கை யான் எனது என்று
யாதும் இன்றி அறுதலே 5

'காவி சேரும் கண்ணாள் பங்கா! திருப்பெருந்துறையில் நிறைந்திருந்த உன் அடியார்களின் இடையே சென்று, அவர்களிடம் காணப்பெற்ற பரம ஆனந்தமாகிய பழங்கடலினிடத்து அமிழ்ந்து, எனது உயிர், உடம்பு, யான், எனது என்ற அகங்கார மமகாரங்கள் முழுவதுமாக அறுந்துபோகும் நிலை பாவியேனாகிய எனக்கும் உண்டாமோ?' என்றவாறு.

எளிதில் போக்க முடியாமல் மனிதர்களுக்கு அமைந்திருக்கும் நான்கு பொருள்கள் இப்பாடலின் நான்காம் அடியில் பேசப்பெற்றுள்ளன. அவையாவன, ஆவி, யாக்கை, யான், எனது என்பவையாகும். அடியார்கள் மூழ்கியுள்ள பரமானந்தப் பழங்கடலில் அமிழ்ந்து இவற்றைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்று அடிகளார் கேட்பது சிந்திக்கத்தக்கது. இந்த எண்ணம் எவ்வாறு அவருக்கு வந்தது?

திருப்பெருந்துறையில் சில விநாடிகள் அவருக்குக் கிடைத்த அனுபவத்தின் விளைவாக எழுந்த வேட்கை யாகும் இது. முன்பு குருநாதர் அடியார்களிடையே அமர்ந்திருந்த அந்த நேரத்தில் திருவாதவூரர் என்ற மனிதர்

தம் உடலை மறந்து, உயிரை மறந்து, யான் எனது என்ற எண்ணமே இல்லாமல் இருந்தாரல்லவா? இப்பொழுது அந்த நிலை சற்று மாறிவிட்டது. குருநாதரை மீட்டும் காணவேண்டும், என்பது ஆவியின் விருப்பமாகும் அடியார்களிடையே மீட்டும் அமரவேண்டும் என்பது ஆக்கையின் விருப்பமாகும். தெருவூடு நடந்து செல்கையில் இவரைக் கண்டவர்கள் பித்தன் என்று பேச, அது காதில் விழுந்து, ஏன் அவ்வாறு பேசுகிறார்கள் என்ற சிந்தனை தோன்றிற்றல்லவா? இது தோன்றக் காரணம் நான், எனது என்ற இரண்டும் மடியாமல் இருந்தமையேயாம். நான், எனது என்ற இரண்டும் மடிந்துபோகாமல் இப்பொழுது பணிசெய்கின்றன ஆதலால் பழமையை நினைந்து பார்க்கிறார் அடிகளார்.

இவை நான்கும் எப்பொழுது, எங்கே செயலற்று இருந்தன? அப்பொழுதிருந்த சூழ்நிலை என்ன என்ற சிந்தனையில் ஈடுபட்ட அடிகளாருக்கு, விடை கிடைத்துவிடுகிறது. இந்த நான்கும் செயலற்று இருந்த இடம் பெருந்துறை; செயலற்ற சூழ்நிலை அடியார்கள் நடுவே இருந்த நிலை ஆகும்.

பின்நோக்கில் இதனைக் கண்டுகொண்ட அடிகளார், மறுபடியும் இந்த நான்கையும் இழக்கவேண்டுமானால், அடியார்கள் மூழ்கி இருக்கும் பரமானந்தப் பெருங்கடலுள் தாமும் அமிழ வேண்டும் என்று நினைக்கின்றார்.

குருநாதர் தரிசனத்தின் தொடக்கத்தில் 'நான்' இருந்தது உண்மைதான். அமைச்சராகிய தாம் வழியில் ஒரு பெரியவரைக் கண்டு வணங்கவேண்டும் என்று நினைத்து அவர் அருகில் சென்று வணங்குகின்ற விநாடிவரை 'நான்' இருந்தது உண்மைதான். குருநாதரை இவர் கண்டது இந்தப் பரு உடலில் பொருந்திய கண்களால்தான்.

ஆக, தொடக்கத்தில் 'நான்' இருந்தது உண்மைதான். குருநாதர் இவரைப் பார்த்துப் புன்முறுவல் செய்கையில் எதிரே குருநாதர் இருந்தார். ஒரே விநாடியில் அவர் மறைந்து, அவர் இருந்த இடத்தில் உமையொருபாகன் தோன்றினான். அடுத்த கணம் உமையொருபாகன் மறையத் தில்லைக் கூத்தன் தோன்றுகிறான். ஆதலின் பார்த்துக் கொண்டிருந்த அடிகளார் கொஞ்சம் கொஞ்சமாகத் 'தம்மை' 'நான்' இழக்கின்றார்.

அடியார்களிடையே பரு உடலுடன் அமர்ந்த அடிகளாருக்கு எனது உடல் என்ற எண்ணம் ஒரே விநாடி யில் மறைந்து, அமுதப் பெருங்கடலில் மூழ்கி விட்டார். அதுதான் 'நானும் எனதும்' மறைந்த இடம். இந்த நானும் எனதும் மறைந்தவுடன் நான் என்ற எண்ணத்திற்கு மூலமான ஆவிபற்றிய நினைவும் எனது என்பதற்கு மூலமான உடல்பற்றிய நினைவும் ஒருங்கே மாய்ந்துவிடக் காண்கிறோம்.

திருப்பெருந்துறையில் ஆவி, யாக்கை, நான், எனது என்ற நான்கும் மறைந்தாலும், அந்நாடகம் முடிவுற்ற சில நேரத்தில் இவை மீட்டும் தலைதூக்கலாயின. இந்த நான்கும் எவ்வளவு வளர்ந்து விஸ்வரூபம் எடுத்தாலும் இவற்றை மறந்திருந்த ஒரு சில நேரமும், அதிற் கிடைத்த இன்ப அனுபவமும் அடிகளார் ஆழ்மனத்திலிருந்து நீங்கவேயில்லை.

இன்ப அனுபவத்தைப் பெற்ற ஒருவன், மீட்டும் அது எப்போது கிட்டும் என்று, சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஏங்கி நிற்பது மனித இயல்பு. இதே அடிப்படையில் குருநாதர் தரிசனம், அடியார்களுடன் இருக்கை என்ற இரண்டும் எப்பொழுது கிட்டும் என்ற ஒரே நினைவுடன் உன்மத்தர்போல ஊரூராகத் திரிந்த அடிகளார், இப்பொழுது ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்.

இவை இரண்டும் அன்றும் தம்முடைய முயற்சியால் கிட்டவில்லை. குருநாதரின் கருணை காரணமாகத்தான் இவை இரண்டும் கிட்டின. ஆதலால், பழமையை நினைந்து, அதனைத் தருமாறு வேண்டுகிறார்.

'ஐயா! உன் மெய்யடியார்கள் அமிழ்ந்து நிற்கும் பரமானந்தப் பழங் கடலில் மூழ்கி, 'நான், எனது, உடல், உயிர் என்பவற்றை மறந்திருக்கும் காலம் பாவியேனாகிய எனக்கும் கிட்டுமோ?' என்றபடி.

490. அறவே பெற்றார் நின் அன்பர்
அந்தம் இன்றி அகம் நெகவும்
புறமே கிடந்து புலை நாயேன்
புலம்புகின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவு இல்லா
மறவா நினையா அளவு இலா
மாளா இன்ப மா கடலே 6

'உடையானே! திருப்பெருந்துறையில் நின் அருளை முழுவதுமாகப் (அறவே) பெற்ற மெய்யடியார்கள், முடிவில்லாமல் (அந்தமின்றி) உள்ளத்தில் ஆனந்த நெகிழ்ச்சியைப் பெற்றார்கள். ஒரு சில நேரம் அவர்களுடன் இருந்து இந்த ஆனந்தத்தில் பங்குபெற்ற நாயேனாகிய யான், அவர்களுடன் செல்லாமல் புறத்தே கிடந்து புலம்புகின்றேன், என் வினை இருந்தவாறு இது.

'ஒரு நிலையிலிருந்து பெயராத (பேரா), விட்டு நீங்காத (ஒழியா), ஒரு முறை இணைந்துவிட்டால் பிறகு பிரிவே இல்லாத (பிரிவு இல்லா), மறத்தலும் மீண்டு நினைத்தலும் இல்லா(மறவா, நினையா) எல்லையில்லாத (அளவு இலா, அழிவில்லாத (மாளா) இன்பமே வடிவாயுள்ள மாபெரும்

கடல்போன்ற பெருமானே! மேலே கூறிய அடியார்களைப் போல யானும் மெய்யன்பைப் பெறவேண்டும்' என்றவாறு.

'ஒழியா', 'மாளா' என்பன ஒரு பொருள் குறித்த இரு சொல்லாக இருப்பினும், இவற்றிடையே ஒரு சிறு வேறுபாடு உண்டு. ஒழிதல் என்பது ஒரு சிறு பொழுது இல்லாது இருந்து மீண்டும் தோன்றுதலையும், மாளுதல் என்பது ஒரேயடியாக இல்லாமல் போவதையும் குறிக்கும்.

பாடலில் காட்டப்பெற்ற ஏழு அடைமொழிகளும் இன்பம் என்ற சொல்லுக்கு அடையாக வந்துள்ளன. இந்த இயல்புகளால் பெற்றுள்ள ஒன்றை இன்பம் என்ற சொல்லால் குறித்தாரேனும் அடிகளார் கருதியது முடிவிலாத ஆனந்தத்தையேயாம்.

491. கடலேஅனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்து உண்ண
இடரே பெருக்கி ஏசற்று இங்கு
இருத்தல் அழகோ அடி நாயேன்
உடையாய் நீயே அருளுதி என்று
உணர்த்தாது ஒழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடர் ஆர் அருளால் இருள் நீங்கச்
சோதீ இனித்தான் துணியாயே 7

'திருப்பெருந்துறையில் நிறைந்திருந்த அடியார் கூட்டத்தார் குருநாதரைத் தரிசித்துக்கொண்டிருக்கும்பொழுதே கிடைத்த ஆனந்தமாகிய கடலை வேண்டுமட்டும் வாரி உண்டார்கள். அவர்கள் அவ்வாறிருக்க, குருநாதரைக் கண்டுகொண்டிருந்த நாயேனாகிய நான், அவர்களுடன் செல்லாமல் துன்பத்தைத் தரும் செயல்களையே பெரிதும் செய்து, அதன் பயனாக மேலும்மேலும் துன்பத்தைப் பெருக்கிக்கொண்டு இருக்கலானேன். இதனைப் பார்த்துக் கொண்டிருத்தல் உனக்கு அழகாகுமோ?

'உடையாய்! நீ எனக்கு எஜமானன் என்ற காரணத்தால் எனக்குத் தேவையானவற்றை நீ அருள்வாய் என்ற கருத்தில், என் குறைகளைப் போக்கவேண்டுமென்று உன்னிடம் விண்ணப்பம் செய்யாமல் (உணர்த்தாது ஒழிந்தே) இதுவரை காலத்தைக் கழித்துவிட்டேன்.

'சோதிவடிவான பெருமானே! உன்னுடைய அருள் ஒளியாகிய கருவியைக் கொண்டு என் அஞ்ஞானமாகிய இருளை இப்பொழுதாவது (இனித்தான்) துணிந்து வேறுபடுத்துவாயாக! இதுவே என் விண்ணப்பம்' என்கிறார்.

இதுவரை வந்துள்ள பாடல்களில் காணப்பெறாத ஒரு புதுமை இப்பாடலில் இடம்பெற்றுள்ளது. வழியோடு போன தம்மை, இழுத்து, ஆட்கொண்டு திருவடி தீட்சையும் செய்த எஜமானனிடம் தம்முடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஒப்படைத்துவிட்டார் மணிவாசகர். மேலும் 'வேண்டத் தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ..... வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னின் அதுவும் உந்தன் விருப்பன்றே' (திருவாச: 501) என்றும், 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' (திருவாச: 502) என்றும் அவரே பாடியுள்ளார். அன்றியும் திருப்பெருந்துறையில் அடிகளார் கண்ட அடியார் கூட்டம், கடல்போன்ற ஆனந்தத்தைக் அள்ளியள்ளி உண்டதே தவிர, என்ன வேண்டுமென்று, வாய்திறந்து கேட்கவில்லை. இவற்றையெல்லாம் பார்த்த அடிகளார் தம் குறைகளைப் போக்குமாறு இறைவனிடம் விண்ணப்பம் செய்யத் தேவையில்லை என்று கருதியிருக்க வேண்டும். தம்மாட்டுள்ள குறைகளைப் போக்கித் தமக்கு அருள் செய்யவேண்டியது உடையவனுடைய கடமை ஆகும். அன்றியும் தமக்கென்று ஒரு விருப்பமோ, அதை

வெளிப்படுத்த வேண்டிய தேவையோ உடைமைக்கு என்றுமே இல்லை. இவற்றை அறிந்து போக்க வேண்டிய கடமை உடையவனுடையதாகும்.

இந்த எண்ணத்தின் விளைவாக இதுவரை தமக்கு என்ன செய்யவேண்டும் என்று அவர் கூறியதே இல்லை. ஆனால், என்ன காரணத்தாலோ உடையவன் இதுவரை வாய் மூடி இருந்துவிட்டான். எனவே, மனம் நொந்து போன அடிகளார் 'என் குறையைப் போக்கவேண்டு மென்று உன்னிடம் விண்ணப்பம் செய்யாமல் (உணர்த்தாது) காலத்தைக் கழித்துவிட்டேன். எனது அஞ்ஞானமாகிய இருளை உனது அருளொளியாகிய வாள்கொண்டு துணித்துப் போக்குவாயாக' என்கிறார்.

'விண்ணப்பம் செய்யாமல் இருந்தமையால்தான் (உணர்த்தாது ஒழிந்ததால்) நின்னோடு சேரமுடியாமல் கழிந்தொழிந்தேன். இதற்குக் காரணம் என்னவென்று சிந்தித்துப் பாரத்ததில் என் உயிரோடு ஒட்டிய அறியாமை அல்லது அஞ்ஞானம் என்னை விட்டு நீங்காமல் இருந்தமையே என்பதைத் தெரிந்துகொண்டேன். இப்பொழுது உன்மாட்டுள்ள அருளொளி என்ற வாளால் என் அறியாமை அல்லது அஞ்ஞானத்தைத் துணித்துவிட்டு என்னை ஆட்கொள்வாயாக' என்கிறார்.

'உடைமையின் தேவை அறிந்து பூர்த்தி செய்வது உடையவனின் கடமை என்று நினைந்திருந்த அடிகளார், இப்பொழுது திடீரென்று 'உடையாய்! உன்னிடம் என்னுடைய தேவை என்ன என்பதை உணர்த்தியிருக்க வேண்டும் அதைச் செய்யாமல் பல காலத்தை வீணடித்துவிட்டேன்' என்ற கருத்தைப் பேசுவதே இந்தப் பாடலில் காணப்பெறும் புதுமையாகும்.

திணியார் மூங்கில் என்ற உவமை சிந்திப்பதற்கு
து. திணியார் மூங்கில் என்பது, உள்ளே துளை
ாத கெட்டி மூங்கிலைக் குறிப்பதாகும். இம் மூங்கில்
ள துளையில்லாமலும், முழுவதும் கெட்டிப்பட்டு
ாயாமலும் இருக்கின்ற மூங்கிலாதலின் இதனைத் தம்
ாத்திற்கு உவமையாகக் கூறியது இதன் இயல்புகளைக்
ியேயாகும்.

உள்ளே துளை இல்லை என்பதால், அடியார்
ும் அதுபற்றிய சிந்தனையும் உள்ளத்தில் புகவில்லை
கிறார். திணியார் மூங்கிலுக்கு வளையும் தன்மை
ாததுபோல இவருடைய உள்ளமும் வளைந்து
டுத்து உறுதிப்பொருளை ஏற்றுக்கொள்ளும் தன்மையை
ந்து நிற்கிறது என்பதைக் குறித்தாராயிற்று. இதன்
ாக வளர்ச்சியின்றித் தேய்வதாகத் தம்மைக்
க்கொள்கிறார்.

மூன்றாவது அடியைப் பின்வருமாறு கொண்டு
டுச் செய்தாலொழியப் பொருள்செய்வது கடினம்.
ணியார் உள்ள அடியார்(க்கும்) உனக்கு(ம் செலுத்தப்பட
ண்டிய) அன்பும் தாராய்' என்று கொள்க.

அணியராக உள்ள அடியார் என்றதால்
ப்பெருந்துறையில் காட்சி தந்த அடியார்களையே
ப்பதாயிற்று. அடியார்க்கும் உனக்கும் செலுத்தப்பட
ண்டிய அன்பு நிறைந்த உள்ளத்தையும், அந்த அன்பு
றைங்கும் செல்லாமல் இந்த ஒரே வழியில் செல்லும்
ல்பையும் தருவாயாக என்றவாறு. 'அன்பும்'
பதிலுள்ள உம்மை எதிரது தழுவிய உம்மையாய்,
ாபையும், அன்பு செலுத்தும் இயல்பையும் குறித்து
றது.

மூங்கில் என்ற உவமை சிந்திப்பதற்கு
ார் மூங்கில் என்பது, உள்ளே துளை
மூங்கிலைக் குறிப்பதாகும். இம் மூங்கில்
ில்லாமலும், முழுவதும் கெட்டிப்பட்டு
ருக்கின்ற மூங்கிலாதலின் இதனைத் தம்
மையாகக் கூறியது இதன் இயல்புகளைக்

ளை இல்லை என்பதால், அடியார்
ற்றிய சிந்தனையும் உள்ளத்தில் புகவில்லை
ியார் மூங்கிலுக்கு வளையும் தன்மை
இவருடைய உள்ளமும் வளைந்து
ப்பொருளை ஏற்றுக்கொள்ளும் தன்மையை
ு என்பதைக் குறித்தாராயிற்று. இதன்
ார்ச்சியின்றித் தேய்வதாகத் தம்மைக்
ர்.

அடியைப் பின்வருமாறு கொண்டு
ாலொழியப் பொருள்செய்வது கடினம்.
ள அடியார்(க்கும்) உனக்கும்(ம் செலுத்தப்பட
பும் தாராய்' என்று கொள்க.

உள்ள அடியார் என்றதால்
யில் காட்சி தந்த அடியார்களையே
அடியார்க்கும் உனக்கும் செலுத்தப்பட
ாபு நிறைந்த உள்ளத்தையும், அந்த அன்பு
ல்லாமல் இந்த ஒரே வழியில் செல்லும்
தருவாயாக என்றவாறு. 'அன்பும்'
உம்மை எதிரது தழுவிய உம்மையாய்,
அன்பு செலுத்தும் இயல்பையும் குறித்து

'அருள்அளிய' என்பது கருணை மிக்குப் பொங்க என்ற பொருளைத் தரும். 'தணியாது ஒல்லை வந்தருளி' என்பது மெள்ள மெள்ள வாராமல், விரைவாக எழுந்தருளி உன் திருவடிகளைத் தருவாயாக என்பதாம்.

அடியார்களிடத்தும் இறைவனிடத்தும் அன்பு செய்யும் உள்ளத்தைத் தந்தருள வேண்டும் என்று வேண்டிக்கொண்ட அடிகளார், அது நிறைவேறிய பிறகு, அதன் பயனாகத் திருவடி கிட்டும் என்பதை நன்கு அறிந்துள்ளார். ஆதலின், முதலில் அன்பு செய்யும் உள்ளத்தைத் தந்தருள்க என்று வேண்டிக்கொண்டு, உடனேயே திருவடியையும் விரைவாகத் தந்தருள்க என்கிறார்.

493. தாரா அருள் ஒன்று இன்றியே
தந்தாய் என்று உன் தமர் எல்லாம்
ஆரா நின்றார் அடியேனும்
அயலார் போல அயர்வேனோ
சீர் ஆர் அருளால் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா
பேர் ஆனந்தம் பேராமை
வைக்க வேண்டும் பெருமானே 9

'தாரா அருள் ஒன்று இன்றியே தந்தாய் என்று உன் தமர் எல்லாம் ஆரா நின்றார்' என்ற தொடரில் இறைவன் தருதலுக்கும் ஏனையோர் தருதலுக்கும் உள்ள வேற்றுமையைக் குறிப்பாக உணர்த்துகின்றார். மக்கள் ஒன்றைத் தருகிறார்கள் என்றால் தம்மிடத்தில் உள்ளதில் ஒரு பகுதியை வைத்துக்கொண்டு ஒருபகுதியைத் தருகிறார்கள் என்ற பொருளையே தரும். பாரி போன்ற வள்ளல்கள் இவ்விதிக்குப் புறம்பாவர். அவர்கள் தமக்கென்று எதனையும் வைத்துக்கொள்ளாமல் தம்மையே

முழுவதுமாகத் தரும் இயல்புடையவர்கள். இறைவனும் வள்ளல் என்றே பல இடங்களில் குறிப்பிடப்படுகிறான். அதனை விளக்கவே 'தாரா அருள் ஒன்று இன்றியே' என்றார். அதாவது அடியார்க்கு அருள் செய்யும்போது, பிறர்க்குப் பங்கிடப்படாது தன்மாட்டே இருத்திக் கொள்ளும் அருள் என்ற ஒன்று அவன் பாலில்லை என்பதாம்.

அப்படிப்பட்ட அருளைப் பெற்ற அடியார்கள் அதனை அள்ளி உண்கின்றார்கள். அப்படி உண்கின்ற அடியார்களை இறைவனின் 'தமர்' என்கிறார் அடிகளார்.

'இத்தகைய தமர்களின் இடையே சிலநேரம் கழிக்க வாய்ப்புப் பெற்றிருந்தும், அது நிலைபெறாமையால் 'தமியேனும் அருளைப் பெறாத அயலார்போல மனம் அயரும் நிலைக்கு ஆளாவது முறையோ?' என்கிறார் அடிகளார்.

'சிறப்புப் பொருந்திய உன்னுடைய திருவருள் காரணமாக என் சிந்தனையை உன்பால் செல்லும் வண்ணம் திருத்தி ஆட்கொண்ட சிவலோகனே! திருப்பெருந்துறையில் நிகழ்ந்ததுபோல் அல்லாமல் பேரானந்தம் என்னைவிட்டு நீங்காமல் இருக்க அருள்புரிய வேண்டும் பெருமானே!' என்கிறார்.

உலகிடை உள்ள இன்பம், மகிழ்ச்சி என்பவை நிலைபேறுடையன அல்ல; இறைவனுடைய அருள் அத்தகையதன்று. அந்த அருளைத் தருபவன்தானும் ஒளிவுமறைவின்றி முழுவதுமாக அள்ளித் தருகின்றான். அதனை உண்கின்ற அடியார்கள், இந்த ஆனந்த அனுபவத்திற்குத் தொடக்கம், இறுதி, எல்லை என்ற ஒன்றும் இன்மையால் அதனை உண்டுகொண்டே இருக்கிறார்கள். (ஆரா நின்றார்)

இந்தப் பொதுவிதி தம்மாட்டு ஏன் பிழைத்தது என்ற வினா அவருடைய மனத்தைக் குடைந்துகொண்டு இருந்ததுபோலும். எனவே, பல பாடல்களில் அந்த அடியார்கள் முன்னே 'நரிப்பாய் நாயேன் இருப்பேனோ' (திருவாச:386) என்று தம்மை ஆட்கொண்டவனிடமே வினவுகின்றார்.

திருப்பெருந்துறையில் இந்த அனுபவம் எப்படிக் கிடைத்தது? அனுபவத்தைத் தருவதற்கு முன்னர், அதனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பாத்திரமாகிய சித்தத்தை ஒழுங்குபடுத்தினார் குருநாதர் என்பதையும் அடிகளார் உணர்கின்றார். அதனையே 'சீர் ஆர் அருளால் சிந்தனையைத் திருத்தி ஆண்ட சிவலோகா' என்கிறார். இந்தஅடியின் வரும் 'திருத்தி' 'ஆண்ட' என்ற இரண்டு சொற்களும் இறந்தகால வாய்பாட்டில் அமைந்திருத்தலால் இது திருப்பெருந்துறை நிகழ்ச்சியே என்பது பெற்றாம்.

இவரோ அடிமை; அவனோ ஆண்டான். அந்த ஆண்டான், இந்த அடிமையை ஆட்கொண்ட அந்த விநாடியே இவருடைய சிந்தனையை முதலில் திருத்தி, பிறகு ஆண்டுகொண்டான். அப்படியிருக்க அந்தச் சிந்தனை, குருநாதர் காட்டிய வழியில் இப்பொழுது செல்லவில்லை. அந்தச் சிந்தனையை அடக்கி, பழைய வழியில் செலுத்தும் ஆற்றல் தம்பால் இல்லை என அடிகளார் உணர்கின்றார்.

எனவே, ஆண்டானை அழைத்து, 'நீதானே என் சிந்தனையைத் திருத்தி ஆண்டாய்? இப்பொழுது அந்தச் சிந்தனை தன்னுள் இருந்த ஆனந்தத்தைப் போக்கடித்து விட்டது. ஆண்டானே! நானுன்னைத் தேடி வரவில்லை. நீதான் உன் கருணை காரணமாக வழியில் அமர்ந்து

என்னை வரவழைத்து என் சிந்தனையைத் திருத்தி ஆண்டாய். அப்படியிருக்க, என் சிந்தனை உள்ளே இருந்த ஆனந்தத்தைத் தொலைத்துவிட்டு அலமருகின்றது. இப்பொழுது நீதான் அதற்கொரு வழிசெய்ய வேண்டும்.

'திருப்பெருந்துறையில் நீ பெய்த ஆனந்தம் என் சிந்தனையை விட்டு மறுபடியும் ஓடிவிடாமல் 'பேரானந்தம் பேராமை வைக்க வேண்டும்' என்று பாடுகின்றார்.

494. மான் ஓர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனம் நெகா
நான் ஓர் தோளாச் சுரை ஒத்தால்
நம்பி இனித்தான் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனை உணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளும் காலந்தான்
கொடியேற்கு என்றோ கூடுவதே 10

'உமாதேவியை ஒரு பங்கில் உடையவனே! உன்னை வந்திப்பார்க்குக் கனி போன்றவனே! வந்திப்பவரிடையே இருந்து உன்னைச் சில நேரம் கண்டு, உன் அருளைப் பெறும் வாய்ப்புப் பெற்றிருந்தும் இப்பொழுது என் நிலை என்னாயிற்றுப் பார்த்தாயா? நீ, எதிரே இருக்கும்பொழுது உருகி ஓடிய என் உள்ளம் இப்பொழுது உருகுவதே இல்லை. அதுமட்டுமா? துளையிடாத சுரைக் குடுக்கைபோல் வாழ்கின்றேன். ஐயனே! இந்த ஊன் நிறைந்த உடம்பினுள் நீ புகுந்தததை அன்று உணர்ந்தேன்; இன்று மறந்துவிட்டேன். இந்த நிலை மாறி, நீ புகுந்ததை மறுபடியும் உணர்ந்து, உள்ளம் உருகி நிற்கும் காலம் எப்பொழுது வரப்போகிறது? அது விரைவில் வர அருள் செய்வாயாக'என்றவாறு.

'உள்ளீடு அற்ற சுரைக் குடுக்கைபோல், நான் இங்கே அலமர, அடியார் கூட்டத்தோடு எங்கோ சென்று அவர்களுக்கு ஆனந்தம் தந்துகொண்டே இருக்கின்றாய்; என் நிலைக்கு இரங்காத நீ, நன்றாக வாழ்ந்து போ ஐயா' என்று இரண்டாம் அடியில் குறிப்பிடுவது அடிகளாரின் துயரத்திற்கு எல்லை வகுத்துக் காட்டுகின்றது.

நீத்தல் விண்ணப்பத்தின் சில பாடல்களில் இறைவனைக் கேலிசெய்து 'உலகோர் முன்னே உன்னைச் சிரிப்பிப்பன்' என்று பாடும்பொழுது அடிகளார் மனத்தில் ஓரளவு தென்பு இருந்தது என்பதை அறியமுடிகிறது. ஆனால், 'நம்பி! இனித்தான் வாழ்ந்தாயே' என்று பாடும்பொழுது துயரத்தின் எல்லைக்கே சென்றுவிடுகிறார்.

எவ்வளவு முறையிட்டும் தம் குறையை இறைவன் கண்டுகொள்ளவில்லை என்ற மனநிலை, இவருக்கும் நம்பியாரூரருக்கும் வாழ்க்கையில் அனுபவமாகும்.

எல்லையற்ற துயரத்தில் இருப்பவர்கள் 'எனக்கு இதனைச் செய்த நீ ஒழிந்து போ' என்று மனம் நைந்து பேசுவது உலகிடை இன்றும் நாம் காணும் ஒரு சூழ்நிலை யாகும். 'ஒழிந்து போ' என்பதைத்தான் 'வாழ்ந்து போதீரே' (திருமுறை:7-95) என்ற சொல்லால் நம்பியாரூரரும் 'வாழ்ந்தாயே' என்ற சொல்லால் அடிகளாரும் பேசுகின்றனர்.

சுரைக் குடுக்கையை உவமையாகக் கூறியது பல கருத்துக்களை உள்ளடக்கியதாகும். சுரைக்காய் தன் உள்ளேயுள்ள சதைப்பற்று மிகுந்த பகுதிகள் அனைத்தையும் வெளியேவிடாமல் உள்ளேயே அழித்து விடுகிறது. அப்பொழுதுதான் அது குடுக்கை ஆகிறது;

'உள்ளீடு அற்ற சுரைக் குடுக்கைபோல், நான் இங்கே அலமர, அடியார் கூட்டத்தோடு எங்கோ சென்று அவர்களுக்கு ஆனந்தம் தந்துகொண்டே இருக்கின்றாய். என் நிலைக்கு இரங்காத நீ, நன்றாக வாழ்ந்து போ ஐயா' என்று இரண்டாம் அடியில் குறிப்பிடுவது அடிகளாரின் துயரத்திற்கு எல்லை வகுத்துக் காட்டுகின்றது.

நீத்தல் விண்ணப்பத்தின் சில பாடல்களில் இறைவனைக் கேலிசெய்து 'உலகோர் முன்னே உன்னைச் சிரிப்பிப்பன்' என்று பாடும்பொழுது அடிகளார் மனத்தில் ஓரளவு தென்பு இருந்தது என்பதை அறியமுடிகிறது. ஆனால், 'நம்பி! இனித்தான் வாழ்ந்தாயே' என்று பாடும்பொழுது துயரத்தின் எல்லைக்கே சென்றுவிடுகிறார்.

எவ்வளவு முறையிட்டும் தம் குறையை இறைவன் கண்டுகொள்ளவில்லை என்ற மனநிலை, இவருக்கும் நம்பியாரூரருக்கும் வாழ்க்கையில் அனுபவமாகும்.

எல்லையற்ற துயரத்தில் இருப்பவர்கள் 'எனக்கு இதனைச் செய்த நீ ஒழிந்து போ' என்று மனம் நைந்து பேசுவது உலகிடை இன்றும் நாம் காணும் ஒரு சூழ்நிலை யாகும். 'ஒழிந்து போ' என்பதைத்தான் 'வாழ்ந்து போதீரே' (திருமுறை:7-95) என்ற சொல்லால் நம்பியாரூரரும், 'வாழ்ந்தாயே' என்ற சொல்லால் அடிகளாரும் பேசுகின்றனர்.

சுரைக் குடுக்கையை உவமையாகக் கூறியது பல கருத்துக்களை உள்ளடக்கியதாகும். சுரைக்காய் தன் உள்ளேயுள்ள சதைப்பற்று மிகுந்த பகுதிகள் அனைத்தையும் வெளியேவிடாமல் உள்ளேயே அழித்து விடுகிறது. அப்பொழுதுதான் அது குடுக்கை ஆகிறது.

ஆனால், சுரைக்குடுக்கைக்குரிய மூன்று இயல்புகளில் (காய்ந்து போதல், உட்புகவிடாமை, மிதத்தல்) அடிகளாரைப் பொறுத்தமட்டில் முதலில் கூறிய காய்ந்து போதல்மட்டுமே பொருந்தும். ஏனைய இரண்டும் தமக்குப் பொருத்தம் என்று அவர் நினைக்கிறாரே ஒழிய அது உண்மையன்று.

495. கூடிக் கூடி உன் அடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழி அற்றேன்
வற்றல் மரம் போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு
கலந்து உள் உருகிப் பெருகி நெக்கு
ஆடி ஆடி ஆனந்தம்
அதுவே ஆக அருள் கலந்தே 11

'கூடிக்கூடி உன் அடியார் குனிப்பார், சிரிப்பார் களிப்பாராய்' என்பதுவரையுள்ள பகுதி, முன்னர்க் குறிப்பிட்ட இறைப்பிரேமையைக் குறிப்பதாகும். உன் அடியார் பலரும் ஒன்றுகூடி, நாட்டியம் ஆடுதல் (குனிப்பார்), சிரித்தல், களித்தல் ஆகிய தம்மை மறந்த செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்குமே மேலே கூறிய மூன்று செயல்களும் பொதுவாக அமைந்துள்ளன. இவர்களின் எதிரே, வற்றல் மரம்போல் நான் நிற்பது எவ்விதத்திலும் பொருத்தமில்லை என்பதை நீ அறியாயா?

'எங்களை ஆண்டுகொண்ட தலைவனே! உன்னோடு கலந்து ஊடியும், கூடியும் ஆனந்தத்தை அனுபவித்து மகிழ எனக்கு அருள் செய்வாயாக'.

தம்மை மறந்து ஆடிப் பாடும் அடியார்களிடையே ஆடுதல் பாடுதல் இல்லாவிட்டாலும் உருக்கம்கூட இல்லாமல் தாம் நிற்பதை அடிகளார் நினைக்கின்றார்.

மரம் என்றால் இலை பூ காய் என்பவற்றைப் பெற்றிருக்க வேண்டும். அதுபோல ஒரு மனிதன் என்றால் மனிதனுக்குரிய இரக்கம், உருக்கம் ஆகிய பண்புகள் அவனிடத்து இருக்க வேண்டும். இவை ஒன்றுமில்லாது வளர்ந்துநிற்கின்ற தம்மை 'வற்றல் மரம்' என்கிறார் அடிகளார். ஒரு காலத்து, பசுமையோடிருந்து பிறகு இலை முதலிய எதுவுமில்லாமல் காய்ந்து நிற்கும் மரத்தைப் போல எவ்வித வெளிப்பாடும் வளர்ச்சியுமின்றி இருத்தலால் தம்மை வற்றல் மரம் என்றார்.

'வழியற்றேன்' என்று கூறிக்கொள்வது போக்கிடம் எதுவும் இன்றி இருத்தல் என்றபடி. வழி தெரியாமல் இருப்பது என்பது ஒன்று; வழி இல்லாமல் இருப்பது என்பது ஒன்று. வழி இருந்தும் அதனைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது முதல் வகையைச் சார்ந்தது. மீண்டுபோகக்கூட வழியில்லாமல் சுற்றிலும் அடைபட்டு, வந்த வழியும் அடைபட்டுப் போதல் இரண்டாவது கை.

திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகு அடியார் கூட்டத்தோடு செல்ல முடியாமையால் முன்னேறும் வழி அடைபட்டுவிட்டது. திருவாதவூரர் மணிவாசகராக மாறி விட்டமையின் மீண்டும் திருவாதவூரர் ஆவதற்கு வழியே இல்லை. அதனாலேயே, தம்மை வழியற்ற வற்றல் மரம் என்கிறார்.

சிற்றின்பம் பேரின்பம் இரண்டிலும் ஊடுதலும், கூடுதலும் பேசப்பெறுகின்றன. சிற்றின்பத்தில் ஊடுதல் கூடுதலை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், பேரின்பத்திலும் இவ்வாறு இருக்குமா என்பது நம் போன்றவர் அறியமுடியாத ஒன்றாகும். திருவடியில்

இரண்டறக் கலத்தல் என்பதை ஏற்றுக்கொண்டால் ஊடுதல் கூடுதல் என்ற இரண்டும் அங்கு இருப்பதற்கில்லை. ஊடுதல் கூடுதலாகிய செயல்கள் நடைபெறவேண்டுமானால் இருவர் அங்கு இருந்தே தீரல் வேண்டும். ஒன்றாகி ஐக்கியப்படும் நிலையே பேரின்பம் என்றால், ஊடவோ, கூடவோ அங்கு இருவர் ஏது?

என்றாலும் அடியார்களாக உள்ளவர்கள், இந்தப் பருவுடம்புடன் இந்த உலகில் வாழும் காலத்து இறைவனோடு எவ்வளவு உறவு கொண்டாலும் தம்மைத் தனியே நினைந்து பேசுதல் மரபு. அந்த முறையில் அவன் தலைவன் ஆவான்; எல்லா உயிர்களும் தலைவி ஸ்தானத்தில் உள்ளவை ஆகும் என்ற கருத்தில் சிற்றின்பத்தையும், பேரின்பத்தையும் இணைத்துப் பேசுதல் மரபு. இவை இரண்டிற்கும் ஒரு பொதுத்தன்மை உண்டு. சிற்றின்பத்தின் உயிர்நாடி தன்னை இழப்பதாகும். அதேபோல, பேரின்பத்திலும் இது முதற்படியாகும். எனவேதான் நம் முன்னோர் இவற்றை இணைத்துப் பேசினர்.

ॐ ॐ ॐ

33. குழைத்த பத்து

[ஆத்தும நிவேதனம்]

குழைத்த பத்து என்று இப்பதிகத்திற்குத் தலைப்புத் தரப்பெற்றுள்ளது. இறைவன் திருவுள்ளத்தைக் குழைத்த, பத்துப் பாடல்கள் என்று ஒரு சாரார் பொருள் கூறியுள்ளனர். அந்தாதித் தொடையில் குழைத்த என்று தொடங்கிக் குழைத்து என்று முடிவதால் குழைத்த பத்து என்று ஒரு சாரார் பெயர் கூறியுள்ளனர். இவை இரண்டுமே பொருந்துமாறில்லை.

திருவாசகம் முழுவதுமே இறைவன் கருணையை வியந்து பாடுவதுடன், அக் கருணை, தம் குற்றங்களைப் போக்கி ஆட்கொள்ள வேண்டும் என்ற பொதுவான கருத்தைக் கொண்டு விளங்குவதைக் காணலாம். அப்படியிருக்க, இந்தப் பதிகம்மட்டும் இறைவன் உள்ளத்தைக் குழைத்தது என்று கூறுவது பொருந்துமா என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

குணங்குறி கடந்து நிற்கும் அப்பொருள், கருணையே வடிவானது ஆதலின், தம்மாட்டு இரக்கங் கொள்ள வேண்டும், தம் குற்றங் குறைகளை மன்னித்து ஆட்கொள்ள வேண்டும் என்று அடிகளார் முறையிடுவதில் தவறில்லை.

'இரங்கும் நமக்கு அம்பலக் கூத்தன்' (திருவாச: 384) என்று அடிகளாரே பாடியுள்ளாரே? அப்படியிருக்க, அந்த இறைவனுடைய உள்ளத்தை இவருடைய பாடல்களின் மூலம் குழைக்க விரும்பினார் என்று கூறுவதில் தவறென்ன என்ற வினா எழுமேயானால், ஒரு சிறிய பிரச்சினைக்கு அது இடம் தரும்.

குழைத்தலாகிய செயலைச் செய்த பத்துப் பாடல்கள் என்று பொருள்கொண்டால், குழைத்தலாகிய செயலுக்கு அடிகளார் கர்த்தா ஆகிவிடுவார். தம்மாட்டுக் குழைந்து குற்றங் களைந்து ஆட்கொள்ள வேண்டும் என்று பாடுவது வேறு; அதன் எதிராக, இப்பாடல்கள் இறைவன் திருவுள்ளத்தைக் குழைத்துவிட்டன என்று கூறினால் குழைக்கும் செயலைச் செய்யும் கர்த்தா, இறைவன் திருவுள்ளத்தைவிட ஒருபடி மேலே நிற்கின்றார் என்ற தொனிப்பொருள் வந்துவிடும்.

இப்படி ஒரு கருத்தை அடிகளார் நினைந்திருப்பாரா என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். எனவே இறைவனைக் குழைத்த பத்து என்று பொருள் கூறுவது அவ்வளவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

குழைத்த பத்து என்ற பெயர் வந்ததற்கு மேலே கூறப்பெற்ற இரண்டு விளக்கங்களும் திருப்தியளிக்க வில்லை. தம்முடைய உள்ளத்தைத் தாமே முயன்று குழைத்ததுபற்றி முதல் பாடலில் கூறுகிறார். ஆதலின் ஒரு வேளை இந்தப் பெயர் வந்திருக்கலாம்.

'ஆத்தும நிவேதனம்' என்று இடப்பட்ட உட்தலைப்பும் வழக்கம்போல் பொருந்துமாறில்லை. நிவேதனம் என்று கூறினால் நிவேதனம் செய்பவன் ஒருவன், நிவேதனம் செய்யப்படும் பொருள் ஒன்று, நிவேதனத்தை ஏற்றுக்கொள்பவன் ஒருவன் என்ற மூன்றும் இருந்துதீரல் வேண்டும். நிவேதனத்தை ஏற்றுக்கொள்பவன் ஒருவன் உண்டு என்ற பொருளை இங்கும் ஏற்றுக்கொள்ளலாம். அப்படியானால் நிவேதனம் செய்பவர் யார்? அடிகளார் என்று வைத்துக்கொண்டால், எதை நிவேதனம் செய்கிறார் என்ற வினாவிற்கு ஆத்மாவை என்று விடை கிடைக்கும். அப்படியானால் ஆத்மாவை வேறு பிரித்துவிட்டால், அடிகளார் என்ற ஒருவர் மிஞ்ச வாய்ப்பே இல்லை.

குழைத்தலாகிய செயலைச் செய்த பத்துப் பாட
என்று பொருள்கொண்டால், குழைத்தலாகிய செய
அடிகளார் கர்த்தா ஆகிவிடுவார். தம்மாட்டுக் குற
குற்றங் களைந்து ஆட்கொள்ள வேண்டும் என்று பா
வேறு; அதன் எதிராக, இப்பாடல்கள் இ
திருவுள்ளத்தைக் குழைத்துவிட்டன என்று கூறி
குழைக்கும் செயலைச் செய்யும் கர்த்தா, இ
திருவுள்ளத்தைவிட ஒருபடி மேலே நிற்கின்றார்
தொனிப்பொருள் வந்துவிடும்.

இப்படி ஒரு கருத்தை அடிகளார் நினைந்திருப்
என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். எ
இறைவனைக் குழைத்த பத்து என்று பொருள் கூ
அவ்வளவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

குழைத்த பத்து என்ற பெயர் வந்ததற்கு
கூறப்பெற்ற இரண்டு விளக்கங்களும் திருப்திய
வில்லை. தம்முடைய உள்ளத்தைத் தாமே முழ
குழைத்ததுபற்றி முதல் பாடலில் கூறுகிறார். ஆதலின்
வேளை இந்தப் பெயர் வந்திருக்கலாம்.

'ஆத்தும நிவேதனம்' என்று இடப்பட்ட உட்தலை
வழக்கம்போல் பொருந்துமாறில்லை. நிவேதனம்
கூறினால் நிவேதனம் செய்பவன் ஒருவன், நிவே
செய்யப்படும் பொருள் ஒன்று, நிவேதன
ஏற்றுக்கொள்பவன் ஒருவன் என்ற மூன்றும் இருந்து
வேண்டும். நிவேதனத்தை ஏற்றுக்கொள்பவன் ஒ
உண்டு என்ற பொருளை இங்கும் ஏற்றுக்கொள்ள
அப்படியானால் நிவேதனம் செய்பவர் யார்? அடிக
என்று வைத்துக்கொண்டால், எதை நிவேதனம் செய்
என்ற வினாவிற்கு ஆத்மாவை என்று விடை கிடை
அப்படியானால் ஆத்மாவை வேறு பிரித்துவிட்ட
அடிகளார் என்ற ஒருவர் மிஞ்ச வாய்ப்பே இ

குழைத்தலாகிய செயலைச் செய்த பத்துப் பாடல்கள் என்று பொருள்கொண்டால், குழைத்தலாகிய செயலுக்கு அடிகளார் கர்த்தா ஆகிவிடுவார். தம்மாட்டுக் குழைந்து, குற்றங் களைந்து ஆட்கொள்ள வேண்டும் என்று பாடுவது வேறு; அதன் எதிராக, இப்பாடல்கள் இறைவன் திருவுள்ளத்தைக் குழைத்துவிட்டன என்று கூறினால், குழைக்கும் செயலைச் செய்யும் கர்த்தா, இறைவன் திருவுள்ளத்தைவிட ஒருபடி மேலே நிற்கின்றார் என்ற தொனிப்பொருள் வந்துவிடும்.

இப்படி ஒரு கருத்தை அடிகளார் நினைந்திருப்பாரா என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். எனவே, இறைவனைக் குழைத்த பத்து என்று பொருள் கூறுவது அவ்வளவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

குழைத்த பத்து என்ற பெயர் வந்ததற்கு மேலே கூறப்பெற்ற இரண்டு விளக்கங்களும் திருப்தியளிக்க வில்லை. தம்முடைய உள்ளத்தைத் தாமே முயன்று குழைத்ததுபற்றி முதல் பாடலில் கூறுகிறார். ஆதலின் ஒரு வேளை இந்தப் பெயர் வந்திருக்கலாம்.

'ஆத்தும நிவேதனம்' என்று இடப்பட்ட உட்தலைப்பும் வழக்கம்போல் பொருந்துமாறில்லை. நிவேதனம் என்று கூறினால் நிவேதனம் செய்பவன் ஒருவன், நிவேதனம் செய்யப்படும் பொருள் ஒன்று, நிவேதனத்தை ஏற்றுக்கொள்பவன் ஒருவன் என்ற மூன்றும் இருந்துதீரல் வேண்டும். நிவேதனத்தை ஏற்றுக்கொள்பவன் ஒருவன் உண்டு என்ற பொருளை இங்கும் ஏற்றுக்கொள்ளலாம். அப்படியானால் நிவேதனம் செய்பவர் யார்? அடிகளார் என்று வைத்துக்கொண்டால், எதை நிவேதனம் செய்கிறார் என்ற வினாவிற்கு ஆத்மாவை என்று விடை கிடைக்கும். அப்படியானால் ஆத்மாவை வேறு பிரித்துவிட்டால், அடிகளார் என்ற ஒருவர் மிஞ்ச வாய்ப்பே இல்லை.

எனவே, 'ஆத்ம நிவேதனம்' என்ற உட்தலைப்பின் பொருத்தமின்மை நன்கு தெளிவாகும்.

496. குழைத்தால் பண்டைக் கொடு வினை நோய்
காவாய் உடையாய் கொடு வினையேன்
உழைத்தால் உறுதி உண்டோதான்
உமையாள் கணவா எனை ஆள்வாய்
பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ
பிறை சேர் சடையாய் முறையோ என்று
அழைத்தால் அருளாது ஒழிவதே
அம்மானே உன் அடியேற்கே 1

'உருகாத கல்போன்று இருந்த என் உள்ளத்தை உன்பால் கொண்ட அன்பு காரணமாகக் குழைத்தேன் ஆதலின் பிறவிதோறும் தொடர்ந்துவரும் என் பண்டைக் கொடுவினையின் பிடியிலிருந்து என்னைக் காக்க வருவாயாக.

'கொடுவினை செய்தவனாகிய நான், உள்ளத்தைக் குழைக்கும் செயலை விடாது செய்வேனாயின் (உழைத்தால்) ஈடேறலாம் என்ற உறுதி நிச்சயமாக உண்டு' என்றவாறு.

'எனை ஆள்வாய்' என்று வேண்டிக்கொள்வதற்கு முன்னர், 'உமையாள் கணவா!' என்று விளிப்பது கருத்துடை விளியாகும். அடிகளாரை ஆட்கொள்வதற்குச் சரியான நேரம் வரவில்லை என்றோ, சரியான தகுதி அவர்பால் வரவில்லை என்றோ கருதி, அப்பெருமான், காலம் தாழ்த்துவானாயின் அவன் பங்கில் உறைபவளாகிய அன்னை காலம் தாழ்த்த விடமாட்டாள் என்ற கருத்தைக் கொண்டுள்ளது இந்த விளி.

'குற்றம் செய்வது எனது இயல்பு; அதனைப் பொறுத்துக்கொள்வது உனது கடமையன்றோ' என்ற

இந்தக் கருத்து முன்னரும் பலமுறை பேசப்பெற்றுள்ள இறைவனது கடமையை நினைவூட்ட விரும்பியவர்போல 'பொறுக்க வேண்டாவோ?' என்று தொடங்கிய அடிகளா 'பிறைசேர் சடையாய்!' என விளிப்பது, முன்னர் போன்றே கருத்துடைய விளியாக அமைந்துள்ளது.

அடிகளார் பிழை செய்திருப்பின் பொறி புலன்க காரணமாக, உலகியலிற் பட்ட பிழையாகவே அ இருந்திருக்கும். ஆனால், சந்திரன் செய்த பி அவ்வாறல்லவே! தன் தலைவனைத் தக்கன் சிறு செய்தான் என்று அறிந்திருந்தும் அவியுணவிற் ஆசைப்பட்டு அவனுடைய யாகத்தில் கலந்துகொண்டா அல்லவா? ஆணவம் காரணமாகத் தலைவ அவமானப்படுத்திய குற்றத்தைத் தக்கன் செய்தா என்றால், சந்திரன் அதற்கு உடந்தையாக இருந்தா அல்லவா? அடிகளார் தம் குற்றத்தையும் சந்திர குற்றத்தையும் ஒப்புநோக்குகின்றார். மாபெரும் பி செய்த சந்திரனையே மன்னித்துத் தலையில் தூக வைத்துக்கொண்டு ஆடும் கூத்தனைப் பார்த்து, 'நீ செய்வ முறையோ!' நான் 'பிழைத்தால் பொறுக்கவேண்டாவோ என்று பாடுகிறார்.

பிழைத்தால் பொறுக்கவேண்டியது தலைவனுடை கடமை என்பதை நினைவூட்டிய அடிகளார், இன்னும் ஒ படி மேலே செல்கிறார். 'ஐயா! சாதாரண உலகியலிற்கூ ஒருவரை அழைத்தால், அழைக்கப்பட்டவர் நின்று அழைத்தவரைப் பார்த்து 'ஏன் அழைத்தாய்? உனக்கு என்ன வேண்டும் என்று கேட்பார்களே! குற்ற குறையுடைய மனிதர்களே இச்செயலைச் செய்கின்றார்க என்றால் நீ இப்பொழுது என்ன செய்யவேண்டும்?

'உடையாய், உமையாள் கணவா, பிறைசேர் சடையா என்றெல்லாம் உன்னை அழைத்தேனே! உடையா என்றதால் நீ தலைவன் நான் உன் உடைமை; எனக்

இந்தக் கருத்து முன்னரும் பலமுறை பேசப்பெற்றுள்ளது. இறைவனது கடமையை நினைவூட்ட விரும்பியவர்போலப் 'பொறுக்க வேண்டாவோ?' என்று தொடங்கிய அடிகளார் 'பிறைசேர் சடையாய்!' என விளிப்பது, முன்னர்ப் போன்றே கருத்துடைய விளியாக அமைந்துள்ளது.

அடிகளார் பிழை செய்திருப்பின் பொறி புலன்கள் காரணமாக, உலகியலிற் பட்ட பிழையாகவே அவை இருந்திருக்கும். ஆனால், சந்திரன் செய்த பிழை அவ்வாறல்லவே! தன் தலைவனைத் தக்கன் சிறுமை செய்தான் என்று அறிந்திருந்தும் அவியுணவிற்கு ஆசைப்பட்டு அவனுடைய யாகத்தில் கலந்துகொண்டான் அல்லவா? ஆணவம் காரணமாகத் தலைவனை அவமானப்படுத்திய குற்றத்தைத் தக்கன் செய்தான் என்றால், சந்திரன் அதற்கு உடந்தையாக இருந்தான் அல்லவா? அடிகளார் தம் குற்றத்தையும் சந்திரன் குற்றத்தையும் ஒப்புநோக்குகின்றார். மாபெரும் பிழை செய்த சந்திரனையே மன்னித்துத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடும் கூத்தனைப் பார்த்து, 'நீ செய்வது முறையோ!' நான் 'பிழைத்தால் பொறுக்கவேண்டாவோ!' என்று பாடுகிறார்.

பிழைத்தால் பொறுக்கவேண்டியது தலைவனுடைய கடமை என்பதை நினைவூட்டிய அடிகளார், இன்னும் ஒரு படி மேலே செல்கிறார். 'ஐயா! சாதாரண உலகியலிற்கூட ஒருவரை அழைத்தால், அழைக்கப்பட்டவர் நின்று, அழைத்தவரைப் பார்த்து 'ஏன் அழைத்தாய்? உனக்கு என்ன வேண்டும் என்று கேட்பார்களே! குற்றம் குறையுடைய மனிதர்களே இச்செயலைச் செய்கின்றார்கள் என்றால் நீ இப்பொழுது என்ன செய்யவேண்டும்?

'உடையாய், உமையாள் கணவா, பிறைசேர் சடையாய் என்றெல்லாம் உன்னை அழைத்தேனே! உடையாய் என்றதால் நீ தலைவன் நான் உன் உடைமை; எனக்கு

அருள் செய்யவேண்டியது உன் கடமை என்பதை நினைவூட்டினேன். உமையாள் கணவா என்று அழைத்ததால் நீ இரங்காவிட்டால் என் தாய் உன்னைச் சும்மா விடமாட்டாள் என்பதை நினைவூட்டினேன். பிறைசேர் சடையாய் என்றதால் உனக்கு மாபெரும் தவறிழைத்த சந்திரனையே மன்னித்து ஆட்கொண்டவன் நீ என்பதை நினைவூட்டினேன். இப்படியெல்லாம் நான் உன்னை அழைத்தேன் 'எனக்கு அருளாது ஒழிவது உன் வழக்கோ!' என்றவாறு.

அருளாளர்கள் பாடல்களில் இறைவனைப் பல்வேறு விதமாக விளித்துப் பாடும் இயல்பைக் காணலாம். மரபு பற்றி வரும் பாடல்கள் ஆதலின் இவ்விளிகளுக்கு ஆழ்ந்து பொருள் காணாமல் வெறும் விளிகள் என்றே பொருள் கண்டுள்ளோம். 'உடையாய்' என்ற சொல்லும், 'உமையாள் கணவா' என்ற தொடரும் காதில் பட்டவுடன், நம் சிந்தனை எங்கெங்கோ ஓடிச்சென்று பல கருத்துக்களையும் உள்ளடக்கியே இவ்விளிகள் தோன்றியிருக்கக்கூடும் என்ற முடிவிற்கு வரச்செய்தது. இதனையே தொல்காப்பியனார் 'இறைச்சியில் பிறக்கும் பொருளுமாருண்டே' (தொல்: பொருள்5-34) என்று கூறிப்போனார்.

497. அடியேன் அல்லல் எல்லாம் முன்
அகல ஆண்டாய் என்று இருந்தேன்
கொடி ஏர் இடையாள் கூறா எம்
கோவே ஆ ஆ என்று அருளி
செடி சேர் உடலைச் சிதையாதது
எத்துக்கு எங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணி கொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே 2

இப்பாடல் எளிய சொற்களோடு நேரிடையாகச் செல்வதுபோலக் காணப்படினும், எளிதாகப்

பொருள்செய்வதற்கு முடியாமலுள்ளது. இரண்டு முக்கியமான கருத்துக்கள் முதலாம் அடியிலும் மூன்றாம் அடியிலும் பேசப்பெற்றுள்ளன.

முதலாம் அடியில் திருப்பெருந்துறை நிகழ்ச்சி நினைவுகூரப்பெற்றுள்ளது. அந்நிகழ்ச்சிக்கு எவ்விதத் தொடர்பும் இல்லாத ஒரு வேண்டுகோள் மூன்றாம் அடியில் இடம்பெறுகிறது.

நான்காவது அடியில் ஒரு விநோதமான வேண்டுகோள் விடப்பெறுகிறது. இனிப் பாடலின் பொருளைச் சற்று விரிவாகக் காணலாம்.

'அடியேன் அல்லலெல்லாம் அகல முன் ஆண்டாய் என்று இருந்தேன்' என்பது திருப்பெருந்துறை நிகழ்ச்சியை நினைவுகூர்வதாகும். 'முன் ஆண்டாய்' என்று கூறியதால் இப்பாடல் அந்நிகழ்ச்சிக்குப் பின்னர், சில காலம் கழித்துப் பாடப்பெற்றிருக்க வேண்டும்.

குருநாதர் பெருந்துறையில் ஆண்டுகொண்டார். ஆனால், அவ்வாறு ஆட்கொண்டபோது உன் அல்லலெல்லாம் இதனுடன் போய்விடும் என்று அவர் ஒன்றும் வாக்குத் தரவில்லை. ஆண்டபொழுது கிடைத்த இறையனுபவத்தை, ஆனந்தத்தை அனுபவித்த அடிகளார் இதன் பின்னர்த் தம்முடைய அல்லல் அனைத்தும் போய்விடும் என்று எதிர்பார்த்திருந்தார் என்று நினையவேண்டியுள்ளது. 'என்றிருந்தேன்' என்ற தொடர் என்று நம்பியிருந்தேன் என்ற பொருளைத் தருவதாகும். இந்த நம்பிக்கை எவ்வாறு வந்தது?

'அகல ஆண்டாய்' என்ற தொடரில், அகல என்ற வினையெச்சம் காரண காரியப் பொருளில் வந்து, ஆண்டாய் என்ற வினைகொண்டு முடிந்தது. அதாவது 'என் அல்லல் எல்லாம் அகலுமாறு, நீ என்னை

வந்து ஆண்டுகொண்டாய் என்றுதான் இதுவரை நினைத்திருந்தேன்' என்கிறார்.

இவ்வளவு உறுதிப்பாட்டோடு குருநாதர் ஆண்டபொழுதே தம்முடைய அல்லல் எல்லாம் அகன்றுவிட்டது என்று நம்பியிருந்த அடிகளார், இப்பொழுது 'ஆ ஆ என்றருள', 'செடிசேர் உடலைச் சிதையாதது எத்துக்கு?' என்று பாடவேண்டிய நோக்கமென்ன? நம்பியிருந்த ஒருவர் அந்த நம்பிக்கை பழுதடைத்துவிட்டால், நம்பிக்கை உண்டாக்கியவரைக் குறைகூறலாம்; அன்றேல் நம்பிக்கைக்குத் தாம் தகுதியில்லை என்ற முடிவுக்கு வரலாம். இவை இரண்டும் தவிர வேறு வழியே இல்லை. இதனை மனத்துட் கொண்டு பார்த்தால் அல்லல் அகன்றுவிட்டது என்று நம்பியிருந்த அடிகளார், அது அகலவில்லை என்பதை இப்போது உணர்கின்றார். இப்போது என்ன செய்வது? இந்த நம்பிக்கையைத் தந்தவரைக் குறைகூறலாம்; அதற்கு அடிகளார் தயாராக இல்லை. ஆண்ட அந்த நேரத்தில் இறையனுபவம், ஆனந்தம் என்பவை உள்ளத்திற்குக் கிடைத்தன. அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றப்பட்டதால் இந்த உடலும் எல்லையில்லாத, முன்பின் அனுபவித்தறியாத இன்பத்தைப் பெற்றது. ஆக, உடல், உள்ளம் இரண்டும் இந்த இன்பத்தைப் பெற்றுவிட்ட காரணத்தால் அல்லல் என்பது தமக்கு இனி இல்லை என்று அடிகளார் கருதினார்.

'அல்லல் எல்லாம் அகல' என்ற எதிர்மறை வாய்பாட்டால் கூறினும், உடன்பாட்டு வாய்பாடு விரித்துச் சொல்லப்பெறாவிடினும் குறிப்பால் பெறப்பெற்றது.

அதாவது, உள்ளத்தாலும் உடலாலும் அனுபவிக்கப்பெற்ற அல்லல் எல்லாம் அகன்றது எதிர்மறை நிலை; உள்ளம் இறையனுபவமும் ஆனந்தமும்

பெற்றதும் உடலில் அற்புதமான அமுத தாரைக
ஏற்றப்பெற்றதும் உடன்பாட்டு நிலை.

மாபெரும் அறிவாளியும், கல்வி ஞானம் உடையவரு
ஆகிய அடிகளார், தம்முடைய உள்ளமும் உடலு
அல்லலைத் துறந்ததையும் உணர்ந்தார்; பதிலா
இறையனுபவம், ஆனந்தம் என்பவற்றை உள்ள
பெற்றதையும் உடல் அமுத தாரைகள் பெற்றதையு
நன்றாக, ஆழமாக உணர்ந்திருந்தார். ஆதலின், இவற்றை
கற்பனை யென்று ஒதுக்கமுடியாது. இவை நட
பெற்றிருந்ததால் தம் அல்லல் அறுதியாக நீங்கிவிட்ட
என்று நம்பியதில் எவ்விதத் தவறுமில்லை.

ஆனால், இந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஒரு புதிய அதிர்ச்
அடிகளாருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். உள்ளத்திலு
உடலிலும் ஓரளவு அல்லல் தோன்றியிருக்க வேண்டு
மாபெரும் அறிவாளியாகிய அடிகளார், இந்த நி
வருவதற்குக் காரணமென்ன என்ற ஆராய்ச்சியி
ஈடுபடுகின்றார்.

ஆண்டது உண்மை; ஆண்டதால் அல்லல் போனது
உண்மை. அப்படியானால் இந்த அல்லல் மீள வருவதற்
எது காரணம்? இந்த உடல் இருக்கின்றவரையில் இந்
உடலுக்குரிய குற்றங்கள் இருந்தே தீரும். இந்தக் குற்றங்க
இருக்கின்றவரையில் முன்னர்க் கிடைத்த இறையனுபவ
ஆனந்தம் என்பவை நிலைபெறா. திருவடி சம்பந்த
பெற்றபோது, அமுத தாரைகள் ஏறின; அத்திருவ
சம்பந்தம் நீங்கியபோது அமுத தாரைகள் கொஞ்ச
கொஞ்சமாகக் குறையத் தொடங்கி, உடல் பழை
நிலைக்கு வந்துவிட்டது. அனைத்தையும் இழந்
இப்பொழுதுள்ள நிலைக்கு வருவதற்கு எது காரணம் என்
ஆராய்ச்சியில் தொடங்கி, தருக்க ரீதியாக ஒரு முடிவுக்
வருகின்றார் அடிகளார்.

குருநாதர், தொண்டர்கள் என்பவர்களோடு சேர்ந்து போயிருந்தால் நீங்கிய அல்லல் திரும்பிவர வாய்ப்பேயில்லை. இது நடைபெறாமைக்கு ஒரே காரணம் இந்தப் பழைய உடல் ஆதலால் 'செடி சேர் உடலம் சிதையாதது எத்துக்கு?' என்று இறைவனையே கேட்கின்றார். இந்த உடலத்தைப் போக்காமல் வைத்திருப்பது எதற்காக என்பது இதன் பொருளாம். [செடி-தீமை (பாவம்)]

நான்காவது அடியில் 'உடையாய்'! என்று விளித்து, 'கூவிப் பணிகொள்ளாது ஒறுத்தால் ஒன்றும் போதுமே' என்று பேசுவது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. இதற்கு உண்மையான பொருள் காண வேண்டுமாயின் ஆங்கிலக் கவிஞன் மில்ட்டனுடைய பாடலின் ஓர் அடியை நினைவில் கொள்வது நலம். 'வெளியே காத்து நிற்பவர்களும் உன் பணியையே செய்கின்றார்கள்' (They also serve who stand and wait) என்பதாகும் அந்த அடி. பல சமயங்களில் உயர்ந்த நோக்கத்தோடு சில செயல்கள் செய்யப்பெறுகின்றன. மேலாகப் பார்ப்பதற்கு அவை சரியான செயல்களல்ல என்று தோன்றினாலும், விளைக்கவேண்டிய பயனை ஒட்டியே அந்தச் செயல்களை நல்லனவென்றோ தீயனவென்றோ கொள்ளவேண்டும்.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் மூன்றாம் திருமுறை 103ஆம் பதிகத்தின் முதலாம் பாடலில் வரும் 'அற்றம் மறைப்பதும் உன் பணியே' என்ற தொடருக்கு வாலாயமாகப் பொருள் கூறுபவர்கள், கோவணமாக நின்று உன் மானத்தைக் காப்பது பாம்பேயாகும் என்று பொருள் கூறியுள்ளனர். இங்கு அற்றம் என்ற சொல்லுக்கு மானம் என்று பொருள் கொண்டு இவ்வாறு பொருள் கூறி உள்ளனர். அற்றம் என்ற சொல்லுக்கு உண்மை என்ற பொருளும் உண்டு. பிறர், துயரெய்தாமல் இருக்க, சில சமயங்களில், உண்மையை மறைக்கவேண்டிய சூழ்நிலையும்

ஏற்படலாம். உண்மையை மறைத்தல், என்றால் பொய் கூறுதல் என்று பொருளன்று. அப்பூதியடிகள் 'இப்போது இங்கு அவன் உதவான்' (பெ.பு: அப்பூதி-32) என்று கூறியது அற்றம் மறைப்பது ஆகும். இவ்வாறு மறைப்பதும் இறைவன் பணியேயாகும் என்ற கருத்தைப் பெறவைக்கவே 'அற்றம் மறைப்பதும் உன்பணியே' என்றார் காழிப்பிள்ளையார். இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு 'கூவிப் பணி கொள்ளாது ஒறுத்தால் ஒன்றும் போதுமே' என்ற தொடருக்குச் சற்று விரிவாகப் பொருள் செய்தல் நலம். 'உடையாய்' என்று தொடங்கி 'ஒறுத்தால் ஒன்றும் போதுமே' என்று முடிக்கின்றார் என்பதை மனத்துட் கொள்ள வேண்டும்.

உடையவனுக்கு உடைமையிடத்துச் சகல உரிமைகளும் உண்டு. அதை நினைவூட்டி இப்பொழுது அடிகளார் பேசுகின்றார். 'உடையவனே! உடைமையாகிய என்னைப் கூவிப் பணிகொண்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்ய நீ விரும்பவில்லையாயின் என்னைத் தண்டித்தால்கூடப் போதும்.

'என்னைக் கூவிப் பணிகொண்டாலும் ஒறுத்தாலும் நான் மகிழ்ச்சியடைவேன். இந்த இரண்டனுள் எதை நீ செய்யினும் நான் உன் நேரடிக் கவனத்தில் உள்ளேன் என்பதால் நீ என்னைத் தண்டித்தால்கூட, அதுவே எனக்குப் போதுமானதாகும்' என்கிறார் அடிகளார்.

498. ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின் கருணை
இன்றே இன்றிப் போய்த்தோ தான்
ஏழை பங்கா எம் கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணம் ஆம் என்றே நீ கொண்டால்
என்தான் கெட்டது இரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே 3

இப்பாடலிலும் முன்னைய பாடல்களைப்போல, திருப்பெருந்துறை நிகழ்ச்சியே அடிகளார் மனத்தை நிறைத்து நிற்பதைக் காணலாம். 'ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்ட நின் கருணை' என்பதில் ஒரு நயம் அமைந்துள்ளது. ஒன்றுக்கும் உதவாத நாய் போன்றவனாகிய என்னை என்று அடிகளார் கூறுவதால், தம்மைப்பற்றித் தமக்கே தெரிந்திருக்கும்பொழுது, ஆட்கொண்டவனுக்கு அது எப்படித் தெரியாமல் போயிருக்கும் என்ற கருத்தைப் பெறவைக்கிறார். தம்மை இன்னாரென்று அறிந்திருந்தும், அதாவது ஒன்றுக்கும் உதவாத நாய்போன்றவன் என்று அறிந்திருந்தும், குருநாதர் உய்யக் கொண்டார் என்றால், அச்செயல் எந்தரமும் ஆட்கொள்ளும் அவர் கருணையின்பாற்பட்டதே என்பதை அறிவிக்கவே 'உய்யக் கொண்ட நின் கருணை' என்றார்.

அப்படி, தரம் பாராமல் ஆட்கொண்ட அவர் கருணை, தம்மைப் பொறுத்தவரை இன்று இல்லாமல் எங்கே போய்விட்டது என்ற வினாவை எழுப்புகின்றார்.

இந்த வினாவை எழுப்பிய பிறகு, அடிகளார் உள்ளத்தில் சில தடை, விடைகள் தோன்றியிருக்க வேண்டும். கருணை, இன்று எங்கே போய்விட்டதோ? என்ற அடிகளாரின் வினாவிற்கு, 'நாம் ஆட்கொண்ட போது நீ இருந்த நிலையைவிட, மிகவும் கீழான நிலைக்குச் சென்று, பல குற்றங்களைச் செய்துவிட்டாய். ஆதலால் உன்மீது முன்போலக் கருணை பொழிய வாய்ப்பில்லை' என்று குருநாதர் தடை எழுப்பியதாக மனத்துட் கொண்டு, அந்தத் தடைக்கு விடை கூறுவார்போல மூன்றாவது அடியைப் பாடுகிறார்.

'குன்றே அனைய குற்றங்கள் குணமாம் என்றே நீ கொண்டால்' என்பதில் கொண்டால் என்ற சொல்லுக்குப் பின்வருமாறு பொருள் கொள்ளலாம். 'என் குற்றங்களைக் குற்றம் என்றே கருதி, ஒன்று, இரண்டு என்று கணக்கிட்டு

இந்தக் குற்றங்கள் மலைபோல் வளர்ந்துவிட்டன. இருந்தாலும் அருள் காரணமாக உன்னை மன்னிக்கிறேன் என்றும் நீ கூறலாம். ஐயா! அதைவிட எளிய வழியொன்றுண்டு. இந்த மலைபோன்ற குற்றங்களைக், குற்றம் என்று பெயரிட்டுச் சேர்த்துக்கொண்டே செல்லாமல், ஒவ்வொரு குற்றத்தையும் ஒவ்வொரு குணம் என்றே ஏற்றுக்கொண்டால் கெட்டா போய்விடும்?' என்றவாறு.

'என்தான் கெட்டது?' என்பதைச் சிந்திப்பது நலம். இதுவரை, கருணையைப் பெருங்கடல் என்று பல இடங்களில் உருவகித்துப் பாடியுள்ளார். குற்றங்கள் குன்றுபோல் இருப்பினும் அவை கடலுக்குள் புகும்பொழுது தம்முடைய தனித்தன்மையை இழந்து கடலுக்குள் ஐக்கியமாகிவிடும். குன்று உட்புகுவதால் கடலின் தன்மைக்கு எவ்வித மாசுமில்லை. ஆகவே, எத்தனை குற்றங்கள் செய்யினும் அவற்றைக் குணம் என்றே கருதி, உடையவன் ஏற்றுக்கொண்டால் அவனுடைய கருணைக்கு எவ்விதப் பங்கமும் வராது என்பதை மிகச் சாதுரியமாக 'என்தான் கெட்டது' என்று பேசுகிறார் அடிகளார்.

இப்பொழுது இறைவன் மற்றொரு வினாவை எழுப்பலாம் அல்லவா? குற்றம் என்பதும் குணம் என்பதும் ஒன்றுக்கொன்று மாறுபட்டுத் தனியே நிற்பவை. அவற்றை எப்படி ஒன்றை மற்றொன்றாகக் கொள்ள முடியும் என்று தோன்றக்கூடிய வினாவை ஆசங்கித்து (எதிர்பார்த்து) இரங்கிடாய் என்ற சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம், அதற்கு விடை கூறுகிறார்.

அதன் விளக்கம் வருமாறு. 'ஐயா! நீ சொல்வது உண்மைதான். குற்றம் வேறு; குணம் வேறுதான். குற்றத்தைக் குணமாகக் காண்பதற்கு ஒரு எளிய வழியுண்டு. அற்ப உயிராகிய என்மாட்டு நீ கொண்டுள்ள

பேரிரக்கம் என்ற போர்வையால் என் குற்றங்களை மூடினால், அவை குணமாகவே மாறிவிடும். எனவே, குன்றே அனைய குற்றத்தைக் குணம் என்று நீ கொள்வதற்கு ஒரே வழி என்மாட்டு இரங்குதலைச் செய்தலே ஆகும்'. இரங்கிடாய் என்ற வேண்டுகோளின் பொருள் இதுவேயாகும்.

499. மான் நேர் நோக்கி மணவாளா
மன்னே நின் சீர் மறப்பித்து இவ்
ஊனே புக என்தனை நூக்கி
உழலப் பண்ணுவித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள் செய்து
கோனே கூவிக்கொள்ளும் நாள்
என்று என்று உன்னைக் கூறுவதே 4

இப்பாடலுக்கு வாலாயமாகக் கூறும் பொருள் முறையை விட்டுப் புதிய பொருள் காணலாமோ என்று தோன்றுகிறது.

இவ்வாறு நினைப்பதற்குக் காரணம் அருளாளர்கள் அருளிய சில பாடல்களே ஆகும்.

துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமாறு இலாத என்னை மையல் செய்து
இம்மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய்
(திருமுறை: 2-98-5)

என்று காழிப் பிள்ளையாரும்,

கருவாய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்துடையேன்
(திருமுறை: 4-94-6)

கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு
உருகிற்று என்உள்ளமும் நானும் கிடந்து அலந்து
எய்த்தொழிந்தேன்
(திருமுறை: 4-99-6)

என்று நாவரசர் பெருமானும் பாடியுள்ளனர்.

தம்பியின் போக்கைக் கண்டு வருந்திய திலகவதியாருக்கு வீரட்டப்பெருமான், கனவிடைத் தோன்றி 'முன்னமே முனியாகி நம்மை அடையத் தவம் முயன்றான்' (பெ.பு:திருநாவு-48) என்று கூறியதாகச் சேக்கிழார் பெருமான் நாவரசர் புராணத்தில் கூறுகின்றார்.

இப்பெருமக்கள் இப்பிறவியில் நம்மைப்போலப் பருஉடம்புடன் வாழ்ந்தாலும், தேவை ஏற்படும்போது தங்களுடைய பழமையை நினைவிற்கொண்டு, பாடியுள்ளதைக் காண்கிறோம்

இந்த அடிப்படையை மனத்துட்கொண்டு பார்த்தால் திருவாசகத்தின் இப்பாடலின் முதற்பகுதி புதிய சிந்தனையைத் தூண்டுகிறது. 'மானேர் நோக்கி மணவாளா! மன்னே! நின் சீர் மறப்பித்து, இவ் ஊனே புக, என்தனை நூக்கி உழலப் பண்ணுவித்திட்டாய்' என்ற பகுதியில் மூன்று செய்திகள் பேசப்பெறுகின்றன. சீர் மறப்பித்தல் முதலாவது செய்தி; என்தனை இவ் ஊனே புக நூக்குதல் (அழுத்துதல்) என்பது இரண்டாவது செய்தி; உழலப் பண்ணுவித்திட்டாய் என்பது மூன்றாவது செய்தி. என்தனை என்று கூறியதால் அடிகளார் தம்மைத்தான் குறிப்பிடுகிறார் என்பது வெளிப்படை. 'பண்ணு வித்திட்டாய்' என்ற பயனிலைக்கு ஏற்ப 'மணவாளா! மன்னே!' என்பவை எழுவாயாக நிற்கும்.

நின் சீர் பாடிக்கொண்டிருந்த என்னை, அதனை மறக்குமாறு செய்தாய் என்றும், எங்கோ இருந்த என்னைத்

திருவாதவூரன் என்ற உடம்பினுள் நுழைக்கினாய் என்றும், எல்லையில்லாத துன்பங்களின் இடையே உழலுமாறு செய்தாய் என்றும் இவ்வளவு அழுத்தந் திருத்தமாகக் கூறுவதால் இப்பகுதி அடிகளாரின் இப்பிறப்பிற்கு முற்பட்ட நிலைபற்றிப் பேசுவதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

காழிப் பிள்ளையார் 'திருந்தடி மறக்குமாறு இலாத என்னை மையல் செய்து இம்மண்ணின்மேல் பிறக்குமாறு காட்டினாய்' என்று பாடுகிறார். அதாவது திருவடி தியானத்திலேயே ஆழ்ந்திருந்த அவருடைய முந்தைய நிலையை மாற்றி, மண்ணிடைப் பிறக்குமாறு செய்தான். பிறவியை வேண்டாதிருந்த அவரை, மையல் செய்து மண்ணிடைப் பிறக்குமாறு செய்தான். தவிர, இம்மண்ணின்மேல் பிறக்கும்போதேகூட அந்தப் பழைய நினைவோடேயே பிறக்கச்செய்தான் என்று பாடியுள்ளார். இந்த நுணுக்கத்தை நன்கு அறிந்துகொண்ட சேக்கிழார் பெருமான், சீகாழிக் குளக்கரையில் பிள்ளையார் ஏன் அழுதார் என்று கூறவரும்போது 'தம் மேலைச் சார்பு உணர்ந்தோ சாரும் பிள்ளைமைதானோ' (பெ.பு: திருஞான-63) அழுகைக்குக் காரணம் என்கிறார். தம் மேலைச் சார்பு என்பது 'துறக்குமா சொலப்படாய்' என்ற பாடலின் நுணுக்க உரையாக அமைந்துள்ளதைக் காணலாம்.

அடிகளார் 'சீர் மறப்பித்து' என்று பாடுவதால் இறைவன் சீர் பாடிக்கொண்டிருந்த இவருடைய பழைய நிலையை மாற்றி, அந்த ஆன்மாவை நிலவுலகிற்கு அனுப்பும்போது இரண்டு காரியங்களைச் செய்தான் பெருமான் என்ற கருத்துப்படப் பாடுகிறார்.. ஒன்று, சீர்பாடும் இயல்பை மறப்பித்தான். இரண்டாவது திருவாதவூரன் என்ற உடலில் அந்த ஆன்மாவை நுழைக்கினான்.

இந்த நிலைமையில் பிறந்த ஒருவர், ஏனைய மக்களைப்போல பிறவித் துன்பத்திலும், உலகியற் துன்பத்திலும் உழலவேண்டிய தேவையில்லை. ஆனால், அதிலும் உழலுமாறு செய்துவிட்டான் என்று பாடுகிறார் அடிகளார்.

இதுவரை திருவாதவூரர் வரலாற்றைக் கூறும் புராணங்களில் கூறப்படாத ஓர் உண்மையை இப்பாடல் அறிவிக்கிறதோ என்ற ஐயம் தோன்றுகிறது. இதுபற்றி மேலும் சிந்திப்பது நலம்.

மேலே கூறிய இரண்டு அடிகளுக்கு ஏற்ப அப்பொருளைத் தொடர்வதானால் பின்வருமாறு பொருள் கூறலாம். 'கோனே! என்னுடைய அறியாமையை நீ நன்றாக அறிந்திருக்க வேண்டும். காரணம், சீர் மறப்பித்தவனும் பிறவியில் நூக்கியவனும் நீயேயாதலால் என் அறியாமையை நீ நன்கு அறிந்திருப்பாய் அல்லவா? அதை இப்பொழுது உன் நினைவிற்குக் கொண்டு வருகிறேன். இப்பொழுது பழைய உறவைப் புதுப்பிக்கும் முறையில் நீ என்னைக் கூவி அழைத்துக்கொள்ளும் நாள் வந்துவிட்டது. தம்மானை அறியாத சாதியார் போலவும் தாய் தன்னை அறியாத கன்று போலவும், உன்னை இனங்கண்டுகொள்ளாமல் அலமருகின்றேன். நீயாகப் பார்த்து என்னைக் கூவிக்கொள்ளும் நாள் என்றைக்கு வரும்? அப்படி நீ என்னைக் கூவிக்கொள்ளும்போது, உன் இணையடியில் கலந்து, நான் மறந்துபோன உன் சீரை மறுபடியும் புகழும் வாய்ப்பு என்று வருமோ என்று ஏக்கறுகின்றேன்' என்றவாறு.

500. கூறும் நாவே முதலாகக்
கூறும் கரணம் எல்லாம் நீ
தேறும் வகை நீ திகைப்பும் நீ
தீமை நன்மை முழுதும் நீ

வேறு ஓர் பரிசு இங்கு ஒன்று இல்லை
மெய்ம்மை உன்னை விரித்து உரைக்கின்
தேறும் வகை என் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ 5

இப்பாடல், முன்னரும் பல இடங்களில் அடிகளார் கூறிய கருத்தை வலியுறுத்துவதாய் அமைந்துள்ளது.

பல்வேறு வடிவமும், தோற்றமும், வேறுபாடுகளும் உடைய பொருள்களால் நிறைந்துள்ள இப்பிரபஞ்சத்தை நோக்குவார்க்கு இவற்றிடையே காணப்பெறும் வேறுபாடே பெரிதாகக் காட்சியளிக்கும். வேறுபாடுகளுடன் காணப் பெறும் பொருள்களை எடுத்துக்கொண்டு ஆராயத் தொடங்கினால், வடிவம், உருவம், செயற்பாடு ஆகிய வேறுபாடுகளைக் களைந்து, மெய்ம்மையாகப் பொருள்களைக் காண முற்பட்டால், இவை அனைத்தும் அணு என்ற ஒன்றின் பல்வேறு வகையான சேர்க்கை என்று அறியமுடியும்.

அவன், அவள், அது என்ற மூன்று சொற்களாலும் சுட்டப்படும் பொருள் ஒன்றேதான். அந்த ஒரு பொருளை விரித்து உரைக்கத் தொடங்கினால் அதுபற்றிப் பேசும் நாவும், ஏனைய மனம், மெய் முதலிய கருவிகளும், அவற்றை ஆட்டிப்படைக்கும் கரணங்களும், எல்லாம் அந்த ஒரே பொருளின் பல்வகை விரிவுகள் என்பதை அறியமுடியும்.

இவற்றோடு மிக நுண்மையானதும், நாமேகூட வேறு பிரித்துக் காணக்கூடியதுமான நன்மை தீமை போன்ற பண்புகளும் அதே பொருள்தான்.

மாறுபாடுடைய பொருள்களைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்குகையில் பொருள்களிடையே காணப்படும் கோடிக் கணக்கான மாறுபாடுகள் நமக்குத் திகைப்பை

உண்டாக்குகின்றன. இந்தத் திகைப்பைக் கண்டு அஞ்சவேண்டிய தேவையில்லை. திகைப்புத் தோன்றுவதே தெளிவைப் பெறுவதற்கு வழியாதலின், அந்தத் திகைப்பையும் அவன் என்றார். அந்தத் திகைப்பினூடே, மெள்ள மெள்ளச் சிந்திக்கத் தொடங்கி, இதுதான் முடிந்த பொருள் என்பதைக் காணும் தெளிவு பிறக்கிறதல்லவா? எனவே, ஆராயும் வகையும் அதன் முடிவும் அவனே என்பார் 'தேறும் வகை நீ' என்றார்.

ஆய்ந்து பார்த்த அளவில் நா முதலிய கருவிகளும், அவற்றால் பேசப்பெறும் பொருளும், தெளிவு-திகைப்பு என்றும் நன்மை-தீமை என்றும் முரண்பட்ட சொற்களால் குறிக்கப்படுவதும் ஆகிய அந்தப் பொருள் ஒன்றேதான்.

ஒரு பொருள் என்று எண்ணிவிட்ட பிறகு, அடுத்த பொருள் என்று எண்ணுவதற்கு அந்த ஒரு பொருளை அன்றி வேறு இல்லை. காணப்படும் பொருள்களின் வடிவு, உருவம், தன்மை, இயல்பு ஆகிய அனைத்து வேறுபாடுகளிலும் புகுந்து நிற்பது இந்த ஒரே பொருளாதலின், இந்தப் பொருளைத் தவிர, 'வேறோர் பரிசு இங்கு ஒன்று இல்லை' என்றார்.

'சிவலோகனே! யான் கடைத்தேறும் வழிதான் என்ன? மாறுபாடுகளைக் கடந்து நீ ஒருவனே உள்ளாய் என்பதை என் அறிவு சுட்டுகிறது. என்றாலும், மனத்தாலும் சித்தத்தாலும் இந்த உண்மையைத் தேறி, உன்னிடம் அடைக்கலம் புகவேண்டும் என்ற முடிவிற்கு வந்தாலும், அதனை எவ்வாறு செய்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கின்றேன்.

'வழியோடு சென்ற என்னை இழுத்துப் பிடித்து ஆட்கொண்ட உனக்கு, ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். என் உள்ளத்திடை ஏற்பட்டுள்ள இத்திகைப்பை நீக்கி, என்னைத் தேற்ற வேண்டிய கடமை

நின்பாலுள்ளது என்பதை விண்ணப்பித்துக் கொள்கிறேன்' என்கிறார்.

501. வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்தன் விருப்பு அன்றே 6

மனித மனத்தின் சில விநோதமான கூறுபாடுகள் இப்பாடலில் விரிவாகப் பேசப்பெற்றுள்ளன. மனம் ஒன்றை அவாவி நின்றால், எல்லா அவாவிற்கும் தருக்க ரீதியாகக் காரணம் கூறுதல் இயலாது. பல சமயங்களில் அப்பொருளை இப்பொழுது பெற்றால் அது பின்னர்த் தீமை பயக்கும் என்று அறிந்தும்கூட, உடனடியாக ஏற்படும் இன்பத்திற்காக அதனை விரும்பி ஏற்பது மனித மனத்தின் இயல்புகளில் ஒன்று.

நீரிழிவு நோயாளி இனிப்புப் பண்டம் தனக்குத் தீமை பயக்குமென்று அறிந்திருந்தும், அதனைத் தேடி உண்ணுதல் இன்றும் நாம் காண்கின்ற ஒரு காட்சியாகும். தீமை பயக்கும் என்று தெரிந்திருந்தும் ஆசை காரணமாகச் செய்யப்படும் தவறாகும் இது.

இதையல்லாமல் மற்றொரு வகையும் உண்டு. பொருளின்மேற் கொண்ட ஆசை, தீமை பயக்குமா, நன்மை பயக்குமா என்று பாகுபடுத்தி உணரமுடியாத குழந்தை நிலையாகும் அது. பளபள என்றிருக்கும் சவரப் பிளேடை தன் கையில் பெறவேண்டும் என்று குழந்தை பிடிவாதம் பிடிக்கிறது. ஆனால், அது கையில்

கிடைத்தவுடன் உள்ளங்கையில் பல காயங்கள் ஏற்பட்டுவிடும். குழந்தைக்கு அதுபற்றி ஒன்றும் தெரியாது. எனவே, பெரியவர்கள் குழந்தை எவ்வளவு அழுதாலும் அதன் கையில் இதனைத் தாரார். குழந்தையிடம் கொடுக்கக்கூடியது எது, கொடுக்கக் கூடாதது எது என்பதை அறிவு முதிர்ந்த பெரியோர்கள் நன்கு அறிவர்.

இந்தக் கருத்தைத்தான் 'வேண்டத் தக்கது அறிவோய் நீ' என்றார்.

அடுத்து உள்ளது 'வேண்ட முழுதும் தருவோய் நீ' என்பதாகும். இதில் வரும் 'முழுதும்' என்ற சொல் மிகப் பரந்துபட்ட பொருளைத் தந்துநிற்கின்றது. பின்னர்த் தீமை பயக்கும் என்பதை அறிந்தோ அறியாமலோ இப்பொழுது மிக்க அழுத்தத்துடன் ஒன்றை வேண்டினால் அதனையும் இறைவன் தருவான் என்று பொருள் செய்யவும் இதில் இடமுள்ளது. முற்றறிவினன் ஆகிய இறைவன், பின்னர்த் தீமை பயக்கும் என்பதை நன்கு அறிந்திருந்தும் ஏன் அதனைத் தருகிறான் என்றால் அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

முதலாவது, தொடக்கத்தில் ஒன்றை மகிழ்ச்சியுடன் அனுபவித்து, பின்னர் அது தீமை பயப்பதை அறிகிறான். அப்படி அறியும்போது அனுபவமும் விரிவடைந்து, இனி ஒன்றை வேண்டும்போது இத்தகைய தவற்றைச் செய்யக்கூடாது என்ற அனுபவத்தைப் பெறுவதற்கு இது உதவுகிறது.

இரண்டாவது, மிக நுணுக்கமான ஒன்றாகும். தீமையை அனுபவிக்கவேண்டிய வினை உந்துமேயானால், தீமையை விளைக்கும் அப்பொருளை மனம் நாடச் செய்யும். இறைவனும் அப்பொருளைப் பெறுமாறு செய்கிறான். இதனால் பெறும் அனுபவம், அறிவு விசாலத்தைத் தருவதுடன் வினை அனுபவித்து அழிவதையும் செய்கிறது.

இவற்றையெல்லாம் மனத்திற் கொண்டு நன்மை, தீமையென்று எதை வேண்டினாலும் அவற்றை முழுவதுமாகத் தருகிறாள் என்ற கருத்தை வெளிப்படுத்த 'வேண்ட முழுதும் தருவோய் நீ' என்கிறார்.

அடுத்துள்ளது 'வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ, வேண்டி, என்னைப் பணிகொண்டாய்' என்பதாகும். இங்குச் சொல்லப்பெற்ற கதை மிகப் பழைய கதையாயினும் அதனை எடுத்துக்கூறித் தம் அனுபவத்தையும் உடன் சேர்த்ததன் மூலம் அவனுடைய கருணைக்கு எல்லையே இல்லை என்பதைத் தெரிவிக்கின்றார்.

வேண்டுதல் வேண்டாமை இலானாகிய ஒருவனை அடைய, அகப்பற்று புறப்பற்றுக்களை நீக்கிச் சரணம் என்று தம்மையே அவர்கள் தந்திருப்பார்களேயாயின் அவர்களுக்கு அரியனாக அவன் இருந்திருக்க மாட்டான். இந்த நுண்ணிய கருத்தை அறிவுறுத்தவே, 'அயன், மால்' என்ற தொடருக்கு முன்னர் 'வேண்டும்' என்ற சொல்லைப் பெய்கின்றார். 'வேண்டும்' என்ற அடை இருவருக்கும் பொதுவாய் நின்றது. சரண்புகுந்து திருவடிக் காட்சி தரவேண்டும் என்று வேண்டிக்கொள்வதற்குப் பதிலாக, அடியையும் முடியையும் காணவேண்டும் என்ற தற்போதத்துடன் புறப்பட்டனர் இருவரும். அறிவு (அயன்), செல்வம் (மால்) என்ற இரண்டிற்கும் இயல்பாக நிற்பது தன்முனைப்பு. தன்முனைப்பின் இலக்கணமே எல்லாவற்றையும் தனக்கு வேண்டும் என்று நினைப்பதாகும். எனவே, அவர்கள் இருவருக்கும் அவன் அரியனாகினான்.

திருவாதவூரராக இருந்தபொழுதுகூட அமைச்சர் பதவி முதல் எதனையும் வேண்டும் என்று அவர் நாடிச் செல்லவில்லை. தற்போதம் குறைந்திருந்தமையின் எந்த ஒன்றையும் வேண்டும், வேண்டாம் என்று நினைக்கும்

நினைவும் அவர்பால் அதிகமில்லை. இவ்வாறு நினைப்பதற்கு ஒரு காரணமுண்டு.

ஒரு பேரரசின் அமைச்சராக இருந்த ஒருவர் குதிரை வாங்கும் பணிக்கு ஏவுதற் கர்த்தாவாக இருந்திருக்க வேண்டும். அவ்வாறின்றி இயற்றுதல் கர்த்தாவாக இருந்து, தாமே புறப்பட்டுச் செல்வது தம்முடைய பதவிக்கு ஏற்றதன்று என்று அவர் நினைக்கவில்லை. இந்தச் செயலே தன்முனைப்பு அவர்பால் பெரிதாக இடம்பெறவில்லை என்பதைத் தெரிவிக்கின்றது.

இவற்றையெல்லாம் மனத்துட் கொண்டு பார்த்தால் 'வேண்டி என்னைப் பணிகொண்டாய்' என்பதன் நுணுக்கம் நன்கு விளங்கும். வேறு வகையாகக் கூறுமிடத்து, தன்முனைப்பு மிக மிக இறைவன் எட்டிப் போய் விடுகிறான்; தன்முனைப்புக் குறையக் குறைய இறைவன் நெருங்கி வருகிறான் என்பதை உணரலாம். வேண்டும் என்ற இருவர்க்கும் அரியோன், எதனையும் வேண்டும் என்று விரும்பாத ஒருவருக்குத் தானே நெருங்கி வந்து, பிறர் காணமுடியாத திருவடியைத் தம் கையால் பிடிக்கவும், தலையால் சூடவும் அருள் செய்தான்.

இந்த இடத்தில் 499 ஆம் பாடலில் 'சீர் மறப்பித்து இவ் ஊனே புக எந்தனை நூக்கி' என்று வரும் பகுதியை உடன்வைத்து எண்ணினால், 'வேண்டி என்னைப் பணி கொண்டாய்' என்பதன் பொருள் நன்கு விளங்கும்.

அடுத்துள்ள பகுதியில் இரண்டு அருங் கருத்துக்களைப் பேசுகிறார். அடிகளார்,

முதலாவது, 'வேண்டி, நீ யாது அருள் செய்தாய், யானும் அதுவே வேண்டின் அல்லால்' என்பதாகும். அதாவது 'எந்த ஒன்றை எனக்குத் தரவேண்டும் என்று நீ

விரும்பித் தந்தாலும், அதனையே நானும் விரும்பி ஏற்கும் பொருளாகக் கருதி ஏற்றுக்கொள்வேன்' என்பது. உண்மை அன்பில் திளைத்துநிற்கும் கணவன் மனைவி இருவரிடையே இந்த மன நிலையைக் காணலாம். மகளிர் விரும்பி அணிவது புடைவையாகும். அதன் நிறம், அமைப்பு முறை, சாயல் என்பவற்றில் ஒவ்வொரு பெண்ணின் கற்பனையிலும் இவை தனித்து இடம் பெறும். இவற்றையல்லாத ஒரு புடவை எவ்வளவு சிறப்புடைய தாயினும் அந்தப் பெண் விரும்பி அணியமாட்டாள். என்றாலும், கணவன் தான் விரும்பி ஆசைப்பட்டு ஒரு புடைவையை வாங்கித் தருவானேயானால் அதனைப் பெருவிருப்பத்தோடு மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளுகிறாள். காரணம் அவன் தந்தது என்பதுதான்.

அதே மனநிலையில்தான் அடிகளாரும் யாது நீ அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டுகிறேன் என்கிறார்.

இரண்டாவது, மனித மனநிலையின் ஒரு வெளிப்பாட்டை உணர்த்துகிறது. மிக உயர்ந்த மனநிலையில் சத்துவ குணத்திலேயே அமர்ந்திருப்பவர்கள் கூடத் திடீரென்று கீழிறங்கி வந்து அற்பப் பொருளுக்கு ஆசைப்படுதலும் உண்டு. இவ்வாறின்றித் தம் மனம் இவ்வாறு கீழிறங்கிச் செல்வது, தம் ஊழ் வினையின் விளையாட்டு என்று கருதுபவர்களும் உண்டு.

தற்போதத்தை அறவே ஒழித்துவிட்ட அடிகளார் போன்றவர்களின் மனத்தில் ஏதோ ஒன்று வேண்டுமென்ற ஆசை அல்லது விருப்பம் தோன்றுமானால் அது இறைவனால் தோற்றுவிக்கப்பெற்றது என்றே அவர்கள் கருதினர். அதனையே 'வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உந்தன் விருப்பன்றே' என்று பாடுகின்றார்.

502. அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே 7

இப்பாடலின் முதலடி திருப்பெருந்துறை நிகழ்ச்சியை நினைவூட்டுவதாகும். 'அன்றே' என்ற சொல் திருப்பெருந் துறையில் குருந்தமரத்தடியில் இருந்து குருநாதர் இவரை ஆட்கொண்ட செயலைக் குறிப்பதாகும். அப்படி ஆட்கொண்டபோது அடிகளாரின் உடல், பொருள், ஆவி மூன்றையும் அவர் எடுத்துக்கொண்டார் என்று பேசுகிறார் அடிகளார்.

குருவினிடத்துச் செல்கின்ற ஒருவர் நிவேதனப் பொருள்களாகச் சிலவற்றை எடுத்துச் செல்வர். அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று குருவினிடம் விண்ணப்பம் செய்வர். அந்த நிவேதனத்தில் ஒரு சிறு பகுதியைக் குரு ஏற்றுக்கொண்டு, எஞ்சியதைப் பிரசாதமாகக் கொண்டுவந்தவருக்கே திருப்பித் தந்து விடுவார். இதுவே மானிட குருமார்களின் இயல்பாகும்.

ஆனால், குருந்த மரத்தடியில் இருந்த குருநாதர் மானிடர் அல்லர். எனவே, அவரை அடிகளார் வணங்கியபோது இவர்பாலுள்ள உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் அவரே எடுத்துக்கொண்டார். எடுத்துக் கொள்ளலாமா, வேண்டாவா என்ற வினாக்களைக் குருநாதர் எழுப்பவில்லை; அடிகளாரின் மனநிலை என்ன என்றும் கேட்கவில்லை. திருவடிகளில் வீழ்ந்த திருவாதவூரரின் உடல், பொருள், ஆவி அனைத்தும்

குருநாதரால் எடுத்துக்கொள்ளப்பெற்றன. இதனையே அடிகளார் 'என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ?' என்று இப்பாடலிலும் 'தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை' (திருவாச:397) என்று பிறிதோர் இடத்திலும் பாடியுள்ளமையால் அறியலாம்.

இவருடைய விருப்பத்தை அறிந்துகொள்ள ஒரு சொல்லைக்கூடச் சொல்லாமல் உடல், பொருள், ஆவி மூன்றையும் குருநாதர் எடுத்துக் கொண்டார் என்றால், மணிவாசகர் என்ற பெயருக்குரிய, தற்போதத்தோடு கூடிய ஒருவர், அங்கு இல்லை என்பதுதானே பொருள்? எனவேதான், 'இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ?' என்று பேசுகின்றார்.

தன் பரிசு, வினை இரண்டு, சாரும் மலம் மூன்றோடு இருந்த திருவாதவூரரைத் தம் திருவடிகளில் இணைத்துக் கொண்டு, அவரை மணிவாசகராக மாற்றினார் குருநாதர். இந்நிலையில் திருவாதவூரரிடம் இருந்த தன் பரிசு, இரு வினை, மும் மலம் ஆகியவற்றைத் தாங்கி, ஏற்று, அவற்றை அழிக்கும் கடமை குருநாதரிடம் வந்துவிட்டது. ஒரே விநாடியில் குருநாதர் இவற்றைச் செய்துவிட்டார். இது இயலுமா என்று வினவுவார்க்கு விடை கூறுவார்போல, அந்தக் குருநாதர் எட்டுத் தோள்களும், மூன்று கண்களும் உடையவர் என்கிறார். இரண்டு தோள்களையுடைய திருவாதவூரர் இதுவரைக்கும் சுமந்த வினை, மலம் ஆகியவற்றை எட்டுத் தோள்களையும், நெற்றிக்கண்ணையும் உடைய ஒருவர் எடுத்துச் சாம்பலாக்குவது எளிது என்பதைக் குறிக்கவே 'எண்தோள் முக்கண் எம்மானே' என்றார்.

உடல், பொருள், ஆவி மூன்றும் எடுத்துக் கொள்ளப் பெற்ற பிறகு, அந்த உடலுக்கும் ஆவிக்கும் நல்லது கெட்டது எது நேர்ந்தாலும் அதற்குப் பொறுப்பு

குருநாதரைச் சார்ந்ததாகும். ஆகவேதான், 'நன்றே செய்வாய் பிழை செய்வாய்' நான் இதற்குத் தலைவனல்லன் என்கிறார் அடிகளார்.

இப்பாடலின் பொருளை இம்முறையில் விளங்கிக் கொள்ள, உலக வழக்கில் இன்று நடைமுறையில் உள்ள ஓர் உதாரணத்தை அறிந்துகொள்வது நலம்.

மாடு விற்க வருபவர், விலை முதலியவற்றைப் பேசி முடித்தவுடன் ஒரு காரியத்தைச் செய்வார். விற்பவர் மாட்டின் இடப்புறம் நின்றுகொள்வார். வாங்குபவர் வலப்புறம் நின்றுகொள்வார். விற்பவர், மாட்டின் மூக்குக் கயிற்றை மாட்டின் முதுகு வழியாக, வாங்குவோரிடம் கொடுத்துவிடுவார். வாங்குபவர் அந்தக் கயிற்றைக் கையில் பெற்ற விநாடிமுதல் மாடு அவருக்குச் சொந்தமாகிவிடும். அடுத்த விநாடியே அந்த மாடு கீழே விழுந்து இறந்துவிட்டால்கூட அந்த நஷ்டம் வாங்கியவரையே சாரும். இது தமிழ்நாட்டு மரபு.

குதிரைகளை விற்க வந்த குதிரைச் சேவகன், குதிரையின் சேணைக்கயிற்றை, வலப்புறம் இருந்த பாண்டியனிடம் குதிரையின் முதுகின் வழியாகக் கொடுத்துவிட்டான். இதனைக் 'கயிறுமாறிய படலம்' என முன்னோர் கூறினர். அந்த விநாடியிலிருந்து குதிரைகளின் சாவும் வாழ்வும் பாண்டியனைச் சேர்ந்ததே தவிர, விற்றவனைக் கேட்க உரிமையில்லை. அப்படிக் கயிறு மாற்றிய குதிரைச் சேவகன், திருவாதவூராரிடம் தந்த பொன்னிற்குப் பதிலாக இந்தக் குதிரைகள் விற்கப்பட்டன என்று கூறிவிட்டான்; பாண்டியனும் அதனை ஏற்றுக்கொண்டான். மறுநாள் பரிகள் நரிகளாயின என்றால், அதற்குப் பொறுப்புப் பாண்டியனே தவிர, குதிரைச் சேவகனோ, திருவாதவூரரோ அல்லர்.

இந்த நுணுக்கம்தான் மேலைப் பாடலில் பேசப்பெற்றுள்ளது.

'குன்றே அனையாய்! எந்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாம் ஆட்கொண்டபோதே கொண்டிலையோ? இடையூறு எனக்கு உண்டோ? நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகம்?' என்ற முறையில் பாடல் அமைந்துள்ளது.

503. நாயின் கடை ஆம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன் வசமே
வைத்திட்டுஇருக்கும் அதுஅன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்னதோ இங்கு அதிகாரம்
காயத்து இடுவாய் உன்னுடைய
கழல் கீழ் வைப்பாய் கண் நுதலே 8

இதுவரையில் தம்முடைய முன்னேற்றத்திற்கு இடையூறாக இருப்பது இந்த உடம்பு என்ற நினைவில் பல பாடல்கள் பாடியுள்ளார். இந்த உடம்பை விட்டால் அடியார்களோடு சேர்ந்து அவர் திருவடியின் எதிரே அமர்ந்திருக்கலாம் என்ற காரணத்தால் உடம்பை விட்டுவிட வேண்டும் என விரும்பினார். ஆனால், இந்த உடம்பு குருநாதர் உடைமை ஆதலால் அதைப் போக்கிக் கொள்ளும் அதிகாரம் தமக்கில்லை என்று உணர்ந்ததால் 'செத்திடப் பணியாய்' (திருவாச:400) என்றெல்லாம் பாடினார். ஆனால், இப்பொழுது அடிகளார் மனத்தில் புதிய சிந்தனை ஒன்று புகுந்துவிட்டது. உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் எடுத்துக்கொண்ட குருநாதர், தம்முடைய சொத்தாகிய இந்த உடம்பை இங்கு விட்டுவைத்துள்ளார். எனவே, அது செத்திடவேண்டும் என்று கேட்பதற்குக்கூடத் தமக்கு உரிமையில்லை என்பதை

உணர்ந்துவிட்ட அடிகளார் 'நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய் மாயப் பிறவியும் உன் வசமே (சொத்தே)' என்று பேசுகிறார்.

மேலும், குருநாதருடைய சொத்தை வைத்திருக்கும் கடப்பாடுடைய எனக்கு, இந்த உடம்பை மேலும் வைத்திருக்க அவர் ஆணையிட்டாலும் சரி, அன்றி இந்த உடம்பை ஒழித்து அவர் திருவடிகளில் சேர்த்துக் கொண்டாலும் சரி, (காயத்திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய்) அதனை முடிவு செய்ய நான் யார்? (ஆயக்கடவேன் நானோதான்) இந்த முடிவை எடுக்க எனக்கு என்ன அதிகாரம் உள்ளது? (என்னதோ இங்கு அதிகாரம்?) என்கிறார்.

504. கண் ஆர் நுதலோய் கழல் இணைகள்
கண்டேன் கண்கள் களி கூர
எண்ணாது இரவும் பகலும் நான்
அவையே எண்ணும் அது அல்லால்
மண்மேல் யாக்கை விடும் ஆறும்
வந்து உன் கழற்கே புகும் ஆறும்
அண்ணா எண்ணக் கடவேனோ
அடிமை சால அழகு உடைத்தே 9

மேலே இரண்டு பாடல்களிலும் கூறப்பட்ட கருத்தே மீண்டும் இங்கு பேசப்பெறுகிறது.

'கழலிணைகள் கண்கள் கனிகூரக் கண்டேன். 'வேறு சிந்தனை இல்லாமல் இரவும் பகலும் அத்திருவடிகளையே நினைந்துகொண்டிருக்க வேண்டும். அதனை விட்டுவிட்டு, மண் உலகில் இந்த உடம்பை விட்டுவிட வேண்டும் என்றும், விண்ணில் உன் திருவடிகளில் வந்து இணைந்து விடவேண்டும் என்றும் எண்ணுவது சரியா? நீ எடுக்க வேண்டிய முடிவை, உன் அடிமையாகிய யான்

மேற்கொள்ளத் தொடங்கினால், என் அடிமைத் தன்மை மிக அழகானது அல்லவா' என்றவாறு.

இந்த மூன்று பாடல்களிலும் ஒரே கருத்து, பன்னிப் பேசப்பெறுகிறது. இதுவரை, எப்படியாவது இந்த உலகை விட்டுவிட்டு அவன் திருவடியைச் சென்றடைய, இந்த உடலை அவன் போக்கவேண்டும் எனப் பாடிவந்துள்ளார் அல்லவா? இறையனுபவம் மிக மிக, தற்போதம் அழிய அழிய, இறைப்பிரேமையில் மூழ்கிவிட்ட நிலையில், இந்த உடம்பை எடுத்துக்கொள் என்று கேட்பதுகூட ஓர் அடிமைக்கு உகந்ததன்று என்ற எண்ணம் வலுவாகப் புகுந்துவிடுகிறது. அதன் பயனாகவே இந்த மூன்று பாடல்களும் இங்கு இடம்பெற்றுள்ளன.

505. அழகே புரிந்திட்டு அடி நாயேன்
அரற்றுகின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம் எனக்குப்
புராண நீ தந்தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே 10

முந்தைய பாடல்களைப்போல் இந்தப் பாடலிலும் திருப்பெருந்துறை நிகழ்ச்சி நினைவுகூரப்படுகிறது. 'உடையானே! திகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணிகொண்டாய்; (அப்படியிருந்தும்) அழகே புரிந்திட்டு அடிநாயேன் அரற்றுகின்றேன்'.

'நாம, ரூபம் கடந்த பரம்பொருளாகிய நீ என்பொருட்டு, அழகிய மானுட வடிவு தாங்கி (திகழா நின்ற திருமேனி காட்டி) என்னை ஆட்கொண்டாய். உன் திருமேனியைக் கண்டும், உன் திருவடி சம்பந்தம் பெற்றும்

திருந்தாத நாயேனாகிய நான், அழகல்லாத செயல்களைச் செய்துவிட்டு இப்பொழுது அதன் விளைவாக என் இழுப்பை—(குருநாதரையும் அடியார்களையும் இழந்தமையை) —எண்ணி அரற்றித் திரிகின்றேன்' என்றவாறு.

'புராண! குழகா! கோனே! கோல மறையோனே! எனக்குப் புகழே பெரிய பதந்தந்து அருளாதே நீ என்னைக் குழைத்தாயே (இது சரியோ)' என்றவாறு.

தரிசனமும் திருவடி தீட்சையும் தந்த குருநாதர் அடுத்துச் செய்யவேண்டிய செயலைச் செய்யாமல் இடையே விட்டுப்போனது முறையோ என்கிறார். அதாவது, திருவடி சம்பந்தம் பெற்றவர்கள் உடனே பெறவேண்டியது, புகழோடு கூடிய பெரும்பதமாகிய சிவலோகம். அதனைத் தராத குருநாதர் மேலும் ஒரு செயலைச் செய்துவிட்டார் என்று நொந்துகொள்கிறார். அதாவது திருவடி சம்பந்தம் பெற்ற பிறகும் அடிகளாரின் உள்ளத்தில் தெளிவு பிறக்காமல் குழம்புமாறு செய்தார் என்கிறார்.

மேலே உள்ள நான்கு பாடல்களிலும், இருக்கும் இடம் தேடி வந்து அருள் செய்த குருநாதர், அதன் பயனை முழுவதுமாக அடிகளார் பெறாமல் செய்ததுடன் குழப்பம் நீடிக்குமாறும் செய்துவிட்டார் என்ற வருத்தமே பெரிதாகப் பேசப்பெறுகிறது.

ॐ ॐ ॐ

34. உயிருண்ணிப் பத்து

[சிவானந்தம் மேலிடுதல்]

உயிருண்ணிப் பத்து என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள பத்துப் பாடல்களிலும் இந்தச் சொல் இடம்பெறவில்லை. எனவே, பிற்காலத்தார் அவர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொடுத்த தலைப்பு என்று கொள்வதில் தவறில்லை.

உண் என்ற பகுதி கால இடைநிலைகளோடு சேர்ந்து, அன் விகுதி பெற்று, உண்டனன். உண்பவன் என வருவதுபோல இங்கும் இகர விகுதி பெற்று உண்ணி என்று வந்துள்ளது. இங்கே உண்ணுதல் என்பது தன்வயமாக்குதல் என்ற பொருளைத் தரும்.

திருவருள் தனியேயும், உயிர் தனியேயும் நின்ற நிலை போக, திருவருள் உயிரைத் தன்வயப்படுத்தி ஆனந்தத்தால் நிரப்புதலின் உயிருண்ணி என்றார்.

ஒருவன் ஒரு பொருளை உண்டான் என்றால், உண்ணப்பட்ட சில நேரம்வரை உண்டவனின் உள்ளே சென்ற உணவு தனித்தே நிற்கும். பின்னர் அந்த உணவு தன்னிலை மாறிக் குருதியில் கலந்துவிடுகிறது. அதேபோலத் திருவருளால் உண்ணப்பெற்ற உயிர், உண்ணப்படும்வரை தன் தனிநிலையில் நின்று, பின்னர்த் திருவருளில் மூழ்கிய நிலையில் தற்போதத்தை இழந்துவிடுகிறது. அப்படி இழந்துவிட்ட நிலையில் மிஞ்சுவது ஆனந்தம் ஒன்றேயாம்.

அடிகளாரின் ஆன்மாவை உண்டு, தன்வயப்படுத்திக் கொண்டு, ஆனந்தத்துள் அமிழ்த்திக் கரையுமாறு செய்து விட்டபின் அங்கே உயிரை உண்ட திருவருள்மட்டுந்தான்

எஞ்சி நிற்கிறது. எனவே, அதனை உயிருண்ணி என்று பெயரிட்டனர்போலும்.

எவ்வளவு சிந்தித்தாலும் இப்படி ஒரு தலைப்பைக் தர இப்பாடல்களில் எப்பகுதியும் இடந்தரவில்லை.

இதற்குச், 'சிவானந்தம் மேலிடுதல்' என்று உட்தலைப்புத் தந்துள்ளனர்.

பதிகத்தின் தலைப்பு, சிவானந்தத்தைத் தந்தவனை (உயிருண்ணியை)ப்பற்றிச் சொல்லுகிறது. பதிகத்தின் உட்தலைப்பு, சிவானந்தம் மேலிடுதலாகிய செயலைக் குறிப்பிடுகின்றது. ஆழ்ந்து சிந்தித்தால் இந்த இரண்டு தலைப்புகளுமே பொருந்துவதாகத் தெரியவில்லை.

506. பைந் நாப் பட அரவு ஏர் அல்குல் உமை பாகம் அது
ஆய் என்
மெய்ந்நாள் தொறும் பிரியா வினைக் கேடா விடைப்பாகா
செம் நாவலர் பரசும் புகழ்த் திருப்பெருந்துறை உறைவாய்
எந் நாள் களித்து எந் நாள் இறுமாக்கேன் இனி யானே

'உமையைப் பாகத்தேயுடைய விடைப்பாகனே! வினைக்கேடனே! திருப்பெருந்துறையில் என் உடலினுள்ளும் புகுந்து, அற்புதமான அமுத தாரைகள் ஏற்றுவதற்காக என் பழவினையைப் பொடிசெய்தவனே! செம்மையான நாவினையுடைய அடியார்கள், நாளும் வழிபடும் திருப்பெருந்துறையை உறைவிடமாகக் கொண்டவனே! ஐயா! எனக்குத் திருவடி தீட்சை செய்து, என் உடலினுள்ளும் புகுந்து இன்ப ஊற்றைப் பெருக்கினாயே! அந்த விநாடியே என் வினையைப் பொடி செய்தாயே! அப்படியிருந்தும் அன்று கிடைத்த களிப்பும் அடியாரிடையே இருக்கும் இறுமாப்பும் இனி மறுபடியும் எப்பொழுது கிடைக்கும்?' என்கிறார்.

'எந்நாள் களித்து எந்நாள் இறுமாக்கேன்' என்ற தொடரில் 'எந்நாள்' என்ற சொல்லை இருமுறை பயன்படுத்தியது, எதிர்பார்த்து நிற்கும் அவலத்தின் ஆழத்தை உணர்த்தவேயாம்.

பிற்காலக் கவிஞராகிய மகாகவி பாரதியார்

'என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்
என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்
என்று எமது அன்னை கைவிலங்குகள் போகும்'
பாரதி பாடல்கள் (தமிழ்ப்பல்கலை. பா: 216)

என்ற வரிகளில் நான்கு முறை 'என்று' என்ற சொல்லைப் பயன்படுத்தியதும் திருவாசகத்தைப்போல எதிர்பார்த்து ஏங்கிநிற்கும் அவல நிலையைக் குறிப்பதற்காகவே பெய்யப் பெற்றது என்க.

507. நான் ஆர் அடி அணைவான் ஒரு நாய்க்குத் தவிசு இட்டு இங்கு
ஊன் ஆர் உடல் புகுந்தான் உயிர் கலந்தான் உளம் பிரியான்
தேன் ஆர் சடை முடியான் மன்னு திருப் பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாதது ஓர் வளம் ஈந்தனன் எனக்கே 2

திருப்பெருந்துறையில் தமக்கு நிகழ்ந்த அற்புதத்தை விரிவாக எண்ணிப்பார்க்கிறார் அடிகளார். அந்த அற்புதத்தை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அவரையும் அறியாமல் ஒரு வியப்பு மேலிடுகிறது.

'எதிரே தெரிந்த குருநாதரை நெருங்கிச் சென்று அவர் திருவடிகளில் விழவேண்டும் என்ற எண்ணம் எப்படித்

தோன்றிற்று? என்னை நான் நன்கு அறிவேன் ஆதலின், நானாக அந்தச் செயலைச் செய்யவில்லை என்ற உண்மை விளங்கித் தோன்றுகிறது. அவன் திருவடிகளை அணைய எனக்கு என்ன உரிமையும் தகுதியும் இருந்தன? என்போக்கில் விட்டிருந்தால் குதிரைகளை வாங்க, தொண்டிக்குச் சென்றிருப்பேனே அல்லாமல், திருவடியை அடையவேண்டு மென்று நினைத்திருக்கவே மாட்டேன். அப்படியிருந்தும் அந்தக் குருநாதர் வழியோடு போன என்னை இழுத்துப் பிடித்தல்லவா ஆட்கொண்டார்? எனக்கே என்னை ஓரளவு தெரியும்போது என் குருநாதர் என்னைப்பற்றி அறியாமலா இருந்திருப்பார்? ஒரு சிறு தகுதியும் என்பாலில்லை என்பதை அறிந்திருந்தும் அவர் என்னை ஆட்கொண்டார் என்றால், அதனை என்னவென்று சொல்வது? ஒரு மாபெரும் ஞானியை அமரச் செய்யவேண்டிய பீடத்தில் நாயை அமரச் செய்தது போன்ற செயலை அல்லவா குருநாதர் செய்துவிட்டார்! அத்தோடு விட்டாரா? ஊனால் ஆகிய இவ்வுடம்பினுள்ளும் அல்லவா புகுந்துவிட்டார்! அத்தோடாவது நின்றாரா? உயிரோடல்லவா கலந்து விட்டார்! அப்படிக் கலந்தவர் சில நாட்கழித்துப் பிரிந்து போயிருப்பார் என்றுதானே பலரும் நினைப்பார்கள்? இல்லை! என் உள்ளத்தில் புகுந்து பிரியாமல் நிரந்தரமாகவே தங்கிவிட்டார்.

'இவ்வாறெல்லாம் செய்தவர் யாரென்று தெரியுமா? குருநாதர் வடிவில் இருந்தாரே தவிர, இவற்றையெல்லாம் செய்தவர், தேனார் சடை முடியார், திருப்பெருந்துறையில் உறைபவரே ஆவார்.

'பெரும் புண்ணியம் செய்தவர்களே தேவருலகில் இடம்பெறுவர் என்று சொல்லுவர். ஆனால், அந்தத் தேவர்கள் தேவருலகின் இன்பங்களைத்

துய்த்தார்களே தவிர, திருப்பெருந்துறை உறைபவரை அறிந்ததுமில்லை; கண்டதுமில்லை. அவர்களால் அறியப் படாத அப்பெருமான் உடல் புகுதல், உயிர் கலத்தல், உளம் பிரியாதிருத்தல் என்ற மூன்று வளங்களையும் எனக்கே தந்தான். தந்தான் என்றா கூறினேன்? அவன் தருவதற்கு என்பால் எத்தகுதி இருந்தது? உண்மையில் மூன்று வளங்களையும் தந்தான் என்று சொல்வது சரியில்லை, ஈந்தான் என்பதே முறையாகும்' என்கிறார். ஈதல் என்பது உயர்ந்தோர் தாழ்ந்தோருக்குத் தகுதிபாராமல் வழங்குவதாகும்.

508. எனை நான் என்பது அறியேன் பகல் இரவு ஆவதும்
அறியேன்
மன வாசகம் கடந்தான் எனை மத்த உன்மத்தன் ஆக்கிச்
சின மால் விடை உடையான் மன்னு திருப் பெருந்துறை
உறையும்
பனவன் எனைச் செய்த படிறு அறியேன் பரஞ்சுடரே 3

இப்பாடலில் வரும் 'மத்த உன்மத்தன் ஆக்கி' என்ற தொடரைக் கவனமாகச் சிந்தித்துப் பொருள்கொள்ள வேண்டும். மத்த உன்மத்தம் என்ற தொடருக்குப் பெரும் பைத்தியம் என்றே பலரும் உரை கூறியுள்ளனர். பைத்தியங்களுக்கும் எந்நேரமும் தெய்விக ஆனந்தத்தில் மூழ்கித் திளைக்கும் அடியார்களுக்கும், சில ஒற்றுமைகளும் சில முக்கியமான வேற்றுமைகளும் உண்டு.

ஆடிப் பாடித் திரிதல், உடம்பில் மானத்தைக் காக்கும் துணி இருக்கிறதா இல்லையா என்று கவலைப்படா திருத்தல், இதைத்தான் உண்ணவேண்டும் இதை உண்ணக்கூடாது என்று வேறுபாடு தெரியாதிருத்தல் ஆகியவை இவ்விரு சாராரிடையே உள்ள பொதுத்தன்மை யாகும்.

வேற்றுமை என்று எடுத்துக்கொண்டால், மிக நுண்மையானதும் ஆழமானதுமாகிய ஒரு வேற்றுமையை அறிதல் வேண்டும். 'தான்' என்ற நினைவு (I - Consciousness) எந்த நிலையிலும் பைத்தியங்களுக்கு இருந்தே தீரும். அது வெளிப்படையாகத் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் பைத்தியங்களின் ஆழ்மனத்தில் 'தான்' என்ற உணர்வு இருந்தே தீரும்.

இதன் எதிராக, அடிகளார்போன்ற தெய்விகப் பித்துப் பிடித்தவர்களின் ஆழ்மனத்தில், அதற்கும் அடியிலுள்ள ஆழ்சித்தத்தில் 'நான்' என்ற உணர்வு தொழிற்படாமல் செயலிழந்து கிடக்கும். வேறு வகையாகக் கூறவேண்டு மானால், இவர்களுள்ளே பொங்கிவழியும் இறையனுபவம் என்ற ஆனந்தத்தின் உள்ளே, இவர்களுடைய 'நான்' ஆழமாக மூழ்கிக் கரைந்துவிடும்.

மேலே கூறிய இரண்டு நிலைகளில் அடிகளார் அடைந்த நிலை எது என்பதை அறிந்துகொள்ள அவரே விளக்கம் தருகிறார். அறியாமை நிரம்பிய பொதுமக்கள் அடிகளார் அடைந்த இம்மாற்றத்தை அறிந்துகொள்ளாமல் அவரைப் பைத்தியம் என்று எள்ளி நகையாடினர். 'பித்தன் என்று எனை உலகவர் பேசுவது ஓர் காரணம் இது கேளீர்' (திருவாச:431) என்றும், 'நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப' (திருவாச: 201) என்றும் அவரே கூறியிருத்தலின் இவ்விரு சாராரிடையே உள்ள வேற்றுமையைச் சாதாரண மக்கள் அன்றும் அறிந்திலர்; இன்றும் அறிந்திலர்.

பைத்தியங்கட்கும் இறைப்பிரேமையில் திளைப்பவர் கட்கும் உள்ள மிகப் பெரிய வேற்றுமை 'நான்' என்ற எண்ணம் இருத்தலும் இல்லாமையுமே என்று முன்னர்க் கூறியுள்ளோம். அடிளாருக்கு 'நான்' என்ற உணர்வு அடித்தளத்தில் இருந்ததா, இல்லையா என்பதை அறியவேண்டுமாயின் 'எனை நான் என்பது அறியேன்'

என்ற அவருடைய பாட்டின் தொடர் அதற்கு விடையளிக்கிறது.

திருப்பெருந்துறையில் குருநாதரின் திருவடிகளில் வீழுகின்ற அந்த விநாடிவரை, திருவாதவூரர் என்ற தனிமனிதர், பாண்டிய மன்னனின் அமைச்சராக இருந்த ஒருவர், தாம் யார் என்பதையும், தம் அதிகாரம் என்ன என்பதையும், நன்கு அறிந்திருந்தார். அதாவது, 'எனை நான் என்பதை' நன்கு அறிந்திருந்தார். அன்றியும் இந்த 'நான்' உணர்வு வலுவாக இருந்தமையின் பொறிபுலன்கள் சிறப்பாகத் தொழிற்பட்டன. எனவே, பொருள்களின் இடையேயுள்ள வேறுபாடு, பகல்-இரவு வேறுபாட்டைப் போல் நன்கு அறியத் தக்கதாக இருந்தது.

இப்படி இருந்த திருவாதவூரரை 'மத்த உன்மத்தன்' ஆக்கினார் ஒருவர். உன்மத்தம் என்பது சாதாரண பைத்தியத்தைக் குறிக்கும். மத்த உன்மத்தம் என்பது இந்தச் சாதாரண பைத்தியங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ள ஒரு நிலையைக் (இறைப்பிரேமை) குறிக்கும்.

இந்த நிலையை அடையுமாறு ஆக்கினார் என்று அடிகளார் கூறுவதால் யார் ஆக்கினார் என்ற வினாத் தோன்றுமன்றோ? அதற்கு விடையாக 'மன வாசகம் கடந்தான்' என்று கூறுகிறார்.

மன வாசகம் கடந்த ஒருவரை எவ்வாறு அறிவது? நுண்மையான மனத்திற்கும் நுண்மையான சொல்லிற்கும் அப்பாற்பட்டு நிற்கின்ற ஒருவரை எவ்வாறு அடையாளம் கண்டு கூறுவது? அதற்கும் ஒரு வழி கூறுகின்றார் அடிகளார். மன வாசகம் கடந்தல் அவருடைய நுண்மையான நிலை. இந்த நுண்மைக்கு எதிராக, பருமையான ஒரு நிலையும் உண்டு. அந்த நிலைதான். 'சின மால் விடை உடையான்' என்ற நிலை, அந்தப் பருமையான வடிவு எங்கே இருக்கிறது?

'மன்னு திருப்பெருந்துறை' என்று கூறியதால் அந்தத் திருப்பெருந்துறையில் பனவனாக- (அந்தண வடிவில்)— குருநாதர் வடிவில் பருப்பொருளாக நின்று ஆண்டு கொண்டவரே 'சினமால் விடை உடையான்' என்றும் 'மனவாசகங் கடந்தான்' என்றும், அவரே தம்மை உன்மத்தன் ஆக்கினார் என்றும் மிக அழகாக மூன்று தொடர்களில் அடிகளார் விளக்கியுள்ளார்.

திருவாதவூராராகவும் அமைச்சராகவும் இருந்த தம்மை மத்த உன்மத்தன் ஆக்கினார் என்பதை அடிகளார் எவ்வாறு கண்டுகொண்டார்? அது மிக எளிதாக நடைபெற்றது என்கிறார். அதாவது, திருப்பெருந்துறை அனுபவத்திற்கு முன்னர்த் தம்மை யார் என்றும், தமது அதிகாரம் என்ன என்றும் அறிந்திருந்த திருவாதவூரர், இப்பொழுது 'எனை நான் என்பதை' அறியாத மணிவாசகராக ஆகிவிட்டார். 'பகல் இரவாவதும் அறியேன்' என்ற தொடர் ஒளி-இருள் என்ற பொருளைத் தருவதோடு நில்லாமல், பொருள்களின் வேறுபாட்டைக் குறிக்கும் தொடராகவும் அமைந்தது. திருப்பெருந்துறை அனுபவத்திற்குப் பின்னர் 'நான்' என்பது மறைந்ததுபோல, ஒளி-இருள், பெரியது-சிறியது, நல்லது-கெட்டது என்ற எந்த வேறுபாடும் தெரியாமல் போய்விட்டது என்கிறார்.

'பனவன் எனைச் செய்த படிறு அறியேன்' என்பது இறுதி அடியாகும். படிறு என்ற சொல்லுக்கு வஞ்சனை, குறும்பு என்ற பொருள்கள் உண்டு. வஞ்சனை என்ற பொருளை வைத்துக்கொண்டு பார்த்தால், அச்சொல் இந்த இடத்தில் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளதைக் காணலாம். பனவன் என்பது அந்தணன் என்ற பொருளை உடையது. அந்தணன் என்பவன் யார்? எளிமை, அறிவுடமை, கல்வி முதலியவற்றோடு பிறரை அடிமைப்படுத்த விரும்பாமல் அவர்கட்கு நன்மை செய்ய முயல்பவனே அந்தணன் ஆவான். ஆனால்

திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் பனவன் வடிவில் இருந்த குருநாதர் என்ன செய்தார் தெரியுமா? நூற்றுக் கணக்கான பரிவாரங்கள் புடைசூழ, மிக்க பெரு மிதத்தோடு வழியோடு சென்ற ஓர் அமைச்சரைப் பிடித்து ஆண்டியாக்கினார்; மத்த உன்மத்தன் ஆக்கினார் என்றால் அந்தப் பனவன் செயலை வஞ்சனை என்று கூறுவதில் என்ன தவறு உளது?

'படிறு' என்ற சொல்லுக்குக் குறும்புத்தனம் என்ற பொருளை வைத்துக்கொண்டாலும், எவ்விதமான பிரதிபலனையும் கருதாமல், தான் செய்கின்ற செயலால் பிறர் வருந்துவார்களா, இல்லையா என்பதுபற்றியும் கவலைப்படாமல் செய்யப்பெறும் விளையாட்டே குறும்புத்தனம் என்று சொல்லப்படும். குருந்த மரத்தடிப் பனவன் அமைச்சரை ஆண்டியாக்கியதால் அப்பனவனுக்கு என்ன லாபம்? எனவே, எவ்விதப் பயனும் கருதாமல், விளையாட்டாக இதனைச் செய்தார் ஆகையால், குறும்புத்தனம் என்று கூறுவதிலும் தவறில்லை.

509. வினைக் கேடரும் உளரோ பிறர் சொல்லீர் வியன் உலகில்
எனைத் தான் புகுந்து ஆண்டான் எனது என்பின் புரை உருக்கிப்
பினைத்தான் புகுந்து எல்லே பெருந்துறையில் உறை பெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான் மறுமாற்றத்திடையானே 4

'திருப்பெருந்துறை உறை பெம்மான் ஆகிய குருநாதர் என்னினும் வேறாக, நான் கண்டு வணங்கத்தக்க பொருளாகப் புறத்தே இருப்பவர் என்றுதான் இதுவரை நினைத்திருந்தேன். ஆனால், அவர் என்ன செய்தார் தெரியுமா? திருப்பெருந்துறையில் கண்டபொழுது முதன்முதலாக என்ன செய்தார்? என்னுள் புகுந்து

ஆண்டார். இவ்வளவு பெரிய பரம்பொருள், கேவலம் என்போன்ற மனிதருள்ளே புகுவது நடைபெறுமா? ஒருவேளை, கனவில் நடைபெற்றிருக்கலாம் என்று பலரும் நினைக்கின்றீர்கள் அல்லவா? ஆனாலும் என்ன வியப்பு! இது நடந்தேவிட்டது, எப்படிப் புகுந்து ஆண்டார் தெரியுமா? பட்டப் பகலில் (எல்லே) என்னுள் புகுந்தார், புகுந்தது எப்படித் தெரியும் என்கிறீர்களா? உள்ளே நடைபெற்ற செயலால் அதனைப் புரிந்துகொண்டேன்.

'புகுந்து, அடுத்தபடியாக (பினை:பின்னை) எனது எற்புத் துளைதொறும் இன்ப ஊற்றுப் பெருகுமாறு செய்தார். அதன் பயனாக என் எலும்புகள் உருகின.

'இத்துணைச் செயல்களையும் ஒரே விநாடியில் செய்து, என் வினையைப் பொசுக்கக் கூடிய வினைக்கேடன் அவரைப்போன்ற ஒருவரை எங்கேனும் கண்டதுண்டோ? சொல்லுங்கள்!

'நடந்ததை யெல்லாம் நினைத்துப்பார்த்தால், என் வினையைப் பொசுக்கியவர், பட்டப் பகலில் என்னுள் புகுந்தவர். என் எலும்பை உருக்கியவர், முழுவதுமாக என்னை ஆட்கொண்டவர் யாரென்று தெரிகிறதல்லவா? அவர்தான் திருப்பெருந்துறை உறை பெம்மான்.

'பட்டப் பகலில் என்னுள் புகுந்து என் வினையைப் போக்கியவர், முழுவதுமாக என்னுள் நிறைந்துள்ளார். ஆதலின், என்னுடைய மனத்திலும் (மனத்தான்), என் கண்ணின் கருவிழியிலும் (கண்ணின் அகத்தான்), யான் பேசும் சொல்லிலும் (மறுமாற்றத்திடையான்) அவரே நிறைந்துள்ளார் என்பதை அறிக' என்றவாறு.

'மறுமாற்றம்' என்ற சொல் ஆழமான பொருளைக் கொண்டது. 'மாற்றம்' என்பது சொல் என்ற பொருளையுடையது. ஒருவர் தம் மனத்திடை ஒன்றை நினைந்து, அந்த நினைவிற்கு ஒரு சொல்வடிவு கொடுத்துப்

பேசுவதை மாற்றம் என்று கூறுகிறோம். இந்த மாற்றம் முற்றிலும் அவருடைய எண்ணத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாகும். மாற்றத்திடையான் என்று அடிகளார் கூறியிருப்பின் அவர் பேசும் பேச்சுக்கள் அனைத்திலும் அவன் உள்ளான் என்ற பொருளைத் தரும்.

ஆனால் 'மறுமாற்றம்' என்ற சொல்லை அல்லவா அடிகள் பயன்படுத்தியிருக்கிறார். ஒருவர் எழுப்பிய வினாவிற்குத் தரப்படும் விடையே மறுமாற்றம் என்று சொல்லப்பெறும். ஒருவர் தரும் விடை (மறுமாற்றம்0 அவரை நோக்கிக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பொருத்தமாக அமையும், இவ்வாறு வரும் விடையில் விடை கூறுபவருடைய எண்ண ஓட்டங்களுக்கோ தனித் தன்மைக்கோ இடமேயில்லை. வினாவிற்கு விடையளிக்கும் போது அறிவின் துணை கொண்டு, கேட்ட கேள்விக்குரிய விடையைமட்டும் சொற்களால் வெளிப்படுத்துவதால், விடையளிப்பவரின் தனித்துவம் வெளிப்பட வாய்ப்பில்லை. வினாவிற்கு ஏற்ற விடை தரப்பெறும்பொழுது அந்த விடையைத் தருவார் தம்முடைய எண்ண ஓட்டங்களுக்குத் தரும் சொல்வடிவு அன்று அது.

எனவே, அடிகளார் 'மறுமாற்றத்திடையான்' என்று கூறும்போது, யார் எந்த வினாவை எழுப்பினாலும் அந்த வினாவிற்கேற்ப எந்த விடையைத் தந்தாலும் அந்த விடையாகவும் இருப்பவன் அவனே என்கிறார்.

'மாற்றத்திடையான்' என்று கூறியிருப்பின் அடிகளார் உள்ளத்தில் தோன்றிய எண்ணத்தின் வெளிப்பாடாக வரும் சொல்லில் உள்ளவன் அவனே என்ற பொருள் தரும், அப்படிக் கூறாமல் தம்முடைய மனத்தில் தோன்றும் எண்ணத்தை அல்லாமல் யாரோ ஒருவர் ஏதோ ஒன்றைக் கேட்க, அதற்கு விடை கூறுமுகமாக அடிகளார் ஏதேனும் ஒன்றைச் சொல்லியிருப்பின், அந்த விடையாகவும் உள்ளவன் அவனே என்கிறார்.

மாற்றத்திலும், மறுமாற்றத்திலும் அவனே உள்ளான் என்று கூறியதால்-ஒன்றைக் கருத்தளவில் நினைந்து, சொல்லால் வெளிப்படுத்தினால் என்ன பயனைச் செய்யுமோ-அதே பயனை ஒன்றைக் கருத்தளவில் கொள்ளாமல் பிறர் கேட்ட வினாவிற்கு விடையாகக் கூறினும் அந்த விடைச் சொல் அருளாளர்கள் வாய்வழி வருவதால் அந்தச் சொல்லிலும் அவன் உள்ளான் என்று அடிகளார் கூறும்போது மிக நுணுக்கமான ஓர் உண்மையையும் இதனுள் பொதிந்து பேசுகின்றார்.

இப்பெருமக்கள் பேசும் சொற்களுக்குச் சாப, விமோசன ஆற்றல் உண்டு என்று பெரியோர்கள் சொல்வதன் அடிப்படையை இப்பொழுது புரிந்து கொள்ளலாம். இவர்கள் வாயிலிருந்து வெளிப்படும் சொற்கள் உள்ளே இருக்கும் இறையுணர்விலிருந்து தோன்றுபவை ஆதலின், அவர்கள் கருதினாலும், கருதா விட்டாலும் அச்சொற்களுக்குச் சாப, விமோசன ஆற்றல் உண்டு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

510. பற்று ஆங்கு அவை அற்றீர் பற்றும் பற்று ஆங்கு அது பற்றி
நற்று ஆம் கதி அடைவோம் எனின் கெடுவீர் ஓடி
வம்மின்
தெற்று ஆர் சடைமுடியான் மன்னு திருப்பெருந்துறை
இறை சீர்
கற்று ஆங்கு அவன் கழல் பேணினரொடும் கூடுமின்
கலந்தே 5

இப்பாடலின் முதலிரண்டு அடிகள் 'பற்றுக பற்றற்றான் பற்றினை' (திருக்குறள்- 350) என்ற திருக்குறளின் விரிவுரையாகும்.

மனத்தின் இயல்பை இற்றையநாள் மனவியலார் ஆய்ந்து தெளிவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகள் முன்னரே நம் முன்னோர் அதன் இயல்பை நன்கு அறிந்திருந்தனர்.

மெஸ்மெரிஸம், ஹிப்னாடிஸம் என்பவற்றைப் பழகுபவர்கள் மனத்தை ஒருநிலைப்படுத்த முதலில் பழகுகின்றனர். தியானத்தில் ஈடுபடுபவர்களும் இதே செயலைச் செய்கின்றனர். இருவரும் இரு வேறு வழிகளைக் கையாள்கின்றனர். ஒற்றை விளக்கை வைத்துக்கொண்டு அதன் சுடரையே பார்த்துப் பழகுதல், வெள்ளைத் துணியின் நடுவே ஒரு கரும்புள்ளியை வைத்து அதனையே பார்த்துக் கொண்டிருத்தல் ஆகிய முறைகள் மனவியலார் மனத்தை ஒருவழிப்படுத்த மேற்கொள்ளும் முறைகளாகும்.

தியானத்தில் ஈடுபடுபவர் குறுகிய சொல்லாலியன்ற ஒரு மந்திரத்தை விடாது மனத்தில் செபிக்கும் வழியைக் கையாள்கின்றனர். நாளாவட்டத்தில் இம்முறையில் மனம் ஒருநிலைப்பட்டு நிற்கும் என்பதில் ஐயமில்லை.

அந்த நிலையிலுங்கூட, வேறொரு பணியில் மனத்தைச் செலுத்தாவிடினும், நீண்ட நேரம் இந்த ஒருநிலைப்பாடு நிற்பதில்லை. மனத்தின் தன்மை அதுதான். ஏதாவது ஒன்றைப் பற்றிக்கொண்டு நிற்குமே தவிர ஒன்றையும் பற்றாமல் நிற்குமென்று சொல்லமுடியாது. எனவேதான், அழியும் பொருள்களைப் பற்றிநிற்கும் மனத்தைப் பார்த்து, பற்றற்றானிடம் (இறைவனிடம்) உன் பற்றை வைப்பாயேயானால் உன்பால் அமைதி நிலவும் என்றனர் நம்முன்னோர்.

'பற்றும்பற்று ஆங்கு அதுபற்றி' என்பது பற்றப்பட வேண்டியதாகலின் இறைவன் திருவடிகளைப் பற்றி அதன் மூலம் முன்னரே உம் மனத்தில் குடிகொண்டுள்ள பற்றுக்களை அறுத்தவர்களே! பற்றப்படவேண்டிய

பொருளைப் பற்றிக்கொண்டு ஏனைய பற்றுக்களை நீக்கி விட்டோம் என்ற உறுதிப்பாட்டோடு நிற்கின்றவர்களுக்கும் ஓர் ஆபத்து உண்டு. அந்த ஆபத்து என்ன என்று தெரிந்துகொண்டு, அதிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள முயலாதவர்களைக் 'கெடுவீர்' என்று அழைக்கிறார் அடிகளார்.

பற்றை அறுத்துக்கொண்டு, எவ்வளவு உயர்ந்த நிலை அடைந்தவர்களும் தம்மை ஒத்தவரிடையே சதா காலமும் கூடி உள்ளங்கலந்து வாழாமல், தனித்து நிற்பார்களே ஆயின், மனக் குரங்கு காரணமாக, விரைவில் தாம் இருக்கும் நிலையிலிருந்து கீழே வீழ்தல் உறுதி. இதுபற்றிச் சற்று விரிவாகக் காண்டல் வேண்டும். நல்ல நிலைபேறுடைய கதியை அடையவேண்டுமானால் இனி சொல்லப்போகும் இது ஒன்றே வழியாகும். அந்த ஒன்று எது தெரியுமா?

'பின்னப்பட்ட சடாபாரத்தை உடையவனும், திருப்பெருந்துறைக்கு இறைவனுமாகிய பெருமானின் சிறப்புக்களைக் கற்றறிந்து, அந்தக் கல்வியின் பயனாக. அவன் கழலைப் பேணுகின்ற அடியார்களின் கூட்டத்தோடு ஒன்றுகலந்து கூடுவீர்களாக!' இதுவே முன்னர்ச் சொல்லிய வழியாகும்.

ஒரே வகை எண்ணத்தில் ஈடுபட்டு, நல்வழியைப் பின்பற்றும் மக்கள் பலரும் ஒன்றுகூடி இருப்பதில் பல நன்மைகள் ஏற்படுகின்றன. அனைவரும் பண்பட்ட அடியார்கள் ஆதலின், எந்நேரமும் இறைவன்பற்றிய நினைவு, பேச்சு, செயல் ஆகியவை அவரிடையே நடைபெறும். தனி ஒருவனுடைய மனம் வேறு வழியில் செல்ல முயன்றாலும் அவன் சேர்ந்திருக்கும் கூட்டத்தாரின் ஒருமித்த மன ஆற்றல் இந்தத் தனிப்பட்டவனின் மனத்தை

ஈர்க்கும் ஆற்றலுடையது. இதனால்தான், பற்றை விட்டவர்களையும் இந்த அடியார் கூட்டத்தில் சேரவேண்டுமென்று அடிகளார் அழைக்கின்றார்.

இந்த இடத்தில் திருக்குறளில் துறவின் பின் அமைந்துள்ள அவா அறுத்தல் என்ற அதிகாரத்திற்குப் பரிமேலழகர் கூறும் முன்னுரையைக் கவனத்தில் கொள்வது நலம்.

அடியார் கூட்டத்தினிடையே இருப்பதன் பேராற்றலை வள்ளுவன் கண்டு கூறுவதற்கு ஐந்நூறு ஆண்டுகள் முன்னரே, புத்த தேவன் இதனை நன்கு அறிந்து 'சங்கம் சரணம் கச்சாமி' என்று மந்திரமாகவே ஆக்கிச் சென்றான். இதனைத்தான் அடிகளார் 'கற்றாங்கு அவன் கழல் பேணினரொடும் கலந்தே கூடுமின்' என்று அருளிச் செய்தார்.

தாயுமானவப் பெருந்தகையும் 'தொண்டரொடு கூட்டுகண்டாய்' என்றும், பட்டினத்துப் பிள்ளை 'நல்லார் இணக்கமும் நின் பூசை நேசமும்' என்றும் பாடுவது மேற்கூறிய கருத்தை வலியுறுத்துவனவாகும்.

511. கடலின் திரை அது போல் வரு கலக்கம் மலம் அறுத்து
என்
உடலும் எனது உயிரும் புகுந்து ஒழியாவணம் நிறைந்தான்
சுடரும் சுடர் மதி சூடிய திருப்பெருந்துறை உறையும்
படரும் சடை மகுடத்து எங்கள் பரன் தான் செய்த படிறே 6

'பிறை சூடியவனும், திருப்பெருந்துறையில் உறைகின்றவனும், சடையையே மகுடமாக உடையவனு மாகிய எங்கள் பரன், பிறர் அறியாவண்ணம் எனக்குச் செய்த செயல்கள் என்ன தெரியுமா?

'பிறவிதோறும் தொடர்ந்து வருகின்ற மும்மலம், அதன் பயனாக உள்ள கலக்கம் ஆகியவை இப்பிறவியிலும் கடல் அலைபோல் மறித்து மறித்து என்மாட்டு வந்து என்னை உருக் குலையச் செய்தன. திருப்பெருந்துறை நாயகன் செய்த முதற்செயல், இந்தக் கலக்கம், அதன் மூலமாகிய மலம் என்பவற்றை அறுத்ததாகும்.

'அடுத்தபடியாக, அவன் செய்தது, என் உடல், உயிர் என்ற இரண்டிலும் புகுந்து எங்கோ ஓர் மூலையில் தங்கிவிடாமல் உடல், உயிர் இரண்டிலும் இடைவெளியின்றி நிறைந்ததாகும்'.

512. வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன்
மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்புச் சிவம் வேண்டார் தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு திருப்பெருந்துறை
இறைதாள்
பூண்டேன் புறம் போகேன் இனிப் புறம்போகல் ஒட்டேனே
7

புகழ், செல்வம், மண், விண், பிறப்பு, இறப்பு ஆகிய யாதொன்றையும் நான் இப்பொழுது வேண்டவில்லை. இவ்வாறு கூறுவதால் அடிகளார் அடைந்த வளர்ச்சியை நன்கு அறிந்துகொள்ள முடிகிறது. இறை நினைவு இல்லாதவர்களுடைய உறவை மனத்தினாலும் நாட மாட்டேன். திருப்பெருந்துறையில் நிலைபெற்ற குருநாதர் திருவடிகளைச் சென்று சேர்ந்துவிட்டேன். இனி அத்திருவடிகளிலிருந்து எந்த நிலையிலும் பிரிந்துபோக மாட்டேன். அவ்வாறு பிரிவதற்கு மூல காரணமாய் அமைந்துள்ள செல்வம், புகழ், கல்வி முதலியவற்றைத் துறந்துவிட்டேன் ஆதலின் அவன் திருவடிகளைவிட்டுப் புறத்தே செல்லமாட்டேன்.

அடுத்துள்ளது 'புறம்போகல் ஒட்டேன்' என்பதாகும். இத்தொடருக்குத் திருநாவுக்கரசப் பெருமானின் 'புழுவாய்ப் பிறக்கினும்' என்ற பாடலில் வரும் 'உன் அடி என் மனத்தே வழுவாது இருக்க வரம் தர வேண்டும்' (திருமுறை:4-94-8) என்ற தொடரை நினைவிற்கொண்டு உன் திருவடிகள் என்னைவிட்டு நீங்கிச் செல்ல ஒருநாளும் இடம்கொடுக்க மாட்டேன் என்று பொருள் கூறியுள்ளனர்.

இத்தொடருக்கு மற்றொரு பொருளையும் சிந்திக்கலாம். ஐயனே! உன் திருவருளை முழுவதுமாகப் பெற்றேன் எனினும், நீ என்னுள் நிறைந்துள்ளாய் எனினும் மனித உடலோடு வாழும் காரணத்தால் என் மனம் முதலியவை உன்னைவிட்டு நீங்கி புறம்போகத் தொடங்கினால் அவற்றை அவ்வாறு போக விடமாட்டேன் என்பதாம்.

இனி போகல் ஒட்டேன் என்பதற்குச் 'சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவது நீயே' (திருவாச:536) என்பனபோன்ற தொடர்களை மனத்துட் கொண்டு ஐயனே! (யான்) புறம்போகேன். ஒருவேளை என்னிடம் தங்க விருப்பமின்றி என்னைவிட்டுப் போக நீ விரும்பினால் உன்னைப் போகவிடமாட்டேன் என்றும் பொருள் கொள்ளலாம்.

இவ்வாறு பொருள் கூறுவதில் தன்முனைப்பு உள்ளவர்கள் கூறும் சொற்கள்போன்று இவை அமைந்துள்ளனவே! அடிகளாருக்கு இது பொருந்துமா? என்ற ஐயுறுவார்க்கு ஒரு வார்த்தை. இவ்வாறு கூறுவதைத் தற்போதம் என்றால் 'வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்' என்பன போன்று வருபவையும் தன்முனைப்பு ஆகிவிடும்.

513. கோல் தேன் எனக்கு என்கோ குரை கடல்வாய் அமுது
என்கோ
ஆற்றேன் எங்கள் அரனே அருமருந்தே எனது அரசே
சேற்று ஆர் வயல் புடை சூழ்தரு திருப்பெருந்துறை
உறையும்
நீற்று ஆர் தரு திருமேனி நின்மலனே உனை யானே 8

'திருப்பெருந்துறை உறையும் நீற்றார் திருமேனி நின்மலனே!' நீ தரும் இன்பத்தை முழுவதுமாக அனுபவிக்கும் ஆற்றல் இல்லாதவனாய் இருக்கின்றேன் (ஆற்றேன்) என்றவாறு.

514. எச்சம் அறிவேன் நான் எனக்கு இருக்கின்றதை அறியேன்
அச்சோ எங்கள் அரசே அருமருந்தே எனது அமுதே
செச்சை மலர் புரை மேனியன் திருப்பெருந்துறை
உறைவான்
நிச்சம் என நெஞ்சில் மன்னி யான் ஆகி நின்றானே 9

இப்பாடலில் முதலடியில் மனித மனத்தின் ஒரு சிறப்பம்சம் பேசப்பெறுகிறது. 'அரிது பெற்றிடினும் பெற்றதில் விருப்பம் அற, பெறாதன விரும்பும் உயிர்கள்' என்று சாந்தலிங்க சுவாமிகள் பாடியதை இங்கு நினைவுகூர்தல் நலம்.

'எச்சம் அறிவேன் நான்; எனக்கு இருக்கின்றதை அறியேன்' என்ற பகுதி இரண்டாகப் பிரித்துப் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

'எச்சம்' என்பது இப்போது இல்லாமல், ஆனால் இருக்கவேண்டுமென்று நம்மால் விரும்பப்படும் பொருளாகும். திருப்பெருந்துறையில் கிடைத்த அனுபவம், அடியார் கூட்டம் என்பவை அப்போது இருந்து, இப்போது

இல்லாமல் போய்விட்டமையின் அவற்றையே நினைந்து வருந்தும் அடிகளார் 'எச்சம் அறிவேன் நான்' என்றார்.

அடுத்தபடியாக உள்ளது 'எனக்கு இருக்கின்றதை நான் அறியேன்' என்ற தொடராகும். இப்போது அடிகளாரிடம் என்ன இருக்கின்றது என்பதை அவரே பின் இரண்டு அடிகளில் கூறுகின்றார். 'செச்சை மலர் போன்ற மேனியனும் திருப்பெருந்துறை உறைபவனுமாகிய பெருமான் என்னுள் புகுந்து என்னினும் வேறாகத் தனித்து நில்லாமல், யான் என்பது இல்லாமல் அவனேயாகி நிலைபெற்றது நிற்பதை அந்தோ! (அச்சோ) நான் அறியாமல் இருந்துவிட்டேன்' என்று வருந்துகின்றார்.

515. வான் பாவிய உலகத்தவர் தவமே செய அவமே
ஊன் பாவிய உடலைச் சுமந்து அடவி மரம் ஆனேன்
தேன் பாய் மலர்க் கொன்றை மன்னு திருப்பெருந்துறை
உறைவாய்
நான் பாவியன் ஆனால் உனை நல்காய் எனல் ஆமே 10

'புண்ணியம் செய்து தேவர் உலகம் சென்று வாழ்கின்ற தேவர்களும் அவன் திருவடியை அடையத் தவம் செய்கின்றனர். யானோ இவை ஒன்றிலும் ஈடுபடாது நெருங்கிய காட்டினுள் இருக்கும் மரமாக வாழ்கின்றேன்.

'அப்படியிருக்க, பாவியேனாகிய யான் எவ்வித முயற்சியும் செய்யாமல் இருந்துகொண்டே நீ உன் திருவடிகளைத் தரவில்லையென்று குறைகூறுவது முறையோ?' என்றபடி.

அடவி மரத்திற்கும் தனியே நிற்கும் மரத்திற்கும் சில வேறுபாடுகள் உண்டு. தனிமரமாக இருக்கும்போது, புறத்தே உள்ள வெயில், மழை முதலியவை அம்மரத்தின் பட்டுப்

பெரும்பயனை நல்கும். அன்றியும் நூற்றுக்கணக்கான பறவைகள் வந்து கூடுகட்டித் தன்பால் தங்க அம்மரம் உதவியளிக்கும்.

செறிந்து விளங்கும் காட்டிடை உள்ள மரத்திற்கு (அடவி மரத்திற்கு) மேலே கூறிய எதுவும் இல்லை. அதாவது அடியார் கூட்டம் என்ற வெயிலும், இறையருள் என்ற மழையும் தமக்குக் கிடைக்கவில்லை என்பதால் தம்மை அடவி மரம் என்கிறார் அடிகளார். அன்றியும் சிற்றுயிர்கள் வந்து தங்குகின்ற வாய்ப்பும் அடவி மரத்திற்கு இல்லையாதலால், தன்னினும் கீழ்ப்பட்டவருக்கு ஏதாவதொரு உதவி செய்து அவர்கள் துயரைத் துடைக்கும் வாய்ப்பும் தமக்கில்லை என்பதையும் 'அடவிமரம்' என்ற சொல்லால் குறித்தாராயிற்று.

ॐ ॐ ॐ

35. அச்சப் பத்து

[ஆனந்தமுறுதல்]

இதற்கு முன்னர் உள்ள ஐந்நூற்றுப் பதினைந்து பாடல் களிலும் காணப்பெறாத சில கருத்துக்கள் அச்சப்பத்து என்ற இப்பகுதியில் அமைந்துள்ளதைக் காணலாம்.

மூவருள் மூத்தவராகிய நாவரசர் பெருமான் பல்வேறு துன்பங்களை ஏற்று அனுபவித்தவர். அப்படியிருந்தும் 'அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதும் இல்லை' (திருமுறை:4-2) என்று பாடியுள்ளார். காழிப் பிள்ளையாரும் திருவாரூர்ப் பதிகத்தில் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'அஞ்சல் நெஞ்சே' (திருமுறை:2-79) என்றுதான் பாடியுள்ளார்.

மூவர் முதலிகள் தேவாரம் முழுவதிலும் யாரோ ஒருவரை அல்லது ஏதோ ஒன்றைக் கண்டு அஞ்சியதாகப் பாடலே இல்லை.

அடிகளார் பத்துப் பாடல்களிலும் உலகிடை அச்சம் தரும் பொருள்கள் அனைத்தையும் ஒரு வரிசைப்படுத்தி, அவற்றுக்கெல்லாம் அஞ்சமாட்டேன் என்று பாடிச் செல் கிறார். ஆனால், ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் மிகச் சாதாரணமாக உலகிடைக் காணப்பெறும் ஒரு காட்சியை, யாருக்கும் எவ்விதத்திலும் அச்சத்தைத் தூண்டாத ஒரு காட்சியை எடுத்துக்கூறி, அதனைக் கண்டு அஞ்சுகிறேன் என்று அவர் பாடியுள்ளது வியப்பைத் தருகிறது.

'பெம்மாற்கு (சிவபெருமானுக்கு) அற்றிலாதவரைக் கண்டால்' (திருவாச:516) அஞ்சுகிறேன் என்றும், 'மற்றோர் தேவர் எத்தேவர் என்ன அருவராதவரைக் கண்டால்'

(திருவாச: 517) அஞ்சுகிறேன் என்றும், 'வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால்' (திருவாச: 520) அஞ்சுகிறேன் என்றும், 'திருமுண்டம் தீட்டமாட்டாது அஞ்சுவார் அவரைக் கண்டால்' (திருவாச: 524) அஞ்சுகிறேன் என்றும் அடிகளார் பாடியதன் நோக்கம் என்ன?

இப்பெருமக்களுடைய பாடல்களைக் ஆராயும்போது அவர்கள் வாழ்ந்த காலச் சூழ்நிலையையும், வரலாற்று அடிப்படையையும் மனத்துட் கொண்டு ஆய்தல் பயனுடையதாகும். இப்பதிகத்தின் முதலிரு பாடல்களிலும் சிவபெருமானைத் தவிரப் பிற தெய்வங்களை வணங்குகின்றவர்கள் பேசப்பெறுகின்றனர்.

சங்ககாலம் தொட்டே சைவம், வைணவம், பௌத்தம் சமணம் ஆகிய சமயங்கள் தமிழ்நாட்டில் பரவிநின்றன. ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில் சமணம், பௌத்தம் ஆகிய இரண்டையும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் சாடினர்.

எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பௌத்த, சமணச் செல்வாக்கு அழிந்துவிட்டது. எஞ்சியவை சைவம், வைணவம் ஆகிய இரண்டுமே. அடிகளார் காலத்திற்குச் சற்று முன்னர் அத்வைதம் பரப்பிய ஆதி சங்கரர் தோன்றுகிறார். ஆனாலும், அவர் எழுதிய நூல்கள் அனைத்தும் வடமொழியில் அமைந்திருந்தமையின் அவை தமிழ் மக்களை அதிகம் பாதிக்கவில்லை.

ஆனால், ஏழாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதி, எட்டாம் நூற்றாண்டின் முதற்பகுதி ஆகிய காலங்களில் சைவத்திற்குச் சரியான போட்டியாக அமைந்தது வைணவம். பரம்பரையாகச் சைவத்தில் ஈடுபட்டிருந்த பாண்டியர்களுள் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லவன் என்பவன் பெரியாழ்வார் செல்வாக்கினால் வைணவத்தைத் தழுவினான். அதே காலத்தில் வாழ்ந்த பெரியாழ்வாரின்

திருமகளான கோதை நாச்சியாரின் பாடல்கள் தமிழகத்தை ஒரு கலக்குக் கலக்கியது உண்மைதான். கோதை நாச்சியாருக்கு அறுபது, எழுபது ஆண்டுகள் பிற்பட்ட அடிகளார் காலத்தில் கோதை நாச்சியார் தோற்றுவித்த வைணவப் புயலைத் திசைமாற்றுவது அரும்பெரும் காரியமாக அமைந்து விட்டது. இந்த அடிப்படையில்தான் இப்பதிகத்தின் முதலிரு பாடல்களில் பிற தெய்வங்களை வணங்குவோரைக் கண்டால் நான் அஞ்சுகிறேன் என்று பாடியுள்ளார்.

அடுத்து வரும் பாடல்களில், விபூதி அணியாதவர், சிவபெருமான் மேல் அன்பு செலுத்தாதவர் ஆகியோரைக் கணடால் அஞ்சுகிறேன் என்று பாடுகிறார்.

ஞானசம்பந்தர் காலத்திலும், நாவரசர் காலத்திலும் சமயப் போராட்டம் தலைதூக்கிநின்றது. எனவே, நாவரசர் சாத்துவிக முறையிலும், காழிப் பிள்ளையார் சொற்போர் முறையிலும் இச்சமயப் போரில் ஈடுபட்டனர். ஆனால், அவர்கள் மோதலில் ஈடுபட்டது, புறச்சமயங்களாகிய சமண, பௌத்தங்களோடு ஆகும்.

அடிகளார் காலத்தில் புறச்சமயப் பிரச்சினை பின்தங்கிவிட, வைணவத்தோடு போராடும் பிரச்சினை தலை தூக்கியது. தொடக்கத்திலிருந்தே இறைப்பிரேமையில் மூழ்கியிருந்த அடிகளாருக்கு இந்தப் போராட்டத்தில் நேரிடையாக ஈடுபடும் வாய்ப்பு இல்லை. என்றாலும், ஒரோவழி இது அவரைத் தாக்கிற்று என்பதற்கு இப்பதிகம் ஓர் எடுத்துக்காட்டு.

அடிகளார்போன்று இறையருளை இப்பிறவியிலேயே பெற்று உயர்ந்தவர்கள், பிற சமயங்களையும் சமய வாதிகளையும் சாடுவது சரியா? என்ற வினாத் தோன்றினால் விடை கூறுவது கடினம். நாயன்மார்கள் மட்டுமல்லாமல் ஆழ்வார்களும் இவ்வாறே இருந்துள்ளனர்.

சைனர்களுக்கும், பௌத்தர்களுக்கும் ஓயாத சண்டை நடைபெற்றதை வரலாற்றில் காணமுடிகிறது. வேத காலத்தில் இருக்கு வேத அடிப்படையில் யாகம் செய்பவர்களுக்கு இடையேகூட இருநூறுக்கும் மேற்பட்ட உட்பிரிவுகள் இருந்தன என்பதையும், அவர்கள் தம்முள் ஓயாது போரிட்டனர் என்பதையும் அறியமுடிகிறது. இருக்குவேதம் கூறும் தாஸராக்கியப் போர் இவர்களிடையே நடைபெற்ற பெரும்போரை வர்ணிக்கின்றது. கிறிஸ்தவ சமயம் கத்தோலிக்கர்கள், பிராடஸ்டன்ட்ஸ் எனப்பிரிந்து பலகாலம் தம்முள் போரிட்டது. இஸ்லாத்திலும் உட்பிரிவுகளிடையே போர் நடைபெற்றதை வரலாற்றில் காண்கிறோம். எனவே ஆழ்வார்களும் நாயன்மார்களும் பிற சமயங்களைக் குறை கூறியதில் வியப்பொன்றுமில்லை. அடிகளார் காலத்திலும் நிலைமை இவ்வாறு இருந்தது என்பதை 'சமய வாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்தனர்' *(திருவாச: 4-52.53)* என்று அவரே கூறுவதால் அறியமுடிகிறது.

காலத்தை ஒட்டி நிகழ்ந்த இப்பிரச்சினைகளில் அருளாளர்களும் தள்ளப்பட்டனர் என்பதுதவிர இதனால் அவர்களை ஒன்றும் குறைகூற முடியாது.

இந்த வரலாற்று அடிப்படையைச் சிந்தியாத முன்னோர் உள் தலைப்புத் தரும்பொழுது ஆனந்த முறுதல் என்று எழுதிப்போயினர்போலும். இப்பதிகம் முழுவதிலும் சிவானுபவத் திளைப்பு இடம்பெறவேயில்லை. பெற்றிருப்பின் 'அம்ம நாம் அஞ்சுமாறே' என்று பாடும் நிலை தோன்றியே இராது.

516. புற்றில் வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றை வார் சடை எம் அண்ணல்
கண் நுதல் பாதம் நண்ணி

மற்றும் ஓர் தெய்வம் தன்னை
உண்டு என நினைந்து எம் பெம்மாற்கு
அற்றிலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே 1

புற்றிடத்து வாழும் அரவு, எந்த நேரத்தில் வெளிப்பட்டு எங்ஙனம் தாக்கும் என்பதை அறியமுடியாது. ஆதலால், அதன்மாட்டு அச்சம் பிறந்தது. பொய் பேசுகின்றவர்கள் தம்முடைய சாமர்த்தியம் காரணமாக அதை மெய்போலச் சாதித்துப் பிறரை நம்புமாறு செய்து குழியில் வீழ்த்துவர். ஆதலின், 'பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்' என்றார்.

'கற்றை வார் சடை எம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி' (அடைந்தும்கூட அதில் முழுநம்பிக்கை வைக்காமல்) மற்றோர் தெய்வம் உண்டு என அதுவரை கொண்டிருந்த நம்பிக்கையைப் போக்காதவர்களைக் (அற்றிலாதவர்) கண்டால் நாம் அஞ்சுகிறோம் என்றபடி.

இக்கருத்து அடிகளாரால் 'மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது' (திருவாச:4-74) என்றும் முன்னரும் பாடப்பெற்றுள்ளது

517. வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா
எம்பிரான் தம்பிரான் ஆம்
திருஉரு அன்றி மற்று ஓர்
தேவர் எத்தேவர் என்ன
அருவராதவரைக் கண்டால்அம்ம
நாம் அஞ்சுமாறே 2

மனித மனத்திற்கு இயல்பாக உள்ள குணங்களில் பொருள்கள்மேல் பற்றுவைத்தலும் ஒன்றாகும். அந்த வேட்கையை வெல்லுதல் சாதாரண மக்களுக்கு எளிதன்று. அத்தகைய வேட்கைக்கும் அஞ்சமாட்டேன் என்கிறார். 'வேட்கை வந்தால்' என்று கூறியமையின் அற்ப ஆசைகள் தம்மாட்டு வாரா என்றும், ஒருவேளை பெரியஆசை ஏதேனும் வந்தால் அதற்கும் அஞ்சமாட்டேன் என்றும் கூறுகிறார்.

பிராரத்துவம் என்ற வினை கடல்போலத் தம்மை மூழ்கடிப்பதாக இருப்பினும் அதற்கும் அஞ்சமாட்டேன் என்கிறார்.

தம்முள் மாறுபாடு கொண்ட இருவரால் அடி முடி காணமுடியாத எங்கள் பிரானும் எல்லோருக்கும் தலைவனுமாகிய தம்பிரானும் ஆவான் எங்கள் தலைவன். அவனுடைய திருவுருவைக் கண்டவர்கள் அதன்பின் வேறு தெய்வங்களின் வடிவைக் கண்டு, இவர்களும் ஒரு தேவரோ என்று எள்ளி (அருவருப்படையாதவரைக் கண்டால்) தாம் அஞ்சவேண்டிவரும் என்கிறார்.

518. வன் புலால் வேலும் அஞ்சேன்
வளைக் கையார் கடைக் கண் அஞ்சேன்
என்பு எலாம் உருக நோக்கி
அம்பலத்து ஆடுகின்ற
என் பொலா மணியை ஏத்தி
இனிது அருள் பருக மாட்டா
அன்பு இலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே 3

கொலை செய்கின்ற வேலுக்கும், மகளிர் கண்ணாகிய வேலுக்கும் அஞ்சேன் என்கிறார். எஞ்சிய மூன்று அடிகளும் ஒரு புதிய எண்ண ஓட்டத்தை உண்டாக்குகின்றன.

அம்பலத்து ஆடுகின்ற என் பொ(ல்)லா மணியை என்பு எல்லாம் உருகும்படியாக நோக்கி, அவனை ஏத்தி, அவனது இன்னருளைப் பருகினேன். தில்லைக்கு வந்து அவனை நோக்கி ஏத்தி அவனது இனிய அருளைப் பருகமாட்டாதவரைக் கண்டால் அஞ்சுகிறேன் என்கிறார். இவ்வாறு அவர் கூறக் காரணம் உண்டு. அவர்கள் நோக்கினாலும், ஏத்தினாலும் ஏன் அவனுடைய இனிய அருளைப் பருகவில்லை? அதற்கும் ஒரு காரணம் உண்டு. தூய்மையான அன்பு அவர்கள்பால் இன்மையால் அருளும் வழங்கப்படவில்லை; அவர்கள் பருகவும் முடியவில்லை. இத்தகையவர்கள் தில்லைக் கூத்தனை நோக்கியது உண்மைதான். ஆனால், அந்த நோக்கில் என்பை உருக்குகின்ற தன்மை இல்லை. ஏன்? தூய்மையான அன்பு நிறைந்திருக்குமாயின் கூத்தனை நோக்கியவுடன் என்பு உருகியிருக்கும்; அவன் இன்னருள் சுரந்திருக்கும்; அதைப் பருகியுமிருக்கலாம். இவ்வாறு இல்லாதவர்களைக் கண்டால் அஞ்சுகிறேன் என்கிறார்.

519. கிளி அனார் கிளவி அஞ்சேன்
அவர் கிறி முறுவல் அஞ்சேன்
வெளிய நீறு ஆடும் மேனி
வேதியன் பாதம் நண்ணித்
துளி உலாம் கண்ணர் ஆகித்
தொழுது அழுது உள்ளம் நெக்கு இங்கு
அளி இலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே 4

கிறி-வஞ்சனை

இப்பாடலில் உள்ளன்பு நிறைந்த உள்ளத்தோடு வழிபாடு செய்கின்றவர்கள் செயன்முறை, பெறும் பயன் என்பவை விரிவாகப் பேசப்பெறுகின்றன.

வெண்மையான நீற்றைப் பூசி ஆடுகின்ற வேதியனாகிய தில்லைக் கூத்தனின் திருவடிகளை அடைந்து, கண்ணீர் துளிர்க்க, தொழுது, அழுது, உள்ளம் நெக்குருக வழிபாடு செய்யும் அன்பு நிரம்பாதவர்களைக் கண்டால் அஞ்சுகிறேன் என்கிறார்.

520. பிணி எலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்
துணி நிலா அணியினான்தன்
தொழும்பரோடு அழுந்தி அம் மால்
திணி நிலம் பிளந்தும் காணாச்
சேவடி பரவி வெண் நீறு
அணிகிலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே 5

துண்டிக்கப்பட்ட பிறைச்சந்திரனை அணிந்த தில்லைக் கூத்தனுடைய அடியார்கள் தம்மோடு பொருந்தி (அழுந்தி) நட்புக் கொண்டிருக்க வேண்டும். திருமாலானவன் நிலத்தைப் பிளந்து சென்றும் காணமுடியாத சேவடியைப் பரவவேண்டும். இவற்றோடு இறைச் சிந்தனையின் அடையாளமாக வெண்ணீறு அணிந்திருக்க வேண்டும். இம்மூன்று பண்புகளும் இல்லாதவரைக் கண்டால் அஞ்சுகிறேன் என்கிறார்.

மேலே கூறிய மூன்று செயல்களும், அதாவது அடியாரோடு அழுந்துதல், திருவடி பரவுதல், வெண்ணீறு அணிதல் ஆகிய மூன்றும், முறையே மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் இறையன்பு கொள்ளவேண்டும் என்பதைக் குறித்தனவாயின.

521. வாள் உலாம் எரியும் அஞ்சேன்
வரை புரண்டிடினும் அஞ்சேன்
தோள் உலாம் நீற்றன் ஏற்றன்
சொல் பதம் கடந்த அப்பன்
தாள தாமரைகள் ஏத்தித்
தட மலர் புனைந்து நையும்
ஆள் அலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே 6

ஒளி பொருந்திய நெருப்பிற்கோ புரண்டு வரும் மலைக்கோ அஞ்சமாட்டேன் என்கிறார்.

திருத்தோள்களில் நீற்றை அணிந்தவனும், இடப வாகனத்தை உடையவனும், சொல்லையும் பொருளையும் கடந்து நிற்பவனுமாகிய நம் தந்தையினது தாமரை போன்ற திருவடிகளை ஏத்தி, நிறைந்த (தட) மலர்களை இட்டு வழிபடுகின்ற நேரத்தில் உள்ளம் நைந்து உருக வேண்டும். இத்தகைய நிலைக்கு ஆளாகாதவர்களைக் கண்டால் தமக்கு அச்சம் ஏற்படுகிறது என்கிறார்.

522. தகைவு இலாப் பழியும் அஞ்சேன்
சாதலை முன்னம் அஞ்சேன்
புகை முகந்து எரி கை வீசிப்
பொலிந்த அம்பலத்துள் ஆடும்
முகை நகைக் கொன்றை மாலை
முன்னவன் பாதம் ஏத்தி
அகம் நெகாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே 7

நடுவுநிலைமை நீங்கிய, நீதியில்லாத பழிக்கு அஞ்ச மாட்டேன். அமைச்சராக இருந்த காலத்திலும் சாவைக் கண்டு அஞ்சவில்லை என்றும் கூறுகின்றார்.

தில்லைக் கூத்தன் ஆடும்பொழுது எரி ஏந்திய இடக்கையை வீசி நின்று ஆடுகிறான் ஆதலின் எரி கை வீசி என்றார். எரி இருக்கும் இடத்தில் புகை இருக்கும் ஆதலின் புகைமுகந்த எரி என்றார்

மொட்டு அவிழ்கின்ற கொன்றை மாலையை அணிந்தவனும், பிரபஞ்ச காரணனும் (முன்னவன்) ஆகிய அவனுடைய திருவடிகளை ஏத்தி உள்ளம் உருகாதவரைக் கண்டால் அஞ்சுகிறேன் என்கிறார்.

523. தறி செறு களிறும் அஞ்சேன்
தழல் விழி உழுவை அஞ்சேன்
வெறி கமழ் சடையன் அப்பன்
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்கள் ஏத்திச்
சிறந்து இனிது இருக்க மாட்டா
அறிவு இலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே 8

நெருப்பை உமிழ்கின்ற கண்ணையுடைய புலிக்கும் அஞ்சமாட்டேன் என்கிறார்.

மணம்பொருந்திய சடாபாரத்தை உடையவனும், தேவர்களும் காணமாட்டாத் திருவடியை உடையவனும் ஆகிய அப்பன் திருவடிகளை ஏத்தி, அதன் பயனாக ஆனந்தத்தையும் அமைதியையும் பெற்றுச் சிறப்புடன் இனிதாக இருக்கலாம் என்ற அறிவைப் பெறாத அறிவிலிகளைக் கண்டால் அஞ்சுகிறேன் என்கிறார்.

'தறிசெறி களிறும் அஞ்சேன்' என்று பாடமும் உண்டு. அவ்வாறாயின் போர்க்காலத்தை அன்றிப் பிற நேரங்களில், தறியில் கட்டப்பட்டுள்ள யானைக்கும் அஞ்ச மாட்டேன் என்ற பொருளை, அத்தொடர் தந்துநிற்கும்.

524. மஞ்சு உலாம் உருமும் அஞ்சேன்
மன்னரோடு உறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுதம் ஆக்கும்
நம் பிரான் எம்பிரான் ஆய்ச்
செஞ்செவே ஆண்டு கொண்டான்
திருமுண்டம் தீட்ட மாட்டாது
அஞ்சுவார் அவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே 9

உரும்-இடி., செஞ்செவே-உறுதியாகவே; திருமுண்டம்- அழகிய நெற்றி.

நஞ்சையே அமுதாக உண்டவனாகிய எங்கள் பெருமான் என் காட்சிக்கும் உட்பட்டவனாகி, என் தலைவனுமாகி, (எம்பிரானாய்) உறுதியாகவே என்னை ஆண்டுகொள்ளவும் செய்தான். அப்படிப்பட்ட பெருமானின் திருநீற்றை நெற்றியிலிடக் கூசுவாரைக் கண்டு அஞ்சுகிறேன் என்கிறார்.

525. கோண் இலா வாளி அஞ்சேன்
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீள் நிலா அணியினானை
நினைந்து நைந்து உருகி நெக்கு
வாள் நிலாம் கண்கள் சோர
வாழ்த்தி நின்று ஏத்தமாட்டா
ஆண் அலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே 10

கோண்இலா வளி- வளைதலில்லாத அம்பு; ஆண்மை- மனத்தை அடக்கி ஆளும் தன்மை.

பிறைச்சந்திரனை அணிந்தவனைச் சித்தத்தின் ஆழத்தில் ஓயாது நினைந்து, அதன் பயனாக உள்ளம் நைந்து நெக்குருகி, ஒளிபொருந்திய கண்கள் கண்ணீரால் மறைய, ஒரே நிலையில் நின்று அவன் புகழை ஏத்தி

வாழ்த்தும் ஆண்மை இல்லாதவரைக் கண்டு அஞ்சுகிறேன் என்கிறார்.

இங்கு ஆண்மை என்று கொள்ளப்பட்டது இன்று நாம் கொள்ளும் பொருளில் அன்று. ஆளுமை என்ற பொருளே இங்கு தரப்படல் வேண்டும்

இறைவன் புகழை ஏத்தி வாழ்த்துதற்கு பாடலின் முற்பகுதியில் உடலும், மனமும் எந்த நிலையில் இருத்தல் வேண்டுமென்று அடிகளாரே கூறியுள்ளார். மனம் புத்தி முதலியவை இந்நிலையில் தளராமல் இருப்பதற்கு அவற்றை உடையவர் நல்ல ஆளுமையுடன் இருந்தா லொழிய இவை முன்னே சொன்னபடி பணி செய்யா. ஆகவே, இத்தகைய ஒருவரைக் குறிப்பிடும்போது 'ஆண் அலாதவர்' அதாவது மனம் புத்தி முதலியவற்றை அடக்கி ஒருநிலைப்படுத்தும் ஆளுமை இல்லாதவர் என்று அடிகளார் கூறுகிறார்.

ॐ ॐ ॐ

36. திருப்பாண்டிப் பதிகம்

[சிவானந்த விளைவு]

திருவாசகப் பதிகங்களுக்கு இதுவரை கொடுக்கப் பெற்றுள்ள தலைப்புக்கள்போல் அல்லாமல் இப்பதிகத் தலைப்பு புதுமையாக உள்ளது. புகார் நகரில் நடந்ததைக் கூறும் பகுதி, சிலப்பதிகாரத்தில் புகார்க்காண்டம் என்று பெயர் பெற்றதைப்போல, பாண்டி நாட்டில் நடைபெற்ற செய்தியைக் கூறுகின்றது ஆதலின் பாண்டிப் பதிகம் எனப் பிற்காலத்தார் பெயரிட்டனர் போலும்.

இதில் வரும் பல பாடல்களில் ஆலவாய்ச் சொக்கன் குதிரைச் சேவகனாக வந்த செய்தியே பெரிதும் பேசப் பெறுகிறது. ஆனால், இச் செய்தி புதுமையானதன்று. முன்னரே பல இடங்களில் இச்செய்தி அடிகளாரால் பேசப்பெற்றுள்ளது. அப்படியிருக்க, பாண்டிப் பதிகம் என்று பெயர் பெறுவதற்கு இதுவே காரணம் என்று சொல்வதற்கில்லை.

தேவார மூவர்களிடமும் காணப்பெறாத நாட்டுப்பற்று அடிகளாரிடம் தலைதூக்கி நிற்கின்றது. ஆனால், அவர் பாண்டி நாட்டை நினைக்கும்பொழுதெல்லாம் வெறும் மண்ணையும் மக்களையும்மட்டும் நினைக்கவில்லை. 'பாண்டிநாடே பழம்பதியாகவும்' *(திருவாச:2-118)* என்று முன்னரும் குறிப்பிட்டுள்ளார் ஆதலின், பாண்டி நாட்டோடு ஆலவாய்ச் சொக்கனையும் சேர்த்தே அடிகளார் நினைந்தார் என்பதில் ஐயமில்லை. ஆதலால்தான் முன்னர் 'அரிகேசரியாய் போற்றி' *(திருவாச:*

4:190) என்று பாண்டியனுடைய பட்டப் பெயரை இறைவனுக்கு ஏற்றிப் பாடியதுபோல, இப்பதிகத்திலும் 'பாண்டியனார்' *(திருவாச:528.530)* என்று சொல்லை இறைவனுக்கே ஏற்றிப் பாடுகிறார்.

சென்ற பல பதிகங்களில் திருப்பெருந்துறை நிகழ்ச்சியை நினைந்து நினைந்து இறும்பூது எய்திப் பாடியதுபோல, இப்பதிகம் முழுவதிலும் சொக்கன் குதிரைச் சேவகனாக வந்ததையும், அக்காட்சியைத் தாம் கண்டதையும் மிகுதியாகப் பாடியுள்ளார். எனவே, பாண்டிப் பதிகம் என்ற பெயரைப் பிற்காலத்தார் தந்திருப்பினும் ஆழ்ந்த யோசனையின்பேரில்தான் இத்தலைப்பைத் தந்துள்ளார்கள் என்று தெரிகிறது.

ஆனால், இந்த அருமைப்பாட்டை அறியாத சிலர் பொருத்தமில்லாத உட்தலைப்புக்களை இதுவரை தந்துள்ளதுபோல, இப்பதிகத்திற்கும் சிவானந்த விளைவு என்ற தலைப்பைத் தந்துள்ளனர். இப்பத்துப் பாடல்களிலும் சிவானந்தம் எங்கே பிறந்தது என்று தெரியமுடியவில்லை.

526. **பரு வரை மங்கை தன் பங்கரைப்**
பாண்டியற்கு ஆர் அமுது ஆம்
ஒருவரை ஒன்றும் இலாதவரைக்
கழல் போது இறைஞ்சித்
தெரிவர நின்று உருக்கிப் பரி
மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை அன்றி உருவு அறியாது
என் தன் உள்ளம் அதே 1

'பாண்டியற்கு ஆர் அமுது' என்று சொல்லியது இரண்டாம் வரகுணனுக்கு, அவன் பிறவியைப் போக்கி

வீடுபேறு அளித்தமையை அறிவிப்பதாகும். 'அமுது' என்ற சொல்லால் நிலையான வாழ்வை, வீடுபேற்றை நினைவுறுத் தினார் ஆயிற்று. முன்னர்ப் போற்றித் திருவகவலில் 'நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல் பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி' (திருவாச:4-213-214) என்று கூறியுள்ளார். ஆதலின், இங்குக் கூறியதும் அக்கருத்தை வலியுறுத்தவேயாகும். 'பாண்டியற்கு' என்று ஒருமையாகக் கூறியமையின் பாண்டிய மன்னர் அனைவரையும் குறிக்காமல் வரகுணன் ஒருவனையே இது குறிப்பதாயிற்று.

'ஒருவரை, ஒன்றும் இலாதவரை' என்று அடுத்தடுத்துக் கூறியுள்ளது சிந்திப்பதற்கு உரியது. 'ஒருவரை' என்பதற்கு ஒப்பற்றவரை என்று பொருள் கூறுவது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. 'ஏகம் சத்' என்று சொல்லப்படும் ஒருவனுக்கு ஒப்புமை இல்லாதவன் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? அவனோ ஒருவன்; அவனையன்றி வேறு எதுவும் இல்லை. அப்படியானால் ஒப்பிடுவதற்கு இரண்டாவது ஒரு பொருள் இல்லாதபோது ஒப்புமை இல்லாதவன் என்று சொல்வது பொருந்துமாறில்லை.

அடிகளார் கூறிய 'ஒருவரை, ஒன்றும் இலாதவரை' என்ற தொடருக்கு, வேறு விதமாகப் பொருள் கொள்ள வேண்டும். 'ஒருவர்' என்று கூறும்போது அந்தச் சுட்டுக்குரிய ஒருவர் வடிவு, உருவு, குணங்குறி உடையவராக இருப்பது ஒருதலை. அப்படிப்பட்ட ஒருவரை 'ஒன்றும் இல்லாதவர்' என்று அடுத்துக் குறிப்பது எப்படிப் பொருந்தும்? ஒன்றும் இல்லாதவர் என்ற சொல் மேலே கூறிய வடிவு, உருவு, குணம், குறி ஆகிய எதுவும் இல்லாதவர் என்பதையே குறிக்கும். வேறு வகையாகக் கூறினால், குணம், குறி, முதலிய ஒன்றும் இல்லாத ஒருவர்

என்னும்போது 'ஒருவர்'என்ற சொல் சுட்டுமாத்திரையாய் நிற்கின்றதே தவிர அதற்கு வேறு பொருளில்லை.

'பருவரை மங்கை தன் பங்கன்' என்றாலே நம்முடைய மனோலயம் கடந்து கற்பனையால்மட்டும் ஓரளவு சிந்திக்கக் கூடிய நிலையில் இருப்பவன் என்பது தெளிவாகிறது. அடுத்து, ஒன்றுமில்லாத ஒருவன் என்றால், குணங்குறி கடந்து நம் கற்பனைக்கு அப்பாற்பட்டு இருக்கின்ற ஒருவன் என்ற பொருளே வலுவடைகிறது. அப்படிப்பட்ட ஒரு பொருளை, பொறி, புலன்கள் மூலம் காணவோ அந்தக்கரணங்களுள் மனத்திலோ, சித்தத்திலோ நிறுத்தவோ முடியாது. அப்படிப்பட்ட ஒருவரை, 'கழற்போது இறைஞ்சி' என்கிறார் அடிகளார். அவனோ வடிவம் அற்றவன்; அவனுடைய 'கழற்போது இறைஞ்சி' என்பது எவ்வாறு பொருந்தும்? இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்குப் பாடலின் மூன்றாவது அடியில், அடிகளார் குணங்குறி கடந்த அவன் யாவரும் காணப் பரிமேற் கொண்ட சேவகனாக வந்ததை எடுத்துக் கூறுகிறார்.

பரிமேல் ஏறிவரும் ஒருவனுடைய திருவடிகள் நிலத்துள் மறையாது, நிலத்திலிருந்து உயரமாக, குதிரையின் அங்கவடியில் நுழைக்கப்பட்டிருத்தலின் யாவரும் எளிதாக அதனைக் காணமுடியும். எனவே, 'கழற் போது இறைஞ்சி' என்ற தொடரைப் 'பரிமேற்கொண்ட சேவகனார்' என்பதன்பின்னர்க் கூட்டிப் பொருள்காண வேண்டும்.

குதிரைச் சேவகனின் திருவடிகளை இறைஞ்சியபின் என்ன நிகழுகின்றது என்பதைத் 'தெரிவர நின்று உருக்கி' என்ற சொற்களால் வெளிப்படுத்துகின்றார்.

மாலும், அயனும் காணாத அத்திருவடிகள், இப்போது ஒரு குதிரையின் அங்கவடியில் புகுந்துள்ளன. மதுரை

மாநகரில் பாண்டியன் உட்பட எத்தரத்து மக்களும் அத்திருவடியைக் கண்டு தரிசிக்க (தெரிவர) வாய்ப்பளித்துக் கண்டாரது உள்ளத்தை உருக்கும் பணியைச் செய்கின்றது அத்திருவடி.

திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பின்னர் நடை பெற்றதாகும், குதிரைச் சேவகனாக வந்த நிகழ்ச்சி. பெருந்துறையில் குருநாதரின் வடிவில் ஈடுபட்டு அவ்வடிவையே தம்முள் நிறுத்தி, ஆனந்த பரவசர் ஆனார் அடிகளார். அந்தக் குருநாதர் தரிசனத்தின்போதே உமையொரு பாகன் தரிசனமும், தில்லைக் கூத்தன் தரிசனமும் அடுத்தடுத்து நிகழ்ந்தன.

குருநாதர் பின்னரும் இவருடைய மனத்தில் ஆழ்ந்திருந்தபோதிலும், மதுரையில் குதிரைச் சேவகன் தரிசனம் சற்றும் எதிர்பாராமல் நிகழ்ந்ததாகும். குதிரைகள் வரும் என்று அடிகளார் நம்பியது உண்மைதான். ஆனால், சொக்கனே குதிரைச் சேவகனாக வருவான் என்று அவர் கனவிலும் கருதியதில்லை. குதிரைச் சேவகன் திருவடிகளைப் பார்த்தபொழுது சேவகன் மறைந்து விடுகிறான். சில நாட்கள்முன்வரை அமைச்சராக இருந்த ஒருவர், குருநாதரின் திருவடிகளில் வீழ்வது சரி. ஆனால், குதிரைச் சேவகனின் கழல்களை இறைஞ்சவேண்டும் என்ற எண்ணம் எப்படி வந்தது? அந்தக் கழல்கள் அடிகளாருடைய உள்ளத்தை உருகச்செய்துவிட்டன. முன்னரே, குருநாதரின் திருவடிகள் உள்ளத்தை உருக்கியதை அனுபவித்தவர் அவர். இப்பொழுது மதுரையில் குதிரைச் சேவகனின் திருவடிகள் உள்ளத்தை உருக்கின என்றால், அக்குதிரையின்மேல் அமர்ந்துள்ளவன் சாதாரணக் குதிரைச் சேவகன் அல்லன், ஆலவாய்ச் சொக்கனே ஆவான் என்ற உண்மை அடிகளாருக்குத் தெற்றென விளங்கியது. குருநாதராக வந்தவர் ஆலவாய்ச்

சொக்கன்தான். அதே சொக்கன்தான் இப்பொழுது குதிரைச் சேவகனாகவும் வந்துள்ளான் என்பதை அடிகளாரின் ஆழ்மனம் வலுவாக உணரத் தொடங்கியது அதன் பயனாக அவருடைய மனத்தில் பதிந்த சேவகனின் வடிவம் அங்கேயே நிலைபெற்று விட்டது. அந்த வடிவைத் தவிர வேறு எந்த வடிவையும் அடிகளாரின் மனம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைப் 'பரிமேற்கொண்ட சேவகனார் ஒருவரையன்றி உருவறியாது என்றன் உள்ளமதே' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார்.

527. சதிரை மறந்து அறி மால் கொள்வர்
சார்ந்தவர் சாற்றிச் சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதி
கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல் வந்து கூடிடுமேல்
குடிகேடு கண்டீர்
மதுரையர் மன்னன் மறு பிறப்பு
ஓட மறித்திடுமே. 2

இப்பாடலுக்கு நேரிடையாகப் பொருள்கொள்வது சற்றுக் கடினமானதாகும். 'கழுக்கடை கைப்பிடித்துக் குதிரையின் மேல்வந்து கூடிடுமேல்' என்ற தொடரில் கூடிடுமேல் என்ற சொல், பொருளை விளங்கிக் கொள்ள உதவுகிறது. 'வந்து கூடிடுமேல்' என்பது வருவானே யானால் என்ற பொருளைத் தருவதாகும். அப்படியானால் இதன் பொருளென்ன? குதிரைச் சேவகன் ஏற்கெனவே வந்துவிட்டான். குதிரையில் அமர்ந்தபடியே பாண்டியனிடம் உரையாடுகிறான். இறுதியில் குதிரைகளை விற்றதற்கு அடையாளமாகக் குதிரையின் கடிவாளத்தைக் கயிறு மாற்றிப் பாண்டியனிடம் தந்துவிட்டான். இவ்வளவும் நடந்தபிறகு 'குதிரையின் மேல்வந்து

கூடிடுமேல்' என்று அடிகளார் கூறியது நம் சிந்தனையைத் தூண்டுகிறது.

வருவானேயானால், என்பதற்கு எழுவாயாக அமைந்துள்ள குதிரைச் சேவகனைப்பற்றி அடிகளார் என்ன சொல்லுகிறார் என்று அறிவதற்கு மீண்டும் ஒரு முறை பாடலைக் காண்டல் தேவை.

இரண்டு தொடர்கள் இந்த நுணுக்கத்தை அறிவிக்கின்றன ஒன்று 'கதிரை மறைத்தன்ன சோதி' என்பதாகும். இரண்டாவது 'கழுக்கடை கைப்பிடித்து' என்பதாகும். பாண்டியனிடம் குதிரைச் சேவகன் இப்பொழுது வந்துள்ள நிலையில் இவையிரண்டும் அவன்பால் இல்லை. சூரியனை மறைக்கின்ற மாபெரும் ஒளிப்பிழம்பாக (கதிரை மறைத்தன்ன சோதி) அவன் வரவில்லை. இரண்டாவது, என்றும் அவன் கையை விட்டு அகலாத சூலமும் (கழுக்கடையும்) அவன் கையில் இல்லை.

ஆலவாய்ச் சொக்கனே குதிரைச் சேவகன் என்றாலும் அவன் இப்பொழுது வந்துள்ளது சாதாரண குதிரைச் சேவகன் வடிவிலாகும்.

இதனை விட்டு நீங்கித் தனக்கே உரிய சோதி சொரூபத்தில் கழுக்கடையையும் கையிலேந்தி வருவானேயானால், (வந்து கூடிடுமேல்) இரண்டு மாபெரும் அற்புதங்கள் நிகழும் என்பதை உறுதியோடு பறையடித்துச் சொல்லச் சித்தமாக இருப்பதாக அடிகளார் கூறுகிறார்.

அவன் இவ்வாறு வருவானேயானல் தம்மை அறிவுடையவர் என்று கருதிக்கொள்கின்ற அனைவரும் அவனைக் கண்டவுடன் தம் பெருமையை மறந்து (சதுரை மறந்து) ஞானப் பித்துப் பிடித்துத் திரிவர் (அறி மால் கொள்வர்) என்பது முதலாவது நிகழ்ச்சி.

அனைவரும் இவ்வாறு வாழ்வை மறந்து, குடிப்பெருமையை மறந்து, அறி மால் கொள்வரேல், அவர்கள் அனைவருடைய குடியும் கெடும். இறைவனை நேரே தரிசித்த (அறி மால் கொண்ட) ஒருவர் காரணமாக அவர்களுடைய சந்ததியனர்அனைவரும் பிறப்பிலிருந்து விடுபடுவர். அனைவரும் பிறப்பைத் துறப்பதால், அவர்கள் பரம்பரை தொடராது. ஆதலின் 'குடி கெடும்' என்றார். இது இரண்டாவது நிகழ்ச்சி.

இப்பொழுது சிம்மாசனத்தில் இருந்துகொண்டே எதிரே இருப்பவனைச் சாதாரணக் குதிரைச் சேவகன் என்று நினைந்து, அவனிடம் உரையாடிக்கொண்டிருக்கும் இந்தப் பாண்டி மன்னனுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு என்கிறார் அடிகளார். அவன் எதிரே கழுக்கடையேந்தி ஒளிப்பிழம்பாக வரும் சொக்கன் வடிவம் இல்லை; குதிரைச் சேவகனே சொக்கன்தான் என்று அறிந்து கொள்ளும் ஆற்றலும் பாண்டியனுக்கு இல்லை என்றாலும், மதுரையர் மன்னனாக உள்ள அவனுடைய வினை காரணமாக வரும் மறுபிறப்பு இல்லையாம்படி மறித்து ஆட்கொள்ளும் மேலே கூறப்பெற்ற எந்த ஒருநிலையையும் பாண்டியன் அடையாவிட்டாலும், குதிரைச் சேவகன் கருணையால் மதுரையார் மன்னனின் மறுபிறப்பு அவனைவிட்டு நீங்க அவனைத் தடுத்து ஆட்கொள்வார் (மறித்திடும்) என்கிறார். இந்நிகழ்ச்சி நடைபெறுகின்ற நேரத்தில் பாண்டியன் உயிரோடுதான் இருக்கின்றான். ஆனால், அவனுடைய மறுபிறப்பு அழிக்கப்பட்டதை அவன் உணரவில்லை என்றாலும், அடிகளார் உள்ளத்தில் அவன் பிறவி நீங்குகின்ற நிலை காட்சியளிக்கின்றது ஆதலால், 'மறுபிறப்பு ஓட மறித்திடுமே' என்றார். இதனை அடுத்து அடிகளார் மனத்திரையில் மற்றொரு காட்சியும் தென்பட்டிருக்கவேண்டும். அதனால்தான்,

நரகொடு சுவர்க்க நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
(திருவாச: 4: 213,214)

என்று பாடுகிறார். இத்தொடரிலுள்ள சிறப்பு என்னவென்றால், 'அருளினை' என்ற இறந்தகால வினைமுற்று ஆகும். அப்படியானால் இதனை அடிகளார் பாடும்பொழுது பாண்டியன் இறையடி சேர்ந்துவிட்டானா? வரலாற்று ரீதியாக இதற்கு ஒரு முடிவு கூற வாய்ப்பு இன்றேனும் அருளினை என்ற இறந்த கால வினைமுற்றும் 527ஆம் பாடலில் வரும் 'ஓட' என்ற எதிர்கால வினையெச்சம் எதிரெதிர் நோக்கும் ஆற்றலை அடிகளாருக்கு ஆலவாய்ச் சொக்கன் அருளியிருந்தான் என்று நினைக்க இடம் தருகிறது.

528. நீர் இன்ப வெள்ளத்துள் நீந்திக்
குளிக்கின்ற நெஞ்சம் கொண்டீர்
பார் இன்ப வெள்ளம் கொளப் பரி
மேற்கொண்ட பாண்டியனார்
ஓர் இன்ப வெள்ளத்து உருக்கொண்டு
தொண்டரை உள்ளம் கொண்டார்
பேர் இன்ப வெள்ளத்துள் பெய் கழலே
சென்று பேணுமினே 3

'நிலையற்றதும் அழிவதுமாகிய உலகிடைக் காணப்படும் இன்பம் என்ற நீரில் குளித்துக் கும்மாளமிட விரும்புகின்ற உலகீர்! இந்த இன்பத்திற்கு மறுதலையாக நிலைபேறுடையதும், எல்லையற்றதுமாகிய பேரின்ப வெள்ளம் உள்ளது. அந்த இன்ப வெள்ளத்துள் உலகத்தையே மூழ்கித் திளைக்கச் செய்யப், பாண்டியனார் (இறைவன்) பரிமேல் ஏறி இதோ புறப்பட்டுவிட்டார்.

'பரிமேல் கொண்டவரைச் சாதாரணக் குதிரைச் சேவகன் என்றா நினைத்துவிட்டீர்கள்? இல்லை, இன்ப வெள்ளம் குதிரைச் சேவகன் என்ற ஓர் உருக் கொண்டு, மதுரை நகரில் வந்ததுமட்டு மல்லாமல், உண்மைத் தொண்டர்களின் உள்ளத்தினுள்ளும் புகுந்துவிட்டது.

'தொண்டர்களே! இன்பவெள்ளம் என்ற நுண்பொருளை எப்படி மனத்தில் ஏற்றித் தியானிப்பது என்று கவலை கொள்கிறீர்களா? கவலை வேண்டா; குதிரைச் சேவகனார் இன்ப வடிவினராய் இருந்தாலும், அவருடைய திருவடிகள் காட்சி தரக்கூடிய நிலையில் பருவடிவுடன் குதிரையின் அங்கவடிவில் உள்ளன. அந்தப் பெய்கழலைச் சென்று பேணுவீர்களாக' என்றவாறு.

பாண்டினார் என்று இறைவனைக்கூற ஒரு காரணமுண்டு. 'பாண்டி நாடே பழம்பதியாகவும்' (திருவாச: 2-118) என்று முன்னரே கூறியுள்ளார். ஆதலின், தென்னன், பாண்டியனார் என்ற சொற்கள் சொக்கனையே சுட்டுகின்றன என்பதை எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.

529. செறியும் பிறவிக்கு நல்லவர்
செல்லன்மின் தென்னன் நல்நாட்டு
இறைவன் கிளர்கின்ற காலம் இக்
காலம் எக் காலத்துள்ளும்
அறிவு ஒண் கதிர் வாள் உறை கழித்து
ஆனந்த மாக் கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார்
புரள இரு நிலத்தே 4

இப்பாடலை, 'தென்னன். நல் நாட்டு இறைவன், எக்காலத்துள்ளும் அறிவு ஒண் கதிர் வாள் உறை கழித்து, ஆனந்த மாக் கடவி, எதிர்ந்தார் இரு நிலத்தே புரள,

பிறப்பை எறியும் இறைவன், கிளர்கின்ற காலம் இக்காலம்; செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லல்மின்' என்றவாறு கொண்டுகூட்டுச் செய்தல் நலம்.

'தென்னன் என்ற பெயரை உடையவனும், நல்நாடு ஆகிய பாண்டி நாட்டின் தலைவனும் ஆகிய பாண்டிப்பிரான் எல்லா நேரத்திலும் எல்லாக் காலத்திலும் தன்பாலுள்ள ஞானம் என்ற ஒளிபொருந்திய வாளை, அதனுடைய உறையிலிருந்து எடுத்து ஆனந்தமாகிய குதிரைமேல் ஏறிச் செலுத்திக்கொண்டு, தம்மை நோக்கி, உள்ளன்புடன் வருகின்றவர்களுடைய உடம்பு இந்நிலத்தில் வீழுமாறு செய்து, பிறப்பை அறுப்பான். அவன் இப்பணியைச் செய்யப் புறப்படுகின்ற காலம் இப்பொழுது வந்துவிட்டது. ஆகையால், இப்பிறவியில் இருந்துகொண்டே அதில் கிடைக்கும் இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று நினைத்துப் பிறவியை விரும்புகின்றவர்களே! நீங்கள் அவனெதிரே செல்ல வேண்டா' என்றவாறு.

உலகிடை வாழும் மக்கள் இருதிறத்தினர் ஆவர். பெரும்பான்மையானவர், 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்ற அடிப்படையில் இந்த உடம்புடன் அனுபவிக்கப்படும் இன்பங்களுக்காக, உடலை விரும்பிப் பேணிப் பாதுகாப்பர். இக்கூட்டத்தாரையே அடிகளார் 'செறியும் பிறவிக்கு நல்லவர்' என்று கூறுகின்றார்.

ஏனைய சிலர், இங்கு அனுபவிக்கப்படும் இன்பம் முதலியவை நிலையில்லாதவை, நிறைவில்லாதவை என்ற கருத்தில், தம் உடம்பைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றனர். ஆனால், உடம்பைப் போக்கிக்கொள்ளும் உரிமை அவர்களுக்கில்லை. அந்த நிலையில் திகைத்துச் செய்வதறியாது தவிக்கின்றவர்களை

நோக்கி, 'அவனை நோக்கிச் செல்க. ஆனந்தமாகிய குதிரையில் ஞானமாகிய வாளோடு வருபவன் தன்னை நோக்கி வரும் இவர்களை எதிர்கொண்டு இவர்களின் பிறவியைப் போக்குகின்றான்' என்று கூறுகின்றார்.

530. காலம் உண்டாகவே காதல் செய்து
உய்ம்மின் கருது அரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன்
. வானவர் நண் அரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்
பிரான் தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான்
வந்து முந்துமினே 5

மூல பண்டாரம் - தலைமைக் கருவூலம்.

'தத்தம் முடிவுக் காலம் எப்பொழுதென்று தெரியாமல் வாழ்கின்ற உலகீர்! உங்களுடைய வாழ்கின்ற காலம் இருக்கும்போதே இறைவனிடம் அன்புசெலுத்தி உய்கதியைத் தேடுவீர்களாக! பூமியை உண்டவனும், நான்முகனும் நெருங்கிச் செல்வதற்கு அஞ்சிய ஆலகால விடத்தைப் போனகமாக உண்டவன் யார் தெரியுமா? அவனே எங்கள் பாண்டிப்பிரான். அவன் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறான் தெரியுமா? தன்னை நாடிவரும் அடியவர்கட்குத் தன்பாலுள்ள திருவருளாகிய கருவூலத்திலிருந்து அள்ளி அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறான். எனவே, உங்கள் பங்கைப் பெற இப்பொழுதே முந்துங்கள்' என்றவாறு.

'காலம் உண்டாகவே காதல் செய்து உய்ம்மின்' என்ற தொடருக்கு, அவன் வழங்கிக்கொண்டிருக்கும் காலம் இருக்கும்போதே அவனிடம் உடனே செல்ல

வேண்டுமென்ற விருப்பத்தை வளர்த்துக்கொண்டு உய்கதி அடையுங்கள்' என்று பொருள்கூறினும் அமையும்.

531. ஈண்டிய மாய இருள் கெட
எப் பொருளும் விளங்கத்
தூண்டிய சோதியை மீனவனும்
சொல்ல வல்லன் அல்லன்
வேண்டியபோதே விலக்கு இலை
வாய்தல் விரும்புமின் தாள்
பாண்டியனார் அருள்செய்கின்ற
முத்திப் பரிசு இதுவே. 6

பிறவிதோறும் வினைகள் தொடர்ந்து வருதலின் 'ஈண்டிய மாயை' என்றார். செறிந்திருக்கின்றது ஆதலின் 'ஈண்டிய' என்றார். இந்த மாயையின் விளைவாக அஞ்ஞானமாகிய இருள் ஆன்மாவைச் சூழ்ந்துநிற்கின்றது.

இருளைப் போக்கவல்லது ஒளி ஒன்றே ஆதலின் மாயையால் தோன்றிய அஞ்ஞானத்தைப் போக்கும் இறைவனைச் 'சோதி' என்று அருளிச்செய்தார்.

அஞ்ஞான இருள் கெட்டவுடன் அதுவரை கண்ட பொருள்கள் புதிய விளக்கத்துடன் காட்சியளிக்கின்றன. அஞ்ஞானத்துடன் இருக்கையில் பொருள்கள் பல்வேறு வடிவுடன் காணப்படினும், அவற்றின் உண்மையான சொரூபம், அவற்றிடையே உள்ள தொடர்பு என்பவை நன்கு விளங்குமாறில்லை. மெய்ஞ்ஞானம் ஏற்பட்டவுடன் இந்தச் சொரூபம், தொடர்பு என்பவை உள்ளவாறு தோன்றுகின்றமையின் 'எப்பொருளும் விளங்க' என்றார்.

அடுத்து, 'தூண்டிய' என்ற பெயரெச்சம் சிந்திப்பதற்கு உரியது. சோதிவடிவினனாகிய இறைவன் ஏதோ ஒன்றைத்

பிறப்பை எறியும் இறைவன், கிளர்கின்ற காலம் இக்காலம்; செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லல்மின்' என்றவாறு கொண்டுகூட்டுச் செய்தல் நலம்.

'தென்னன் என்ற பெயரை உடையவனும், நல்நாடு ஆகிய பாண்டி நாட்டின் தலைவனும் ஆகிய பாண்டிப்பிரான் எல்லா நேரத்திலும் எல்லாக் காலத்திலும் தன்பாலுள்ள ஞானம் என்ற ஒளிபொருந்திய வாளை, அதனுடைய உறையிலிருந்து எடுத்து ஆனந்தமாகிய குதிரைமேல் ஏறிச் செலுத்திக்கொண்டு, தம்மை நோக்கி, உள்ளன்புடன் வருகின்றவர்களுடைய உடம்பு இந்நிலத்தில் வீழுமாறு செய்து, பிறப்பை அறுப்பான். அவன் இப்பணியைச் செய்யப் புறப்படுகின்ற காலம் இப்பொழுது வந்துவிட்டது. ஆகையால், இப்பிறவியில் இருந்துகொண்டே அதில் கிடைக்கும் இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று நினைத்துப் பிறவியை விரும்புகின்றவர்களே! நீங்கள் அவனெதிரே செல்ல வேண்டா' என்றவாறு.

உலகிடை வாழும் மக்கள் இருதிறத்தினர் ஆவர். பெரும்பான்மையானவர், 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்ற அடிப்படையில் இந்த உடம்புடன் அனுபவிக்கப்படும் இன்பங்களுக்காக, உடலை விரும்பிப் பேணிப் பாதுகாப்பர். இக்கூட்டத்தாரையே அடிகளார் 'செறியும் பிறவிக்கு நல்லவர்' என்று கூறுகின்றார்.

ஏனைய சிலர், இங்கு அனுபவிக்கப்படும் இன்பம் முதலியவை நிலையில்லாதவை, நிறைவில்லாதவை என்ற கருத்தில், தம் உடம்பைப் போக்கிக்கொள்ள வேண்டு மென்று விரும்புகின்றனர். ஆனால், உடம்பைப் போக்கிக்கொள்ளும் உரிமை அவர்களுக்கில்லை. அந்த நிலையில் திகைத்துச் செய்வதறியாது தவிக்கின்றவர்களை

நோக்கி, 'அவனை நோக்கிச் செல்க. ஆனந்தமாகிய குதிரையில் ஞானமாகிய வாளோடு வருபவன் தன்னை நோக்கி வரும் இவர்களை எதிர்கொண்டு இவர்களின் பிறவியைப் போக்குகின்றான்' என்று கூறுகின்றார்.

530. காலம் உண்டாகவே காதல் செய்து
உய்ம்மின் கருது அரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன்
வானவர் நண் அரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்
பிரான் தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான்
வந்து முந்துமினே 5

மூல பண்டாரம் - தலைமைக் கருவூலம்.

'தத்தம் முடிவுக் காலம் எப்பொழுதென்று தெரியாமல் வாழ்கின்ற உலகீர்! உங்களுடைய வாழ்கின்ற காலம் இருக்கும்போதே இறைவனிடம் அன்புசெலுத்தி உய்கதியைத் தேடுவீர்களாக! பூமியை உண்டவனும், நான்முகனும் நெருங்கிச் செல்வதற்கு அஞ்சிய ஆலகால விடத்தைப் போனகமாக உண்டவன் யார் தெரியுமா? அவனே எங்கள் பாண்டிப்பிரான். அவன் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறான் தெரியுமா? தன்னை நாடிவரும் அடியவர்கட்குத் தன்பாலுள்ள திருவருளாகிய கருவூலத்திலிருந்து அள்ளி அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறான். எனவே, உங்கள் பங்கைப் பெற இப்பொழுதே முந்துங்கள்' என்றவாறு.

'காலம் உண்டாகவே காதல் செய்து உய்ம்மின்' என்ற தொடருக்கு, அவன் வழங்கிக்கொண்டிருக்கும் காலம் இருக்கும்போதே அவனிடம் உடனே செல்ல

வேண்டுமென்ற விருப்பத்தை வளர்த்துக்கொண்டு உய்கதி அடையுங்கள்' என்று பொருள்கூறினும் அமையும்.

531. ஈண்டிய மாய இருள் கெட
எப் பொருளும் விளங்கத்
தூண்டிய சோதியை மீனவனும்
சொல்ல வல்லன் அல்லன்
வேண்டியபோதே விலக்கு இலை
வாய்தல் விரும்புமின் தாள்
பாண்டியனார் அருள்செய்கின்ற
முத்திப் பரிசு இதுவே. 6

பிறவிதோறும் வினைகள் தொடர்ந்து வருதலின் 'ஈண்டிய மாயை' என்றார். செறிந்திருக்கின்றது ஆதலின் 'ஈண்டிய' என்றார். இந்த மாயையின் விளைவாக அஞ்ஞானமாகிய இருள் ஆன்மாவைச் சூழ்ந்துநிற்கின்றது.

இருளைப் போக்கவல்லது ஒளி ஒன்றே ஆதலின் மாயையால் தோன்றிய அஞ்ஞானத்தைப் போக்கும் இறைவனைச் 'சோதி' என்று அருளிச்செய்தார்.

அஞ்ஞான இருள் கெட்டவுடன் அதுவரை கண்ட பொருள்கள் புதிய விளக்கத்துடன் காட்சியளிக்கின்றன. அஞ்ஞானத்துடன் இருக்கையில் பொருள்கள் பல்வேறு வடிவுடன் காணப்படினும், அவற்றின் உண்மையான சொரூபம், அவற்றிடையே உள்ள தொடர்பு என்பவை நன்கு விளங்குமாறில்லை. மெய்ஞ்ஞானம் ஏற்பட்டவுடன் இந்தச் சொரூபம், தொடர்பு என்பவை உள்ளவாறு தோன்றுகின்றமையின் 'எப்பொருளும் விளங்க' என்றார்.

அடுத்து, 'தூண்டிய' என்ற பெயரெச்சம் சிந்திப்பதற்கு உரியது. சோதிவடிவினனாகிய இறைவன் ஏதோ ஒன்றைத்

தூண்டுகிறான் என்றால், எதனைத் தூண்டுகிறான்? ஒன்றைத் தூண்டவேண்டுமானால் அது முன்னரே அங்கிருத்தல் வேண்டும். எரிய வேண்டிய அளவில் எரியாமல் ஒளி குன்றியிருக்கும் விளக்கைத்தான் தூண்ட முடியும். விளக்கு எரியவில்லையென்றால் 'தூண்டிய' என்ற சொல்பயனற்றுப் போய்விடும். எனவே, ஒளிவடிவின னாகிய இறைவன் (சோதி), தூண்டிய என்ற பெயரெச்சத்தை அடுத்து வருதலின் இச்செயலை அவன் செய்தான் என்பது பெறப்பட்டது. எதனைத் தூண்டினான்? ஆன்மாவினிடத்து இணைந்து நிற்கும் மெய்யுணர்வைத் தூண்டினான் என்பது பெற்றாம்.

மெய்யுணர்வைத் தூண்டுதற்கு என்ன தேவை? அந்த ஆன்மாவையும், அதன் உடன் உறையும் மெய் உணர்வையும் தொடர்ந்து வருகின்ற அஞ்ஞானமாகிய இருள் மூடி மறைத்து நின்றது. அந்த இருளைத் தன் கண்களாலும் (சட்சு தீட்சை), திருவடிகளாலும் (திருவடி தீட்சை) போக்கி, உள்ளே உறையும் மெய்யுணர்வு வெளிப்பட அருளியதைத்தான் தூண்டிய சோதி என்கிறார்.

பாண்டியனை (மீனவனை)ப் பொறுத்தமட்டில் இந்த இரண்டு தீட்சையும் நடைபெறவில்லை ஆதலால், எதிரே குதிரையின்மேல் அமர்ந்துள்ள சேவகன் ஆலவாய்ச் சொக்கன் என்பதை அவன் அறிந்தானில்லை. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. திருக்கோயிலில் இறைவனை வழிபடும் பழக்கமுடைய பாண்டியன், மதுரையம்பதியில் இறைவன் இயற்றிய பல திருவிளையாடல்கள்பற்றிக் கேள்விப்பட்டிருப்பினும், அப்பெருமான் குதிரைச் சேவகனாகவும் வருவான் என்று கனவிலும் கருதவில்லை. இங்குச் சற்று நின்று நிதானிக்க வேண்டும்.

இப்பிறவியிலேயே பரகதியை அடையப்போகின்றவன் இந்தப் பாண்டியன். 'பெரிய அன்பின் வரகுண தேவர்' என்று முற்றும் துறந்த பட்டினத்துப் பிள்ளையால் பாராட்டப்பெற்றவன். குதிரைச் சேவகனாகத் தன் எதிரில் இருக்கும் சொக்கனை அவன் எப்படி அறியாமல் போய்விட்டான்? அறிய முடியாவிடினும் பெரும் பக்தனாகிய பாண்டியனின் உள்ளத்தில், எதிரே உள்ள வடிவம் உள்ளுணர்வைத் தூண்டியிருக்க வேண்டுமே! நிச்சயமாகத் தூண்டியிருக்கும். அறிவால் அறிந்துகொள்ள முடியாவிடினும், உள்ளுணர்வு காரணமாக, எதிரே உள்ளவன் சாதாரணக் குதிரைச் சேவகன் அல்லன் என்பதை உணர்ந்திருக்க வேண்டுமல்லவா? அந்த உள்ளுணர்வு வளர்ச்சியடைந்து, அறிவைத் தன்வசப்படுத்தி உண்மையை அறிவித்திருக்கவேண்டும். அவ்வாறு நடை பெறாமைக்குரிய காரணங்கள் இரண்டு.

முதலாவது, குதிரைச் சேவகன் கொண்டுவந்த குதிரைகளின் கம்பீரமும், அழகும் பாண்டியன் மனத்தைத் தம்பால் ஈர்த்துவிட்டன.

இரண்டாவது, குதிரைச் சேவகன் அரசனாகிய தன்முன் இறங்கிப் பணியாமல் குதிரையின்மேல் இருந்த படியே உரையாடியது பாண்டியனின் அகங்காரத்தைத் தூண்டிச் சினங் கொள்ளச் செய்திருக்க வேண்டும்.

இந்த இரண்டு காரணங்களால், பாண்டியனின் உள்ளுணர்வு பணி புரிந்தும் அது பயன்படாமல் போய்விட்டது. இவற்றையெல்லாம் மனத்துட் கொண்ட அடிகளார் மீனவனும் சோதியைக் காணவல்லன் அல்லன், அறிய வல்லன் அல்லன், தெரியவல்லன் அல்லன், உணர வல்லன் அல்லன் என்றெல்லாம் கூறாது, சொல்ல வல்லன்

அல்லன் என்பதால் உண்மையை உணர்ந்து தான் உணர்ந்துகொண்ட அக்கருத்தைப் பிறர் அறியச் சொல்ல விரும்பியிருந்தால்கூட அது அவனால் முடியாது என்பதைக் குறிக்கவே வல்லன் அல்லன் என்றார் அடிகளார்.

அடுத்து உள்ள தொடர், மேலே நாம் கூறிய கருத்திற்கு அரண் செய்வதாக அமைந்துள்ளது. வேண்டியபோதே விலக்கு இலை வாய்தல் என்பதாகும் அத்தொடர். இதன் பொருள் அவன் அருள்செய்ய விரும்பினால் அந்த விநாடியே அது கைகூடுவதற்குத் (வாய்தல்) தடையில்லை (விலக்கிலை) என்றபடி.

இதிலிருந்து ஒன்றைத் தெரிந்துகொள்ள முடிகிறது. அருளைப் பெறவேண்டுமென்று நாம் செய்யும் முயற்சிகள் முடிவான பயனைத் தரும் என்று கூறுவதற்கில்லை. ஆனால், அருள் செய்யவேண்டும் என்று அவன் நினைத்துவிட்டால் அந்த அருள் நம்மை நோக்கிப் பாய்வதற்கு எவ்விதத் தடையுமில்லை என்றபடி.

ஆலவாய்ச் சொக்கன், அடிகளாருக்கு அருள் செய்ய வேண்டும் என்று விரும்பிவிட்டான். எனவே, திருப்பெருந்துறையில் எவ்விதத் தடங்கலுமின்றி அடிகளாரிடம் அருள் பாய்ந்தது.

பாண்டியனைப் பொறுத்தமட்டில், குதிரைச் சேவகனாக வந்து காட்சி தந்தானேனும், பின்னர் மண்சுமந்து கூலியாளாய் வந்து காட்சி தந்தானேனும் அவர்கள் இருவரையும் இன்னார் என்று இனங்கண்டு கொள்ளும் வாய்ப்புப் பாண்டியனுக்கு ஏற்படவில்லை. இதனைத்தான் அடிகளார் 'மீனவனும் சொல்லவல்லன் அல்லன்' என்று கூறினார். மீனவன் என்பது எல்லாப் பாண்டியர்களுக்கும் பொதுப்பெயராயினும், மீனவனும்

என்ற சொல்லிலுள்ள உயர்வுச் சிறப்பு உம்மை வரகுணனையே குறித்து நின்றது.

அடுத்து நிற்பது 'விரும்புமின் தாள்' என்பதாகும். எந்த ஒருவனும் அருளை விரும்புமாறு செய்வது சொக்கனுடைய பணியன்று. அப்படியானால் உயிர்களாகிய நாம் செய்யவேண்டியது என்ன? அவன் திருவடிகளை அன்புடன் விரும்புகின்ற ஒரே பணிதான். இந்த ஒரு பணியை விடாது செய்தால் உரிய காலத்தில் அவன் திருவருள் நம்மை நோக்கிப் பாயும்.

பாண்டியனார் என்று அழைக்கப்படும் ஆலவாய்ச் சொக்கன் உயிர்களுக்கு முத்தியளிக்கும் வழிவகை (பரிசு) இதுவேயாகும் என்றபடி.

532. மாய வனப் பரி மேற்கொண்டு
மற்று அவர் கைக்கொளலும்
போய் அறும் இப்பிறப்பு என்னும்
பகைகள் புகுந்தவருக்கு
ஆய அரும் பெரும் சீர் உடைத்
தன் அருளே அருளும்
சேய நெடும் கொடைத் தென்னவன்
சேவடி சேர்மின்களே 7

காட்டில் வாழ்கின்ற நரிகளையெல்லாம் குதிரைகளாக மாற்றிக் கொண்டுவந்தமையின் 'வனமாயப் பரி' என்றார். அவ்வாறு கொண்டுவந்த குதிரைகளில் ஒரு குதிரையின் கடிவாளத்தைப் பாண்டிய மன்னனிடம் விற்றதற்கு அடையாளமாகக் குதிரை சேவகன் கயிறுமாறிக் கொடுத்தான். பாண்டிய மன்னன் குதிரையின் கடிவாளத்தைத் தன் கைகளில் பெற்றுக்கொண்டானே தவிரப் பெற்றுக் கொண்ட அந்த விநாடியில் அவனையும் அறியாமல் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அது என்ன தெரியுமா?

'இப்பிறப்பு' என்று கூறியவர் 'பகைகள்' என்று பன்மையாகக் கூறியமையின், பிராரத்துவ வினை காரணமாகப் பாண்டியன் இப்பொழுது பெற்றுள்ள பிறப்பும், இனி ஆகாமியம், சஞ்சிதம் காரணமாக அவனுக்கு வரவேண்டிய பல பிறப்புக்களும் மாறிய கயிற்றை அவன் கைகளால் பெற்றவுடன் போய் ஒழிந்தன. போய் · அற்றன என்று இறந்த கால வாய்பாட்டால் கூறாமல், 'அறும்' என எதிர்கால வாய்பாட்டால் கூறியமைக்கு ஒரு காரணமுண்டு. இந்தப் பாண்டியன் இன்னும் சில காலம் உயிருடன் இருந்து, இன்னும் சில அற்புதங்கள் நிகழக் காரணமாயிருந்து, பின்னரே வீடு பேற்றைக் அடையப்போகின்றான் ஆதலின் 'அறும்' என எதிர்கால வாய்பாட்டாற் கூறினார்.

தென்னவனாகிய அப்பெருமான், தன்பால் அடைக்கலமாகப் புகுந்தவருக்குத் தன்னுடைய பேரருளை வாரி வழங்குவான் என்கிறார்.

அருளை வாரி வழங்குகிறான் என்பதோடு நிறுத்தாமல் 'நெடுங்கொடைத் தென்னவன்' என்று கூறியமையால் திருவடியில் புகுந்தவர்கள் தராதரம் பார்த்து அவன் இன்னருளை வழங்காமல் ஒரு கொடையாளிபோல் தன் அருளை வாரி வழங்குகிறான் என்பது பெறப்பட்டது.

533. அழிவு இன்றி நின்றது ஓர் ஆனந்த
வெள்ளத்திடை அழுத்திக்
கழிவு இல் கருணையைக் காட்டிக்
கடிய வினை அகற்றிப்
பழ மலம் பற்று அறுத்து ஆண்டவன்
பாண்டிப் பெரும் பதமே
முழுது உலகும் தருவான் கொடையே
சென்று முந்துமினே 8

தன்னுடைய எல்லை இல்லாத கருணையை நாம் உணருமாறு செய்து, அனுபவித்தே தீரவேண்டிய கொடுமையுடையதான நம்முடைய பிராரத்துவ வினையையும் போக்கி, பழைய வினைகள் காரணமாக உடல்மேலும் ஏனைய பொருள்கள்மேலும் மனத்திடைத் தோன்றும் பற்றையும் அறுத்தெறிந்தான். இவற்றையெல்லாம் செய்துவிட்டு இந்த ஆன்மாவை அப்படியே விட்டுவிடாமல் முடிவில்லாத ஆனந்தமாகிய வெள்ளத்தில் அழுத்திவிட்டான் என்க.

இறைவனை வழிபடுகின்ற அடியவர்கள் இரு வகைப் படுவர். உலகத்திலுள்ள எல்லாப் பெருநன்மைகளும் தமக்குக் கிடைக்க வேண்டும் என்று வழிபடுவோர் மிகப் பலராவர். இவர்களுடைய பக்திகூடச் சில சமயங்களில் ஆழமானதாகவும் ஆட்டம் காணாததாகவும் இருக்கலாம். இவ்வளவு ஆழமான பக்தியைப் பெற்றிருந்தும் இம்மக்கள் பிறப்பு அறவேண்டும் என்றோ வீடுபேறு வேண்டும் என்றோ இறைவனிடம் வேண்டுவதில்லை. அதற்குப் பதிலாக உலக இன்பங்களில் நாட்டங்கொண்ட இவர்கள் அவற்றையே இறைவனிடம் வேண்டுகின்றனர்.

பெரும் கொடையாளி யாகிய இறைவன், இவர்களின் பக்தியின் ஆழத்தையும் தூய்மையையும் காணுகிறானே தவிர, அவர்கள் என்ன வேண்டுகிறார்கள் என்று கவலைப்படுவதில்லை. 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' *(திருமுறை: 6:23-1)* என்றார் நாவரசர் பெருமான். எனவே, இவர்கள் அரசப் பதவி வேண்டி வழிபட்டால் அதையும்கூடத் தருவான் என்ற கருத்தில் 'பாண்டிப் பெரும்பதமே தருவான்' என்று கூறிய அடிகளார், இந்தப் பெரும்பதத்தில் வந்தபிறகு இதைவிட மேலாக உலகம் முழுவதையும் ஆளவேண்டும், மூன்று உலகங்களையும் ஆளவேண்டும் என்று சூரபதுமனைப்போல் வேண்டி

நின்றால், அதையும் தருவான் என்ற கருத்தில் 'முழுது உலகும் தருவான்' என்றார். இவ்வாறு அவன் தருவது அவர்கள் பக்தி அளவிற்கு ஏற்ற விகிதாசாரத்தில் இருக்கும் என்று யாரும் தவறாக எண்ணிவிடக் கூடாது என்பதற்காக, பாண்டிப் பெரும்பதத்தையும், முழுதுலகையும் தருவான் என்றதோடு நிறுத்தாமல் 'கொடையே தருவான்' என்று முடித்தார்.

இரண்டாவது வகைப் பக்தர்கள் அடிகளாரைப் போல் இறைவன் திருவடியைத் தவிர வேறு ஒன்றும் வேண்டாமல் 'வேண்டேன் செல்வம்' (திருவாச:512) என்று வேண்டி வழிபடுபவர்களாவர்.

இந்த இரு வகையோரையும் பார்த்து, 'சென்று முந்து மினே' என்கிறார் அடிகளார். முந்த வேண்டும் என்று சொல்வதற்குரிய காரணத்தை முன்னரே 'காலம் உண்டாகவே காதல் செய்து உயம்மின்' (திருவாச:530) என்ற இடத்தில் விளக்கியுள்ளார்.

534. விரவிய தீ வினை மேலைப்
பிறப்பு முந்நீர் கடக்கப்
பரவிய அன்பரை என்பு உருக்கும்
பரம் பாண்டியனார்
புரவியின் மேல் வரப் புந்தி
கொளப்பட்ட பூம் கொடியார்
மர இயல் மேற்கொண்டு தம்மையும்
தாம் அறியார் மறந்தே 9

'விரவிய தீவினை மேலைப் பிறப்பு முந்நீர்' என்பது ஒன்றோடொன்று கலந்துநிற்கின்ற பிறப்பு, வினை என்ற கடல்களாகும். வினையையும், பிறப்பையும் விரவிய என்றதால் வினையும் பிறப்பும் ஒன்றுக்கொன்று காரண

காரியத் தொடர்புபட்டு நிற்கின்றன என்பதாம். அதாவது, வினை பிறப்பை உண்டாக்குகிறது; பிறப்பில் வினை செய்யாமல் இருக்க முடியாது; அந்த வினையே மறுபடியும் பிறப்பை உண்டாக்குகிறது. முடிவற்ற சங்கிலிபோல் உள்ள இதனைக் கடல் என்று உருவகித்தது சாலப் பொருந்தும்.

இக்கடலைக் கடக்கவேண்டு மென்று தன் திருவடிகளில் வீழ்ந்து சரண் புகும் அடியவருக்கு (பரவிய அன்பருக்கு) அவன் முதலில் செய்கின்ற காரியம் ஒன்று உண்டு. இப்பிறப்பின் இறுதியில் வீடுபேற்றைத் தருவதும் அல்லாமல் அதற்கு முன்னரே இப்பிறப்பிலேயே அவர்கள் என்பை உருக்கும் அருளைத் தருகின்றான்.

பாண்டியனார் என்ற பொதுப்பெயரில் இருந்து ஆலவாய் அழகனைப் பிரித்துக்காட்ட 'பரம்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார் அடிகளார். 'பரவஸ்து' என்று சிலர் கூறுவதுபோலக் கூறினால், அது அஃறிணைப் பொருளதாகி மனத்தில் நெருடலை உண்டாக்குமோ என்று அஞ்சிய அடிகளார் 'பரம் பாண்டியனார்' என்றார்.

ஆன்ம நாயகனாகிய இறைவன் ஒருவனே புருஷனாவான். இதனாலேயே வைணவர்கள் புருஷோத்தமன் என்ற பெயரை இறைவனுக்குத் தந்தனர்.

மதுரையம்பதியில் பரம்பரையாக வந்த பாண்டி மன்னர்கள், குதிரைச் சவாரி செய்துகொண்டு தெருவில் செல்வது அன்றாட நிகழ்ச்சி, ஒருநாள் இருநாள் பாண்டியன் செலவை யாரென அறியும் ஆர்வத்தோடு கண்ட மகளிர், அவன் இன்னான் என அறிந்ததும் 'பூ ..... இவன்தானா?' என்ற எண்ணத்துடன் திரும்பிவிடுவர்.

ஆனால், ஏதோ ஒருநாள், குதிரைச் சேவகன் ஒருவன், நூற்றுக் கணக்கான குதிரைகள் பின்வர அவற்றை நடத்திச் செல்கிறான். இவன் மன்னன்கூட அல்லனே! அப்படியிருக்க, சாதாரண குதிரைச் சேவகனாக வருகின்ற இவனை, மகளிர் கண்டனர்; தம் அறிவு மயங்கினர். பூங்கொடி போன்ற அவர்கள் ஆடாது அசையாது மரம்போல் நின்றுவிட்டனர். பூங்கொடியார் என்ற சொல்லால் ஓயாது ஓடி அசைந்துகொண்டிருக்கும் கொடியை நினைவூட்டுகிறார் அடிகளார். அப்படி ஆடி அசையும் இயல்புடைய மகளிர் 'ம்ர இயல்' மேற்கொண்டார். அதாவது, ஆடாது அசையாது நிற்கும் மரத்தின் இயல்பை மேற்கொண்டனர்.

முதலில் அறிவு மயங்கினர்; அடுத்து மரம்போல் நின்றனர். மரம் ஆடாது அசையாது நின்றாலும் காற்றை உள் இழுத்து, பிராண வாயுவை வெளியிடும் இயல்பை உடையதன்றோ! ஆனால், மரம்போல் நின்ற மகளிர், தாம் என்ற நினைவேயின்றி நின்றுவிட்டனர் என்கிறார் அடிகளார்.

முதலாவது நடைபெற்றது அறிவு மயங்குதல்; இரண்டாவது அசையாது நிற்றல், மூன்றாவது தான் என்ற நினைவை இழுத்தல், பூங்கொடியார் என்று அடிகளார் கூறினாரேனும் விலங்குமுதல் மக்கள்வரை எல்லா உயிர்கட்கும் இயல்பானதொரு வளர்ச்சியைக் கூறியுள்ளார் அடிகளார்.

'முன்னம் அவனுடை நாமம் கேட்டாள்' (திருமுறை:6:25-7) என்று தொடங்கும் நாவரசர் பெருமானின் பாடல் முழுவதையும் இந்த ஓர் அடியில் சுருக்கிக் கூறிய பெருமை அடிகளாருக்கு உரியதாகும். 'தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்' என்ற

இரண்டும் நாவரசரின் அப்பாடலின் இறுதிப் பகுதியாகும். அடிகளார் கூறிய 'தம்மையும் தாம் அறியார்' என்ற தொடரில் இப்பொருள் முழுவதும் வருவதைக் காணலாம். அதாவது, ஆணவம் முற்றிலுமாக அழிந்த நிலையில்தான் தம்மைத் தாம் அறியாது நிற்கும் நிலை ஏற்படும்.

குதிரைச் சேவகன் தெருவோடுதான் போகின்றான். அவன் யாரையும் குறிப்பாகப் பார்க்கவில்லை. ஆனால், அவனிடமிருந்து புறப்பட்ட அருள் அலைகள் இவ்வாறு செய்கின்றன.

535. கூற்றை வென்று ஆங்கு ஐவர் கோக்களையும்
வென்று இருந்து அழ்கால்
வீற்றிருந்தான் பெரும் தேவியும்
தானும் ஓர் மீனவன்பால்
ஏற்று வந்து ஆர் உயிர் உண்ட
திறல் ஒற்றைச் சேவகனே
தேற்றம் இலாதவர் சேவடி
சிக்கெனச் சேர்மின்களே 10

இப்பாடலில் முதலடியில் வரும் 'ஐவர் கோக்களையும் வென்று' என்ற பகுதி நன்கு விளங்குமாறில்லை. ஐம்பொறிகளையும் வென்றவன் என்று பலரும் உரை கூறியுள்ளனர். இப்படிப்பட்ட ஒரு இயல்பை இறைவனுக்கு ஏற்றுவது பொருத்தமாகத் தெரியவில்லை. பாடல் அமைந்துள்ள முறையில் கூற்றை வென்று, கோக்கள் ஐவரையும் வென்று தேவியும் தானுமாக வீற்றிருந்தான் என்று வருவதால், 'ஐவர் கோக்களை வென்று' என்ற தொடருக்கு, ஐம்பொறிகளாகிய மன்னர்களை வென்று என்று பொருள்கூறுவது சரியாகப் படவில்லை. அதே நேரத்தில் வேறுவிதமாகப் பொருள் கூறவும் சொற்கள் இடந்தரவில்லை.

இப்படி, தேவியும் தானுமாக உள்ள பெருமான் தன் நிலையிலிருந்து இறங்கிக் குதிரைச் சேவகன் வடிவை ஏற்றுக்கொண்டு, மன்னனாகிய வரகுண பாண்டியனின் எதிரே வந்து அவன் சீவ போதத்தை உண்டான்.

குதிரைச் சேவகனாக வந்த வரலாற்றை அறிவதற்கு முன்னர், அவன் திருவடியை அடைவதுதான் உயிரின் குறிக்கோள் என்ற முடிவை (தேற்றம்) அறியாதிருந்தவர்கள் இப்பொழுது இவ்வரலாற்றை அறிந்த பிறகு அவன் திருவருளைப் பெற முந்துவார்களாக!

ॐ ॐ ॐ

37. பிடித்த பத்து

[முத்திக் கலப்புரைத்தல்]

பற்றலாவதோர் நிலை இல்லாமல் எங்கும் பரந்தும் விரிந்தும் கடந்தும் இருக்கின்ற பரம்பொருள் தம்முள் வந்து தங்கியதை ஒருசில வழிகளை மேற்கொண்டு அது வெளியே செல்லாமல் பிடித்துத் தம் உள்ளத்துள்ளே அடைத்துக்கொண்டதைக் கூறும் தொகுதி ஆதலின், பிடித்த பத்து என்ற பெயரை, இப்பதிகம் பெற்றுள்ளது.

இதுவரை அடிகளார் கூறிவந்த கருத்துக்குப் பெரிதும் மாறுபட்டு நிற்பதாகும் இப்பதிகம். 'தானே வந்து என் உள்ளம் புகுந்தருளி அடியேற்கு அருள் செய்தான்' (திருவாச:555) என்றும், 'தானே வந்தெம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்' (திருவாச:160) என்றும், 'அகம்நெகவே புகுந்தாண்டான்' (திருவாச:33) என்றும் பாடியவர் இப்பதிகத்தில் தாமே அரிதின் முயன்று அவனைப் பிடித்துத் தம் உள்ளத்துள் அடைத்துவிட்டதால் அதிலிருந்து எளிதாக வெளிப்பட்டு, அவன் எங்கும் செல்ல முடியாது என்ற கருத்தைப் பதிகம் முழுவதிலும் 'எங்கு எழுந்தருளுவது இனியே?' என்ற தொடரால் தெரிவிக்கின்றார்.

'எங்கு எழுந்தருளுவது இனியே?' என்ற வினாவை எழுப்புவதற்கு முன்னர், அவ்வாறு இறைவன் வெளிப்போக முடியாது என்பதற்குக் காரணத்தையும் கூறியுள்ளார். எல்லாப் பாடல்களிலும் உன்னைப் பிடித்துவிட்டேன் என்று சாதாரண முறையில் கூறாமல், 'சிக்கெனப் பிடித்தேன்' என்று கூறுவதால் அடிகளார் பிடித்த பிடியின் வலு நன்கு விளக்கப்படுகிறது.

சாதாரணமாக, 'பிடித்தல்' என்ற சொல்லுக்குக் கைகளால் பருப்பொருளாக நிற்கும் வேறொன்றைக் கைகளால் பிடித்தலையே பொருளாகக் கூறுவர். மனம் ஒன்றைப் பற்றுதலை, பிடித்தல் என்ற சொல்லால் கூறுவது, புதுமையான வழக்காகும்.

தன் கருணை காரணமாக அடிகளார் உள்ளத்தில் இறைவன் புகுந்தானேனும், புகுந்த அவனை மீண்டும் வெளியே விடாமல், அவன் திருவடிகளைப் பற்றிக் கொண்டிருக்கின்ற செயலை வேறு எந்தச் சொல் கொண்டும் இவ்வளவு அற்புதமாக விளக்கியிருக்க முடியாது. அறிந்தது கொண்டு அறியாததை விளக்குவது போல, கைகளால் பிடிக்கின்றதாகிய அறிந்த செயலைக் குறிப்பிடும் பிடித்த என்ற சொல்லைக்கொண்டே தம் உள்ளத்தில் நிகழ்கின்ற செயலை அடிகளார் எடுத்துக் கூறுகின்றார்.

உட்தலைப்புத் தந்தவர்கள் வழக்கம்போல் இதிலும் குழப்பியுள்ளனர். இறைவன் திருவடிகளில் சென்று சேர்வதாக. இதுவரையில் கூறிவந்த ஒன்றை முற்றிலும் மாற்றி, அவர் திருவருளாகிய திருவடியைத் தம் மனத்துள் சிறைப்பிடித்ததாக அடிகளார் கூறும் இப்பதிகத்தில் முத்தியும் இல்லை, கலப்பும் இல்லை.

ஆன்மா இறைவன் திருவடியைச் சென்று சேர்தலை முத்தி என்பர். அதன் எதிராகத் தானாகவே அவருள் வந்து தங்கிய திருவடியைத் தம் மனத்திற்குள் சிறைவைத்துவிட்டு, 'நீ இனி எங்கே வெளிப்படப் போகிறாய் பார்க்கலாம்?' என்ற பெருமிதத்தோடு வெளிவரும் அடிகளார் பாடலுக்கு 'முத்திக் கலப்பு' என்று பெயரிட்டது ஒரு சிறிதும் பொருந்தாமை அறிக.

'அம்மையே அப்பா' என வருவதால் இப்பதிகம் தோணிபுரத்தில் இயற்றப்பெற்றது என்பதும் பொருந்துமாறு

இல்லை. ஒரே அடியில் 'தாதாய் மூ ஏழ் உலகிற்கும் தாயே' (திருவாச:446) என்பன போன்ற பகுதிகளில் அம்மை அப்பன் என்று குறிப்பு வருவதை வைத்துத் தோணிபுரத்தில் அருளப்பெற்றது என்ற முடிவிற்கு வர முடியவில்லை.

536. உம்பர்கட்கு அரசே ஒழிவு அற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பு எனப் பழுத்து என் குடி முழுது ஆண்டு
வாழ்வு அற வாழ்வித்த மருந்தே
செம்பொருள் துணிவே சீர் உடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே 1

ஊற்றையேன் - அழுக்கு நிறைந்தவன்.

யோகம் என்பது பிளவுபடாமல் ஒன்றோடொன்று பொருந்தி நிற்பதைக் குறிப்பதாகும். இங்கு இறைவனை யோகம் என்று குறிப்பிடுவதோடுமட்டும் நிறுத்தாமல் 'நிறைந்த யோகம்' என்றும், 'ஒழிவு அற நிறைந்த யோகம்' என்றும் கூறுதல் சிந்திக்கத்தக்கது.

எங்கும் நிறைந்திருப்பதாகக் கூறப்படும், காற்றுக்கூட இல்லாத, இடங்கள் எனச் சில உண்டு. ஆனால் இறைவன், இல்லாத இடம் என்று சொல்வதற்கு எதுவும் இல்லாமல் (ஒழிவு அற) எங்கும் நிறைந்திருக்கின்றான். அப்படி நிறைந்திருக்கின்ற அவனுக்கு, தனித்தன்மை ஏதாவது இருப்பின், எவ்வளவு கலந்திருந்தாலும் அவனை நாம் இனங்கண்டுகொள்ள முடியும். ஆனால் இவனுடைய தனித்தன்மை என்பதே பொருளோடு கலக்கும்போது வேறுபாடற்றுக் கலந்து நிற்பது ஆகும். இதனையே திருமூலர்,

பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்

(திருமந்திரம் :2264)

என்று பாடிச் செல்கிறார்.

பல குற்றங்கள் நிறைந்தவராகிய தமக்கு, எதிர்பாராமல் இறைவன் கிடைத்தான் ஆதலால், 'வம்பு எனப் பழுத்து' எனக் கூறுகின்றார். பழுத்த ஒன்று, எப்படிப் பழுத்திருப்பினும் அதனை உண்டவருக்குமட்டுமே நலம் செய்யும். ஆனால், திருப்பெருந்துறையில் திடீரென்று பழுத்த பழம், அதனை உண்ட திருவாதவூரருக்கு மட்டுமல்லாமல்—அவரோடு தொடர்புடைய பாண்டி மன்னன் முதலானவருக்கு மட்டுமல்லாமல்—மனித சமுதாயம் முழுவதும் உய்ய வழிவகுத்தது ஆதலின், 'என்குடி முழுது ஆண்ட' என்றார். இவ்வாறு பொருள் கொள்ள என்குடி ஆண்ட என்றும், குடி முழுதும் ஆண்ட என்றும் பிரித்துக் காணவேண்டும். என்குடி என்பதற்கு இவ்வாறு பொருள் கூறாமல், அடிகளார் பிறந்த குடி என்று பொருள் கூறுதல் உலகம் உய்யத் திருவாசகம் தந்தவரை, உறவினர் என்ற சிறு குப்பிக்குள் அடைப்பதுபோலாகும்.

'வாழ்வு அற வாழ்வித்த மருந்து' என்பது, ஒன்றைப் போக்கி மற்றொன்றைத் தருகின்ற ஒன்று என்ற பொருள் தரும். அறுக்கப்பட்ட வாழ்வு வினையின் விளைவாகச் கிடைத்த வாழ்வாகும். அதனைப் போக்குவது கடினம் ஆதலால், அக்கடிய செயலை எளிதாகச் செய்தான் ஒருவன் என்பதை விளக்க 'வாழ்வு அற' என்றார். ஒன்றை அற்றுப்போகும்படியாகச் செய்தல் கடினம். ஆனால், அந்த இடத்தில் பிறிதொன்றை நிலைபெறுமாறு செய்தல் அதைவிடக் கடினமாகும்.

வினைப்போகமான வாழ்வை நீக்கி, மெய்யான வாழ்வு வாழ வழிசெய்தான் ஆதலின், 'வாழ்வு அற

வாழ்வித்த மருந்தே' என்றார். இப்பணியைத் தமக்குமட்டும் செய்ததாக அடிகளார் கூறவில்லை. என் குடி முழுவதும் ஆண்டு வாழ்வு அற வாழ்வித்தவன் என்பதால், மனித சாதி முழுவதற்கும் ஒரு வாழ்வைப் போக்கி, மறு வாழ்வைத் தந்தான் என்ற பொருளில் பேசுகின்றார். இவ்வாறு கூறுவது அடிகளாரின் பரந்த மனப்பான்மையைக் காட்டுவதாகும்.

நான்காவது அடியில் 'எம்பொருட்டு' என வருவதும் இக்கருத்தை வலியுறுத்துவதாகும். 'எம்' என்ற தன்மைப் பன்மைச் சொல் மனித சமுதாயம் முழுவதையும் குறிப்பதாகும். இந்த அருமைப்பாட்டைப் போப் போன்ற பிற சமய மேநாட்டு அறிஞர்கள் அறிந்துகொண்டது போலத் தமிழர்களாகிய நாம் அறியவில்லை.

மூன்றாவது அடியில் வரும் 'சீருடைக் கழலே! சிவபெருமானே! என்பது சற்று விநோதமான விளிகளாகும். ஒருவரை விளிக்கும்போது அவர் பெயரைச் சொல்லி விளிப்பது முறையாகும். ஆனால் அவரை விளிப்பதற்கு முன்னர், அவருடைய உறுப்பு ஒன்றை (திருவடிகளை) விழிப்பது புதுமையாகும்.

திருவாதவூரரைத் தடம் மாற்றி, மணிவாசகராக ஆக்கியது, குருநாதரின் திருவடிகள் ஆதலால், திருவாசகம் முழுவதிலும், திருவடிக்கு ஒரு தனிச்சிறப்புத் தந்து பேசுவதைக் காணமுடியும்.

திருப்பெருந்துறையில் திருவாதவூரரின் கண்களில் முதலில் பட்டது குருநாதரா, அல்லது அவருடைய திருவடிகளா என்ற வினாவிற்கு விடை கூறுவார்போலப் 'புவனியில் சேவடி தீண்டினன் காண்க' (திருவாச:3: 61, 62) என்று பாடியுள்ளமை சிந்திக்கற்பாலது. குருநாதரின் முகம், முதலியவற்றை வைத்து அவரைச் சிவன் எனத் தேறியதாக அடிகளார் பாடவில்லை. அதற்குப் பதிலாகப் 'புவனியில்

சேவடி தீண்டினன் காண்க, சிவனென யானும் தேறினன் காண்க' என்றே பர்டியுள்ளார். அதேபோல இங்கும் 'சீர் உடைக் கழலே சிவபெருமானே' என்று பாடியுள்ளார் என்பதை எண்ணுக.

537. விடை விடாது உகந்த விண்ணவர் கோவே
வினையனேனுடைய மெய்ப்பொருளே
முடை விடாது அடியேன் மூத்து அற மண் ஆய்
முழுப் புழுக் குரம்பையில் கிடந்து
கடைபடாவண்ணம் காத்து எனை ஆண்ட
கடவுளே கருணை மா கடலே
இடைவிடாது உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே 2

'விண்ணவர் கோவே!' என்பதன் முன்னர் 'விடை விடாது உகந்த' என்று சொல்லியது நம் சிந்தனையைத் தூண்டுவதற்காகும். விண்ணவருள் ஒருவனாகிய இந்திரன் முதலானவர்கள் ஐராவதம் போன்ற ஊர்தியைப் பெற்று அதன்மிசை ஊர்கின்றனர். ஆனால், அவர்கள் தலைவனாகிய சிவபெருமான் ஒரு எருதைப் பற்றிக் கொண்டு அதனைத் தனக்கு உகந்த வாகனமாகவும் கொண்டு, அந்த ஊர்தியை விட்டு நீங்காதவனாகவும் உள்ளான். இது என்னே விந்தை! ஐராவதம் போன்ற ஊர்திகள் மிகச் சிறப்புடையன ஆயினும், அதனை ஊர்பவன் எவ்விதச் சிறப்புமில்லாத இந்திரனாவான். அவனைப் பொறுத்தமட்டில் ஊர்தி சிறப்புடையது; ஊர்பவன் சாதாரணமானவன். அவனுக்கும் தலைவனாகிய இறைவனைப் பொறுத்தமட்டில் ஊர்தி சாதாரணமானது; ஆனால், ஊர்பவனோ பிரபஞ்ச காரணன்.

'எல்லா வினைக்கும் கொள்கலனாகவுள்ள என்னை வாழ்விக்கும் மெய்பொருளே! இந்த ஊன் உடம்பை

மண்ணில் சாய்த்த பிறகும், இதே போன்ற மற்றோர் உடம்பைப் பெற்று நான் சீரழியாவண்ணம் (கடைபடா வண்ணம்) காத்து ஆள்பவனே! உன்னை எப்படிப் பிடித்துள்ளேன் தெரியுமா? உன்னைப் பிடித்தேன்; சிக்கெனப் பிடித்தேன்; இடைவிடாது சிக்கெனப் பிடித்தேன். இங்ஙனம் பிடிபட்டதால் நீ என்னை விட்டு நீங்குமாறு எங்ஙனம்?' என்றவாறு.

538. அம்மையே அப்பா ஒப்பு இலா மணியே
அன்பினில் விளைந்த ஆர் அமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத் தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே 3

பொழுதினைச் சுருக்கும்-காலத்தை வீணாக்கும்.

உலகியல் வாழ்வில் மிகச் சிறந்துநிற்கும் உறவுமுறை தாய், தந்தை என்ற இரண்டுமாகும். எத்துணைச் சிறந்ததாயினும் தாய் தந்தையர் உறவுமுறையில் கிடைத்த இந்த உடம்பு, வினையைச் சுமக்கும் ஊர்தியாகும். இறைவன் தரும் வாழ்வு, வினையின் நீங்கிய வாழ்வாகும். எனவேதான், 'அம்மையே அப்பா' என்று தொடங்கியவர் 'ஒப்பிலா மணியே' என்றார்.

ஒரு பொருள் தோன்றவேண்டுமானால் அதற்குரிய விதை, அதாவது மூலம் ஒன்றிருத்தல் வேண்டும். 'ஆர் அமுது' என்று கூறியவுடன் எல்லோரும் அதனை விரும்புவர் என்று நன்கு விளங்கும். ஆனால், இந்த அமுது கிடைக்க வேண்டுமானால் அது தோன்றுவதற்குரிய மூலம் எது, நிலைக்களன் எது என்ற சிந்தனையில் ஈடுபடுபவதற்கு விடை கூறுவார்போல, 'அன்பினில் விளைந்த ஆரமுது'

என்றார். 'விளைந்த' என்று கூறியமையின் அன்பாகிய பயிர் நிலைபெற்று வளர்ச்சியடைந்து முற்றியிருக்க வேண்டும் என்பது ஒருதலை. அன்பு அப்படியிருந்தால் அதிலிருந்து ஆரமுது விளையும். எல்லையற்ற அன்பு விரியும்போது அது இறுதியில் சிவத்தினிடத்து கொண்டு செலுத்தும். அதாவது, அன்பு முற்றிய நிலையில் அங்கே சிவம் விளையும் என்பதைக் குறிப்பாக உணர்த்தினார்.

பொய்யான வாழ்வில் ஈடுபட்டு, கானல் நீர் போன்ற இன்ப வேட்டையில் அலைந்து திரிந்த தம்மை, அழைத்துச் சிவ பதத்தை அளித்தான்.

அப்படிப்பட்ட அவனை இந்தப் பிறவியிலே சிக்கெனப் பிடித்துக்கொண்டதாகவும், தம்மை விட்டு அவன் எங்கும் செல்ல முடியாது என்றும் கூறுகிறார்.

539. அருள் உடைச் சுடரே அளிந்தது ஓர் கனியே
பெரும் திறல் அரும் தவர்க்கு அரசே
பொருள் உடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருள் இடத்து அடியார் சிந்தையுள் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருள் இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே 4

அளிந்ததோர் கனி-பக்குவமாகக் கனிந்த கனி.

உலகிடை உள்ள சுடர், ஒளியைத் தருவதே ஆயினும் நெருங்கினவர்க்குத் தன் வெம்மையையும் தந்துவிடும். ஆனால், இறைவனாகிய சுடர், நெருங்க நெருங்க வெம்மையைத் தாராமல் குளிர்ந்த இன்பத்தைத் தருதலின் 'அருளுடைச் சுடர்' என்றார்.

'பொருளுடைக் கலையே' என்பது மிக நீண்ட காலமாக, இந்த நாட்டிலும், பிற நாடுகளிலும்கூட விடை

கூற முடியாமல் இருந்துவரும் ஒரு வினாவாகும். கலைகளின் பயன் என்ன என்ற வினாவிற்கு மனத்திற்கு மகிழ்வை ஊட்டி, கற்பனையைத் தூண்டி இன்பம் அளிப்பதே கலையென்பர் ஒரு சாரார். இதன் மறுதலையாகக் கலை என்பது தேனைப் போல அனுபவிக்கின்ற அந்த நேரத்தில் இன்பத்தைத் தருவதுடன் வாழ்வைச் செம்மைப்படுத்தும் பிற்பயனையும் தரவல்லதாய் இருத்தல் வேண்டும் என்பர் மற்றொரு சாரார்.

எல்லாக் கலைகளிலும் இறைவன் நிறைந்துள்ளான். ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு பயனைத் தருவது போலக் கலை வடிவாகவுள்ள அவனும், மெய்ப்பொருளை அறியும் மெய்ஞ்ஞானத்தைத் தன்னை அண்டியோர்க்கு அளிக்கின்றான். இதனையே அடிகளார் 'பொருளுடைக் கலையே' என்கின்றார்.

நமக்கு இன்பம் தரும் ஒன்றைப் புகழ்ந்து பேசுவது மனித இயற்கை. நிலைபேறில்லாத, அழியும் தன்மையுள்ள உலக இன்பங்களைத் தருபவர்களைப் புகழ்கிறோம் என்றால், நிலையானதும் இம்மை மறுமைப் பயன்களைத் தருபவனுமாகிய அவனைப் புகழ்வதில் என்ன தவறு? புகழ்ச்சியில் உள்ள ஒரு குறைபாட்டை இங்கு அறிதல் வேண்டும். ஒருவரைப் புகழ்கின்றோம் என்றால், அப்புகழுரையைத் தருபவர் தாம் நிறையப் புகழ்ந்து விட்டதாக நினைக்கின்றார். அந்தப் புகழுரையைப் பெறுபவரும் தம்முடைய செயலுக்கு ஏற்ற வெகுமதி கிடைத்துவிட்டதாக மகிழ்கின்றார்.

ஆனால், இறைவனைப் பொறுத்தமட்டில் 'நின் அளந்து அறிதல் (புகழ்தல்) மன்னுயிர்க்கு அருமை' (திருமுருகாற்றுப்படை: 278) ஆதலின், எவ்வளவு புகழ்ந்தாலும் அது முற்றுப்பெறப்போவ தில்லை. அந்தப் புகழுரைக்கு உரியவனோ மகிழ்ச்சி இன்பம் முதலியவற்றைக் கடந்து நிற்பவன். இவற்றையெல்லாம்

மனத்தி ல் கொண்ட அடிகளார் 'புகழ்ச்சியைக் கடந்த' என்றார். அறிவினால் அறியப்படாமல் உணர்வினால் மட்டும் அனுபவிக்கப்படும் பொருளாதலின் 'போகமே' என்றார்.

யோகம் என்பது பேரமைதியைத் தருவதாகும். இந்தப் பேரமைதியே முன்னர் இல்லாத பொலிவைத் தரும். புத்த தேவனுடைய விக்கிரகம் இந்த அமைதியின் அழகைப் புரிந்துகொள்ள ஓர் உபாயமாகும். இதனையே அடிகளார் 'யோகத்தின் பொலிவே' என்கிறார்.

'மனம், சிந்தை என்பவற்றில், தெளிவு பிறந்த நிலையிலுள்ள அடியவர்களின் செல்வமே 'உன்னை இருள் இடத்துச் சிக்கெனப் பிடித்தேன்' என்கிறார். அதாவது மயக்கம் நிரம்பிய இருள் சூழ்ந்துள்ள இந்த உலகிலேயே நம்பிக்கை ஒன்றையே துணையாகக் கொண்டு உன்னைச் சிக்கெனப் பிடித்துவிட்டேன்' என்றவாறு.

540. ஒப்பு உனக்கு இல்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறு இலியேற்கு
விழுமியது அளித்தது ஓர் அன்பே
செப்புதற்கு அரிய செழும் சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெருமானே
எய்ப்பு இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே 5

'மெய்ப்பதம்' என்பது உண்மையானதும் நிலை பேறுடையதும் ஆகிய நிலை என்ற பொருளைத் தரும்.

மெய்ப்பதம் எது என்பதை அறிந்துகொள்வதற்குக்கூட ஒரு திண்மை வேண்டும். அறிந்துகொண்ட பின்னர் அதனை அடைய முயல்வதற்கு மேலும் திண்மை

வேண்டும். இதன் முற்பகுதியையே 'மெய்ப்பதம் அறியா வீறிலி' என்றார் அடிகளார்.

இத்தகைய வீறிலியாகிய தம்மையும் ஒரு பொருட்டாக்கி விழுமியதாகிய அவனை அறியும் மெய்ஞ்ஞானத்தை அளித்தான். அதனைப் பெறுவதற்குத் தமக்குத் தகுதியின்றேனும் அதனை அளித்தான் என்றால், அது அவனுடைய கருணை காரணமாகவே ஆகும் என்பதைக் கூறவந்த அடிகளார் அவனை அன்பின் வடிவமானவன் என்கிறார்.

'எய்ப்பு இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' என்பது கருவி, கரணங்கள், மனம், உள்ளம் ஆகிய அனைத்தும் செயலிழந்து, இனி என்னே உய்யுமாறு என்று எண்ணி நம்பிக்கை இழந்து தளர்வுற்ற நிலையில் உன்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன் என்பதாகும்.

541. அறவையேன் மனமே கோயிலாக் கொண்டு ஆண்டு
அளவு இலா ஆனந்தம் அருளிப்
பிறவி வேர் அறுத்து என் குடி முழுது ஆண்ட
பிஞ்ஞகா பெரிய எம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெருமானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே 6

அறவையேன்-துணையற்றவன், திறவு-திறப்பு,

'துணையில்லாத அனாதையாகிய நான் செய்வதறியாது திகைத்துநின்ற நிலையில், என் மனத்துட் புகுந்து, அதையே தான் தங்கும் திருக்கோயிலாகக் கொண்டு, எல்லையற்ற ஆனந்தத்தை எனக்கு அருளினான். அதுமட்டுமா செய்தான்? என் பிறவியையும் அல்லவா வேரொடு அறுத்தான். அத்தோடு விட்டானா? என் குலமாகிய

மானிடச் சாதி முழுவதையும் ஆட்கொண்டான்' என்கிறார்.

கதவு திறக்கப்பட்டு ஒளி உள்ளே நுழைந்ததுபோல, என்னை மூடியிருந்த அஞ்ஞானமாகிய இருட்கதவு திறக்கப்பட்டவுடன் என் மனத்துள் நுழைந்த ஒளிபோன்ற பெருமானே! இந்தப் பிறப்பு அவமே கழிந்து இறப்பை நாடுமுன் உன்னைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டேன் என்றும் கூறுகிறார்.

542. பாச வேர் அறுக்கும் பழம் பொருள் தன்னைப்
பற்றும் ஆறு அடியேனற்கு அருளிப்
பூசனை உகந்து என் சிந்தையுள் புகுந்து
பூம் கழல் காட்டிய பொருளே
தேசு உடை விளக்கே செழும் சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவத இனியே 7

'உயிரைப் பற்றிநின்று பிறவிதோறும் தொடர்ந்து வருகின்ற பாசத்தை வேரொடு அறுக்கும் பழம் பொருளாகிய அப்பெருமான் தன்னுடைய திருவடிகளைப் பற்றிக்கொள்ளுமாறு காட்சி தந்து எனக்கு அருள் செய்தான். என்னுடைய வழிபாட்டை ஏற்றுக்கொண்டு என் சிந்தையுள் புகுந்தான்; அம்மட்டோடு இல்லாமல் யாரும் காணமுடியாத அத்திருவடிகளை ஊனக் கண்ணாலும் யான் காணுமாறு அருளினான். அப்படிப்பட்ட அவனைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன்' என்கிறார்.

543. அத்தனே அண்டர் அண்டம் ஆய் நின்ற
ஆதியே யாதும் ஈறு இல்லாச்

சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெருமானே
பித்தனே எல்லா உயிரும்ஆய்த் தழைத்துப்
பிழைத்து அவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே 8

பிழைத்து நிற்றல்–அவற்றின் நீங்கித் தனித்து நிற்றல்

'அண்டரண்டம்' என்ற சொல்லுக்குத் தேவர் உலகம் எனப் பொருள் கண்டுள்ளனர். அண்டம் என்ற சொல் பிரபஞ்சம் என்ற வடசொல்லின் நேர் பொருளைத் தருவதாகும். கருவியாலும், கணக்காலும் காணப்படுகின்ற இந்தப் பிரபஞ்சத்திற்கு அப்பாலோ இப்பாலோ ஏதேனுமோர் பிரபஞ்சம் இருக்குமாயின் அதற்கும் ஆதியாய் உள்ளவன் என்கிறார். அண்டரண்டம், அண்டபகிரண்டம் என வரும் தொடர்களின் பொருளைப்போல அண்டரண்டம் என்ற சொல்லுக்குப் பொருள் விரிக்கலாம். அண்டம் என்ற ஒரு சொல்லிலேயே எல்லாப் பொருளும் அடங்கிவிடுதலின் அண்டத்தின் ஆதியே என்றார். இனிக் கருத்தளவையாலும், அருத்தாபத்தியாலும் வேறு ஏதேனும் ஓர் அண்டம் இருக்கிறது என்று சொல்லும் நிலை வந்தால் அதற்கும் ஆதியாகவுள்ளவன் என்ற பொருளைத் தந்து நிற்கின்றது.

இந்த அண்டம் மகாப் பிரளய காலத்தில் துகளாக மாறி மீண்டும் படைப்புக் காலத்தில் அண்டமாக விரிகின்றது. காலம் என்ற தத்துவத்தில் இந்த அண்டம் பல முறை தோன்றி, மறைந்து மறுபடியும் தோன்றியுள்ளது ஆதலின், அண்டரண்டம் என்ற சொல்லாலும் அதனைக் குறிக்கலாம்.

எல்லாவற்றிற்கும் 'ஆதி' என்று கூறியவுடன் ஓர் ஐயம் தோன்றக்கூடும். அண்டம் என்ற சொல்லால் குறிக்கப்படும்

இப்பிரபஞ்சத்திற்குத் தோற்றம், இருப்பு, மறைவு ஆகியவை உண்டு ஆதலால், அதற்கு ஆதியாக உள்ளவனுக்கும் இம்மூன்று நிலைகள் உண்டோ என்று ஐயுறுவார்க்கும் விடை கூறுவார்போல, 'ஈறில்லாச் சித்தன்' என்றார். சித்தன் என்பவன் அட்டமா சித்திகளும் செய்ய வல்லவன். ஆதலாலும் எல்லாவற்றையும் தோற்றி, இருத்தி, மறைக்கும் இவனுக்குத் தோற்றமும் இல்லை, மறைவும் இல்லை ஆதலாலும் இவனைச் சித்தன் என்றார். 'ஈறில்லா' என்று கூறியமையின் ஆதி இல்லா என்பதும்பெற்றாம்.

பாடலின் மூன்றாவது அடி. இறைவனுக்கே உரிய ஒரு தனி இலக்கணத்தை வகுக்கின்றது. பித்தர் செயலுக்கு யாரும் காரண காரியம் கூறமுடியாது. அதேபோன்று படைத்தல் முதலிய செயல்களை எவ்விதக் காரணமுமின்றி விளையாட்டாகச் செய்பவன் ஆதலின்'பித்தனே' என்றார்.

எந்த ஒரு பொருளும் ஒன்றுடன் இணைந்து உள்ளது என்றால், அதிலிருந்து பிரிந்து நிற்றல் இயலாத காரியம் ஒன்று எதனுடனாவது இணைந்திருக்க வேண்டும்; அல்லது பிரிந்திருக்கவேண்டும். இறைவன்மட்டும் இந்த விதிக்கு விலக்காவான். அதனையே அடிகளார் 'எல்லா உயிருமாய்த் தழைத்து, பிழைத்து, அவை அல்லையாய் நிற்கும் எத்தனே' என்றார்.

உயிர்களாய் நிற்கும்போது அவன் கலந்து நிற்றலால் அந்த உயிர் தழைத்து நிற்கின்றது. அவற்றிலிருந்து பிரிந்து தனியே நிற்கும்போது உயிர்கள்மாட்டு அவன் இல்லாமல் போய்விடுகிறானோ என்று நினைக்கத் தேவையில்லை. இறைவனைப் பொறுத்தமட்டில் ஒரே நேரத்தில் உயிருடன் தழைத்து நின்று, அதே நேரத்தில் அதிலிருந்து வேறுபட்டுத் தனியனாகவும் உள்ளான். இதுதான் அவன் இருக்குமிடம் என்று எந்த ஒரு பொருளையும் குறித்துச் சொல்ல முடியாதபடி எல்லாவற்றிலும் ஒரே நேரத்தில் வேறாயும்,

உடனாயும் இருக்கிறான் ஆதலால், அவனை 'எத்தன்' என்றார்.

'எத்தன்' என்ற சொல்லுக்கு ஏமாற்றுபவன், சூழ்ச்சிக்காரன் என்ற பொருள்களும் உண்டு.

இக் கருத்து முன்னரே 'ஒளிக்கும் சோரனைக் கண்டனம்' (திருவாச: 3-141) என்ற பகுதியில் விளக்கப்பெற்றுள்ளது.

544. பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பு இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே 9

உலக உறவுகளுள் தாய் சேய் உறவு என்பதற்கு மேற்பட்ட உறவு வேறு எதுவுமில்லை. குழந்தையின் பொருட்டாகத் தன்னையே முழுவதுமாக அர்ப்பணித்தல் தாய் ஒருத்திக்கே உண்டு. அதனாலேயே இறைவனைத் தாய் என்று அடிகளாரும் பிறரும் பல இடங்களில் கூறிப்போயினர். ஆனால், இந்தத் தாயும் மனித உடம்புடன் இருக்கின்ற காரணத்தால் ஒரோவழி அவளையும் அறியாமல் சில தவறுகள் நேர்ந்துவிடக் கூடும். குழந்தையினிடத்துப் பேரன்பு உடையவளாயினும் வேறு ஒன்றில் கவனம் செலுத்தி அதில் ஈடுபட்டிருக்கும்போது பாலூட்ட வேண்டிய கடமையைக்கூட ஒரோவழி மறத்தலும் கூடும். சிற்றறிவினளாகிய உலகத் தாய்க்கு இது பொருந்துமேனும். முற்றறிவினனாய் உயிரோடு உயிராய்க் கலந்து நிற்கும் இறைவனுக்கு இவ்வாறு நிகழ்வதில்லை. குழந்தை அழாவிடினும் காலமறிந்து பாலூட்டும்

தாய்போல் உயிருக்கு வேண்டுவனவற்றைக் காலமறிந்து அவ்வப்பொழுது தருகின்றான் ஆதலின் 'பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து' என்றார். உடல் உரம் பெறப் பாலை ஊட்டும் தாயைவிட உயிர் உரம்பெற அருளை ஊட்டுபவனாகலின் 'தாயினும் சாலப் பரிந்து' என்றார்.

அடுத்து 'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி' என்கிறார். உள்ளத்தின் உள்ளே உள்ள ஒளியைப் புறத்தே காணப்படும் ஒளியிலிருந்து பிரித்துக் காட்ட 'உள்ஒளி' என்றார். புறத்தே உள்ள ஒளி சூரியன் முதலியவை காரணமாக எங்கும் நிறைந்து விரிகின்றது. இந்தப் புற ஒளிக்குக் கதிரவன் காரணமாய் இருத்தல்போல உள் ஒளிக்கு இறைவன் காரணமாகவுள்ளான். காலையில் தோன்றும் கதிரவன் வீசும் ஒளியைவிட, உச்சிப்பொழுதில் அவன் வீசும் ஒளி அதிகமாதல்போல இறையருள் என்பது உள்ளத்தில் மெள்ளத் தோன்றிப் பெருவளர்ச்சி அடைகின்றது. இறைவன் அடியவருடைய உள்ளத்தில் நெருங்கி வரவர உச்சிப்பொழுதுச் சூரியன் போல், தொடக்கத்தில் உள்ளத்தில் தோன்றிய ஒளியைப் பெருகச் செய்கிறது.

இந்த ஒளியோ உள்ளத்தின் உள்ளே தோன்றுகின்ற ஒன்றாகும். அது தோன்றியதையும், பிறகு வளர்ந்து பெருகியதையும் எவ்வாறு அறியமுடியும்? பல சமயங்களில் யாருடைய உள்ளத்தில் இறைவன் தோன்றுகிறானோ அவர்கள்கூட இந்த உள்ளத்தின் ஒளியை எளிதில் புரிந்துகொள்ள முடிவதில்லை. எனவே, உள்ளத்தில் ஒளி தோன்றிப் பெருகுவதை அறிந்துகொள்ள ஓர் எளிய வழியைக் காட்டுகின்றார் அடிகளார்.

இந்த உள்ளொளி பெருகப் பெருக, எல்லையற்ற ஆனந்தம் பெருகுகின்றது; ஏனைய மகிழ்ச்சி, இன்பம்போலத் தோன்றி மறையும் இயல்புடையதன்று

இந்த ஆனந்தத்தை. அறிவிக்க 'உலப்பிலா ஆனந்தம்' என்றார்.

உள்ளொளி பெருகி உலப்பிலா ஆனந்தம் சொரியத் தொடங்கினால், அந்த உள்ளம் தங்கியிருக்கும் இந்த உடல் உருகத் தொடங்கிவிடும்.

ஊன் உருகுதல், உள்ளொளி பெருகுதல், உலப்பிலா ஆனந்தம் சொரிதல் என்ற மூன்றும் ஒரே அடியில் கூறப்பெற்றதேனும், முதலில் தோன்றுவது உள்ளொளி பெருகுதல் ஆகும். அதன் பயனாக ஊன் உருகுதலும், ஆனந்தம் சொரிதலும் நடைபெறுகின்றன.

'புறம்புறம் திரிந்த செல்வமே' என்ற தொடர் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியது. செல்வமே என விளிப்பது இறைவனையே ஆகும். எங்கும் ஒருபடித்தாய் அனைத்திலும் ஊடுருவிநிற்கும் ஒருவனைப் புறம்புறம் திரிந்த என்று சொல்வது வியப்பல்லவா!

தமிழ்நாட்டில் ஒரு பழமொழி உண்டு. பட்டுப் புடைவையை இரவல் கொடுத்துவிட்டு, அதனை உடுத்தியவள் போகுமிடமெல்லாம் அவள் கீழே அமர்ந்து புடைவையைக் கெடுத்துவிடாமல் இருக்க, புடைவையின் சொந்தக்காரி ஒரு பலகையைத் தூக்கிக் கொண்டு போனாளாம். இக்கருத்தைப் 'பட்டுப் புடவையை இரவல் கொடுத்துப் பலகையைத் தூக்கிக் கொண்டு போனாளாம்' என்ற முதுமொழிமூலம் அறிவித்தனர்.

அதேபோல, வழியோடு போன திருவாதவூரரைப் பிடித்து நிறுத்தி, அவர் உள்ளத்தில் உள்ளொளி பெருகச் செய்து, ஊனை உருக்கி, ஆனந்தத்தையும் சொரிந்த குருநாதர், இப்பொழுது மணிவாசகர் போகின்ற இடமெல்லாம் அவர் பின்னே போகின்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த மூன்றையும் செய்த குருநாதர் இவற்றின் அருமைப்பாட்டை அடிகளார் அறிந்து

காப்பாற்ற வேண்டும் என்ற அருங்கருத்தில் அவர் பின்னே செல்கிறார்.

நாளாவட்டத்தில் இதனை அறிந்துகொண்ட மணிவாசகர் தமக்குத் தெரியாமல் தம் பின்னே வரும் குருநாதரை இறுகப் பற்றிக்கொள்ளுகிறார். அதனையே 'யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்' என்கிறார்.

545. புன் புலால் யாக்கை புரை புரை கனியப்
பொன் நெடும் கோயிலாப் புகுந்து என்
என்பு எலாம் உருக்கி எளியை ஆய் ஆண்ட
ஈசனே மாசு இலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்கு ஆம்
தொடக்கு எலாம் அறுத்த நல் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே 10

'ஈசனே! மாசிலா மணியே! என்னுடைய உடம்பினுள் இருக்கும் துளைகளெல்லாம் (புரைபுரை) கனிந்து இன்ப ஊற்றுப் பெருகும்படி செய்து, அதன் முடிவாகக் கடினமான எலும்புகளும் உருகும்படியாகச் செய்தவனே! என் உடம்பையே கோயிலாகக் கொண்டு, (என் பிடிக்குள் அகப்படும் அளவுக்கு எளியனாக வந்து) என்னை ஆட்கொண்டவனல்லனோ நீ!

'சோதி வடிவானவனே! உன் சோதி வடிவு என் உள்ளத்துள் புகுந்ததால் என்னுடைய துன்பம், பிறப்பு, இறப்பு ஆகிய அனைத்தும் அறுபட்டு ஒழிந்தன. இன்ப வடிவினனே உன்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன்' என்கிறார்.

ॐ ॐ ॐ

38. திரு ஏசறவு

[சுட்டறிவொழித்தல்]

திரு. ஏசறவு என்ற தலைப்பு, சிந்தித்துப் பொருள் கொள்ள வேண்டிய ஒன்றாகும். 'ஏசறவு' என்ற சொல்லுக்கு நாணம் என்று பொருள் கூறியுள்ளனர் சிலர்.

'ஏசறவு' என்ற சொல்லுக்கு விருப்பம், அன்பு, புகழ்மொழி என்ற மூன்று பொருள்கள் உண்டு. வேசறவு என்ற சொல்லுக்கு மனச்சோர்வு, துயரம் என்ற இரண்டு பொருள்கள் உண்டு. 'ஏசறுதல்' என்று தொழிற் பெயராகக் கொண்டால் வருந்துதல், ஆசைகொள்ளுதல், பழித்தல் என்ற மூன்று பொருள்கள் உண்டு.

எப்படிப் பார்த்தாலும் நாணம் என்று பொருள் கொள்வதற்கு இடமில்லை எனத் தோன்றுகிறது. ஒருவேளை நாணம் என்ற பொருளும் அச்சொல்லுக்கு உண்டு என்று வைத்துக்கொண்டாலும் இப்பகுதியில் வரும் பத்துப் பாடல்களையும் படித்துப்பார்த்தால் நாணமுறுதல் என்ற பொருள் எவ்விதத்திலும் பொருந்துவதாகத் தெரியவில்லை.

பாடல்கள் போகின்ற போக்கைப் பார்த்தால் வருந்துதல், துயரம் அடைதல், புகழ்மொழிந்துரைத்தல் என்ற பொருள்களே பொருந்துவதாகத் தெரிகின்றது.

உட்தலைப்பு இட்டவர்கள், சுட்டறிவு ஒழித்தல் என்று கூறி மேலும் ஒரு குழப்பத்தை உண்டாக்கியுள்ளனர்.

'கரும்பு தரு சுவை எனக்குக் காட்டினை' (546) என்றும், 'பாதமலர் காட்டியவாறு' (548) என்றும், 'வார்கழல் வந்துற்று இறுமாந்து இருந்தேன்' (550) என்றும்,

'நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது' *(552)* என்றும், 'கருணையினால் பேர்த்தே நீ ஆண்டவாறு' *(553)* என்றும், 'நின் பரங்கருணைத் தடம் கடலில் படிவாமாறு' *(554)* என்றும், 'சிவபெருமான் தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்' *(555)* என்றும் வரும் பகுதிகளை ஒருங்குவைத்துக் கண்டால் தம் கீழ்மைக்கு நாணமடைந்து கூறினாரென்று சொல்வதற்கு இடமேயில்லை.

மேலே காட்டிய பகுதிகள் இறைவனுடைய கருணைத் திறத்தை வியந்து புகழ்ந்து பாடியதாக உள்ளனவே தவிரச் 'சுட்டறி வொழித்தல்' என்ற தொடருக்கு இங்கு இடமேயில்லை.

நிறைவாகக் கூறுமிடத்து வருந்துதல், துயரமடைதல் என்பவை ஒருபுறமிக்க, இறையன்பு காரணமாக எழுந்த புகழ்மொழிகள் என்ற பொருள்மட்டுமே இப்பகுதியில் தலைதூக்கி நிற்பதை அறியலாம்.

546. இரும்பு தரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என் என்பு
உருக்கிக்
கரும்பு தரு சுவை எனக்குக் காட்டினை உன் கழல்
இணைகள்
ஒருங்கு திரை உலவு சடை உடையானே நரிகள் எல்லாம்
பெரும் குதிரை ஆக்கிய ஆறு அன்றே உன் பேர் அருளே
1

இப்பாடலின் முதலிரண்டு அடிகள் திருவாதவூரர் மனநிலை திடீரென்று மாற்றம் பெற்று, மணிவாசகர் மனநிலையாக மாறிய சிறப்பை அறிவுறுத்துகின்றன.

தம்முடைய மனம் எதிலும் ஈடுபட்டு உருகாதது என்பதை 'இரும்பு தரு மனத்தேன்' என்றார். 'ஈர்த்துஈர்த்து' என்று இருமுறை கூறினாரேனும் ஈர்த்தது ஒருமுறைதான். குதிரைமேல் வந்த திருவாதவூரர் குருநாதரைத் தூரத்தே கண்டு ஏதோ ஒரு சக்தியால் ஈர்க்கப்பெற்றுக்

குதிரையினின்று இறங்கி மெள்ள நடந்துசென்று அவர் திருவடிகளில் தஞ்சமடைந்தார் அல்லவா? படிப்படியாக நிகழ்ந்த இந்த நிகழ்ச்சியை நினைவூட்டவே ஈர்த்துஈர்த்து என்று இருமுறை பேசினார்.

அடுத்து, குருநாதர் எலும்பை உருகச் செய்தார். எலும்பு உருகப்பெற்றால், உடலிலும் மனத்திலும் களைப்புத்தான் தோன்றும். ஆனால், இங்கு எலும்புகளின் உருக்கம் கரும்பு தரு சுவையாக மாறிற்று என்கிறார். இப்படி மாற உதவியது எது தெரியுமா? குருநாதரின் கழலிணைகள்.

'காட்டினை' என்ற சொல் மத்திமதீபமாக நின்று, சுவை எனக்குக் காட்டினை என்றும், கழல் இணைகள் காட்டினை என்றும் பொருள்தந்து நிற்பதைக் காணலாம்.

நான்காவது அடியிலுள்ள மதுரை நிகழ்ச்சியை அடிகளார் இங்குப் பேசக் காரணமென்ன? இறைவன் செயற்கரும் செயல்களை எளிதாகச் செய்யும் பேராற்றல் உடையவன் என்பதைக் குறிக்க, நரிகளைப் பரிகளாக்கிய அவன் ஆற்றல் திறத்தை இங்கே கூறுவதால், இரும்பு தரு மனத்தவராகிய தம்மை ஒரே விநாடியில் மணிவாசகராக மாற்றியது அவனைப் பொறுத்தமட்டில் மிக எளிதான செயலாகும் என்பதைக் குறிக்கின்றார்.

547. பண் ஆர்ந்த மொழி மங்கை பங்கா நின் ஆள் ஆனார்க்கு
உண் ஆர்ந்த ஆர் அமுதே உடையானே அடியேனை
மண் ஆர்ந்த பிறப்பு அறுத்திட்டு ஆள்வாய் நீ வா என்னக்
கண் ஆர உய்ந்த ஆறு அன்றே உன் கழல் கண்டே 2

அவனிடத்தில் சரணம் புகுந்தவர்களுக்கு உண்ணுதற்குரிய ஆரமுதாக உள்ளான்.

'ஐயா! இம்மண்ணிடைத் தோன்றிய என் பிறப்பை அறுப்பதற்கு நீ மேற்கொண்ட உபாயம்தான் என்னே!

'திருப்பெருந்துறையில் குருவாக அமர்ந்திருந்த நீ, வழியோடு சென்ற என்னை 'வர்' என்று குறிப்பால் அழைத்தாய். அழைத்ததோடு விட்டுவிடாமல் உன் திருவடிகளை நான் கண்ணாரக் கண்டு என் பிறப்பை அறுத்துக்கொள்ள அருள் செய்தாய்' என்றபடி.

548. ஆதம் இலி யான் பிறப்பு இறப்பு என்னும் அரு நரகில்
ஆர் தமரும் இன்றியே அழுந்துவேற்கு ஆ ஆ என்று
ஓதம் மலி நஞ்சு உண்ட உடையானே அடியேற்கு உன்
பாத மலர் காட்டிய ஆறு அன்றே எம் பரம்பரனே 3

ஆதமிலி- ஆதரவு இல்லாதவர்

'கடல் நஞ்சை உண்ட பெருமானே! எவ்விதத் துணையுமின்றி மாறி மாறி பிறந்து இறந்து வரும் நரகம் போன்ற இப்பிறப்பில் கொஞ்சம் கொஞ்சமாக அழுந்திக் கொண்டிருந்த என்னை, 'ஆ ஆ' என்று இரக்கச் சொல் கூறி, உன் திருவடிகளைக் காட்டியதன் மூலம் என்னை உய்வித்தாய்' என்றவாறு.

549. பச்சைத்தாள் அரவு ஆட்டி படர் சடையாய் பாத மலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக்கொண்டு
எச்சத்து ஆர் சிறு தெய்வம் ஏத்தாதே அச்சோ என்
சித்தத்து ஆறு உய்ந்த ஆறு அன்றே உன் திறம் நினைந்தே 4

தாள்- ஈரமாக உள்ள புற்று.

'புற்றினிடத்து வாழும் பாம்பை வைத்து ஆட்டுபவனே! பாதமலரைத் தம் தலையிற் சூடுபவர்களின் தலைவனே! அடியேனைக்கூட உய்யக்கொண்ட நின் பெருமையை அறியாதவர்கள் யாகங்கள் செய்து (எச்சத்தார்) சிறு தெய்வங்களாகிய தேவர்களை வந்திப்பர். என் தரம் பாராது ஆட்கொண்ட உன் திறத்தை நினைந்து அந்த வழியிலேயே என் சித்தத்தைச் செலுத்த, அதன் பயனாகப் பிறவிப்பெருங்கடலில் வீழாமல் உய்ந்தேன்' என்றவாறு.

550. கற்று அறியேன் கலை ஞானம் கசிந்து உருகேன் ஆயிடினும்
மற்று அறியேன் பிற தெய்வம் வாக்கு இயலால் வார்
கழல் வந்து
உற்று இறுமாந்து இருந்தேன் எம்பெருமானே அடியேற்குப்
பொன் தவிசு நாய்க்கு இடும் ஆறு அன்றே நின் பொன்
அருளே 5

கலைஞானம் என்பது அறிவால் பெறப்படுவது, கற்றலாலும் கேட்டலாலும் கலை ஞானத்தை வளர்த்துக் கொள்ளலாம். அறிவின் துணை கொண்டு வளரும் இந்தக் கலைஞானம் எந்த அளவிற்கு ஒருவனை இறைவனடி சேர்க்கும் என்பது விடைகூற முடியாத வினாவாகும். ஆன்ம முன்னேற்ற அடிப்படையில் உய்கதியை நோக்கிச் செல்வோர் கல்விக்கோ கலைஞானத்திற்கோ அதிகம் மதிப்புத் தருவதில்லை. அப்படியிருக்க, 'கற்றறியேன் கலை ஞானம்' என்று அடிகளார் கூறியது சிந்திப்பதற்கு உரியதாகும்.

கலை அறிவு—இதனை நான் அறிந்துகொண்டேன் என்ற அளவில் நின்றுவிடாமல், எல்லாக் கலைகளுக்கும் மூலமாக உள்ள பொருள் எது—என்ற முறையில் சிந்தனையைச் செலுத்தியிருந்தால் இந்தக் கலைஞானமே உய்கதிக்கு வழிகாட்டும். உண்மைக் கலைஞானத்தின் இறுதிப் பயனாகவுள்ள இறையருளைப் பெறக் கூடுமேயானால் அத்தகைய ஒரு கலைஞானம் ஏற்றுக் கொள்ளக் கூடியதே யாம். அதனைக் குறிக்கவே அடிகளார் 'கற்றறியேன் கலைஞானம்' என்கிறார்.

'கற்றறியேன்' என்று கூறிய பிறகு 'கசிந்து உருகேன்' என்று கூறியது சற்றுச் சிந்திக்கத் தக்கது. உண்மையான கலைஞானம் ஏட்டளவில் நில்லாமல் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த உதவினால் கசிந்து உருகும் மனநிலையை அது தரும். கசிந்து உருகுவதற்குக் கலைஞானம் தேவையில்லை. கலைஞானம் உண்மையானதாக இருப்பின்

கசிந்து உருகும் நிலைக்கு அது கொண்டு செலுத்தும். இவை இரண்டும் தம்மாட்டு இல்லையெனக் கூறிக்கொள்கிறார் அடிகளார்.

'ஆயிடினும் பிற தெய்வம் மற்று அறியேன்' என்பதில் நுண்மையான ஒரு செய்தி இடம்பெறுகிறது. கலை ஞானத்தின் மூலம் மூலப்பொருள் எது என்ற ஆராய்ச்சியில் புகுந்துள்ள நிறை கலைத்துறைகள் ஒழிவு இன்றிப் பயின்று அவற்றால் தெள்ளி வடித்து அறிந்த பொருள் சிவன் கழலிற் செறிவு என்ற முடிவிற்கு வரலாம். அன்றி, கசிந்து உருகும் நிலை இருந்தால் யாரைக் கண்டவுடன் கசிதலும் உருகுதலும் ஏற்படுகின்றனவோ அவரே முதற்பொருள் என்று தெளியலாம். ஆனால் என்ன அதிசயம்! கலைஞானம், கசிந்து உருகும் நிலை இரண்டும் தம்பால் இல்லாவிடினும், பிற தெய்வத்தைக் கனவிலும் கருதியது இல்லை என்கிறார். அதாவது மேலே கூறிய இரண்டால் எந்த உண்மையை அறிய வேண்டுமோ, அதனைத் தாம் பெற்றுவிட்டதாக—அதாவது, பிற தெய்வத்தைப்பற்றிச் சிந்திக்காமல் இருக்கும் நிலையைப் பெற்றுவிட்டதாக அடிகளார் கூறுகின்றார்.

'உன் 'வாக்கு இயலால்' நீ எனக்கு இட்ட கட்டளையை (கோலமார்தரு பொதுவினில் வருக என்ற கட்டளை) ஏற்றுக்கொண்டு உன் திருவடிகளை வந்து அடைந்தேன். அடைந்தவுடன், என்னுடைய பழைய வினைகள் முதலிய அனைத்தும் ஒரே விநாடியில் வெந்து ஒழிந்ததாலும், அற்புதமான அமுத தாரைகள் உடல் முழுதும் ஏற்றப்பெற்றதாலும் மனம், உடல் என்ற இரண்டிலும் நிறைவுபெற்றிருந்தேன்' என்கிறார்.

'இறுமாந்து இருந்தேன்' என்ற தொடருக்கு, இன்றை உலகியற் பொருளைக் கொண்டு அரசன் முதலியோரை மதியாமல் அடிகளார் இருந்தார் என்று புராணக் காரர்கள்

கூறும் கூற்றுச் சற்றும் பொருந்தாது. 'இறுமாந்து இருப்பன் கொலோ ஈசன்தன் பல்கணத்து எண்ணப்பட்டு' (திருமுறை: 4-9-11) என வரும் நாவரசர் பாடலிலும் 'இறுமாந்து' என்ற சொல் முழுநிறைவு பெற்றுப் பெருமகிழ்ச்சியடைதல் என்ற பொருளையே தருகிறது.

'தகுதியில்லாத எனக்கு உன் திருவடிகளைத் தந்து முழுநிறைவு பெறுமாறு நீ செய்தது நாய்க்குத் தவிசு இட்டதுபோல அன்றோ ஆகும்' என்கிறார்.

551. பஞ்சு ஆய அடி மடவார் கடைக் கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சு ஆய துயர் கூர நடுங்குவேன் நின் அருளால்
உய்ஞ்சேன் எம்பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேல் என்று ஆண்ட ஆறு அன்றே அம்பலத்து
அமுதே 6

'அம்பலத்து அமுதே! மகளிர் கடைக்கண் வலையிற் பட்டு வருந்திநின்ற என்னை உய்யுமாறு செய்தது உன் திருவருள் அல்லவா?' என்றபடி.

552. என்பாலைப் பிறப்பு அறுத்து இங்கு இமையவர்க்கும்
அறிய ஒண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந்துறை உறையும் சிவபெருமான்
அன்பால் நீ அகம் நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது
என்பாலே நோக்கிய ஆறு அன்றே எம்பெருமானே 7

'தெற்குத் திசையிலுள்ள திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமான் என்ன செய்தான்? என்பால் தொடர்ந்து வரும் பிறப்பை அறுத்தான்; எனது உள்ளத்தில் குடிபுகுந்தான். இவற்றையெல்லாம் எவ்வாறு செய்தான்? குருந்தமரத்தடியில் இருந்தவாறே, தன் கடைக்கண்ணால் என்னைப் பார்த்தபொழுதே இவை அனைத்தையும் செய்துவிட்டான்' என்றபடி.

553. மூத்தானே மூவாத முதலானே முடிவு இல்லா
ஒத்தானே பொருளானே உண்மையும் ஆய் இன்மையும்
ஆய்ப்
பூத்தானே புகுந்து இங்குப் புரள்வேனைக் கருணையினால்
போர்த்தே நீ ஆண்ட ஆறு அன்றே எம்பெருமானே 8

'மூத்தானே' என்பது யாவற்றுக்கும் மூத்த, ஆதி என்ற பொருளைத் தரும். 'முதலானே' என்பது வளர்ந்து செல்லும் புதுமையிலும், அவ்வளர்ச்சியின் நுனியில் இருக்கின்றவன் என்ற பொருளுடையது. 'மூவாத' என்பது மூத்தவனாக இருந்தும் முதல்வனாக வளர்ந்தும் உள்ள நிலையிலும் மூப்பு என்பதே இல்லாதவன் என்ற பொருளைத் தரும்.

வேதங்கள் நான்கு என்று பொதுப்படையாகச் சொல்லப்பெறினும், ஆயிரக் கணக்கான மறைகள் உண்டு. என்றே பெரியோர்கள் கூறியுள்ளனர். திருஞானசம்பந்தர் புராணத்தில் வரும் 'ஓதினார் புகலிவந்த புண்ணியனார் எண்ணிறந்த புனிதவேதம் சுருதி ஆயிரம் ஓதி' (பெ.பு. திருஞா-264,265) என்னும் பகுதியும், கம்பராமாயணத்தில் வரும் 'ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தாய்' (கம்.ரா.யுத்தம்-மந்திரம்-48) என வரும் பகுதியும் 'முடிவு இலாத ஒத்து' என்பதை எடுத்துக்காட்டுவன ஆகும்.

இறைவன் வேதத்தில் வரும் சொற்களாகவும், அச்சொற்கள் குறிக்கும் பொருளாகவும் உள்ளான் என்பதை 'ஒத்தானே பொருளானே' என்று குறிக்கின்றார்.

உண்மை-இன்மை என்ற முரண்பாடுகளினிடையே முழுமுதலைக் கண்டதுடன், இவை இரண்டுமே அவன்தான் என்பதை நம் முன்னோர் கூறியுள்ளனர். அதனையே இங்கு 'உண்மையுமாய் இன்மையுமாய்' என்று அடிகளார் எடுத்துக் கூறுகின்றார்.

உலக பந்தங்களில் புகுந்து புரண்டவனாகிய என்னைக், கருணை காரணமாக இதிலிருந்து வேரோடு களைந்து உன் திருவடிகளில் சேர்ப்பதன் மூலம் 'ஆண்டுகொண்டாய்' என்கின்றார்.

554. மருவு இனிய மலர்ப் பாதம் மனத்தில் வளர்ந்து உள் உருகத்
தெருவுதொறும் மிக அலறிச் சிவபெருமான் என்று ஏத்திப்
பருகிய நின் பரம் கருணைத் தடம் கடலில் படிவு ஆம் ஆறு
அருள் எனக்கு இங்கு இடைமருதே இடம் கொண்ட
அம்மானே 9

'மருவுதற்கு இனிய மலர்போன்ற நின் திருவடிகள் என் மனத்திடைத் தோய்ந்து வளர்ந்து நிற்றலால், அதன் பயனாக என் உள்ளம் உருகத் தொடங்கியது. இவை இரண்டின் பயனாக, எனை நான் என்பதை மறந்து' சிவபெருமானே! என்று கூவிக்கொண்டே தெருவுதோறும் அலறித் திரிவதோடு அல்லாமல், உன்னுடைய பரங்கருணை என்ற கடலில் மூழ்கித் திளைக்குமாறு அருள்செய்வாயாக' என வேண்டுகிறார்.

555. நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்
தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள்
செய்தான்
ஊன் ஆரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து அன்றே
வெறுத்திடவே 10

தேன் ஆகவும் இன்அமுதம் ஆகவும் இருக்கின்ற சிவபெருமான், நான் விரும்பி அழைக்காவிடினும் தானாகவே வந்து, புறத்தே எனக்குக் காட்சி தந்ததோடு அல்லாமல் எனது உள்ளத்திலும் புகுந்து அடியேனுக்கு அருள்செய்தான். என்ன அருளைச் செய்தான் தெரியுமா?

புலால் நாற்றம் வீசுகின்ற இந்த உடம்பை, அவன் அருள் செய்த அந்தக் கணத்திலேயே வெறுத்து ஒறுத்திடுமாறு (தண்டிக்குமாறு) செய்துவிட்டான். இதனை நினைக்கும்போதெல்லாம் 'இவ்வளவு பெரிய தவத்தை நானா செய்தேன்' என்ற வியப்பு என் மனத்திடைத் தோன்றுகிறது. ஆனால், அவன் செய்த அருள் காரணமாகச் 'சிவாயநம' என்ற ஐந்தெழுத்து என்னுள் நிலைபெற்று விட்டது என்கிறார்.

தேகப்பற்று என்பது எல்லா உயிர்களையும் இறுதிவரை பற்றி நிற்கின்ற ஓர் உணர்வாகும். எந்த நிலையிலும் அதை நீக்குதல் என்பது கடினமான காரியம். ஆனால், அடிகளார் உள்ளத்தில் சிவபெருமான் புகுந்தவுடன், ஏனையோர்க்கு எளிதில் நடைபெற முடியாத உடம்பை வெறுத்து ஒதுக்கும் இச்செயல், ஒரே விநாடியில் அவருக்கு நிகழ்ந்துவிட்டது என்கிறார். அதனையே 'ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார்.

'பெற்றேன்' என்ற சொல் பருப்பொருளாகவோ நுண் பொருளாகவோ உள்ள ஒன்று ஒருவனிடத்து வந்து நிலை பெற்று நிற்பதையே குறிக்கும். உணவு பெற்றேன், புகழ் பெற்றேன் என்ற தொடர்களில் உணவு என்ற பருப் பொருளும் புகழ் என்ற நுண்பொருளும் பெற்றவரிடம் தங்கிவிடுகிறது. வந்த பொருள் பெற்றவரிடத்து நிலைக்குமே யானால்தான், அதனைப் 'பெற்றேன்' என்று சொல்ல முடியும். 'சிவாய நம' என்ற மந்திரத்தைப் பலரும் ஓதினாலும் கூறுகின்ற அவர்கள்மாட்டு அது தங்கிற்று என்று சொல்ல முடியாது. ஆனால், அடிகளாரைப் பொறுத்தமட்டில் சிவபெருமான் தானே வந்து அருள்செய்தான் ஆதலின் 'சிவாயநம' என்ற மந்திரம் அவரிடத்து வந்து நிலைத்து விட்டது என்ற நுண்ணிய கருத்தையே 'சிவாயநம எனப்பெற்றேன்' என்ற தொடரால் குறிப்பிடுகிறார்.

ॐ ॐ ॐ

39. திருப்புலம்பல்

[சிவானந்த முதிர்வு]

இத்தலைப்பின்கீழ் வரும் மூன்று பாடல்களையும் ஒருங்கே படித்த பிறகு, இதில் எந்தப் பாடலில் எங்கே புலம்பல் உள்ளது என்று ஆராயத் தொடங்கினால், எந்தப் பாடலில் உள்ளது புலம்பல் என்பது விளங்குமாறில்லை.

முன்னர் உள்ளவர்கள் தவறு செய்தால் பின்னே வந்தவர்கள் குருட்டுத்தனமாக அதனைப் பின்பற்றுவதும், முடிந்தால் அதற்கு அமைதி கூறுவதும் இந்நாட்டில் தொன்றுதொட்டு வரும் கொள்கையாகும். அந்த வகையில் பார்த்தால், யாரோ ஒருவர் இதற்குத் திருப்புலம்பல் என்று பெயரிட்டிருக்க வேண்டும்.

பாடலின் போக்கைச் சிந்திக்காமல் புலம்பல் என்ற பெயரிட்டவருக்குப் பின்வந்தவர்கள் தமக்குத் தெரிந்த சாத்திர வார்த்தைகளை உட்தலைப்புகளில் தூவிப் போயினர். அந்த முறையில் இந்த மூன்று பாடலுக்கும் உட்தலைப்பு 'சிவானந்த முதிர்வு' என்று கொடுக்கப் பெற்றுள்ளது. சிவானந்தம் முதிர்ந்தால் சொற்கள் மறைந்து, அந்த அடியவர் பேரின்ப வெள்ளத்துள் ஆழ்ந்துவிடுவார். அந்த அனுபவத்திலிருந்து மீண்ட நிலையில் அதுபற்றிப் பாடுதல் உண்டு.

இந்தப் பாடல்கள் அந்த முறையில் அமைந்ததாகவும் தெரியவில்லை. எனவே, சிவானந்த முதிர்வு என்ற உட்தலைப்பு எவ்விதத்திலும் பொருந்துமாறில்லை.

556. பூங் கமலத்து அயனொடு மால் அறியாத நெறியானே
கோங்கு அலர் சேர் குவி முலையாள் கூறா வெண் நீறு ஆடீ
ஓங்கு எயில் சூழ் திருவாரூர் உடையானே அடியேன் நின்
பூங் கழல்கள் அவை அல்லாது எவை யாதும் புகழேனே
1

மிகப் பெரிய பதவியிலிருந்த திருவாதவூரர் தம் பதவிக்கேற்றமுறையில் அரசனையும், அவனையொத்த பெரியவர்களையும் புகழவேண்டிய சூழ்நிலையில் இருந்திருப்பார். இது தவறென்று கூறுவதற்குமில்லை. திருப்பெருந்துறை அனுபவத்திற்குப் பிறகு மனிதர்களைப் புகழ்கின்ற மனோநிலை அவரைவிட்டுக் கழன்றேவிட்டது.

நிலைபேறில்லாத நன்மைகளைச் செய்ததற்காக அரசனையும், ஏனையோரையும் இதுவரை புகழ்ந்தார் அவர். ஆனால், திருப்பெருந்துறையில் கிடைத்த இன்ப அனுபவம் ஈடிணையில்லாதது. குருநாதரை அன்றி வேறு எவராலும் அதனைத் தர முடியாது என்று அறிந்து உணர்ந்தவுடன், அத்திருவடிகளையே புகழத் தொடங்கினார். இவ்வளவு பெரிய ஆனந்தத்தைத் தந்த திருவடியைப் புகழ்ந்தபிறகு வேறு யாரையும், எதையும் புகழத் தாம் ஒருப்படவில்லை என்பதையே 'பூங்கழல்கள் அவை அல்லாது எவை யாதும் புகழேனே' என்று பாடுகிறார்.

557. சடையானே தழல் ஆடீ தயங்கு மூ இலைச் சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழ வெள்ளை
விடையானே விரிபொழில் சூழ் பெருந்துறையாய் அடியேன்
நான்
உடையானே உனை அல்லாது உறு துணை மற்று அறியேனே
2

தயங்கு-விளங்குகின்ற, மழ - இளமை.

எல்லையற்ற ஆனந்தத்தைத் தந்த திருவடிகளையன்றி வேறொன்றையும் புகழமாட்டேன் என்று சென்ற பாடலில்

கூறியவர், அந்தத் திருவடிகள் ஆனந்தத்தைத் தந்ததுடன் அல்லும்பகலும் தமக்குத் துணையாக உள்ளத்தினுள்ளே ஒளிர்கின்றதை நன்றியுடன் நினைந்து பார்க்கிறார்.

வாழ்க்கையில் ஒரோவழி துணையாக நின்றவர்களையே இந்த உலகம் புகழும். அப்படியிருக்க அல்லும் பகலும் ஆன்மாவிற்கே துணையாக நிற்கும் அந்தத் திருவடிகள் புகழப்படவேண்டியவை என்பதில் ஐயமில்லை. இந்தப் புகழ்ச்சி ஆனந்தம் காரணமாக வெளிப்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணம்பற்றி வெளிப்பட்டதா என்பதற்கு விடை கூறுவதுபோல இப்பாடலின் நான்காம் அடி அமைந்துள்ளது.

'உறுதுணை' என்ற வினைத்தொகையைப் பயன்படுத்தியதால் முக்காலத்திற்கும் இத்துணை பயன்படும் என்பதை அறிந்து கூறுகிறார்.

இது எப்படித் துணையாயிற்று? துணை செல்ல வேண்டுமானால் துணையாக வருபவர் எதிர்ப்படக்கூடிய எல்லாவிதமான இடையூறுகளையும் வெல்லக்கூடியவராய் இருத்தல் வேண்டும். அப்படிப்பட்டவரே சிறந்த துணையாவார்.

பெருந்துறை நாயகனைப் புகழ்வதுபோல முதல் மூன்று அடிகள் அமைந்துள்ளன. அந்தப் புகழ்மொழிகளில் துணை இலக்கணம் குறிப்பாகப் பேசப்பெறுகிறது என்பதை அறிந்துகொண்டால், எப்படித் திருவடி உறுதுணை ஆயிற்று என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

'சடையான்' என்றதால் சீறி வரும் கங்கையையோ சடைக்குள் அடக்கியவன் எனவே இவனை வெல்வார் யாருமில்லை என்பது பெற்றாம்.

'தழல்ஆடீ' என்றதால் தழலைக் கையில் வைத்து ஆடுபவன் என்ற பொருள் வருகிறது. துணையாக வருபவன் பின்னே வருகின்றவனுக்கு வழி நன்றாகத் தெரிவதற்காகக் கையில் தீச்சுடரைப் பிடித்துக்கொண்டு

முன்னே செல்வது மரபு. அடிகளாரின் ஆன்ம யாத்திரையில் துணையாக வருபவன் கையில் தழலை எடுத்துக்கொண்டு முன்னே செல்கிறான் என்ற குறிப்பைத் தழல்ஆடீ என்ற சொல்லால் பெறவைக்கிறார்.

துணைவருபவன் கையில் ஆயுதத்துடன் வருவது பின்னே வருபவனுக்கு மிக்க மனத் தைரியத்தைத் தரும் ஆதலால் இங்கே 'மூவிலைச் சூலப் படையானே' என்றார்.

'பரஞ்சோதீ' என்றதால் அக இருளைப் போக்கித் தருபவன் என்பதாயிற்று. தழல் புற இருளைப் போக்கவும், பரஞ்சோதி அக இருளைப் போக்கவும் உதவின என்க.

'பசுபதீ' என்றதால் எல்லா உயிர்களுக்கும் தலைவனாக உள்ள அவனே, தனிப்பட்ட தம்மாட்டு இரக்கங்கொண்டு துணையாக வருகிறான் என்பதைக் குறிக்கிறார்.

துணையாக வருபவன் நடந்து வாராமல் ஒரு வாகனத்தின்மேல் வருவதில் பெரு நன்மையுண்டு. தேவை ஏற்பட்டால் யாருக்காகத் துணை வருகிறானோ அவன் தளர்ச்சியடையும்போது, அவனையும் தூக்கித் தன் வாகனத்தில் வைத்துக்கொண்டு செல்லமுடியுமல்லவா? இக்குறிப்பையும் உள்ளடக்கி இளமை பொருந்திய வெள்ளேற்றை உடையவனே என்கிறார்.

அவனையல்லாது உறுதுணை மற்று இல்லை என்ற முடிவிற்கு அடிகளார் வருவதற்குரிய காரணத்தைத் துணை வருபவனைப் புகழுவதுபோன்ற சொற்களால் அடிகளார் விளக்கிக் காட்டியுள்ளார்.

துணைவருவதோடுமட்டு மல்லாமல், அவன் தமக்கு எஜமானனாகவும் உள்ளான் என்பதைக் குறிக்க 'உடையானே' என்றார். நான் என்றுமட்டும் கூறினால், தற்போத வெளிப்பாடு ஆகிவிடும். ஆதலால், 'அடியேன் நான்' என்றார்.

558. உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர்
வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்து உருக வேண்டுவனே 3

குரைகழல்-ஒலிக்கும் கழலணிந்த திருவடிகள்

இரண்டாம் பாடலில் கூறப்பெற்ற முறையில் ஒரு துணை கிடைத்துவிட்டதால் அடிகளாருக்கு எல்லையற்ற மனஉறுதியும், துணிவும் தோன்றிவிட்டன. அதனால்தான், இப்பாடல் வெளிவருகின்றது.

தமக்கென்றுள்ள உற்றார், தமக்கு உரியதாகிய ஊர் என்ற இவை இரண்டின் அடிப்படையில் கிடைக்கும் பெருமை(பேர்) ஆகிய எதுவும் வேண்டியதில்லை என்று கூறியவர், மிகமிகத் துணிவோடு கற்றவர்கள் தொடர்பு கூடத் தேவையில்லை என்கிறார். கற்றார் என்பது இங்கு வெறும் ஏட்டுக்கல்விமட்டும் உடையவர்களைக் குறிக்கின்றது. இத்தகையவர்கள் தொடர்பு, இருந்தும் ஒன்றுதான் இல்லாமல்போனாலும் ஒன்றுதான்.

இன்னும் ஒரு படி மேலே சென்று, கற்கவேண்டிய நூல்களைக்கூட இனிக் கற்கத் தேவையில்லை; கற்ற வரையில் போதும் என்பதைக் 'கற்பனவும் இனி அமையும்' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். ஏன் தெரியுமா?

உண்மையான கல்வியின் பயன் உயிர்களிடத்து அன்பைப் வளர்த்துப் பெருக்கி, அந்த வளர்ந்த அன்பை இறைவன் திருவடிகளில் செலுத்துவதுதான். இறைவன் திருவடியில் அப்படி அன்பு செய்யும்போது உண்மையில் அந்த அன்பு இறைவன் திருவடியில் லயித்துள்ளதா என்பதை அறிய ஒரே ஒரு வழி உண்டு. அதாவது, அப்படி அன்பு செய்பவர் உள்ளம் உருகும், மனமும் உருகும். இவை இரண்டும் உள்ளே நிகழ்பவை. இதனை அடையாளம் கண்டுகொள்ள, புறத்தேயும் ஒரு நிகழ்ச்சி நடைபெறும். அதுவே கண்ணீர் ஆறாகப் பெருகுதலாகும்.

இப்படிக் கசிந்துருகும் நிலை தமக்கு வேண்டும் என்று அடிகளார் கேட்கின்றார். ஆதலின், இது கிடைத்துவிட்ட பிறகு மேற்கொண்டு எந்த நூலையும் கற்கத் தேவை யில்லை. ஆதலால் 'கற்பனவும் இனி அமையும்' என்றார்.

'பேர் வேண்டேன்' என்பதற்கு புகழ் வேண்டேன் என்று பொருள் கூறுவது சரியன்று. ஒருவர் உயிருடன் இருக்கும் காலத்து அவர் பிறந்த ஊர், பிறந்த குடி ஆகியவை காரணமாகப் பிறரால் பாராட்டப்பெறும் சொல்லே பேர் எனப்படும். இதனை ஆங்கிலத்தில் 'Name' என்று கூறுவர். அடுத்து, ஒருவர் செய்த செயல் காரணமாக அவருக்குப் பின்னரும் பிறரால் அவரை ஏத்திச் சொல்லப்படும் சொற்களே புகழ் எனப்படும். இதனை ஆங்கிலத்தில் 'Fame' என்பர்.

கன்று+ஆவின் மனம் என்று கூறுவதால், கன்றைப் பிரிந்து அக்கன்றை நினைந்து மனம் உருகிக் கண்ணீர் விடும் பசுவின் நிலையை அடிகளார் பல இடங்களில் கண்டிருத்தல் வேண்டும். கன்றுக்கும் பசுவுக்கும் உள்ள தொடர்பு மிக நெருக்கமானது; ஆயினும், இப்போது கன்று பசுவோடு இல்லையாதலால் அக்கன்றை நினைந்து பசு உருகுகிறது. இப்பாடல் பாடப்பெறும் நேரத்தில் அடிகளாருக்கு மிகவும் உறவு உடையதாகிய குருநாதரின் திருவடிகள் (குரை கழல்கள்) அடிகளாரின் எதிரே இல்லாமையால் அத்திருவடிகளின்மாட்டுக் கொண்டுள்ள ஈடுபாடு குறைந்துவிட்டதோ என்று அஞ்சுகிறார். அதனால்தான் கன்றைக் காணாதவிடத்து உருகும் பசுவின் மனநிலை நினைவிற்கு வருகிறது. கன்றைக் காணாவிடத்து இந்தப் பசு கொள்ளும் அவ்வளவு உருக்கமும் குரைகழலைக் காணாவிடத்தும் தமக்கு வரவேண்டும் என்று விரும்புகின்றார். ஆதலின் 'குரைகழற்கே கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே' என்கிறார்.

ॐ ॐ ॐ

பின்னுரை

செத்திலாப் பத்து

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விட்டது என்பது இந்நாட்டில் வழங்கும் முதுமொழியாகும். திருப்பெருந்துறை அனுபவம் கிடைத்த அடிகளார் அதில் திளைத்துக்கொண்டிருக்கும்போதே அது கைநழுவி விடுகிறது. அதனை மீட்டுப் பெறவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனையில் அடிகளாருக்கு எஞ்சியது கலக்கமே ஆகும்.

கலக்கத்திற்கு ஒரு காரணமுண்டு. குறிப்பிட்ட வழி, துறைகளில், குறிப்பிட்ட முயற்சியை மேற்கொண்டு ஒன்றை அடைந்திருப்பின், அது கைநழுவிவிட்டபோது ஓரளவு கவலையுண்டாகும் எனினும், அதிகக் கவலைக்கு அங்கு இடமில்லை, காரணம், அதனை அடைவதற்குரிய வழி, துறைகளும் தெரியும்; என்ன முயற்சி செய்யவேண்டும் என்பதும் முன்னை அனுபவம் காரணமாகத் தெரியும். எனவே, அதிகக் கலக்கத்திற்கு இடமில்லை.

ஆனால், அடிகளார் பெற்ற அனுபவம் இந்த முறையில் கிடைத்ததன்று. இந்த அனுபவத்தைப் பெறும் வழிமுறைகளும் அவருக்குத் தெரியாது; அதனை அடைவதற்கு எந்த முயற்சியும் அவர் செய்தவரும் அல்லர். ஆனால், ஒன்றுமட்டும் அவருக்கு உறுதியாகத் தெரிகிறது. வெறும் மனித முயற்சியால்மட்டும் அதனை அடைய முடியாது என்பதை அவர் நன்றாக உணர்கின்றார்.

முயற்சி செய்து தோற்றுப்போனவர்களாகிய நாரணன், நான்முகன் ஆகியோர் பட்டியல் பத்துப் பாடல்களில் ஐந்தில் இடம்பெற்றுள்ளன. இதைக் கூறுவதன் நோக்கம், தம்முடைய முயற்சியால் அந்த அனுபவத்தை மீட்டுப் பெற முடியாது என்பதைத் தெளிவுபடுத்தவேயாம்.

அப்படியானால் வேறு எவ்வழியில் இதனைப் பெறுவது? தம் முயற்சியாலோ, வழி துறைகளை அறிவதாலோ அடையமுடியாத ஒன்று, ஒரு முறை தமக்குக் கிடைத்தது என்பதை ஏறத்தாழ எல்லாப் பாடல்களிலும் அறிவிக்கின்றார். அப்படியானால் அது கிடைத்ததற்குக் காரணம் தம்முடைய முயற்சியோ தகுதியோ அன்று என்பதையும், அவனே விரும்பிவந்து தம்மை ஆட்கொண்டான் என்பதையும் பின்வரும் அடிகளில் குறித்துச் செல்கிறார்.

'பொய்யனேன் அக நெகப் புகுந்து' (398), 'என்னை ஓர் வார்த்தையுள் படுத்துப் பற்றினாய்' (399), 'உன் அருள் புரிந்தனை' (400), 'எனை எற்றினுக்கு ஆண்டாய்?' (401), 'எனை நயந்து இனிது ஆண்டாய்' (406) 'அச்சம் தீர்த்த நின் அருட்பெருங்கடல்' (407) என்ற தொடர்கள் இந்த அருளனுபவம் தமக்குக் கிடைத்தது எவ்வாறு என்பதை மிக்க உறுதியுடன் வெளிப்படுத்துகின்றன.

முன்னர்க் கிடைத்த இந்த அருளனுபவம் இப்பொழுது போய்விட்டது என்றால், அதனை மீட்டும் தருவாயாக என்றுதானே கேட்கவேண்டும்? அதை விட்டுவிட்டுச் 'செத்திலேன்' (398) என்றும், 'உடல்தனைச் செற்றிலேன்' (399) என்றும், 'செத்திடப் பணியாய்' (400) என்றும், 'காய மாயத்தைக் கழித்து அருள் செய்யாய்' (402) என்றும், 'அறுக்கிலேன் உடல் துணிபட' (403) என்றும், 'இறக்கிலேன் உனைப் பிரிந்து' (403) என்றும் பாடியதன் அடிப்படை யாது?

இதிலும்கூட இரண்டு வகைகள் பேசப்பெறுகின்றன. 'காயத்தைச் செற்றிலேன்' 'அறுக்கிலேன் உடல் துணிபட' என்பவை இவரே செய்துகொள்ளும் பணிகளாகும். 'செத்திடப் பணியாய்' 'காயமாயத்தைக் கழித்தருள் செய்யாய்' என்பவை குருநாதர் செய்யவேண்டியவை.

அந்த அனுபவத்தைத் திரும்பவும் தரவேண்டும் என்பதை 'நின் கழல் இணை காட்டி அருள் செய்யாய்' (402), 'இது செய்க என்று அருளாய்' (403), 'பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்' (404), 'நின்தொண்டரில் கூட்டாய்' (405) 'அம்மலர்க்கே வந்திடப் பணியாய்' (406) என்ற தொடர்களில் பேசுவதைக் காணலாம்.

அப்படியிருக்கச் 'செத்திடப் பணியாய்' என்றும் 'காய மாயத்தைக் கழித்து அருள் செய்யாய்' என்றும் பேசுவது ஏன்?

இப்பதிகம் முழுவதையும் ஒருமுறைக்கு இருமுறை படித்தால், தெளிந்த ஒரு நோக்குடன் அடிகளார் இதனைப் பாடவில்லையோ என்ற எண்ணம் வலுப்பெறுகிறது. இந்த எண்ணம் வலுப்பெற, இப்பகுதியின் இறுதிப்பாடலின் (407) இறுதி அடியில் 'களிப்பெலாம்(கெட) மிகக் கலங்கிடுகின்றேன்' என்று பாடியருளியது காரணமாய் அமைந்துள்ளது.

இப்பகுதியின் முதலாவது பாடலில் வரும் 'விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்' (398) என்பதில் உள்ள கருத்து என்பது பெருந்துறையில் கிடைத்த உள்ளார்ந்த இறையனுபவமாகும். 'இழந்தேன்' என்றமையால், தம்முடைய கவனக் குறைவால் அதை இழக்க நேரிட்டது என்ற கருத்தைப் பேசுகின்றார்; இதில் வரும் 'இழந்தேன்' என்பதற்கு விளக்கவுரையாக வருவது அடுத்த பாடலில் வரும் 'மன்ன என்னை ஓர் வார்த்தையுட்படுத்துப் பற்றினாய்' (399) என்பதாகும். ஒரு வார்த்தை இவ்வளவு பெரிய அனுபவத்தைத் தந்தது என்றால், அது மிக எளிதாகக் கிடைத்துவிட்டது என்பதேயாம். எளிதாகக் கிடைத்து இருப்பினும், கிடைத்த பொருள் எத்தகைய அருமைப்பாடு உடையது என்பதை அடுத்த பாடலில் விரிவாக விளக்குகிறார். புற்றுமாய், மரமாய் நின்று பெருமுயற்சி செய்தவர்களுக்குக் கிடைக்காத ஒன்று தமக்கு எளிதாகக்

கிடைத்தது என்பதை 'ஒரு வார்த்தையுட் படுத்தினாய்' என்று விளக்கினார்.

இதற்கு முன்னர்ப் பல பாடல்களில் 'நாயினும் கடையேன்' என்று தம்மைக் கூறிக்கொள்ளும் அடிகளார், ஒரு புதிய கருத்தை 400 ஆவது பாடலில் வெளியிடுகிறார். இந்தப் பாடலில் 'புலையனேன்' என்று தொடங்கி, 'தலையினால் நடந்தேன்' என்று கூறுவது அவருடைய எண்ண ஓட்டங்களை எடுத்துக்காட்டுகின்ற இரண்டு தொடர்களாகும். இயல்பாகத் தம்மைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் கீழானவன் என்ற கருத்துப்படப் பேசும் அடிகளார், இப்பாடலில் 'புலையனேன்' என்று தொடங்குவது பொருத்தமானதேயாகும். ஆனால், புலையனேன் என்று தொடங்கும் எழுவாய், 'களித்துத் தலையினால் நடந்தேன்' என்றல்லவா முடிகிறது?

புலையனேன் என்று தம்மைப்பற்றிப் பேசிக்கொள்ளும் ஒருவர் திடீரென்று தலையால் நடந்தேன் என்று கூறுவாரேயானால், இவ்வாறு நடக்க ஏதோ ஒரு புதுமையான நிகழ்ச்சி நடைபெற்றிருக்க வேண்டும். அந்நிகழ்ச்சி காரணமாகவே களிப்பு ஏற்பட்டது என்பதை எளிதாக அறிந்துகொள்ளமுடியும்.

அந்நிகழ்ச்சி என்ன என்பதை இந்த எழுவாய்க்கும் பயனிலைக்குமிடையே மிகச் சுருக்கமாகவும், அழுத்தமாகவும் கூறிவிடுகிறார். 'பொருள் என நினைந்து உன் அருள் புரிந்தனை, புரிதலும் களித்துத் தலையினால் நடந்தேன்' என்ற தொடரிலுள்ள ஒவ்வொரு சொல்லும் சிந்திக்க வேண்டியதாகும்.

'உன் அருள் புரிந்தனை' என்பதில் நடைபெற்ற நிகழ்ச்சி பேசப்பெறுகிறது. புலையனாகிய தம்மைக்கூட ஒரு பொருள் என மதித்து அருள்புரிந்தார் அல்லவா? அடிகளாருக்கே உரிய முறையில் இதுபற்றிப் பேசியிருந்தால்,

என்னையும் ஒரு பொருளாக்கி நாய்க்குத் தவிசு இட்டதுபோல் அருள்புரிந்தனை என்று சொல்லியிருக்க வேண்டும். தம்மை ஒரு பொருளாகக் குருநாதரே கருதிவிட்டார் என்ற நினைவு வந்தவுடன் அடிகளாருக்கு எல்லையற்ற களிப்பு ஏற்பட்டுவிட்டது. குருநாதர் பொருள் என நினைந்ததும் அருள் பாலித்ததும் அவருடைய கருணை காரணமாகவே என்பதை ஏனோ அடிகளார் புதிதாகத் தோன்றிய களிப்புக் காரணமாக மறந்துவிட்டார். அம்மறதி பெருங்கேட்டை விளைப்பதாயிற்று. தம்மை, அவன் பொருளாகக் கொண்டான் என்ற நினைவு வந்தவுடன், உண்மையிலேயே தமக்கொரு தகுதி இருக்கும்போலும் என்ற நினைவு வந்தது. அந்த நினைவு வந்தவுடன் களிப்பு மிகலாயிற்று. களிப்பு மிகுந்தவுடன் தலைகால் புரியவில்லை. அதன் பயனாகச் செய்யத் தகுவது இன்னது, தகாதது இன்னது என்ற வேறுபாட்டை மறந்து ஒரு விநாடி அலையப் புறப்பட்டார். அதனையே 'களித்துத் தலையினால் நடந்தேன்' என்று பாடுகிறார்.

திருப்பெருந்துறையில் திருவடி தீட்சை செய்து அடிகளாரின் உட்புகுந்த குருநாதர், நிலையாகவே அங்குத் தங்கிவிட்டார். ஆனால், தம்முடைய இறையனுபவம் தளர்ந்து அடிநிலைக்கு வரும்பொழுது குருநாதர் தம்மோடு இல்லாமல் விலகிப்போய்விட்டாரோ என்ற அச்சம் அடிகளார் உள்ளத்தில் தோன்ற, அதைப் பல பாடல்களில் வெளிப்படுத்தியும் உள்ளார். இறையனுபவம் முதிர்ந்த நிலையில் குருநாதர் தம்முள் இருப்பதை அவரால் உணரமுடிகின்றது. அந்த உணர்வு தோன்றியவுடன் அவருடைய சிந்தனை இரண்டு வகைகளில் வெளிப்படலாயிற்று. இரண்டு வழிகளிலும் ஆனந்தம் நிறைந்துள்ளது. குருநாதர், அவர் தந்த ஆனந்தம், அதனுள் அழுந்திய அடிகளார் என்ற முறையில் வைத்துக் கண்டால், அனுபவித்த அடிகளார் சில நேரங்களில் ஒரு வினாடி தருக்குக் கொண்டும், இரண்டாவது நிலையில் ஒரு வினாடி

எல்லையற்ற களிப்புக் கொண்டும் சிந்தனையில் மிதக்கத் தொடங்கினார். 'நானேயோ தவம் செய்தேன்' (555) .....சிவபெருமான் தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான் என்பன போன்ற நினைவு வந்தபொழுது ஒரு வினாடி இறையனுபவத்தருக்கு ஏற்பட்டிருக்கலாம். இங்கு வரும் தருக்கு என்ற சொல்லுக்கு வாலாயமாக நாம் கொள்ளும் பொருளைத் தருதல் தவறாகும். 'ஈசன் பல்கணத்து எண்ணப்பட்டு இறுமாந்து இருப்பன்கொலோ' (திருமுறை:4:9-11) என்ற நாவரசரின் பாடலில் வரும் இறுமாப்பும் அடிகளார் கூறும் தருக்கும் ஒரே பொருளை உடையன. 143ஆம் பாடலில் வரும் 'தனித்துணை நீ நிற்க நான் தருக்கித் தலையால் நடந்த வினைத்துணையேன்' என்று வரும் பகுதியில் தலையால் நடந்ததற்குக் காரணம் கூறுவாராயிற்று.

தனித்துணையாக உள்ளவன் உள்ளத்துள் நின்ற அதனால் எல்லையற்ற ஆனந்தம் பொங்கிவழியலாயிற்று. அதன் பயனாகத் தலைகால் புரியாமல் நடந்துகொள்ளும் இயல்பு மிகுந்தது. இது மிகுவதற்குரிய காரணத்தை இரண்டு சொற்களால் அடிகளார் வெளியிடுகின்றார். 143 ஆம் பாடலில் 'தருக்கித் தலையினால் நடந்தேன்' என்று கூறும் அடிகளார், 400ஆவது பாடலில் 'களித்துத் தலையினால் நடந்தேன்' என்று பாடுகிறார். தலைகால் புரியாமல் ஒருவர் இயங்க வேண்டுமானால், எல்லையற்ற ஆனந்தம் காரணமாக அமையலாம். இன்றேல், உலகியல் முறையில், உயர்ந்த பதவியில் உள்ளவர்கள் தம்மைத் தட்டிக்கேட்பார் யாரும் இல்லை என்ற காரணத்தால் 'மண்டை வீங்கி' (தருக்கி)த் தலை கால் புரியாமல் நடந்து கொள்ளலாம். உலகியல் முறையில் இவ்வாறு நடந்துகொள்வோர்களைத் தருக்குக் காரணமாக நடந்துகொள்கிறார்கள் என்று நாம் சொல்கிறோம். 143ஆம் பாடலில் யான் 'தருக்கித் தலையால் நடந்தேன்' என்ற தொடரில் வரும் 'தருக்கி' என்ற சொல்லுக்கு இவ்வாறு

பொருள் சொல்லக்கூடாது என்பதை நாவரசரை எடுத்துக் காட்டி முன்னரே விளக்கியுள்ளோம். அடிகளார் கூறும் 'தருக்கு' எல்லையற்ற களிப்பின் மிகுதியைக் காட்டுகின்ற சொல் என்பதை அவர் கூறும் சொற்களிலிருந்தே அறிந்து கொள்ள முடியும். இரண்டு இடங்களில் தலையால் நடந்தேன் என்று சொல்பவர் இத்தொடருக்கு முன்னர் ஓரிடத்தில் 'தருக்கி' என்றும், மற்றோர் இடத்தில் 'களித்து' என்றும் கூறுவதால், இவ்விரண்டு சொற்களும் ஒரே பொருளைக் குறிக்கும் இரண்டு சொற்களாகும்.

நீத்தல் விண்ணப்பம் 143ஆம் பாடல் விளக்க உரையில் இக்குறிப்பைத் தந்திருக்கவேண்டும். இது விடுபட்டுப் போனது என் கவனக்குறைவியானாலேயாகும்.

அருள் புரிந்தனை என்று 400ஆவது பாட்டில் கூறி, அடுத்த பாடலில் 'எற்றினுக்கு ஆண்டாய்?' என்று கேட்பது சிந்தனையைத் தூண்டுகிறது. தகுதியில்லாத ஒருவரைத் தன் கருணை காரணமாகக் குருநாதர் ஆண்டார் என்றால் 'எற்றினுக்கு ஆண்டாய் என்ற வினா எவ்வாறு பொருந்தும்?

இந்த இடத்தில் நின்று சிந்திக்க வேண்டும். குருநாதர், தகுதியில்லாத ஒரு பொருளைக்கூடப், பொருள் என நினைந்து ஆண்டுகொண்டார் என்றால் , ஒரு இரசவாதம் நடைபெற்றுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இரசவாதத்தில் மட்டமான இரும்பு பொன்னாவதுபோல் குருநாதர் ஆண்டுகொண்டதில் 'புலையனாக' இருந்த ஒருவர்கூட மணிவாசகராக மாறிவிடுகிறார்.

இரும்பு பொன்னாகிவிட்டது என்றால் அதில் பொன்னின் குணம் இருக்கவேண்டுமே தவிர, இரும்பின் குணம் இருக்க முடியாது. அதுபோலக் குருநாதர் ஒருவரை ஆட்கொண்டார் என்றால், ஆட்கொள்ளப்பட்டவருக்குப்

புதிய அருட்குணங்கள் இருக்கவேண்டுமே தவிர, பழைய குணங்கள் இருத்தற்கில்லை. இது தருக்க ரீதியான உண்மை.

ஆனால் இங்கு நடந்தது என்ன? குருநாதர் பொருளென மதித்து அருள் செய்தார். அதன் பின்னரும் அந்தப் 'புலையனுக்கு'ப் புலைக்குணம் போகவில்லை.

தருக்கித் தலையால் நடத்தல் ஒன்று, பராய் மரம்போல மனமும் சித்தமும் முண்டும், முடிச்சுமாக இருக்கின்ற நிலை இரண்டு; நீரை ஆறாகப் பெருகவிட வேண்டிய கண் ஒரு சொட்டுக் கண்ணீரும் விடாமல் மரக்கண் ஆனது மூன்று; குருநாதர் புகழைக் கேளாமல் இருக்கின்ற அளவிற்குச் செவியானது இரும்பினும் வலிதாகிவிட்டது நான்கு— என்ற நான்கு நிலைகளும் தொடர்ந்து இருந்ததாக அடிகளார் நினைத்ததால் 'எற்றினுக்கு ஆண்டாய்?' என்று அடிகளார் கேட்பது பொருத்தமாக அமைந்துவிடுகிறது.

அடிகளார் பெற்ற இறையனுபவம் உச்ச கட்டம் வரையில் ஏறி, கீழே இறங்கும் தன்மையுடையது என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். 400ஆவது பாடலில் 'களித்துத் தலையினால் நடந்தேன் விடைப்பாகா' என்று பாடியவர் அடுத்த பாடலிலேயே 'எற்றினுக்கு ஆண்டாய்' என்ற வினாவை எழுப்புகிறார். அந்த ஆனந்த நிலை தொடர்ந்து நீடித்திருக்குமேயானால் 'எற்றினுக்கு ஆண்டாய்' என்ற வினாத் தோன்றியிருக்கப்போவதில்லை. 400ஆவது பாடலிலேகூட 'களித்துத் தலையினால் நடந்தேன்' என்ற தொடர் நடந்தேன் என்ற இறந்த காலச் சொல்லாக அமைக்கப்பெறுகிறது. ஆக, தலையால் நடந்ததற்குக் காரணமாக இருந்த களிப்புத் தொடரவில்லை என்பது தெளிவாகிறது. அத்தகைய களிப்பு அவர் விரும்பிய பொழுது மறுபடி வரவில்லை என்று நினைக்கத் தோன்றுகிறது. ஈடிணையற்ற அந்தக் களிப்பில் மிதந்தவர் அதிலிருந்து நீங்கி, மட்டமான உலகியல் வாழ்க்கையில்

ஈடுபட ஒருப்படவில்லை. இக்கருத்தை நம் காலத்து வாழ்ந்த மகாகவி பாரதி,

'ஆரமுது உண்ணுதற்கு ஆசை கொண்டார்-கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ'

என்ற தொடரில் எடுத்துக் கூறுகிறார்.

களிப்பு மீண்டும் வரவில்லை என்று தோன்றியவுடன் வாழ்க்கையையே வெறுத்துவிடுகிறார். வாழ்ந்தால் அந்தக் களிப்புடன் வாழவேண்டும்; இல்லாவிடின் செத்தொழி வதே மேல் என்று நினைக்கின்றார். அதனாலேயே களிப்பு மீண்டும் வாராமையால் 'செத்திடப் பணியாய்' என்று பாடுகிறார்.

களிப்பு இருந்த காலத்தையும் அது போய்விட்ட காலத்தையும் இரண்டு வகைகளில் அடிகளார் உணர்ந்தார். உள்ளத்துள் உவகை பொங்கிவழிந்த நிலை அதனை இருவர் மட்டுமே அறிவர்—அதாவது அந்த உவகையைத் தந்த குருநாதர் அதனை அனுபவித்த அடிகளார் ஆகிய இருவர் மட்டுமே அறிவர்.

ஒருவர் தலையினால் நடக்கும் அளவிற்குப் பொங்கி எழுந்த களிப்பு, புற மெய்ப்பாடுகள் எதுவும் இல்லாமல் உள்ளடங்கியா இருந்திருக்கும்? புற மெய்ப்பாடுகளும் உண்டு என்பதை அறிவிக்கின்றார் அடிகளார். களிப்பு மிகுந்த காலத்தில் உள்ளம் பாகாய் உருகிற்று; கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று; காதுகளில் அவன் புகழ் ரீங்கார மிட்டது; மனம் எவ்விதக் கோணலுமின்றி எவ்வித வடிவும் எடுக்கக்கூடிய முறையில் ஒழுங்குபட்டிருந்தது.

களிப்புப் போய்விட்ட நிலையில் என்ன நிகழ்ந்தது? கண்கள் கண்ணீரை மறந்தன; செவிகள் அவன் புகழைக் கேட்கும் இயல்பை மறந்து இரும்பாயின; மனம் முண்டும் முடிச்சுமாகப் பராய் மரமாக மாறிவிட்டது.

களிப்பிற்குப் பிறகு இப்படி ஒரு மாற்றம் வருமென்று அடிகளார் கனவிலும் கருதவில்லை. அதனாலேயே மனம் நொந்து குருநாதரை விளித்து எனை 'எற்றினுக்கு ஆண்டாய்' என்று வினவுகிறார்.

'எற்றினுக்கு ஆண்டாய்' என்று கேட்கும் குருநாதரிடமிருந்து விடை ஒன்றும் வாராமையால் 'காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்' என்று பாடுகிறார். அப்படி ஒருவேளை தம் விருப்பத்தை ஏற்றுக்கொண்டு குருநாதர் இவருடைய உடலை அழிக்க முடிவுசெய்தால், அதற்கு முன்னர்ச் சிறு வேண்டுகோளை வைக்கின்றார். 'குருநாதரே, 'செத்திடப் பணியாய்' என்றும் 'காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்' என்றும் வேண்டிக் கொண்டேன். அப்படியே இவ்வுடலைக் கழிப்பதற்கு முன்னர் இரண்டு வேண்டுகோளை நிறைவேற்றி அருள்வாயாக. ஒன்று— இவ்வுடம்பு இருந்தாலும் போனாலும் உனைப் பிரிவுறா அருளைக் காட்ட (தருதல்) வேண்டும். இரண்டு— ஐயனே, என் வாழ்க்கையை மாற்றியமைத்த உன் திருவடிகளை இவ்வுடம்பு அழிவதற்கு முன்னர் மற்றொரு முறை தரிசிக்க விரும்புகிறேன் என்ற கருத்தை 'நின் கழலிணை காட்டி' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். அடிகளாரின் உள்ளத்தில் தோன்றிய அந்த அவலம் வளர்ந்துகொண்டே செல்கின்றது. குருநாதர் அருளையும் தரவில்லை; திருவடிக் காட்சியையும் தரவில்லை; செத்திடப் பணிக்கவும் இல்லை. இன்னது செய்வது என்று அறியாத நிலையில், நம்பிக்கை இழந்த நிலையில் முடிவாக வெளிப்படுவது 448ஆவது பாடலில் வரும் 'ஆரொடு நோகேன் ஆர்க்கு எடுத்து உரைப்பேன் ஆண்டநீ அருளிலை ஆனால் வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்' என்ற பகுதியாகும்.

404ஆம் பாடலில் வரும் இறைவனைப் பற்றிய பல விளிகள் கருத்துடை விளிகளாக அமைந்துவிட்டன.

'மறிகடல் விடமுண்ட வானவன்', 'நீல கண்டத்தை உடையன்', 'பிறைகுலாம் சடைப் பிஞ்ஞகன்' என்ற இந்த மூன்று விளிகளில், பிஞ்ஞகனுடைய மூன்று செயல்கள் பேசப்பெறுகின்றன.

மறிகடல் நஞ்சை உண்ண என்ன நிகழ்ந்தது? பாற்கடல் கடையப் புறப்பட்ட தேவர்கள் சிவபெருமானிடம் விடைபெற்றார்களா? இல்லையே. அவனை ஒதுக்கிவிட்டுச் சென்ற அவர்கள் நஞ்சு வெளிவந்தவுடன் அலறிக்கொண்டு அவன் திருவடியில் வீழ்ந்தனர். அந்த நஞ்சை எடுத்து அவன் உண்டான். உண்ட நஞ்சு உள்ளே சென்று வயிற்றிலுள்ள பிரபஞ்சத்தை அழித்துவிடாமல் இருக்க அதனைத் தொண்டைக் குழிக்குள் நிறுத்திக்கொண்டான்.

தக்கன் வேள்வியில் அவிசுக்கு ஆசைப்பட்டுச் சென்ற சந்திரன், வீரபத்திரர் கொடுத்த உதையைப் பொறுக்க மாட்டாமல் சரணம் என்று வந்து திருவடியில் வீழ்ந்ததும் அவனைச் சடையில் தூக்கி வைத்துக்கொண்டான்.

தேவர்களும் சந்திரனும் இவன் முழுமுதற் பொருள் என்பதை அறியாமல் அலட்சியம் செய்து, தத்தம் செயல்களைத் தொடங்கவும் பெரும் அவதிக்குள்ளாயினர். உடனே அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். அனைவரையும் மன்னித்து அவர்களை வாழுமாறு செய்தவன் தமக்கும் பெருநெறி காட்டவேண்டும் என்கிறார். இந்தத் தேவர்கள், அவனை நினைக்கவும் இல்லை; சந்திரன் ஆகியோர் நமச்சிவாய என்று ஓதவும் இல்லை; முதலில் அவனடி பணியவும் இல்லை. எல்லாவற்றையும்விட அவனை அலட்சியம் செய்தனர். அப்படியிருந்தும் அவர்கள் உய்ய வழி வகுத்தான்.

இதனைக் கூறிவிட்டு, அவர்களும் இந்த மூன்றையும் செய்யவில்லை, தாமும் இந்த மூன்றையும் செய்யவில்லை. ஆபத்து வந்தபொழுது அவனிடம் சென்று அலறினர்

அவர்கள்; தாமும் அலறுவதாகக் கூறுகிறார். அவர்கள் செய்த ஒரு பெருங்குற்றத்தை அதாவது அவனை அலட்சியப்படுத்தியதைத் தாம் செய்யவில்லை என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார்.

தருக்க ரீதியாக இத்தனை குற்றங்களைச் செய்த அவர்களை மன்னித்து உய்யக்கொண்டதுபோல் தம்மையும் உய்யக்கொள்ள வேண்டும் என்கிறார். அவர்கள் அலறியவுடன் அருள்செய்த அவன் தாம் இன்னும் அலறிக் கொண்டிருக்க அருள் செய்யாமல் இருப்பது அழகோ! என்கிறார்.

'தொண்டரில் கூட்டாய்' (405) என்று கேட்பது ஏன்? திருப்பெருந்துறையில் கூட்டியது உண்மையாயின் தம்முடைய நினைவில் அறாமல் இருந்திருக்க வேண்டும். நமச்சிவாய என்ற ஒலி தம்முடைய நாவில் எப்பொழுதும் புரண்டு கொண்டிருந்திருக்க வேண்டும். இவை இரண்டும் இல்லை யாதலால் இப்பொழுது மறுபடியும் 'தொண்டரில் கூட்டாய்' என்று கேட்கின்றார்.

அடைக்கலப் பத்து

திருவாசகப் பதிப்புக்களில் இன்று காணப்பெறும் முறைவைப்பிலும் செத்திலாப் பத்தை அடுத்துவருவது அடைக்கலப் பத்தாகும். எனது முறைவைப்பின்படியும் இந்த இரண்டு வைப்புக்கள் அமைந்திருக்கும் முறை ஏற்றுக் கொள்ளத் தக்கதேயாகும்.

'செத்திடப் பணியாய்' என்று கேட்டுக்கொண்ட பிறகு அடைக்கலம் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? மேலோட்டமாகப் பார்க்கும்போது இது பொருத்தமற்றது போல் காணப்படும். ஆழ்ந்து நோக்கினால் இந்த முறைவைப்பின் ஆழம் நன்கு தெரியும்.

'அறுக்கிலேன் உடல்துணிபட' (403) என்று உணர்ச்சி வேகத்தில் செத்திலாப் பத்தில் பேசத் தொடங்கியவர் தமக்கு அந்த உரிமையில்லை என்பதை உடன் கண்டுகொண்டார், தம்பாலுள்ள இந்த உடம்பு தமக்குப் பயன்படவில்லை; அதை அறுத்து ஒழிக்கலாம் என்றால், அதற்கு உரிமையும் இல்லை. இந்த நிலையில்தான் 'செத்திடப் பணியாய்' என்று வேண்டிக்கொண்டார்.

அதுதானும் நடந்தபாடில்லை. எனவே, பாராமுகமாக இருக்கும் தலைவனிடம் 'ஐயா! நான் என்ன சொல்லியும் உன் காதில் ஏறவில்லை. இப்பொழுது ஒன்று சொல்லுகிறேன் கேள். நீ எவ்வளவுதான் வாயை மூடிக்கொண்டு இருந்தாலும், நீ என் உடையான்; நான் உன் அடைக்கலம். பிரபஞ்சம் முழுவதையும் படைத்துக் காக்கும் உனக்கு அதில் வாழும் சிற்றுயிராகிய என்னை இனங் கண்டுகொள்ளவோ, உன் அடைக்கலம் என்பதை அறிந்துகொள்ளவோ நேரம் இருக்காதுதான்! ஆகவே, நான் உன் அடைக்கலம் என்பதை இப்பொழுது திருப்பித் திருப்பிச் சொல்வதன்மூலம் உன் கவனத்தை என்பால் ஈர்க்க விரும்புகின்றேன்.

'ஐயா! மிகப் பலர் நீயே தலைவனென்று சொல்லி அடியராக நின்பால் அடைந்துள்ளனர். அவர்களில் நானும் ஒருவன்.

'மொத்தமாக ஒரு பொருளை வாங்கும்போது அதில் ஏதோ ஒன்றிரண்டு சொத்தையாகவோ, அழுகியதாகவோ இருக்கலாம். மொத்தமாக வாங்கிவிட்ட பிறகு, இதை மட்டும் தனியே எடுத்துத் தூர எறிந்தாலும் கணக்கில்தான் சேர்ந்துவிடும். மொத்தமாக வாங்கிய கணக்கில்தான் சொத்தையும் அழுகலும் இடம்பெற்றுள்ளன.

'(பழுத்த மனத்து அடியார்கள்) கமலம்போன்ற உன் திருவடிகள் அடைந்தவர்கள்; உன்னோடு வந்து சேர்ந்து

விட்டவர்கள். ஐயா! இப்பொழுது ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். திருப்பெருந்துறையில் அமர்ந்திருந்தார்களே உன் அடியார்கள்; அவர்களிடையே என்னை இருக்குமாறு பணித்தவனும் நீதான். அப்படிப் பணிப்பதற்கு முன்னரே நான் சொத்தை (அழுக்குமனத்தடியேன்) (408) ஊற்றையேன் (536) என்பதை நீ அறிந்துகொண்டிருக்க வேண்டும். என்ன காரணத்தாலோ என்னை அவர்களுடன் அமருமாறு பணித்துவிட்டாய்.

'அப்படி அமர்த்தப்பட்டதால் நான் சொத்தை என்பதை மறந்து, அவர்களோடு சமமானவன் என்று நினைத்துவிட்டேன். அவர்களைப் போலவே உன்னுடன் வந்துவிடலாம் என்று நினைத்தேன் ஆனால், என் சொத்தைக்குக் காரணமாக என்னிடம் இருந்தவை, புழுக் கண்ணுடைப் புன்குரம்பு; கல்வி ஞானமிலாப் பொல்லாத அழுக்கு மனம் என்பனவாம். இவற்றின் பயனாகவே நான் அடியார்களோடு செல்லமுடியவில்லை.

'இவற்றையெல்லாம் அறிந்திருந்தும் என்னை வருமாறு பணித்து, திருவடி தீட்சை செய்து, பொதுவினில் வருக என்று கட்டளையையும் இட்டாயவல்லவா? இவற்றுக்கு என்ன பொருள்?

'இவற்றையெல்லாம் நீ செய்தபொழுதே நீ உடையான் என்பதும் நான் உன் உடைமைப்பொருள் என்பதும் நிரூபணமாகிவிட்டன. எனவே, நான் எங்கே கிடந்தாலும் உன் அடைக்கலப்பொருள் என்பதை மறக்க உனக்கு உரிமையில்லை. சொத்தையானாலும் என்னை ஏற்றுக் கொண்டே தீரவேண்டும்' என்ற கருத்தையே, 'உடையாய்! அழுக்கு மனத்து அடியேன் உன் அடைக்கலமே' (408) என்று பாடுகிறார்.

இந்த நிலையில் குருநாதர் சொல்லாவிட்டாலும் அவர் சொல்லக்கூடிய ஒன்று அடிகளார் மனத்தில்

தோன்றுகின்றது. 'மகனே! நான் ஆட்கொண்ட பிறகாவது நீ திருந்தி நல்வழிப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் வெறுப்பனவே செய்கின்றாய். உன்னை என்ன செய்வதென்று புரியவில்லை' என்று சொல்லியிருக்கலாம் அல்லவா!

உடையவனின் கேளாத இந்தக் கேள்விக்கு 409 ஆம் பாடலிலே விடைகூறுகிறார் அடிகளார். 'ஐயா! வெறுப்பனவே செய்கின்றேன் என்று என் செயல்களில் உள்ள வெறுக்கத்தக்க பகுதிகளை ஒன்றுகூட்டிப் பார்ப்பது உனக்கு அழகன்று. நீ பெரியவன் என்றும், பிரபஞ்ச காரணன் என்றும், கருணைக்கடல் என்றும் இந்த உலகத்தார் கூறுகிறார்களே! அதுதானே உன்னுடைய பெருமை? என்னுடைய வெறுக்கும் செயல்களைக் கணக்கிட்டுப் பார்ப்பது அந்த உன் பெருமைக்கு அழகன்று. என் பிழைகளைப் பொறுப்பதுதான் அழகும் நியாயமுமாகும்.

'இது சரியில்லையென்று கூறுகிறாயா? இப்பொழுது நான் சொல்வதைக் கேள். நீ அணிந்திருக்கின்றாயே பாம்பு', அது என்ன நன்மையை யாருக்குச் செய்தது? சீறுவதும், கடிப்பதுமாகிய வெறுக்கத்தக்க செயல்களையே தொழிலாகக் கொண்ட இந்தப் பாம்பை நீ ஆபரணமாக வல்லவா அணிந்திருக்கிறாய்!

'அதுதான் போகட்டும் தலையில் கங்கையைத் தரித்திருக்கிறாயே, அவளென்ன லேசுப்பட்டவளா? உலகத்தையே அழித்துவிடுகிறேன் என்று ஆணவம் கொண்டு தரையில் இறங்கியவள்தானே! அது வெறுக்கத்தக்க செயலல்லவா? வெறுப்பனவே செய்யும் இந்த அராவையும் கங்கையையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட உனக்கு, நான் செய்யும் வெறுக்கத்தக்க செயல்கள் எப்படிப் பெரியவையாகத் தெரிகின்றன?

'இன்னமுமொன்று சொல்லட்டுமா? இந்தப் பாம்பும் கங்கையும் உன்பால் அடைக்கலமென்று வரவில்லை. வெறுப்பனவே செய்யும் அவற்றை நீயே அன்போடு ஏற்றுக்கொண்டாய். அவற்றிலிருந்து நான் மாறுபட்டவன் என்பதை உனக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அவை இரண்டும் உன்னை உடையானென்று ஏற்றுக் கொண்டனவோ, இல்லையோ தெரியாது. ஆனால், நான் உன்னை உடையான் என்று ஏற்றுக்கொண்டு உன்னிடம் அடைக்கலமாகவும் வந்துள்ளேன்' என்ற மிகப் பெரிய கருத்தை மிக்க சமத்காரத்துடன் அடிகளார் இந்தப் பாடலில் (409) கூறியுள்ளார்.

'வெறுப்பனவே செய்யும்' என்று பொதுவாகக் கூறினாரேனும் வெறுக்கத்தக்க செயல்கள் யாவை என்பதை 411, 412, 413, 414 ஆம் பாடல்களில் விரிவாகக் கூறுகின்றார்.

வெறுக்கத்தக்க செயல்கள் பல உண்டேனும் அவற்றுள் பலவற்றை உறுதிப்பாடு, கட்டுப்பாடு என்பவற்றை மேற்கொண்டால் தடுத்து நிறுத்திவிட முடியும். ஆனால், இந்தப் பால் உணர்வைப் போக்குதலோ, கட்டுப்படுத்துதலோ ஏறத்தாழ இயலாத காரியம். அதனை ஓரளவு விரிவாக்கி மேற்குறித்த நான்கு பாடல்களிலும் பேசுகின்றார்.

411, 412, 413, 414 ஆகிய நான்கு பாடல்களில் பாலுணர்வால் விளையும் இடுக்கண்பற்றிப் பேசுகின்றார் பாடல் முறையில் முன்பின்னாக அமைந்திருப்பதால் அவற்றைப் பின்வருமாறு வரிசைப்படுத்திக் காண்டல் நலம். 'இடர்க்கடல்வாய், மாதர் திரைபொரக் காமச் சுறவெறிய அழிகின்றனன்' (411), 'மின்கணினார் நுடங்கும் இடையார் வெகுளி வலையில் அகப்பட்டுப் புன்கணனாய்ப் புரள்வேனை' (414) 'மாழை மைப் பாவிய கண்ணியர் வன்மத்திட உடைந்து தாழியைப் பாவு தயிர் போல் தளர்ந்தேன்' (413) 'சுருள்புரி கூழையர்

சூழலில் பட்டு திறம் மறந்திங்கு இருள்புரி யாக்கையிலே கிடந்து, எய்த்தனன்' (412) என்ற முறையில் வரிசைப்படுத்திக் கொண்டு கண்டால், ஒரு புதிய பொருட்சிறப்பைக் காணமுடியும்.

முதல் மூன்று தொடர்களும் பாலுணர்வில் ஏற்படும் பரிதாபமான நிலையின் வளர்ச்சியைக் கூறுகின்றன.

முதலாவது உள்ள பகுதி 'காமச்சுறவெறிய அழிகின்றனன்' என்பதாகும். இந்த உருவகத்தில் மாதரைத் திரைகளாகவும் காமத்தைச் சுறாவாகவும் உருவகித் துள்ளார். திரை, சுறா ஆகிய இரண்டுமே புறத்தே இருந்து துன்பம் செய்பவை என்பதை எளிதாக அறியமுடியும்.

இரண்டாவதாக இருப்பது, 'நுடங்கும் இடையார் வெகுளி வலையில் அகப்பட்டுப் புன்கணனாய்ப் புரள்வேன்' (414) என்பதாகும். புறத்தே இருந்து துன்பந் தரும் எந்த ஒன்றிலிருந்தும் தப்பிப் பிழைக்க வழியுண்டு. அது முடியாமல் நுடங்கிடையார் வலையில் அகப்பட்டுப் புரள்வதாக இப்பாடலில் கூறுகின்றார். வலையில் அகப்பட்ட ஒன்று, எவ்வளவு புரண்டு கொடுத்தாலும் வெளிவருதல் இயலாத காரியம். அந்தக் கருத்தை மனத்திற் கொண்டு 'புரள்வேனை' என்கிறார்.

மூன்றாவதாக இருப்பது, உடைந்து தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன் (413) என்பதாகும். புறத்தே இருந்து தாக்கும் பொருள்களிலிருந்து தப்பித்துக்கொள்ள வாய்ப்புண்டு. ஆனால், மத்தின் சுழற்சி காரணமாகத் தயிர் உடைந்தாலும் பானையின் பக்க ஓடுகள் வரை சென்று மறுபடியும் மத்திற்கு வருகின்றது. தயிரின் போக்கும் வரவும் இடைவிடாமல் நடைபெறுகின்றது. எனவே, முன்னேற்றம் எதுவுமில்லாமல் சென்று சென்று வருவதால் ஏற்படும் தளர்ச்சியை இங்குக் குறிப்பிடுகின்றார். 411, 414ஆம் பாடல்களில் கூறியதைவிட இங்குப் பேசப்பெற்ற நிலை,

காமவலையில் ஆழமாகச் சிக்குண்டு மீளமுடியாமல் வருந்துவதை அறிவிப்பதாகும்.

நான்காவதாக உள்ள பகுதி, மேலே கூறப்பெற்ற முறையில் முற்றிலும் காமத்தில் மூழ்கி உடைந்துபோவதன் காரணத்தைக் குறிப்பாக விளக்குகின்றது. அந்தப் பகுதி 'சுருள்புரி கூழையர் சூழலில் பட்டு உன் திறம் மறந்து இங்கு இருள்புரி யாக்கையிலே கிடந்து) எய்த்தனன்'(412) என்பதாகும். இத்தொடரில் வரும் 'உன் திறம் மறந்து' என்ற பகுதி ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பெண்ணை, பெண் இன்பத்தை, யாருமே வெறுத்து ஒதுக்கியதில்லை. இறைவனே உமையொருபாகனாக உள்ளான் என்று சொல்லும் இவர்கள் இதனைச் செய்ய மாட்டார்கள். அப்படியானால் தவறு எங்கே நிகழ்ந்தது?

இல்லறத்திலிருந்து பெண்ணை மதித்துப் போற்றி வாழ்வு நடத்துவதில் தவறொன்றுமில்லை என்றாலும், அந்த வாழ்க்கையில் மற்றொரு பகுதி மறக்கப்படக் கூடாது. அதாவது, இந்த உடம்பையும் உயிரையும் தனு கரண புவன போகங்களையும் கொடுத்த ஒருவனை மறந்துவிட்டுப் பெண்ணின்பத்திலேயே மூழ்குதல்தான் பெருந்தவறு. அவனை மறவாமல் இதனை அனுபவிப்பதில் எவ்விதத் தவறுமில்லை. இது இவ்வாறாயின் அடிகளார் தளர்ந்தேன், உடைந்தேன், புரள்வேன் என்று கூறுவதன் நோக்கமென்ன?

இவை அனைத்தும் இன்றி இன்பத்தை நுகர வேண்டுமானால் எந்த நேரத்திலும் இதனைத் தந்தவனை மறவாமல் இருந்திருத்தல் வேண்டும். அதனையே நான்காவதாக உள்ள பகுதியில், 'சுருள்புரி கூழையர் சூழலில் பட்டு இருள்புரி யாக்கையிலே கிடந்து எய்த்தனன்' என்று பாடவந்த அடிகளார் 'உன் திறம்

மறந்து' என்ற தொடரை இடையே பெய்வதன்மூலம் ஒரு மாபெரும் தத்துவத்தை விளக்கினாராயிற்று. இப்பெரு மக்கள் பாடல்களில், இதுபோன்ற சிறிய சொற்களை இடையே பெய்வதன்மூலம் நாம் சாதாரணமாகக் கூறிவரும் பொருளையே அடியோடு மாற்றிவிடுகின்றனர்.

உதாரணத்திற்கு ஒன்றைக் காணலாம். கோவலன் காலத்தில் பரத்தைவயிற் செல்லல், அவள் வீட்டில் தங்கியிருத்தல் என்பவை அனைத்து மக்களாலும் இயல்பு என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். காப்பியம் பாடிய இளங்கோவடிகளார் இதனை நன்கு அறிவார். எனவே, மாதவியிடம் கோவலன் சென்றது தவறு என்று கூற அவருக்குத் துணிவில்லை. அன்றைய சமுதாயம் முழுவதும் ஏற்றுக்கொண்ட ஒரு நிகழ்ச்சியை இவர் எவ்வாறு தவறு என்று கூறமுடியும்? ஆனாலும், இதனால் விளைந்த பெருங்கேட்டை எண்ணி, இதனைக் கண்டிக்க வருகிற இளங்கோ, மிக அற்புதமான முறையில் இதனை நிறைவேற்றுகின்றார். மாதவி இல்லம் புகுந்த கோவலன், அவளை விடுதலறியா விருப்பினனாகி அவளோடு வாழ்ந் தான் என்று கூறவந்த இளங்கோவடிகள், இத்தோடு நிறுத்தாமல் 'விடுதலறியா விருப்பினன் ஆயினன் வடுநீங்கு சிறப்பில் தன் மனையகம் மறந்தென்' (சிலம்பு. அரங்கேற்று—174-175) என்று பாடுவதால், அன்றைய சமுதாய வாழ்வையும் குறைகூறாமல் நடைபெற்ற தவற்றையும் ஒரு தொடரின் மூலம் எடுத்துக் கூறுகின்றார்.

அத்தொடர் 'தன் மனையகம் மறந்தென்' என்பதாகும் பரத்தையிடம் செல்பவன், தன் மனையகத்தை மறக்கக் கூடாது; ஒரேயடியாக அங்கே தங்கிவிடவும் கூடாது என்பது அக்காலநிலை. இந்த இரண்டு தவறுகளையும், கோவலன் செய்தான் என்றதை யாரையும் கடிந்து கொள்ளாமல் 'தன் மனையகம் மறந்து' என்ற தொடரால்

வெளிப்படுத்திவிட்டார். சிலப்பதிகார நிகழ்ச்சி முழுவதும் இந்த இரண்டு சொற்களின்மேல் கட்டப்பட்டிருக்கிறது.

இதேபோல மகளிர் மயக்கத்தால் வரும் துன்பத்தை விளக்கவந்த அடிகளார் 'உன் திறம் மறந்து' என்ற தொடரால் இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

410 ஆம் பாடல் முழுவதிலும் இறைவன் பெருமை விரித்துப் பேசப்பெறுகிறது. 'பெரும்பெருமான்' என்று தொடங்கியவர் அவன் எவ்வளவு பெரியவன் தெரியுமா என்பதற்கு ஓர் எல்லை வகுப்பவர்போல, மூன்றாம் நான்காம் அடிகளில் 'மலரோன், நெடுமால் அறியாமல் நின்ற அரும்பெருமான்' என்று பாடுகின்றார். இவ்வளவு பெரியவன் என்ன செய்தான் தெரியுமா? என் பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத் தந்தான். ஆனால், அதுபற்றி எனக்கொன்றும் தெரியாது. மிகச் சாதாரணமான நான் கூடத் தெரிந்துகொள்ளும் முறையில், நான்முகன் மால் அறியாதவர் என் மனத்தினுள்ளே வரும் பெருமானாக நான் காணுமாறு வந்தான். அதுவே அவனது எளிவந்த தன்மைக்கு (சௌலப்பியத்திற்கு) எடுத்துக்காட்டாகும்.

என்னுள் புகுந்து என்னைப் பெரும் பிச்சனாக்கிய காரணத்தால் அவன் உடையான் ஆயினான்; நான் உடைமையாயினேன்.

சாதாரணமாக, உலகியலில் வாழ்பவர்கள் நரகத்திற்குச் செல்லுதல் என்பதை நினைத்தவுடனேயே நடுங்குவர். ஆனால், தம்மை உடையானை யாரென்று தெரிந்து கொண்ட பிறகு, தாம் அவனுக்கே அடைக்கலமாகிவிட்ட பிறகு மிக்க பெருமிதத்தோடு, 'என்னை நீ அழைத்துக் கொண்டாலும் சரி, அல்லது நரகத்துள் பிடித்துத் தள்ளினாலும் சரி எது செய்யினும் அதனை ஏற்றுக் கொள்ளுகிறேன்' என்ற கருத்தில் 'கூவிடுவாய் கும்பிக்கே இடுவாய்' (415) என்றுபாடுகிறார்.

இந்த இரண்டில் எதுவாயினும் சரி, ஆனால் ஏதாவதொன்றை உடன் தருவாயேல் இதுவோ, அதுவோ என்ற என் மனக் குழப்பம் தீருமென்ற கருத்தில் 'நின் குறிப்பறியேன்' ஆதலால் 'பாவிடை ஆடு குழல்போல் கரந்து பரந்தது உள்ளம்' (415) என்று பாடுகிறார்.

ஆசைப் பத்து

அடிகளாருக்குத் தோன்றிய ஆசை இயல்பானது; எல்லை கடவாதது; எனவே, பெரும் பயன் விளைக்கக் கூடியது என்று இப்பதிகத்தின் முன்னுரையில் கூறப்பட்டுள்ளது.

அடிகளாரின் உடம்பிற்கும் கருவிகள், கரணங்கள் என்பவை உண்டு. உடம்போடு இயல்பாக அமைந்துள்ள இந்தப் பொறி புலன்கள், கரணங்கள் ஆகியவற்றை இன்ன இன்ன முறையில் செயல்படவிட ஆசைப்படுகிறேன் என்ற முறையில் அடிகளாரின் இப்பதிகம் அமைந்துள்ளது.

மனிதனின் முக்கியப் பகுதிகள் என்று சொல்லப்படுபவை மனம், மொழி, மெய் என்ற மூன்றுமாம். இவற்றுள் அனைத்தும் அடக்கம், அடுத்து உள்ளது மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்துமாம். மெய் தவிர ஏனைய நான்கும் மெய்யுள் அடங்குமேனும் அவற்றின் தனித்தன்மை மிகப் பெரியதாகும். ஆகவேதான், உடம்பு என்று சொல்லும்போது, இந்த நான்கு தவிர, கை, கால் மார்பு என்பவற்றைக் குறிக்கின்றோம்.

அடிகளாரின் ஆசைப் பத்து, ஒவ்வொரு பொறிக்கும் ஒரு பணியைத் தந்து, அதில் அப்பொறி முழுவதுமாக ஈடுபடவேண்டும், வேறு ஒன்றிலும் நாட்டம் கொள்ளாமல் அந்த அந்தப் பொறிகளுக்கிட்ட பணியிலேயே முற்றிலுமாக ஈடுபடவேண்டும் என்று பாடுகின்றார்.

மனம், மொழி, மெய் என்ற மூன்றையும் ஒரே விஷயத்தில் ஈடுபடுத்தி என்ன செய்யவேண்டும் என்பதை ஒரே பாடலில் குறித்துச்செல்வது நம்மைச் சுண்டி இழுப்பதாகும். 'கையால் தொழுது, உன் கழல் சேவடிகள் கழுமத் தழுவிக்கொண்டு' *(425)* என்பதில் மார்பும், கைகளும் அவன் திருவடியைத் தழுவவேண்டும் என்று கூறுவதால் மெய்க்கு உரிய பணியைக் கூறினாராயிற்று. 'எம்பெருமான் பெருமான் என்று வாயால் அரற்றி' என்பதில் வாய்க்குரிய பணியை வகுத்தாராயிற்று. 'அழல் சேர் மெழுகு ஒப்ப' என்பதில் உருக வேண்டிய பணியை மனத்திற்குக் கூறினாராயிற்று. இந்த ஒரு பாடலில் பொதுவாக மனம், மொழி, மெய் என்ற மூன்றுக்கும் மூன்று பணிகள் தரப்பெற்றுள்ளன.

ஆசைப் பத்தில் வரும் பத்துப் பாடல்களில் 'அப்பா காண ஆசைப்பட்டேன்' *(419)* என்றும், 'முத்தா உந்தன் முகஒளி நோக்கி முறுவல் நகை காண அத்தா சால ஆசைப்பட்டேன்' *(423)* என்றும், 'கடியார் சோதி கண்டு கொண்டு..... உன் பழ அடியார் கூட்டம் அடியேன் காண ஆசைப்பட்டேன்' *(426)* என்றும் வரும் இந்த மூன்று இடங்களையும் கூர்ந்து கவனிக்க வேண்டும். காண ஆசைப்பட்டேன் என்ற சொற்களைக் கண்டவுடன் நம்மையும் அறியாமல் பருவுடலிலுள்ள இந்த ஊனக் கண்களால் காண்பதையே அடிகளார் இங்குக் கூறியுள்ளார் என்று பொருள் செய்கிறோம்.

எந்த ஒரு தொடரையும் முன்னர்ப் பின்னருள்ள சொற்களோடும், தொடரோடும் வைத்துப் பொருள் காண வேண்டுமே தவிர, தனியே எடுத்துப் பொருள் கண்டால் சிக்கலை உண்டாக்கிவிடும். 'காண ஆசைப்பட்டேன்' என்றவுடன், ஊனக்கண்ணால் என்ற பொருள் மனத் திடைத் தோன்றுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு.

திருப்பெருந்துறையில் குருநாதரை ஊனக் கண்ணாலேயே முதலிற் கண்டு ஈடுபட்டவர் அடிகளார். அதேபோலத் தில்லைக்கு வந்து கூத்தனைப் பார்த்தவுடன் 'உடையாள் நடுவுள் நீயிருத்தி' (378) என்று பாடுமளவிற்கு ஊனக் கண் உதவியது உண்மைதான். திருக்கழுக்குன்றத்தில் கணக்கிலாக் கோலம் வந்து காட்டியதை ஊனக் கண்களால்தான் கண்டார். மனத்தாலோ, கற்பனையாலோ, உள்ளுணர்வாலோ அறிந்துகொள்ளுமாறு கணக்கிலாக் கோலம் காட்சி தந்திருப்பின் 'காட்டினாய்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்க மாட்டார்.

எனவே, திருப்பெருந்துறை, தில்லை, திருக்கழுக்குன்றம் ஆகிய மூன்று இடங்களிலும் கிடைத்த காட்சியை ஊனக் கண்களால்தான் கண்டார்.

இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு 'காண ஆசைப்பட்டேன்' என்று வரும் பகுதிகளுக்குப் பொருள் கூறத்தொடங்கினால் அப்பாடல்களின் முற்பகுதிகளோடு இப்பொருள் பொருந்தாது போய்விடும்.

இக்கருத்தில் பாடல்களை இனிக் காணலாம். 'அத்தா காண ஆசைப்பட்டேன் ஆதலால் குப்பாயம் புக்கு இருக்கிலேன் கூவிக்கொள்ளாய்' (419) என்றும், 'முத்தா உந்தன் முகவொளி நோக்கி முறுவல் நகை காண அத்தா சால ஆசைப்பட்டேன்' (ஆதலால் அதற்கு இடையூறாக உள்ள) 'இவ்வாழ்க்கை வைத்தாய்; எய்த்தேன் நாயேன்; இனி இங்கு இருக்கிலேன் (இப்பிறவியை) வாங்காய்' (423) என்றும், 'சிவபுர நகர்புக்குக் கடியார் சோதி கண்டுகொண்டு என் கண்ணிணை களிகூர... உன் பழ அடியார்கூட்டம் அடியேன் காண ஆசைப்பட்டேன்' (ஆதலால், அதற்கு இடையூறாகவுள்ள இந்த) 'செடியார் ஆக்கைத் திறம் அற வீசி' (காக்க வேண்டும்) (426) என்றும் பாடுகிறார்.

இந்த முறையில் மூன்று பாடல்களையும் கொண்டு கூட்டுச் செய்து பொருள் கண்டால் ஊனக் கண்களால் காணும் காட்சியை அடிகளார் இப்பாடல்களில் குறிக்கவில்லை என்பதை நன்கு புரிந்துகொள்ளலாம்.

இவ்வளவு பெரிய உதவிகளைச் செய்த இந்த உடம்பையும் கண்ணையும் ஒரு சேர ஒதுக்கிவிட்டு, இந்த மூன்று பாடல்களிலும் பருத்தன்மை கடந்த நிலையில் குருநாதரைக் காண வேண்டும் என்று குறிக்கவேண்டிய காரணம் என்ன? ஆழ்ந்து சிந்தித்தால் உண்மை விளங்கிவிடும்.

குருநாதரைத் தரிசிக்க உதவிய கண்கள், கழுக்குன்றில் கணக்கிலாக் கோலத்தைக் காண உதவிய கண்கள், உதவியது என்னவோ உண்மைதான். ஆனால், அந்த உதவியில் ஒரு பெருங்குறை இருந்தது. குரு தரிசனம், கணக்கிலாக் கோல தரிசனம் என்ற எதுவுமே நிலைத்திருக்கவில்லை. இவை இரண்டுமே கணப் பொழுதில் வந்து மறைகின்ற காட்சிகளாக அமைந்துவிட்டன. எனவேதான், கணப் பொழுதில் கிடைத்த ஆனந்தம், நீண்டு நிலைக்க வேண்டுமானால், அதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. இந்த மூன்று பாடல்களிலும் நிலைபேறில்லாத காட்சிகளையும், அதனைத் தரும் உடம்பையும் ஒதுக்கிவிட்டு, உயிரளவில் நின்று நிலையாக இக்காட்சியைக் கண்டு களிக்க வேண்டும் என்கிறார். அதனால்தான் இந்த மூன்று பாடல்களிலும் 'உடலை நீக்கி' என்ற கருத்துப் பேசப்பெறுகிறது.

பதிகத்தின் மூன்று இடங்களில் சில நிலைகளைக் கண்ணால் காணவேண்டும் என்று பாடியுள்ளார். அப்படிக் காணவேண்டும் என்று பேசுவது இந்த உடம்போடு கூடிய புறக்கண்களால் அன்று என்ற கருத்து மேலே விரித்துரைக்கப்பெற்றுள்ளது.

அடுத்து, இப்பதிகத்தில் செவிகள்பற்றி ஆறு இடங்களில் பேசப்படுகிறது. கண்களைப்பற்றிய பாடல்களை இப்பிறவிக்குரிய செயல் அன்று என்று பொருள்கண்டது போல, செவிக்குரிய செயல்களையும் இவ்வுடம்பு நீங்கிய பிறகு நடைபெறுகின்ற செயல்கள் என்று நினைக்கத் தொடங்கினால், அது தவறாக முடிந்துவிடும்.

ஆறு இடங்களில் 'நீ பேச நான் கேட்கவேண்டும்' என்று ஏன் பாடுகிறார் என்ற வினாவை எழுப்பினால் மனித மனத்தின் ஒரு விந்தையான பகுதியை அது வெளிப்படுத்தி நிற்கும். சிலருடைய குரல் எவ்வளவு கேட்டாலும் அலுப்புத் தட்டாது. இன்னும் சற்றுப் பேசமாட்டாரா என்ற ஆர்வத்தை மிகுதிப்படுத்தும். கேட்பவரைச் சுண்டியிழுக்கும் ஆற்றல் சிலருடைய சொல்லுக்கும் குரலுக்கும் உண்டு. இதனையே வள்ளுவப் பேராசான் 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்' (643) என்று கூறிச் செல்கிறார். சாதாரண மனிதர்களுடைய பேச்சுக்கே இத்தகைய பேராற்றல் உண்டு என்றால், சொல் வடிவமாகவும், சொல்லின் பொருள் வடிவமாகவும் இணைந்துள்ள ஒருவன், குருநாதர் வேடத்தை மேற் கொண்டு, குருந்தமரத்தடியில் அமர்ந்து பேசினால் அந்தப் பேச்சு எல்லா உயிரையும் பிணித்து ஈர்க்கும் பேராற்றல் வாய்ந்ததாய் இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ!

திருவாதவூரர் மணிவாசகராக மாறிய பிறகு குருநாதர் திருவாயிலிருந்து வெளிப்பட்ட சொற்கள் மூன்று. 'கோல மார்தரு பொதுவினில் வருக' என்பவையே அவை.

பொதுவாகக் கட்டளைச் சொற்கள் மனத்தில் கிளுகிளுப்பையோ, மகிழ்ச்சியையோ உண்டாக்கா. ஆனால், குருநாதரின் இந்தக் கட்டளைச் சொற்கள் மணிவாசகரைப் பெரிதும் ஈர்த்துவிட்டன. குருநாதர் வாயிலிருந்து வேறு சொற்கள் ஏதேனும் வாராவா என்ற நினைவில் அடிகளார் அமிழ்ந்திருக்கும் நிலையில் குருநாதரே மறைந்துவிட்டார்.

இப்பொழுது அடிகளாரின் மனம் இரண்டை இழந்து துன்புறுகின்றது. முதலாவது பரு வடிவுடன், கருணை ததும்பும் கண்களுடன், புன்சிரிப்பு மாறாத திருவாயுடன் காட்சிதந்த அந்தக் குருநாதர் வடிவம் இப்பொழுது மறைந்துவிட்டதே என்ற கவலை. இரண்டாவது, உள்ளவர்களைப் பிணித்து ஈர்க்கும் சொற்களைப் பேசும் குருநாதர் மறைந்துவிட்டதால் அந்தப் பேச்சை இனிக் கேட்கமுடியாதே என்ற கவலை.

இந்த நிலையில்தான் 'ஐயனே! நீ ஏதாவது பேச வேண்டும். அதை நான் காது குளிரக் கேட்கவேண்டும்' என்பதைப் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார். பாடல் ஆதலால் இந்த ஆறு இடங்களும் முன்பின்னாக அமைந்திருப்பினும் இவற்றை முறைப்படுத்திக் கண்டால் குருநாதர் என்ன என்ன சொற்களால் பேசவேண்டும் என்று அடிகளார் ஆசைப்படுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இப்பொழுது குருநாதர் மறைந்துவிட்டார். அவராக விரும்பிவந்து காட்சி தந்து ஆண்டுகொண்டாரே தவிர, அடிகளார் விருப்பத்திற்காக எதையும் செய்யவில்லை எனவே, மீட்டும் அவராக விரும்பி வந்தாலன்றி அடிகளார் எத்தனை கூப்பாடு போட்டாலும் அவர் வரப் போவதில்லை என்பதை அடிகளாரே தெரிந்துள்ளார். மறைந்துவிட்ட குருநாதரை மீட்டும் வருக என்று வேண்டிக்கொள்ள அடிகளாருக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஆனால், தேனினும் இனிய அந்தக் குருநாதரின் குரலை, செவிவழிப் புகுந்து நெஞ்சை நிரப்பி உயிரையும் உண்ட அந்தக் குரலை, மீட்டும் மீட்டும் கேட்கவேண்டும் என்ற தம் விருப்பத்தைத்தான் இந்த ஆறு இடங்களில் வெளிப்படுத்துகின்றார்.

குருநாதர் பேசுவது என்றால், அது இருவகையில் அமையலாம். ஒன்று, அவர் விருப்பத்தை வெளியிடும்

சொற்களாக அவை அமையலாம். பொதுவினில் வருக என்ற ஆணையில் அது நிறைவேறிவிட்டது. அடுத்தது, அடிகளாரின் விருப்பத்திற்கேற்ப ஏதாவது பேசலாம். என்ன என்ன சொற்களைக் குருநாதர் பேசினால் தம் செவி, உள்ளம், உயிர் என்பவை களிப்படையும் என்று அடிகளார் நினைத்தாரோ, அவற்றை வரிசைப்படுத்தி, 'ஐயா! நீ இந்தஇந்தச் சொற்களைப் பேசவேண்டும்; என் காதும், உயிரும் குளிர அவற்றை நான் கேட்கவேண்டும்' என்ற முறையில் வரிசைப்படுத்தி ஆறு விதமான தொடர்களை அடிகளாரே பேசுகின்றார். அவையாவன,

'கூவிக்கொள்ளாய் கோவேயோ' (419)

'சிறுகுடில் இது சிதையக் கூவாய் கோவே' (420)

'ஆ ஆ என்ன ஆசைப்பட்டேன்' (420)

'அளியன் என்ன ஆசைப்பட்டேன்' (422)

'அஞ்சேல் என்ன ஆசைப்பட்டேன்' (427)

'இங்கே வா என்று அங்கே கூவும் அருளைப் பெறுவான்ஆசைப்பட்டேன்' (418)

என்பவையாம்.

இந்த முறைவைப்பில், அடிகளாரின் ஆசை முளையாகத் தொடங்கி ஆறாவது கட்டத்தில் ஒரு பெரிய விருட்சமாகவே விரிந்துவிடுகிறது.

குருநாதரோ எதிரே இல்லை. அவர் எங்கிருக்கிறார் என்று கண்ணால் கண்டுபிடிக்கவும் முடியவில்லை. எதிரே வருமாறு வேண்டிக்கொள்ள அடிகளாருக்கு உரிமையும் இல்லை. அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருக் கின்ற குருநாதர் கண்ணுக்குத் தென்படாவிட்டாலும், எங்கோ இருந்துகொண்டு தம்மைக் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறார் என்ற எண்ணம் அடிகளாரின் மனத்தில்

வலுவாக நிலைபெற்றுவிட்டது. எனவே, 'ஐயா! இன்னும் நீ எங்கிருக்கிறாய் என்று தெரியவும் இல்லை. ஒரு கூக்குரல் இடுவாயேயானால் (கூவிக்கொள்ளாய்) நீ அண்மையில் தான் இருக்கிறாய் என்ற தென்பு ஏற்படும்.

'ஐயா! உன் குரலைக் கேட்கவேண்டும் என்று ஏன் விரும்புகின்றேன் தெரியுமா? நைந்துபோன என் உள்ளத்திற்கு உன் குரல் ஒரு தென்பைக் கொடுக்கும் என்பதுமட்டுமன்றித் திருப்பெருந்துறையில் உன்னிடமிருந்து வந்த மூன்று சொற்கள் திருவாதவூரனாகிய என்னை மணிவாசகனாக மாற்றியதை அறிவேன். இப்பொழுது மறுபடியும் உன் குரல் கேட்டால் "சீவார்ந்து .....சிறுகுடில் இது சிதையும்" என்னும் உறுதியுடையேன். ஐயா! இதுவரை நீ என் கண்முன்னர் வராவிட்டாலும் என்னை நெருங்கி வந்துள்ளாய் என என் உள்மனம் சொல்கிறது.

'நீ எங்கிருந்தாலும் சரி, நான் படும் பாட்டைப் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறாய்? இப்படி ஒருவன் துன்பப்பட்டுக்கொண்டு இருக்கிறானே என்று நினைந்து, 'ஆஆ' (ஐயோ பாவம்) என்று நீ கூறுவாயேயானால் அதைக் கேட்க நான் ஆசைப்படுகின்றேன்'.

'இன்னும் ஆஆ என்று நீ கூறவில்லை. என்னுடைய துன்பமோ அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுதாவது என்னைப் பார்த்து, 'அளியன்' (இரக்கத்துக்குரியவன்) என்று நீ கூற அதைக் கேட்க ஆசைப்படுகின்றேன்.

'ஐயனே! நிலைமை முற்றிவிட்டது. என்னைத் தாங்குவார் யாருமில்லை. இப்பொழுது 'நீ அளியன்' என்று சொல்லிப் பயனில்லை 'அஞ்சேல்' என்று கூறவேண்டும். அவ்வாறு நீ கூற அது என் காதுகளில் விழுந்தால் உறுதியாக என்னைக் காக்க வருவாய் என்ற நம்பிக்கை ஏற்படும்.

'அஞ்சேல் என்றும் நீ கூறாமையால் நீயே வந்து என்னைக் கைதூக்கிவிடுவாய் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டேன். நான் இருக்கும் இடத்திற்கு நீ வரப்போவதில்லை என்று உணர்ந்துவிட்டேன். ஆதலால், இறுதியாக ஒரு வேண்டுகோளை வைக்கின்றேன். இனி உள்ளது ஒரேயொரு வழிதான். நான் உன்னைநோக்கி வரவேண்டும். அதற்கு உன் அருள் உதவியே ஆகவேண்டும். எனவே, அருள்கூர்ந்து 'இருளைத் துரந்திட்டு இங்கே வா' என்று நீ கூறுவாயேயானால் உன் ஆணையின் துணைகொண்டு நான் அங்கே வர ஏதுவாகும்' என்கிறார்.

கண்ணுக்கும் காதுக்கும் குறிப்பிட்ட பணிகளை வைத்ததுபோல வாய்க்கும்கூட ஒரு பணியை வைக்கிறார் அடிகளார். அது என்னவெனின் 'பேர் ஆயிரமும் பரவித் திரிந்து எம்பெருமான் என ஏத்த ஆசைப்பட்டேன்' (424) என்றும், 'எம்பெருமான் எம்பெருமான் என்று என்தன் வாயால் அரற்றி' (425) என்றும் பாடியுள்ளமை நோக்கத்தக்கது.

மேலே காட்டிய பாடல்களில் முறையே வாயால் ஏத்துதலும், வாய்விட்டு அரற்றுதலும் இடம்பெறுகின்றன. ஏத்துதுதல் வேறு; அரற்றுதல் வேறு. ஏத்துதலில் மனம், சித்தம் முதலிய கரணங்கள் தொழிற்படுகின்றன. அதன் பயனாக இறைவனுடைய பெருமையும், அவன் நாமங்களின் சிறப்பும் மனத்திடை வரிசையாக வருகின்றன. இறைவனுடைய ஒவ்வொரு பெயரும் அவனுடைய ஒவ்வொரு செயலையோ கருணையையோ ஆற்றலையோ குறிப்பது ஆதலின் அந்த ஒவ்வொரு பெயரும் நினைவுக்கு வரும்போது, அந்தப் பெயருக்கு உடையவன்மாட்டு. பக்தியும் அன்பும் மனத்திடை ஊறுகின்றன. ஆனால், ஒவ்வொரு நாமமாகச் சொல்லத் தொடங்கியவுடன் மனத்திடை அன்பு கனியக் கனியப் பெயர்களை வேறு படுத்தித் தனித்தனியாகச் சொல்லும் ஆற்றல் குறையவே,

'எம்பெருமான்' என்ற ஒரு சொல் எஞ்சுகிறது. இந்நிலையில் மனம் முழுதும் அன்பினால் நிறைந்திருப்பினும் 'தான்' என்ற நினைவு தணியவில்லை. அங்கே நானும் உள்ளேன்; ஏத்தப்படுபவனும் உளன்; ஏத்துதலாகிய செயலும் உளது. அதனையே 'பேர் ஆயிரம் பரவித் திரிந்து எம்பெருமான் என ஏத்த' என்று பாடுகிறார் அடிகளார்.

இந்தச் செயல் நடைபெற நடைபெற அங்கே ஒரு புதுமை விளைகின்றது. நான், அவன், ஏத்தல் என்ற மூன்றும் இருந்த இடத்தில் மெள்ளமெள்ள 'நான்' மறைகிறது. சற்று நேரத்தில் ஏத்தப்படுபவனும் மறைந்து விடுகிறான். 'ஏத்தல்', தன் தன்மையை இழந்து 'அரற்றலாக' மாறிவிடுகிறது. இந்த முதிர்ந்த வளர்ச்சியைத்தான் 'எம்பெருமான் பெருமான் என்று வாயால் அரற்றி' என்று பாடுகிறார்.

நானை இழந்த நிலை இது என்று கூறினோம். ஆனால், 'என்தன் வாயால் அரற்றி' என்று பாடல் உளதே! 'எந்தன்' என்ற சொல் எப்படிப் புகுந்தது? 'நான்' இல்லாதவிடத்து 'எந்தனுக்கு' இடமில்லை. இங்கு 'எந்தன்' என்ற சொல் நின்று வற்றும் (பொருள்கொள்ளப்படாத) சொல்லாகும். அச்சொல்லை விட்டுவிட்டுப் பாடலைப் படித்தாலும் எவ்விதத் தடங்கலுமின்றிப் பொருள் கிடைத்துவிடும். 'எம்பெருமான் பெருமான் என்று வாயால் அரற்றி' என்பதே பொருள்கொள்ளப் போதுமானது.

உலகியலிற்கூட ஒருவன் அரற்றத் தொடங்கினால், தொடக்கத்தில் நான் இருந்து, போகப்போக நான் மறைந்து விடுகிறது. அரற்றும்போது எழுவாய் பயனிலையோடு கூடிய சொற்றொடர்கள் வெளிவருவதில்லை. மனம் முதலியவை தமக்குரிய நினைக்கும் தொழிலை விட்டுவிட்டுச் செயலிழந்துவிடுக்கின்றன. அதனாலேயே அரற்றுபவர்கள் ஒரே சொல்லைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண் டிருப்பார்கள். இந்த ஆழமான மன நிலையைத்தான்

'எம்பெருமான் பெருமான் என்று வாயால் அரற்றி' என்கிறார். பேர் ஆயிரம் பரவி ஏத்திய அடிகளார், அந்த ஆயிரத்தையும் மறந்து அரற்றத் தொடங்கியவுடன் 'எம்பெருமான்' என்ற ஒரே சொல்தான் எஞ்சிநிற்கிறது.

கண்ணைப்பற்றிப் பேசும்பொழுது இப்பிறப்பைக் கடந்துள்ள நிலைபற்றிப் பேசினாரல்லவா? அதேபோல அரற்றுகின்ற நிலையும் இப்பிறப்பில் நடைபெறுவதை அவர் பேசவில்லையோ என்று நினைக்கத் தோன்றுகிறது. 424 ஆம் பாடலை மறுபடியும் ஒருமுறை நோக்குதல் நலம். 'வாரா உலகம் தந்து வந்து ஆட்கொள்வானே' என்று கூறியதால் இப்பிறப்பைக் கடந்த நிலையை நினைத்தே பேசுகிறார் என்று கொள்வதில் தவறில்லை.

இதுவரை, மேலே கூறியுள்ளவை வாலாயமாகப் பொருள் கூறுபவர்கள் கருத்துக்கு மாறாக அமைந்திருத்தலைக் காணலாம். பிறப்பை நீக்கவேண்டுமென்று இப்பாடல்களில் வரும் பகுதிகளைத் தனியே எடுத்துப் பொருள்கூறிவிட்டு அதனுடன் எவ்விதத் தொடர்பும் இல்லாமல் பின்னர் வரும் பகுதிக்கு உரைகூறுவது பொருந்துமாறு தெரியவில்லை.

பொறி புலன்களுக்கு இத்தனை பணிகளை இடுகின்ற அடிகளார், மேலுள்ள இரண்டு அடிகளில் பிறப்பைச் சாடி இது ஒழியவேண்டுமென்று பாடுகின்றார் என்றால், இந்த இரண்டு கருத்துக்களுக்குமிடையே ஏதாவது ஒரு தொடர்பு இருத்தல்வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை.

குரு தரிசனம் முதலிய நிகழ்ச்சிகள் அனைவருக்கும் எளிதாகக் கிடைக்காத ஒன்று. அதனால் அடிகளார் பெற்ற இறையனுபவம் முன்பின் காணாததும் ஈடிணை இல்லாததுமாகிய ஒன்று.

ஆனால், இத்தனையும் ஒரு விநாடியில் மறைந்து விட்டதாலும், அடியார்களோடு தாம் போகமுடியாமை யாலும் இந்த உடம்பின்மேலும் பிறப்பின்மேலும் தீராத

வெறுப்புத் தோன்றுகிறது அடிகளாருக்கு. இதன் பிறகு வேறு பிறப்புத் தமக்கில்லை; சிவபுரம் செல்லவேண்டியது தான் அடுத்த கட்டம் என்பதை நன்கு அறிந்துவிட்டார் ஆதலின், சிவபுரத்தில் சென்றபிறகும் கண்கள் அவனைக் காணவேண்டும், வாய் அவன் புகழ் பேசவேண்டும், செவிகள் அவன் பேசும் சொல்லைக் கேட்கவேண்டும், கைகளால் அவன் திருவடிகளைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று அடிகளார் பாடுவதில் வியப்பொன்றுமில்லை.

மேலே கூறிய கருத்துக்களுக்கு மாறாக இந்தப் பிறப்பிலேயே தலைவனிடமிருந்து ஒரு சொல்லைக் கேட்கவேண்டும் என்று பாடுகிறார் அடிகளார். அதற்கு ஒரு நல்ல காரணத்தையும் கற்பிக்கின்றார். முன்னர்ப் பல முறை எடுத்துக்காட்டியபடி மனம் ஒரோவழி சண்டித்தனம் செய்கின்றது. இந்தச் சண்டித்தனம் பாலுணர்வுபற்றிய தாகும். அதிலிருந்து மீள்வது கடினம். என்பதை 'வலையில் அகப்பட்டு நாயேன் நைஞ்சேன்' (427) என்ற தொடர்களால் குறிப்பிடுகின்றார்.

வலையில் அகப்பட்ட ஒரு பொருள் மீளவேண்டுமே யானால் அது மிகமிகக் கடினமான தொன்றாகும். இந்த வலையை அறுத்து, காப்பாற்றக்கூடியவன் ஒருவன்தான் உண்டு. அவன் எப்பொழுது வருவான், எப்படிக் காப்பாற்றப் போகிறான், என்பதெல்லாம் வலைக்குள் அகப்பட்டு இருப்பவர்க்குத் தெரிவதற்குக் காரணமில்லை. எனவே, நம்பிக்கை இழந்து நைந்துகொண்டிருக்கும் ஒருவன் காப்பாற்றப்படுவதற்கு முன்னர், இதோ உதவி வந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணம் அவன் மனத்திடைத் தோன்றினால் உயிர்வாழ ஏதுவாக இருக்கும். இந்த நம்பிக்கை தரும் சொல்லைத்தான் 'அஞ்சேல்' என்ற சொல்லால் குறிக்கின்றார் அடிகளார். பவளத் திருவாயால் 'அஞ்சேல்' என்று கூறிவிட்டால் விரைவில் உய்கதி கிடைக்கும் என்ற நம்பிக்கை வளர்ந்து, வலையிலிருந்து மீள உதவியாக இருக்கும்.

அதிசயப் பத்து

இப்பத்திற்கு அதிசயப் பத்து என்ற பெயர்வந்த காரணத்தை எளிதில் அறிந்துகொள்ளலாம். ஒவ்வொரு பாடலும் 'அடியரிற் கூட்டிய அதிசயம் கண்டாமே' என்று முடிவதைக் காணலாம். பத்தாவது பாடலில் அடியரொடு கூட்டியதற்கு அப்பாலும் ஒன்றைச் செய்தான்; அதுவும் ஓர் அதிசயம் என்கிறார் அடிகளார்.

தொன்றுதொட்டு இன்றுவரை 'அதிசயம்' என்ற சொல்லை ஏறத்தாழ ஒரே பொருளில்தான் பயன்படுத்தி வருகிறோம். எதிர்பாராதது நடந்தால் அது ஓர் அதிசயம்; எதிர்பார்த்தற்கு மாறாக ஒன்று நடந்தால் அது ஓர் அதிசயம்; கிடைக்காது என்று அறுதியாக நம்பப்பட்ட பொருள் கிடைத்தால் அது ஓர் அதிசயம் என்ற முறையில் அதிசயத்தின் பொருளை ஓரளவு விளங்கிக் கொள்ள முடியும்.

'இவ்வழியிற் சென்றால் இறுதியிலுள்ள படுகுழியில் விழ நேரிடும்' என்று அறிவிப்புப் பலகை அறிவிக்கின்றது. அருகே நிற்பவர்கள் 'இவ்வழியில் போனவர்கள் யாரும் கரை சேர்ந்ததில்லை; எனவே, போகவேண்டா' என்று நெடுங்காலமாகக் கூறிவருகின்றனர். அப்படியிருந்தும் அந்த வழியில் சென்ற ஒருவர் தாம் கரை சேர்ந்ததோடு மட்டு மல்லாமல் தம்மைப் பின்பற்றி வருபவர்களையும் கரை சேர்த்தார் என்றால், இது அதிசயத்திலும் அதிசயமல்லவா?

இந்த அடிப்படையை மனத்துள் வாங்கிக்கொண்டு, அதிசயப் பத்தில் வரும் (435 ஆம் 436 ஆம் பாடல்கள் தவிர ஏனைய) எட்டுப் பாடல்களையும் வரிசையாகக் கண்டால் அடிகளார் அதிசயம் என்று கூறுவது முற்றிலும் உண்மையே என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

மெய்ந்நெறி கண்ட ஞானிகள் அனைவரும், ஒருசிலர் தவிர, இந்த உடம்பைப் பொத்தை என்றும், ஊன் சுவர் என்றும், புழுப் பொதிந்து உளுத்து அசும்பு ஒழுகிய பொய்க்கூரை என்றும், இருள் திணிந்து எழுந்திட்டது ஓர் வல்வினைச் சிறு குடில் என்றும் கூறிப்போயினர். இந்த உடம்பை ஒழித்தாலொழிய உய்கதி அடைய முடியாது என்பதே அவர்களின் வாதமாகும்.

ஆனால், இதற்கு முற்றிலும் முரணாக ஒரு செயல் நடைபெற்றது என்று அடிகளார் பேசுகிறார். தம்மைப் பொறுத்தவரையில் இந்தக் கேவலமான உடம்பை மெய்யென்று நம்பி வாழ்ந்ததாகவும், அதுபற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் தம்மை ஆண்டு அடியாரில் கூட்டியது ஓர் அதிசயம் என்பதாகவும் அடிகளார் கூறுகின்றார்.

உடம்பை மெய்யென நம்பி அவர் என்ன செய்தார்? தமக்கு உய்கதி தரக்கூடியவன் இன்னாரென்று அறிந்து மனத்திடை உருகி இறைவனை வழிபட்டிருக்க வேண்டும். மனத்திடை உருக்கம் கொள்ளாமல் போனது ஒரு தவறு. அதற்குமேலும் ஒரு படி சென்று 'மடவரலியர் தங்கள் திறத்திடை' *(428)* நைந்தார்.

தலைவனை நினைந்து உருகாமல் போனாலும் போகட்டும்; நீதி, நேர்மை, நடுநிலை என்பவற்றை அறிவு கொண்டு ஆய்ந்திருக்க வேண்டும். தாமே இதனை ஆய வாய்ப்பில்லை என்றாலும், இதனை ஆய்பவர்கள் தொடர்பையாவது மேற்கொண்டிருக்க வேண்டும். இவை இரண்டையும் செய்யவில்லை என்கிறார்.

நீதியை நினைந்து அறிவது அறிவின் செயலாகும். அஃதின்றேனும் உணர்வின் செயலாகவுள்ள ஈடுபாடு, பக்தி என்பவற்றையாவது கைக்கொண்டிருக்கலாம். அதுதானும் செய்யவில்லை என்பதைப் 'பரவுவார் அவர் பாடு சென்று அணைகிலேன்' *(432)* என்று கூறுகிறார். இறையடியார்களோடு

கூடிச்சென்று அதன் பயனைப் பெறமுடியாவிட்டாலும் போகட்டும், இறைவனைப் பரவுகின்றவர் செயலைப் பார்த்து அவர்களைப்போல் ஈடுபாடு கொள்ளாவிடினும் அவர்கள் செயலையாவது தாமும் செய்திருக்கலாமே! அவர்கள் செயல்களாவன யாவை? 'பல் மலர் பறித்து' அவன் திருவடிகளில் சாத்தி ஏத்துதலே அவர்கள் செயலாகும். அதனையாவது செய்திருக்கலாம். ஆனால், அதைக்கூடச் செய்யவில்லை என்கிறார் அடிகளார்.

இவையொன்றும் செய்யாவிடினும் ஐந்தெழுத்தை யாவது நினைந்திருக்க வேண்டும்; அதுவுமில்லை. கலை ஞானியரோடு பழகும் நல்வாய்ப்பையும் தம் அறிவுக் குறைவால் இழந்தவிட்டதாகக் (433) கூறுகிறார்.

மேலே கூறியவற்றையெல்லாம் ஒருங்குவைத்து எண்ணிப் பார்த்தால் தாம் சில தவறுகளைச் செய்ததாக அடிகளார் பேசுவதைக் காணலாம். அவையாவன உடம்பை மெய் என்று கருதியது; பொறி புல ஈடுபாட்டால் மகளிர் மையலில் வீழ்ந்தது என்பனவாம். இவை இரண்டும் உடம்பு பற்றியன.

ஆக, உடம்பாலும், மனத்தாலும், அறிவாலும், உணர்வாலும் தவறுகளைச் செய்த தம்மை, இறைவன் ஆண்டுகொண்டதே ஒரு பெரிய அதிசயம். அதைவிடப் பெரிய அதிசயம், மெய்யடியார்களோடு தம்மைச் சேர்த்துக்கொண்டது என்கிறார்.

அரு நரகில் வீழ்வதற்கு விரைவாகச் சென்று கொண்டிருந்த தம்மைத் தடுத்து ஆட்கொண்டு அடியரில் கூட்டியது அதிசயத்திலும் அதிசயம் என்ற வியப்பில் மகிழ்ந்தார். அடிகளாரின் அடிமனத்தில் இந்த மகிழ்ச்சியின் ஊடே ஒரு பெருங்குறை தோன்றி, விரைவாக வளர்ந்து விடுகிறது. இத்தனை தவறுகள் தம்மிடம் இருந்தும், அடியரில் கூட்டியது அதிசயம்தான். என்றாலும், கூட்டியது

ஏன் தொடரவில்லை என்ற வினா விஸ்வ ரூபம் எடுக்கின்றது.

அடியரில் கூட்டிய அதிசயம் தொடராமைக்குரிய காரணத்தைச் சிந்திக்கத் தொடங்கிய அடிகளாருக்குச் சில உண்மைகள் தெற்றெனப் புலப்படுகின்றன. பாலுணர்வு முதல், நீதியை அறியாமல் இருப்பது, பரவுவார் பின்செல்லாமல் இருப்பது, மலர் பறித்து இட்டு இறைஞ்சாமல் இருப்பது, ஐந்தெழுத்து ஓதாமல் இருப்பது ஆகிய காரணங்களால் ஒருவேளை குருநாதர் விட்டுச் சென்றுவிட்டாரோ என்ற ஐயம் தோன்றலாயிற்று. ஆனால் இவையெல்லாம் இருக்கும் பொழுதுதானே, வலியவந்து தம்மைப் பிடித்து ஆண்டார்; அடியரில் கூட்டினார் என்றால், அது தொடராமைக்குக் காரணம் இவையல்ல என்ற முடிவிற்கு வருகிறார். பின்னர் எது காரணம் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு, இந்த உடம்போடு இருப்பதுதான் காரணம் என்ற முடிவிற்கு வருகிறார். ஆகவே, உடம்பின் மேல் வெறுப்புப் பெரிதாக வளர்ந்துவிடுதலின் 'பொத்தை ஊன் சுவர்' (434) என்று பாடத் தொடங்கிவிடுகிறார்.

அடிகளாரின் ஆழ்மனத்தில் தோன்றிய இந்தப் போக்கு, மிகவும் ஆபத்தானது. அவன் செத்திடப் பணிக்கவில்லை என்றால், தாமே அதனைச் செய்தாலென்ன என்ற தவறான முடிவிற்கு அவர் சென்று விடக்கூடும். அந்த நிலையில், கூத்தன் தலையிட்டு, அவர் மனநிலையை எப்படித் திசைமாற்றுகிறான் என்பதைச் சற்று விரிவாகக் காண்டல் நலம்.

'பொத்தை ஊன் சுவர்' என்ற பாடல் முதல் 'இருள் திணிந்து எழுந்திட்டது' வரையுள்ள (434-437) நான்கு பாடல்களையும் தனியே ஒருமுறை படித்தால், சில சிந்தனைகள் தோன்றுவதைக் காணலாம். 434, 437 ஆகிய இரண்டு பாடல்களிலும் இந்தப் பரு உடல் மிக இழிவாகப் பேசப்படுதலைக் காணலாம்.

'பொத்தை ஊன் சுவர் புழுப் பொதிந்து உளுத்து அசும்பு ஒழுகிய பொய்க்கூரை' என்ற அளவிற்கு விரிவாக உடலைக் கேவலப்படுத்தி அடிகளார் பாடுகின்றார். அமைச்சராக இருந்த ஒருவர் மணிவாசகராக மாறும்போது வேறு உடம்பைப் பெற்றாரா? இல்லையே! இந்த உடம்போடுதானே அடியார் கூட்டத்தின் நடுவே இருக்குமாறு செய்தார் குருநாதர்? இந்த உடம்போடு ஒட்டிய தலையில்தானே குருநாதர் தம் திருவடிகளை வைத்துத் தீட்சை செய்தார்? அன்றியும் எற்புத் துளைதொறும் அமுத தாரைகள் புகுமாறு செய்தார்? 'பொதுவினில் வருக' என்று ஆணையிட்டபோது இந்த உடம்புடன்தானே வருக என்றார்? 'தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான், தானே வந்து எனது உள்ளம் புகுந்தான்' *(திருவாச:555)* என்று பாடினாரே, அந்த உள்ளம் எங்கே இருந்தது? இந்த உடம்பினுள்தானே இருந்தது!

'சிந்தனை நின்தனக்கு ஆக்கி' *(திருவாச:30)* என்ற பாடலில் 'கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி வாக்கு உன் மணி வார்த்தைக்கு ஆக்கி, ஐம்புலன்கள் ஆர வந்தனை' என்று இவர்தாமே பாடியுள்ளார்?

மேலே கூறிய அத்தனை இடங்களிலும் இந்த உடம்பால் பெற்ற பயன்களை விரிவாகக் கூறும் அடிகளார், திடீரென்று 'பொத்தை ஊன் சுவர்' என்று பாடுவது ஏன்?

இந்தப் பாடலின் இறுதியிலும், இப்பாடல் அமைந்துள்ள அதிசயப் பத்துப் பதிகத்தின் ஒன்பது பாடல்களிலும், 'ஆண்டு தன் அடியரில் கூட்டிய அதிசயம் கண்டாமே' என்று பாடுகிறார். ஆண்டுகொண்டது உண்மை; அடியரில் கூட்டியது உண்மை. யாரை? அடிகளாரைத்தானே! அப்படியானால் அடியரில் கூட்டுவதற்காக வேறு ஏதாவது ஒரு சரீரத்தைத் தந்தாரா?

இல்லையே! இந்தச் சரீரத்தோடுதானே அடியரின் இடையே அமர்ந்திருந்தார்? அப்படியானால் அடியரின் இடையே அமர்வதற்கு, எவ்வளவு மட்டமானதாக இருப்பினும், இந்தச் சரீரம் தடையில்லை என்ற நினைவு, இப்பாடலைப் பாடி முடித்தவுடன் அடிகளாருக்கு வந்திருக்க வேண்டும். இவ்வளவு தூரம் இந்த உடலைப் பற்றி நொந்துகொள்ள வேண்டிய காரணமென்ன? அடியார் கூட்டத்தோடு சேர்ந்து சிவபுரம் செல்ல முடியாமற் போனதற்குக் காரணம், இந்த உடம்புதான் என்ற எண்ணம் தோன்றியவுடன், தடையில்லை என்று நினைத்த இதே உடம்பை இழித்தும், பழித்தும் பாடுகிறார்.

இந்த நிலை நீடித்தால் இந்த உடம்பைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மீதூர, அடிகளாரின் மனம் அதே வழியில் செல்லத் தொடங்கிவிடும். சிக்கலும் இக்கட்டும் நிறைந்த இந்த மனநிலையிலிருந்து அடிகளார் திரும்பியாக வேண்டும். அவர்வழியே விட்டால் அது நடைபெறாது என்று அறிந்த கூத்தன், சில விநாடிகள் பின்னோக்கிப் பார்க்கும் ஆற்றலை, (hind sight) அடிகளாருக்கு வழங்குகிறான்.

இப்பொழுது இந்த உடம்போடு இருக்கும் தாமேதான், ஒரு காலத்தில் கூத்தனின் திருவடியை இணைபிரியலாகாத ஒருவராக இருந்ததை அடிகளார் காண்கிறார். அதே கூத்தன்தான் தம்மை இந்த உடலுள் புகுத்தினான் என்பதையும் உணர்கின்றார். எனவே, இந்த உடம்பு வெறுக்கத்தக்க ஒன்றன்று. இந்த உடம்பினுள் உறுபொருள் அவன்தான் என்பதை உணர்கின்றார். நறுமலரில் இருந்து எழும் நாற்றம் அனுபவிக்கப்படலாமே தவிரப் பற்றக்கூடிய ஒன்றன்று என்ற நினைவு வந்தவுடன் 'பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்' (436) அவன் என்பதை உணர்கின்றார். பற்ற முடியாத அந்த நறுமணம் மலரிடத்துச் சென்று தங்குவதுபோல, பற்ற முடியாத

இந்தப் பரம்பொருள் உற்ற ஆக்கையில் தங்கியுள்ளது என்ற உணர்வு தோன்றியவுடன் இந்த ஆக்கை பழிக்கத் தகுந்ததன்று என்ற மெய்யறிவு பிறக்கின்றது.

இதுவரை அவருடைய பின்னோக்குப் பார்வையை அனுமதித்த கூத்தன், அதற்குத் தடை விதித்துவிட்டான். கனவிலிருந்து விழித்து எழுபவன் கனவை மறப்பதுபோல 435ஆம், 436ஆம் பாடல்களில் சொல்லப்பெற்றவற்றை அறுதியாக மறந்துவிடுகிறார் அடிகளார். 428 ஆம் பாடல் முதல், 434 ஆம் பாடல் வரை ஏழு பாடல்களில் உடம்பின் செயற்பாடுகளையும் உடம்பையும் பழித்துக் கூறிய அடிகளார் மறுபடியும் இறுதிப்பாடலில் (437) 'இருள் திணிந்து எழுந்திட்டது ஓர் வல்வினைச் சிறுகுடில்' என்று மீண்டும் உடம்பைப் பழித்துப் பாடத் தொடங்கிவிட்டார்.

அதிசயப் பத்தில் 434 ஆம் பாடல் அடிகளாரின் போக்கில் ஒரு திருப்புமுனையாக (turning point) அமைந்துள்ளது. உடனே தில்லைக்கூத்தன் பின்னோக்கிப் பார்க்கும் ஆற்றலை அடிகளாருக்கு வழங்க, 435ஆம் 436ஆம் பாடல்கள் வெளிவருகின்றன. அந்தத் திருப்புமுனை ஆபத்துத் தீர்ந்துவிடுகிறது; பின்னோக்கிப் பார்க்கும் ஆற்றலைக் கூத்தன் திரோதான சக்தியால் மறைத்து விடுகிறான். 434ஆம் பாடலைப் பாடிய அதே அடிப் படையில் 437ஆம் பாடல் தோன்றுவதைக் காணலாம்.

இதே போன்றதொரு சிக்கல் மறுபடியும் தோன்ற, பின்னோக்கிக் காணும் சக்தியை, கூத்தன் வழங்குகின்றான். இதன் பயனாக 'உருத் தெரியாக் காலத்தே' (திருவாச:477) என்று தொடங்கும் கண்ட பத்துப் பதிகப் பாடல் வெளிப்படுகிறது. கூத்தனின் இதே திரோதான சக்தி மீட்டும் பணிசெய்ய, 'கல்லாத புல்லறிவில் கடைப்பட்ட நாயேனை' (478) என்றும் பாடல் அடுத்து வெளி வருவதையும் இங்கு ஒப்புநோக்கலாம்.

புணர்ச்சிப் பத்து

புணர்ச்சி பத்திலுள்ள பத்து பாடல்களிலும் புணர்தல் என்ற சொல் ஒருங்கிணைதல், நெருங்கியிருத்தல் என்ற பொருளிலேயே பேச பெறுகிறது.

பத்து பாடல்களிலும் இது பேச பெற்றிரு பினும் முன்பின்னாகச் சொல்ல பெற்றிருக்கும் தொடர்களை பின்வரும் முறையில் வரிசை படுத்திக் க டால் பயனுடையதாக இருக்கும்.

புரிந்து நிற்பது என்றுகொல்லோ (443)

என்பது ஒரு நிலை

புக்கு நிற்பது என்றுகொல்லோ (445)

என்பது ஒரு நிலையாகும்.

'நானாவிதத்தால் கூத்தும் நவிற்றி' தன்னை மறந்து இருப்பது என்று கொல்லோ (445)

என்பது ஒரு நிலை

புடைபட்டு இருப்பது என்றுகொல்லோ (438)

என்பது ஒரு நிலை

புகழப் பெறுவது என்றுகொல்லோ (442)

போற்றிப் புகழ்வது என்றுகொல்லோ (439)

பாதப் போதாய்ந்து அணைவது என்றுகொல்லோ (446)

பாதப் பூப்போது அணைவது என்றுகொல்லோ (447)

மலரால் புனையப் பெறுவது என்றுகொல்லோ (444)

என்பவை ஒரு நிலை

புல்லிப் புணர்வது என்றுகொல்லோ (441)

பூண்டு கிடப்பது என்றுகொல்லோ (440)

என்பவை ஒரு நிலை.

உலகியல் முறையில் இதனை வைத்து பார்த்தால் எளிதாக புரிந்துகொள்ளலாம். நம்மால் பெரிதும் விரும்ப படுவதும் நம்முடனேயே இருக்கவே டும் என்று நினைக்க படுவதும் ஆகிய ஒரு பொருள், க ணைதிரே சற்றுத் தூரத்தில் உள்ளது. 'எதிரே இருக்கிறது' என்ற காரணத்தால் அதை எளிதாகச் சென்று பெற்றுவிடலாம் என்று நினை பது மாபெரும் தவறாகும். அதனுடைய பெருமையை அறிய அறிய நம் கற்பனைக்கும் எட்டாத ஒன்று அது என்ற நினைவு மனத்தில் ஆழமாக பதிகிறது. பல பிறவிகள் கடந்து, மாபெரும் தவங்கள் செய்து, ஊனை உருக்கி, உள்ளொளி பெருக்கிய பிறகே அ பொருளை நெருங்க முடி ம் என்று பலரும் கூற, அதனையே நம்பிக்கொ டிருந்த ஒரு நிலை அது.

என்ன அதிசயம்! அ பொருள் திடீரென்று நம் க ணுக்கு எதிரே தொடு தூரத்தில் அமர்ந்திரு பதைக் கா கிறோம். அ பொழுது என்ன செய்வோம்? அ பொருளை பற்றிக்கொள்ள வே டும் என்ற எ ணம் ஒரு புறம் இருந்தாலும், அதன் பெருமை ம் நம் சிறுமை ம் மனத்திடைத் தோன்றலால், வேகமாகச் சென்று, பற்றாமல் மெள்ள அடிமேல் அடி வைத்து, அ பொருளை நோக்கி நகர்ந்து செல்வோம்.

குருநாதர் சாதாரண மனிதவடிவில் இருந்தாலும், பரமானந்தத்தை அருளிச் செய்தார். ஆனால், இந்த வடிவம் யார், எந்த அடி படையில் பரமானந்தத்தைத் தமக்குத் தந்தார் என்பதை முற்றிலும் புரிந்துகொள்ள முடியவில்லை. இ பொருளின் அருகே சென்று அதோடு கூடியிருந்து அதனுடைய அடி படையை புரிந்தகொள்ள

வேண்டும் என்ற கருத்தில், 'புரிந்து நிற்பது என்று கொல்லோ என் பொல்லா மணியைப் புணர்ந்து' என்றார். இறைப்பிரேமையின் முதல் நிலையாகும் இது.

அடுத்தபடியாக, பொருளைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் அதனிடம் நெருங்கிச் செல்ல வேண்டும். அவ்வாறு சென்றாலொழிய அதனைப் புரிந்துகொள்ள முடியாது என்பதைப் 'புக்கு நிற்பது' என்று குறிப்பிட்டார். இது இறைப்பிரேமையின் இரண்டாவது நிலையாகும்.

'புக்கு நிற்பது' என்ற எண்ணம் தோன்றியவுடன், புகுகின்ற செயல் தொடங்கிவிடுகிறது. இதில் ஒரு விந்தை. எதற்காகப் புக வேண்டும் என்று விரும்பினார்? அப் பொருளை நன்கு புரிந்துகொள்வதற்காகத்தானே! ஒன்றைப் புரிந்து கொள்வதும் அதனிடம் புகுவதும் 'நான்' செய்கின்ற செயலாகும். இந்த 'நான்' புகுதலாகிய செயலைச் செய்தவுடன் இது எதிர்பார்த்தது நடைபெறவில்லை. அதாவது, புரிந்துகொள்ளும் ஆராய்ச்சியைத் தொடர வில்லை. அதற்குப் பதிலாக இறைப் பிரேமையின் உச்சகட்டத்தில் இந்த 'நான்' புகுந்து விட்டமையின் இது தன்னையே இழந்துவிட்டது. ஆற்றில் நடப்பட்ட கம்பின்மேல் வெள்ளம் பாயும்போது கம்பு மறைவது போல, இறைப் பிரேமை அனுபவத்தில் இந்த 'நான்' மூழ்கிவிட்டது. இந்த மூன்றாவது நிலையில் என்ன நடைபெற்றது என்பதை அடிகளாரே 'நெக்கு நெக்கு உள் உருகி உருகி நின்றும், இருந்தும், கிடந்தும், எழுந்தும், நக்கும், அழுதும், தொழுதும் வாழ்த்தி நானாவிதத்தால் கூத்து நவிற்றும்' நிலை ஏற்படுகிறது என்று கூறுகிறார். தன்னை மறத்தல், தொழுதல் ஆடுதல் பாடுதல் என்ற நிலை இறைப் பிரேமையில் ஒரு முடிவான கட்டமாகும். இதற்கு முன்னர்ச் சொல்லப்பெற்ற நிலைகளைக் கடந்து இந்த நிலையை அடைகின்றனர் அருளாளர்கள். ஆனால், இந்த நிலையில் தற்போதம் பெரும்பகுதி அழிந்து, செய்வது

அறியாது நிற்கின்ற நிலை ஏற்படுகின்றது. இறைப் பிரேமையிற்கூட இந்த நிலையில் முழுநேரமும் இருத்தல் இயலாத காரியம். உணர்ச்சி என்பது அலைகள் போல் ஏறி இறங்கும் இயல்பினது என்று முன்னரே பலமுறை எடுத்துக் காட்டியுள்ளோம். அந்த அடிப்படையில் கண்டால், தம்மை மறந்து ஆடுதல் பாடுதல் முதலியவைகளில் ஈடுபடுதல் இறைப் பிரேமையின் முடிவான கட்டமாகும். அதிலேயே நீண்டநேரம் நிற்க முடியாது ஆதலால், இந்த மூன்றாவது நிலையிலிருந்து இறங்கிவரும்போது அதுவரை அடங்கித் தொழிற்படாது இருந்த 'நான்' இப்போது மெல்லத் தன் பணியைச் செய்யத் தொடங்குகிறது. இங்கே, 'தன்னை' மறந்த நிலை எதுவும் இல்லை. என்ன செய்யவேண்டும் என்பதை, பழைய அனுபவத்தின் துணைகொண்டு 'நான்' முடிவு செய்கிறது. எதிரே உள்ள அந்தப் பொருளை இன்னும் நெருங்கிச் சென்று பக்கத்தில் இருக்கவேண்டும் என்பன போன்ற (புடைபட்டிருப்பது-438) விருப்பங்கள். அந்த 'நான்' இடத்தில் தோன்றுகின்றன. அதன் விரிவே இங்குப் பேசப்பெறுகின்றது.

புடைபட்டு அமர்ந்தவுடன் இந்த 'நான்' இடத்தில் ஒரு புதிய விருப்பம் தோன்றுகிறது. இது நான்காவது நிலையாகும். இந்த நிலையில் அந்தப் பொருளைப் போற்றிப் புகழவேண்டும் என்று நினைக்கிறது. புகழ்ந்து நிற்பதுடன் புகழ்ந்துகொண்டே இருக்கவேண்டும் என்று நினைக்கிறது. இது மொழியின் செயலாகும்.

அடுத்து, பாதப்போது ஆய்ந்து 'பூப்போதை அதன்மேல் இட்டு' அருச்சித்து அதனோடு அமையாமல் புனைந்த மலரால் (கட்டப்பட்ட மாலையால்) அத்திருவடியை அலங்கரிக்க வேண்டும் என்று அந்த 'நான்' நினைக்கின்றது. இது உடம்பின் செயலாகும்.

நெக்கு நெக்கு உருகி, தழுத்த கண்டம் கனைய கண்ணீர் அருவி பாய, என்பவை மனத்தின் செயலாகும்.

உகந்து அன்பாய் நிற்பது என்பதும் மனத்தின் செயலே ஆகும். மணல் ஊற்றுப்போல் உள்ளே உருகுவதும் மனத்தின் செயலாகும். இந்த 'நான்' தொழிற்படுவது என்பது மனம், மொழி மெய் என்று மூன்றினாலுமேயாம். தன்னை மறந்த அனுபவத்தில் மூழ்கியிருந்த 'நான்' அதிலிருந்து வெளிப்பட்டவுடன், தனது கருவிகளாகிய மனம், மொழி மெய் என்ற மூன்றினாலும் அந்தப் பொருளை நினைத்து வணங்கி, மலரிட்டு அருச்சிக்க வேண்டும் என்று நினைக்கின்றது. இது ஐந்தாவது நிலையாகும்.

இவ்வளவு விரிவாகப் பணிபுரிந்த 'நான்' ஆறாவது நிலையில், அந்தப் பொருளைப் புல்லியும் புணர்ந்தும் அதனால் வரும் அனுபவத்தைப் பெறவேண்டும் என்ற நினைவுடன் தொழிற்படுகிறது. இது ஆறாவது நிலையின் முற்பகுதியாகும்.

புல்லத் தொடங்கிய 'நான்' பூண்டு கிடக்கும் அடுத்த நிலைக்குச் செல்கிறது. 'நான்' தன் சுயமுயற்சியால் புல்லிப் புணரத் தொடங்கி, அதன் இறுதியில் புல்லப்பட்ட பொருளையே தன் வடிவமாகப் பூண்டு, செயலற்றுக் கிடக்கத் தொடங்கிவிடுகிறது. இது ஆறாவது நிலையின் உச்சகட்டமாகும்.

இந்த நிலைக்கும் மூன்றாவது நிலைக்கும் ஒரு வேறுபாடு உள்ளது. இவ்விரண்டு நிலைகளிலும் 'நான்' என்பது செயலிழந்துவிட்டாலும், மூன்றாவது நிலையில் ஆடுதல், பாடுதல், தொழுதல் முதலிய செயல்கள் நடைபெறுகின்றன. அதாவது எவ்வளவு அடங்கினாலும், அந்த 'நான்' ஆனந்த மேலீட்டால் பெருமளவு தன்னை மறந்தாலும், நானில் ஒரு பகுதி 'அனுபவிக்கின்றேன்' என்ற எண்ணத்தைச் சிறிதளவு பெற்றிருப்பதால்தான் ஆடுதல் பாடுதல் முதலிய செயல்கள் நடைபெறுகின்றன.

ஆறாவது நிலையில் கிடப்பது என்ற சொல்லைப் பயன்படுத்தியதன் மூலம் 'நான்' முற்றிலும் தொழிற்படாத நிலையைக் கூறியவ்ாறாயிற்று. அந்த நிலை எப்படி ஏற்பட்டது? புல்லத் தொடங்கி, பூண்ட நிலை வந்தவுடன் 'நானின்' செயற்பாடு முற்றிலுமாக அடங்கிவிடுகிறது. அதனையே 'கிடப்பது' என்று கூறினார் அடிகளார். விறகு முதலிய அஃறிணைப் பொருள் போட்ட இடத்தில் போட்டபடியே இருக்கின்ற நிலையைத்தான் 'கிடத்தல்' என்று சொல்கிறோம்.

'புரிந்து கொள்ளல்' என்ற முதல் நிலையில் தொடங்கி, 'புகுதல்' என்ற இரண்டாம் நிலைக்குச் சென்று, நக்கும், அழுதும் தொழுதும் உள்ள தன்னை மறந்த நிலையாக மூன்றாம் நிலையை அடைகிறது இந்த 'நான்'. இந்த மூன்று நிலைகளில் ஏறுமுகத்தில் இருந்த இறைப் பிரேமை நான்கு, ஐந்து நிலைகளில் இறங்குமுகமாய்த் தொடங்கி, ஆறாவது நிலையில் தனக்கென்று ஒரு செயல் இல்லாமல் திருவடியைப் 'பூண்டு' கிடக்கும் நிலையை அடைகிறது.

புல்லப்பட்ட பொருள் விருப்பு-வெறுப்புக் கடந்து, இன்பம்-துன்பம் கடந்து, தானே அதுவாயும், இணைந்தும் தனித்தும் இருப்பதாகலின் அதற்கு எந்த ஆனந்தத்திலும் ஈடுபடும் இயல்பு இல்லை. காரணம் அதுவே ஆனந்த சொரூபம் ஆதலின் தனியே ஆனந்தத்தில் ஈடுபடுவது இல்லை.

புல்லுபவராகிய அடிகளாரைப் பொறுத்தவரையில் அவருடைய 'நான்' கண்ணீர் வரும் நிலையில் தொடங்கி வரிசையாக வளர்ந்து, தன்னையே மறந்து ஆனந்த பரவசத்தில் திருவடிகளைப் பூண்டு கிடக்கும் நிலையை அடைகிறது.

வாழாப் பத்து

உலகிடை வாழும் சாதாரண மக்கள் நம்பிக்கை இழந்து வாழ விரும்பாதிருக்கின்ற நிலை உண்டு. மிகப் பெரிய ஆன்மீகவாதிகள், அருளாளர்கள், பக்தர்கள் என்பவர்களுக்குக்கூடச் சில சமயங்களில், 'இந்த வாழ்வு வேண்டா' என்ற நினைவு தோன்றியுள்ளதை அறிய முடிகிறது.

இறையன்பில் ஈடுபடும் தொடக்க நிலையில் உள்ளோர், இறையனுபவத்தை அவ்வப்பொழுது பெற்று ஏனைய நேரங்களில் உலகியலுக்கு வருவோர், உலகியலை அறவே மறந்து சதாசர்வ காலமும் இறையனுபவத்தில் மூழ்கியிருப்போர் ஆகிய மூன்று நிலைகளில் அருளாளர்கள் வாழ்க்கை நடைபெறுகின்றது.

உலகியல் வாழ்க்கையில் உள்ளவர்கள் நம்பிக்கை இழந்து, வாழ்க்கையில் பிடிப்பில்லாமல் இருப்பது சாதாரணமாக நாம் காணும் காட்சி. ஆனால், அடுத்த மூன்று நிலையில் உள்ளவர்கள் ஏன் நம்பிக்கை இழக்க வேண்டும்? சாதாரண மக்களாயினும், ஆன்றோர்கள் ஆயினும், சான்றோர்களாயினும் உலகிடைப் பிறந்தவர்கள் முக்குணங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. மிகச் சாதாரண நிலையில் உள்ளவர்கள் நாளில் பெரும்பகுதி தமோகுண வசத்தராவர். மூன்றாவது நிலையிலுள்ள அருளாளர்களும் கூட நாளில் மிகப் பெரும்பகுதி சத்துவகுண வசத்தராயினும் ஒரு விநாடி நேரம் தமோகுணத்திற்கு வந்து செல்வது இயல்பே யாகும். அருளாளர்கள் அனுபவிக்கும் இறையனுபவம், இறைப் பிரேமை என்பவற்றின் உண்மை அனுபவத்தைப் பெற வேண்டுமே யானால் ஒரு விநாடி தாமச குணத்தராதல் தேவைப்படும். உலகியல் முறையில் இதைக் கூறவேண்டுமே யானால், நிழலின் அருமை ஒரு விநாடி வெயிலில் போவதன்மூலம் அறியமுடியும் என்பதாம்.

ஆளுடைய அரசைப் பொறுத்தமட்டில் பிற சமய நுணுக்கங்கள்பற்றி அறிவும் பரந்த உலகியல் அறிவும் பன்மொழிப் புலமையும் நிறைந்திருந்தன. என்றாலும், பொறி, புலன் சேட்டைபற்றி அந்தப் பெருந்துறவியும் பின்வருமாறு பாடுகின்றார்.

அஞ்சினால் அடர்க்கப்பட்டு இங்கு உழிதரும் ஆதனேனை
(திருமுறை:4-26-5)

----------வஞ்சக்கள்வர்
ஐவரையும் என்மேல் தாவு அறுத்தால்
அவர் வேண்டும் காரியம் இங்கு ஆவதில்லை
(திருமுறை: 6-99-3)

ஆளுடைய பிள்ளை சீவன்முத்தராக இருந்து, இறைவனது ஆணையால் சில குறிப்பிட்ட செயல்களை நிறைவேற்ற இவ்வுலகிற்கு வந்தவராவார். இந்த அடிப் படையைப் பிள்ளையார் தாமே நன்கு உணர்ந்திருந்தார் என்பதைத் 'துறக்குமா சொலப்படாய் துருத்தியாய்' (திருமுறை:2-98-5) என்று தொடங்கும் பாடல் மூலம் அறியமுடிகிறது. எண்பத்து நான்கு லட்சம் உயிர் வர்க்கங்களைப் படைத்து, ஒவ்வொரு உயிரின் உள்ளேயும் அந்தர்யாமியாய் அவனே உள்ளாள் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். இதனை 'உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம்' (திருமுறை:1-132-4) என்று தொடங்கும் பாடல் மூலம் அறியமுடிகிறது. இதே பிள்ளையார் இறை இலக்கணம் பேசத் தொடங்கி 'ஈறாய் முதல் ஒன்றாய்' (திருமுறை:1-11-2) என்ற பாடலில் 'அவன் வேறாய் உடன் ஆனான்' என்று பேசுகிறார். இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்து அனைத்திலும் இறைவனைக் காணும் இந்த மகாஞானிக்குப் பொறி, புலன்களின் சேட்டை இருந்தது என்று சொன்னால், அது நம்பமுடியாத ஒன்றாகும். என்றாலும் அப்பெருமகனாரே திருவலிவலப் பதிகத்தில்,

ஆயமாய காயந் தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்
மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே

(திருமுறை: 1-50-7)

என்று பாடியுள்ளது நம் மனத்தில் புதிய சிந்தனையைத் தூண்டுகிறது.

ஆளுடைய நம்பிகளைப் பொறுத்தமட்டில் இறைவன் ஆணையால் இவ்வுலகிடை வந்தார் என்றும், பரவையார், சங்கிலியார் ஆகிய இருவரையும் இறையருளாலேயே மணந்தார் என்றும், தேவைப்படும் பொழுதெல்லாம் இறைவனை வேண்டிப் பொன் பெற்றார் என்றும் வரலாறு பேசிச்செல்கிறது. இறுதிவரை இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த ஆளுடைய நம்பி, திருஎதிர்கொள்பாடிப் பதிகம் முழுவதிலும் இல்லற வாழ்க்கையைத் தாம் வெறுக்கின்ற இயல்பைப் பாடியுள்ளார். இதன் சிறப்பு என்னவென்றால், எதிர்கொள்பாடிப் பதிகம் பாடிய பிறகும் அவர் இல்வாழ்க்கையில்தான் இருந்தார்.

ஆனால், அப்படிப்பட்ட ஒருவர், நண்பர் சேரமான் பெருமானோடு சேர்ந்து இருக்கின்ற நேரத்தில், திருவஞ்சைக்களத்துத் திருக்கோயில் சென்று வழிபடும் போது 'வெறுத்தேன் மனை வாழ்க்கை' (திருமுறை: 7-4-8) என்று பாடுவதன் நோக்கமென்ன? மனை வாழ்க்கையில் துன்பத்தையோ வெறுப்பையோ தரக்கூடிய எந்த நிகழ்ச்சியும் நம்பியாரூரர் வாழ்க்கையில் நடைபெற்றதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க 'வெறுத்தேன் மனை வாழ்க்கை' என்று பாடவேண்டிய தேவை என்ன? இறைவனைத் தம் தோழனாகக் கொண்டு வாழ்ந்தவர் சுந்தரர். சத்திய சொரூபியாகிய இறைவனைப் பார்த்து, 'நீ கோயிலுள் இருக்க வேண்டா, மகிழ மரத்தடியில் சென்று உறைவாயாக' என்று வேண்டிக்கொள்ளும் அளவிற்கு, இறைவனிடம் உரிமை கொண்டாடும் சுந்தரர்

'வெறுத்தேன் மனைவாழ்க்கை' என்று பாடுவதை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

சுந்தரர் போன்ற பெருமக்களின் மண வாழ்க்கையில் மன நிறைவும், மன மகிழ்ச்சியும் நிறைந்திருந்ததை அறிய முடிகிறது. அப்படியிருந்தும் அவர் ஆழ்மனத்தின் உள்ளே, எங்கோ ஒரு மூலையில் இந்த இன்ப வாழ்க்கையின்மீது சற்றே சலிப்பு மறைந்து நின்றிருத்தல் வேண்டும். அடுத்து, அந்தச் சலிப்பு வளர்ந்து ஒரு நிலைக்கு வருகிறது. அந்த நிலையில் பொறி, புலன்கள் அடிப்படையில் இந்த உலகில் வாழும் வாழ்வை விட்டு இறைவனின் திருவடியில் ஒன்றவேண்டும் என்ற எண்ணம் வலுப்பெறுகிறது. அதன் பயனாக 'வெறுத்தேன் மனைவாழ்க்கை' என்று பாடினார்.

மேலே காட்டப்பெற்ற மேற்கோள்களை அவற்றைப் பாடிய பெருமக்களின் வாழ்க்கையோடு வைத்துப் பார்த்தால் பொறி, புலன்கள் எவ்வளவு வலுவானவை என்பதை அறியமுடிகின்றது.

இவற்றையெல்லாம் மனத்துட் கொண்டு அடிகளாரின் வாழாப் பத்தை ஆழ்ந்து கற்கும்போது, இப்படி அவர் வருந்தக் காரணம், அருள் பெற்றபின்னும் அவ்வப் பொழுது ஒரோவழி தமோ குணச் சேட்டைகள் அவருள் தோன்றி மறைந்தன என்று நினைப்பதில் தவறில்லை. இத்தகைய சேட்டைகள் தோன்றாமல் திருப்பெருந்துறை அனுபவம் நீடித்திருந்தால் அடிகளார் வாழாப் பத்தைப் பாடியிருக்கப்போவதில்லை. அந்த அனுபவத்தை, அது தம்மைவிட்டுப் போன அடிப்படையை, தனியே இருந்து கொண்டு அமைதியாகச் சிந்திக்கும்பொழுது, சில எண்ண ஓட்டங்கள் வரிசையாக அவருள் தோன்றி மறைந்தன போலும்.

ஒன்றுக்கொன்று ஓரளவு தொடர்புடையதும், ஒன்றின் பயனாக ஒன்று விளைவதும், ஆகிய எண்ண ஓட்டங்கள் அவருள் தோன்றி மறைகின்றன.

முதலாவதாக-அடியார் கூட்டத்திடை இருந்தபொழுது கிடைத்த இறைப் பிரேமை, அனுபவம் மீட்டும் வேண்டும் என்று கேட்பதுதான் கோயில் மூத்த திருப்பதிகம். இரண்டாவதாக-அதனை மறுபடியும் பெறவேண்டும் என்ற ஆசையை வெளிப்படுத்துவதுதான் ஆசைப் பத்தாகும். மூன்றாவதாக-இந்த ஆசையைப்பற்றிப் பாடிக்கொண்டு வரும்போதே உள்ளுணர்வு, இதுவரை அவர் அனுபவித்த வற்றைப் புதிய ஒளியிலும், இதுவரை அவர் காணாதவற்றை ஒரு புதிய வடிவுகொடுத்தும் காட்டுகிறது. அதுவே அதிசயப் பத்தாகும். நான்காவதாக-அதிசயப் பத்தில் கூறப்பெற்றவை எவ்வாறு தமக்குக் கிடைத்தன என்ற சிந்தனையில் ஆழ்ந்த அடிகளாருக்கு, ஒரு விடை கிடைக்கின்றது. அவனிடம் அடைக்கலம் புகுந்ததன் விளைவாகவே இச்சிறப்புக்கள் தம்பால் எய்தின என்ற அடிப்படையில் அடைக்கலப் பத்தைப் பாடுகிறார். ஐந்தாவதாக- இந்த எண்ணம் வலுப் பெற்றவுடன் எப்படி மறுபடியும் அடைக்கலம் பெறுவது என்ற வினாத் தோன்றுகிறது. குருநாதர் மீட்டு வந்தால்தான் மறுபடியும் அடைக்கலம் பெறமுடியும். அது நடவாதபோது அடியார் கூட்டத்தை அடையவேண்டும் என்ற அவாத் தோன்றுகிறது. அதைக் குறுக்கே நின்று தடுப்பது இந்தப் பரு உடம்புதான் என்ற எண்ணம் வந்தவுடன், செத்து ஒழியவேண்டும் என்று நினைக்கின்றார், அதுவே செத்திலாப் பத்தாக மலர்கின்றது. ஆறாவதாக- இவ்வுடலை நீத்துவிட்டு அவன் திருவடி அடைந்தால் அங்கே என்ன செய்யப்போகிறோம் என்ற எண்ணத்திற்கு வடிவு கொடுப்பதே புணர்ச்சிப் பத்தாகும். அவன் திருவடிகளைப் புல்லிப் புணர்வது என்று கொல்லோ என்ற புதியதொரு ஆசை தோன்றி வளர்கின்றது,

மேலே கூறிய இந்த ஆறு நிலைகளிலும் அந்தந்த நிலைகளில் நின்று பாடிய அடிகளார், இவை ஒன்றும் நடைபெறாமல் போகவே, தமக்கு இந்த வாழ்க்கையே

வெறுத்துவிட்டது என்று நொந்துகொள்கிறார். அதுவே வாழாப் பத்தாகும்.

திருவாசகத்தின் பிற பகுதிகளில் காணப்பெறாத ஒரு புதிய சிந்தனை ஓட்டம், வாழாப் பத்தில் இடம் பெறுகிறது. குருநாதரையும் தொண்டர்களையும் விட்டுப் பிரிந்தமைக்குத் தாமே காரணம் என்று இதுவரை கூறிவந்த அடிகளார் இப்போது இறைவனையே சில வினாக்கள் கேட்கத் தொடங்குகிறார்.

அடிமையின் சுக துக்கங்கள் ஆண்டானைப் பொறுத்தனவன்றோ! அடிமை தனக்கு என்ன வேண்டும் என்று கேட்கின்றவரையில் விட்டுவைப்பது ஆண்டானுக்கு அழகல்லவே! ஆண்டான் ஒருவேளை அதைச் செய்ய மறந்தாலும், அடிமைபற்றிய கருணை அவனிடம் நிறைந்திருக்கவேண்டும். அது இறைவன்பால் இல்லை என்று சொல்லும் தைரியம் இப்பதிகத்தில் காணப்படுகிறது.

வாழாப் பத்தின் முதற் பாடலில் 'ஆண்ட நீ அருளிலையானால்' என வரும் பகுதி சிந்தனைக்குரியது. திருப்பெருந்துறையில் 'கோலமார்தரு பொதுவினில் வருக' என்று கூறினாரே தவிர, இவரை ஆண்டுகொண்டதாகக் குருநாதர் கூறவில்லையே! அப்படியிருக்க 'ஆண்ட நீ' என்று அடிகளார் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

திருப்பெருந்துறையில் குருநாதர் முன்பு, தமக்குக் கிடைத்த அனுபவங்களையெல்லாம் ஒன்றுசேர்த்துத் திரட்டி, பின்னோக்காகப் பார்க்கும்பொழுது அவர் ஆண்டுகொண்டார் என்று அடிகளார் மனத்தில் புலப்படுகிறது. அவர் ஆண்டுகொண்டிருந்தா லொழிய இத்தகைய அனுபவங்கள் கிடைக்குமாறில்லை. குளம் நிறைந்துவிட்டது என்ற காரியத்தை வைத்து மழை பெய்துள்ளது என்ற காரணத்தை அறிந்துகொள்வதுபோல இந்த அனுபவம் கிடைக்கவேண்டுமானால், நிச்சயமாக

வெறுத்துவிட்டது என்று நொந்துகொள்கிறார். அதுவே வாழாப் பத்தாகும்.

திருவாசகத்தின் பிற பகுதிகளில் காணப்பெறாத ஒரு புதிய சிந்தனை ஓட்டம், வாழாப் பத்தில் இடம் பெறுகிறது. குருநாதரையும் தொண்டர்களையும் விட்டுப் பிரிந்தமைக்குத் தாமே காரணம் என்று இதுவரை கூறிவந்த அடிகளார் இப்போது இறைவனையே சில வினாக்கள் கேட்கத் தொடங்குகிறார்.

அடிமையின் சுக துக்கங்கள் ஆண்டானைப் பொறுத்தனவன்றோ! அடிமை தனக்கு என்ன வேண்டும் என்று கேட்கின்றவரையில் விட்டுவைப்பது ஆண்டானுக்கு அழகல்லவே! ஆண்டான் ஒருவேளை அதைச் செய்ய மறந்தாலும், அடிமைபற்றிய கருணை அவனிடம் நிறைந்திருக்கவேண்டும். அது இறைவன்பால் இல்லை என்று சொல்லும் தைரியம் இப்பதிகத்தில் காணப்படுகிறது.

வாழாப் பத்தின் முதற் பாடலில் 'ஆண்ட நீ அருளிலையானால்' என வரும் பகுதி சிந்தனைக்குரியது. திருப்பெருந்துறையில் 'கோலமார்தரு பொதுவினில் வருக' என்று கூறினாரே தவிர, இவரை ஆண்டுகொண்டதாகக் குருநாதர் கூறவில்லையே! அப்படியிருக்க 'ஆண்ட நீ' என்று அடிகளார் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

திருப்பெருந்துறையில் குருநாதர் முன்பு, தமக்குக் கிடைத்த அனுபவங்களையெல்லாம் ஒன்றுசேர்த்துத் திரட்டி, பின்னோக்காகப் பார்க்கும்பொழுது அவர் ஆண்டுகொண்டார் என்று அடிகளார் மனத்தில் புலப்படுகிறது. அவர் ஆண்டுகொண்டிருந்தா லொழிய இத்தகைய அனுபவங்கள் கிடைக்குமாறில்லை. குளம் நிறைந்துவிட்டது என்ற காரியத்தை வைத்து மழை பெய்துள்ளது என்ற காரணத்தை அறிந்துகொள்வதுபோல இந்த அனுபவம் கிடைக்கவேண்டுமானால், நிச்சயமாக

அவர் ஆண்டிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வருகிறார். அதனாலேயே 'ஆண்ட நீ ' என்று பேசுகிறார்.

ஆண்டான், தான் செய்யவேண்டியதை மறந்து விட்டால் ஓரளவிற்குத்தான் அடிமை அதனை நினைவூட்ட முடியும். அதற்குமேல் தன் விதியை நொந்துகொள்வதைத் தவிர அடிமை ஒன்றும் செய்ய முடியாது. அப்படி நொந்து கொள்கிற நிலையைத்தான் 'வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்' (448) என்றும், 'மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்' (452) என்றும், 'உலகில் வாழ்கிலேன் கண்டாய்' (454) என்றும் பாடியருளுகின்றார்.

முதற்பாடலில் 'ஆண்ட நீ அருளிலையானால்' என்று வாளா கூறிவிட்டார். ஆனால், ஆட்கொள்ளப்பெற்றவர் எத்தகையவர் என்று அந்தப் பாடலில் சொல்லப் பெறவில்லை. ஆண்டவன்மட்டும் இத்தகையவன் என்று பேசப்பெற்றுள்ளது. அவ்வளவு சிறப்பாக ஆண்டவனை மட்டும் கூறிவிட்டு ஆளப்பெற்றவரைப்பற்றி ஒன்றும் கூறவில்லையானால் ஒரு சிறு குறை நேர்ந்துவிடுகிறது. இத்துணைச் சிறப்புக்களையுடைய ஒருவன் யாரோ ஒருவரை ஆட்கொண்டான் என்றால், ஆட்கொள்ளப் பெறும் தகுதி அந்த ஒருவரிடம் ஓரளவாவது இருந்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால், இத்துணைப் பெரியவன் அவரிடம் சென்றிருக்க முடியாது என்று நாம் கருதினால் அதிலொன்றும் தவறில்லை.

இந்தக் கருத்தைப் போக்குதற்காகவே 449 ஆம் பாடல் 'வம்பனேன் தன்னை ஆண்ட மா மணியே' என்று தொடங்குகிறது. வம்பனேன் என்ற சொல்லுக்கு வீணானனவன் என்பது பொருளாகும். அன்றியும், வம்பு என்ற சொல் புதுமை என்ற பொருளையும் தருமாதலால், வம்பனேன் என்பது, ஆட்கொள்ளப்பெற்றவர்களில் தாம் புதியவர் என்கிறார் அடிகளார்.

வீணானவர், புதியவர் என்ற எந்தப் பொருளை வைத்துக்கொண்டாலும், தம்முடைய மனத்தில் வேறு எந்த இச்சைக்கும் இடமில்லை என்று பத்துப் பாடல்களிலும் எல்லையற்ற உறுதிப்பாட்டோடு அடித்துப் பேசுகிறார்.

மனம் என்ற ஒன்று, ஏதாவது ஒன்றைப் பற்றித்தான் நிற்கும். ஒரு குறிப்பிட்ட பற்றை நீக்கிவிட்டால், மற்றொன்றின்மேல் அம் மனம் தாவும். அதற்குப் பதிலாக, அதில் சென்று தங்கக்கூடிய எல்லாவிதப் பற்றுக்களையும் ஒருசேர நீக்கிவிட்டால், இறைவன் வந்து தங்கக்கூடி "ய இடமாக அது ஆகிவிடுகிறது. 'அற்றது பற்று எனில் உற்றது வீடு' (நாலாயிர:2690) என்பது நம்மாழ்வார் வாக்கு. 'மற்று நான் பற்றிலேன் கண்டாய்' என்று பத்துப் பாடல்களிலும் கூறிவிட்டமையின் அந்தக் காலி இடத்தில் அவன் வந்து தங்கவில்லையானால் அதனால் வரும் கேட்டிற்கு அவனே பொறுப்பாகிவிடுவான். அதனை நினைவுறுத்துவது போலவே ஒவ்வொரு பாட்டிலும் 'பற்று நான் மற்றிலேன்' என்று பாடுகிறார். பற்றையோ ஒழித்தாகிவிட்டது; அதாவது, தாம் செய்யவேண்டிய கடமையை அடிகளார் நிறைவேற்றி விட்டார்.

அப்படியானால் வார்கடல் உலகினில் வாழ்கிலேன் கண்டாய் என்று எல்லாப் பாடல்களிலும் சொல்ல வேண்டிய காரணமென்ன?

மிக நுணுக்கமானதும் சிக்கலானதும் ஆன ஒரு பிரச்சினையை மனத்துட் கொண்டே அடிகளார் இவ்வாறு பாடுகிறார். முன்னர்க் கூறியபடி மனத்தின் இயல்பை நன்கு அறிந்திருந்தால், அடிகளாரின் வேண்டல் தத்துவத்தை எளிதில் புரிந்துகொள்ள முடியும். எவ்விதப் பற்றும் மனத்திலில்லை என்று உறுதியுடன் கூறிவிட்டார். ஆனால், ஏதாவது ஒரு பற்றைப் பற்றிக்கொண்டுதான் மனம் நிலைபெறும். இந்த நுணுக்கத்தை அடிகளாருக்கு அறுநூறு ஆண்டுகள் முற்பட்டு வாழ்ந்த வள்ளுவப் பேராசான்,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

(குறள்:350)

என்ற குறள்மூலம் தெளிவுபடுத்தியுள்ளார் அல்லவா? எனவே, அடிகளார் மனத்தில் அச்சம் பிறந்தது நியாயமானதே ஆகும்.

ஏனைய பற்றுக்கள் ஒழிக்கப்பெற்ற உடனேயே அவன் திருவடிகள் அடிகளாருடைய காலி மனத்தை நிரப்பியிருக்க வேண்டும். முன்னரே ஒருமுறை ஆண்டான் ஆகையால், இப்பொழுது அந்தத் திருவடிகள் அவரைத் தேடிவரவேண்டிய கடப்பாடுடையன. திருவடிகளுக்கு அப்படியொரு தேவையுமில்லை என்று விடை கூறித் தப்பித்துக்கொள்ள முடியாது.

எல்லாவிதப் பற்றுக்களும் நிறைந்திருந்த மனத்தையும், அந்த மனத்தை உடையவரையும், இழுத்துப்பிடித்துத் தன்பால் விழச்செய்து, அந்த விநாடியே மனத்திலுள்ள பற்றுக்களையெல்லாம் அறவே போக்கி, அந்த மனத்துள் குடிபுகுந்த திருவடிதானே அது! ஆகவே, அடிகளாரின் வேண்டுதலில்லாமல், அவர் மனத்துட் புகுந்து குடியேறிய திருவடிகள், இருந்த இடத்தைக் காலி செய்துவிட்டுத் தாமாகவே வெளியேற எவ்வித உரிமையும் இல்லை.

அவை குடியேறிய பின்னர் வேறு பற்றுக்கள் ஏதாவது அம்மனத்திடைப் புகுந்திருந்தால், 'தேவையில்லாத பற்றுக்கள் புகுந்துவிட்டன. எனவே, தாம் அங்குக் குடியிருக்க முடியாது' என்று சொல்லிவிட்டுத் திருவடிகள் வெளியேறலாம். ஆனால், அத்தகைய நிலை ஏற்படவில்லை என்பதைப் 'பற்று நான் மற்றிலேன் கண்டாய்' என்று பத்துப் பாடல்களிலும் அடிகளார் கூறிவிட்டார்.

வேறு பற்றில்லை என்று இவ்வளவு உறுதியாகக் கூறிய அடிகளார், பிறகு ஏன் கவலைப்படவேண்டும்? மனித

மனத்தின் நுணுக்கத்தை அறிந்த அடிகளார் இதனால் ஏற்படும் சிக்கலை நன்கு அறிந்தவராவார். திருப்பெருந்துறையில், திருவடிகள் மனத்தில் குடியேறியது உண்மை. இப்பொழுது அந்த மனத்தில் வேறு எவ்விதப் பற்றும் உள்ளே போகவில்லை என்பதும் உண்மை. இப்படியே வாழ்ந்துவிட்டுப் போகலாமே! இதற்காக ஏன் கவலைப்படவேண்டும்? இந்த உலகில் வாழவிரும்பவில்லை என்று ஏன் சொல்லவேண்டும்?

ஆழ்ந்து சிந்தித்தால், இவ்வாறு கூறியதன் மூலம், மனித சமுதாயம் முழுவதற்கும் ஒரு நுண்மையான பாடத்தை அடிகளார் அறிவித்துள்ளார் என்பது புலப்படும். அதாவது, மனத்திலுள்ள பற்றுக்கள் நீங்கியவுடன் அந்தத் திருவடி உள்ளே புகுந்துவிட வேண்டும். ஒரு விநாடி தாமத மானாலும் முன்னர்க் குடியிருந்த பற்றுக்கள் ஆரவாரத்தோடு மறுபடியும் உள்ளே புகுந்துவிடும்.

பற்று நீங்கியவுடன், அந்தத் தூய்மையான மனத்தோடு உடனே இறந்துபட்டிருந்தால் கவலையில்லை. கடைசியாக மனத்தில் குடியேறியது திருவடி. குடியேறுவதற்கு முன்னரே எல்லாப் பற்றுக்களும் ஒழிந்துவிட்டன. இந்த நிலையில் இறந்துபட்டிருந்தால் உய்கதி கிடைத்தே தீரும்.

இதன் எதிராக, திருவடியும் உள்ளே இல்லாமல், மனத்திற்குரிய இயல்பான பற்றுக்களும் இல்லாமல், உலகில் வாழவேண்டி நேரிட்டால், அதைவிடக் கொடுமை வேறெதுவுமில்லை.

ஆகவேதான் அடிகளார், 'ஆண்ட நீ' உன் திருவடிகளை என் மனத்தில் வைக்க அருள் செய்யவில்லை. இந்த நிலையில் இந்த உலகில் ஒரு விநாடிகூட வாழ நான் விரும்பவில்லை என்ற கருத்தைப் பத்துப் பாடல்களிலும் பாடுகிறார்.

இந்தப் பதிகம் முழுவதும், அடிகளார் மனத்தில் தோன்றிய நம்பிக்கை இழப்பை (despair) படம்பிடித்துக் காட்டுவதாகும். சாதாரணமாக இவ்வுலக வாழ்வை நீத்து உன்பால் வரவேண்டும் என்று எல்லா அடியார்களும் பாடியுள்ளதை நாம் அறிவோம். ஆனால், அடிகளாரின் வாழாப் பத்து அந்த வகையைச் சேர்ந்ததன்று. திருப்பெருந்துறையில் குருநாதர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கியபோது தம் வாழ்விற்கு ஒரு பயன் கிடைத்துவிட்டது என்ற நம்பிக்கை மலைபோல் வளர்ந்தது. ஆனால், குருநாதர் மறைந்தபின்னர், நாட்கள் செல்லச் செல்ல, அந்த நம்பிக்கை சிறிது சிறிதாகக் கரைந்து, நம்பிக்கை இழப்பு என்னும் ஒரு நிலைக்கு அடிகளாரைத் தள்ளிவிட்டது. எனவேதான், இவருடைய வாழாப் பத்துப் பாடல்கள் ஏனைய அடியார்களின் பாடல்களைப்போல் அல்லாமல் தனித்துவம் பெற்று விளங்குகின்றன.

அருட் பத்து

தேவார காலத்தில் பல வடசொற்கள் தமிழில் வந்து வழங்கியதைத் தேவாரத்தைக் கற்பார் அறியமுடியும். ஆனால், திசைச்சொற்கள் என்பவை இம்மொழியில் வந்து வழங்கலாம் என இலக்கணக்காரர்கள் கூறியிருப்பினும் தேவார காலத்தில் திசைச்சொற்கள் அதிகம் வழங்கியதாகக் கூறுவதற்கில்லை. ஆனால், அக்காலத்தை அடுத்துவந்த அடிகளார் காலத்தில், வட சொற்களோடு திசைச்சொற்களும் அவர் பாடல்களில் இடம்பெறலாயின. அடிகளார் காலத்திற்குச் சற்று முன்னர் வாழ்ந்த திருமூலரும் திசைச்சொற்களை எடுத்து ஆண்டுள்ளார்.

திருப்பெருந்துறை நிகழ்ச்சிகள் நடைபெற்று முடிந்தபின் மீட்டும் அதனைப் பெறவேண்டும் என்று மனத்தில் பெரிதாகத் தோன்றிய விருப்பம் நிறைவேறாமற் போகவே

தம்முடைய விருப்பத்தைச் சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டு, 'இதையாவது கொடு இதையாவது கொடு' என்று வேண்டுகிறார் என முன்னுரையில் குறிப்பிட்டோம் அல்லவா? அந்த வேண்டுதலில் கடைசியாக நிற்பது 'அதெந்துவே' என்று அருளவேண்டும் என்று கேட்கும் நிலையாகும்.

இப்பாடல்களில் ஒரு தனிச்சிறப்பைக் காணலாம். இறைவன் அண்டம் முழுதும் நிறைந்திருக்கின்ற நிலையையும் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் குருநாதராய் வந்திருக்கும் நிலையையும் ஒரே பாடலில் வைத்துக்கூறும் அழகு இப்பதிகத்தில் காணப்பெறும் சிறப்பாகும்.

இப்பகுதியின் முதலாவது பாடலில் (458) அண்டம் முழுதும் நிறைந்திருக்கின்ற பேரொளிப் பிழம்பு எனத் தொடங்கி, அதிலிருந்து சிறு சுடருக்கு வந்து, அதிலிருந்தும் இறங்கிக் கையில் அகப்படும் விளக்காக அவனைக் கூறிவிட்டு, அதற்கு அடுத்த அடியில் அவன் யார் என்பதை விவரிக்கின்றார். சோதி என்பது வடிவற்றது; சுடர் என்பது தனக்கென்று ஒரு வடிவம் இல்லாத வடிவையுடையது; விளக்கு என்பது கட்புலனுக்கும் கைக்கும் அகப்படக் கூடியதாய் உள்ளது. இந்த மூன்றுமாக ஒருவனே உள்ளான் என்பது இறங்குமுக வரிசையாகும்.

'விளக்கு' என்று கூறியவுடன் கேட்பவர் மனத்தில் அச்சம் கலந்த வியப்பிற்குப் பதிலாக ஒரு தோழமைத் தன்மை தோன்றிவிடும். 'விளக்கு' என்பது நாம் அன்றாடம் கையாளும் பொருள் ஆதலால், இறைவனை விளக்கு என்றவுடன் ஒரு தோழமைத் தன்மை தோன்றிவிடும். அந்த எண்ணத்தை மாற்றப்போலும் மறுபடியும் அவனுடைய பெருமையை ஏறுமுகமாகச் சொல்லிக்கொண்டு செல்கிறார். மடந்தை பாதியே என்பதால் உருவமும் நமக்கு நெருக்கமும் மனத்திடைத் தோன்றுகிறது. இனி அதற்கு மேல் பல படிகள் சென்று பரனே என்றார்.

'பால்கொள் வெண் நீற்றாய்' என்பது வெண்ணீறு அணிந்தவன் என்ற பொருளைத் தருமேனும் நீற்றாய் என்பது துகள் வடிவாக உள்ளவனே என்ற பொருளையும் தரும். 'பரன்' என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்பது என்ற பொருளைத் தருவதால் அதற்கு நேரெதிரான 'நீறு' (துகள்) பேசப்பெறுகிறது.

இதற்குமேல் ஒரு படி சென்று, நான்முகனும், நாரணனும், 'காணா', என்று சொல்லி அக்கினிப் பிழம்பாக நின்றதை நினைவூட்டாமல், 'அறியா' என்று கூறி யாராலும் அறியப்படாதவன் என்ற கருத்தைத் தெரிவிக்கிறார்.

'மடந்தை பாதியே' என்பது முதல் 'நீதியே' என்பது வரை உள்ள பகுதி ஏறுமுக விளக்கமாகும்.

சோதியும் பரமும் நீதியும் என்ற மூன்றும் கருத்தளவையில் நிற்பனவே தவிர, இவற்றிற்கு வேறு வடிவம் இல்லை. மனத்தை மருட்டும் இந்த விளக்கங் களைக் கூறியவுடன் மறுபடியும் இத்தகைய ஒரு பொருள் மனிதர்களாகிய நமக்கு மிக நெருக்கமாய் உள்ளது என்பதை அறிவிப்பார்போலத் 'திருப்பெருந்துறையில் நிறைமலர்க் குருந்தம் மேவிய சீர் ஆதி' என்று முடிக்கின்றார். ஒரே பாடலில் சோதியிற் தொடங்கி குருந்தமரத்தடிக் குருநாதரைக் காட்டி, இவை இரண்டும் ஒன்றே என்ற நினைவை நம்முள் ஊட்டுகின்றார்.

பிரபஞ்சம் முழுவதையும் நிறைத்துநிற்கும் சோதி எல்லாப் பொருளையும் விளக்குமேதவிர, ஒரு குறிப்பிட்ட சிறிய பொருளின்மேல், அதாவது ஒரு குறிப்பிட்ட ஆன்மாவின்மேல் ஆதிக்கம் செலுத்துவது கடினம் என்பதைக் கருதிப்போலும் விளக்கு என்று முடிக்கின்றார். விளக்கு என்றால் நம்முடைய கையில் அகப்பட்டு நம் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் ஒன்றல்லவா? இக்கருத்தை ாற்றிவைத்துப் பார்த்தால் விளக்கு வடிவினதாகவுள்ள

அப்பொருள் தனிப்பட்ட ஒருவரின்மேல் தன்னுடைய ஒளியைச் செலுத்தித் தன்னுடைய ஒளி ஆதிக்கத்தின்கீழ் அவரைக் கொண்டுவருகிறதல்லவா? இறைவனும் அதனையே செய்கிறான்.

'நிருத்தனே நிமலா' (459) என்று தொடங்கும் பாடலை அமைதியாக இருந்து சுற்றால், சில சிந்தனைகள் தோன்றாமற் போகாது.

சூரியன் ஆகாயத்தின் எங்கோ ஒரு மூலையில் இருந்துகொண்டு தனது ஒளிக் கிரணங்களால் உலகம் முழுவதையும் விளக்குகிறான். கதிரவன் மேகத்தால் மறைப்புண்ட நிலையிலும், கார் காலத்திலும்கூட இந்த ஒளி, உலகம் முழுவதும் வியாபித்து நிற்பதைக் காணலாம். ஆனால், இவ்வளவு ஒளியையும் வெளியிடுகின்ற கதிரவனைக் காணவேண்டுமானால் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில்தான் காணமுடியும். இவ்வாறு செய்யாமல் ஒளி விரிகின்ற இடங்களிலெல்லாம் சென்று 'கதிரவனே உன்னைக் காணவேண்டும்! கதிரவனே உன்னைக் காணவேண்டும்!' என்று கூவினால் ஒன்றும் நடைபெறப்போவதில்லை. இறுதியில் திடீரென்று மேகங்களைக் கிழித்துக்கொண்டு அவன் வெளிவருகிறான்.

இந்த அடிப்படைதான் 459 ஆம் பாடலில் பேசப்பெறுகிறது. நிருத்தனே, நிமலா, நெற்றிக்கண்ணனே என்று அலறிக்கொண்டு எங்கெங்கோ அடிகளார் தேடினார். சூரியனுடைய ஒளி எங்கும் நிறைந்திருப்பது போல் நிருத்தனும் நிமலனும் நெற்றிக்கண்ணனும் ஆகிய அவன், எங்கும் நிறைந்திருக்கின்றான். ஆதலால், அவனை நிருத்தனாகவோ நிமலனாகவோ நெற்றிக்கண்ணனாகவோ காண்டல் முடியாது. அதனால்தான் 'ஓலமிட்டு அலறி உலகெலாம் தேடியும் காணேன்' என்கிறார் அடிகளார்.

இப்படித் தேடப்பட்ட கதிரவன், மேகத்தைக் கிழித்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட வடிவுடன், நம் கண் காணுமாறு தோன்றுவதுபோல, திருப்பெருந்துறையில் நிறைமலர்க் குருந்தத்தின் அடியில், அடிகளார் தேடிய நிருத்தனும் நிமலனும் நெற்றிக் கண்ணனுமாகிய அவன், புறக்கண்ணாலும் காணக்கூடிய முறையில் குருநாதர் வடிவில் அமர்ந்திருந்தான் என்றபடி.

இப்பொழுது அடிகளார் உலகெலாம் தேடுவதை விட்டுவிட்டு, திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் அவர் இருப்பதைக் காண்கிறார். முதலில் அவர் கண்ணில் பட்டது துறவுக்கோலம் பூண்ட குருநாதர் வடிவம். தாம் உலகெலாம் தேடிய ஒருவர், இதோ மரத்தடியில் துறவியாக அமர்ந்துள்ளார் என்ற நினைவு வந்தவுடன், துறவி மறைகிறார்; மடந்தை பாதியனாக உள்ள ஒருவன், தலையில் தாங்கிய கங்கையோடு காட்சியளிக்கிறான்.

ஓகோ....! இவர் துறவியல்லர். இரு மங்கையரை மணந்த நிருத்தர்போலும் என்ற எண்ணம் ஒரு விநாடி மனத்திடைத் தோன்றுகிறது. அடுத்த விநாடி இவர், இருவர் தங்கள் நாயகனாக (460) இருந்தால் என்ன? 'காமன் தனது உடல் தழல் எழ விழித்த செங்கண் நாயகன்' அல்லவா என்ற எண்ணம் தோன்றவே, இத்தனை பெரிய மூர்த்தி இதோ எம் எதிரே அமர்ந்துள்ளாரே என்று மகிழ்ந்து, அவரை அழைக்கின்றார். குருநாதர் வடிவில் இருந்தவர் விடைகூறவில்லை. மனம் வருந்திய அடிகளார், 'ஐயா! நீ என்னுடன் பேசி என் துயரத்தைக் களையாவிட்டாலும் சரி, நான் கதறுவதைக் காதில் கேட்டு, "அது என்ன? ஏன் கூவுகிறாய்?" என்று ஒரு வார்த்தையாவது கேட்டருளக் கூடாதா?' என்கிறார்.

இரு மடந்தையரை உடைய இறைவனைக் காமனை வென்றவன் என்று கூறுவது இந்த நாட்டிற்கே உரிய பண்பாகும். இறைவனைப் பொறுத்தமட்டில் இவ்வாறு

கூறுவது ஒருபுறமிருக்க, மிகப் பெரிய அருளாளர்களுடைய வரலாற்றிலும் இச்செய்தி பேசப்பெறுகிறது.

திருவாரூரில் பரவையை மணந்து அவரோடு இல்லறம் நடத்தும் நம்பியாரூரைச், சேக்கிழார் பெருமான், 'பரவை எனும் மெல் இயல்தன் பொன்ஆரும் முலை ஓங்கல் புணர் குவடே சார்வு ஆகப் பல் நாளும் பயில் யோக பரம்பரையின் விரும்பினார்' (பெ.பு:தடுத்தாட்-181) என்று கூறியருளியமை காணலாம்.

461 ஆம் பாடலில் ஒரு நயம் பேசப்பெற்றுள்ளது. 'கமல நான்முகனும் கார்முகில் நிறத்துக் கண்ணனும்' முடியையும் அடியையும் இதோ கண்டுவிடுகிறோம் என்று தருக்கிப் புறப்பட்டபோது அவர்கள் முயற்சி வெற்றி பெற வில்லை. முயற்சி வெற்றியடையாதபோது, தருக்கிப் புறப் பட்ட தங்கள் பிழையை நன்கு உணர்ந்துகொண்டனர். இந்நிலையில் 'நண்ணுதற்கு அரிய விமலனே! எமக்கு வெளிப்படாய்' என்று வேண்ட, வியன் தழலிலிருந்து வெளிப்பட்டுக் காட்சி தந்தான். எனவே, தம் சிறுமையை உணர்ந்து வேண்டினால் அவன் வெளிப்பட்டே தீருவான் என்பது இங்குக் கூறப்பெற்ற கருத்தாகும்.

இதனை அடிகளார் கூறுவதன் நோக்கம் ஒன்றுண்டு. இதுவரை அவர் ஓலமிட்டு அலறியும் காணாத பொருள் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் வெளிப்பட்டு அமர்ந்துள்ளது. அதனிடம் தம் குறைகளை வேண்டுகிறார். குருநாதர் பதிலொன்றும் கூறாமல் போகவே, 'எந்தாய்! நான்முகனுக்கும் நாரணனுக்கும் வெளிப்பட்டு அருள் செய்த நீ, அந்தளவு எனக்கு அருள் செய்யாவிடினும் என் குரல் கேட்டு அது என்ன என்றுகூடக் கேட்கக்கூடாதா?' என்கிறார்.

நேரம் காலம் பாராமல் குடங்கை நீரும் பச்சிலையும் கொண்டு பூசை செய்யப்பெற்றது ஒரு காலம்; குறவர்

மடமகள் கையில் கிடைத்த பூவை எடுத்துச் சென்று ஆலமர் செல்வனை வழிபட்டதாகச் சங்கப் பாடல் பேசுகிறது. (ஐங்குறு: 259)

இவற்றையெல்லாம் விட்டுச் சிவபூசை ஒரு சடங்காக எப்பொழுது மாறிற்று என்று தெரியவில்லை. நாளா வட்டத்தில் சிவ வழிபாட்டைவிடச் சடங்கும் சம்பிரதாய மும் முக்கியத்துவம் பெற்ற காலம் அடுத்துவரலாயிற்று. அக்காலத் தொடக்கத்தில்தான் 'மொட்டு அறா மலர் பறித்து இறைஞ்சும்' (465) பழக்கம் வந்தது என்று நினையவேண்டியுள்ளது. மொட்டு விரிந்தால் அதில் தேனுண்ண வண்டுகள் வந்து அமரும். வண்டுகளின் எச்சில் பட்ட காரணத்தால் அந்த மலர் பூசைக்கு உதவாது என்று கருதியதால் மொட்டு அறா மலர் பறித்து வழிபாடு செய்யும் பழக்கம் இடைக்காலத்தில் ஏற்பட்டது. இந்தச் சம்பிரதாயங்கள் பெருகி வளர்ந்த நிலையில் தாயுமானவப் பெருந்தகை இதன் மறுதலையாக, 'பாவித்து இறைஞ்ச ஆங்கே பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி அப்பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்' (தாயு:கருணா-6) என்று பாடியருளினார். எல்லாவற்றிலும் இறைவன் உடனாயும் வேறாயும் உள்ளான் என்று அருளாளர்கள் பாடுகின்ற காலத்தில், பூசனைக்கு வண்டு மொய்க்காத மலர் வேண்டும் என்று நினைத்தது விந்தையே ஆகும். இது அடிப்படையில்லாத வெறும் சம்பிரதாய வளர்ச்சியே ஆகும்.

இந்த நிலையில்தான் தாயுமானவர் போன்றவர்கள் குறிப்பாக இதனைச் சாடினர்.

இறையனுபவத்தில் திளைத்து இறைப் பிரேமையில் மூழ்கிய அடிகளார்- 'எனை நான் என்பது அறியேன், பகல் இரவாவதும் அறியேன்' என்று பாடிய அடிகளார், 'மொட்டறா மலர்பறித்து இறைஞ்ச' என்று பாடுவாரா என்ற னா நியாயமானதே ஆகும்.

சிவபக்தராக இருந்த திருவாதவூரர் இத்தகைய சம்பிரதாய பூசைகளில் ஈடுபட்டிருக்கலாம். இன்றேல், மணிவாசகராக மாறிய பிறகு ஒவ்வொரு ஊராகச் செல்லும் நிலையில் இவ்வாறு சிவபூசை செய்பவர்களைக் கண்டிருக்கலாம். இப்பொழுது அந்த நிலையை யெல்லாம் கடந்துவிட்டார் என்றாலும், இந்தப் பழமையின் தாக்கம் ஒரோவழி பாடல்களில் வெளிப்படுகிறது என்று அமைதி காண்பதில் தவறில்லை.

திருப்பெருந்துறை நிகழ்ச்சி நடைபெற்றுப் பலகாலம் கழிந்தபின்னர், குருந்தமரத்தடியில் குருநாதர் இருந்த நிலையை அமைதியாக இருந்து சிந்திக்கிறார் அடிகளார். அதனையே 'செழுமலர்க் குருந்தம் மேவிய சீர் இருந்தவாறு எண்ணி, செறா நினைந்திட்டு' (467) இருந்தேன் என்கிறார்.

இப்பொழுது திருப்பெருந்துறையை விட்டு எங்கோ ஓர் இடத்தில் இருக்கிறார். அவர் இருக்கும் இடத்தில் குருந்தமரமு மில்லை, குருநாதரும் இல்லை. ஆனால், குருநாதர் இருந்த பழைய நிலையை இவர் எண்ணுகிறார் என்பதைத்தான் 'இருந்தவாறு எண்ணி' என்று பேசுகிறார். இருந்தவாறு எண்ணி என்பதால் இது முன்னர் என்றோ ஒருநாள் நடந்த நிகழ்ச்சியைக் குறிப்பதாயிற்று.

இப்பொழுது குருந்தமரமும் இல்லை; குருநாதரும் இல்லை. ஆனால் முன்னர் இருந்த நிலையை எண்ணி, 'என்னுடை எம்பிரான் என்றென்று அருந்தவா நினைந்து ஆதரித்து' (467) அழைக்கின்றேன் என்கிறார். இதன் நுணுக்கத்தைச் சற்று நின்று நிதானித்து அறிய வேண்டும்.

பழைய நிலையில் திருப்பெருந்துறையில், குருந்தமரத்து அடியில் குருநாதர் வீற்றிருந்தார். மிக அருகில் அவருடைய திருவடியில் அடிகளாரின் தலை பட்டுக்கொண்டு இருந்தமையின், எம்பிரான் என்று கூவி அழைக்க வேண்டிய தேவை அன்று ஏற்படவில்லை.

ஆனால், இன்று குருந்த மரமும் குருநாதரும் எங்கோ மறைந்துவிட்டனர். எனவே, அடிகளார் 'அருந்தவா! (நின்னை, நீ இருந்த பழைய கோலத்தை) நினைந்தே ஆதரித்து அழைக்கின்றேன்' என்று கூறுகிறார்.

'ஐயா! இப்பொழுது நீ "அது என்ன?" என்று கேட்டுப் பயனில்லை. அப்படிக் கேட்டு எனக்கு அமைதி உண்டாக்கும் நிலை கடந்துவிட்டது. இனி நீ செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். பிறவியாகிய கடலில் சிக்கித் தவிக்கும் என்னைப் பார்த்து 'இதுதான் கயிலை செல்லும் வழி. இந்த வழி அறிந்து வருவாயாக என்று நீ சொல்வதையே நான் விரும்புகிறேன்' என்கிறார்.

திருக்கழுக்குன்றப் பதிகம்

அடிகளாரின் வாழ்க்கையில் திருக்கழுக்குன்றம், திருப்பெருந்துறை ஆகிய இரண்டு திருத்தலங்கள் திருப்பு முனையாக அமைந்தன என்று கொள்வதில் தவறில்லை. உலகியல் முறையில் மிக உன்னதமான பதவி வகித்து வாழ்க்கை நடத்தும் ஒருவரைப் பிடித்து ஆட்கொண்டு அத்தனையையும் ஒரே விநாடியில் துறக்குமாறு செய்தது திருப்பெருந்துறை. திருப்பெருந்துறையின்மேல் அடிகளாருக்கு இவ்வளவு காதல் வளர ஒரு காரணம் உண்டு.

தொடர்ச்சியாகவும், ஒன்றிலிருந்து ஒன்று விளைவதாகவும் உள்ள ஒன்றைத்தான் வளர்ச்சி என்று கூறுகின்றோம். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும், அன்றாடம் சிறுசிறு வளர்ச்சியும், சில நேரங்களில் பெரு வளர்ச்சியும் தோன்றுதல் இயல்பேயாகும். இந்த வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட துறையில் சிறிதாகவும், பெரிதாகவும் வளர்கின்ற ஒன்றேயாகும். மரம் நாளும் வளர்ந்தது; குழந்தை நாளும் வளர்ந்தது என்று கூறுகையில் ஒன்று உறுதி. எவ்வளவு வளர்ந்தாலும் எந்த நிலையை அடைந்தாலும்

மரம் மரமாகத்தான் இருக்கும்; குழந்தை மனிதனாகத்தான் வளரும். இப்படி இருந்தால்தான் அதனை வளர்ச்சி என்று கூறுகிறோம்.

இதன் மறுதலையாக, ஓரறிவு உடைய மரம் திடீரென்று ஐயறிவுடைய விலங்காக மாறினாலும், பசுகரணங்களோடு கூடிய உடம்பையுடைய குழந்தை திடீரென்று பதிகரணங்களோடுகூடிய தெய்வக் குழந்தையாக மாறினாலும் அவற்றை வளர்ச்சி என்று கூற முடியாது; மிகப் பெரிய மாற்றம் என்றுதான் கூறவேண்டும்.

திருவாதவூரர் என்ற பாண்டிய அமைச்சர் அடைந்த திடீர் மாற்றம் இப்பாடலில் (468) பேசப்பெறுகிறது. ஒரே நாளில் சில மணித்துளிகளில் அமைச்சரின் வாழ்க்கை திசைமாறிவிட்டதால், இதனை வளர்ச்சி என்று கூறாமல் முழுமாற்றம் என்று கூறுகிறோம்.

பெருந்துறைப் பெருமான் நாமங்களைப் பேசுவோர்க்குத் துன்பம் துடைக்கப்படும்; இன்பம் வரும் என்கிறார் அடிகளார். ஆனால், திருப்பெருந்துறையில் குருநாதரைச் சந்திக்கின்றவரையில் இறைவனின் நாமங்களைத் திருவாதவூரர் ஜெபித்துக்கொண்டு இருந்தாரா என்று அறிய வாய்ப்பில்லை. ஆனால் அடிகளாரைப் பொறுத்த வரையில் குருநாதரின் ஒரு விநாடி தரிசனம், துன்பத்தைத் துடைத்து இன்பத்தைத் தந்ததோடு நிற்கவில்லை. அதற்கு மேலும் பல படிகள் சென்று, அவருடைய மேல்வரும் பிறப்புக்களுக்குரிய வித்தை, ஈரமாகவே வைத்து முளைக்காமல் செய்துவிட்டது.

இனிமேல் பிறப்பு இல்லாமல் செய்த காரணத்தால் அப்பிறப்பிற்குக் காரணமாகிய இரு வினைகளும் சமமாகி விட்டன. இந்த 'இருவினையொப்பு' நிகழ்ந்த காரணத்தால் திருக்கழுக்குன்றத்தில் குருநாதரையும் அவர் கொண்ட பல்லாயிரக் கணக்கான கோலங்களையும் ஒரே நேரத்தில்

ஒருங்கே காணும் வாய்ப்பைப் பெற்றதாக அடிகளார் கூறுகிறார்.

இறுதியில் உள்ள 'காட்டினாய்' என்ற சொல், மிக ஆழமான பொருளை உடையது. கணக்கிலாக் கோலம் ஏதோ அடிகளாருக்காக, அந்த விநாடியில் மேற்கொள்ளப் பெற்ற ஒன்று என்று நினைத்துவிடக் கூடாது. இந்தக் கோலம் எப்பொழுதும் உள்ளதுதான். அதைக் காணும் ஆற்றலோ வாய்ப்போ அடிகளார் உள்ளிட்ட யாருக்கும் இல்லை.

ஆனால், அடிகளாருக்கு இக்கோலங்களைக் காட்ட நினைத்தார் குருநாதர். அவரே அருள்கூர்ந்து காட்ட விரும்பியதால்தான் அடிகளார் அதனைக் காண முடிந்தது.

இக்கருத்துப் புதியதன்று. அடிகளாருக்கு 300 ஆண்டுகள் முன்னர் வாழ்ந்த நாவரசர் பெருமான், 'காண்பார் யார் கண்ணுதலாய் காட்டாக் காலே' என்று பாடியதும் இக்கருத்தை வலியுறுத்துவதாகும்.

தானியங்களில் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாதது மான பல சிற்றுயிர்கள் உட்புகுந்து வாழ்கின்றன. ஒவ்வொரு மருந்தில் அந்தந்தத் தானியத்தை நனைப்பதன் மூலம் ஒவ்வொரு குறிப்பிட்ட பூச்சியைத்தான் கொல்ல முடியும். இதற்குப் பதிலாக, அணுக்கதிர்களை ஒரு விநாடி அத்தானியத்தின்மேல் செலுத்தினால் எல்லாக் கிருமிகளும் அழிந்துவிட, தானியம் தூய்மை பெற்று விளங்கும். அதேபோல, உயிர்கள்மாட்டுள்ள ஒவ்வொரு குறையையும் போக்க, தனித்தனியாக ஜபம், தவம் முதலியவற்றைச் செய்து அவற்றைப் போக்கமுடியும். ஆனால், இதற்கு நெடுங்காலம் ஆகும். உயிர்களிடத்து மலிந்துள்ள எல்லாக் குற்றங்களையும் போக்கி, இருவினையொப்பு நிலையைப் பெறப் பல பிறவிகள் எடுக்கவேண்டி நேரிடும்.

இதற்குப் பதிலாக, குருநாதர் கடைக்கண் பார்வை, அணுக்கதிர் வீச்சுப்போல் திருவாதவூரர்மேல் பட, அவருடைய வினைகளெல்லாம் கருகிச் சாம்பலாக, மணிவாசகராக மாறிவிடுகிறார்.

இருவினையொப்பு நிகழ்ந்துவிட்டமையின் எல்லாவற்றையும் உள்ளவாறு பார்க்கும் வாய்ப்பு, அடிகளாருக்குக் கிட்டியது. இதுவே இப்பதிகத்தின் முதற்பாடலில் (468) குறிப்பிடப்படுகிறது.

திருவிளையாடற் புராணக் கதைகளும்- திருவாதவூரடிகள் புராணமும்கூட- ஆலவாய்ச் சொக்கன்தான் வந்திக்குக் கூலியாளாய் வந்து பிட்டுக்கு மண்சுமந்தான் என்று பேசுகின்றன. அப்படியிருக்க, 'பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே' (469) என்றல்லவா அடிகளார் பாடுகிறார். இதிலிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ளமுடிகிறது.

திருவாதவூரிற் பிறந்து, மதுரையம்பதியில் வளர்ந்து அமைச்சராகவும் ஆன அடிகளாருக்கு, ஆலவாய்ச் சொக்கன்தான் அதிக ஈடுபாட்டைத் தந்தவனாவான். அவர்மட்டு மல்லாமல், அவருடைய மன்னனாகிய இரண்டாம் வரகுணனும் பெரும் பக்தன் ஆதலால், அவனும் சொக்கனிடம் அடிகளாரைப்போலப் பெரும் ஈடுபாடு கொண்டிருந்திருக்க வேண்டும்.

அப்படியிருந்தும் குருநாதரிடம் திருவடி தீட்சை பெற்ற பிறகு, அடிகளாரின் வாழ்க்கையே மாறிவிட்ட காரணத்தால், திருஉத்தரகோசமங்கை, மதுரை, திருக்கழுக்குன்றம் ஆகிய ஊர்களில்கூடக் குருநாதரே காட்சியளிக்கின்றார். ஆதலால், பிட்டுக்கு மண் சுமந்தவனும் குதிரைச் சேவகனாக வந்தவனும் பெருந்துறையானே என்ற எண்ணம் அடிகளார் மனத்தில் வேரூன்றிவிட்டது.

இப்பாடலின் முதலடியில் அடிகளாரையும் அறியாமல் ஒரு நகைச்சுவை புகுந்துவிட்டதோ என்று நினைய வேண்டியுள்ளது. அந்த நகைச்சுவை 'நேர்பட' என்ற சொல்லின்மூலம் வெளிப்படுகிறது.

மண்சுமந்த வரலாற்றை அறிந்தவர்கள் ஒரு செய்தியை நன்றாக அறியமுடியும். வந்தியிடம் வந்த கூலியாள் வைகைக் கரையடைக்கச் செல்லும் முன்னரே, மிகுதியான பிட்டை வாங்கி உண்டுவிட்டான். அம்மட்டோடு நின்றானா? தன்னுடைய அழுக்கடைந்த பழங் கந்தையில் நிரம்பப் பிட்டை வாங்கி, மூட்டையாகக் கட்டிக் கொண்டான்.

இவ்வளவு கூலி பெற்றுக்கொண்ட அவன், ஆற்றின் உடைப்பை அடைத்தானா, அடைப்பதற்கு ஏதேனும் முயற்சி செய்தானா என்றால், இல்லை என்பதே விடையாகும். அத்தோடு நின்றானா? 'நூற்றைக் கெடுத்தது குறுணி' என்பது தமிழகத்துப் பழமொழி. அதுபோல இந்தக் கூலியாள் தனக்குரிய பணியைச் செய்யாததுமட்டு மன்று, ஒழுங்காகப் பணிபுரிந்துகொண்டிருந்த ஏனையோரையும் கூவியழைத்துத் தன் மூட்டையிலிருந்து பிட்டைப் பங்கிட்டுத் தந்து அவர்கள் வேலையையும் கெடுத்தான். இப்படிச் செயல் செய்த ஒருவனைப் 'பிட்டு நேர்பட மண் சுமந்தான்' என்கிறார் அடிகளார். அதாவது வாங்கிய பிட்டின் மதிப்பிற்கு ஏற்ற அளவு மண்சுமந்தான்; கூலிக்கு ஏற்ற மண்சுமந்தான் என்றல்லவா அடிகளார் பாடுகின்றார்!

இப்படிப் பாடிக்கொண்டு வரும்போதே மதுரையில் நடந்த கதை அவர் மனத்தில் நிழலாடுகின்றது. ஆதலால், அத்தொடரைப் 'பித்தனே' என்ற சொல்லோடு முடிக்கின் றார். அவன் பித்தன் ஆதலால், கூலிக்கு ஏற்ற வேலை செய்யவில்லை என்ற பொருளும் இதில் அடங்கியுள்ளது.

இவையல்லாமல் மற்றொரு அற்புதமான பொருளும் 'பித்தன்' என்ற சொல்மூலம் கிடைக்கின்றது.

இந்தக் கூலியாள் வாங்கியுண்டது சாதாரணப் பிட்டு; ஆயிரக்கணக்கானவர் அன்றாடம் உண்டு வயிற்றை நிரப்பும் மிக எளிய ஆகாரமாகும் இது. இந்தப் பிட்டை வாங்கி உண்டுவிட்டு, அதற்குப் பதிலாக என்ன பயனைத் தந்தான் தெரியுமா அப்பித்தன்? அப்பிட்டைத் தந்தவளுக்கு வீடுபேற்றை அல்லவா நல்கினான்!

ஒரு பிடி அரிசிப் பிட்டிற்காக வீடுபேற்றை அல்லவா விற்றுவிட்டான். ஆதலால், அவனைப் பித்தன் என்கிறார் என்று பொருள் கொள்வதில் தவறில்லை.

470ஆம் பாடலின் இரண்டாமடியில் வரும் 'விலங்கினேன்' என்ற சொல் அடிகளார் மனநிலையைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது. பெருந்துறைக் குருநாதர் அடியார் கூட்டத்திடையே தம்மை இருக்கச்செய்து, அடுத்து உடனே மறைந்துவிட்டார். மறைந்தது குருநாதர் செயலே; அச்செயலுக்கு அடிகளார் எவ்விதத்திலும் பொறுப்பாகமாட்டார்.

அடியார் கூட்டத்திடை இருக்குமாறு செய்தவரும் குருநாதர்; அவர்களிடையே அடிகளாரைத் தங்குமாறு செய்தவரும் குருநாதர்; அடிகளாரை விட்டுவிட்டு அடியார்களோடு மறைந்தவரும் குருநாதர். அடிகளாரை, அடியார் கூட்டத்தோடு செல்ல வொட்டாமல் தடுத்து நிறுத்தியவரும் குருநாதர்தானே! இதனை உள்ளவாறு பாடுவதாய் இருப்பின், 'விலக்கினாய்' என்று சொல்லி இருக்க வேண்டும். குருநாதர் செய்த காரியத்திற்குத் தம்மை பொறுப்பாக ஆக்கிக்கொண்டு 'நான் விலகிவிட்டேன்' (விலங்கினேன்) என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? தருக்க ரீதியாக இக்கூற்றுப் பொருந்தா விடினும், இந்தச் சொல்லாட்சி ஒரு கருத்தை வலுவாக எடுத்துக்காட்டுகிறது.

அடியார் கூட்டத்துடன் உடன்செல்லாதது தம் குறையே என்றும், அதற்குக் காரணமாக இருந்தது இந்தப் பூதவுடலே

என்றும், இதுவரை பலப்பலப் பாடல்களில் அடிகளார் கூறிவருகிறார். இங்கேயும் அதே கருத்துப் பேசப்பெறுகிறது. அதிலும் சிறப்பாக 'விலங்கினேன்' என்ற சொல்லுக்கு முன்னும்பின்னும் பயன்படுத்தப் பெறும் சொற்களை, கருத்துக்களை இணைத்துச் சிந்தித்தால் 'விலங்கினேன்' என்ற சொல்லின் ஆழம் நன்கு வெளிப்படும்.

'எப்படிப்பட்டவரை விட்டுவிட்டு விலங்கினேன் தெரியுமா? கொஞ்ச உபகாரமா செய்தார் அவர்! மலங்கி நின்ற என் கலக்கத்தைப் போக்கினார். அதுமட்டுமா? செய்வதறியாது திகைத்துக் கண்ணீர் சோர நின்ற என் கண்ணீரையும் அல்லவா மாற்றினார். எத்தனையோ பிறவிகளை நான் தாண்டிவந்தும் என்னையும் அறியாமல் மேலும் பிறவிகளைத் தர எனக்குப் பின்னே வரும் மலங்கள் அனைத்தையும் அழித்தார். என் வினையால் கேடு சூழப்பட்டவனாகிய என்னை மலங்கெடுத்து மாற்றினார். இவ்வளவு உபகாரங்களை அவர் செய்திருந்தும் அவரோடு சென்றிருக்க வேண்டும் என்பதை மறந்து, செய்வதறியாமல் திகைத்து, உடன்செல்லாமல் தங்கி விட்டேன். இவ்வாறு தங்கியதால் பெற்ற நட்டம் என்னுடையதேதவிர, குருநாதருக்கு எவ்விதக் குறையு மில்லை. ஆனால், ஆழ்ந்து சிந்தித்தால் குருநாதருக்குக்கூட, ஒரு குறை ஏற்படுமாறு செய்துவிட்டேன். பெருந்துறையில் அவர் திருவடிகளை வைப்பதற்குரிய தாங்கு பலகையாக அல்லவா என் தலை இருந்தது! இப்பொழுது அவருடன் செல்லாமையால் அவர் சென்றுள்ள இடத்தில் திருவடிகளை வைப்பதற்குரிய இடம் அகப்படாமல் வருந்துவார். அவர் செய்த உபகாரங்களை மறந்தவனாகிய நான், அந்த உபகாரங்களுக்கு நன்றி பாராட்டாதவனாகிய நான் அவர் வருந்துவதற்கும் காரணமாக அமைந்துவிட்டதை நினைக்கும்போது எல்லையற்ற துயரத்திற்கு ஆளாகிறேன். (கலங்கினேன்).

'குருநாதரின் திருவடிகளைத், தாங்குகின்ற தாங்குபலகை என்னுடனேயே இருந்துவிட்டதை நினைந்துநினைந்து கலங்கினேன். அந்தக் கலக்கத்தைப் போக்கவேபோலும், கழுக்குன்றில் குருநாதரையும், அவர் திருவடிகளையும் காணும் வாய்ப்புப் பெற்றேன். என் தலை இல்லாவிடினும், அவருடைய திருவடிகள் ஏதோ ஒரு வைப்பிடத்தின்மேல் அமைந்திருந்ததைக் கண்டு இக்கலக்கம் தெளிந்தது' என்கிறார் அடிகளார்.

தோணியில் ஏறிக் கடலில் செல்பவர்கள் ஒரு குறிப்பிட்ட இலக்கை மனத்துட்கொண்டு அந்த இடத்திற்கே தோணியைச் செலுத்துவர். திருவாதவூரரென்ற அமைச்சர், அரசியல், சமூக இயல், வாழ்வியல் என்ற கடலிடை இதுவரை நீந்திவந்துள்ளார். நீந்திக் களைத்த அவருக்குத் திருப்பெருந்துறை என்ற ஞானத்தோணி கிடைத்தது. தம்மைச் சுற்றியிருந்த வாழ்வை உதறிவிட்டு அத்தோணி யில் ஏறி அமர்ந்து அதனைச் செலுத்தத் தொடங்கினார். தோணியைத் தந்தவர், அது எங்கே செல்லவேண்டும் என்பதை ஐயத்திற்கிடமின்றிக் 'கோலமார்தரு பொதுவினில் வருக' என்று ஆணையிட்டு மறைந்தார்.

தோணியைச் செலுத்திய அடிகளார் பொதுவினில் சென்றபொழுது தோணிக்காரரைக் காணமுடியும் என்று நம்பினார். ஆனால், அந்தப் பொல்லாத தோணிக்காரர் அவர் கண்களில் தட்டுப்படவில்லை. வேறுவழியின்றித் தோணிக்கார ராகிய குருநாதரைத் தேடிக்கொண்டு ஊர்ஊராகச் செல்கிறார். அவர் எதிர்பார்த்த தில்லையில் காணப்படாத அந்தக் குருநாதர் சற்றும் எதிர்பாராத வகையில் கழுக்குன்றத்தில் காட்சி தருகிறார். அடிகளாரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அதனையே 'பெருந்துறைப் பெருந்தோணிபற்றி உகைத்தலும் காணொணாததோர் கோலம் (குருநாதர் கோலம்) நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' (471) என்று பாடுகிறார்.

இப்பிரபஞ்சம் முழுவதும் தோன்றுவதும் மறைவதும் மறுபடியும் தோன்றுவதும் காலம் என்று சொல்லப்படும் நான்காவது பரிமாணத்தில் (4th didmension) ஆகும் என்ற இன்றைய விஞ்ஞானக் கருத்தை மெய்ஞ்ஞானியாகிய அடிகளார் எட்டாம் நூற்றாண்டிலேயே கண்டு மிகத் தெளிவாகப் பாடியுள்ளார். இதனை 'மேலை வானவரும்' (திருவாச:47) என்று தொடங்கும் திருச்சதகப் பாடலின் விளக்க உரையில் விரிவாகக் கூறியுள்ளோம்.

முக்கூட்டுப் பரிமாணமுடைய இந்தப் பிரபஞ்சம் காட்சிக்கும் தொடு உணர்ச்சிக்கும் இடந்தந்து நிற்கிறது. ஆனால், காலம் ஆகிய நான்காவது தத்துவம், காட்சி முதலிய எதற்கும் கட்டுப்படாமல் நம்முடைய அறிவு, கற்பனை ஆகியவற்றிற்கும் கட்டுப்படாமல் விரிந்து நிற்கின்றது. சாதாரணமான காலக் கணக்கைப் பகல், இரவு, விண்மீன்களின் போக்குவரத்து ஆகியவற்றைக் கொண்டு நாம் கணக்கிடுகிறோம். ஆனால், காலதத்துவத்தை இந்த மாறுதல்களைக் கொண்டு கணக்கிட முடியாது. பகலையும் இரவையும் காணலாமே தவிர இந்தப் பகலும் இரவும் தோன்றி மறைவதற்குக் காரணமாகவுள்ள காலதத்துவத்தை எவ்விதத்திலும் நாம் காணமுடியாது.

காலாதீத மூர்த்தி என்று சொல்லப்படும் இறைவன் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலத்தையும் கடந்து நிற்பவன் ஆவான். ஆகவே, அவனைக் காணுதல் என்பது இயலாத காரியம்.

அப்படியிருந்தும், அடிகளார் 'காலதத்துவ சொரூபனே உனை நான் நச்சி நச்சி ஓத, என்மேல் கொண்ட கருணை காரணமாகக் கழுக்குன்றில் வந்து உன்னை நீ காட்டினாய்' என்று பாடுகிறார்.

குருநாதர் என்ற வடிவுக்கு உட்பட்டோ, அல்லது பெருந்துறை நாயகன் என்ற வடிவுக்கு உட்பட்டோ அவர்

காட்சி தரும்பொழுது, அண்டம், பிண்டமாகக் காட்சி யளிக்கிறது என்பதை அடிகளார் உணர்கின்றார். இந்தப் பிண்டத்தை (குருநாதர் வடிவை) அடிகளார் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைந்து 'அண்டபேரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி ஆனந்த' வடிவுடன் காட்சி தருவதை அவரால் காணமுடிகிறது.

பந்துக்குள் அடைக்கப்படும் காற்று வெளியே தெரியாவிட்டாலும், பந்தின் வடிவை ஏற்று அதனுள் நிறைந்திருப்பதுபோல் கண்ணுக்குத் தெரியாத, கற்பனைக்கு எட்டாத, காலம் என்ற தத்துவம் குருநாதர் வடிவினுள் தங்கிவிடுகிறது. அதனையே 'காலமே உனை ஓத நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' (472) என்று பாடுகின்றார்.

இறையருள் அனுபவத்தில் எந்நேரமும் மூழ்கித் திளைக்கின்ற அடிகளார் போன்றவர்களுக்குக்கூட, இப்பருவுடம்புடன் வாழ்கின்ற காரணத்தால் ஓரோவழி சாதாரண மக்களைப்போல் உலகியல் நிலைக்குத் திரும்பி அதன் நடைமுறைகளைக் கவனிக்கும் நிலை வந்து விடுகிறது.

'எனை நான் என்பது அறியேன் பகல் இரவாவதும் அறியேன்' என்பது இறையனுபவத்தின் அதீத நிலை. இந்த அதீத நிலையிலிருந்து இரண்டாவது நிலைக்கு இறங்கு கின்ற சூழ்நிலைகளும் உருவாதல் கூடும். அந்தநிலையில் பிறர் பேசுவதில், ஒரு சில பகுதிகளில் நாட்டம் செல்லும், 'பித்தன்' என்று எனை உலகவர் பேசுவது ஓர் காரணம். 'இது கேளீர்' (431) என்றும், 'நான் ஆர் என் உள்ளம் ஆர், ஞானங்கள் ஆர் என்னை யார் அறிவார்?' (216) என்றும் பேசுவது இரண்டாவது நிலையாகும். இதனை அடுத்த மூன்றாவது நிலையில் சாதாரண மக்களைப்போலப் பிறருடைய பேச்சுக்களைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் நிலை தோன்றுகிறது.

இப்படிப்பட்ட மூன்றாவது நிலையில்தான் 473ஆம் பாடல் தோன்றுகிறது.

பிறரை ஏதிலார் என்றும், நண்பர் என்றும் பிரித்துக் காணுகின்ற நிலை நம்போன்ற சாதாரண மக்களின் மனநிலையாகும். அந்த நிலையில்தான் அவர்கள் பேசிய பேச்சுக்களை ஆராய்ந்து, இது ஏதமுடைய பேச்சு என்ற முடிவுக்கு வரும் நிலை ஏற்படுகிறது. இந்த மனநிலையில் நின்று அவர்கள் பேச்சைக் காதில் வாங்கிக்கொண்ட அடிகளாருக்குக் குருநாதர் செய்த செயலை உணரவோ அறியவோ உள்ள வாய்ப்பு நழுவிவிடுகிறது. ஆதலால்தான், 'ஐயா! நீ எனை ஏதிலார் முனம் என் செய்தாய்' என்ற கேள்வி பிறக்கிறது.

முதல் நிலையில் அவர் ஆட்கொண்டதும், வினையைக் கெடுத்ததும் பிறவியை வேரறுத்ததும் அமுத தாரைகளை எற்புத் துளைதொறும் ஏற்றியதும் உணரும் வாய்ப்பு இருந்தது. இதனை அறிதல் முடியாது; உணரத்தான் முடியும். ஆதலால், உணரும் வாய்ப்பு என்று கூறுகிறோம்.

இரண்டாவது நிலையில் இந்த உணர்வுநிலை பெரும் பகுதி மழுங்கிவிட, அறிவு தலைப்பட்டுப் பணிசெய்யத் தொடங்குவதால், 'நான் யார்' முதலிய வினாக்கள் தோன்றின. தம்மைப் பிறர் பித்தன் என்று ஏசுகிறார்கள் என்று அறிந்துகொள்வது அறிவின் செயற்பாடாகும். ஆனால், இந்த நிலையிலும்கூட 'நான்ஆர்' என்ற வினாவை அடுத்து, 'வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்' என்ற உணர்வு, அறிவை அடக்கி மேலெழுகின்றது. அதேபோலப் பிறர் பைத்தியம் என்று கூறுவதைக் கேட்டவுடன் அந்தக் கூற்றிலுள்ள இகழ்ச்சிக் குறிப்புத் தெரிந்தாலும் அதுவரை வேலைசெய்த அறிவை மடக்கி உணர்வு மேலெழுகின்றது. அதன் பயனாகச் 'செத்துப் போய் அருநரகிடை வீழ்வதற்கு ஒருப்படுகின்றேனை அத்தன் ஆண்டு'கொண்டான் (431) என்ற அமைதி கிட்டுகின்றது.

மூன்றாவது நிலையில் இந்த உணர்வு வெளிப்படவே யில்லை. அறிவுமட்டும் தொழிற்படுகின்ற காரணத்தால் ஏதிலார் பலர் காட்சியளிக்கின்றனர்; அவர்கள் பேசிய ஏதம் காதில் விழுகிறது; உணர்வு பணிபுரியத் தொடங்காமையால் சாதாரண மக்களைப் போல இந்த நிலைக்கு நீ என்னை ஆளாக்கிவிட்டாயே! என்ற துயரங் கலந்த குரல் வெளிப்படுகிறது.

ஒரே பதிகத்தில் முதல் இரண்டு மூன்று பாடல்களில் முதல் நிலையும், அடுத்த இரண்டு பாடல்களில் இரண்டாவது நிலையும், இந்தப் பாடலில் (473) மூன்றாவது நிலையும் பேசப்பெறுவதைக் காண்கிறோம்.

குருதரிசனம், கணக்கிலாக் கோலம், கால தத்துவம் என்பதை உணர்ந்து பாடுவது முதல்நிலை: நாண் ஒணாத ஓர் நாணம் பற்றிப் பேசுவது இரண்டாவது நிலை; 'நீ எனை ஏதிலார் முன் என்செய்தாய்?' என்று கேட்பது மூன்றாவது நிலை.

474 ஆம் பாடலின் நான்காவது அடியில் வரும் 'கயக்கம்' என்ற சொல், எந்தக் கலக்கத்தைக் குறிக்கிறது? இதே பாடலில் 'துயக்கு அறுத்து எனை ஆண்டுகொண்டு, நின் தூமலர்க் கழல் தந்தாய்' என்று சொல்லுகின்ற வரையில் முன்னர்க் கூறிய முதல்நிலை (இறையுணர்வில் முழுவதும் அழுந்திய நிலை) பேசப்பெறுகிறது. நான்காவது அடியிலுள்ள 'அடியார் முனே வந்து காட்டினாய்' என்பதில் குருநாதர் தரிசனம், அடியார் கூட்ட தரிசனம் என்ற இரண்டும் காட்டப்பட்டதால் முன்னர்க் கூறிய இறையனுபவ நிலை முழுத்தன்மை பெறுகிறது.

இதனிடையே 'கயக்க வைத்து' என்ற தொடர் எவ்வாறு புகுந்தது? ஆழ்ந்து சிந்தித்தால், இதற்கு முந்தைய பாடலில் பேசப்பெற்ற மூன்றாவது நிலையையே இத் தொடர் குறிக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

இப்பகுதியில் ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய பாடல்களில் தொடங்கிய இறையனுபவ நிலை ஆறாவது (473)பாடலில் முற்றிலும் இழக்கப்பெற்றுச் சாதாரண உலகியல் நிலைக்கு வந்து, மறுபடி ஏழாவது (474) பாடலில் ஒன்று, இரண்டு, மூன்றில் சொல்லப்பெற்ற உணர்வு நிலைக்குத் திரும்புகிறது. இந்த உணர்வு நிலையின் உச்சகட்டம் ஒன்றிலும், ஏழிலும் (468, 474) நிலைபெற, இறங்குமுகத்தின் எல்லை ஆறாம் (473) பாடலில் வெளிப்படுகிறது.

இவ்வாறு அவருடைய உள்ளத்தில் 'நீ என் செய்தாய்' என்று கேட்கும் அளவிற்குக் கீழே இறங்கிய பிறகுதானே அடியார் கூட்ட தரிசனம் கிடைக்கின்றது. அதனையே அடிகளார் ஒருசில விநாடிகள் என்னைக் 'கயக்க வைத்து' (473-ஆறாவது பாடல் நிலைக்குத் தள்ளி) மறுபடியும் அடியார் தரிசனத்தைக் காணும் உச்சகட்டத்திற்கு ஏற்றினாய் என்கிறார்.

இறையனுபவம்கூட ஏறி, இறங்கும் இயல்புடையது என்று தொடர்ந்து நாம் கூறிவரும் கருத்திற்குத் திருக்கழுக்குன்றப் பதிகம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கண்ட பத்து

தேவாரம் பாடிய மூவரும், அடிகளாரும் தில்லைக் கூத்தனின் நிருத்தத்தைக் கண்டு பல பாடல்கள் பாடியுள்ளனர். அவர்களுள் காலத்தால் மிக முற்பட்டவராகிய நாவரசரும், நால்வரில் காலத்தால் பிறபட்டவராகிய அடிகளாரும் தில்லையில் பல்வேறு விதமான அனுபவங்களைப் பெற்றுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. அவர்கள் பெற்ற அனுபவங்களில் சிலவற்றிற்கு வடிவு கொடுத்து இந்த இரண்டு பெருமக்களும் பாடியுள்ளனர்.

'என்று வந்தாய் என்னும் எம்பெருமான்தன் திருக்குறிப்பே' (திருமுறை:4-81-2) 'அத்தா நின் ஆடல்

காண்பான் அடியனேன் வந்தவாறே' (திருமுறை: 4-23-1) என்றும், என்றும் நால்வரில் மூத்தவராகிய நாவரசர்பெருமான் பாடியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. கூத்தனின் அபய கரத்தைக் கண்டு 'என்று வந்தாய்' என்று கேட்பதுபோல அமைந்துள்ளது என்று பாடிய நாவரசர், அதற்கு விடை கூறுவதுபோல 'நின் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே' என்று பாடுகின்றார்.

மூவர் முதலிகள் வரலாற்றில் இவர்கள் யாரையும் 'தில்லைக்கு வருக' என்று இறைவன் கட்டளையிட்டதாக எந்தச் செய்தியும் இல்லை. மூவர் வரலாற்றைக் கூறும் பெரியபுராணம்போல, அடிகளார் வரலாற்றைக் கூறும் நூல் இல்லையென்பது உண்மைதான். திருப்பெருந்துறை நிகழ்ச்சியில் தம்மை விட்டுவிட்டு மறைவதற்கு முன்னர்க் குருநாதர் தில்லைக்கு வருக என்பதைக் 'கோலம் ஆர்தரு பொதுவினில் வருகென ஏல என்னை ஈங்கொழித்து அருளி' (திருவாச:2-128-129) என்று அடிகளாரே பாடுகின்றார். ஆதலின், குருநாதரின் ஆணையைச் சிரமேற்கொண்டே அடிகளார் தில்லை வந்தார் என்று நினையவேண்டியுள்ளது.

திருஉத்தரகோசமங்கை, திருவண்ணாமலை, திருக்கழுக் குன்றம் ஆகிய எத்தனையோ தலங்களுக்குச் சென்று தரிசித்ததுபோலத் தில்லைக்கும் வந்திருக்கலாம் அல்லவா என்று ஐயுறுவார்க்கு விடைகூறுவதுபோல, குருநாதரின் கட்டளை இது என்று அடிகளார் விடை கூறுகின்றார்.

அப்படியானால் தில்லைக்கு வரும்போதே அடிகளார் மனத்தில் பலப்பல எதிர்பார்ப்புக்கள் நிறைந்திருக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை. அந்த எதிர்பார்ப்புகளை இனிக் காணலாம்.

மறைந்துபோன குருநாதரையும் அடியார் கூட்டத்தையும் தில்லையில் காண முடியும் என்று எதிர்பார்த்திருக்கலாம்.

தில்லையில் அருளியது என்று உறுதியாக அறியக்கூடிய கோயில் மூத்த திருப்பதிகம், கண்ட பத்து என்ற இரண்டிலும் அவர் எதிர்பார்த்து வந்த எதுவும் நடைபெறவில்லை என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. கோயில் மூத்த திருப்பதிகத்தில் அடியாரிடையே இருக்கும் அருளைப் புரியாய் என்று பத்துப் பாடல்களிலும் ஒரே கருத்தை வலியுறுத்திப் பாடியவர், கண்ட பத்தில் முற்றிலும் வேறு வகையான சிந்தனையை ஓடவிடுகிறார். குருநாதரைக் காணவேண்டும், அடியார் கூட்டத்திடையே அமரவேண்டும் என்ற எண்ணம் எதுவும் அவர் மனத்தில் தோன்றியதாக இந்தப் பதிகத்தில் எந்தக் குறிப்பும் இல்லை.

பத்துப் பாடல்களிலும் பொதுவாக, பிறவியின் இழிவு, குறிப்பாகத் தம் பிறப்பின் இழிவு என்பவற்றை வரிசைப் படுத்திப் பாடுகின்றார். இப்படிப்பட்ட இழிந்த நிலை யிலிருந்த தம்முடைய பிறப்பை அறுத்து ஆட்கொண்ட வரைத் தில்லையில் கண்டேன் என்று எட்டுப் பாடல்களில் பேசுகிறார். ஆனால், தில்லைக்கூத்தனைப் பற்றிய வருணனையோ அவன் ஆட்டம்பற்றிய செய்தியோ அவன் வடிவழகைப்பற்றிய செய்தியோ கூறும் எந்த ஒரு சொல்லும் கண்ட பத்தில் இடம்பெறவில்லை. அப்படியானால் பிறப்பை அறுத்தவரை 'அணிகொள் தில்லை கண்டேனே' என்ற தொடருக்கு என்ன பொருள் கொள்வது? அன்றியும் இச்செய்தி இங்குப் புதிதாகப் பேசப்படவில்லை. குருநாதர் பிறப்பை அறுத்த செய்தி முன்னரே பலப்பல பாடல்களில் பேசப்பெற்றுள்ளது.

'பொதுவினில் வருக' என்று கட்டளையிட்ட குருநாதர் எதற்காக அக்கட்டளையை இட்டார் என்று அடிகளார் சிந்திக்காமலா இருந்திருப்பார்! எதற்காக என்ற வினா அவருடைய மனத்தில் பலமுறை தோன்றியிருக்க வேண்டும். ஆனால், அதற்குரிய விடை எங்கும் நேரடியாகப் பேசப்பெறவில்லை.

இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு தில்லையில் அருளப்பெற்றதாகிய கோயில் மூத்த திருப்பதிகம், கண்ட பத்து என்ற இரண்டையும் ஒருங்குவைத்து மறுபடியும் படித்துப்பார்த்தால் இரு வேறு கருத்துக்கள் இந்த இரு பதிகங்களிலும் நிமிர்ந்து நிற்பதைக் காணமுடியும்.

கோயில் மூத்த திருப்பதிகத்தில் அடியார் நடுவுள் இருக்கும் ஒரே யொரு காரியம்தான் வேண்டப்படுகிறது. அந்த வேண்டுதல் வெளிப்படையாகவும், விளக்கமாகவும் பேசப்பெறுகிறது. ஆனால், கண்ட பத்தின் பத்துப் பாடல்களிலும் 'தில்லை கண்டேனே' என்று பாடியவர், ஒரு பாடலிற்கூட அவன் யார் என்று கூறவில்லை.

கண்டேன் என்ற சொல் கண்ணாகிய பொறியால் காணப்பெறும் இயல்புடைய பருப்பொருளையும் நற்பண்புகளைக் கருத்தால் கண்டேன் என்ற நுண்பொருளையும் கூறுகின்ற மரபு பண்டுதொட்டே உண்டு. கண்ட பத்தில் வரும் கண்டேனே என்ற சொல் கட்பொறி மூலம் காண்பதையே குறிக்கின்றது.

இதன் எதிராக, 'அந்தமிலா ஆனந்தம்' கண்டேன் (475) என்றும், 'சிவபதத்தைக்' கண்டேன் (477) என்றும், 'கோதில் அமுது ஆனானை'க் கண்டேன் (479) என்றும், 'கிளர் ஒளியைக்' கண்டேன் (484) என்றும் பாடுவது காணப்பட்ட பொருளுக்குப் பருவடிவு இல்லை என்பதைக் குறிக்கும். ஆனந்தத்தையும், சிவபதத்தையும் கண்டேன் என்று கூறுவது மரபு வழுவாகும்.

இவைபோகப் பின்வரும் இடங்களில் 'இணையிலியைக் கண்டேன்' (476) என்றும், 'பசு பாசம் அறுத்தானைக் கண்டேன்' (478) என்றும், 'உலகுடைய ஒரு முதலைக் கண்டேன்' (480) என்றும், 'வித்தகனார் விளையாடல் கண்டேன்' (481) என்றும், 'என்னை ஆண்டானைக் கண்டேன்' (482) என்றும், 'வான் கருணை தந்தானை' (483)

என்றும், 'பேதமிலாப் பெருமையனை' (484) என்றும் வருகின்ற பகுதிகளில் யாரைக் கண்டீர்கள் என்ற வினாவிற்கு நேரடியான விடையில்லை. இன்ன செயல்களைச் செய்தவன் என்ற படர்க்கை ஒருமை ஆண்பால் வினைமுற்றாக வருகின்ற சொற்களுக்குத் தில்லைக்கூத்தன் என்று பொருள் சொல்ல வாய்ப்பில்லை.

பிறப்பை அறுத்தவர் குருநாதர் என்று வலுவாக நம்பினார் அடிகளார். அப்படி அறுத்தவரை அணி கொள்தில்லை கண்டேன் என்றால், குருநாதரை, குருநாதர் வடிவத்தில், தில்லையில் கண்டார் என்று பொருள் கொள்வதா? இவ்வாறு பொருள் கொள்ள இடமுண்டு. அதில் தவறில்லை என்றாலும், அது மனநிறைவு தருவதாக இல்லை.

இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு மறுபடியும் சிந்திக்கத் தொடங்கினால் இந்தப் பதிகத்தில் ஒரு புதுமையைக் காணமுடியும்.

பிறப்பின் இழிவு, அதனைப் போக்கியவரின் கருணை என்பவை எட்டுப் பாடல்களில் இடம் பெற்றிருக்க, இந்தக் கருத்தோடு எவ்விதத் தொடர்பும் இல்லாமல் ஒரு பாடல் நிற்கிறது. அந்த ஒரு பாடல் பிறப்பின் இழிவு பற்றிக் கூறவில்லை. பிறப்பு என்று சொல்லும்போது இந்தப் பரு உடலை மட்டும் நாம் குறிப்பிடுவதில்லை. பருஉடலோடு இணைந்து கலந்து நிற்கின்ற உயிரையும் சேர்த்துத்தானே கூறுகிறோம்! அப்படியானால், உடம்பெடுத்த உயிர், அதற் குரிய உயர்ந்த தன்மையைப் பெறாமல், இந்த உடலோடு சேர்ந்த காரணத்தால், இழிந்த பல செயல்களுக்கும் உடந்தையாகிவிடுகிறது என்பதுதானே பொருள்? இந்தக் கருத்துத்தானே எட்டுப் பாடல்களில் பேசப்பெறுகிறது?

'இந்திரிய வயமயங்கி' (475) என்றும், 'வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டு' (476) என்றும், 'கல்லாத

புல்லரில் கடைப்பட்ட நாயேனை' (478) என்றும், 'சாதி குலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை' (479) என்றும், 'அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டு இங்கு அறிவு இன்றி...வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு' (482) என்றும், 'பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை' (483) என்றும் பாடுவதைப் பார்த்தால் அடிகளார் தம் உடம்பைப்பற்றி இங்கே கூறவில்லை; உடம்போடு கலந்த உயிரையே பேசுகிறார் என்பதை நன்கு தெளியலாம்.

இத்தனை குற்றங்களையும் தம் உயிரோடு இணைத்துப் பாடிவிட்டு, இத்தனை குற்றங்களையும் பொறுத்துக் கொண்டு பிறவியை வேர் அறுத்தவரைத் தில்லையில் கண்டேன் என்று பாடுகிறார் அடிகளார். இத்தோடு அவர் நின்றிருந்தால் தனிப்பட்ட முறையில் சிந்திப்பதற்குத் தேவை எதுவும் இல்லை. பல குற்றங்களுக்கும் இடமாகவுள்ள தம் உயிர், அதன் விளைவாக இந்தப் பிறவியை எடுத்த உயிர், பிறவியைப் போக்கிய குருநாதர் என்று நேரே பொருள் கொண்டுவிடலாம்.

இந்தப் பொதுத்தன்மைக்கு மாறாக, இன்னும் சொல்லப்போனால், திருவாசகத்தின் மிகப்பெரும் பகுதி யில் காணப்பெறும் போக்கிற்கு மாறாக, ஒரு பாடல் இந்தக் கண்ட பத்தில் தனித்து விளங்குகிறது. அதுவே 'உருத் தெரியாக் காலத்தே' (477) என்று தொடங்கும் பாடலாகும்.

இதுவரை திருப்பெருந்துறையில் குருநாதர் வடிவுடன் வந்தவர்தாம் திருவடி தீட்சை செய்து, தம்மை ஆட்கொண்டு தம் பிறவியை வேரறுத்தார் என்று பாடிவந்த அடிகளார், இந்த அடிப்படை முழுவதையும் மாற்றி, இப்பாடலைப் பாடுகின்றார்.

தம்முடைய உயிர் (ஆன்மா) ஓர் உடம்பினுள் புகுவதற்கு முன்னரே சூக்கும வடிவில் இருக்கும்பொழுதே, (உருத்

தெரியாக் காலத்தே) அவ்வுயிரினுள் புகுந்து (உட்புகுந்து) அதன் உள்ளத்தில் நிலைபேறாக (உளம் மன்னி) நின்றுவிட்டான். பின்னர் இந்த உயிர் திருவாதவூரர் என்ற கருவினுள் புகுந்தபோது (ஊன் புக்கு) அந்தக் கரு இடையே கலைந்து அழிந்துவிடாமல் அதனைத் திருத்திக் (கருத் திருத்தி) காத்தான். பின்னர் அந்த உயிரையும், உயிர் புகுந்த உடலையும் அவற்றின் தகுதி பாராமல் கருணையினால் ஆண்டுகொண்டான்.

தன் திருவடியைத் திருவாதவூரரின் தலையின்மேல் வைத்ததால் அந்த உடலை ஆட்கொண்டான். எல்லையற்ற ஆனந்த சாகரத்தில் அடிகளாருடைய உயிர் அழுந்தி நிற்குமாறு செய்தமையின் உயிரையும் ஆட்கொண்டான்.

இவ்வாறு கூறுவதால் திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்கு முன்னரே திருவாதவூரரின் ஆன்மாவில் இறைவன் புகுந்து விட்டான் என்பது தெளிவு. அப்படியானால் திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குத் தேவை என்ன? முன்னரே ஊன் புக்குக் கருணையினால் ஆண்டுகொண்டான் என்றால், திருப்பெருந்துறை நிகழ்ச்சியால்தான் திருவாதவூரர், மணிவாசகராக மாறினார் என்று நாம் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

ஆழ்ந்து சிந்தித்தால் உண்மை விளங்கும். எல்லா உயிர்களிலும், எவ்வளவு பாவப்பட்ட ஜென்மம் ஆயினும் அந்த ஆன்மாவினுள்ளும், இறைவன் ஒளித்து உறைகின்றான் என்பதை மறுக்கமுடியாது. அப்படி அவன் ஒளித்து உறைந்தாலும், ஓர் உடலில் புகுந்த அந்த உயிர் சஞ்சித, பிராரத்துவ வினைகளுக்குக் கட்டுப்பட்டதாகலின் அதற்குரிய செயல்களை இந்த உடம்புடன் உள்ள உயிர் செய்யும்போது, உள்ளேயுள்ள இறைவன் அதில் தலையிடுவதே இல்லை.

(பகவான் கண்ணன் கூடவே இருப்பினும், தருமர் முதலியோர் பிராரத்துவ வினை காரணமாக 13 ஆண்டுகள் காட்டில் வாழும்போது கண்ணன் தலையிடவேயில்லை.)

அமைச்சராக இருந்து திருவாதவூரர் செயல் செய்யும் பொழுது இறைவன் அதற்குப் பொறுப்பாவதில்லை. திருப் பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பின்னர், மணிவாசகரின் உடல், பொருள், ஆவி அனைத்தும் கூத்தனிடம் ஒப்படைக்கப் பெற்றுவிட்டதாகலின் இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் மணிவாசகர் செய்த செயல்களுக்குக் கூத்தன் பொறுப்பே தவிர, அடிகளார் பொறுப்பில்லை. உருத் தெரியாக் காலத்து உள் புகுந்து ஊன் புக்குக் கருணையினால் ஆண்டு கொண்டான் எனினும், திருப்பெருந்துறை நிகழ்ச்சி நடைபெறுகின்ற அந்த விநாடிவரை அடிகளார் செய்த செயல், வினைக் கட்டுக்குள் அடங்கிய திருவாதவூரர் செயல்களேயாம்.

எல்லா உயிர்களையும் படைத்து, அவற்றின் உள்ளேயே அந்தர்யாமியாய் நின்று கருணை பாலித்து, இறுதியாக உயிர்களை ஆண்டுகொள்பவன் இறைவன். ஆதலால், தம்மைமட்டு மின்றி எல்லா உயிர்கட்கும் பொதுவான ஒரு கருத்தை இப்பாடலில் பாடியுள்ளாரோ என்ற ஐயம் ஏற்படும்பொழுது 'அது சரியன்று' என்பதை இப்பாடலிலுள்ள ஒரு சொல் வலுவாக நிறுவுகிறது. அந்த அற்புதமான சொல் 'என்' உளம் மன்னி என்பதாகும்.

எனவே, இப்பாடலில் கூறப்பட்ட உயிர் அடிகளாருடையதே என்பது நன்கு விளங்குகிறது. புல் முதல் விலங்குவரையுள்ள உயிர்கள் ஐயறிவின ஆதலானும், அவற்றுக்கு மனம் என்ற ஒன்று இல்லை ஆதலானும் இந்தப் பட்டியலிலிருந்து அவற்றை நீக்கிவிடலாம்.

அடுத்து, பல்வேறு இயல்புடைய மனிதப் பிறப்புகளுள் புகுந்து புறப்படுதல் ஓர் உயிருக்கு இயல்பு ஆதலால், வேறு

ஏதேனும் முற்பட்ட ஒரு மானிடப் பிறப்பை அடிகளார் குறிக்கிறாரோ என்றால், அதுவும் இல்லை என்பதை 'உளம் மன்னி' என்ற சொற்கள் வெளியிடுகின்றன. முற்பட்ட ஒரு மானிடப் பிறப்பில் உள்ளத்தில் கூத்தன் குடிபுகுந்திருப்பானேயானால், கருணையினால் ஆண்டு கொண்டிருப்பானேயானால், அந்த உயிர் மீட்டும் ஒரு பிறப்பெடுத்தல் நடவாத காரியம்.

தருக்க ரீதியாக இப்பாடலின் முதலடியை ஆராய்ந்தால் 'உருத் தெரியாக் காலத்தே உள்புகுந்து என் உளம் மன்னி கருத் திருத்தி கருணையினால் ஆண்டு' கொண்டது திருவாதவூரர் என்ற தனிமனிதனின் இந்தப் பிறப்பையே ஆகுமென்பது தெளிவாகும்.

ஏனைய பாடல்களில் வருவதுபோலப் பிறப்பின் இழிவு இந்தப் பாடலில் (477) பேசப்பெறவில்லை. பிறப்பை அறுத்ததும் இப்பாடலில் இடம்பெறவில்லை. அதற்குப் பதிலாக உருத் தெரியாக் காலத்து உள் புகுந்த செய்தி, உளம் மன்னிய செய்தி, கருவைத் திருத்திய செய்தி, ஊன் (இந்த உடம்பில்) புக்க செய்தி, தராதரம் பாராமல் கருணை காரணமாக ஆண்டுகொண்ட செய்தி ஆகிய இத்தனையும் இரண்டு அடிகளிலேயே இடம்பெறுகின்றன.

அணிகொள் தில்லை கண்டேனே என்று பாடினாலும், தில்லைக் கூத்தனோ, குருநாதரோ இந்தப் பாடலில் பேசப்பெறவில்லை என்பதை நினைவில் கொள்வது நலம். அப்படியானால் அணிகொள் தில்லையில் எதனைக் கண்டார்? இந்தப் பிறப்பில் குருநாதர் திருவடி வைத்து ஆட்கொண்ட பிறகுகூட, திருப்பெருந்துறையிலோ பிற ஊர்களிலோ கிடைக்காத ஒரு காட்சி தில்லையில், இந்த விநாடியில், அவருக்குக் கிடைத்திருக்க வேண்டும்.

பழைய பிறப்பையோ, இந்தப் பிறப்பை எடுப்பதற்கு முன்னிருந்த நிலையையோ அறிந்துகொள்ளுதல்

அனைவருக்கும் இயலுகின்ற ஒன்றன்று; அடிகளாருக்கும் இது பொருந்துவதாகும்.

தம்முடைய பிறப்பை மிக இழிவானதென்று கருதி, நொந்து பல பாடல்கள் பாடியுள்ளார். கண்ட பத்திலும் அது அதிகம் இடம்பெறுகிறது. இந்த நிலையில் தாம் யார் என்பதை அறிந்துகொள்ள அடிகளாருக்கு ஒரு வாய்ப்புத் தர எண்ணினான் இறைவன். ஒரே விநாடியில் குருநாதரின் காட்சி கிடைத்ததுபோல், தாம் யார் என்பதை அறிந்துகொள்ள இறையருள் கைகூட்டியதால், திரும்பிப் பார்க்கிறார் அடிகளார். அப்பொழுது கிடைத்த காட்சிதான் உருத் தெரியாக் காலத்தே உள்புகுந்து உளம் மன்னிக் கருத் திருத்தி ஊன் புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட காட்சி. அக்காட்சியே தித்திக்கும் சிவபதமாக இனிப்பதை உணர்கின்றார் அடிகளார். இப்பின்னோக்குக் காட்சி மறைந்து, நடைமுறைச் சூழ்நிலைக்கு வந்தவுடன் அடிகளார் காண்பது, அவர் அப்பொழுது தங்கியிருந்த ஊராகிய தில்லையாகும்.

இறைவனருளால் கிடைத்த பின்னோக்குப் பார்வையால் தாம் அறிந்துகொண்ட பேருண்மையை மறப்பதற்குமுன், அதற்கு ஒரு வடிவு கொடுக்குமாறு கூத்தன் பணித்தான். அதன் பயனாகவே இப்பாடல் (477) தோன்றிற்று.

எனவே, அணிகொள் தில்லையில் கண்டது கூத்தனையோ அன்றிக் குருநாதரையோ அன்று, தம்முடைய இந்தப் பிறப்பின் அறிய முடியாத இரகசியத்தை அறிந்துகொண்டதைத்தான் தில்லையிற் கண்டேனே என்று பாடுகிறார்.

இந்த நினைவிலேயே அவர் வளர்ந்திருந்தால் திருவாசகம் வெளிவரவேண்டும் என்ற கூத்தனின் கருணைக்கு இடமில்லாது போயிருக்கும். ஆதலால், ஒரே விநாடியில் அடிகளார் உள்ளத்திலிருந்து இக்காட்சி மறையுமாறு செய்தான் கூத்தன்.

பிரார்த்தனைப் பத்து

பிரார்த்தனைப் பத்து என்ற தலைப்பு, குயில் பத்து, அச்சப் பத்து, ஆசைப் பத்து என்பவைபோல அமைந்துள்ள ஒரு தலைப்பாகும். இத்தலைப்பைக் கொடுத்தவர்கள், கொடுக்கின்ற காலத்தில் இதில் பதினொரு பாடல்கள் உள்ளன என்பதை அறிந்திருந்தார்களா என்று தெரிய வில்லை. அன்றே பதினொரு பாடல்கள் இருந்திருப்பின் பத்து என்ற பெயரைத் தந்திருக்க நியாயமில்லை.

சற்று நின்று நிதானித்தால், தலைப்புத் தந்த காலத்தில் பத்துப் பாடல்களே இத்தொகுப்பில் இருந்திருக்க வேண்டு மென்று நினைக்கவேண்டியுள்ளது. நாளாவட்டத்தில் யாரோ ஒரு 'நல்லவர்' ஒரு பாடலை எழுதி இடையில் செருகியிருக்க வேண்டும். அவ்வாறு செருகியவர் நல்ல புலமையும், அந்தாதி இலக்கணத்தை நன்கு அறிந்த வராகவும் இருத்தல் வேண்டும். அந்த முறையில் அந்தாதித் தொடை மாறாமல் இடையே புகுத்தப்பெற்ற பாடல் எது என்று கண்டுகொள்வது கடினமாயினும், முயன்றால் அதனையும் செய்துவிடலாம் என்றே தோன்றுகிறது.

உதாரணமாக ஒவ்வொரு பாடலின் தொடக்கம் முடிவு இரண்டையும் அடியில் தந்துள்ளோம்.

1.	கலந்து	-	-	அடியேற்கே
2.	அடியார்	-	-	அருளாயே
3.	அருளார்	-	-	வேண்டுமே
4.	வேண்டும்	-	-	மேவுதலே
5.	மேவும்	-	-	அறுதலே

6. அறவே	-	-	கடலே
7. கடலே	-	-	துணியாயே
8. துணியா	-	-	தாராயே
9. தாரா	-	-	மானே
10. மானோர்	-	-	கூடுவதே
11. கூடி	-	-	கலந்தே

இவற்றை ஒருமுறை கவனமாகச் சிந்தித்தால் எல்லாப் பாடல்களும் ஒரு வரன்முறையில் அமைந்திருத்தலைக் காணலாம். அதாவது, ஒரு பாடலின் நான்காவது அடியின் இறுதிச்சொல் அல்லது இறுதிச்சொல்லில் உள்ள சில அசைகள் அதனை அடுத்துவரும் பாடலின் முதற்சொல் லாக வருதலைக் காணமுடியும். இந்தப் பொதுவிதி எல்லாப் பாடல்களிலும் இடம்பெற்றிருப்பினும் மூன்று (487) ஐந்தாம் (489) பாடல்களில் ஒரு சிறுவேறுபாடு அமைந்துள்ளது. மூன்றாம் பாடல் 'வேண்டுமே' என்று முடிகிறது; ஐந்தாம்பாடல் 'மேவும்' என்று தொடங்குகிறது. இவ்வாறு அமைவது அந்தாதி இலக்கணத்திற்கு உட்பட்டதே ஆகும். ஆனால், இலக்கணப்படி சரியென்று கூறலாமே தவிர, ஏனைய பாடல்கள் அமைந்திருக்கும் முறைபோல, மூன்றாம் பாடலின் இறுதிச்சொல் ஐந்தாம் பாடலின் முதற்சொல்லாக அமையவில்லை. அதற்குப் பதில் 'மே' என்ற நேரசை மட்டும் ஐந்தாம் பாடலின் தொடக்கத்தில் இடம் பெற்றிருக்கிறது.

இந்தச் சிறுவேறுபாட்டை அறிந்துகொண்ட அந்த நல்லவர் தம்முடைய புதிய படைப்பை 'வேண்டும்' என்று தொடங்கி 'மேவுதலே' என்று முடித்துள்ளார். பாவம் திருவாசகத்தின் இடையில் தம்முடைய பாடலைச் செருகுகிறோமே என்ற அச்சம் அவர் மனத்தில் தோன்ற வில்லைபோலும். அன்றியும் பத்து என்ற தலைப்பு மேலே

இருக்கின்றதே, தாம் பெற்ற பிள்ளையை இந்தத் தொகுதியில் சேர்த்தால் பத்து, பதினொன்றாகிவிடுமே என்ற ஐயம் அவர் மனத்தில் தோன்றவில்லை.

திருவாசகத்தில் இடைச்செருகல் செய்ய நெஞ்சழுத்தம் நிரம்ப வேண்டும். அதுமட்டுமல்ல, திருவாசகத்தின் போக்கையும் அதன் அடிப்படையையும் புரிந்து கொள்ளாதவரே இடைச்செருகல் செய்யத் துணிவர், உதாரணமாக ஒன்றைக் காணலாம்.

'வேண்டும் மெய்யடியார் உள்ளே விரும்பி எனை அருளால் ஆண்டாய்' (488) என்ற தொடர் இந்த 'நல்லவ'ரின் பாடலில் இடம்பெற்றுள்ளது. திருவாசகத்தின் வேறு எந்த இடத்திலும், மெய்யடியார்களுள் தாமும் ஒருவர் என்று அடிகளார் கூறிக்கொண்டதே இல்லை. அப்படிக் கூறுவது அவருடைய பண்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் முற்றிலும் மாறானதாகும். 'நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து நான் நடுவே வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பொதிதும் விரைகின்றேன்' (திருவாச:15) என்றும், 'விச்சுக்கேடு பொய்க்கு ஆகாதென்று இங்கு எனை வைத்தாய்' (திருவாச:85) என்றும், 'யானே பொய் என்நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்' (திருவாச:94) என்றும் பாடிய பெருமான், 'மெய்யடியாருள்ளே விரும்பி எனை அருளால் ஆண்டாய்' என்று பாடுவாரா?

இவற்றை யெல்லாம் மனத்துட் கொண்டு பார்த்தால், இன்றைய பதிப்புக்களில் காணப்பெறும் நான்காவது பாடல் (488) இடைக்காலத்தில் 'நல்லார்' ஒருவரின் துணிச்சலான இடைச்செருகல் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

இப்பத்தின் முதலாவது பாடல் (485) அடிகளார் உள்ளத்தில் தோன்றிய இரண்டு பெரு உணர்ச்சிகளுக்கு வடிவு கொடுக்கின்றது. முதலாவது, அன்று ஒருநாள் திருப்பெருந்துறையில் நின் அடியாரோடு கலந்து ¬மர்ந்திருக்கையில் ஒரு பேச்சும் பேசாமல் வாளா

இருந்தேன், ஆனாலும் எல்லையற்ற ஆனந்தம் நிறைந்திருந்தது என்பதாகும்.

அடுத்தபடியாக, அவ்வாறு அடியார் கூட்டத்தோடு இல்லாத நிலையை இரண்டாம் அடியில் கூறுகிறார் அடிகளார். அடியார்களோடு கூடியிராத நிலையில் அந்த ஆனந்தம் இல்லை. அதுமட்டு மன்று, பல இடர்கள் தம் வாழ்க்கையில் புகுந்துவிட்டன என்கிறார். இதிலுள்ள சிறப்பு என்னவென்றால், சிறந்த உணவின் பெருமையை, உண்ணும்போது அறிவதைவிட, மற்றொரு நாள் எல்லை மீறிய பசியில் திண்டாடும்போது உணரமுடிகிறது. உண்பது என்பது சில நிமிடங்களில் முடிகின்ற ஒரு செயலாகும். உணவின்றி வருந்தி அலமருதல் பல நாட்களிலாகும். அந்தப் பல நாட்களிலும் இந்த ஒரு நாளில் உண்ட உணவை, மீ ட்டும் மீட்டும் நினைப்பது மனித இயல்பு. இதே அடிப்படையில்தான் அடிகளார் அன்று ஒருநாள் அடியாரோடு கலந்திருந்து ஆனந்தத்தைப் பெற்றதை இப்பொழுது பல நாட்களாக நினைந்து, ஒப்பிட்டு வருந்துகிறார்.

குருநாதரின் ஆணையால், அடியாரிடையே இவர் புகுந்தார்; கிடைத்தது ஆனந்தம். இப்பொழுது குருநாதர் இல்லாதபோது இடர் இவருள்ளே புகுந்தது.

ஒருநாள் பெற்ற அனுபவத்தை 'உலவா இன்பம்' என்று பேசுகிறார். ஆனால், அது இல்லாத காலத்தில் 'உலர்ந்து போனேன் உடையானே' என்று கதறுகிறார்.

ஒரே டாடலில் இந்த இரண்டு நிலைகளையும் வைத்துப் பேசி, அந்த உலவா இன்பத்தை மீட்டும் அருளவேண்டும் என்று கேட்பது இப்பத்தின் தலையாய நோக்கமாகும்.

அடிகளார் காலத்திலேயே உண்மை அடியார்கள் சிலர் இறையருளைப் பெற்றதை அடிகளாரே நேரில் கண்டிருக்கிறார். அப்பொழுது அடிகளார் இதனைப் பெரிதாகப் பாராட்டவில்லைபோலும், இப்பொழுது

அதுபற்றிச் சிந்திக்கவேண்டிய நிலை வந்துவிட்டது. ஒரே பிறப்பில் இறையருளை முழுதுமாகப் பெற்றார்கள் அந்த அடியார்கள் என்றால், அது எவ்வாறு முடிந்தது? அவர்களும் பருவுடலுடன் தானே இருந்தார்கள்!

தம்மைப்போலவே பருஉடல் உடையவர்கள் இப் பிறப்பிலேயே அவன் அருள் பெற்றார்கள் என்றால், அதற்குக் காரணமாய் அமைந்தது எது என்று சிந்திக்கத் தொடங்கிய அடிகளாருக்கு விடை எளிதாகக் கிடைத்து விட்டது. மனித மனத்தில் நிலைபேறில்லாமல் தோன்றி, மறையும் பல ஆசைகள்போல் அல்லாமல் அந்த அடியார்களுக்கு ஒரே ஒரு ஆர்வம் இருந்தது. அது அந்தக் கரணங்கள் அனைத்தையும் தனதாக்கிக் கொண்டுவிட்டது. அந்த ஆர்வம் வேறு எதற்கும் இடங்கொடுக்காமல் மேலும் மேலும் வளர்ந்தமையின் (ஆர்வம் கூர) அவர்களால் இறையருளைப் பெற முடிந்தது.

இப்போது அடிகளார் உண்மையைக் கண்டுவிட்டார். அவர்களுக்கும் தமக்குமுள்ள வேறுபாடு 'ஆர்வம் கூர்தல்' என்ற ஒன்றுதான் என்பதை அறிந்துவிட்டார். அந்த ஆர்வம் வளராத காரணத்தால், போற்றப்பட வேண்டிய இந்த உடம்பு முடைநாற்றம் உடைய உடம்பாக மாறிவிட்டது. இந்த உடம்பை வைத்துக்கொண்டே அந்த ஆர்வத்தை வளர்க்கவேண்டும். அது எப்படி முடியும்? தம்முடைய தலைவனாகிய உடையானைப் பார்த்து ஆர்வம் கூர அருளாய் என்று வேண்டுவதற்குப் பதிலாக உள்ளத்தே தோன்றும் இந்த ஆர்வத்தின் பயனாக விளையும் காரியத்தை 486ஆம் பாடலின் நான்காம் அடியில் பேசுகிறார்.

அதாவது, ஆர்வம் கூரக் கூர உள்ளம் விரிவடைந்து உருகும். இந்த அடியில் இரண்டு சொற்களை ஒன்றாக அடுக்குவதன் மூலம் இவற்றிடையே உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுகிறார் அடிகளார். 'கருணைக் கடல் பொங்க உள்ளத்தே ஓவாது உருக அருளாயே' என்று கூறியிருப்பதால்

மெய்யடியார்கள் சிலரை அடிகளார் கண்டிருக்கிறார். கயிலையில் இருந்து இறங்கிவந்த, பருஉடம்பு இல்லாத அடியார்களைத் திருப்பெருந்துறையில் குருநாதருடன் கண்டுள்ளார். இவ்வுலகிலும்கூட 'அடியார் சிலர் ஆர்வம் கூர நின் அருள் பெற்றார்' (486) என்று பாடுவதால் பருவுடலோடு கூடிய மெய்யடியார்களை இந்த உலகிலும் கண்டுள்ளார் என்று தெரிகிறது. மேலும், 'சிரிப்பார் களிப்பார்' (திருவாச:386) என்ற பாடல் மூலம் மெய்யடியார்கள் வாழ்க்கைமுறையை விரிவாகக் கூறியுள்ளதால் இவர்களையும் அடிகளார் நேரே கண்டுள்ளார் என்று தெரிகிறது.

இதில் முக்கியத்துவம் என்னவென்றால், இந்த மெய்யடியார்களை பித்தர்கள் அல்லது பைத்தியங்கள் என்று யாரும் கூறவில்லை. எனவே, அடிகளார் மனத்தில் பிறந்த ஆராய்ச்சியாகும் இது. சராசரி மனிதர்கள் செய்யாத செயல்களைச் செய்யும் இவர்களைப் பைத்தியம் என்று யாரும் கூறவில்லை. ஆனால், சராசரி மனிதர்கள் செய்யாத செயலைச் செய்யும் தம்மைமட்டும் 'மால் இவன்' என்று சொல்லி, வெருண்டோடக் காரணமென்ன?

மெய்யடியார்கள், அடிகளார் என்ற இருவரும் ஒரே செயலைத்தான் செய்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களைப் பித்தர் என்று கூறாத உலகம், இவரைமட்டும் ஏன் அவ்வாறு கூறிற்று? இந்த வினாவிற்குரிய விடை அடிகளாரைப் பொறுத்தமட்டில் கிடைத்துவிட்டது. மெய்யன்புடைய அடியார்கள் செயலை உலகம் ஏற்றுக் கொண்டது; அவர்களைப் பித்தர் என்று சொல்லவில்லை. ஆனால், மெய்யன்பு இல்லாமல் அதே செயல்களைச் செய்கின்றவர்களைப் பித்தர் என்று ஏசிற்று. எனவே, தமக்கு மெய்யன்பை அருளவேண்டும் என்று அடிகளார் வேண்டிக்கொள்கிறார்.

குருநாதரின் திருவடிகளில் இணையவேண்டும், அடியார் கூட்டத்தின் இடையே இருக்கவேண்டும், உருகும் உள்ளத்தைப் பெறவேண்டும் என்றெல்லாம் இதுவரை பாடிவந்த அடிகளார், முற்றிலும் வேறுபட்ட ஒன்றை 489 ஆம் பாடலில் வேண்டுகிறார்.

'மேவும் உந்தன் அடியார்' என்ற தொடர் முக்காலத் திலும் அவன் திருவடிகளில் இணைகின்ற அடியாரைப் பொதுவாகவும், திருப்பெருந்துறையில் கண்ட அடியார் களைச் சிறப்பாகவும் குறிக்கும் தொடராகும். இவர்களை இங்கு குறிப்பிடவேண்டிய காரணமென்ன? இவர்கள் அனைவருக்கும் பொதுவான சில செய்திகள் உண்டு. இவர்கள் அனைவரும் 'பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து' ஒரே நேரத்தில் நினைத்தற்கரிய மாபெரும் நிலையை எய்தினார்கள். அது என்ன? ஆவி, யாக்கை, யான், எனது என்ற நான்கையும் ஒரே நேரத்தில் இழந்துவிட்டார்கள். இழத்தல் ஆகிய எதிர்மறைச் செயல்தான் நடைபெற்றதா என்றால், இல்லை. இவற்றை இழந்த உடனே பரமானந்தப் பழங்கடல் சேர்ந்தார்கள். அதாவது இந்தப் பரமானந்தப் பழங்கடலில் சேரவேண்டுமேயானால், ஆவி, யாக்கை, யான், எனது என்ற நான்கும் ஒழியவேண்டும். இப்படி இவற்றை ஒழித்து ஆனந்தப் பழங்கடலில் சேர்ந்தவர்களைப் பார்த்த பிறகு தம் தலைவனிடம் ஒரு விண்ணப்பம் செய்கிறார்.

'கயற்கண்ணாள் பங்கா! யானும் விரும்பி உன்னை மேவும் அடியாருள் கலந்து, ஆவி, யாக்கை, யான், எனது என்பவற்றை இழந்து, பரமானந்தப் பழங்கடல் சேர விரும்புகிறேன். அதற்கு அருள் செய்வாயாக' என்று வேண்டுகிறார்.

மகிழ்ச்சி இன்பம் முதலியவற்றை அனுபவிப்பதற்கும் இறையனுபவத்தை அனுபவிப்பதற்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. முதலில் கூறியவற்றிற்கு 'நான்' மிகவும் தேவை. எவ்வளவு அதிகமாக மகிழ்ச்சி, இன்பம் இருப்பினும்

'நான் அனுபவிக்கிறேன்' என்ற எண்ணம் இருந்துகொண்டே இருக்கும். இந்த 'நான்' முற்றிலுமாக அழிந்த நிலையில் இறையனுபவ ஆனந்தம் ஏற்படுகிறது. இதில் அனுபவிக்கின்ற நான், பெறுகின்ற அனுபவம், அனுபவத்தைத் தருபவன் என்ற மூன்றாகத் தொடங்கி, வளர்ந்து, இறுதிக் கட்டத்தில் நானும், தருபவனும் ஒன்றாக இணைந்து அனுபவத்துள் மூழ்கிவிடுகின்றனர்.

இந்த இறையனுபவ நிலைகூடத் தோன்றி, வளர்ந்து, மறையும் கடல் அலை போன்றது என்று முன்னரும் குறிப்பிட்டுள்ளோம்.

இந்த நிலையும் மாறி ஆவி, யாக்கை, யான், எனது என்ற நான்கும் ஒருசேர அழிய, பரமானந்தப் பழங்கடலில் புகுந்துவிட்டால் அலைபோல் ஏறி இறங்கும் தன்மையோ அனுபவம் வடிந்து வெளிவரும் தன்மையோ இரா.

இதனையே அடிகளார் ஆவி, யாக்கை, யான், எனது என்று யாதுமின்றிப் பரமானந்தப் பழங்கடல் புகவேண்டும் என்கிறார்.

கடல்போன்ற ஆனந்தத்தைக் கவர்ந்து உண்ணுகின்றனர் மெய்யடியார்கள். ஆனால், தாம் இடரே பெருக்கி இவ்வுலகிடை வாழ்வதாக நொந்துகொள்ளும் அடிகளார், அந்த நோவை வெளிப்படுத்துவதோடு நின்றுவிடவில்லை. முன்னர்ப் பல பாடல்களிலும் இதே முறையில்தான் பேசியுள்ளார். திடீரென்று உடையவனுக்கு விண்ணப்பம் செய்வதை விட்டுவிட்டு, ஒரு சிறிய எச்சரிக்கை விடும் நிலையை 491 ஆம் பாடலில் அருளிச் செய்கின்றார்.

'ஐயா! கடல்போன்ற ஆனந்தத்தைப் பெருக்கெடுத்து, ஓடவிட்டவனும் நீதான். இதனைக் கண்டவர்கள் அனைவரும் வாரிவாரி விழுங்குகின்றனர். அதையும் நீ பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றாய். அடிநாயேன் ஆகிய நான் போக்கிடமின்றிச் செய்வதறியாது இங்கிருத்தலையும் நீ

பார்த்துக்கொண்டுதானே இருக்கிறாய்! நீ யார்? நான் யார்? நீ உடையான்; நான்உன் உடைமை. நான் இப்படி அந்த ஆனந்தத்தை உண்ண முடியாமல் இருப்பதை, என் உடையானாகிய நீ பார்த்துக்கொண்டிருக்கிறாயே, இது உனக்கே அழகா? உன் கருணைக்கு அழகா என்று பேசியவர் இன்னும் ஒரு படி மேலே செல்கிறார்.

உடைமையாகிய நான், எனக்கு என்ன வேண்டும் என்பதை உடையவனாகிய உனக்கு உணர்த்தத் தேவையில்லை என்றுதான் இதுவரை எண்ணியிருந்தேன். இப்பொழுது புரிகிறது. என் நிலையை எடுத்துக்கூறி நீ அருள்செய்தே ஆகவேண்டும் என்பதை உனக்கு உணர்த்தாதொழிந்தது என் பிழைதான் என்கிறார்.

'உடையாய் இதுவரை உனக்கு உணர்த்தாது ஒழிந் ததை இப்போது உணர்த்துகிறேன். என்னைச் சுற்றியுள்ள இருள் நீங்கவேண்டும் அந்த இருளை ஒளிபொருந்திய வாள் கொண்டு துணித்து அருள்செய்வாயாக' என்கிறார்.

மெய்யடியார்களைப் போல இறைவன்மாட்டுச் செலுத்த வேண்டிய அன்பை அவனே தரவேண்டும் என்பதை 492 அம் பாடலின் மூன்றாம் அடியில் 'அன்பும் தாராய்' என அவரே கூறுகிறார். அத்தகைய ஓர் அன்பை அவன் தந்துவிட்டால் அதனை வைத்துக்கொண்டு வளர்த்துப் பேரன்பாக மாற்றி, அவனை அடைய வேண்டியதுதானே வழி? வழியும் தெரிகிறது; வழியிற் செல்வதற்குரிய உறுதுணையாக வேண்டப்படும் அன்பையும் கேட்டுப் பெற்றுவிட்டால் அமைதியடைய வேண்டியதுதானே? அதை விட்டுவிட்டு, 'உடனடியாக உன் திருவடிகளைத் தா' (ஒல்லை வந்தருளித் தளிர் பொற்பாதம் தாராய்) என்று அடிகளார் கேட்பது ஏன்?

மனித மனத்தின் கூறுபாடுகளை நன்கு அறிந்தவர் அடிகளார். எவ்வளவு விரும்பி வேண்டிய ஒரு பொருளைப் பெற்றாலும், அதனைப் போற்றி வைத்துக்கொள்ளும் பழக்கம் நாட்கள் கழியக் கழியக் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடும். அதனால் அன்பை அவனிடம் வேண்டிப் பெற்றாலும், தளராது நின்று அதைப் பேரன்பாக மாற்றி அவனை அடையும் வழியில் இந்த மனம் கொண்டு செல்லும் என்று சொல்லமுடியாது. மனத்தின் இயல்பு அது. அடிகளார் அதனை நன்கு அறிந்தவர் ஆதலால், 'அன்பும் தாராய்' என்று கேட்டவர், அடுத்த விநாடியே உன் திருவடிகளைத் தாராய் என்றும் வேண்டுகிறார். 'தாராயே' என்பதோடு 'ஒல்லை வந்தருளி' என்ற தொடரை முன்னே வைப்பதால் ஒரு கருத்தைப் பெறவைக்கிறார்.

'உடையவனே நீ கருணை கொண்டு அன்பைத் தந்தாலும் அதனை வைத்து வளர்க்கும் திண்மை என்பாலில்லை. அந்த அன்பை வளர்த்துப் பேரன்பாக மாற்றினால் கிடைக்கப்போவது என்ன? கிடைக்கப்போவது உன் திருவடிதான். இந்த மனம், மாறுவதற்குள் உடனே வந்து உன் திருவடிகளைத் தருவாயாக' என்று வேண்டிக்கொள்வதால் மனித மனத்தின் இயல்பை அடிகளார் நன்கு அறிந்துள்ளார் என்று தெரிகிறது.

493ஆம் பாடலின் கடைசி அடியில் 'பேரானந்தம் பேராமை வைக்கவேண்டும் பெருமானே' என்று கூறியது ஏன்? பேரானந்தம் என்று சொல்லிவிட்டாலே அது அழிவில்லாதது நிலைபேறுடையது என்பது பெறப்படு மன்றோ! இதனை அறியாதவரா அடிகளார்? அப்படியிருந்தும் அந்தப் பேரானந்தம் என்னைவிட்டு நீங்காதிருக்க நீ அருளவேண்டும் என்று கூறுவது ஏன்? அடிகளாருக்கு இது திருப்பெருந்துறையில் கிடைத்த பாடமாகும். அங்குக் குருநாதர் தரிசனம் கிடைத்தவுடன் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கினார். ஆவி, யாக்கை,

நான்முகன், நாரணன் அடிமுடி தேடிய கதை, பலப் பல பதிகங்களில் பலப் பல பாடல்களில் காணப்பெறுகிறது. என்ன காரணத்தாலோ பிரார்த்தனைப் பத்தில், இடைச் செருகல் பாடல் உட்பட, ஒரு பாடலிலும் அக்குறிப்புக் காணப்பெறவில்லை.

குழைத்த பத்து

இப்பதிகத்தின் முதற் பாடலில் (496) வரும் 'குழைத்தால்' என்ற சொல்லுக்கும், இறுதிப்பாடலின் இறுதியடியில் வரும் 'குழைத்தாயே' என்ற சொல்லுக்குமிடையே பொருள் வேறுபாடு நிரம்ப உண்டு. முதலில் வரும் குழைத்தால் என்ற தொழிலுக்குக் கர்த்தா, நான் என்பதாகும். 'நான் என் கடினமான உள்ளத்தை குழைத்துவிட்டேன் இதனை அடுத்து நீ செய்யவேண்டிய காரியம் பண்டைக் கொடுவினை யிலிருந்து என்னைக் காக்க வேண்டியதாகும். இதனை நீயே செய்திருத்தல் வேண்டும். மனம் குழைந்தவுடன் அதன் பயனாக என் பழைய வினையை நீ போக்கியிருக்க வேண்டும். அதனை நீ செய்யாமையால் இப்பொழுது மறுபடியும், 'காவாய்' என்று உன்னை அழைத்து வேண்டுகிறேன்' என்கிறார் அடிகளார்.

'உழைத்தால் உறுதி உண்டு' என்பதும் முதலடியில் கூறப்பெற்றதற்கு விளக்கவுரையாக அமைந்துள்ளது. இங்கு உழைத்தல் என்பது, உள்ளத்தைக் குழைத்தலாகிய செயலைக் குறிப்பதாகும். எத்தகைய உழைப்பும் வீண்போவதில்லை. அந்த உழைப்பிற்கேற்ற பயனைத் தந்தே தீரும். 'உழப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்று பட்டினத்தடிகள் கூறியுள்ளார். (திருவிடைமருதூர் மும்மமணிக்: 10)

குழைத்தலாகிய செயலை அரும்பாடுபட்டு உழைத்துச் செய்துவிட்ட பிறகு அதனுடைய பயனை எதிர்பார்ப்பதில் தவறென்ன இருக்கிறது? அதனையே 'உழைத்தால் உறுதி உண்டோதான்' என்கிறார்.

ஒவ்வொரு உழைப்பிற்கும் ஒவ்வொரு வகைப் பயன் இருப்பதுபோல, குழைத்தலாகிய உழைப்பின் பயனாகப் பண்டைக் கொடுவினை நோய் தானே அழிந்திருக்க வேண்டும். அது நடைபெறாதபோது உதவி செய்யக் கூடியவனைக் 'காவாய்' என்று அழைக்கின்றார்.

இவ்வளவு விரிவாகக் கூறிய பிறகு 'பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ' என்று கூறுவதன் நோக்கம் என்ன? அடிகளாரின் உள்ளார்ந்த ஆராய்ச்சியில் ஐயத்தைத் தரும் ஒரு விடயம் தட்டுப்படலாயிற்று. உள்ளத்தைக் குழைத்தால் பண்டைக் கொடுவினை நோய் நீங்க வேண்டும். ஆனால், அது நீங்கவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் சொல்ல முடியும்.

ஒன்று கொடுவினையைப் போக்கும் ஆற்றலுடைய தலைவன் கண்டுகொள்ளாது இருந்திருக்க வேண்டும். எனவே, தம்முடைய இக்கட்டான நிலைக்கு அவன் கவனத்தை ஈர்க்க வேண்டிப் பெரும் குரலெடுத்து (வந்து) 'காவாய்' என அழைத்தார்.

இதனை அடுத்து, உழைத்தால் உறுதி உண்டு என்ற நம்பிக்கை மனத்திடையே தோன்றிற்று. மனத்திடை உறுதி பிறந்ததே தவிர, வினைக்கழிவு என்ற பயன் இன்னும் கிட்டியபாடில்லை; காவாய் என்று அழைத்துப் பார்த்தும் பயனில்லை. அப்படியானால் எங்குப் பிழை நிகழ்ந்தது என்ற வினா அடிகளார் உள்ளத்தில் தோன்றலாயிற்று. தருக்க ரீதியாகப் பார்த்தால் குழைத்தல் என்ற செயலில் நன்கு உழைத்துவிட்டால் கொடுவினை போதலென்ற உறுதி கிட்டியிருக்க வேண்டும். இதுவுமல்லாமல் வந்து 'காவாய்' என்றும் அழைத்தாயிற்று. காக்க அவனும் வரவில்லை; கொடுவினையும் போகவில்லை. இது ஏன் என்று நினைத்த அடிகளாருக்கு, எங்கோ பிழைநேர்ந்து விட்டது என்ற எண்ணம் தோன்றலாயிற்று.

தம்முடைய உழைப்பிலோ அல்லது குழைப்பிலோ தவறு நேர்ந்திருக்க வேண்டும். இதுவே இரண்டாவது காரணமாகும். அதனால்தான் வினையும் போகவில்லை; போக்குபவனும் வரவில்லை. பிழை எங்கோ நேர்ந்து விட்டது என்ற தெளிவு மனத்திடை வந்தவுடன் பெருங் குரலெடுத்துப் 'பிறைசேர் சடையாய்' என்று அவனை அழைத்து, 'பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ' என்று அவனை வேண்டுகிறார். முயற்சி பயன் அளிக்காதபோது முயற்சியில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று நினைப்பதில் தவறில்லை. கோளாறு எங்கே என்று தெரிந்தால் அதைத் திருத்திக்கொண்டு புது முயற்சியில் இறங்கலாம். ஆனால், எங்கே பிழை நேர்ந்தது என்று தெரியவில்லை. ஆதலால், 'பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ' என்று பொதுவாக வேண்டிக்கொள்கிறார்.

497ஆம் பாடலின் போக்கை வாலாயமாகப் பொருள்கொள்ளும் முறையில் கொள்ளாமல், சிந்திக்கத் தொடங்கினால் சில புதுமைகள் இதனுள் புதைந்து கிடப்பதைக் காணமுடியும்.

பாடலின் மூன்றாவது அடியில் குற்றம் நிறைந்த இந்த உடலைச் சிதையாமல் ஏன் வைத்திருக்கிறாய் என்று கேட்கிறார். இவ்வாறு கேட்கக் காரணம் என்ன? உடலை நீக்கி விரைவில் வீடுபேறு அடையவேண்டும் என்ற கருத்தில் இவ்வாறு பாடியுள்ளார் என்று கூறிச்செல்வது சரியாகப் படவில்லை. எனவே, மூன்றாம் அடியில் 'சிதை யாதது எத்துக்கு' என்று அடிகளார் வினவுவதற்கு வேறு ஏதேனும் காரணம் உண்டா என்று சிந்தித்தால் அந்தக் காரணம் முதலடியில் பேசப்பெற்றிருப்பதைக் காணலாம்.

இப்பொழுது முதலடியை மறுபடியும் பார்க்கலாம். அவ்வடி 'அடியேன் அல்லல் எல்லாம் முன் அகல ஆண்டாய் என்றிருந்தேன்' என்பதாகும். இதன்படி பார்த்தால், திருப்பெருந்துறையில் குருநாதர் ஆண்டவுடன்

சில பயன்கள் சித்திக்கும் என்று எதிர்பார்த்தார். அதனையே 'அல்லல் எல்லாம் அகல' அதாவது அகல்வான் வேண்டி. அல்லது அகல்வதற்காகக் குருநாதர் அடியாராகிய தம்மை ஆண்டார் என்று உறுதியாக நம்பினார்.

குருநாதர் ஆண்டது நேரில் கண்டு அனுபவித்த உண்மை; இப்பொழுது அல்லல் அகலாமல் இருப்பதும் உண்மை. என்ன நிகழ்ந்தாலும் குருநாதர் ஆண்டதில் குறை சொல்ல முடியாது. ஆண்டதால் ஏற்பட்ட பயனை உடல், மனம், உள்ளம் என்ற மூன்றாலும் அந்த நேரத்தில் அனுபவித்தார் ஆதலின் அதில் குறைகூறுவதற்கு ஒன்றுமில்லை. அப்படியானால் அல்லல் ஏன் அகல வில்லை? எல்லா அல்லலுக்கும் காரணமாக இருப்பது, இந்த உடலும் அதனைச் சேர்ந்த அந்தக்கரணம் முதலியவைகளும்தானே? ஆக, அல்லல் நீங்க வேண்டு மானால் இந்த உடல் சிதைய வேண்டும். உடலைச் சிதைத்துக்கொள்வதற்குத் தமக்கு உரிமையில்லை. இந்த நிலையில் குருநாதரையே பார்த்துச் 'சிதையாதது எத்துக்கு?' என்று கேட்பது நியாயம்தானே!

இவ்வாறு பொருள் கொள்ளாமல், அந்த அந்த அடிக்கு அப்படி அப்படியே பொருள் செய்துகொண்டு போனால் பாடலின் முழுப்பயனையும் அனுபவிக்க முடியாது போய்விடும்.

498ஆம் பாடலின் முதலில் ஒரு விநோதமான வினாவை, கேட்கக் கூடாதவனிடத்துக் கேட்கிறார், இவ்வாறு கூறும்போது சிலருக்குச் சினம் தோன்றலாம். ஆனால், உண்மை அதுதான். இப்பொழுது அந்தத் தொடரை மறுபடியும் பார்க்கலாம். 'ஒன்றும் போதா நாயேனை, உய்யக்கொண்ட நின் கருணை, இன்றே இன்றிப் போய்த்தோதான்' என்பதே அத்தொடராகும்.

ஒன்றும் போதா நாயேனை 'உய்யக்கொண்ட நின் கருணை' என்று கூறுவதால், இறைவனைப் பார்த்து நேரடியாகப் பேசும் பேச்சாகும் இது என்பதை அறிய முடியும். அந்தக் கருணை இப்போது எங்கே போய்விட்டது என்று கேட்கிறார். தமிழ்நாட்டில் ஒரு பழமொழி உண்டு. 'தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பதம் பார்த்தான்' என்பது பழமொழி. ஒன்றுமில்லாத நாய்போன்றவர் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளுகிறார் அடிகளார். அத்தகைய ஒருவரைத் தம் கருணை காரணமாகக் குருநாதர் உய்யக்கொண்டார் என்றால், அந்தக் குருநாதரிடம் கேள்வி கேட்பதற்கோ, 'ஏன் இப்பொழுது கருணை பாவிக்கவில்லை' என்று கேட்பதற்கோ எவ்வித உரிமையும் அடிகளாரிடம் இல்லை. ஏதோ, கொடுத்து வைத்ததைக் கேட்பதுபோல 'என்னை ஆட்கொண்ட உன்னுடைய கருணை இப்போது எங்கே போயிற்று' என்றல்லவா கேட்கிறார்!

ஆண்டான் அடிமைத் திறத்தில் இவ்வாறு உரிமை எடுத்துக்கொண்டு, ஆண்டானைக் கேள்வி கேட்பது ஏற்றுக்கொள்ளப்பெற்ற ஒன்றாகும்.

நாவரசர் பெருமான் 'என் ஆவி காப்பதற்கு இச்சையுண்டேல், இருங்கூற்றகல மின்னாரும் மூவிலைச் சூலம் என்மேல் பொறி' (திருமுறை:4:109:1) என்றும், 'என்னை வகுத்திலையேல் இடும்பைக்கு இடம் யாது சொல்லே' (திருமுறை: 4:105:2) என்றும் கேட்பது மேலே கூறியதற்குச் சிறந்த உதாரணமாகும்.

அன்று நீ எனக்களித்த கருணை இன்று எங்கே போய்விட்டது என்று அடிகளார் கேட்பதும் இந்த வகையைச் சார்ந்ததேயாகும்.

'ஏழை பங்கா!' என்ற விளி, இருபொருள்பட அமைக்கப்பட்டுள்ளது. ஏழை என்பது பெண்களைக்

குறிக்கும் பொதுச்சொல் ஆதலின், 'ஏழைபங்கா!' என்ற விளி, உமையொருபங்கனே என்ற பொருளைத் தருகின்றது. இவ்வாறின்றி அருட்செல்வம், பொருட்செல்வம், வாய்ப்பு வசதி என்ற ஏதுமில்லாத ஒருவனை 'ஏழை' என்ற சொல் குறிக்குமல்லவா? எவ்விதத் துணையுமில்லாத ஏழைகட்கு உதவும் பங்காளியாக உள்ளான் என்பது மற்றொரு பொருளாகும்.

500ஆம் பாடல் முரண்பாட்டினிடையே முழு முதலையே காணும் பழந்தமிழர் மரபிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

502ஆம் பாடல் இன்று பலரும் அறிந்து கூறி மகிழும் ஒப்பற்ற பாடலாகும். முழுச் சரணாகதி என்று வடவர் கூறுவதற்கும், மேலை நாட்டார் முழுச் சரணாகதி (absolute surrender) என்று கூறுவதற்கும் வேறுபாடு அதிகமில்லை.

'அன்றே' என்பது தொடங்கிக் 'கொண்டிலையோ' என்பதுவரை உள்ள பகுதி முழுச் சரணாகதியின் விளக்கமாகும். இவ்வாறு சரணாகதி அடைந்துவிட்ட பிறகு, தம்மைப் பற்றிய எவ்வித நினைவும் இல்லாமல் இருப்பதுதான் இதன் முழு இலக்கணம். அப்படியிருக்க 'இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ... நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்று அடிகளார் பாடுவது, வேண்டா கூறுதல் ஆகும். வேறு யாரேனும் இவ்வாறு பாடியிருப்பின் இதனை வேண்டா கூறினார் என்று ஒதுக்கிவிடலாம். ஆனால், இதனைக் கூறியவர் கல்வி, கேள்வி, அறிவு, ஆராய்ச்சி என்பவை முழுதும் நிரம்பிய திருவாதவூரர் மட்டுமல்ல, இதன்மேல் குருநாதரின் திருவடிதீட்சை பெற்று, அமுத தாரைகள் எற்புத்துளைதொறும் ஏற்றப்பெற்றவர் அல்லவா?

திருவருளை முழுவதுமாகப் பெற்ற ஒருவர் இவ்வாறு கூறினார் என்றால், அது, நின்று நிதானிக்க வேண்டிய

குறிக்கும் பொதுச்சொல் ஆதலின், 'ஏழைபங்கா!' என்ற விளி, உமையொருபங்கனே என்ற பொருளைத் தருகின்றது. இவ்வாறின்றி அருட்செல்வம், பொருட்செல்வம், வாய்ப்பு வசதி என்ற ஏதுமில்லாத ஒருவனை 'ஏழை' என்ற சொல் குறிக்குமல்லவா? எவ்விதத் துணையுமில்லாத ஏழைகட்கு உதவும் பங்காளியாக உள்ளான் என்பது மற்றொரு பொருளாகும்.

500ஆம் பாடல் முரண்பாட்டினிடையே முழு முதலையே காணும் பழந்தமிழர் மரபிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

502ஆம் பாடல் இன்று பலரும் அறிந்து கூறி மகிழும் ஒப்பற்ற பாடலாகும். முழுச் சரணாகதி என்று வடவர் கூறுவதற்கும், மேலை நாட்டார் முழுச் சரணாகதி (absolute surrender) என்று கூறுவதற்கும் வேறுபாடு அதிகமில்லை.

'அன்றே' என்பது தொடங்கிக் 'கொண்டிலையோ' என்பதுவரை உள்ள பகுதி முழுச் சரணாகதியின் விளக்கமாகும். இவ்வாறு சரணாகதி அடைந்துவிட்ட பிறகு, தம்மைப் பற்றிய எவ்வித நினைவும் இல்லாமல் இருப்பதுதான் இதன் முழு இலக்கணம். அப்படியிருக்க 'இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ.... நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்று அடிகளார் பாடுவது, வேண்டா கூறுதல் ஆகும். வேறு யாரேனும் இவ்வாறு பாடியிருப்பின் இதனை வேண்டா கூறினார் என்று ஒதுக்கிவிடலாம். ஆனால், இதனைக் கூறியவர் கல்வி, கேள்வி, அறிவு, ஆராய்ச்சி என்பவை முழுதும் நிரம்பிய திருவாதவூரர் மட்டுமல்ல, இதன்மேல் குருநாதரின் திருவடிதீட்சை பெற்று, அமுத தாரைகள் எற்புத்துளைதொறும் ஏற்றப்பெற்றவர் அல்லவா?

திருவருளை முழுவதுமாகப் பெற்ற ஒருவர் இவ்வாறு கூறினார் என்றால், அது, நின்று நிதானிக்க வேண்டிய

இடமாகும். ஏன் இவ்வாறு கூறினார் என்று சிந்திக்கத் தொடங்கினால் சில அடிப்படை உண்மைகள் தெற்றென விளங்கும்.

முன்னர் நாம் பல முறை கூறியுள்ளபடி மனித மனம் விந்தையானது, ஒரு குழந்தையைத் தத்துக் கொடுத்துவிட்டு, அந்தக் குழந்தையின் கோத்திரத்தையே மாற்றிவிட்டுப் புதிய பெற்றோரிடம் ஒப்படைத்துவிடுகின்றோம். ஆனால், இவ்வாறு கொடுத்த பிறகும் அந்தக் குழந்தையையே ஓயாது நினைத்துக்கொண்டு 'அது இப்பொழுது என்ன செய்கிறது?' என்று சிந்திப்போர் பலராவர். குழந்தையை எடுத்துக் கொள்ளும் புதிய பெற்றோர், 'இனிக் குழந்தையை வந்து பார்த்து அனைவருக்கும் சங்கடத்தை உண்டாக்க வேண்டா' என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டதற்குப் பிறகுகூட, எங்கோ ஓரிடத்தில் ஒளிந்துநின்று குழந்தையைப் பார்க்க முயலும் பழைய பெற்றோரை இன்றும் காண்கிறோம்.

ஆவி, உடல், உடைமையெல்லாம் சரணாகதியாகக் கொடுத்துவிட்ட பிறகும் அடிகளார் மனத்தில் தோன்றுகின்ற நினைவுகள் இதே போன்றவைதான்.

'இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ?' என்பது விநோதமான வினாவாகும். மூன்றையும் கொடுத்துவிட்ட பிறகு எஞ்சியிருப்து எது? உடலும் ஆவியும், ஒன்றாய்ச் சேர்ந்திருக்கும் பொழுதுதானே 'நானும் எனதும்' தோன்றுகின்றன. இப்பொழுது இவை இரண்டும் ஒடுக்கப் பட்டு விட்டமையின் நானும் இல்லை; எனதும் இல்லை. இது தெரியாதா அடிகளாருக்கு? பின்னர் எந்த அடிப்படையில் 'எனக்கு' உண்டோ என்று பாடினார்? இந்தச் சிக்கலை உண்டாக்கிய குருநாதர் ஆட்கொண்ட போதே உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் எடுத்துக் கொண்டார், அவர் மறையும்பொழுது அடிகளாரின் இம்மூன்றையும் தம்முடன் எடுத்துச் சென்றிருந்தால் பிரச்சினை தோன்றப் போவதில்லை. ஆனால், பொல்லாத

குருநாதர் திருவருளை முழுவதுமாக நல்கிவிட்டு, போகிறபோக்கில் (மறையும் போது) இம்மூன்றையும் அடிகளாரிடமே ஒப்படைத்து விட்டல்லவா மறைந்தார்!.

அடிகளாரிடமிருந்து புறப்பட்டு. குருநாதரின் திருவடி களில் ஐக்கியமான இந்த மூன்றும் மீண்டும் அடிகளாரி டமே வந்துவிட்டன. அப்படி வந்து புகுந்தவுடன், 'நானும்', 'எனதும்' கூடவே வந்துவிட்டன. ஆனால், இந்த நானும், எனதும் பழைய நானும் எனதுமல்ல. குருநாதர் திருவடியைச் சென்று மீண்ட காரணத்தால் இந்த நானும் எனதும் தூய்மை பெற்றுச் சொல்லளவில் நின்றுவிட்டன. அதனால்தான் 'இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ' என்று பாடமுடிந்தது.

பழைய திருவாதவூராக இருந்திருப்பின், 'இடையூறு எனக்குண்டோ' என்று கூறினாலும் இடையூறு உண்மை யாகவே அவருக்குத்தான் என்பது விளங்கியிருக்கும். காரணம், திருவாதவூரென்ற மனிதரிடமிருந்து நானையும் எனதையும் பிரிக்கமுடியாது.

அருள்பெற்ற அடிகளாரிடம் 'நானும்' 'எனதும்' நின்றாலும் அவை செயலற்று, செருக்கிழந்த சொல்லளவாய், சுட்டுமாத்திரையாய் நின்றுவிட்டன.

'நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்பது இறுதித் தொடராகும். பழைய நானாக இருந்திருப்பின் 'நானோ' என்பதிலுள்ள ஓகாரம், வினாப்பொருளைத் தராமல், உறுதியைத் தெரிவிக்கும் ஓகாரமாக இருந்திருக்கும். 'நானேயோ தவம் செய்தேன்' (555) என்பதிலுள்ள ஓகாரம் உறுதிப்பொருளைத் தருவதாயும் காணலாம். இப்பொழுது அடிகளாரிடம் உள்ள 'நான்' சுட்டு மாத்திரையாய் நின்ற நான் ஆதலின், 'குருநாதர் நல்லது செய்தாலும் கெட்டது செய்தாலும் நான் தலைவனல்லன்; எனக்கும் அதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை' என்ற

பொருளைத் தந்துநிற்கிறது. ஒரு சில பெருமக்கள் 'நன்றே செய்வாய் பிழைசெய்வாய்' என்பதில் 'நன்றே செய்வாய்' என்பதை உடன்பாட்டுத் தொடராகவும், 'பிழைசெய்வாய்' என்பதை வினாத் தொடராகவும் கொண்டு, 'நீ நல்லதுதான் செய்வாய்; பிழையா செய்யப்போகிறாய்' என்று பொருள் கூறுகின்றனர். இவ்வாறு பொருள் கூறினால் நானோ இதற்கு நாயகம் என்ற தொடர் நின்றுவற்றும் தொடராக மாறிவிடும். பாடுபவர் மணிவாசகர் ஆதலின் நின்றுவற்றும் தொடரை அவர் பயன்படுத்தமாட்டார் என்பதை மனத்தில் கொள்வது நலம்.

அடுத்து, 503ஆம் பாடலை நோக்குவோம், இதற்கு முந்தைய பாடலில் எனக்கு என்பதற்கும், நான் என்பதற்கும் சுட்டளவில் நின்ற சொற்கள் என்று பொருள் கூறியது எவ்வாறு பொருந்தும் என்ற வினாத் தோன்று மேயானால் அதற்குரிய விடை இப்பாடலில் உள்ளது.

நயந்து நீயே ஆட்கொண்டாய் அதனால் மாயப் பிறவி உன்வசமாக ஆகிவிட்டது. அந்தப் பிறவியை அதாவது உடம்பை, அதனோடு சேர்ந்தவற்றை நீ எடுத்துக் கொள்ளுகின்றவரையில் வைத்துக்கொண்டிருப்பதுதான் என்னுடைய கடமை. இன்னது செய்யவேண்டும் என்று கட்டளையிடும் அதிகாரம் எனக்கேது? நீ வேண்டுமான காலம் இந்த உடம்பையும் அதனோடு சேர்ந்த மற்றவற்றையும் இந்த உலகில் விட்டுவைத்தாலும் சரி, உன் திருவடிகளில் சேர்த்துக்கொண்டாலும் சரி, இன்னது செய்க என்று கட்டளையிடும் அதிகாரம் எனக்கில்லை.

இப்பாடலைக் கூர்ந்து பார்த்தால், இதில் இரண்டு 'நான்'கள் இருப்பதை அறியமுடியும். 'நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்' என்பதிலுள்ள பழைய 'நான்'. 'ஆயக் கடவேன் நானோதான்' என்பதிலுள்ள நான் செயலிழந்து சுட்டுமாத்திரையாய் நிற்கும் புதிய 'நான்' ஆகும்.

உயிருண்ணிப் பத்து

இந்தப் பிறப்பிலேயே இறைக் காட்சி பெற்ற அருளாளர்கள் உலக வரலாறு முழுவதிலும் அங்கங்கே காணப்படுகின்றனர். காட்சி பெற்றதன் பயனாகத் தாங்கள் கண்ட காட்சிக்கு ஒரு வடிவு கொடுத்து, அதனை ஒரு புதுச் சமயமாகச் செய்து அதனைப் பரப்பியும் உள்ளனர். இறைக் காட்சி மூலம் தாங்கள் பெற்ற அளவற்ற ஆற்றலைப் பயன்படுத்தி பிற மக்களைத் தம்வழிப்படுத்த முயன்றவர் அருளாளர்களுள் சிலராவர்.

இவ்வாறு முனையாமல் தாம் பெற்ற அருளனுபவத்தை அனுபவித்து முடித்தபிறகு, காட்சியெல்லாம் மாறிவிட, இப்பிரபஞ்சத்தைப் புதிய கண்ணோட்டத்தில் கண்டு பாடிய அருளாளர்கள் சிலர்.

இவர்கள் அனைவருக்கும் அப்பாற்பட்டு இந்நாட்டில் தோன்றிய சைவ, வைணவ அருளாளர்கள், பக்தி என்ற ஓர் அடிப்படையை வளர்த்துக்கொண்டால் உலகத் துன்பங்களிலிருந்து விடுபட்டு, இறையடி என்ற வீடுபேற்றை அடையலாம் என்பதைத் தேவாரம், பிரபந்தம் முதலிய அருட்பாடல்களில் விரிவாகக் கூறிப்போயினர். ஆனால், இதுவரை மேலே கூறியுள்ள அருளாளர்கள் தொகுதியில் எந்த ஒருவரும் தாம் பெற்ற அனுபவத்தை, இறைக் காட்சியை இத்தகையது என்று எடுத்துத் தனியே விளக்கிப் பாடியதில்லை.

சாதாரண உலகியல் இன்பங்களைக்கூட அற்புதம், ஆச்சரியம் என்று சொல்லிவிட்டுப்போகாமல், அது எத்தகைய அனுபவம் என்று விரித்துக்கூறினால் கேட்பவர் பெரும் பயன் அடைவர்.

எட்டாம் நூற்றாண்டுவரையில் தோன்றிய அருளாளர்கள் யாரும் இம்முயற்சியில் நுழையாததால் இதற்கென்றே ஒருவரைப் படைக்க எண்ணினான்

இறைவன். அப்படிப் படைக்கப்பட்டவரே மணிவாசகப் பெருந்தகை ஆவார்.

தாம் பெற்ற இறையனுபவத்தை ஒவ்வொரு பதிகத்திலும், பலப் பல பாடல்களில் விரிவாக கூறியுள்ளார் அடிகளார். அந்த இறையனுபவம், உடலை என்ன செய்தது— பொறி புலன்களை என்ன செய்தது— மனத்தை என்ன செய்தது— உள்ளத்தை என்ன செய்தது— உயிரை என்ன செய்தது என்பதை விரிவாக எடுத்துக் கூறிய பெருமை அடிகளார் ஒருவருக்கே உரியதாகும்.

காதல் உணர்வு மிக நுண்மையானதுதான். இன்னார்க்கு இன்னவிதமாய் இருந்ததென்று எடுத்து உரைக்கப்படாதது என்றெல்லாம் கூறினாலும்கூட, பழைய சங்க இலக்கியத்தில் எண்பது சதவீதப் பாடல் அகம்பற்றிய பாடல்களே ஆகும். எனவே, சொல்ல முடியாதது என்று எல்லை காட்டப் பெற்ற ஒன்றைக்கூடச் சொல்ல முயன்றனர் நம் முன்னோர். அவர்களுள் ஒரு சிலர், சொல்ல முடியாததும், மிகமிக நுண்மையானதுமாகிய அந்தக் காதல் அனுபவத்தைப் பிறர் உணர்ந்து அனுபவிக்கும்படி மிகமிக விரிவாகப் பாடியுள்ளனர். காதல் உணர்வை வெற்றிகரமாகப் பாடுவதற்குக் கபிலர் முதலிய ஒருசில புலவர்கள் தோன்றினர் என்பது உண்மை.

ஆனால், எத்தனையோ அருளாளர்கள் இருந்தும், இறையனுபவத்தைப் பெற்றிருந்தும் அவர்களுள் மணிவாசகப் பெருந்தகை ஒருவர்மட்டுமே தாம் பெற்ற இறையனுபவத்தைப் புறத்தே நின்று கண்டு, அந்த அனுபவத்திற்கு வடிவு கொடுத்துள்ளார்.

இறையனுபவத்தைப் பெறுவதே மிகமிக அரிதான காரியம். காதல் அனுபவத்தில் 'தான்' என்ற அகங்காரம் மடிய மடியக் காதல் உணர்வு சிறப்படைவதுபோல,

இறையனுபவத்திலும் 'நான்' செயலிழந்து மடங்க மடங்க இறையனுபவம் விரிந்து மேலோங்கிச் செல்கிறது.

'நான்' மடங்கிவிட்ட நிலையில் பெறும் அனுபவத்தை மறுபடியும் 'நான்' உயிர்த்தெழுந்து, முன்னர்ப் பெற்ற அனுபவத்தைப் பிரித்துக்கூறல் இயலாத காரியம். அதுவும் கவிதையாகக் கூறுதல் மிகமிக இயலாத காரியம். காதல் உணர்வே இப்படியென்றால், இறையனுபவம்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ!

இந்நிலையில் நன்கு மூழ்கி அனுபவித்துவிட்டுப் பிறகு அந்த அனுபவத்திலிருந்து வெளியே வந்து, அந்த அனுபவத்தைத் திரும்பிப் பார்த்து, அது எவ்வாறு இருந்தது என்பதைக் கூறிய சிறப்பு அடிகளார் ஒருவருக்கே உரியதாகும்.

ஒரு விநாடியில் இறையனுபவக் காட்சியில் ஈடுபட்டு, அடுத்த விநாடியில் வெளிவந்து சுயநினைவுடன் பாடுவதால் திருவாசகப் பாடல்களில் பல சிக்கல்கள் தோன்றுகின்றன.

இறைத் தத்துவத்தின் முடிந்த முடிபாகவுள்ள ஒரு கருத்தை அறிவுவாதத்தின் அடிப்படையில் நின்று 'மனவாசகங்கடந்தான்' என்ற தொடரில் பாடுகிறார். அதே பாடலின் முதலடியில் 'எனை நான் என்பது அறியேன் பகல் இரவாவது அறியேன்' என்றால், இவை இரண்டும் எவ்வாறு பொருந்தும்? யாரோ ஒருவன் அடிகளாரை மத்த உன்மத்தன் ஆக்கினான். அதன் பயனாக 'எனை நான்' என்பது அறியாமல், பகல் இரவாவதும் அறியாமல் அறிவு, பொறி, புலன்கள் ஆகியவை செயலிழந்த நிலைக்குச் சென்றுவிடுகிறார் அடிகளார். உன்மத்தனாக ஆக்கப் பட்டமையின் நான், எனது, பகல், இரவு என்ற வேறுபாடுகள் தெரியவில்லை. இது தெரியவில்லை என்று பாடுகிறவர், இடையே தம்மை இவ்வாறு செய்தவன் மனவாசகங் கடந்தான் என்று கூறினால், இவை இரண்டும்

எப்படி ஒரே பாடலில் இடம் பெறுகின்றன. இதுவே அடிகளாரின் தனிச்சிறப்பாகும்.

அனுபவத்தின் எல்லைக்குச் சென்ற அவர், அந்த அனுபவத்தில் இருக்கும்போது நான், எனது, பகல், இரவு என்பவற்றை அறியவில்லை. உன்மத்தராக உள்ள ஒருத்தர், இவற்றை அறியேன் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஒன்று, எதுவும் அறியாத நிலையில் இருத்தல் வேண்டும்; இன்றேல், அறிவின் துணைகொண்டு இவற்றை அறியும் நிலையில் இருத்தல் வேண்டும். இந்த அடிப்படை சாதாரண மக்களைப் பொறுத்தமட்டில் நியாயமானதாகும். ஆனால், திருவாதவூரர் என்ற மனிதர், மணிவாசகராக மாற்றப்பட்டார். மிக நுண்மையான அவருடைய மனத்திலும் உள்ளத்திலும் இறைவன் புகுந்திருக்கலாம். ஆனால், பஞ்ச பூதத்தின் சேர்க்கை ஆகிய இந்தப் பரு உடம்பில் அவன் எவ்வாறு புகுந்தான்? நூற்றுக்கணக்கான இடங்களில் இந்த உடம்பினுள் அவன் புகுந்தான் என்று கூறியுள்ளாரே, அது எவ்வாறு பொருந்தும்?

பழைய அருளாளர்கள் பாடல்களில் இறைவன் அவர்கள் உள்ளத்தில் புகுந்து உறைவதாகப் பாடியுள்ளனர். 'மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்' (திருமுறை: 6:8:5), 'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்' (திருமுறை: 4:1:2) என்று நாவரசரும், 'நோயுளார் வாயுளான்' என்று காழிப்பிள்ளையாரும், 'மனத்துள்ளை வைத்தாய்' (திருமுறை: 7:1:1) என நம்பியாரூரரும் பாடியுள்ளமை நினைவில் கொள்ளத்தக்கது.

ஆனால், இவர்கள் யாரும் அவர்கள் பூத உடம்பில் அவன் புகுந்தான் என்றோ, பூத உடம்பில் சில மாற்றங்களைத் தந்தான் என்றோ பாடவேயில்லை. இறையருளில் மூழ்கி இருக்கும்போது மனம் பெற்ற மகிழ்ச்சி, உள்ளம் பெற்ற ஆனந்தம், உடம்பு பெற்ற இன்பம்

என்ற மூன்றையும் தனித்தனியே விரிவாகப் பாடியுள்ளவர் அடிகளாரே ஆவார்.

இப்படி, அனுபவத்தைத் திரும்பிப் பார்த்து அதுபற்றிப் பேசும்போது, இரக்க உணர்வு தோன்றுவது இயல்பேயாகும். அந்த இரக்க உணர்வும் இருவகைப்படும்.

'அடடா, பெற்றதை இழந்துவிட்டோமே இனி எப்போது அது கிடைக்கப்போகிறது!' என்று இரங்குவது ஒரு வகை. இரண்டாவது நிலை, 'இனி இந்த அனுபவம் என்றுமே கிடைக்கப்போவதில்லை' என்ற கழிவிரக்கத்தில் தோன்றும் இரக்கமாகும்.

இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையொன்றும் உண்டு. இந்த நிலையில் உணர்விற்கு வேலை கொடுக்காமல், அறிவிற்கு ஓரளவு வேலை கொடுக்கின்றனர் இப் பெரியோர். அந்த அறிவாராய்ச்சியில் இந்த இன்ப அனுபவம் இழக்கப்பெற்றதற்கு யார் காரணம்? கொடுத்தவனே அதை எடுத்துக்கொண்டானா? அல்லது தமது தகுதியின்மை, அஜாக்கிரதை காரணமாக அது போய்விட்டதா என்பன போன்ற வினாக்களுக்கு விடை தேடுகின்றனர்.

மேலே கூறிய மூன்று நிலைகளும் திருவாசகத்தில் மிகமிக அதிகமாக இடம்பெற்றுள்ளன.

உயிருண்ணிப் பத்தின் முதல் பாடலில் (506) இந்த மூன்று நிலைகளும் இடம்பெறக் காணலாம். களித்தலும், இறுமாப்புக் கொள்ளுதலும் எந்நாளோ என்று கேட்டால் இவை முன்னரே அனுபவிக்கப்பெற்று இழக்கப்பெற்றவை என்பது நன்கு விளங்கும்.

கிடைத்து அனுபவிக்கப்பெற்ற ஒன்று கைவிட்டுப் போனமையின் மீட்டும் அது கிடைக்கும்நாள் எந்நாளோ என்று வருந்தும் நிலையும் இப்பாடலில் பேசப்பெறுகிறது.

குருநாதர் வடிவிலிருந்த இறைவன், களிப்பையும் இறுமாப்பையும் தருவதற்கு முன்னர் அவை தங்குவதற்கு ஒரு நல்ல இடத்தைத் தயாரித்தான். அடிகளாரின் உள்ளத்தில் பழவினைகள் என்ற குப்பை நிறைந்திருந்தது. அந்தக் குப்பை இருக்குமிடத்தில் களிப்பும், இறுமாப்பும் தங்க முடியாது; ஆகையால், குருநாதர் வடிவிலிருந்த இறைவன் அருட்பார்வையால் அக்குப்பைகளை எரித்துவிட்டான். பிறவிதோறும் தொடர்ந்துவரும் வினையை ஒழித்தவன் ஆதலால், அவனை 'வினைக்கேடன்' என்கிறார் அடிகளார்.

தருக்க ரீதியாகப் பார்த்தால், இங்கே ஒரு சிக்கல் தோன்றுகிறது. பழவினைக்குக் கேடு சூழ்ந்தான்; அவ்வினை அழிந்தவுடன் களிப்பும், இறுமாப்பும் அங்கே குடியேறின. குடியேறிய அவை இரண்டும், இப்பொழுது வெளியேறி விட்டன. இவை வெளியேறக் காரணமென்ன என்ற ஆராய்ச்சியில் புகுகின்றார் அடிகளார்.

குருநாதரால் ஒழிக்கப்பட்ட வினை, மறுபடியும் தம்முள் புகுந்துவிட்டதா? இல்லை என்றால், களிப்பும் இறுமாப்பும் ஏன் உள்ளத்தைவிட்டுப் போகவேண்டும்? இதற்கு விடை காணமுடியாத அடிகளார், மறுபடியும் இவை இரண்டும் எப்பொழுது கிடைக்கப்போகிறதோ என்று அங்கலாய்க்கிறார்.

இப்பத்தின் இரண்டாவதாக அமைந்துள்ள பாடல் (507) வைப்புமுறையில் இரண்டாவதாக இடம்பெற்றுள தேனும் இப்பத்தின் முதற்பாடலாக வைத்துப் பொருள் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

குருவடிவில் வந்த இறைவன், ஒரு நாய்க்குத் தவிசிட்டதுபோல தமக்கு அருள்செய்தான் என்பதைக் கூற வந்த அடிகளார், அருள் செய்தான் என்று பொதுப்படையாகக் கூறாமல், 'ஊனார் உடல் புகுந்தான், உளம் பிரியான், உயிர் கலந்தான்' என்று இவ்வளவு விரிவாகக் கூறுவது, திருப்பெருந்துறையில் நடந்ததைப் பின்னோக்குப்

பார்வையில் இப்பொழுது அடிகளார் காண்கிறார் என்பதையே தெரிவிக்கின்றது. இங்கும் முதலில் இடம் பெறுவது இறைவன் உடலில் புகுந்த சிறப்புத்தான். அதை விடச் சிறப்பு அவன் உளம் பிரியான் என்று பாடியதாகும்.

இவ்வளவு சிறப்புக்களைச் செய்தவன் யார் எனக் கூற வந்த அடிகளார், 'வானோர்களும் அறியாதது ஓர் வளம் ஈந்தனன் எனக்கே' என்று பாடுகிறார். தமக்குக் கிடைத்த சிறப்பைக் கூறும்போது வானோர்களும் அனுபவியாத என்று கூறாமல், 'வானோர்களும் அறியா' என்று பாடிய தால், வானவர்கள் இதனை அனுபவியாததுமட்டு மன்று, அதன் சிறப்பை அவர்கள் அறிந்ததுகூட இல்லை என்கிறார். இத்தகைய ஓர் அனுபவத்தைப் பெற்ற பிறகு, களிப்பும், இறுமாப்பும் இயல்பாகவே தோன்றுமன்றோ!

506, 507ஆம் பாடல்களில் மூன்று செய்திகள் பேசப் பெறுகின்றன. அடிகளாரின் வினை குடியிருந்த உள்ளத்தில் அந்த வினைகளை எரித்தது (வினைக்கேடன்) முதற்செய்தி.

அவரது உடலிலும் உள்ளத்திலும் அவன் புகுந்தது இரண்டாவது செய்தி. இதனையே 'மெய் நாள்தொறும் பிரியா வினைக்கேடா' (506) என்றும், 'ஊனார் உடல் புகுந்தான் உளம் பிரியான் உயிர் கலந்தான்' (507) என்றும் பாடுகிறார்.

மூன்றாவது செய்தியில் ஒரு நிலை விரிவாகவும், ஒரு நிலை குறிப்பாகவும் பேசப்படுகின்றன. விரிவாகப் பேசப் பெற்றது இரண்டாவது நிலை கிடைத்தவுடன் ஏற்பட்ட களிப்பும், இறுமாப்பும் ஆகும். குறிப்பாகப் பேசப்பெற்ற செய்தி, களிப்பும் இறுமாப்பும் இப்பொழுது காணாமல் போய்விட்டமையால், அவற்றை மீட்டுப் பெறுவது எந்நாளோ என்று இரங்கிக் கூறும் நிலையாகும்.

509ஆம் பாடலின் இறுதி அடியில் வரும் மனத்தான், கண்ணின் அகத்தான் என்பவை உபசார வழக்கன்று.

உடல் புகுந்தான், உளம் நிறைந்தான், உயிர் கலந்தான் என்று முன்னரே பாடிவிட்டமையின், இப்பொழுது அப்படிக் கலந்த நிலையிலிருந்து பிரிந்து, புறத்தே நின்று, அந்தக் கலந்த காட்சியைக் காண்கிறார் அடிகளார். அதன் பயனாகவே உடல்முழுதும், உயிர்முழுதும் அவன் கலந்துள்ளான் என்றாலும், உடலின் அடையாளமாக ஓர் உறுப்பையும், உளத்தின் அடையாளமாக ஓர் உறுப்பையும் தனியே எடுத்து விதந்து பேசுகிறார். உடல் முழுதும் நிறைந்தவன் உடலின் தனிச்சிறப்புப் பெற்ற கண்ணின் வழியாகக் காட்சியளிக்கிறான். ஆழமாகவுள்ள உள்ளத்தில் நிறைந்தவன், மேலாகவுள்ள மனத்தின் வழியாகவும் காட்சி தருகிறான். நுண்மையான உளத்தின் பிரதிநிதியாக மனமும், பருமனனான உடலின் பிரதிநிதியாகக் கண்ணும் பேசப் பெற்றிருத்தல் அனுபவத்தின் தனிச்சிறப்பைக் காட்டுவன வாகும்.

'மறுமாற்றத்திடையான்' என்பதற்குப் பல்வேறு விதமாகப் பொருள் கூறியுள்ளனர். மறுமாற்றம் என்ற சொல் ஒரு வினாவிற்குரிய விடையைக் குறிப்பதாகும். விடையாக வரும் சொல்லிலும் உள்ளான் என்று விளக்கம் தந்தால் அது பொருந்துமாறில்லை என நினைந்த உரையாசிரியர் பலரும் 'மறுமாற்றம்' என்ற சொல்லிலுள்ள 'மறு' என்ற பகுதியை எடுத்து, அது 'மற்று' என்ற சொல்லின் இடைக்குறை என்று பொருள்கூறினர். அது ஒருபுறமிருக்க, 'மறுமாற்றம்' என்ற தொடரை நாம் அப்படியே ஏற்றுக்கொள்கிறோம்.

மாற்றம் என்பது ஒருவர் சிந்தனையில் தோன்றிய எண்ணம் சொல்வடிவு பெற்று வெளிவருவதைக் குறிக்கும். மறுமாற்றம் என்பது இவ்வாறில்லை. எதிரே உள்ளவர் நம்மைநோக்கி ஒரு வினாவை எழுப்பினால், அந்த வினா விற்குரிய விடைதான் சொல்வடிவாக வெளிவருகிறதே தவிர, நம்முடைய சொந்த எண்ணங்களுக்குக் கொடுக்கப் பட்ட வடிவு அல்ல அது.

இதன் எதிராக, நாம் சொந்தமாகப் பேசும் 'மாற்றம்' அல்லது சொல் வேறுபட்டது. நம்முடைய மூளை, அறிவு, மனம் என்பவை தம்முள் ஊடாடித் தோன்றும் ஓர் எண்ணத்திற்கு சொல்வடிவு தர விரும்பும்பொழுது வைகரி பைசயந்தி என்பவற்றின் துணையுடன் நாக்கு முதலியவற்றின் உதவியால் அச்சொல் வடிவு பெறுகிறது.

ஒரு சொல் வெளிப்படும்போது இத்துணை நிகழ்ச்சிகள் உள்ளே நடைபெறுவதால், அச்சொல்லை இறைவி வடிவ மாகவே (சக்தி வடிவமாகவே) நம்முன்னோர் கருதினர்.

பிறர் ஒரு வினாவை எழுப்பியபோது அதற்கு நாம் கூறும் விடையையே 'மறுமாற்றம்' என்று சொல்லுகிறோம். இந்த மறுமாற்றம், கேட்கப்பட்ட வினாவின் எல்லைக்குள் அமைவதால் இதில் பணிபுரிவது நம்முடைய அறிவு மட்டுமே ஆகும். எனவே, மாற்றத்திற்குரிய தோற்றப் பெருமை, மேலே கூறப்பெற்ற பல செயற்பாடுகள் மறுமாற்றத்திற்கு இல்லை என்பது தெளிவு.

இந்த வேறுபாட்டை நன்கு அறிந்த அடிகளார் வேண்டுமென்றே 'மறுமாற்றத்திடையான்' என்று கூறு கின்றார்.

மறுமாற்றம் வினாவின் எல்லைக்குள் நிற்பதாலும் மாற்றத்திற்குரிய சிறப்பு அதன்பால் இல்லையென்றாலும் அந்த மறுமாற்றத்திற்கூட இறைவனே உள்ளான் என்று கூறுவதால் 'மாற்றம்', 'மறுமாற்றம்' என்ற இரண்டிலும் அவனே உள்ளான் என்ற நுண்மையான கருத்தைப் பெறவைக்கின்றார்.

அடிகளார் காலத்திற்கு ஒரு நூற்றாண்டு பிற்பட்டு வந்த கம்பநாடன் இப்பாடலிலுள்ள நுணுக்கத்தை நன்கு அறிந்திருந்தான்போலும். எனவே, அதனை விரிவுபடுத்தி இரணியன் வினாவிற்கு விடைகூறும் பிரகலாதன் கூற்றாக (மறுமாற்றமாக),

சாணினும் உளன் ஓர்தன்மை
அணுவினைச் சத கூறுஇட்ட
கோணினும் உளன் மாமேருக்
குன்றினும் உளன் இந்நின்ற
தூணினும் உளன் நீ சொன்ன
சொல்லினும் உளன்

(கம்பன். இரணியன் வதை: 124)

என்று விடையிறுக்கின்றான்.

இதுவரை திருவாசகத்தில் வேறெங்கும் காணப்படாத புதிய சிந்தனை உயிருண்ணிப் பத்தின் ஐந்தாம் பாடலில் (510) வெளியிடப்படுகிறது. இதுவரையுள்ள பாடல்களில் அடியார் கூட்டமென்று அடிகளார் குறிப்பிடும் பகுதிகளைச் சற்று நிதானமாக ஆராய்ந்தால் ஓர் உண்மை நன்கு விளங்கும். எட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பாண்டி நாட்டில் சைவத் துறவிகள் பலர், சீடர்களைச் சேர்த்துக்கொண்டு, தனித் தனியாகவே இயங்கிவந்தனர் என்று நினைப்பதில் தவறில்லை. தனியே மடங்கள் அமைத்து அதில் சைவத் துறவிகள் தங்கியிருக்கும் பழக்கம் நாவரசர் காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். இதன் எதிராகப் பௌத்தம், சமணம் ஆகிய சமயத்தினர் மடங்கள் அமைத்து வாழும் பழக்கத்தைத் தொன்று தொட்டே கொண்டிருந்தனர். என்றாலும், சைவர்களிடையே அப்பழக்கம் வலுப்பெற்றிருக்கவில்லை.

மாவிரதியர், பாஷாண்ட சைவர், காபாலிகர், போன்ற பல உட்பிரிவுகள் சைவர்களிடையே இருந்தமையின் தோன்றிய ஒன்றிரண்டு மடங்களும் தனித்தே இயங்கலாயின. திருஞானசம்பந்தர் காலத்தில், அவர் செல்லுமிடங்களில் எல்லாம் அவரைப் பின்தொடர்ந்து பல அடியார்கள் சென்றுள்ளார்கள். ஆதலின், அவர்கள் தங்குவதற்கு ஆங்காங்கே பல விடுதிகள் அமைத்தனர். அடியார்கள் தங்குமிடம் ஆதலால் அவற்றை மடங்கள் என்று கூறினர் போலும்.

திருநீலநக்கர் தம் வீட்டின் அருகில் ஒரு மடத்தை அமைத்திருந்தார் என்று தெரிகிறது. நாவரசர் பெருமான் திருப்பூந்துருத்தியில் நீண்டநாள் தங்கிய காரணத்தினால் அங்கே ஒரு மடத்தை நிறுவி, அதில் தங்கியிருந்தார் என்று அறிகிறோம். இவைதவிரச் சைவர்களுடைய மடங்கள் என்று சொல்லத்தக்கவை அதிகமில்லை. அன்றியும் துறவுக் கோலம் பூண்டு துறவிகளாக வலம்வந்த சைவ அடியார்கள் அதிகம் காணப்பெறவில்லை ஆதலால், அவர்கள் தங்குவதற்குரிய மடம் அமைக்கும் பிரச்சினையும் அங்குத் தோன்றவில்லை போலும்.

இவற்றையல்லாமல் மற்றொரு முக்கியமான பிரச்சினையை மனத்தில் கொள்ளவேண்டும். மூவர் முதலிகள் செல்லுமிடமெல்லாம் அவர்கள்மாட்டுப் பேரன்பு கொண்ட தொண்டர்கள் உடன்சென்றார்களே தவிர, தனிப்பட்ட முறையில் கூட்டம்கூட்டமாக அடியார்கள் குழுவாக அமைந்து கூட்டுவழிபாடு செய்ததாகவோ; தலயாத்திரை சென்றதாகவோ நினைப்பதற்கு எவ்விதச் சான்றுமில்லை. நாவரசர் பெருமான் 13 ஆண்டுகள் புகுந்திருந்த சமண சமயத்திலும், அதற்கு எதிரியாக இருந்த பௌத்த சமயத்திலும் துறவிகள் ஒன்றுகூடி ஒவ்வொரு மடத்தில் தங்கியிருந்ததும், அவர்கள் கூட்டுப் பிரார்த்தனை செய்ததும் நாவரசர் பெருமான் காலத்தில் அதிகம் காணப்பட்டவையாகும். இதனை நாவரசர் பெருமான் நன்கு அறிந்திருக்கவேண்டும். அப்படியிருந்தும் சமண சமயத்திலிருந்து சைவத்திற்குத் திரும்பிய பெருமான், கூட்டுப் பிரார்த்தனை முறையை சைவத்திற்குக் கொண்டு வரவில்லை.

நன்கு சிந்தித்தால் மடங்களில் நடைபெறும் கூட்டுப்பிரார்த்தனை முறை இப்பெருமக்கள் காலத்தில் சைவசமயத்தில் இடம்பெறாமல் போனது உண்மைதான். மடங்களில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும்பொழுதும்

அதன் தலைவராகவுள்ள மடாதிபதி ஏனைய தொண்டர்களைப் போலச் சாதாரண மனிதர்தான். இவர்களின் தலைவர் என்பதுபோக அவருக்கென்று தனிச்சிறப்பு எதுவுமில்லை.

ஆனால், காழிப்பிள்ளையார், நாவரசர் பெருமான் ஆகியோரைப் பின்தொடர்ந்த அடியார்கள், தொண்டர்கள் என்பவர்களின் நிலை வேறு. இந்தப் பெருமக்கள்மாட்டும், இறைவனிடத்தும் அத்தொண்டர்கள் பக்தி கொண்டிருந்தார்கள் என்பது உண்மைதான். ஆனாலும், இப்பெரு மக்களோடு சமத்துவம் கொண்டாடக்கூடிய நிலை யாருக்குமே இல்லையாதலால் இவர்களுக்கும் அடியார் களுக்கும் இடையே உள்ள தரவேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ள அளவு வேறுபட்டிருந்தமையின் சமமாக அமர்ந்து கூட்டுப் பிரார்த்தனை செய்யும் வாய்ப்பு இவர்களிடையே ஏற்பட்டதில்லை.

எட்டாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இருந்த நிலை இதுதான்.

அடிகளார் காலத்தில் நிலைமை முற்றிலும் வேறாகி விட்டது. மூவர் முதலிகளைத் தமிழர்களும், குறிப்பாகச் சைவர்களும் அடையாளம் கண்டுகொண்டதுபோல அடிகளாரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. கண்டு கொள்ளாதது மட்டுமன்று, அவர் காதில் படும்படியாக, அவரைப் பித்தன் என்று ஏசினர். நரி பரியாகியது; சொக்கன் பிட்டுக்கு மண் சுமந்தது ஆகிய நிகழ்ச்சிகளை மக்கள் ஓரளவு அறிந்திருப்பினும் இவை அனைத்தும் சொக்கன் செய்தது அடிகளார் பொருட்டேயாகும் என்பதை மக்கள் மறந்துவிட்டனர் போலும்.

பெரியாழ்வார் காலத்திலிருந்து சைவ வைணவப் போராட்டம் பாண்டி நாட்டில் தலைதூக்கிற்று. சீடர்களோடு கூடிய துறவிகள் ஆங்காங்கே இருப்பினும்

இவர்களிடையே ஒற்றுமையும் ஒருமைப்பாடும் இல்லை. தாங்கள் தாங்களே பெரியவர்கள் என்றும், தம்முடைய உபதேசம்தான் பின்பற்றப்படவேண்டும் என்றும் இவர்கள் கூறிவந்தார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது.

இதனையே அடிகளார் 'சமயவாதிகள் தத்தம் மதங்களே அமைவதாகவே அரற்றி மலைந்தனர்' (திருவாச: 4-52,53) என்று பாடுகிறார். இத்தகைய குழப்பமான ஒரு நிலையில் சைவ சமயத்தவர் ஒன்றுகூடி, கூட்டுவழிபாடு செய்திருப்பர் என்று கூறுவதற்கில்லை. அப்படியே சில நேரங்களில் செய்திருப்பினும் அச்சமயத் துறவிகள்கூட ஒன்றாக இணைந்து மடங்கள் அமைத்துத் தங்கியிருந்தனர் என்று சொல்வதற்குப் போதிய ஆதாரமில்லை.

காலை, மாலை நேரங்களில்மட்டும் திருக்கோயில் சென்று வழிபடுவது, ஏனைய நேரங்களில் தனித்தனியே இருந்து தியானம் செய்தல், நூல்களைப் படித்தல் என்ற முறையில்தான் அந்நாளைய துறவிகள் பொழுதைக் கழித்திருத்தல் வேண்டும். தனியே இருக்கும்போது சண்டிக் காளை போன்று சுற்றித்திரியும் மனத்தை அடக்கி ஆளுதல் அனைவருக்கும் இயல்வது ஒன்றன்று. இந்த அடிப் படையை மனத்துள் கொண்டு பார்த்தால், அடிகளார் 510 ஆம் பாடலின் இறுதி இரண்டு அடிகளுக்குத் தக்க முறையில் பொருள் செய்யமுடியும்.

பற்றுதற்கு உரிய பொருள் இறைவன் திருவடிகளே என்பதை உணர்ந்து, ஏனைய பற்றுக்களைத் துறந்து, திருவடிகளிலேயே கவனத்தைச் செலுத்தும் பெரு மக்களுக்கு, அடிகளார் செய்யும் உபதேசம், நான்காவது அடியில் பேசப்பெறுகிறது. 'கற்று ஆங்கு அவன் கழல் பேணினரொடும் கலந்தே கூடுமின்' என்று கூறியதால் பற்றற்ற துறவிகளும்கூடத் தனித்தனியே நிற்பார்களாயின் மனம் அவர்களை எளிதில் ஏமாற்றிவிடும். எனவே, நன்கு கற்று இறைவன் கழல் பேணிடும் அடியார்களோடு

உளம்கலந்து கூடிவாழ முற்படுங்கள் என்ற எச்சரிக்கையை விடுக்கின்றார்.

தமிழகத்தில் சைவப்பெருமக்கள் பாடல்களில் அதிகம் இடம்பெறாத ஒரு புதிய கருத்தாகும் இது.

இன்று நமக்குக் கிடைக்கும் திருவாசகப் பிரதிகளில் இப்பாடல்கள் ஒரே முறையில் தொகுக்கப்பெற்றுள்ளன. இந்தத் தொகுப்பினை யார், எப்பொழுது, எந்த அடிப்படையில் செய்தார் என்ற விவரங்கள் எதனையும் நாம் அறிய முடியவில்லை. அதனை அறியமுடியாதபோது ஒவ்வொரு தொகுதியின் பாடல் எண்கள் அடிப்படையில் 100, 50, 20, 10 என்ற இறங்குவரிசையில் தொகுக்கப்பெற்றன என்றே பலரும் கூறிச்சென்றனர். இவ்வாறு பிரிப்பது 'சொக்கனுக்குச் சட்டி அளவு' என்ற பழமொழிப்படி வகுக்கப்பெற்றது என்றே தோன்றுகிறது. இது பொருந்து மாறில்லை என்று முன்னரும் குறிப்பிட்டுள்ளோம்.

ஆனாலும், பிடித்த பத்திற்கு முன்னரே உயிருண்ணிப் பத்து பாடப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

அருளாளர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் உள்ளுணர்வு, திடீர்திடீரென்று சில உண்மைகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துகின்றது. இறையுணர்வின் உந்து சக்தியால் பாடப்பெற்றவை ஆதலின், இவர்களை இப்பாடல்களுக்கு முழுப் பொறுப்பாளியாக ஆக்க முடியாது. சாதாரணப் பாடல்கள் என்றால், பாடியவரே அப்பாடல்களுக்கு முழுப்பொறுப்பாளி ஆவார். இதற்கு முற்றிலும் மாறுபட்டவர்கள் அருளாளர்கள் என்பதை முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம்.

இதுவரை குருநாதர், அவருடன் இருந்த அடியார்கள், குருநாதர் தந்த இறையனுபவம் ஆகியவை தம்மைவிட்டுப் போய்விட்டன என்றும், அது மீட்டும் தமக்குத் தரப்பட

வேண்டும் என்றும் கெஞ்சிப் பாடும் அடிகளார், சற்றும் எதிர்பாராதவிதமாக 'வேண்டேன்' என்று தொடங்கும் 512 ஆம் பாடலின் நான்காவது அடியில் 'இனிப் புறம்போகல் ஒட்டேனே' என்று பாடியுள்ளார். தம்முள் வந்த இறைவனை வெளியே போகவிடமாட்டேன் என்று கூறுவதற்கு எல்லையற்ற நெஞ்சத்துணிவு வேண்டும். அனைத்தும் போய்விட்டதே என்று அழுதுபுலம்பும் ஒருவர் திடீரென்று 'புறம்போகல் ஒட்டேன்' என்று பாடுவது அவருக்கே வியப்பைத் தந்திருக்கவேண்டும். என்றாலும், அச்சொல் தம்முடைய எண்ணத்தின் பிரதிபலிப்பு அன்று என்பதை எளிதில் உணர்கின்றார் அடிகளார். அப்படியானால் இந்தச் சொல்லை வெளிப்படுத்தியவன் தம்முள் புகுந்தவன்தான் என்ற நினைவு வருகின்றது.

உட்புகுந்தவன் காரணமில்லாமல் தம் மூலமாக இச்சொல்லை வெளிப்படுத்தியிருக்க மாட்டான். சொல் வெளிவந்துவிட்டது ஆதலின், அதன் காரணத்தைத் தேடிய அடிகளார் விரைவில் கண்டுகொண்டார். உள்ளே புகுந்தவன் மலைபோன்றவன் ஆயினும், அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை என்பதை உணர்ந்துகொண்டார் ஆதலின் இந்த ஒரே கருத்தை வைத்து, ஒவ்வொரு பாடலிலும் 'சிக்கெனப் பிடித்தேன்' (திருவாச: 536-545) என்ற தொடர் வரும்படியாக அமைத்துப் பிடித்த பத்தாகிய பதிகத்தையே பாடியுள்ளார்.

முதலில் வெளிவந்த சொல் 'போகல் ஒட்டேன்' என்பதுதான். உள்ளிருந்து அவன் அனுப்பிய அந்தச் சொல்லைத் திருப்பி நினைக்க நினைக்க, அவருடைய உள்ளத்தில் புதிய தென்பு பிறக்கிறது. அதன் பயனாகவே பிறந்த பிடித்த பத்தில் 'சிக்கெனப் பிடித்தேன்' என்று கூறுவதோடு நில்லாமல், 'எங்கு எழுந்தருளுவது இனியே' என்றும் பாடுகிறார்.

உலகியலில் மிக்க ஆர்வத்தோடு ஒரு பொருளைத் தேடுகின்றவர்கள், நீண்ட காலம் அம்முயற்சியில் ஈடுபட்டால் பிறகு ஒரு நிலையில் அப்பொருள் எதிரே இருந்தாலுங்கூட அதனை அறிந்துகொள்ள முடியாமற் போய்விடும். மனித மனத்தின் குறைபாடுகளுள் இதுவும் ஒன்று.

திருப்பெருந்துறையில் குருநாதர் வடிவிலிருந்த இறைவன் இவருட் புகுந்ததை இவர் நன்றாக அறிவார். அதனைப் பல முறை பல பாடல்களில் பாடியும் இருக்கிறார். அப்படி இருந்தும், ஒரு சில நேரங்களில் இவ்வுண்மை மறக்கப்படுகிறது. பிறகு, அது நினைவிற்கு வந்தவுடன் உள்ளேயுள்ள பொருளை, அது தன்னுள் இருக்கிறது என்ற கருத்தை மறந்துவிட்டு, வெளியே தேடிய செயலை நினைந்து ஓரளவு வருத்தமடைகிறார்.

உருவம் இல்லாத பொருள் உள்ளே புகுந்து மறைந்து கொண்டிருந்தால், அதை உணர்வதும் காண்பதும் கடினம். ஆனால், இவர் உள்ளத்தில் புகுந்த அவன் 'செச்சை மலர் புரைமேனியன்' (514) ஆக உள்ளான். நாம ரூபம் கடந்த பொருளாகவுள்ள அவன், ஒரு வடிவை எடுத்துக் கொண்டல்லவா உள்ளே புகுந்தான்! அவன் எடுத்துக் கொண்ட வடிவம் கண்ணைப் பறிக்கும் சிவப்பு நிறம் பொருந்தியதாகவல்லவா (செச்சைமலர் புரை மேனியன்) இருந்தது! அப்படியிருந்தும் அவன் தம்முள் புகுந்ததையும் அங்கேயே தங்கிவிட்டதையும் அறியாமல் இருந்து விட்டதாக 'எனக்கு இருக்கின்றதை அறியேன்' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார்.

510ஆம் பாடலில் 'கூடுமின் கலந்தே' என்று ஒரு புதிய கருத்தை வெளியிட்டதுபோல 515 ஆம் பாடலில் மற்றுமொரு புதிய சிந்தனையை வெளிப்படுத்துகிறார்.

இதுவரை நூற்றுக்கணக்கான பாடல்களில் 'நீ உன்னை நல்கியே தீரவேண்டும். என் தகுதி பாராமல் ஆட்கொண்டதால் வற்புறுத்தும் உரிமை எனக்கு வந்து விட்டது' என்ற கருத்துப்படப் பாடியவர், இந்த 515ஆம் பாடலில் 'உனை நல்காய்' என்று கேட்பதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது' என்று பேசுகிறார்.

அதைவிட வியப்பு என்னவென்றால், 'நான் பாவியாக இருந்துகொண்டு, 'நீ உனை நல்காய்' என்று கேட்பது எப்படிப் பொருந்தும்' என்று பேசுவதாகும்.

பெருந்துறை நாயகன் தம் வினைகளையும், மலங் களையும் சுட்டெரித்துவிட்டான். அவற்றைச் சுட்டெரித்து தனக்கு ஒரு நல்ல வழியை ஏற்படுத்திக்கொண்டு அவ் வழியின் மூலமே தம்முள் புகுந்தான் என்றல்லவா நூற்றுக்கணக்கான பாடல்களில் பாடியுள்ளார்?

இதே பதிகத்தில் 512ஆம் பாடலில் 'புறம்போகல் ஒட்டேன்' என்று உறுதிப்பாட்டோடு கூறியவர், இரண்டு பாடல்கள் கழிந்தவுடன் 'நான் பாவியனானால் உனை நல்காய் எனலாமே' என்று பாடுவது, ஆழ்ந்து சிந்திப்பதற்கு உரியதாகும்.

இந்த இரண்டு கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறானவை; முரண்பட்டவையும்கூட. ஒரே பதிகத்தில் இரண்டு பாடல்கள் பாடி முடிப்பதற்குள் இத்தகைய முரண்பாடு எப்படி வெளிப்பட்டது?

ஆழ்ந்து நோக்கினால் இதில் முரண்பாடு ஏதும் இல்லை என்பது தெரியவரும். இவை இரண்டும் இரண்டு மனநிலைகளில் பாடப்பெற்றவை ஆகும். இறையனுபவத்தில் ஊறித் திளைத்து ஆழ்ந்து நிற்கும் நிலையில் 'புறம்போகல் ஒட்டேன்' என்ற தொடர் வெளிப்பட்டது. அந்த நிலை முற்றிலும் மாறி, சாதாரண மனித மனநிலையில்

இருக்கும்போது பாடப்பட்டதுதான் 'நான் பாவியனானால்' என்ற தொடர்.

இறையனுபவமும், உள்ளத்து உணர்வும் கடல் அலைபோல் ஓங்கி மேலே வருகின்ற நிலையும், அடுத்த விநாடியில் அந்த நிலை மாறிச் சாதாரண நிலைக்கு வருவதும் அருளாளர்களுக்குப் பொது என்ற உண்மையை எடுத்துக்காட்ட ஒரே பதிகத்தில் வரும் இந்த இரண்டு தொடர்களும் உதவி புரிகின்றன.

அச்சப் பத்து

திருவாசகத்தில் எந்த ஒரு பதிகத்தையோ பாடலையோ 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து' படிக்கும்பொழுது ஏற்படுகின்ற அனுபவம் தனித்தன்மை வாய்ந்தது. ஏனைய அருளாளர்கள் பாடல்களில் உள்ளத்தை உருக்கும் பாடல்கள் இவ்வளவு அதிகமாகக் காணப்பெறுவதில்லை.

உள்ளத்தை உருக்கும் பாடல்கள் நிறைந்துள்ள திருவாசகத்தில் அச்சப் பத்து தனித்து நிற்கின்றது. இதில் எந்த ஒரு பாடலிலும் அன்பைப் பெருக்கும் வாய்ப்போ நெஞ்சை உருக்கும் இயல்போ இல்லை என்பது என்னுடைய கருத்தாகும். பக்தி அடிப்படையில் நின்ற பெரியோர்கள் அருளியவை அனைத்துமே ஈடு இணை யற்றவை, உயர்ந்தவை என்று கருதுவோர்கள் பலர் உண்டு.

இந்த அடிப்படையை விட்டுவிட்டு, அருளாளர்கள் பாடல்களிலும் ஈடு இணையற்று உயர்ந்து நிற்பவை பல; இடைநிகர்த்த தன்மை உடையவை சில; சாதாரண மானவை சில. இவ்வாறு பிரித்துப் பார்ப்பது சாதாரண மான மனிதர்களின் இயல்பாகும். இறையனுபவத்தில் மூழ்கித் திளைத்த அடிகளாரும் பல சமயங்களில் அவ்வனுபவத்திலிருந்து விடுபட்டு உலகியல் நிலைக்கு வந்து அந்த அனுபவத்தைத் திரும்பிப் பார்த்து அது

எவ்வாறிருந்தது என்று கூறும் பாடல்களே திருவாசகம் என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம்.

ஆனால், அச்சப்பத்து இந்த மூன்று நிலைகளிலும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை. இதிலுள்ள பத்துப் பாடல்களிலும் இறைவன் திருவடிகளை நினைந்து உருகாதவர்களைக் கண்டால் அஞ்சுகிறேன் என்று பாடுகிறார். இரண்டு பாடல்களில் (520, 524) வெண்ணீறு அணியாதவர்களும் (520) திருமுண்டம் தீட்டாதவர்களும் (524) பிரித்து எடுத்துப் பேசப்பெறுகின்றனர். இரண்டு பாடல்களில் சிவபெருமானுடைய திருவடியைப் போற்றுவதை விட்டுப் பிற தெய்வங்களை நினைக்கின்றவர்களும் (516), பிறதெய்வங்களை நினைந்தவுடன் அருவருப்புக் கொள்ளாதவர்களும் (517) பிரித்தெடுத்துப் பேசப்பெறுகின்றனர்.

வெண்ணீறு அணிதல், திருமுண்டம் தீட்டுதல் என்பவை புறத்தே செய்யப்பெறும் செயல்களாகும். பிற தெய்வங்களைப் போற்றுபவர்கள், பிற தெய்வங்களை அருவருக்காதவர்கள் ஆகிய இருவருடைய செயல்களும் அவர்களுடைய மனநிலையைப் பொறுத்ததாகும்.

இந்த நான்கு பாடல்கள்தவிர, ஏனைய பாடல்களில் ஈசன் திருவடிக்கண் அன்பு செலுத்தி மனம் உருகி நிற்காதவர்கள் பேசப்பெறுகின்றனர்.

எந்த ஒரு நாட்டிலும் எந்த ஒரு சமயமும் எல்லா மக்களாலும் தழுவப்பட்டது என்று கூறுவதற்கில்லை. ஒரே சமயத்தைத் தழுவியதாகச் சொல்லிக்கொள்ளும் இஸ்லாமிய நாடுகள், மேலைநாடுகள் போன்றவற்றிலும் இந்த ஒரு சமயமே பல்வேறு கிளைகளாகப் பிரிந்து தம்முள் முரண்பட்டுப் போராடிவருவதைக் காண்கிறோம்.

மாபெரும் கல்வியாளராகவும், அமைச்சராகவும் இருந்த ஒருவர் தாம் மேற்கொண்ட சைவசமயத்தைப் போற்றுவதில் எவ்விதத் தவறுமில்லை. சமயத்தின் புறப்

பகுதிகளைக் காட்டிலும் உள்ளம் உருகுதல், கண்ணீர் சொரிதல் ஆகிய அகப்பகுதிகளை ஏறத்தாழ எல்லாப் பாடல்களிலும் சொல்லியிருப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதேயாம்.

அடிகளார் காலத்தில் வைணவம் நன்கு வளர்ச்சி அடைந்திருந்தது என்று முன்னுரையில் குறிப்பிட்டு உள்ளோம். 'சமயவாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரட்டி மலைந்தனர்' (திருவாச: 4:52,53) என்றும் 'ஆத்தமானார் அயலவர் கூடி நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர்' (திருவாச: 4: 44) 'உலகாயதம் எனும் ஒண்திறல் பாம்பின் கலா பேதத்த கடுவிடமெய்தி' (திருவாச: 4:56,57) என்றும் அடிகளாரே பாடியுள்ளார் என்பதை நினைக்கும்போது இதில் அச்சப் பத்து எவ்வாறு பொருந்திற்று என்பது சிந்தித்தற்குரியது.

இத்தனை சமய வேறுபாடுகளும் அடிகளார் காலத்தே நிலவியிருந்தன என்பது அவர் பாடல்கள்மூலமே அறிய முடிகிறது. இவற்றையெல்லாம் நன்கு அறிந்திருந்த அடிகளார் வெண்ணீறு அணியாதவரை, திருமுண்டம் தீட்டாதவரைக் கண்டால் அஞ்சுகிறேன் என்று பாடியது அன்றைய சூழ்நிலையில் சற்றும் பொருந்துவதாக இல்லை. திருவாசகத்தின் பொதுப்போக்குக்கும் இந்தப் பத்துப் பாடல்கள் பொருந்துவதாயில்லை.

இந்தச் சிந்தனை தோன்றிய பிறகு மேலும் சில தடை விடைகள் மனத்திடைத் தோன்றுகின்றன. இதுவரை வாலாயமாகப் பொருள் கூறிவந்த முறையில் இப் பாடல்களுக்குப் பொருள் கூறுவோமானால் மேலே கூறிய தடைகள் மனத்தை விட்டு நீங்குமாறில்லை. இந்தப் பத்துப் பாடல்களுக்கும் இதே வகையில் பொருள் கூறினால் திருவாசகத்தின் தனிச்சிறப்புக்குப் அது பொருந்து மாறில்லை. இப்படியானால் வேறுவழியென்ன? பாடியவரோ மாபெரும் கல்வியாளரும் உலக அனுபவம் நிறைந்தவரும்

பெரும்பதவி வகித்தவரும் ஆகிய ஒருவர். நாம் பொருள் காணும் முறையில் இந்தப் பத்துப் பாடல்களை அவர் பாடியிருப்பார் என்றால், என்னைப் பொறுத்தவரை இல்லை என்ற விடைதான் முன்நிற்கும். அப்படியானால் வேறு யாரேனும் பாடி இதை இடைச்செருகி இருப்பார்களா என்றால், அதுவும் இல்லை என்ற முடிவிற்கு வர பாடல்களின் போக்கு உதவுகிறது. இவற்றையெல்லாம் மனத்துட் கொண்டு மறுமுறை சிந்தித்தால் என்னைப் பொறுத்தவரை ஒருமுடிவுக்குத்தான் வர முடிகிறது. அந்த ஒரு முடிவு இதுவரை இப்பதிகப் பாடல்களுக்குப் பொருள் செய்யும் முறையில் பிழை செய்துவிட்டோம் என்பதுதான்.

இந்த எண்ண ஓட்டத்துடன் அச்சப் பத்தை மறுபடியும் காண்கிறேன். சைவ சமயிகள் என்று தம்மைச் சொல்லிக்கொண்டு, பூசை முதலிய புற வழிபாட்டில் ஆடம்பரமாகப் பொழுதைக் கழிக்கும் போலிச் சைவர்களைப் பற்றியதே இப்பதிகம் என்று நினைக்கத் தோன்றுகிறது. உள்ளத்தில் உருக்கமில்லாமல், அதற்கு மூலமான அன்பில்லாமல் போலியாகப் பூசனை புரிபவர் எக்காலத்திலும் உண்டு. பொறுமைக்கு ஓர் எல்லையாகவும் அமைதிக்கு ஓர் அடித்தளமாகவும் இருந்த நாவரசர் பெருமானே இந்தப் போலிச் சைவர்களைக் கண்டு மனம் நொந்துபோயிருந்தார். ஒரே பாடலில், ஓர் அடியில், உண்மையான பூசை புரிபவர்களை 'நெக்குநெக்கு நினைபவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்' *(திருமுறை: 5:90-9)* என்று பாடிய நாவரசு அடுத்த அடியில் 'பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே' என்றல்லவா பாடியுள்ளார்? ஆக, போலியாகப் பூசனை புரிபவர்களைக் கண்டு இறைவன் சிரிக்கின்றான் என்கிறார் அடிகளார். இவர்களைக் கண்டு இறைவன் சிரிக்கலாம். ஆனால், பாண்டி நாட்டின் தலைமை அமைச்சர் சிரிக்கத் தயாராக

இல்லை. இந்தப் போலிகளைக் கண்டு ஆயிரக்கணக்கான வர்கள் ஏமாந்து இவர்களே உண்மைச் சைவர்கள் என்று நம்பி வணக்கம் செய்கின்றனர். இந்தப் போலிகளால் மக்கள் ஏமாறுகின்றனர். இவர்கள் செய்வதுதான் உண்மையான வழிபாடு என்று கருதுகின்றனர். ஆக, இந்தப் போலிப் பூசைக்காரர்கள் இறைவனையும் ஏமாற்று கிறார்கள்; தம் காலத்து உடன் வாழும் மக்களையும் ஏமாற்றுகின்றனர். அவர்கள் உள்ளே உள்ள இறைவன் அவர்களைக் கண்டு சிரிக்கின்றான், அந்தோ பரிதாபம், அந்த மக்கள் ஏமாறுகின்றனர்!

பல்லவர் காலத்தில் தமிழகத்தில் சைவர்கள் குறைவாக இருந்திருக்க வேண்டும். அது நாவரசர் காலம். எட்டாம் நூற்றாண்டில் பாண்டி நாட்டில் பாண்டியர்கள் ஆட்சியின் கீழ்ச் சைவம் நன்கு வளர்ந்திருந்த காலம். இந்த வளர்ச்சிக்கேற்பப் போலிகளும் நிறைந்துவிட்டனர்போலும். பூசனை செய்யும் இந்தப் போலிகள் என்று கூறினால், பூசனை என்ற மிக உயர்ந்த சொல் இழுக்குப்பட்டுவிடும் என்ற காரணத்தால் இந்தப் பத்துப் பாடல்களிலும் பூசனை செய்பவர்கள் என்று கூறாமல் இப்போலிகளைத் தனியே எடுத்துப் பேசுகிறார்.

இந்தப் போலிகளின் மனத்தில் அன்பு மருந்துக்கும் இல்லை. கல்போன்ற இவர்கள் உள்ளத்தில் உருக்கம் என்ற சொல்லுக்கே இடம் இல்லை. இப்படிப்பட்டவர்களை மனத்துட் கொண்டு இப்பொழுது ஒவ்வொரு பாடலிலும் வரும் இவர்களைப்பற்றிய சொற்களை ஒரு கண்ணோட்டம் விடலாம்.

'மற்றும் ஓர் தெய்வம் தன்னை உண்டு என நினைந்து எம் பெம்மாற்கு அற்றிலாதவர்' (516) என்றும், 'மற்றோர் தேவர் எத்தேவர் என்ன அருவராதவர்' (517) என்றும், 'இனிது அருள் பருகமாட்டா அன்பிலாதவர்' (518) என்றும், 'துளியுலாம் கண்ணராகி, தொழுது, அழுது, உள்ளம்

நெக்கு, இங்கு அளியிலாதவர்' (519) என்றும், 'தொழும்பரோடு அழுந்தி.....சேவடி பரவி, வெண்ணீறு அணிகிலாதவர்' (520) என்றும், 'தாள தாமரைகள் ஏத்தி, தடமலர் புனைந்து, நையும் ஆள் அலாதவர்' (521) என்றும், 'பாதம் ஏத்தி அகம் நெகாதவர்' (522) என்றும் 'கழல்கள் ஏத்திச் சிறந்து இனிது இருக்கமாட்டா அறிவு இலாதவர்' (523) என்றும், 'திருமுண்டம் தீட்ட மாட்டாது அஞ்சுவார்' (524) என்றும், 'நீள் நிலா அணியினானை நினைந்து நைந்து உருகி நெக்கு, வாள் நிலாம் கண்கள் சோர, வாழ்த்தி நின்று, ஏத்தமாட்டா ஆண் அலாதவர்' (525) என்றும் பாடியுள்ளார்.

மேலே காட்டப்பெற்ற பகுதிகளைத் தனியே ஒருமுறை படித்துப் பார்த்தால், முதல் இரண்டு பாடல்களும் ஒரு வகை மனிதரைக் குறிக்கின்றன. சைவப் பரம்பரையில் பிறந்தவர், சிவன் கோவிலுக்குத் தவறாமல் செல்பவர், இடைஇடையே வேளாங்கண்ணிக்கும் நாகூருக்கும் செல்பவரை இன்றும் காணலாம். அவர்கள் பற்றியவை முதலிரு பாடல்கள். அடுத்துள்ள எட்டுப் பாடல்களிலும் ஒரே கருத்துத்தான் பல்வேறு சொற்கள் கொண்டு திரும்பத் திரும்பப் புனையப்பெற்றுள்ளது. உண்மை அன்பில்லாதவர் மனம் நையாதவர் என்ற இரண்டு சொற்களுக்கு விளக்கமாகப் பின்வரும் இரண்டு பாடல்களை அமைத்துள்ளார். 'துளிஉலாம் கண்ணராகித் தொழுது, அழுது உள்ளம் நெக்கு இங்கு அளியிலாதவர்' (519) 'நீள் நிலா அணியினானை நினைந்து, நைந்து உருகி, நெக்கு, வாள் நிலாம் கண்கள் சோர, வாழ்த்தி நின்று ஏத்த மாட்டா ஆணலாதவர்' (525) என்பவையே அவை.

இந்த நிலை இல்லாமலும் உடலளவில் (புறத்தளவில்) வழிபாடு செய்பவர்கள் சமுதாயத்தை ஏமாற்றுபவர்கள்; ஆதலின், அவர்களைக் கண்டு, தாம் அஞ்சுவதாகப் பாடியுள்ளார்.

அடுத்துள்ளது மற்றொரு பிரச்சினை. உண்மை அன்பர்கள், போலி அன்பர்கள் ஆகிய இருவருமே திருநீற்றை அணிகின்றனர். 'வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால்' என்பதற்குச் 'சைவசமயத்தைச் சேராத பிறரை' என்று பொருள் கூறுவது முற்றிலும் பொருந்தாததாகும். வெண்ணீறு அணியாத பிற சமயத்தவர்களின் அறியாமையைக் கண்டு இரக்கம் கொள்ளலாமே தவிர அச்சம் கொள்ளத் தேவையில்லை. அப்படியானால் திருநீறைப் பற்றி அடிகளார் கூறியுள்ள பகுதிகளை மீண்டும் நினைவிற்குக் கொண்டுவருதல் நலம். தொழும்பரோடு அழுந்தி, சேவடி பரவி வெண்ணீறு அணிகிலாதவர் (520) என்று கூறியமையின் வெண்ணீறு அணிகின்றபொழுதும் அதற்கு முன்னும் நடைபெற வேண்டிய செயல்கள் இங்குக் குறிப்பிடப்பெற்றன. அடியார்களுடன் கூடியமையின் மனம் அவர்களிடைச் சென்று இறையுணர்வுடன் கலக்கின்றது. பரவி என்றமையின் வாயினால் அவன் புகழைப் பாடிக்கொண்டிருக்க வேண்டும் என்ற மொழித் தொண்டு பேசப்பெறுகின்றது. மனமும் மொழியும் ஒரு திசையில் செல்லுகையில் உடலளவில் வெண்ணீறு அணிதல் பேசப்பெறுகின்றது. அதாவது மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் திருவடியில் ஈடுபாடு பெற்று, வெண்ணீறு அணிந்ததனால் அந்த வெண்ணீறு பூசுபவரையும் அதனைக் காண்பவரையும் ஒரு படி உயர்த்தும். வெண்ணீற்றை இவ்வாறில்லாமல் அணிபவரைக் கண்டால், அடிகளாருக்கு அச்சம் ஏற்படுவதில் வியப்பொன்றும் இல்லை.

மனம், மொழி, மெய் என்று மூன்றும் ஒருமுகப்பட்டு என்று கூறியதன் விளக்கமாக, 524ம் பாடல் அமைகின்றது. இங்குக் கூறப்பெற்றவர்கள் திருமுண்டம் தீட்ட அஞ்சுகிறார்கள். ஏன்? திருமுண்டம் தீட்டவேண்டுமேயானால் அதன் உடன் நிகழ்ச்சிகளாகச் சில செயல்கள் நடைபெற வேண்டும். அவையாவன: நீள்நிலா அணியினானை

நினைதல்; நைதல்; உருகுதல்; நெகுதல்; கண்கள் சோர்தல்; வாழ்த்தி நின்று ஏத்தல். இங்குக் கூறியவை அனைத்தும் முறைப்படி நடைபெற்றால் திருமுண்டம் தீட்ட அஞ்ச வேண்டியதில்லை. அல்லாதவர் தீட்டினால் அது போலியாதலின், அவர்களைக் கண்டபொழுது அடிகளார் அஞ்சுகிறார்.

இந்த முறையில் சிந்தித்தால், 'அம்ம நாம் அஞ்சுமாறே' என்று அடிகளார் கூறுவது திருநீறு அணியாத பிற சமயத்தாரை அன்று என்பது நன்கு விளங்கும். அன்பும் உருக்கமும் இல்லாத போலிகளைக் கண்டு இறைவன் நகை செய்கின்றான்! அடிகளார் அஞ்சுகின்றார். இந்த முறையில் பொருள் செய்துகொண்டால் அச்சப் பத்து என்று இருப்பதற்கு உரிய காரணத்தை ஒருவாறு அறிந்து கொள்பவர்கள் ஆவோம்.

518ஆம் பாடலில் வரும் 'இனிது அருள் பருகமாட்டா அன்பிலாதவர்' என்ற அமைப்புமுறை செய்யுள்நோக்கி முன் பின்னாக அமைக்கப்பெற்றுள்ளது. திருவருள் கிடைத்தும் அதனைப் பருகமுடியாதவர்களாக உலகிடை இன்றும் பலர் உள்ளனர். அதற்குரிய காரணத்தை அடிகளார் இதோ பேசுகிறார்: அன்புடையவர், அன்பிலாதவர் என்று வேறுபாடு பாராமல் ஆற்று வெள்ளம்போல் திருவருள் பெருகி ஓடுகின்றது. அதன் கரையிலிருந்தும் அத்திரு வருளைப் பருகமாட்டாதவர்களாகச் சிலர் இருக்கின்றனர் என்றால், அது ஏன்? தண்ணீர் பருகவேண்டும் என்ற தாகமும், பருகுவதற்குரிய வாய் முதலிய கருவிகளும் இருந்தாலொழியப் பருக முடியாது. அதேபோன்று அன்பு என்ற ஒன்று மனம், சித்தம் முதலிய கரணங்களில் நிறைந்திருந்தாலொழியத் திருவருளைப் பருக முடியாது. அன்பு இலாமையினால் திருவருளைப் பருக மாட்டாதவர்களாக இவர்கள் உள்ளனர் என்பதையே முன்பின்னாக மாற்றிச் சொல்லியுள்ளனர்.

520ஆம் பாட்டில் சேவடி பரவி வெண்ணீறு அணிகிலாதவர் என்ற தொடர் முன்னர்க் கூறப்பெற்ற கருத்துக்கு அரண்செய்வதாக அமைந்துள்ளது. வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்ட அடிகளார் அஞ்சவில்லை. சேவடி பரவாமல், நெற்றியில்மட்டும் வெண்ணீறு அணியும் போலிகளையே 'சேவடி பரவி வெண்ணீறு அணிகிலாதவர்' என்கிறார். இத்தகைய போலிகள் சமுதாயத்தையே ஏமாற்றுபவர்கள் ஆதலின் அடிகளார் அஞ்சுகிறார்.

'நையும் ஆள் அலாதவர்' (521) என்ற தொடர் சிந்திப்பதற்குரியது. ஆள் அலாதவர் என்பது தம்மைத் தாம் ஆளும் திறமையிலாதவர் என்ற பொருளைத் தரும். இதனோடு சேர்ந்து 'நையும்' என்ற சொல்லையல்லவா அடிகளார் சேர்த்துள்ளார்! உள்ளம் நைதலுக்கும் ஒருவர் தம்மைத் தாம் ஆளும் தன்மைக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்றால், தொடர்பு உண்டு என்றே சொல்லலாம். மனம், அதன் அடிப்பகுதியாகிய உள்ளம் என்ற இரண்டும் கல்போன்று கடினமாக இருப்பினும், நையும் இயல்பையும் உடன் பெற்றுள்ளன. அவற்றை நைவிக்க வேண்டுமேயானால் அவற்றைப் பெற்றுள்ளவர் தேவை ஏற்படும்பொழுது அவற்றை நைவிக்கும் அதிகாரத்தையும் பெற்றிருக்க வேண்டும். அந்த அதிகாரம் பெற்றிருத்தலையே ஆளும் தன்மை என்கிறோம். ஆகவே, நையும் ஆள் அலாதவர் என்று அடிகளார் கூறுகிறார்.

தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பதும் (திருக்குறள்: 422) மெய்ப்பொருள் காண்பதும் அறிவு (திருக்குறள்: 423) என்றார் வள்ளுவர். இவற்றையல்லாமல் கற்றல், கேட்டல், சிந்தித்தல் ஆகியவற்றைப் பயன்படுத்தல் அறிவின் பணி யாகும். அன்றியும் அனுமானம் முதலிய பிரமாணங்களைக் கொண்டு உண்மையை அறிவதும் அறிவின் தொழிலாகும். இத்தனை வழிகளில் எந்த ஒன்றை அறிவு பின்பற்றி யிருந்தாலும் உண்மையைக் கண்டிருக்க முடியும். இறைவன்

கழல்களை ஏத்தினால் இங்கும் (இவ்வுலகிலும்) அங்கும் (வீட்டுலகிலும்) சிறக்கமுடியும் என்பதை அறிவு கண்டிருக்கவேண்டும். மேலே உள்ளவற்றில் எதனைப் பயன்படுத்தியிருந்தாலும் சாதாரண அறிவுடையவர் எவரும் கழல்களை ஏத்தினால் இங்கு இனிதாக இருக்க முடியும் என்பதைக் கண்டிருக்க முடியும். இதனைச் செய்யாதவர்களை 'அறிவிலாதவர்' என்று அடிகளார் கூறுவதில் வியப்பு என்ன இருக்கின்றது?

திருப்பாண்டிப் பதிகம்

அடிகளாருடைய வாழ்க்கையையே திசைமாற்றிய நிகழ்ச்சி திருப்பெருந்துறை நிகழ்ச்சியாகும். அந்நிகழ்ச்சியில், பெருந்துறை நாயகனது கருணை வழிந்து ஓடி, எல்லா உயிர்களையும் ஆட்கொள்ளவில்லை. அக்கருணை வெள்ளம் திருவாதவூரர் என்ற தனிமனிதரிடமே பாய்ந்தது. இப் பாய்ச்சலால் அடிகளார் பெற்ற பேறுகள் பலவாகும். நிலையான இறையனுபவம், துறவு ஆகியவற்றோடு மிக முக்கியமான இரண்டு தனிப்பட்ட ஆற்றல்களையும் பெற்றார்.

ஒன்று, எதிரே உள்ளவரின் புறவடிவையும், உள்ளத்தையும் ஊடுருவிப் பார்த்து அவர் இன்னாரென அறிந்துகொள்ளுதல்.

இரண்டாவது, எதிரே உள்ளவரின் எதிர்காலம், முடிவு, மறுபிறப்பு என்பவைபற்றிக் கண்டபொழுதே அறிந்து கொள்ளுதல்.

இந்த இரண்டு ஆற்றல்களும் திருப்பெருந்துறையில் அடிகளாரிடம் வந்து எய்தின.

இந்த இரண்டு மாபெரும் மாற்றங்களையும் அளவு மீறிய சிக்கனத்துடனேயே அடிகளார் கையாளுகிறார்.

திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பின்னர் ஆயிரக் கணக்கானவர்களை அவர் சந்தித்திருத்தல் கூடும். யாரையும் சென்றுகாணும் நிலை அவருக்கு ஏற்படவில்லை யென்றாலும், அவரை. நாடிப் பலர் வந்திருத்தல்கூடும். அப்படி வந்தவர்களின் எதிர்காலம், அடிகளார் மனத் திரையில் படம்போல ஓடியிருக்கும் என்றாலும், அவரும் அதுபற்றிக் கவலைப்படவில்லை; எதிரே உள்ளவர் களிடமும் அதுபற்றிச் சொல்லியதாகத் தெரியவில்லை.

திருப்பெருந்துறைக் குருநாதர் அருளிய இந்த இரண்டு ஆற்றல்களையும் முழுவதுமாகத் திருப்பாண்டிப் பதிகத்தில் அடிகளார் பயன்படுத்துகிறார்.

குதிரைச் சேவகனாக வந்தவன் யார் என்பதை அடிகளார் ஒருவர்மட்டுமே உணர்ந்ததோடு அறிந்தும் கொண்டார். மிக அணுக்கத்திலிருந்த பாண்டிய மன்னனிடம்கூட அவர் இந்த இரகசியத்தைப் பகிர்ந்து கொள்ளவில்லை. குதிரைச் சேவகனின் ஒப்பற்ற அழகிலும், அவன் கொண்டுவந்த குதிரைகளின் கம்பீரத்திலும் ஈடுபட்ட பாண்டியன் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தான். ஆனால், இந்த அழகிய குதிரைச் சேவகனைச் சாதாரண மனிதனென்று நினைத்தானே தவிர வேறு எந்த எண்ணமும் அவனுடைய மனத்தில் தோன்றவில்லை. இப்பொழுது ஒரு நியாயமான வினாத் தோன்றலாம்.

குருநாதராக வந்தவரும், குதிரைச் சேவகனாக வந்தவனும் ஆலவாய்ச் சொக்கன்தான். குருநாதராக வந்தபொழுது அவரிடமிருந்து புறப்பட்ட தெய்விக அலைகள் அடிகளாரைப் பற்றி ஈர்த்தனவே— குதிரைச் சேவகனாக வந்தபோது அந்த அலைகள் பாண்டியனை ஏன் ஈர்க்கவில்லை? குதிரைச் சேவகனிடம் அந்த அலைகள் இல்லையா? இருந்திருந்தால், பாண்டியனைப் பற்றி ஈர்த்திருக்க வேண்டுமே என்று வினவினால் அதில்

முதல் ஆற்றல் காரணமாக எதிரே உள்ள குதிரைச் சேவகன் ஆலவாய்ச் சொக்கன்தான் என்பதை ஒரே விநாடியில் கண்டுகொண்டார். அதன் பயனாகவே ஐந்து பாடல்களில் குதிரைச் சேவகனின் திருவடிகளைப் பாடுகின்றார்.

இரண்டாவது ஆற்றல் பயன்பட்டதன் விளைவாக, தன் அருகில் இருக்கும் பாண்டி மன்னனின் எதிர்காலம் எத்தகையது என்பதை அறிந்ததோடு, அவனுக்கு மறுபிறப்பில்லை என்றும் பாடினார். அம்மட்டோடு இல்லாமல், எதிரே உள்ள குதிரைச்சேவகனை இனங்காண முடியாத பாண்டி மன்னனைக் குதிரைச் சேவகனாக வந்த சொக்கன் தடுத்து ஆட்கொண்டான் (மறித்திடுமே) என்றும் கூறுகிறார்.

ஒவ்வொரு மனிதனுக்கும் மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற நான்கு கருவிகள் மிக நுண்மையாக அமைந்துள்ளன. இவற்றை அந்தக்கரணங்கள் என்றும் கூறுவர். இவற்றுள் மனம் என்ற நுண்கருவி, ஓரளவு மூளையோடு தொடர்புடையது. கண்ணால் காண்கின்ற காட்சி, காதில் விழும் சொற்கள், மூக்கு உணரும் மணம், நா அறியும் சுவை, உடம்பு உணரும் தொடுஉணர்ச்சி ஆகியவை நரம்புகளின்வழிச் சென்று, மூளையிற் பதிந்து, அடுத்து நுண்மையாக உள்ள மனத்திரையில் படம்போல வந்துபோகின்றன. இவற்றில் எந்த ஒன்றும் நிலைத்து நிற்கும் இயல்புடையது அன்று. எனவே, மனத்திடைத் தோன்றும் காட்சிகளும் நீண்டு நிலைபெறாமல், அடுத்தடுத்து மறைந்துவிடுகின்றன.

இவை மறையாமல் இருக்கவேண்டுமானால் சித்தத்தைச் சென்று தாக்கவேண்டும். அதிலும் இரண்டு பகுதிகள் உள்ளன. மேல் சித்தம், அடிச் சித்தம் என்ற இரண்டு பகுதிகளாக உள்ள சித்தத்தில் மனத்தில் படும் அத்தனை காட்சிகளும் வந்து படும் என்று சொல்வதற்கில்லை.

ஆயிரக் கணக்கான எண்ணங்கள், காட்சிகள் என்பவை மனத்துள் வந்து போனாலும் அவற்றுள் ஒன்றுகூடச் சித்தத்தைச் சென்று தாக்குவது மிகமிக அரிதாகும். இதற்குக் காரணம் ஒன்று உண்டு. எந்த ஒரு காட்சியோ அல்லது எண்ணமோ மேல்சித்தத்தைத் தாக்கினால்கூட அது எளிதாக மறையாது. அடிச்சித்தம் வரை சென்றுவிட்டால், அதனைப் போக்குவது ஏறத்தாழ இயலாத காரியம்.

நீண்டகாலப் பயிற்சி, தியானம் என்பவற்றால் மனத்திலுள்ள ஒன்றை மேல்சித்தம்வரை கொண்டுசெலுத்தலாம். இவ்வளவு பெருமுயற்சி செய்து மேல்சித்தம்வரை கொண்டு செலுத்தப்பெற்ற ஒன்றை அங்கே நிலைபெறச் செய்ய வேண்டுமானால், மேலே கூறிய பயிற்சி, தியானம் என்பவை தொடர்ந்து நடைபெறவேண்டும். அடிச்சித்தத்தின் நடைமுறை வேறுவகைப்படும். நீண்ட தூரத்திலுள்ள ஓர் ஊருக்கு இரயில், கப்பல் முதலியவற்றின் உதவி கொண்டு சில நாட்கள் விடாது பயணம் செய்து அந்த ஊரை அடையலாம். இந்த வழிகளை மேற்கொள்ளாமல் விமானம் மூலம் சென்றால் சில மணி நேரத்தில் அந்த ஊரைச் சென்றடைந்துவிடலாம்.

அட்டாங்க யோகத்தில் சொல்லப்படும் இயமம், நியமம் முதலிய வழிகள் நாம் மேலே கூறியவற்றுள் முதல்வழியைச் சேர்ந்தவை.

இவ்வழிகளை மேற்கொள்ளாமல் இறைவன் திருவருள் ஒன்றையே துணையாகக் கொண்டு புறப்பட்டால் எத்தனையோ பிறப்புக்களைக் கடந்து அடையவேண்டிய திருவடிகளை ஆறே நாட்களில் அடையமுடியும். இது விமானப்பயணம் போன்றது.

இப்பொழுது மறுபடியும் மனம், மேல்சித்தம், அடிச்சித்தம் என்பவற்றிற்கு வருவோம். மனத்திலுள்ள எல்லா

எண்ணங்களையும் அகற்றி, ஒரேயொரு எண்ணத்தை மட்டும் மேற்கொண்டு, அட்டாங்க வழிகளைப் பயன் படுத்தி, மனம் முழுவதும் அந்த ஒரே எண்ணம் நிலை பெறுமாறு பலகாலம் முயன்றால் அந்த ஒரு எண்ணம் ஓரளவு மேல்சித்தத்திற்கு இறங்கும். இறங்கினாலும் அதனை அங்கேயே நிறுத்துவதற்கு ஓரளவு முயற்சி தேவை.

இதற்குப் பதிலாக, இறை அருளை வேண்டிப் பெற்றுக் குறிப்பிட்ட ஓர் எண்ணத்தை உட்புகுத்தினால், அந்த எண்ணம், மனம், மேல்சித்தம் என்பவற்றில் தங்காமல், அவற்றை ஊடுருவிக்கொண்டு நேரடியாகச் அடிச் சித்தத்தில் சென்று தங்கிவிடும். அப்படித் தங்கிய பிறகு, அந்த அடிச்சித்தத்தில் வேறு எந்த ஒன்றும் நுழைவதற்கோ தங்குவதற்கோ வாய்ப்பே இல்லை. அடிச்சித்தத்தில் இந்த ஒன்று நிரம்பிவிட்ட காரணத்தால் மேல்சித்தமும் மனமும் ஒரு வரன்முறைக்கு உட்பட்டுப் பணிபுரிய முடிவதில்லை.

அடிச்சித்தம் நிரம்பியவர்கட்கும் நம்மைப்போலவே கண், காது, மூக்குப் போன்ற பொறிகளுண்டு. ஆனால், நாம் காணாத காட்சியை அவர்கள் கண் காணும்; நாம் கேளாத ஒலியை அவர்கள் காது கேட்கும்.

இந்த முறையில் அடிகளாரின் அடிச்சித்தத்தில் குருநாதர் புகுந்து தங்கிவிட்டார். அதனால் அடிகளாரின் கண்கள் வேறு எந்த வடிவையும் காண்பதில்லை; வேறு எந்த வடிவையும் அவர் அடிச்சித்தம் ஏற்றுக்கொள்வ தில்லை. தாம் பெற்ற இந்த அனுபவ விளக்கத்தையே 'சேவகனார் ஒருவரை அன்றி, உருவு அறியாது என்தன் உள்ளமதே' (526) என்று அடிகளார் பாடுகிறார்.

சோதி வடிவினனாகிய அவன், தன்னை இன்னாரென்று இனங்காட்டும் கழுக்கடையைக் (சூலப்படையை) கைக் கொண்டு வெளிப்படாமல், குதிரைச் சேவகனாகவோ உடைப்பு அடைக்கும் கூலியாளாகவோ, ஏன் குருந்த

மரத்தடிக் குருவாகவோகூட வந்தாலும், அடிகளார் போன்ற ஒரு சிலரைத்தவிர அவனை இனங்காண முடியாது. மாபெரும் சிவபக்தனாகிய வரகுண பாண்டியனுக்கே அடையாளம் காணும் வாய்ப்பு இல்லையென்றால், ஏனையோர்களைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. அப்படியானால் 'சார்ந்தவர் சதிரை மறந்து அறியாமல் கொள்வர்' (527) என்று கூறியது எவ்வாறு பொருந்தும்? இங்குச் சார்ந்தவர் என்பதற்குப் பொருள் என்ன? பாண்டிய மன்னனே வந்தவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை என்றால், ஏனையோர் அவனை அடையாளம் கண்டு எப்படிச் சாரமுடியும்? இங்கு ஓர் சிக்கல் தோன்றுகிறது.

மனித மனத்தில் மூளையின்பாற்பட்ட அறிவுப் பகுதியும், உணர்வின்பாற்பட்ட நம்பிக்கைப் பகுதியும் இணையாகவே பணிபுரிகின்றன. ஒரு பொருளைப்பற்றி அறிவின் துணைகொண்டு அறிய முற்பட்டால் தருக்கமுறையில் ஆராய்ந்து, காரண, காரியத் தொடர்பை ஏற்றுக் கொண்டு, அப்பொருளை இன்னது என அறிந்து கூற முடியும். உணர்வின்பாற்பட்ட நம்பிக்கைப்பகுதி இதனின் முற்றிலும் வேறானது. அங்கே ஆராய்ச்சியோ தருக்கமோ பணிபுரிவதில்லை. பல சமயங்களில் அறிவு கூறுவதைக்கூட உணர்வு தூக்கியெறிந்துவிடுகிறது. அதன் பயனாக ஏற்படும் நம்பிக்கை, காரண- காரிய- அறிவு ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது.

இந்த நம்பிக்கைதான் மனிதனை ஓரளவு அமைதியாக வாழச்செய்கிறது. ஒரு பொருளின்மேல் நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்றால், அந்தப் பொருளை நேரடியாகக் கண்டோ கேட்டோ ஆகவேண்டும் என்ற தேவையில்லை. இதனாலேயே இறையுணர்வு, இறை நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை என்று கூறுகிறார்களே தவிர இறை அறிவென்றோ கடவுள் அறிவென்றோ கூறுவதில்லை.

இவற்றை மனத்துட் கொண்டு பார்த்தால் சார்ந்தவர் என்று அடிகளார் கூறியதன் உண்மைப்பொருளை விளங்கிக்கொள்ள முடியும். இறைநேசர்கள், இறை அன்பர்கள் ஆகியோர் அறிவின் துணையை நாடுவதில்லை. அவர்கள் அடிச்சித்ததில் நிலைபெற்றுத் தங்கியுள்ள இறை நம்பிக்கை ஒன்றே அவர்கட்குப் போதுமானது. அந்த நம்பிக்கை வலுப்பட வலுப்பட, அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் 'சதிர் இழந்து அறிமால்' கொள்கின்றனர். அவர்களைப் பிடித்திருப்பது கடவுட்பித்தேயாகும். இதனை அறியாத உலகத்தார் அவர்களைச் 'சதிர் இழந்தவர்கள்' என்றும், 'அறி மால் கொண்டவர்கள்' என்றும் பேசுகிறார்கள். அடிகளாரைப் 'பித்தன்' என்று பேசிய உலகமும், 'திண்ணன் கோட்பட்டான்' என்று பேசிய நாணனும் காடனும் மேலே கூறியவற்றிற்குச் சான்றாவர்.

இந்த வலுவான நம்பிக்கையைப் பெறாதவர்கள் வேரில்லாத மரம்போல் ஆகின்றனர். அடிச்சித்தத்தில் நம்பிக்கை இல்லாத காரணத்தால் மனத்தில் உலக இன்பங்கள் திரள்திரளாக வந்துபோகின்றன. கானல் நீர்போல வந்துபோகின்ற இந்த இன்பங்கள் அல்லது காட்சிகள் அவர்களை ஆட்டிப்படைக்கின்றன. அந்தந்த விநாடியில் கிடைக்கும் இன்பத்தையே பெரிதென மதித்து வாழ்கின்றவர்களே உலகில் மிகப் பெரும்பாலானவர்கள். அவர்களைப் பார்த்தே 'நீர் இன்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சம் கொண்டீர்'(528) என்றும், 'செறியும் பிறவிக்கு நல்லவர்' (529) என்றும் அடிகளார் பேசுகிறார்.

இத்தகையவர்களைப் பார்த்து, பாண்டிப்பிரானை எதிர்கொள்ளாதீர்கள் என்று எச்சரிக்கிறார். ஆனந்தமாகிய குதிரையில் ஏறி, ஞான வாளுடன் வருகின்ற அவன், தன்னை நோக்கி வந்தவர்களின் பிறப்பை அறுத்து விடுகிறான் ஆதலின், பிறப்பு மகிழ்ச்சியானது என்று

கருதுபவர்களை, அவனை எதிர்கொள்ளாதீர்கள் என்று 'செல்லல் மின்' (529) என்ற சொல்மூலம் எச்சரிக்கிறார்.

அடிகளார் அமைச்சராகப் பணிபுரிந்தவர் ஆதலின் போர்முனையிலுள்ள சில நுணுக்கங்களை 529ஆம் பாடலில் தெரிவிக்கின்றார். மாபெரும் வீரன் ஒருவன் பகைவர் நாட்டில் புகுந்துவிட்டால் எதிர்த்துவருபவர்கள் அனைவரையும் தாரதம்மியம் பாராது கொன்று குவிப்பான். சாவுக்குப் பயந்தவர்கள் மேற்கொள்வது ஒரே வழிதான். அதாவது பகைநாட்டு வீரன் தம் எல்லையைக் கடந்து செல்கின்றவரையில் வெளிப்பட்டு அவனை எதிர் கொள்ளாது இருப்பதுதான் அவ்வழி. இந்தக் காட்சியை பல இடங்களில் அடிகளார் கண்டிருக்க வேண்டும். ஆகவே, இதனை மிக அற்புதமாகக் கையாள்கிறார்.

'தென்னன் நல்நாட்டு இறைவன் கிளர்கின்ற காலம் இக்காலம்' என்ற தொடர் 'அந்த மாவீரன் புறப்பட்டு விட்டான், எந்த விநாடியும் உங்களுக்கு எதிரே வரக்கூடும். எனவே, இந்தப் பிறவியில் பெரும்பற்று வைத்து இன்னும் வாழவேண்டும் என்று நினைக்கின்றவர்களாகிய நீங்கள் அவனெதிரே செல்லாதீர்கள். மீறிச் சென்றால்— ஆனந்தம் என்ற குதிரையின்மேல் ஏறிவரும் அந்த வீரன், தன் கையில் உறைகழித்த ஞானம் என்ற வாளைத் தாங்கி வருகிறான். ஆதலால்— உங்கள் பிறப்பை அறுத்துவிடுவான் ஆகவே, இந்தப் பிறவியில் இன்னும் தொடரவேண்டும் என்று நினைக்கின்றவர்கள் அவன் எதிரே செல்லல்மின்' என்கிறார்.

பழங்காலக் கதைகளில் ஒரு சிறப்பான பகுதியைக் காணமுடியும். ஒரு மன்னன் மாபெரும் வெற்றியைப் பெற்றாலோ நீண்டகாலம் மகப்பேறு இல்லாதிருந்து அரசுக்குரிய வாரீசாக ஒரு ஆண் மகவைப் பெற்றாலோ

தன் கருவூலத்தைத் திறந்துவிட்டு, அவரவர் வேண்டுமானதை வாரிக்கொண்டு செல்லுங்கள் என்று முரசு அறைவிப்ப துண்டு. இதுவே அக்கதைகளில் சிறப்பான பகுதியாகும்.

அடிகளார் காலத்திலும் இத்தகைய கதை வழங்கியிருத்தல் வேண்டும். அதிலுள்ள சிறப்பை அறிந்த அடிகளார் அதனையே 'காலமுண்டாகவே' (530) என்ற பாடலில் பயன்படுத்துகிறார்.

'பாண்டிப்பிரான்' என்பதால் அவன் அரசன் என்பதைக் குறிப்பிட்டார். 'தன் அடியவர்க்கு' என்பதால் அந்நாட்டு மக்கள் என்பதை அறிவித்தார். 'மூலபண்டாரம்' என்பதால் பல கிளைக் கருவூலங்களுக்கும் தாயகமாக இருக்கின்ற தலைமைக் கருவூலத்தைக் குறிப்பிட்டார். 'வழங்குகிறான்' என்பதால் தாரதம்மியம் பாராது வந்தவர்கள் தேவை என்னவென்பதை ஆராயாமல் அள்ளித் தருகிறான் என்பதைக் குறிப்பிட்டார்.

அரசன் கருவூலத்திற்கும் பாண்டிப்பிரானின் மூல பண்டாரத்திற்கும் ஒரு வேற்றுமை உண்டு, எவ்வளவு பெரிய அரசனுடைய மிகப் பெரிய கருவூலமாயினும் வழங்கிக்கொண்டேயிருந்தால் சில நாட்களில் அது காலியாகிவிடும்.

ஆனால், பாண்டிப்பிரானின் மூலபண்டாரம் அள்ளக் குறையாதது; என்றுமே காலியாகாதது.

அப்படியானால் எப்பொழுது வேண்டுமானலும், போய் அதனைப் பெற்றுக்கொள்ளலாமே? மானிட மன்னர்களைப் போல் உண்ணும் நேரம், உறங்கும் நேரம், ஓய்வு நேரம், பிற பணியில் ஈடுபட்டிருக்கும் நேரம் இவற்றையெல்லாம் பார்த்து எந்த நேரத்தில் அரசன் வழங்குகின்றான் என்பதைத் தெரிந்துகொண்டல்லவா செல்லவேண்டும்?

அத்தகைய பிரச்சினை ஒன்றும் இங்கு எழவில்லை. மேலே கூறிய நேர ஒதுக்கீடு எதுவும் பாண்டிப்பிரானுக்கு இல்லை.

எனவே நேரம் காலம் பாராது அவனிடம் சென்று பெறலாம் என்பது உண்மையானால் 'வந்து முந்துமினே' என்று அடிகளார் கூறியது வேண்டா கூறலாகும். அருள் நிலையில் நின்று பாடும் அடிகளார் வேண்டாத ஒரு சொல்லைக்கூட கூறமாட்டார். எனவே சற்று நின்று நிதானித்தால் 'வந்து முந்துமினே' என்ற கூறியதற்குரிய உண்மைப்பொருள் உடனே விளங்கிவிடும்.

பாண்டிப்பிரானுக்கு நேரம் காலம் எதுவும் இல்லை. ஆனால், பருவுடம்புடன் வாழும் அடியவர்க்கு வாழும் காலம் அளவிடப்பட்டுள்ளது. எனவே, நாள் அளவிடப் பட்டுள்ளது என்பதை நினையாமல் 'நாளை பார்த்துக் கொள்ளலாம், அடுத்த வாரம் பார்த்துக்கொள்ளலாம், அறுபது வயதுக்குமேல் இதில் ஈடுபடலாம்' என்று நினைப்பவரைப் பார்த்து அடிகளார் தரும் எச்சரிக்கைதான் 'முந்துமினே' என்பதாகும். ஏன் முந்த வேண்டும்? தம்முடைய காலம் என்று முடியும் என்று தெரியா தாகையால் 'காலம் உண்டாகவே காதல் செய்து முந்துமினே' என்று முடிக்கின்றார் அடிகளார்.

531ஆம் பாடலின் இரண்டாம் அடியில் பாண்டி மன்னனும், நான்காம் அடியில் ஆலவாய்ச் சொக்கனும் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். ஆனால் இப்பதிகம் முழுவதிலும் சொக்கனைப் பாண்டியனார் என்றும், பாண்டிப்பிரான் என்றும் தென்னவன் என்றுமே குறித்துள்ளார். ஆக, 'பாண்டியன் என்ற சொல்லைப் பாண்டிநாடே பழம்பதியாகக் கொண்ட சொக்கனுக்கு உரிமையாக்கி யிருப்பதால், இடைக்கால மன்னனாகிய வரகுண பாண்டியனைக் குறிக்கப் பாண்டியன் என்ற

சொல்லைப் பயன்படுத்த முடியவில்லை. எனவே, இந்த இக்கட்டான சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு அடிகளார் 'மீனவன்' என்ற சொல்லைப் பயன்படுத்தி அரசனைக் குறிப்பிடுகின்றார்.

தமிழகத்தில் தோன்றிய சைவம், வைணவம் இரண்டும் மிகப் பழங்காலந்தொட்டே வினைக் கொள்கையை ஓரளவு ஏற்றுக்கொண்டிருந்தன. ஆனால், சமணம், பௌத்தம் என்ற இரண்டும் கடவுட்கொள்கையை ஏற்காததால் வினைக் கொள்கைக்கு முதலிடம் தந்தன. 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' (சிலம்பு: பதிகம்57) என்று சிலப்பதிகாரப் பதிகம் பேசுகிறது. சிலப்பதிகாரப் பதிகம் இளங்கோவடிகள் பாடியதன்று என்றாலும், நூலின் உள்ளேயும் வினைக்கொள்கை வலுவாக இடம்பெறுகிறது.

ஆனால் சைவ, வைணவர்களைப் பொறுத்தமட்டில் வினைக்கொள்கையின் தாக்கம் எவ்வளவு ஆழமாக இருப்பினும், கடவுட் தத்துவத்தை வினைக்கொள்கைக்கு மேலே வைத்து, இறைவனை விஞ்சியது எதுவுமில்லை என்ற முடிவிற்கு வந்தனர்.

இந்த அடிப்படையில்தான், குன்றே அனைய குற்றங்களைக் குணமெனக் கொண்டு அவன் மன்னிப்பான் என்று அடிகளார்போன்றவர்கள் பேசினார்கள். வைணவ சமயத்தில் விஷ்ணு வழிபாட்டில் ஆழங்கால்பட்டுநின்ற ஆண்டாள் அம்மையாரும் தம் திருப்பாவையில் இக் கருத்தை வலியுறுத்திப் பாடுகின்றார். திருப்பாவையின் ஐந்தாவது பாடலில்,

தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்

என்று பாடுவதை அறிதல் நலம். இந்த நுண்ணிய கருத்தை அடிகளார் 'மாய வனப்பரி மேற்கொண்டு' என்ற 532ஆம் பாடலில் நாடகப் பாணியில் வலியுறுத்துகின்றார்.

பரிமேல் அமர்ந்துள்ளான் ஒருவன். அந்தக் குதிரையும் பார்ப்பவர்கட்குக் கம்பீரமான காட்சியைத் தருகிறதே தவிர உண்மையில் அது குதிரையில்லை. வனத்திலுள்ள நரி இப்பொழுது பரியாகவுள்ளது. அதுமட்டுமா? நரியைப் பரியாக்கியவன் இவ்வாறு செய்துவிட்டு எங்கோ சென்று மறைந்துவிடவில்லை, அந்தப் பரியின்மேலேயே அமர்ந்து உள்ளான்.

பாண்டியனிடத்துக் குதிரைகளை விற்றதற்கு அடையாளமாக, ஒரு குதிரையின் கடிவாளத்தைக் கயிறுமாறிப் பாண்டியனிடம் தந்தான். அப்பொழுது பாண்டியன் என்ன நினைத்தான்? தமிழகத்தில் வேறு எந்த மன்னனுக்கும் இப்படிப்பட்ட கம்பீரமான குதிரைகள் கிடைப்பதற்கு வாய்ப்பேயில்லை என்று நினைத்துப் பெருமையடைந்தான். அவன் நினைத்தது முற்றிலும் சரியே.

நரிகளெல்லாம் பரிகளாகி இவனிடம் வந்து சேர்ந்தன. வேறு எந்தத் தமிழ் மன்னனிடம் இப்படிப்பட்ட குதிரைகள் வந்தன! ஆகவே, அவன் பெருமிதம் அடைந்தது சரி. உண்மை தெரிந்திருந்தால் இதில் பெருமிதம் கொண்டிருக்க மாட்டான்.

ஆனால், குதிரைச் சேவகனிடமிருந்து மாற்றப்பட்ட கடிவாளத்தைப் பாண்டியன் பெற்றுக்கொண்டபோது மற்றோர் அற்புதமும் நிகழ்ந்தது. அவன் நினைத்தது பொய்யாயிற்று; நினையாதது நடந்துவிட்டது. அவன் நினைத்தது என்ன? அற்புதமான குதிரைகளைப் பெற்றோம் என்பதே யாகும். ஆனால், அன்றிரவே அவையனைத்தும் நரிகளாக ஆனமையால் அவன் நினைத்தது நடக்கவில்லை. என்றால்,

நினையாதது ஒன்று நடந்தது; அது அவனுக்கு அப்பொழுது தெரியாது. என்ன அதிசயம்! அந்த விநாடிவரை மீனவன் ஆகிய அந்த மன்னன் சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்ற மூன்று வினைகளால் இறுக்கமாகக் கட்டப் பட்டிருந்தான். ஆனால், குதிரைச் சேவகனிடமிருந்து கடிவாளத்தை எந்த விநாடியில் மீனவன், தன் கையில் பெற்றானோ அந்த விநாடியே இந்த மூன்று கட்டுக்களிலிருந்தும் அவன் விடுபட்டான். இந்த விடுதலை அவன் நினையாதது; எதிர்பாராதது.

ஒரு குதிரையின் கடிவாளம் இதனைச் செய்ய முடியுமா? கடிவாளம் இதனைச் செய்யமுடியாதுதான். ஆனால், அதனைத் தொட்டுக் கொடுத்தவன் 'விச்சது இன்றியே விளைவு செய்பவன்' (திருவாச: 100) ஆயிற்றே. ஆதலால், கடிவாளத்தின் மூலமே மன்னனின் மூவினை களையும் பறித்துவிட்டான். இந்த அற்புதத்தையே அடிகளார் 'மாய வனப்பரி மேற்கொண்டு மற்று அவர் கைக்கொளலும் போய் அறும் இப்பிறப்பு என்னும் பகைகள்' (532) என்று பேசுகின்றார்.

உலகியலில் குழந்தைகளைக் கூர்ந்து கவனித்தால் ஒரு புதுமையைக் காணமுடியும். குழந்தையின் தந்தை விலையுயர்ந்த விளையாட்டுப் பொம்மைகளை வாங்கித் தந்திருப்பார். ஆனால், அவற்றைச் சிறிதும் சட்டை செய்யாமல் வீட்டிலுள்ள துடைப்பம், பழைய செருப்பு என்பவற்றை எடுத்துக்கொண்டு குழந்தை விளையாடத் தொடங்கிவிடும். மனிதர்களில் பலர் இந்த இயல்பிலிருந்து நீங்குவதே இல்லை.

இறைவனிடம் இந்த இரண்டும் உள்ளன. அவையாவன 'கழிவுஇல் கருணையைக் காட்டி, கடிய வினை அகற்றி, பழ மலம் பற்று அறுத்து, அழிவு இன்றி

நின்றது ஓர் ஆனந்த வெள்ளத்திடை அழுத்தும்' (533) செயலைச் செய்வது விலையுயர்ந்த விளையாட்டுப் பொருள்களைத் தருவதுபோலாகும். இதன் எதிராகப் பாண்டிநாட்டு அரசைத் தந்து, அது போதாதென்று நினைப்பவர்க்கு 'முழுது உலகையும்' (533) எவ்வித எதிர்பார்ப்புமின்றிக் கொடையாகத் தருவான். இது குழந்தை விளையாட தேர்ந்தெடுக்கும் இரண்டாவதுவகைப் பொருட்கள் போன்றனவாகும்.

அடிகளாருக்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்டு வாழ்ந்த கடுவன் இளவெயினனார் என்ற பக்தக் கவிஞர் திருப்பரங்குன்றத்து முருகனை வேண்டிப் பாடிய இரண்டு அடிகள் நினைவிற்கு வருகின்றன. இந்த இருவகைப் பொருள்களைத் தனித்தனியே விரும்புவோர் அந்தக் கவிஞர் காலத்திலேயே இருந்தனர்போலும், திருப்பரங்குன்றில் ஏறிச்சென்ற பக்தர்களோடு சென்ற கவிஞர் அங்கு வந்த பக்தர்கள் கேட்டவற்றை உணர்ந்து திடுக்குற்றார். அவரையல்லாத ஏனையோர் பலரும் மாடு, மனை, மக்கள், சுற்றம், செல்வம், பதவி ஆகியவற்றைப் பட்டியலிட்டுக் கேட்டார்களே தவிர, முருகன் திருவடியினிடத்து அன்புவேண்டும் என்று யாரும் கேட்கவில்லை. இதனைப் பார்த்து மனம் நொந்துபோன கவிஞர், அவர்கள் போனபிறகு அதே முருகனைப் பார்த்து,

யாம் நின்பால் இரப்பவை பொன்னும் பொருளும்
போகமும் அல்ல
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலிதாரோயே
(பரிபாடல்: 5:78-81)

என்று வேண்டிக்கொள்கிறான்.

எனவே, சங்ககாலத்திலிருந்து அடிகளார் காலம்வரை-இல்லை இன்றுவரை— இல்லையில்லை நாளையும்கூட—

இதே நிலைதான் தொடர்கிறது, தொடரப்போகிறது. ஆகவே, மனித மனத்தின் இயல்பை அறிந்த அடிகளார், வினை கடிந்து ஆனந்தத்து அழுத்தும் அவன் செயலை முதலிரண்டரை அடிகளில் கூறினார். இதனைப்பற்றிக் கவலைப்படுபவர்கள் அதிகம் இல்லையென்பதை உணர்ந்தோ என்னவோ பாடலை முடிப்பதற்குமுன், ஒன்றரை அடிகளில் 'பாண்டிய அரசு, உலகத்தையே ஆளும் அரசு என்ற இரண்டையும் கொடையாகத் தருவான்' என்கிறார்.

நுண்மையான நகைச்சுவையோடு பாடுவதில் பழைய அமைச்சர் நன்கு பயின்றிருந்தார்போலும்! எனவே பாண்டிப்பிரான் தரும் இருவகைக் கொடைகளையும் அடுத்தடுத்துக் கூறிவிட்டு, பொதுவாகச் 'சென்று முந்து மினே' என்று முடித்துவிட்டார். அதாவது, திருவடிகளை விரும்புபவர்களும், முழுதுலகையும் ஆளவேண்டும் என்று விரும்புபவர்களும் சென்று முந்துங்கள் என்று முடிப்பதன் நோக்கம், எந்த வகையை மேற்கொண்டாலும் சரி அவனிடம் முந்துங்கள் என்று முத்தாய்ப்பாக வைக்கின்றார்.

'விரவிய தீவினை' என்று தொடங்கும் 534ஆம் பாடல் 'பூங்கொடியார் மர இயல் மேற்கொண்டு தம்மையும் தாம் அறியார்' என்று செல்கிறது.

பூங்கொடியார் என்று வருவதால் வாலாயமாகப் பொருள்கொள்ளும் முறையில் மகளிர் என்று பொருள் கொண்டு, இப்பாடலை அகத்துறையாக்கிப் பார்ப்பதும் ஒரு முறை.

பூங்கொடியார் மரமாகிநின்று தம்மைத் தாம் மறந்தனர் என்பதால் மூன்று இயல்புகள் பேசப்பெறுகின்றன. அவையாவன: ஒன்று, கொடி போன்ற சலனபுத்தியுடைய நிலை; இரண்டு, மரம்போன்று மனத்தில் எவ்வித சலனமும்

இன்றி உறுதியாக இருக்கும் நிலை; மூன்று, தம்மைத் தாம் மறந்த நிலை. இந்த மூன்று இயல்புகளும் ஆண், பெண் இருபாலார்க்கும் பொதுவானவையாகும். பூங்கொடியார் என்றதால் அசைந்து ஆடும் இயல்பு பேசப்பெறுகின்றது. உடனே இது பெண்களின் உடல் அசைவு என்று பொருள் பண்ண வேண்டிய தேவையில்லை. பூவைத் தாங்கிய கொடி, இங்குமங்குமாக அசைதலையும் மிக மெல்லிய காற்றுக்குக்கூட வேகமாக அசைதலையும் இயல்பாக உடையது. ஆனால், மரம் இவ்வாறு இல்லை. பொதுவாகக் காற்று மரத்தின் மேல்பகுதியிலுள்ள சிறு கிளைகளை அசைக்குமே தவிர அடிமரத்தை ஒன்றும் செய்வதில்லை.

இந்த இரண்டு இயல்புகளையும் எல்லா மக்களுக்கும் பொதுவாக்கலாம். சாதாரண மக்கள் ஓயாது தாவிக் கொண்டிருக்கின்ற மனத்தை உடையவர்கள். சில வழிதுறைகளை மேற்கொண்டு ஆன்மீக உலகில் முன்னேறு கின்றவர்கள், இந்தச் சலனத்தில் ஈடுபடாமல், அடிமரம் போல் அசையாது நிற்கும் இயல்பைப் பெற்றுள்ளனர். இந்த இருவகை மக்களும் மதுரையம்பதியில் நிரம்பி இங்குமங்கும் நடந்துகொண்டிருக்கின்றனர்.

அரசன், குதிரையில் பவனி வருவதும், வசதி யுடையவர்களும் வீரர்களும் குதிரைமேல் அமர்ந்து சவாரி செய்வதும் மதுரை மக்களுக்கு அன்றாடக் காட்சிகளாகும். கொடிபோன்ற மனமுடையார், அதாவது, சலன புத்தி யுடையார் குதிரைமேல் இவர்ந்துசெல்லும் ஒவ்வொரு வரையும் பார்க்கும்போது 'அட்டா....! நாம் அந்தக் குதிரையின்மேல் இவர்ந்து செல்ல முடியவில்லையே' என்று மாறிமாறி நினைப்பர். ஆனால், குதிரைச் சேவகனைப் பார்த்தவுடன் அந்தக் குதிரையின்மேல் ஏறிச்செல்லவேண்டும் என்ற ஆசை யாருக்கும் வரவில்லை. அதற்குப் பதிலாக அவனைப் பார்த்துக்கொண்டிருக்கும்

சில விநாடிகளில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. சலன புத்தியுடையார் பலரும் மரமாக மாறி நின்றனர். அதாவது, அவர்களுடன் உடன்பிறந்த சலன புத்தி திடீரென ஒருநிலைப்பட்டு, குதிரையை மறந்து அந்தக் குதிரைச் சேவகனைப் பார்க்கும் ஒரே நிலையில் நின்று விட்டது. இது சலன புத்தியுடையாரின் செயலாகும்.

இதனையன்றி இயல்பாகவே மரம்போன்ற உறுதி கொண்ட நெஞ்சோடு உள்ள ஒரு சிலரும் அந்தக் குதிரைச் சேவகனைப் பார்த்தனர். என்ன அதிசயம்! அவனைப் பார்க்கின்றவரையில் உறுதிபடைத்த இவர்கள் மனத்தில் 'நான்' வலுவாக நிலைபெற்றிருந்தது. ஆனால், பார்த்த வுடன் மரம்போன்ற உறுதிபடைத்த இவர்களுடைய 'நான்' ஒரே விநாடியில் எங்கோ சென்று மறைந்துவிட்டது. 'நான்' மறைந்ததுமட்டுமன்று, தாம் யார் என்பதையும் அவர்களே மறந்துவிட்டனர்.

'கூற்றை வென்று' என்று தொடங்கும் 535ஆம் பாடலுக்கு, முன்னர் கூறிய உரையே அல்லாமல் பின்வரும் முறையிலும் சிந்தனை செய்யலாம் என்று தோன்றுகிறது. இவ்வாறு செய்வதற்குப் பாடலில் காணும் சொற்களைப் பின்வருமாறு கொண்டுகூட்டுச் செய்தல் நலம்.

'பெருந்தேவியும் தானும் இருந்து, ஓர் மீனவன்பால் ஏற்றுவந்து, ஆர் உயிர் உண்ட திறல் ஒற்றைச்சேவகனே! (மீனவன்) கூற்றை வென்று, ஆங்கு ஐவர் கோக்களையும் வென்று அழகால் வீற்றிருந்தான். தேற்றம் இலாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே' (535) என்றவாறு.

உமையொருபாகனாக இருந்தும், அதே நேரத்தில் மீனவனாகிய பாண்டிய மன்னனின் ஆர் உயிர் (சீவபோதம்) உண்ட திறல் உடையவன் யார்? அவன் குதிரைமேல் வந்த ஒற்றைச் சேவகனே ஆவான். இந்த ஒற்றைச் சேவகன் பாண்டி

மன்னனது சீவபோதத்தை உண்ட பிறகு என்ன நிகழ்ந்தது தெரியுமா? அந்தப் பாண்டி மன்னன், கூற்றை வென்று, தன்னை ஆட்டிப்படைத்த ஐம்பொறிகள் என்னும் அரசர்களையும் வென்று இனிதாக அமர்ந்திருந்தான்.

இதனால் அறியப்படவேண்டியது ஒன்று உண்டு. குதிரைச் சேவகனிடம் கடிவாளத்தை மாறிப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் இருந்த பாண்டிய மன்னன் வேறு, பெற்றுக்கொண்ட பிறகு அங்கிருந்த பாண்டிய மன்னன் வேறு. அதாவது இந்நிகழ்ச்சிக்கு முன்னர் இருந்த பாண்டியன் கூற்றுவன் அதிகாரத்திற்கு உட்பட்டவன். அவன் பெரிய பாண்டிய மன்னனாயினும், அவனை ஆட்டிப்படைத்த ஐம்பொறிகள், அவனினும் மேம்பட்ட ஐந்து அரசர்களாக இருந்தமையின் அவன் இவற்றுக்குக் கட்டுப்பட்டவனாகவே இருந்தான். கயிறுமாறிய பிறகு இந்த இரண்டு நிலைகளும் மாறி, கூற்றையும், ஐம்புலக் கோக்களையும் வென்றவனாக மாறிவிட்டான்.

'மனத்தில் தெளிவும் நெஞ்சில் உறுதியும் இல்லாமல் இரண்டாட்டம் ஆடிக்கொண்டிருக்கின்ற அப்பாவிகளே! குதிரைச் சேவகன் கைபட்ட கடிவாளத்தைக் கையில் வாங்கியதனாலேயே ஒருவன் கூற்றையும், ஐம்புலக் கோக்களையும் வென்றான் என்றால், இதனைக் கேட்ட நீங்கள் குதிரைச் சேவகனின் திருவடியை சிக்கெனப் பிடித்துக் கொள்வதே உய்கதி அடையும் வழி என்பதை அறிவீர்களாக' என்றபடி.

பிடித்த பத்து

இறைப் பிரேமை என்ற இன்ப அனுபவம் ஏற்றத் தாழ்வின்றி ஒருபடித்தாய் இருக்கின்ற ஒன்றன்று. 'நான்', 'நான் அனுபவிக்கின்ற இன்பம்' என்பதில் தொடங்கி,

அந்த இன்பம் ஆனந்தமாக மாறும்போது 'நான்' கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்குகிறது. 'நான்' முற்றிலும் மறைந்துவிட்டபோது இன்பம்மட்டும் தனித்து நிற்கின்றது. ஆனாலும், அந்த இன்பத்தின் அடியில் ஒருசிறு கடுகளவாக 'நான்' இருந்துகொண்டுதான் இருக்கும். முற்றிலும் இன்பவடிவு என்று கூறினாலும் அந்த இன்பத்தை அனுபவிக்கும் 'நான்' அந்த இன்பத்துள் அமிழ்ந்து இருக்கத்தான் செய்யும்.

இந்த இன்ப அனுபவம் வளர்ச்சியடைந்து உச்ச கட்டத்தை அடைகின்ற நேரம் ஒன்றுண்டு. அப்பொழுது இந்த 'நான்' இருக்கிறதோ, இல்லையோ என்று ஐயுறும்படி சிறுத்துவிடுகிறது.

இறைப்பிரேமை (Divine Ecstasy) என்று சொல்லப்படும் இந்த இன்ப அனுபவம், உச்ச கட்டத்தை (climax) அடையும்போது உள்ளே அமிழ்ந்திருக்கும் 'நான்' முற்றிலும் செயலிழந்துவிடுகிறது.

இறையனுபவம் அலைபோல உயர்ந்தும் தாழ்ந்தும் வருகின்ற ஒன்றாகும். அது உயர்ந்துள்ள நிலையில் நான் பொருளற்ற தாகிவிடுகிறது. அந்த நிலையில் இவர்கள் செய்யும் செயல், பித்தர் செயல்போலக் காணப்படும். மறுபடி, அந்த அனுபவ அலை தாழ்ந்து வரும்போது 'நான்' ஓரளவு தலைதூக்கும். இந்த நிலையில் இருக்கின்றபொழுது தம்முடைய முழு அனுபவத்தைப் பின்னோக்கிப் பார்க்கும் நிலை தோன்றுகிறது.

அப்படிப் பின்னோக்கிப் பார்க்கும்பொழுது, தாங்கள் ஏதோ சில செயல்களைச் செய்ததாக இவர்கள் நினைக் கின்றனர். இப்பொழுது 'நான்' மேலும் சிறிது வளர்ச்சி யடைகிறது. இன்ப அனுபவத்தின் முழு வளர்ச்சியை அடையத் தாங்கள் ஏதோ ஒன்றைச் செய்ததாக அவர்கள்

நினைக்கின்றனர். உண்மையில் அச்செயல்களைச் செய்தார்களா இல்லையா என்பதைப் புறத்தே உள்ள யாரும் அறிந்து கூறமுடியாது.

இறையனுபவத்தின் உச்ச கட்டத்தில் இருக்கும்போது, அனுபவிப்பவன், அனுபவம் என்ற இரண்டும் ஒருங் கிணைந்து அனுபவம்மட்டுமே பெரிதாக நிற்கின்றது. அனுபவிப்பவன் அதனுள் மூழ்கிவிடுகிறான். அந்நிலையில் பாடல் எதுவும் வெளிவருவதில்லை.

அனுபவ எல்லை குறைந்த நிலையில் திரும்பிப் பார்ப்பதும் தாம் ஏதோ செய்ததாகக் கருதுவதும் இவர்களுக்கு உண்டு. அந்த நிலையில் வெளிவந்த பாடல்களே பிடித்த பத்தின் பத்து பாடல்களும்.

நாம, ரூபம் கடந்ததாகிய ஒருபொருள், பற்றலாவதோர், நிலையிலாத ஒரு பொருள், நறு மலரில் தோன்றும் நாற்றம்போல் எங்கும் நிறைந்ததாகவுள்ள ஒரு பொருள், தம்முள் நுழைந்ததை இவர்கள் உணர்கின்றனர். அப்பொருள் ஒளிவடிவாக உள்ளே நுழைந்ததையும் இவர்கள் உணர்கின்றனர். அப்படியிருக்கச் சிக்கெனப் பிடித்தேன் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? என்றால், பிடித்தேன் என்று உணர்வது இவர்கள் உள்ளத்தில் தோன்றிய ஓர் உணர்வாகும். பிடிபடுவதற்கு எவ்வித வடிவோ உருவோ ஒன்றும் இல்லாதது அப்பொருள். அதனை நன்கு உணர்ந்த இப்பெரியவர்கள் சிக்கெனப் பிடித்தேன் என்று கூறினால், உள்ளே நுழைந்த அப்பொருளை வெளியே போகவிடாமல் தடுத்துநிறுத்தி அதிலேயே தாங்களும் இணைந்துவிட்டதாக உணர் கின்றார்கள். அப்பொருளுடன் தாம் முற்றிலுமாக இணைந்துவிட்டோம் என்று கூறாமல், அப்பொருளை

இறுகப் பற்றிக்கொண்டோம் என்று கூறுவது உலகியல் முறையாகும்.

அடிகளார் பாடல்களில் சிக்கெனப் பிடித்தேன் என்று வரும் தொடர்க்குமுன் வரும் சொற்களை முன்பின்னாக வரிசைப்படுத்திக் கண்டால், பிடித்த பத்தின் நுணுக்கத்தை ஓரளவு அறிந்துகொள்ளலாம்.

சிக்கெனப் பிடித்தேன் என வரும் தொடர் எல்லாப் பாடல்களுக்கும் பொதுவாதலால், அதற்கு முன்னருள்ள தொடர்களைக் கீழ்க்காணும் முறையில் வரிசைப்படுத்திக் கொள்வது நலம்.

அடிகளார் காலத்திற்கு முன்னர், ஏன், பின்னரும்கூட, இந்த உடலைக் கழித்த பிறகே அவன் திருவடிகளைச் சென்று அடையமுடியும் என்று பலரும் கூறியுள்ளனர். அடிகளாரும் பல பாடல்களின் இவ்வுடம்பை நீத்து அவனுடைய திருவடிகளைப் பற்றவேண்டும் என்று பாடியுள்ளார். இந்தப் பொதுக்கருத்துக்கு மாறாக, ஒரு புதிய சிந்தனையை, புதிய அனுபவத்தைப் பிடித்த பத்துப் பாடல்கள் வெளியிடுவதைக் காணலாம். அதற்கு உதவியாக, பிடித்தேன் என்பதற்குமுன் வரும் தொடர்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்திக் கொள்ளல் நலம்.

இம்மையே (538), இருள் இடத்து (539), எய்ப்பு இடத்து (540), இறவிலே (541) எனவரும் தொடர்களை வைத்துக் கொண்டு சிந்திக்கத் தொடங்கினால், இரண்டு கருத்துக்கள் எஞ்சுகின்றன.

முதலாவது இறைப் பிரேமையின் உச்சகட்டத்தை அடைந்துவிட்ட அடிகளார் அதிலிருந்து இறங்கிவந்து, அந்த உச்சகட்டத்தைத் தாம் பற்றியிருந்ததை நினைவு

கூர்கின்றார். அதுவே சிக்கெனப் பிடித்தேன் என்ற தொடராக வெளிவருகிறது.

சிக்கென அதனைப் பற்றிக்கொண்டு அமைதியாக இருந்து, சிந்திக்கத் தொடங்கும்போது, பிறர் கூறியனவும், தாம் இதுவரை நம்பியனவும் ஆகிய சில கருத்துக்கள் அவர் மனத்திரையில் வந்துபோகின்றன.

மறுமையில்தான் அவன் திருவடிகளைப் பற்றமுடியும் என்று நினைத்தது தவறு என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்த அடிகளார், இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் என்கிறார்.

இருள் என்பது, அறியாமை, அஞ்ஞானம் என்ற பொருளைத் தரும். இந்த அறியாமையும் அஞ்ஞானமும் நீங்கிய நிலையில்தான் இறைக் காட்சி கிடைக்கும் என்ற பொதுவான கருத்தை மறுப்பவர்போல 'இருளிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' என்கிறார். அது எவ்வாறு பொருந்துமென்றால் உறுதிப்பாடும் நம்பிக்கையும் அசைக்க முடியாதபடி இருக்கும்பொழுது, அஞ்ஞானமும் அறியாமையும் வேறு முயற்சி இல்லாமலும் தாமே தளர்ந்து வீழ்ந்துவிடும். இக்கருத்தையே 'இருள் இடத்து(ம்) உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' என்கிறார். இருள் இடத்தும் என்பதிலுள்ள உம்மை தொக்கது.

எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்று கருதி நம்பிக்கை இழந்த நிலையில், இந்த இன்ப அனுபவத்தைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டேன் என்ற கருத்தைத்தான் 'எய்ப்பு இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' என்றார்.

இறந்தபின்னரே ஆன்மா திருவடியைப் பற்றமுடியும் என்ற பொதுநம்பிக்கையைத் தகர்த்து, இறவிலே (இறப்பதற்கு முன்னரே) சிக்கெனப் பிடித்தேன் என்கிறார்.

மனித மனமும், ஏன், அதனோடு சேர்ந்த உயிரும்கூட, இன்பத்தை நாடிச்செல்வது இயல்பு. இவ்வளவு அரும்பாடு பட்டு ஏன் சிக்கெனப் பிடித்தார், எதைச் சிக்கெனப் பிடித்தார் என்ற வினாக்களுக்கு விடைகூறுவார் போல இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் என்கிறார்.

ஆனால், இந்த இன்பவடிவினன் எத்தன் என்பதை உணர்கின்றார். காரணம் தமக்குக் கிடைத்த உச்ச கட்ட அனுபவம் வந்துவந்து போவதை அனுபவ பூர்வமாக அறிந்துகொண்டார் ஆதலின், உச்ச கட்ட அனுபவமாக வுள்ள அவனை எத்தன் என்றார்.

மேலே கூறிய முறையில் இறைப் பிரேமையின் உச்சகட்டமாக இருக்கின்ற இறைவனை உலகத்தார் கூற்றுக்களுக்கு மாறாகத் தாம் பிடித்துக்கொண்ட்தைக் கூறுகிறார். பின்னே வருகின்ற சமுதாயத்திற்கு இதைமட்டும் கூறினால் பயனில்லை என்று நினைத்த அடிகளார், அதற்குரிய முயற்சியில் உயிர்கள் ஈடுபடும்போது என்ன செய்யவேண்டும் என்பதை இரண்டு தொடர்களில் பேசுகின்றார். தாம் என்ன முயற்சியை மேற்கொண்டாரோ அந்த முயற்சியில் எப்படி ஈடுபட்டாரோ அதனை 'யான் உனைத் தொடர்ந்து' *(544)* என்ற தொடராலும் 'இடை விடாது' *(537)* என்ற தொடராலும் இரண்டு பாடல்களில் தனித்தனியாகக் கூறியுள்ளார். இவை இரண்டையும் ஒன்றாக இணைத்து யான் உனை இடைவிடாது தொடர்ந்து என்று ஆக்கி, அதனை மத்திம தீபமாகக் கொண்டு, ஒவ்வொரு பாடலோடும் அதனை இணைத்துப் பொருள்கொள்ள வேண்டும்.

உதாரணமாக, இம்மையிலே யான் உனை இடைவிடாது தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் என்றும், எய்ப்பிடத்து யான் உனை இடைவிடாது தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் என்றும் கொள்ளவேண்டும்.

நாவரசர் பெருமானின் 'ஈசன் தன் பல் கணத்து எண்ணப்பட்டு இறுமாந்து இருப்பன்கொலோ' (திருமுறை: 4-9-11) என்ற செய்தி அனுபவத்தின் ஒருநிலையாகும். அடிகளாரின் 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவது இனியே' என்பது அந்த அனுபவத்தின் உச்சகட்ட நிலையாகும்.

சிக்கெனப் பிடிக்கும் இந்தச் செயல் தமக்குமட்டும் உரியதன்று; மானுட சாதி முழுவதற்கும் பொதுவானது என்பதை அறிவுறுத்தவேபோலும் எம்குடி முழுது ஆண்டு (536) என்றும், எம்குடி முழுது ஆண்ட (541) என்றும், எம்பொருட்டு உன்னை (536) என்றும் கூறியருளிமை இங்கு நினைவிற்கொள்ளத் தகும்.

நம்பிக்கை இழந்து வாழும் மானுட சாதிக்கு மாபெரும் நம்பிக்கையை ஊட்டி, வலுப்பெறச் செய்து இடைவிடாது தொடர்ந்து முயன்றால், மறுமைக்கே உரியது என்று பலராலும் சொல்லப்பெறும் இறை அனுபவத்தை இம்மையிலேயே பெறமுடியும் என்று சொல்கிறார். அவன் அருள் அதற்கும் வழிகாட்டும், துணைபுரியும் என்பதை அறிவுறுத்துவதே பிடித்த பத்தின் திரண்ட பொருளாகும்.

குளத்து நீரில் ஒரே அளவு உயர்ந்து மலர்ந்துநிற்கின்ற தாமரைகள்போல் இருப்பினும் அதில் ஒரு சில மலர்கள் நீர் மட்டத்திற்குமேல் ஓர் அடி உயர்ந்துநிற்பதுபோல் திருவாசகத்தின் 658 மலர்களில் சில உயர்ந்து உள்ளன, அவற்றுள் இந்தப் பத்து மலர்களும் ஓரடி உயர்ந்து நிற்கின்றன எனலாம்.

திருஏசறவு

'நின்னில் சிறந்தவை நின் நாமங்கள்' என்று குறிப்பிடுகிறது ஒரு பழம்பாடல். குருவைவிடச் சிறந்தவை அவருடைய திருவடிகள் என்று நினைப்பதனால் போலும் இப்பகுதியின் ஐந்து பாடல்களில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

காட்டினை உன் கழல் இணைகள் (546)

உன் கழல் கண்டே (547)

உன் பாதமலர் காட்டியவாறு (548)

வார்கழல் வந்து உற்று இறுமாந்து இருந்தேன் (550)

மலர்ப்பாதம் மனத்தில் வளர்ந்து உள் உருக (554)

என்பவையே அத்தொடர்கள்.

இதுவரை நாம் கண்டுவந்த திருவாசகப் பாடல்களில் மிகப் பல இடங்களில் திருவடிப் பெருமை பேசினாரேனும் இந்த ஒரு பதிகத்தில் மட்டும் ஐந்துமுறை கூறியுள்ளது தனிச்சிறப்பு உடையதாம்.

முதற் பாடலில் (546) நின் கழல் இணைகளைக் காட்டி, கரும்பின் சுவையை நான் பெறுமாறு செய்தாய் என்று கூறவந்தவர், அந்தக் கழலிணைகள் காட்டப் பெறுவதற்கு முன்னர் என்ன நிகழ்ந்தது என்பதை முதலடியில் விரித்துக் கூறுகிறார்.

சாதாரண மனநிலையில் அத்திருவடிகளைக் கண்டிருப்பின் அவை இன்னாருடைய திருவடிகள்; மலர்போன்ற அழகுடைய திருவடிகள்; செம்மை நிறம் பொருந்திய திருவடிகள் என்ற எண்ணம் தோன்றி

யிருக்குமே தவிர, அந்தக்காட்சி, கரும்பு தரு சுவையைத் தந்திராது.

திருவடிக் காட்சி கரும்புதரு சுவையை நல்க வேண்டுமேயானால், அதனைக் காண்பான் தன் இயல்பான நிலையிலிருந்து ஒரு குறிப்பிட்ட நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும். உயர்த்தப்படுவது என்றால் என்ன? இந்தக் கண் எவ்வாறு தொழிற்படுகிறது? மனத்தின் வழிதானே கண் தொழிற்படுகிறது? கண் காணும் காட்சியில் மனம் ஒன்றா விட்டால் அக்காட்சியே நடைபெறாது. அப்படியே கண்டாலும் எவ்வித மாற்றத்தையும் அக்காட்சி அறிவிக்காது. கண் எப்பொழுதும் ஒரே நிலையில்தான் உள்ளது. மனத்தோடு ஒன்றிப் பார்க்கும்போது சில அற்புதங்கள் நிகழ்கின்றன. காதலியைப் பார்க்கும்போதும் பகைவனைப் பார்க்கும்போதும் நொதுமலரைப் பார்க்கும்போதும் காட்சி ஒன்றேதான். ஆனால் அதன் உடன் சேருகின்ற மனம் காதலியைக் காணும்போது இன்பத்தையும், பகைவனைக் காணும்போது வெறுப்பையும், நொதுமலரைப் பார்க்கும் போது எவ்வித உணர்ச்சியுமற்ற நிலையையும் பெறுகிறது. இதனை மாற்றிக் கூற வேண்டுமானால், மனத்தில் அன்பு நிறைந்துவிட்டால், பகைவன் பகைவனாகத் தெரிய மாட்டான். அதுபோலக் குருநாதரின் கழல் இணைகள் கரும்புதரு சுவையைக் காட்ட வேண்டுமானால் கண்ணுடன் தொழிற்படும் மனத்தைச் சரி செய்ய வேண்டும்.

இந்த மனத்தின் இயல்பான நிலை என்ன? இரும்பு போன்ற கடினத்தன்மை உடையதாய் மனம் இருக்கின்ற வரையில் கழல் இணைக் காட்சி எந்தச் சுவையையும் தராது. எனவே, குருநாதர் இந்த இரும்பு மனத்தைக் கொஞ்சம்கொஞ்சமாக இழுத்து அதனை உருகும் நிலைக்குக் கொண்டுவந்தார். அதன் பயனாக திருவடிக் காட்சி கரும்புச் சுவையைத் தந்தது.

இது முடியுமா? பிறவிதோறும் வளர்ச்சியடைந்தா லொழிய இரும்பு மனம் உருக்கத்தைப் பெறமுடியாது. இந்தப் பொதுவிதிக்கு முரணாக இந்தப் பிறப்பில் ஒரே விநாடியில் இரும்புதரு மனத்தை உருகுமனமாக மாற்றினார் குருநாதர். அவரால் அது முடியும் என்பதை ஒரு உதாரணமூலம் எடுத்துக்காட்ட விரும்பிய அடிகளார் நரி பரியான கதையை எடுத்துக்காட்டினார்.

அற்பத்தனம், வஞ்சகம், சூழ்ச்சி, நன்றியின்மை, ஏமாற்றுதல் ஆகிய குணங்களுக்குப் பேர்போனவை நரிகள். குதிரைகள் இந்தக் குணங்கள் எதுவுமில்லாமல் பெருந்தன்மை, கம்பீரம், நன்றியுணர்ச்சி ஆகிய குணங்களால் நிறைந்துள்ளன. ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்ட இயல்புடைய இவைகளை ஒரே விநாடியில் ஒன்றை மற்றொன்றாக மாற்றக்கூடியவன் என்பதைக் கூறுவதன்மூலம் தம்மைக் குருநாதர் மாற்றியது மிகச் சாதாரண நிகழ்ச்சி என்கிறார் அடிகளார்.

இரண்டாவது பாடலில் (547) தமிழ் நாட்டு அடியவர்கள் கண்டு கூறிய மிகப் புதுமையான ஒரு கருத்துப் பேசப்பெறுகிறது. மிகத் தொன்மை வாய்ந்த சைவம், வைணவம் ஆகிய இரு சமயங்களிலும் இக்கருத்து இடம்பெற்றுள்ளதைக் காணலாம். அதாவது, பிறப்பை அறுத்து வீடுபேற்றைப் பெறுவது என்பது ஒவ்வொரு உயிரின் தலையாய குறிக்கோள் ஆகும். ஆனால், இந்த உலகில் வாழும்பொழுதே இறைவனைக் கண்டு, வணங்கி, மகிழும் இன்பத்திற்கு இணையாக வீடுபேறுகூட இல்லையென்று இப்பெருமக்கள் கருதினர்; கூறினர். 'இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே' என்றும், 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' (திருமுறை: 4-81-4,5) என்றும், 'அத்தாவுன்

ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே' (திருமுறை: 4-23-1) என்றும் நாவரசர் பெருமானும், 'நின்கோயில்வாசல் படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே' (நாலாயிர:685) என்று குலசேகர ஆழ்வாரும் பாடியுள்ளமை இங்கு நோக்கத் தகும்.

இக்கருத்துக்கு அரண்செய்யும் முறையில் அடிகளார் 'மண்ணார்ந்த பிறப்பு அறுத்திட்டு ஆள்வாய் நீ வா என்னைக் கண்ணார உய்ந்தவாறன்றே உன் கழல் கண்டே' (திருவாச: 547) என்று பாடியருளிமை நோக்கத்தக்கது. இம்மண்ணிலே தோன்றிய பிறவியை அறுத்து வீட்டுலகு தருகிறேன் (ஆள்வாய்) நீ வா என்று அழைத்தாலும் உன் அருகில் வந்து இப்பிறவியை அறுப்பதைக் காட்டிலும் நான் விரும்புகின்றது ஒன்றுண்டு. அது எது தெரியுமா? இப்பிறவியில் 'உன் கழல் கண்ணாரக் கண்டு உய்வதையே நான் விரும்புகின்றேன்' என்று கூறுவதால், பிறவியைப் போக்குவதைவிட இப்பிறவியில் இருந்துகொண்டே அவன் திருவடிகளை ஓயாது தரிசித்துக்கொண்டிருத்தலே சிறப்புடையது என்பதைக் கூறினாராயிற்று.

12ஆம் நூற்றாண்டில் வந்த சேக்கிழார் பெருமான் முன்னர் இருந்த அடியார்கள் கூறிய இக்கருத்தை மனத்தில் வாங்கிக்கொண்டு, உண்மை அடியார்களின் பொது இலக்கணம் என்ன என்பதை 'கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்' (பெ.பு.திருக்கூட்ட-8) என்று பாடியருளினார்.

'எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே' (549) என்றும், 'மற்றறியேன் பிறதெய்வம்' (550) என்றும் வரும் தொடர்கள் இதுவரையுள்ள பாடல்களில் அதிகம் காணப்பெறாத ஒரு புதிய கருத்தாகும். இதனைச் சொல்லவேண்டிய தேவை என்ன?

'சிறுதெய்வம்' என்று அடிகளார் பொதுவாகக் குறிப்பிட்டாரேனும் அது விஷ்ணு வழிபாட்டையும், காளி முதலிய சக்தி வழிபாட்டையுமே குறிப்பது ஆகும். பாண்டிநாடு பொதுவாகச் சைவ சமயத்திலேயே திளைத்தது என்றாலும், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் காலத்தில் விஷ்ணு வழிபாடும் தழைத்து வளர்ந்தது என்பதை மறுக்க முடியாது. கண்ணகி காலத்திலிருந்தே சக்தி வழிபாடு பல வடிவங்களில் வளர்ந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை. வரலாற்று அறிவு படைத்த அடிகளார் இதற்கு ஒரு முக்கியமான இடந்தராவிடினும் 'சிறுதெய்வம்' என்ற சொல்லால் சிறு தேவதைகளையும் 'பிறதெய்வம்' என்ற சொல்லால் விஷ்ணுவையும் குறிப்பிடுகிறார்.

மனித மனம் பல்வேறு உணர்வுகளுக்குத் தாயகமாக இருப்பதாகும். அவற்றுள் சில வலுவானவை; சில மிகமிக வலுவானவை. இந்த மிகமிக வலுவான உணர்வுகளுள் பசி, சினம் முதலியவை அடங்கும், அவற்றுள்ளும் தலை தூக்கி நிற்பதும் எந்த நிலையிலும் போக்க முடியாததும் ஆகிய ஓர் உணர்வு பாலுணர்வே ஆகும்.

பசி, சினம் முதலியவற்றைக்கூடப் பயிற்சியினால் அடக்கி ஆள முடியும். ஆனால், பாலுணர்வைச் சொந்த முயற்சியால், பயிற்சியால் அடக்குதல் இயலாத காரியம். அதனைப் போக்கவேண்டுமேயானால் அதற்கு இரு வழிகள் உண்டு. ஒன்று, இந்த உடம்பு ஒழிய வேண்டும். இந்த ஒரு வழியைத் தவிர மற்றொரு வழியும் உண்டு. ஆனால், அது எல்லோருக்கும் இயல்வதொன்று அன்று. அந்தத் தலையாய வழிதான் திருவருளை வேண்டிநின்று அதன்மூலம் இப்பாலுணர்வைப் போக்குதலாகும்.

முன்னரும் சில பாடல்களில் இக்கருத்தை வெளியிட்ட அடிகளார் இங்கும் அதனை வெளிப்படையாக விளக்குகின்றார். 'பஞ்சாய அடிமடவார் கடைக் கண்ணால் இடர்ப்பட்டு நஞ்சாய துயர்கூர' (551) 'நடுங்குவேன் நின்னருளால் உய்ஞ்சேன்' என்று கூறுகிறார். அந்த உய்தல் தம்முடைய முயற்சியால் அன்று என்பதைக் கூறவந்த அடிகளார், 'நின் அருளால்' என்ற தொடரின் மூலம் மனித சமுதாயம் முழுவதற்கும் இந்த இடரிலிருந்து விடுபட ஒரு வழியைக் காட்டுகிறார். அவன் அருளால்தான் பால் உணர்வு என்னும் இடரிலிருந்து நீங்கி உய்ய முடியும் என்பதைத் தம் அனுபவரீதியாக எடுத்துக் கூறியுள்ளார். ஆதலின் இது மனித சமுதாயம் உய்ய ஒரு வழிகாட்டி ஆகும்.

ஒன்பதாவது பாடலில் (554) 'எனக்கு இங்கு அருள்' என்று வேண்டுகிறார். எதனை அருள வேண்டும்? பிறவியை வேரறுத்தல், திருவடிக் காட்சி தருதல், திருவடி தீட்சை அருளல், உபதேசம் செய்தல், இரும்பு மனத்தை உருக்குதல், நைந்துநைந்து உருகிப் பாடுதல் என்ற இவற்றுள் ஏதாவது ஒன்றை அருள்வாயாக என்று கூறினாரா என்றால், 'இல்லை' என்ற விடைதான் வரும். அப்படியானால் வேறு எதனை அருளவேண்டும் என்கிறார்? அவருடைய சொற்களாலேயே அதனைக் காணலாம். மலர்ப்பாதம் வளர்ந்து மனத்தில் உருக்கத்தை உண்டாக்க அதன் பயனாக 'நான்' 'எனது' என்பவை அழிந்து, மான-அவமானம், பெருமை-சிறுமை என்பவையும் உடன் அழிய, தம்மை இழந்த நிலையில், சிவபெருமான் சிவபெருமானென்று அலறிக்கொண்டு தெருவுதோறும் அலையவேண்டும் என்கிறார்.

இது என்ன புதுமையான வேண்டுகோள்? மேலே கூறிய பிறவி போக்குதல் முதலான எந்த நிலையிலும்

'நான்' அழிவதில்லை. ஆனால், சிவபெருமான் என்று தெருவுதோறும் அலறிக்கொண்டு செல்லவேண்டுமேயானால் 'நான்' முற்றிலும் அழிந்த நிலையிலேயே அது நடைபெறும். முன்னரும் 'நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ' (திருவாச:252) என்றும், 'பிணநெஞ்சே தேடுகின்றிலை தெருவுதோறலறிலை' (திருவாச:35) என்றும் பாடியுள்ளார் ஆதலின், இந்தப் புதுமையான வேண்டுகோள் அடிகளாரைப் பொறுத்த மட்டில் பழமையானதே ஆகும்.

திருப்புலம்பல்

திருப்புலம்பல் என்ற தலைப்பில் உள்ள இந்த மூன்று பாடல்களும் எந்த இடத்தில் பொருத்தமாக அமையும் என்பதை நன்கு ஆராய்தல் நலம். முன்னர் உரை கண்ட பெரியவர்கள்கூட இது இருக்கவேண்டிய இடத்தை உறுதியாகக் கூற முன்வரவில்லை.

'திருப்படை எழுச்சிக்கு' முன்னர் இது அமைந்திருத்தல் வேண்டும் என்று கூறுவோர்கள்கூட அதற்குரிய காரணத்தைக் கூறினார்களில்லை. என்னைப் பொறுத்தவரை இப்பகுதி அதிசயப் பத்தினை அடுத்து இருந்தால் பொருத்தமோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

குருநாதர் தமக்குச் செய்த அருளையெல்லாம் நினைந்து, அவை தமக்குக் கிடைத்தது அதிசயத்திலும் அதிசயம் என்று சொல்லிக்கொண்டு வருவதன் பின்னர் இது அமைந்திருத்தல் பொருத்தமெனத் தோன்றுகிறது.

இவ்வளவு அதிசயங்களையும் தமக்கு விளைவித்தது எது? குருநாதரின் திருவடிகளல்லவா? எனவே, அதிசயங்களுக்குக் காரணமான திருவடிகளை வாணாள் உள்ளவரை புகழ்வது பொருத்தமானதே என்றும், இந்த

அதிசயங்களைக் காட்டிய திருவடி நன விலும் கனவிலும் தமக்கு உறுதுணையாக உள்ளது என்ற நினைவும் அடிகளார் உள்ளத்தில் தோன்றுகிறது.

அத்திருவடி இம்மை-மறுமை ஆகிய இரண்டிலும் தமக்கு உறுதுணையாக நிற்கும் என்பதை உறுதிசெய்து கொண்ட அடிகளார் ஒரு மாபெரும் வளர்ச்சியை அடைந்துவிடுகிறார்.

சாதாரண உலகியலில்கூட மிகவும் வேண்டிநின்று பெறமுடியாத ஒன்றைப் பெற்றவுடன் 'எனக்கிது போதும், இனி யார் தயவும் தேவையில்லை' என்று சொல்கின்ற மரபு இன்றும் உண்டு.

இந்த அடிப்படையில் உறுதுணையாகவுள்ள திருவடிகளைச் சிக்கெனப் பிடித்துக்கொண்ட பிறகு, அடிகளார் மனத்தில் மாபெரும் வளர்ச்சி ஏற்படுவது நியாயம்தானே? அந்த வளர்ச்சியின் வெளிப்பாடுதான் 'உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன்' (558) என வரும் பாடல். உற்றார், ஊர், பேர், கற்றார், இனிக் கற்கவேண்டியவை அனைத்தையும் உதறி விட்டு, என்ன வேண்டுகிறார் அடிகளார்? குற்றாலத்தி லுள்ள இறைவனுடைய திருவடிகளை நினைந்து, ஈன்ற பசுப்போல் உருகுவது ஒன்றையே வேண்டி நிற்கின்றார்.

இந்த உருக்கம் உற்றாரை யான்வேண்டேன் என்ற பாடலின் முதலிரண்டு அடிகளில் கூறப்பெற்ற அனைத் திற்கும் ஈடாக நிற்கின்றதைக் காண்கின்றோம். இதிலிருந்து ஒன்றைத் தெரிந்துகொள்ள முடியும். ஒருமனிதன் இறைப்பொருளை நாடி வாழத் தொடங்கினால் இறுதியாக அவனுக்குச் சித்திப்பது இந்த உருக்கமேயாகும். இறையன்பின் வெளிப்பாடாகத் தோன்றும் இந்த உருக்கம், வாழ்க்கையில் வேண்டப்படும் முடிந்த பொருளாகும்.

குதிரை வாங்கச்சென்ற அமைச்சர், திருப்பெருந் துறையில் நடைபெற்ற நிகழ்ச்சி காரணமாக, மணிவாசகராக மாறி, வளர்ச்சி அடைகின்றார். இந்த வளர்ச்சியை இந்த மூன்று பாடல்களும் வரிசைப்படுத்திக் காட்டுகின்றன.

கசிந்து உருகும் நிலை ஏற்பட்டுவிட்டால் உலகத்தையே ஒரு பொருட்டாக மதிக்காமல் அனைத்தையும் துறக்கச் சித்தமாக உள்ளதாகக் கூறுகிறார். இந்த வளர்ச்சி நிலையை மலை முகட்டில் ஏறிக் கூறுபவர்போல, அனைவரையும் அழைத்துக் கூறுகின்றார். இத்தகைய இந்த மூன்று பாடல்களைப் புலம்பல் என்று அழைப்பது பரிதாபத்திற்குரியதாகும்.

ॐ ॐ ॐ

பாட்டு முதற்குறிப்பு அகராதி

பாட்டு முதற்குறிப்பு	பாட்டு எண்
அ	
அடியார் சிலர்	486
அடியேன் அல்லல்	497
அத்தனே	543
அம்மையே	538
அருளாரமுத	487
அருளுடை	539
அல்லிக்கமல	441
அழகேபுரி	505
அழிவின்றி	533
அளவிலா	482
அளித்து	407
அளிபுண்	422
அறவேபெற்றார்	490
அறவையேன்	541
அறுக்கிலேன்	403
அன்பராகி	401
அன்றே என்றன்	502
ஆ	
ஆட்டுத்தேவர்	402
ஆதமிலி	548
ஆற்றகில்லேன்	439
இ	
இந்திரிய	475
இயக்கிமாரறு	474
இரும்புதரு	546
இருள்திணிந்து	437
ஈ	
ஈண்டிய	531
உ	
உம்பர்கட்	536
உருத்தெரியா	477
உற்றஆக்கையின்	436
உற்றாரை	558
எ	
எங்கள் நாயகனே	460
எச்சம் அறி	514
எண்ணிலேன்	433
எய்த்தேன்	423

	பாட்டு எண்
எனை நானென்ப	508
என் பாலைப்	552
ஒ	
ஒப்புனக்கு	540
ஒன்றும்போதா	498
க	
கடலின் திரை	511
கடலே அனைய	491
கண்ணார்	504
கமலநான்	461
கருடக்கொடி	418
கலந்துநின்	485
கல்லாதபுல்	478
கற்றறியேன்	550
கா	
காப்பாய்	447
காலமுண்டாகவே	530
கி	
கிளியனார்	519
கு	
குழைத்தாற்	496
கூ	
கூடிக்கூடி	495
கூறும்நாவே	500
கூற்றைவென்	535
கை	
கையால்	425
கோ	
கோணிலா	525
கோலமேனிவ	472
கோற்றேன்	513
ச	
சடையானே	557
சதுரை	527
சா	
சாதிகுலம்	479
சீ	
சீவார்ந்தீ	420
சு	
சுடர்பொற்	438
சுருள்புரி	412
செ	
செடியாராக்கை	426
செழுக்கமல	408
செறியும் புற	529
சோ	
சோதியே	458
ஞா	
ஞாலம்இந்திரன்	406
த	
தகைவிலா	522
தறிசெறி	523
தாதாய்மூவே	446

	பாட்டு எண்
தாரா அருளொன்	493
தி	
திகழத்திகழு	442
திருந்துவார்	467
து	
துடிகொள்	462
துணியாஉருகா	492
துப்பனே	463
நா	
நாயிற்கடையாம்	503
நானாரடி	507
நானேயோ	555
நி	
நிருத்தனே	459
நினையப்பிறருக்	444
நீ	
நீக்கிமுன்	435
நீண்டமாலும்	440
நீதியாவன	429
நீரின்ப	528
நெ	
நெக்குநெக்குள்	445
ப	
பச்சைத்தால்	549
பஞ்சாய	551
பஞ்சின்மெல்	453
பண்ணார்ந்த	547
பண்ணினேர்	452
பத்திமையும்	481
பந்தணைவிரலாள்	455
பரவுவாரவர்	432
பரிதிவாழ்	454
பரிந்துவந்து	443
பருவரை	526
பழுதில்தொல்	457
பற்றாங்கவை	510
பா	
பாங்கினொடு	483
பாசவேரற	542
பாடிமால்புகழும்	450
பாரொடு	448
பாரோர்	424
பால்நினைந்	544
பாவநாசா	456
பி	
பிட்டுநேர்பட	469
பிணக்கிலாத	468
பிணியெலாம்	520
பித்தன்என்றெனை	431
பிறவிதனை	480
பிறிவறியா	416

	பாட்டு எண்
பு	
புலையனேனையும்	400
புற்றில்வாள்	516
புற்றுமாய்	399
புன்புலால்	545
பூ	
பூங்கமல	556
பூணொணாத	471
பூதங்கள்ஐந்தாகி	484
பெ	
பெரும்பெரு	410
பே	
பேதமில்ல	473
பை-	
பைந்நாப்பட	506
பொ	
பொத்தை	434
பொய்யனேன்	398
பொழிகின்ற	411
போ	
போதுசேரயன்	405
ம	
மஞ்சுலாம்	524
மருவினிய	554
மருளனேன்	466
மலங்கினேன்	470
மா	
மாயவன	532
மாயனே	404
மாவடுவகிர	415
மாழைமை	413
மானேர் நோக்கி	499
மானோர்பங்கா	494
மி	
மிடைந்தெ	421
மின்கணினார்	414
மு	
முத்தனே	465
முன்னையென்னுடை	430
மெ	
மெய்யனே	464
மே	
மேவும்உன்றன்	489
மொ	
மொய்ப்பால்	419
வ	
வம்பனேன்	449
வல்லைவாள	451
வழங்குகின்ற	417
வன்புலால்	518
வா	
வாளுலாம்	521
வான் பாவிய	515
வி	
விடைவிடா	537
விரவிய	534

	பாட்டு எண்
வினைக்கேடரும்	509
வினைப்பிறவி	476
வெ	
வெஞ்சேலனைய	427
வெருவரேன்	517
வெறுப்பன	409
வே	
வேண்டத்தக்க	501
வேண்டும் வேண்டும்	488
வேண்டேன்	512
வை	
வைப்புமாடு	428




பத்மவாசன்